

EISSN 2456-5571

An Online, Peer-reviewed, Refereed and Quarterly Journal

# BODHI

## INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

VOLUME 9 | SPECIAL ISSUE 1 | JANUARY 2025 | E-ISSN: 2456-5571

## கார்டமம் பிளாண்டர்ஸ் அசோசியேசன் காலேஜ்

போடிநாயக்கனூர், தேனி மாவட்டம்.

தேசியதர மதிப்பீட்டில் "A" அங்கீகாரம் பெற்றது (3 ஆம் சுழற்சி)

தமிழ்த்துறை (சு.பி) வெளியிடும் பன்னாட்டுக் கருத்தரங்கச் சிறப்பிதழ்

## தமிழிலக்கியங்களில் மானுட வாழ்வியலும் மதிப்புகளும்

பதிப்பாசிரியர்

முனைவர் நா. பால்பாண்டி

# BODHI

## International Journal of Research in Humanities, Arts and Science

An Online, Peer Reviewed, Refereed and Quarterly Journal

Vol.9 | Special Issue 1 | January 2025 | E-ISSN: 2456-5571



CENTRE FOR RESOURCE, RESEARCH & PUBLICATION SERVICES (CRRPS)

www.crrps.in | www.bodhijournals.com

**BIJRHAS**

The **BODHI International Journal of Research in Humanities, Arts and Science** (E-ISSN: 2456-5571) is online, peer reviewed, Refereed and Quarterly Journal, which is powered & published by **Center for Resource, Research and Publication Services, (CRRPS)** India. It is committed to bring together academicians, research scholars and students from all over the world who work professionally to upgrade status of academic career and society by their ideas and aims to promote interdisciplinary studies in the fields of humanities, arts and science.

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, bioscience, entrepreneurship, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

Research should be at the core and must be instrumental in generating a major interface with the academic world. It must provide a new theoretical frame work that enable reassessment and refinement of current practices and thinking. This may result in a fundamental discovery and an extension of the knowledge acquired. Research is meant to establish or confirm facts, reaffirm the results of previous works, solve new or existing problems, support theorems; or develop new theorems. It empowers the faculty and students for an in-depth approach in research. It has the potential to enhance the consultancy capabilities of the researcher. In short, conceptually and thematically an active attempt to provide these types of common platforms on educational reformations through research has become the main objective of this Journal.

**Dr. S. Balakrishnan**
Publisher and Managing Editor
bodhijournal@gmail.com
www.bodhijournals.com
09944212131

**கார்டமம் பிளாண்டர்ஸ் அசோசியேசன் காலேஜ்**
பங்கஜம் நகர், போடிநாயக்கனூர், தேனிமாவட்டம் – 625582.
தேசியதர மதிப்பீட்டில் "A" அங்கீகாரம் பெற்றது
(3 ஆம் சுழற்சி)

## செயலர் வாழ்த்துரை

உலகத்துப் பருப்பொருள்களைக் காண்பதற்கு கருவியாக அமையும் புறக்கண் போல, புறக்காட்சிக்குப் புலனாகாத நுண்பொருள்களை அறிந்து தெளிவதற்கு அகக்கண் அமைதல் இன்றியமையாத ஒன்றாகும். பருப்பொருள்களைக் காணும் புறக்கண்ணும் அகக்கண்ணின் துணையின்றி அப்பொருளின் இயல்புகளை பகுத்துணர்வது இயலாத ஒன்றாகும். ஆகவே புறக்கண்ணைக் காட்டிலும் அகக்கண்ணே மக்களின் நன்மைக்கு சிறப்பாக வேண்டப்படுவது என்பதை அறியமுடிகிறது. இவ்வகக்கண் எதுவாக இருக்கும் என்றால்; பல பேரறிஞர்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரேபொருள் **கல்வியே** ஆகும். எனவேதான் வள்ளுவப் பெருந்தகை

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்று விளக்கம் தருகிறார். அத்தகைய அகக்கல்வியால் (கண்) இப்பகுதிவாழ் ஏழை எளியோரது பிள்ளைகளும் பயன்பெற வேண்டும் என்ற உயர்ந்த லட்சியத்துடன், அவர்களின் வாழ்க்கையில் அறிவு ஒளியையும், ஆரோக்கியமான சமூக வளர்ச்சியையும் உருவாக்கி; தான் கொண்ட கொள்கையில் இன்றும் வெற்றி கண்டு வருகின்றது எங்களது கல்லூரி. 50வது பொன்விழா ஆண்டினை சிறப்பாகக் கொண்டாடிய அதே வேளையில் தேசிய தர மதிப்பீட்டுக் குழுவால் சிறப்பான கல்லூரிக்கான 'A' அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது.

இத்தகைய சிறப்புகளுடைய எமது கல்லூரிக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் 'பொன்னிற்கு பொட்டு சாத்தினாற் போல' எம் கல்லூரித் துறைகளில் ஒன்றான தமிழ்த்துறையில் (சு.பி) நடத்தப்படும் பன்னாட்டுக் கருத்தரங்கு அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இக்கருத்தரங்கு சிறப்பாக அமைந்திட அல்லும் பகலும் அயராது உழைத்து சிறப்பானதொரு புத்தகம் வெளிவர காரணமாக அமைந்த தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் நா.பால்பாண்டி மற்றும் அத்துறை சார்ந்த பேராசிரியர்கள் அனைவரையும் நெஞ்சார வாழ்த்துகிறேன். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் உயர்ந்த சிந்தனையை உலகிற்கு அளித்து, உலகப்பொதுமறை தந்த வள்ளுவனை உலகறியச் செய்த தமிழ்மொழியைப் போல்; நம் கல்லூரி தமிழ்த்துறையும் மென்மேலும் வளர்ந்து இதுபோன்ற சிறப்பான கருத்தரங்குகளைக் காலத்தின் பயன்கருதி நடத்திட வேண்டும் என மேலும் வாழ்த்துகிறேன்.

**அன்புடன்**
**திரு. ரா.புருஷோத்தமன்., *M.A., B.Ed.,***
செயலாளர் மற்றும் தொடர்பாளர்

**கார்டமம் பிளாண்டர்ஸ் அசோசியேசன் காலேஜ்**
*பங்கஜம் நகர், போடிநாயக்கனூர், தேனிமாவட்டம் – 625582.*
*தேசியதர மதிப்பீட்டில் "A" அங்கீகாரம் பெற்றது*
*(3 ஆம் சுழற்சி)*

## முதல்வர் வாழ்த்துரை

*உலகச் செம்மொழியாம் நம்தாய்த்தமிழ்மொழி மிகநீண்ட இலக்கிய இலக்கணப் பாரம்பரியம் மிக்கது. அது என்றும் மாறா இளமைத் தன்மையுடன் எண்ணிலடங்கா இலக்கிய வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. தமிழ்மொழியின் வளர்ச்சியில் இன்று பல்வேறுபட்ட படிநிலைகளைக் காணமுடிகின்றது. பொதுவாக விளக்கமுறை, இலக்கண முறை மற்றும் இலக்கிய ஆய்வுகளே தமிழாய்வு எனக் கருதப்பட்டு வந்த நிலைமாறி; இன்று பலதுறைகளுடன் இணைந்து பல்நோக்குகளிலான ஆய்வு அணுகுமுறைகள் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்து வருகின்றன. 21ஆம் நூற்றாண்டின் இடைக்காலகட்டத்தில் நிகழ்ந்த ஆய்வியல் அணுகுமுறைகள் தமிழ்மொழியின் இலக்கிய வளர்ச்சிக்கு மேலும் பயன்தந்து வருகின்றன என்றால் அதுமிகையல்ல.*

*அந்த வகையில் தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவால் நடத்தப்பெறும் **'தமிழிலக்கியங்களில் மானுடவாழ்வியலும் மதிப்புகளும்'** (Human Ethics and values in Tamil Literature) என்னும் தலைப்பிலான பன்னாட்டுக் கருத்தரங்கில் புத்தகமாக வெளியிடப்படும் கட்டுரைகள் அனைத்தும் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் மானுடவியல் சிந்தனைகள், சமூக வாழ்வியல் சிந்தனைகள் மற்றும் இலக்கியங்களில் காணலாகும் மானுட மதிப்புகளை மிக அழகாக வெளிப்படுத்தியுள்ளன. இதுவரை தேசிய மற்றும் மாநில அளவில் தமிழ்த்துறையால் பல கருத்தரங்குகள் நடத்தப்பட்ட நிலையில்; புதுமுயற்சியாக பன்னாட்டுக் கருத்தரங்கு நடத்தப்படுவது அத்துறையின் வளர்ச்சியையும், துறையை உயர்ந்த லட்சியத்துடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற பேராசிரியர்களின் உளப்பாங்கினையும் நன்றாக விளங்கிடச் செய்கிறது. அந்த வகையில் இப்பன்னாட்டுக் கருத்தரங்கு மிகச்சிறப்பான முறையில் நடைபெற மிகக்கடினமான ஒருங்கிணைப்பு பணியினை செய்து, கட்டுரைகளைத் தொகுத்து புத்தகமாக வெளிவர காரணமாக அமைந்த தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் நா.பால்பாண்டி அவர்களையும், அதற்கு உறுதுணையாக செயல்பட்ட தமிழ்த்துறைப் பேராசிரியர்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் வரிகளுக்கு வலுசேர்க்கும் வகையில் ஆய்வுக் கட்டுரைகள் அனைத்தும் நூலாக்கம் செய்து கொடுத்த 'போதி' சர்வதேச ஆய்வு இதழையும் பாராட்டுகின்றேன். மேலும், தமிழிலக்கிய அறிஞர்களின் அறிவுதாகத்தை தீர்த்திடும் வகையில் இதுபோன்ற கருத்தரங்குகள் இத்துறையால் மென்மேலும் நடத்திட வேண்டும். அதற்காக கல்லூரி நிர்வாகம் மற்றும் கல்லூரியும் எப்பொழுதும் துணைநிற்கும் என்று கூறி; கருத்தரங்கு சிறக்க வாழ்த்துகிறேன்.*

***மகிழ்வுடன்...***

***முனைவர் கூ.சிவக்குமார்., Ph.D.,***
*முதல்வர்*

# அணிந்துரை

போடிநாயக்கனூருக்கு என்று ஒரு தனிச் சிறப்பு உண்டு. திருமலை நாயக்க மன்னர் தன் எல்கைக்கு உட்பட்ட இடத்தினை 72 பாளையங்களாகப் பிரித்த போது போடிநாயக்கனூரையும் ஒரு பாளையமாக உருவாக்கினார், இங்கு தமிழ் தெலுங்கு கன்னடம் உருது பேசும் மக்கள் சமத்துவத்துடனும் சகோதரத்துடனும் ஒன்றிணைந்து வாழ்ந்து வரும் ஊர்.

ஏழை விவசாயிகள் வீட்டுப் பிள்ளைகள் படித்துப் பட்டம் பெறவேண்டும் என்பதற்காக, ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரியினைப் பெரியோர்கள் ஒருங்கிணைந்து உருவாக்கினர். தேனி மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்திருக்கும் ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி அப்பகுதி மக்களுக்கு அறிவுத் திருக்கோயிலாக அமைந்துள்ளது.

சீர்மிகு இக்கல்லுரியில் தமிழ்த்துறை நடத்தும் முதல் பன்னாட்டுக் கருத்தரங்கம். ஒருங்கிணைப்பாளர் எனது ஆய்வு மாணவர் அன்புத்தம்பி முனைவர் நா.பால்பாண்டி. என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற திருநாவுக்கரசரின் பாடல் வரிகளை மனதில் நிறுத்தி, மாணவர்களின் நலனில் அக்கறையோடு பணியாற்றுபவர். **தமிழிலக்கியங்களில் மானுட வாழ்வியலும் மதிப்புகளும்** எனும் பொருண்மையில் அமைந்த கருத்தரங்கத்தின் முதல் முயற்சிக்கு சங்க காலம் முதல் சமகாலம் வரையிலான 43 கட்டுரைகள். இக்கட்டுரைகள் நூலாகப் பதிப்பிக்கப்பட்டு பேராளர்கள் கைக்கு வரும் போது முதல் குழந்தை கையில் தவழும் சுகம் நிச்சயம் கிடைக்கும். தமிழகமெங்கும் கல்லூரியின் பெயர் பரவும்.

பெரு நகரக் கல்லூரிகள் முன்னெடுக்காத கருத்தரங்கை முனைவர் நா.பால்பாண்டி முன்னெடுத்திருப்பது மகிழ்வுக்குரியது. கருத்தரங்க நிகழ்வை கடிதம். புலனம். இணையம் என்ற ஊடகங்கள் வழியாகத் தொடர்பு கொண்டதன் பயன் இக்கருத்தரங்கம். தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் ஒன்றிணைந்து கட்டுரையாளர்களின் எண்ணிக்கையினைக் கூட்ட வேண்டும். தமிழ் மொழிக்கருத்தரங்கம் என்பது தமிழ் கூறு நல்லுலகிற்கு நாம் செய்யும் கொடையாகும்.

ஒருங்கிணைப்பாளர் முனைவர் நா.பால்பாண்டியின் கருந்தரங்க முன்னெடுப்பிற்கு உற்ற துணையாக இருந்த கல்லூரியில் தலைவர், செயலர், முதல்வர், பேராசிரியர்கள், ஆய்வுலக அன்பர்கள், அன்பு மாண்வர்கள் அனைவருக்கும் நன்றியும்.. பாராட்டும்.. கருத்தரங்க விழா சிறக்கட்டும்.. தொடரட்டும் தமிழ்ப்பணி.

வாழ்த்துக்களுடன்

**முனைவர் பா. சிங்காரவேலன்**
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கப்பலூர், திருமங்கலம், மதுரை 625008

**கார்டமம் பிளாண்டர்ஸ் அசோசியேசன் காலேஜ்**
*பங்கஜம் நகர், போடிநாயக்கனூர், தேனிமாவட்டம் – 625582.*
*தேசியதர மதிப்பீட்டில் "A" அங்கீகாரம் பெற்றது*
*(3 ஆம் சுழற்சி)*

# பதிப்புரை

***குயில்கள் கூட்டமாக பாடல் படிக்கும்; தேனீக்கள்***
***ரீங்காரம் இசைத்தபடி பாடிக்களிக்கும்;***
***வாசம் நனைந்த நற்காற்று குழலூதி நடக்கும்;***
***கோலமயில் தன்னை மறந்து ஆடிக்கொண்டிருக்கும்;***
***கனி மரங்கள் உண்டு பறவை;***
***விளையாடிக் கொண்டிருக்கும்;***
***மனங் கமழும் பூக்கள் வாசம் எங்கும் பரவிக்கிடக்கும்;***
***பூக்கள் தோறும் சென்று வண்டு உறங்கிக் கிடக்கும்***
***நெஞ்சமெல்லாம் காட்சி கண்டு துள்ளிக் குதிக்கும்;***
***கலைமகளும் மலைமகளும் கூடிக் குழவிடும்***
***கல்வி வளம் செறிந்த இடம் எங்கள் கல்லூரி.***
***பதினெட்டுபட்டி மக்கள் பாரினில் உயர்ந்திட***
***பண்புமிக்க பெரியோரால் உருவாக்கிய கல்லூரி.***

*ஆம்; 1974 ஆம் ஆண்டு தென்னிந்திய ஏல விவசாயிகள் சங்கத்தால் தோற்றிவிக்கப்பட்ட* ***'கார்டமம் பிளாண்டர்ஸ் அசோசியேசன் கல்லூரி'****; இந்தியாவிலேயே ஏலக்காய் விவசாயப் பெருங்குடி மக்களால் நடத்தப்படும் ஒரே கல்லூரி என்ற பெருமை உடையது.* ***'தென்னிந்தியாவின் காஷ்மீர்'*** *என்று பண்டித ஜவகர்லால் நேருவால் போற்றிப் புகழப்பட்ட போடிநாயக்கனூரில்; மேற்குத் தொடர்ச்சி மலை தாழ்வாரத்தில் 43 ஏக்கர் பரப்பளவில் திருமகள் வாசம் செய்யும் திருத்தலம் என விளங்குகிறது இக்கல்லூரி.*

***"அன்னயாவிலும் புண்ணியம் கோடி***
***ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்."***

*என்ற பாரதிதன் கூற்றை சிரத்தில் கொண்டு, கிராமப்புறம் சார்ந்த ஏழை எளிய விவசாயக் கூலித்தொழிலாளர் தம் மக்களும் கல்வி கற்றிட வேண்டும் என்ற உயரிய லட்சியத்துடன்; உயர்ந்த உள்ளம் கொண்ட ஏல விவசாயப் பெருங்குடி மக்கள் பலரும்; தங்களின் ஏலக்காய் சிந்துமணிகளை எல்லாம் தாராளமாகக் கொடுத்து உருவாக்கப்பட்டது இக்கல்லூரி. நம் எண்ணங்கள் உயர்வுடையது என்றால் அதன் பலன்கள் பலமடங்கு சிறப்படையும் என்பார்கள். அதனை மெய்பிக்கும் வண்ணம் தன்னலம் பாரா தாயுள்ளத்தோடு தகைசான்ற பெரியோர்கள் பலரின் உயர்ந்த எண்ணத்தால் விளைந்த இக்கல்லூரியில் கல்வி பயின்ற பலரும் பல உயர்ந்த பதவிகளை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றனர். கல்விப்பணியில் 50வது ஆண்டு பொன்விழா நிகழ்வினை சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில்; நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன், பேராசிரியர்களின் கடின உழைப்பால் தேசியதர மதிப்பீட்டில்* ***'A'*** *அங்கீகாரத்தையும் கல்லூரி பெற்றிருப்பது உள்ளபடியே அனைவரையும் அகமகிழச் செய்துள்ளது.*

*இத்தகைய சிறப்புடைய கல்லூரியின் மணிமகுடமாக 2019-2020 ஆம் கல்வியாண்டு முதல் இளங்கலைத் தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவில் துவங்கப்பட்டு சீரிய முறையில் ஆசிரியப் பணியை மாணவச் சமுதாயத்திற்கு ஆற்றி வருகின்றது. மேலும், மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அரசு போட்டித் தேர்விற்குத் தயார்படுத்துதல், படைப்பாற்றலை வளர்த்தல்,*

பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்கங்கள், சொற்பொழிவுகள், புத்தக வாசிப்பை ஊக்கப்படுத்த வியாழவட்டம் நிகழ்வு போன்றனவற்றைச் சிறப்பாக நடத்தி வருகின்றது. தமிழ்த்துறையில் இதுவரை...

- *2020-2021 ஆம் கல்வியாண்டில்* **'கீழடியும் தமிழும்'** *என்ற தலைப்பில் கருத்தரங்கும்.*
- *2021-2022 ஆம் கல்வியாண்டில்* **'பன்முகப் பார்வையில் பாரதி'** *என்ற தலைப்பில் கருத்தரங்கும்.*
- *2022-2023 ஆம் கல்வியாண்டில்* **'தொல்லியல் – இலக்கியமும் வரலாறும்'** *என்ற தலைப்பில் கருத்தரங்கும்.*
- *2023-2024 ஆம் கல்வியாண்டில்* **'தமிழ் சினிமாவும் சமூக மாற்றமும்'** *என்ற தலைப்பில் கருத்தரங்கும் நடைபெற்றுள்ளன.*

*தற்பொழுது* **"தமிழிலக்கியங்களில் மானுட வாழ்வியலும் மதிப்புகளும்"** *என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கும் நடைபெற இருக்கின்றது. இக்கருத்தரங்கிற்கென பேராசிரியர்களும், ஆய்வு மாணவர்களும், தமிழ் ஆர்வர்களும் தங்களின் கருத்தாழமிக்க கட்டுரைகளை வழங்கியுள்ளனர். அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 43 கட்டுரைகள் மட்டும் தொகுக்கப்பட்டு; புத்தகமாக வெளிவர இருக்கின்றன.*

*'மனித வாழ்வின் மாண்புகளை உணரவும், மனித வாழ்வின் இன்பங்களை நுகரவும் முடியாத வண்ணம் தடுக்கப்பட்டு இழிவுக்கும், பழிக்கும் ஆளாக்கப்பட்டுக் கிடந்த மனிதனை மீட்டெடுக்கவும்; மாண்புறச் செய்யவும் வந்த உயரிய கோட்பாடாகும் மானுடம். அது மனிதனுக்கும் அவனுடைய பண்பாடு, சமூகங்களின் அமைப்புகள், பழக்கவழக்கங்கள், உறவுமுறைகள், மொழிக் கூறுபாடுகள் நடவடிக்கைகள், செயல்திறன், பேரார்வம், நலன்கள் ஆகியனவற்றுக்கும் முக்கியத்துவம் அளிக்கின்றது. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து மூத்த குடிகளும், இன்று உலகின் மூலை முடுக்குகளில் வாழும் இனங்களும் இச்சொல்லின் ஆய்வுப் பரப்பிற்கு உட்பட்டவை எனலாம்.*

*மானுடத்தின் மதிப்பீடுகள் என்பதனை வள்ளலார் - வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடும் அன்பு, பொதுமை அறம் எனவும், வள்ளுவர் – சான்றான்மை, அன்புடைமை, பண்புடமை எனவும், காந்தியடிகள் - அகிம்சை எனவும் , உளுந்தூர்பேட்டை சண்முகம் - உலகம் சமநிலைப் பெறவேண்டும், உயர்வு தாழ்வில்லா நிலை வேண்டும் எனவும் கூறுவர். அனைவரும் மானுட மதிப்பீடுகளை வளர்த்தெடுக்க தங்களின் படைப்புகள் மூலம் வலியுறுத்தினர். தற்கால .இலக்கியங்களில் காணப்படும் மானுடப் பண்பைவிட சங்க இலக்கியங்களில் மானுடப் பண்புகள் அதிகம் பேசப்படுகின்றன. தொல்காப்பியம் முதல் தற்கால இலக்கியங்கள் வரை ஈகை, நண்பர்களிடம் அன்பு செலுத்துதல், விருந்தோம்பல், இனிய சொற்களைப் பேசுதல், மன்னித்தல், பெரியோரை மதித்தல் போன்ற பல மானுட மதிப்பீடுகள் இடம் பொறுகின்றன.*

*மனிதன் வாழ்வில் முன்னேற வேண்டுமானால் அன்பே முதன்மை ஆதாரம். தேவைகள் நிறைவு படவும், பிறர் மத்தியில் மதிப்பினை பெறவும் அன்பே துணை நிற்கின்றன. அன்பின் வழியது மகிழ்ச்சி, மனநிறைவு, பரிவு, கருணை, பொறுமை, மன்னிப்பு, கொல்லாமை, உயிர் நேயம், அநீதிக்கான எதிர்குரல் ஆகியன சமூக மதிப்புகள் தோன்றும் காரணிகள். ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி தன்னை நாடி வருபவர்களுக்கு உபசரிப்பவனே நல்ல மானுடப் பண்பு மிக்கவன். அத்தகைய ஈகைப் பண்பினையே இலக்கியங்கள் பலவும் நம்மை கடைபிடிக்கச் செய்கின்றன. அறம் வாழ்க்கை நெறியாகும். அறத்தின் உயிர்நிலைக் கொடை, பொதுநல முன்னேற்றத்திற்காக வழங்கப்படும் அன்னமிடல், கல்வி, மருத்துவம் என்பன அறத்தின்பால் பட்டதேயாகும்..*

*ஆனால், இன்றைய உலகில் மனித மனம் மனிதனை மனிதனாக வாழ்வதற்குத் தூண்டுவதில்லை. பொருளாதார வளர்ச்சி காரணமாக மனிதன் ஒருவரை ஒருவர் மதிக்காமல்*

*தான் என்ற அகந்தையோடு வாழ்கின்றான். பண்டைய காலங்களில் கூட்டுக் குடும்ப வாழ்க்கைக்குச் சிறப்பிடம் கொடுத்ததால் குடும்ப அன்பு மக்களிடம் காணப்பட்டது. அன்பு, விட்டுக் கொடுத்தல், பொறுமை, உதவுதல் போன்ற அடிப்படைப் பண்புகள் மேலோங்கி நின்றன. இன்றைய காலத்தில் அதிகரித்து வருகின்ற தனிக்குடித்தனத்தின் காரணமாக குடும்ப அன்பு குறைந்து மனித நேயத்தை வறட்சியடையச் செய்துள்ளது. எனவே தமிழ் இலக்கியங்கள் போற்றி வளர்த்த மானுட நேயமும், மனித விழுமியங்களும் தற்காலச் சமூகத்தினரிடம் துளிர்விட வேண்டும் என்பதை இக்கருத்தரங்கப் பொருண்மை நோக்கமாகக் கொண்டு இக்கருத்தரங்கு அமைகிறது. இதில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் அனைத்தும் மானுட வாழ்வியலைப் பற்றிப் படர்ந்துள்ள பல்வேறு கருத்துக்களை எடுத்தியம்புவதோடு மட்டுமல்லாமல்; இலக்கியத்தில் காணலாகும் விழுமியங்களையும், மதிப்புகளையும் வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.*

*தமிழ் இலக்கியக் களங்களான காப்பியஇலக்கியம், சங்க இலக்கியம், நீதி இலக்கியம், சமய இலக்கியம், நவீன இலக்கியம், கோயில் கலை மற்றும் வரலாறு என பல்துறை சார்ந்த கட்டுரைகள் இந்நூலில் அமைந்துள்ளன. அந்த வகையில் எங்கள் வேண்டுகோளுக்கு இணங்க மானுடத்தை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கட்டுரைகள் வழங்கி; கருத்தரங்கு நடைபெற சற்று காலதாமதம் ஏற்பட்ட போதும் அதனை பெரிதுபடுத்தாது ஒத்துழைப்பு வழங்கிய பல்கலைக்கழக, கல்லூரி பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் என அத்துனை தமிழ் நெஞ்சங்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற அனுமதியும், ஊக்கமும் வழங்கியதோடு, நடத்துவதற்கு இடமும் அளித்த கல்லூரி தலைவர் திரு. சொ.வே.சுப்பிரமணியன், உபதலைவர் திரு. சு.ராமநாதன், செயலாளர் திரு. ரா.புருஷோத்தமன் உட்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள், கல்லூரி முதல்வர் முனைவர் சு.சிவக்குமார் மற்றும் சுயநிதிப்பிரிவு ஒருங்கிணைப்பாளர் பேரா.சீ.சுரேஷ்குமார் ஆகியோருக்கும்; அணிந்துரை வழங்கிய என் வழிகாட்டியும், நெறியாளருமாகிய முனைவர் பா.சிங்காரவேலன் அவர்களுக்கும்; போதி பன்னாட்டு ஆய்விதழ் நிறுவனர் முனைவர் சே.பாலகிருஷ்ணன் அவர்களுக்கும்; இக்கருத்தரங்கு சிறப்புடன் அமைந்திட நெஞ்சில் ஊக்கத்தையும், ஆக்கத்தையும் வார்த்தைகளால் வாஞ்சையுடன் வெளிப்படுத்திய பேராசிரியர் சே.மாசிலாமணி, முனைவர் பா.அங்கயற்கண்ணி, பேராசிரியர் க.தனலெட்சுமி, பேராசிரியர் பெ.ரேணுகாதேவி மற்றும் பிறதுறை சார்ந்த எம் கல்லூரி மற்றும் பிறகல்லூரிப் பேராசிரிய நண்பர்கள், கல்லூரி அலுவலக கண்காணிப்பாளர் உட்பட்ட அலுவலகத் தோழமைகள் ஆகியோருக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

***வாழ்க தமிழ்!*** ***வளர்க தமிழ்!!***

***மாறா அன்புடன்...***

***முனைவர் நா.பால்பாண்டி***

# BODHI
# INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

An Online, Peer-reviewed, Refereed and Quarterly Journal

**Vol: 9** **Special Issue 1** **January 2025** **E-ISSN: 2456-5571**


**Aim & Objectives**

Academic Excellence in research is sustained by promoting research support for young Scholars. Our Journal on Humanities, Arts and Science of research motivates all aspects of encounters across disciplines and research fields in a multidisciplinary view by assembling research groups and, consequently, projects, supporting publications with this inclination, and organizing programs. Internationalization of research work is the unit seeks to develop its scholarly profile in research through the quality of publications. The visibility of research is creating sustainable platforms for research and publication, such as a series of books, motivating dissemination of research results for people and society.

**Disclaimer**

Contributors are advised to be strict in academic ethics with respect to acknowledgment of the original ideas borrowed from others. The Publisher & editors will not be held responsible for any such lapse of the contributor regarding plagiarism and unwarranted quotations in their manuscripts. All submissions should be original and must be accompanied by a declaration stating your research paper as an original work and has not been published anywhere else. It will be the sole responsibility of the authors for such lapses, if any on legal bindings and ethical code of publication.

**Communication**

Papers should be mailed to bodhijournal@gmail.com

## CONTENTS


| S.No. | Chapters | Page No. |
|---|---|---|
| 1 | தொட்டிலோசை கவிதையில் தாய்-சேய் உறவு **முனைவர் பா. சிங்காரவேலன்** | 1 |
| 2 | இமாலயப் பிரகடனமும் அதன் யதார்த்த நிலையும்: ஓர் ஆய்வு **அ. கண்ணேராஜ்** | 8 |
| 3 | சுற்றுச்சூழல் இயல் **முனைவர் லெ. அலமேலு** | 15 |
| 4 | அர்த்தமுள்ள இந்து மதத்தில் மானுட வாழ்வியல் **கி. கல்யாணசுந்தரம்** | 21 |
| 5 | தமிழர் மருத்துவம் **முனைவர் நா. தீபா சரவணன்** | 26 |
| 6 | தொகை நூல்கள் காட்டும் மனிதநேயம் **முனைவர். பா. அங்கயற்கண்ணி** | 32 |
| 7 | திருவள்ளுவரின் பார்வையில் அரசியலும் இன்றைய சூழலும் **பேரா. பா. முத்தீஸ்வரி** | 37 |
| 8 | சங்க இலக்கியத்தில் மானுடவியல் திருமண முறைகள் **ப. ரதிதேவி** | 40 |

| | | |
|---|---|---|
| 9 | சங்க இலக்கியத்தில் உணவும் மருந்தும்<br>**க. கௌரி சங்கரி** | 45 |
| 10 | பிரபஞ்சன் சிறுகதைகளில் மனிதநேய சிந்தனைகள்<br>**ம. சாரதா** | 49 |
| 11 | திணை இலக்கியங்களில் சமூக அமைப்பும் சமுதாய மதிப்பும்<br>**முனைவர் ச. சதானந்தவேல்** | 53 |
| 12 | மு.மேத்தா கவிதைகளில் உள சிந்தனைகள்<br>**முனைவர் ஜ. தேவர் பொம்மி நாயக்கர்** | 57 |
| 13 | வாழ்வியல் நெறியும் மனித நேயமும்<br>**அனுபிரியா. அ & திவினா. கு** | 63 |
| 14 | நாலடியார் சுட்டும் வாழ்வியல் அறங்கள்<br>**கூ. பத்மப்பிரியா** | 67 |
| 15 | புறநானூறு நவிலும் மகளிர் வரலாறு<br>**க. தனலெட்சுமி** | 73 |
| 16 | சு.சமுத்திரம் புதினங்களில் நாட்டுப்புறப் பாடல்கள் வெளிப்படுத்தும் மக்களின் வாழ்வியல் கூறுகள்<br>**ம. ஹரிகிருஷ்ணன் & முனைவர் அ. திலகவதி** | 79 |
| 17 | ஆற்றுப்படை இலக்கியங்களில் விருந்தோம்பல்<br>**தே. இன்பென்ட் ஜெபர்சன் ஜீசஸ்** | 86 |
| 18 | புறநானூறு காட்டும் வாழ்வியல் நெறிகள்<br>**பா. ஜமுனா ராணி** | 95 |
| 19 | சிலம்பு உணர்த்தும் மானுட வாழ்வியலும் மதிப்புகளும்<br>**இரா. ஜான்சிராணி** | 100 |
| 20 | திருப்பாவை பாடல்களில் விழுமியங்கள்<br>**முனைவர் ஜெ. காவேரி** | 107 |
| 21 | திருமந்திரம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்<br>**திருமதி. சே. மாசிலாமணி** | 113 |
| 22 | வாணிதாசனார் படைப்பில் விழுமியங்கள்<br>**முனைவர் சு. முத்தையா** | 118 |
| 23 | நா. இளங்கோவின் 'மறுபக்கம்' சிறுகதை வெளிப்படுத்தும் மானுடம்<br>**முனைவர் பா. சிங்காரவேலன் & திருமதி. த. முத்துலெட்சுமி** | 127 |
| 24 | சங்க இலக்கியத்தில் பண்பாடு<br>**ச. முத்துவேல்** | 133 |
| 25 | மானுடவியல் நோக்கில் முல்லை நில மக்களின் வாழ்வியலும் மதிப்புக்களும்<br>**ல. நிவேதா** | 137 |
| 26 | திருக்குறள் உணர்த்தும் வாழ்வியல் அறங்கள்<br>**திருமதி M. பூச்செல்வி** | 142 |
| 27 | சிலப்பதிகார வழக்குரை காதையில் மானிட வாழ்வியல்<br>**பெ. ரேணுகாதேவி** | 148 |
| 28 | பொதுமறை காட்டும் வாழ்வியல் நெறிகள் - ஒரு பார்வை<br>**முனைவர் பா. சாந்தி** | 153 |

29 தெருகூத்தில் மக்கள்சார் – சடங்கியல்கள் 159
**பெ. செல்வம்**

30 மானுடம் பாடிய வானம்பாடி ஈரோடு தமிழன்பன் 165
**முனைவர் க. செல்வராஜ்**

31 வைணவ இலக்கியம் வளர்த்தெடுத்த மனிதப் பண்பாக்கங்கள் 172
**உ. ஸ்ரீதேவி**

32 ஏறுதழுவுதலும் மனித மாண்பும் 178
**முனைவர் சோ.தண்டபானி**

33 நுழைந்த அந்நிய படையெடுப்புகளும், தொலைந்த தமிழ் மொழியின் மெய்ஞான கோட்பாடுகளும் 183
**க. தியாகராஜா**

34 சங்க இலக்கியங்களில் வணிகர்களின் வாழ்வியல் அறங்கள் 190
**சீ. விஜயதர்ஷினி**

35 'அம்மாவின் புலம்பல்கள்' சிறுகதைகள் புலப்படுத்தும் வாழ்வியல் விழுமியங்கள் 194
**முனைவர் செ. யோகம்**

36 இந்தி ஒழிக - தமிழ் வாழ்க - எனது முதல் போராட்டம் 199
**கவிஞர். தஸ்லிம் காஜா**

37 மானுடவியலின் அணுகுமுறையில் சங்க தமிழ் இலக்கியங்களில் குடும்ப நிலைகள் 205
**பேரா. எம். பாபு**

38 செவ்வியல் இலக்கியங்களில் வேளாண்மைத் தொழில்நுட்பம் 212
**முனைவர் நா. பால்பாண்டி**

39 மூங்கிலணை காமாட்சியம்மன் கோயில் திருவிழாவும் வழிபாட்டு முறைகளும் 217
**ந. செல்வராஜ்**

40 கீழ்க்கணக்கு உணர்த்தும் இல்லற விழுமியங்கள் 222
**முனைவர் செ. சரஸ்வதி**

41 Marudhu Brothers – Valiant Brothers in South Indian Rebellion 226
**Dr. S. Shanthi**

42 Migration at Kumaravadi-A Study 230
**Dr. R. Kabesh**

43 The Administrative Machinery of the Chola Empire in South India – A Historical Perception 233
**Dr. M. Kanagaraj**

# தொட்டிலோசை கவிதையில் தாய்-சேய் உறவு

**முனைவர் பா. சிங்காரவேலன்**

*இணைபேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ் உயராய்வு மையம்*

*அரசு கலைக்கல்லூரி, மேலூர்*

தமிழ்க் கவிதை உலகில் தனித்த அடையாளமாய் திகழ்பவர் நெல்லை ஜெயந்தா. திருநெல்வேலியில் தேவநல்லூர் கிராமத்தில் பிறந்தவர். சென்னை மின்சார வாரியத்தில் ஓர் உயர் அதிகாரியாக பணியாற்றியவர். மின்பகிர்மானப் பணிகளுக்கு இடையில் தமிழ் பரிமாணங்களைக் கண்டு இரசித்தவர். கவிதை எழுதும் ஆற்றல் உடையவர். கவிஞர் வாலியைத் தொலைக்காட்சியில் 'வாலிப வாலி' என்னும் தலைப்பில் நேர்காணல் செய்தார். அன்று முதல் கவிஞர் வாலியின் நண்பராக, நல்ல தமிழ் சீடராக விளங்கியவர். முத்தமிழ் அறிஞர் கலைஞர் "சிவிகையில் அமர்த்தி சிறப்பு செய்யவேண்டிய கவிஞர்களில் ஒருவர்" என்று நெல்லை ஜெயந்தாவைப் பாராட்டுகிறார். இவரைப்போல் கவிக்கோ அப்துல் ரகுமான், கவிவேந்தர் மு.மேத்தா, கவிப்பேரரசு வைரமுத்து, பாவலர் அறிவுமதி உள்ளிட்டோர் நெல்லை ஜெயந்தாவின் கவிதைகளைப் பாராட்டி உள்ளனர். சமகாலத்து கவிஞர்களிடம் நெல்லை ஜெயந்தாவின் நட்பும், கவிதை ஆழமும் அழகும் புகழின் உச்சிக்கு உயர்த்தின.

"நெல்லை ஜெயந்தாவின் கவித்திறனைப் புதுக்கோட்டை தங்கம் மூர்த்தி பின்வருமாறு பாரட்டுகின்றார்.

**"நெல்லை ஜெயந்தாவை அறியாத மேடைகளுமில்லை அவரை அறியாத மேதைகளுமில்லை. சொற்களைச் சோழி உருட்டுவதைப் போல உருட்டி தாயம் விழ வைத்து ஆட்டத்தை அமர்க்களமாய் வென்று காட்டும் அற்புதக்கவிஞன்"** (தொட்டிலோசை, ப.148). இத்தகைய பெருமைக்குரிய கவிஞர் நெல்லை ஜெயந்தா **'அம்மா'** குறித்த நினைவலைகளையும், அவரால் உலக வாழ்வில் அடைந்த பயன்களையும், தொட்டிலோசை என்ற கவிதை நூலில் எங்ஙனம் பதிவு செய்துள்ளார் என்பதைக் கட்டுரை வழிக்காண்போம்.

## தொட்டிலோசை

உறவுகளில் உன்னதமான உறவு தாய் - சேய் உறவாகும். தாயில் சிறந்த கோயிலுமில்லை, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்றும், மாதா பிதா குரு தெய்வம் என்ற வரிசையில் அன்னையே முன் நிற்கிறாள். சேயின் உடல் உள வளர்ச்சியைக்

கண்டு உளப்பூர்வமாக மகிழ்பவள் அன்னை. இதனை,

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்**

**சான்றோன் எனக்கேட்ட தாய் (69)**

என வள்ளுவர் குறிப்பிடுகிறார். அம்மாவைப பற்றி பேசாத பாடாத எழுதாத படைப்பாளர்களே இல்லை எனலாம். அந்த வரிசையில் 2021 ஆம் ஆண்டு கொரானா பெருந்தொற்று காலத்தில் நோய் வாய்ப்பட்டு தனிமையில் இருந்த கவிஞர் அம்மாவுடன் பயணித்த நிலைவலைகளைக் கவிதை நூலாக்கி உள்ளார். அம்மா குறித்து எழுதிய நூலை அப்பாவுக்கு சமர்ப்பணம் செய்கிறார் நெல்லை ஜெயந்தா.

### தாலாட்டல்ல பாராட்டு

தாய் தன் குழந்தையைத் தூங்க வைப்பதற்காகப் பாடப்படும் பாட்டு தாலாட்டு. தாலாட்டுப்பாடல்கள் கிராமிய மக்களின் வாழ்க்கையோடும், அவர்களின் உணர்வுகளோடும் பின்னிப் பிணைந்துள்ளன. கவிஞர் நெல்லை ஜெயந்தா தாலாட்டுப் பாடல்பாடிய அம்மாவுக்குக் கவிதையில் பாரடா்டுத் தெரிவிக்கிறார்.

**அம்மா**

**இது நீ**

**உறங்க**

**நான் இசைக்கும்**

**தாலாட்டல்ல**

**உன்னை**

**வணங்க**

**நான் வடிக்கும்**

**பாராட்டு**

**(தொட்டிலோசை – ப.18)**

### தாய் தெய்வ வழிபாடு

தாய் தெய்வ வழிபாடு ஆரம்பகால வேத கலாச்சாரத்தில் இருந்து அறியப்படுகிறது. ரிக்வேதம் தெய்வீக பெண் சக்தியை, **'மஹிமாதா'** என்று அழைக்கிறது. அதாவது **'பெரிய தாய்'** என்பது பொருள். இந்தியாவின் பெண்தெய்வகளின் எண்ணிக்கையே அதிகம். தாய்மை மற்றும் கருவுறுதல் ஆகியவற்றின் உருவமாக தாய்தெய்வங்கள் பார்க்கப்படுகின்றன. தாய்பூமி, தாய்மண், பாரத மாதா என்றெல்லாம் அழைக்கும் மரபு மக்களிடம் உள்ளன. அத்தகைய சிறப்பு மிக்க அம்மாவை அறிந்த பின்தான் உருவ வழிபாட்டில் நம்பிக்கை பிறந்தது என்கிறார் நெல்லை ஜெயந்தா

**அம்மா!**

**உன்னைப் பார்த்த பின்பு தான்**

**நம்பிக்கை வந்தது**

**உருவ வழிபாட்டில் (ப.26)**

### தொப்புள் கொடி உறவு

கருவுற்ற காலத்தில் தாய் உண்ணும் உணவு தொப்புள் கொடி வழியாகக் குழந்தைக்குச் செல்கிறது. தாய் எந்த அளவிற்கு ஊட்டச்சத்து மிக்க உணவை உட்கொள்கிறாளோ! அந்த

அளவிற்கு கருவில் உள்ள சேயின் வளர்ச்சி இருக்கும் என்பது மருத்துவர்களின் ஆலோசனைகளில் ஒன்றாகும். மத்திய மாநில அரசுகள் தாய் சேய் நல மையம் ஒன்றை உருவாக்கி கருவுற்ற பெண்களுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவை வழங்கி வருவதையும், தடுப்பூசிகள் செலுத்தி ஆரோக்கியமான முறையில் குழந்தையைப் பெற்றெடுக்க உறுதுணையாக நிற்பதையும் சமகால மக்கள் நன்கு அறிவர், இதனைக் கவிஞர்

**அம்மா!**
**எல்லோரும் எனக்கு**
**என் வயிற்றில்**
**உணவிடுகிறார்கள்!**
**நீ தான் எனக்கும்**
**உன் வயிற்றில்**
**உணவிட்டவள்!** (ப.21)

என தாய் சேயின் தொப்புள் கொடி உறவைப்பதிவு செய்துள்ளார். மாணிக்க வாசகர் திருவாசகத்தில்

**“பால்நினைந்து ஊட்டும் தாயினும்**
**சாலப் பரிந்து . . . .”**

என்ற பாடலில் குழந்தைக்குப் பசிக்கும் நேரத்தை அறிந்து பால் ஊட்டுகின்ற தாயைப் போல இறைவன் சிவபெருமான் ஆட்கொண்ட முறையைப் பதிவு செய்துள்ளார்.

**அம்மா!**
**திடீரென்று வரும்**
**தெய்வங்கள் கூட**
**பாலைக்**
**குடிக்கத்தான் வருகின்றன!**
**நீ தான்**
**கொடுக்க வந்தவள்** (ப.34)

என்று அம்மாவை உமையொருபாகனுக்கு ஒப்புமை காட்டுகிறார். சில ஆண்டுகளுக்கு முன் விநாயகர் பால் குடிக்கின்றார் என்ற புரளி இந்தியாவெங்கும் காட்டுத்தீ போல் பரவியதைச் சுட்டிக்காட்டுகின்றார் கவிஞர்

**அம்மா யியல்**
**மாமீர்! அவளை எழுப்பீரோ? உன் மகள் தான்**
**ஊமையோ அன்றிச் செவிடோ? அனந்தலோ!**
**ஏமப்பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?**
**(திருப்பாவை 09)**

என்று ஆண்டாள் திருப்பாவை பாசுரத்தில மார்கழி மாதம் நோன்பிருக்கும், சக தோழியர்களை எழுப்புகிறார். அத்தகைய பெருந்துக்கம் கொள்ளும் பெண்கள் தாய்மையடைந்து ஒரு குழந்தையைப் பெற்றவுடன், குழந்தையின் சிறு சிணுங்கல் கேட்டு விரைந்தெழும் மாற்றத்தை அம்மாயியல் என்கிறர்.

**கவிஞர்**
**பேரிடிகளுக்கும்**
**கலையாத**
**அம்மாக்களின்**
**பெருந்தூக்கத்தைக்**
**கலைத்து விடுகிறதே**
**சின்னக் குழந்தையின்**
**சிணுங்கல்**

**இது அறிவியலை மிஞ்சும்**

**அம்மாயியலா? (ப.36)**

**அம்மா ஒரு சிற்பி**

பட்டினத்தடிகள் துறவியாகி ஊர் ஊராகத் திரிந்து கொண்டிருந்தார். அன்னையார் மரணமடைந்தார். அவருடைய ஈமச்சடங்கினைச் செய்ய சுடுகாட்டிற்கு வந்து சேர்ந்தார். அப்போது சிதைக்கு நெருப்பூட்டும் முன் பத்து பாடல்கள் பாடினார்.

**'ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாய் நொந்து பெற்று'**

**முந்தித்தவம் கிடந்து முன்னூறு நாள் சுமந்தே**

**அந்தி பகலாய்ச் சிவனை ஆதரித்துத் தொந்தி**

**சரியச் சுமந்து பெற்ற தாயார்.**

இப்படித்தான் உலகில் ஒவ்வொரு தாயாரும் குழந்தையைப் பெற்றெடுக்கிறார்கள். இதனை எளிய வடிவில் எல்லோருக்கும் புரியும்படி, நெல்லை ஜெயந்தர் பதிவு செய்துள்ளார்.

**அம்மா!**

**நீ தங்கமே என்று**

**தலைமேல் வைத்து**

**குழந்தை என்னைக்**

**கொண்டாடுகையில்**

**எனக்குத் தெரியாது**

**நீ**

**உன்னை உருக்கித்தான்**

**என்னை**

**உருவாக்கினாய் என்று" (ப.42)**

**அம்மா அன்பின் அடையாளம்**

**சுனையாய் சிறுநீரை எய்தாதென்று எண்ணிப்**

**பிணைமான் இந்துண்ண வேண்டிக்**

**கலைமான் தன்**

**கள்ளத்தில் ஊச்சும் சுரம்**

**(ஐந்தினை ஐம்பது)**

என்று அன்பு நிறைந்த பாலை நிலக்காட்சியில், ஆண்மான் பெண் மானுக்காய் நீர் அருந்துவதைப் போல் பாவனை செய்வதைக் காணமுடிகிறது. அதைப்போல் அம்மா அன்பு நிறைந்தவள் என்பதைக் கவிஞர் காட்சிப்படுத்துகிறார்.

**கர்ப்பத்தில்**

**நான் பட்டினி கிடக்கக் கூடாது**

**என்பதற்காய்**

**நீ உண்பாய்!**

**வறுமையில்**

**நான் உண்ணவேண்டும்**

**என்பதற்காய்**

**நீ பட்டினி கிடப்பாய் (ப.50)**

மேலும், கவிஞர் துறவுக்கும் உறவுக்கும் உள்ள ஒற்றுமையைக் கவிதையாக்குகிறார்.

**அம்மா**

**காவி உடுத்திய**

**துறவும்**

**இவளைத் துறக்க முடியாது**

**காரணம்**

**இவள் நம்**

**ஆவி உடுத்திய உறவு (ப.92)**

பட்டினத்தடிகள் துறவு மேற்கொண்டாலும், இறுதிச்சடங்கு செய்ய வந்து சேர்ந்தார். தாய் சேய் உறவைப் பிரிக்கமுடியாது என்பதற்கு அவரின் வாழ்க்கைச் சூழலே நமக்குப் பாடம்.

**பஞ்சபூதம்**

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்களுக்குள் உலகம் அடக்கம். ஒன்றுடன் ஒன்று இணைந்திருந்தால் உயிர்கள் இயங்கும். தாய்க்குள் பஞ்சபூதங்கள் அடங்கி இருப்பதைக் கவிஞர்

**அம்மா!**
**பஞ்சபூதமாய்ப்**
**பார்க்கலாம்**
**உன்னை!**
**நீ நிலம்**
**என்னைச் சுமந்ததால்**
**நீ நீர்**
**உன்னில் மிதந்ததால்!**
**நீ நெருப்பு**
**எனக்கு**
**வெளிச்சத்தைக் காட்டியதால்!**
**நீ காற்று**
**உன் மூலம் நான் சுவாசித்ததால்!**
**என்னைக்**
**கவனித்துக்கொண்டே இருப்பதால்! (ப.68)**

**என்று காட்சிப்படுத்துகிறார்.**

**அம்மாவின் அழகு**
**பொங்கலுக்கு**
**முன்னிரவில்**
**நீ**
**விரல்களைக் குவித்து இடும்**
**கோலத்தில் தான்**
**வீட்டிற்கே அழகு வரும் (ப.80)**

என்று கிராமப்புறங்களில் பண்டிகை நாட்களில் இடப்படும். மாக்கோலத்தினால் வீடு அழகு பெறுவதை நினைவலைகளாகப் பதிவிடுகிறார். மற்றோரிடத்தில் வாழ்க்கையைக் கற்றுத்தருபவள் தாய் என்பதை

**அம்மா!**
**விரல்களைப் பிடித்து**
**எழுதச் சொல்லித்தந்தார் ஆசிரியர்!**
**கைகளைப் பிடித்து**
**நடக்கச் சொல்லித்தந்தார்**
**அப்பா!**
**வாழ்க்கையைப் பிடித்து**
**எழுதியபடி**
**நடக்கச் சொல்லித் தந்தாய்**
**நீ! (ப.53)**

அம்மா அன்பு, பாசம், பொறுமை, நிதானம், சகிப்புத்தன்மை ஆகியவற்றைத் தன் நடத்தையினால் கற்றுத்தரக் கூடியவளாக விளங்குகிறாள் என்ற நெல்லை ஜெயந்தாவின் பதிவு நெகிழச் செய்கிறது.

**பின்தூங்கி முன் எழுவாள்**

தியாகத்தின் திருவுருவங்கள் பெண்கள், தாய் தன் வீட்டிலிருந்து கணவன் வீட்டிற்குள் வந்த நாள் முதல், தன் சுக துக்கங்களை மறந்து செயலாற்றுபவள். இதனை,

**அம்மா!**
**இரவில் நீ**
**எங்களுக்குப் பின்**
**உறங்கி**
**விடியலில்**
**எங்களுக்கு முன்**
**விழிப்பாய்!**
**காரணம்**
**உன்**
**கண்களில் இருப்பது**
**இமைகளல்ல**
**சுமைகள்! (ப.5)**

என்கிறார். நெல்லை ஜெயந்தா, ஒவ்வொரு இல்லத்திலும் இத்தகைய அம்மாக்கள் இருப்பதால் தான் மக்களின் மரபும், பண்பாடும், குடும்பமும், காப்பாற்றப்பட்டு வருகின்றன.

**எந்திர உலகம்**

இருபத்தோராம் நூற்றாண்டில் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சி பெருகி நிற்கிறது. அதே நேரத்தில் மக்களின் வாழ்க்கையும் எந்திரமாகிவிட்டன. இதனை

**அம்மா!**
**அன்று**
**நம் கிராமத்து வீட்டில்**
**மாவரைக்கும் எந்திரம்**
**சலவை எந்திரம்**
**குளிர்சாதனப் பெட்டி**
**மின்சார அடுப்பு**
**எரிவாயு அடுப்பு**
**எதுவும் இல்லை**
**நீயே**
**எல்லா வேலைகளையும்**
**முடித்துவிட்டு**
**பேசிக்கொண்டிருப்பாய்**
**இன்றோ**
**எல்லா எந்திரங்களும்**
**என் வீட்டில் உண்டு**
**ஆனால்**
**உன்போல்**
**பிள்ளைகளோடு**
**பேசிக்கொண்டிருக்க முடியாமல்**
**என் வாழ்க்கையும்**
**எந்திரமாகி விட்டது (பக்.76,77)**

என்று நெல்லை ஜெயந்தா தாய் சேய் உறவுகளுக்கிடையே உரையாடல்கள் குறைந்து கொண்டு வருவதைப் பதிவு செய்துள்ளார். இந்நிகழ்வு கவிஞருக்கான மனக்குறை மட்டும் அல்ல. ஒவ்வொரு இல்லங்களிலும் உள்ள அம்மாக்களின் மனக்குமுறலைப் பதிவு செய்துள்ளார். மேலும்,

**அம்மா!**

**அப்பா**

**தன் உயிராய் எழுதி**

**எந்தப் பத்திரத்தையும்**

**வைத்திருக்கவில்லை**

**ஆனால்**

**தன் உயிரால்**

**எழுதித் தந்த**

**உன்னை வைத்திருப்போம்**

**பத்திரமாய் (ப.102)**

என்று முதியோர் இல்லங்கள் பெருகிவரும் சூழலில் அம்மாவை அன்போடு பாதுகாக்க வேண்டும். அன்பின் வடிவம் அம்மா என்று கவிஞர் கவிதை நூலெங்கும் தாயின் தனிப்பெரும் சிறப்புகளை நயம்பட இயற்றி உள்ளார். அம்மாவுக்கு கவிதை வழி பெருமை சேர்க்க நினைத்த கவிஞருக்கு, அம்மாவைப் பற்றி பாடியதால் பெருமை சேர்ந்தது என்பதையும் கவிதையாக்கி உள்ளார்.

**நிறைவுரை**

தொட்டிலோசை நூலை வெளியிட்ட ஷோபா சந்திரசேகர் 'நல்ல கவிதைகளைப் படைப்பதால் கவிஞனும் இறைவனே' என்கிறார். உலகில் உள்ள உயிரினங்களில் பெண்ணினம் தான் போர்க்குணம் கொண்டவை. தன்னை விட வலிமையான பருந்தைக் கூட விரட்டியடிக்கும் வலிமை தாய்கோழிக்கு வந்துவிடுவதைப் பார்க்கிறோம் என்கிறார் பேச்சாளர் பர்வீன் சுல்தானா அத்தகைய தாய்மை உணர்வுள்ள கவிதைகளை நெல்லை ஜெயந்தாவின் தொட்டிலோசை நூல் முழுவதும் காணமுடிகிறது. அம்மாவின் பல்வேறு பரிமாணங்களைப் பாடியிருக்கும் கவிதைகள் காலத்தால் அழியாத ஓவியங்களை, வண்ணங்களால் எழுதப்பட்டவை அல்ல, கடந்த கால எண்ணங்களால் எழுதப்பட்டவை. இந்நூலை வாசிப்போர் நேசிப்பர் தம் சொந்த அம்மாவை மட்டுமல்ல, ஒவ்வொரு தாய்மையையும் போற்றுவோம்.

**துணை நூற்பட்டியல்**

1. தொட்டிலோசை - நெல்லை ஜெயந்தா - வாலி பதிப்பகம் – 2021.

# இமாலயப் பிரகடனமும் அதன் யதார்த்த நிலையும்: ஓர் ஆய்வு

**அ. கண்ணேராஜ்**

*சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானங்கள் துறை*

*கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*

**அறிமுகம்**

இலங்கையில் இனப்பிரச்சினை என்பது நீண்டகால வரலாற்றைக் கொண்டது. 1974 தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி, ஆயுத மோதலுடன் தொடர்பானதாக இவ்வினமுரண்பாடு வலுவடைந்திருந்தது. எவ்வாறாயினும் இவ் இனமுரண்பாட்டைத் தீர்ப்பதற்கான முயற்சிகளும் அவ்வப்போது முன்னெடுக்கப்பட்டிருந்தன. 2009 இல் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர், தீர்வு முயற்சிகள் சொல்லிக்கொள்ளும் அளவில் முன்னெடுக்கப்பட வில்லை. இவ் இனமுரண்பாடு என்பது தீர்க்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்கள் மத்தியில் உண்டு. இலங்கை என்பதை பௌத்த நாடு எனப் பெரும்பான்மையினரான சிங்கள் மக்கள் பற்றிக்கொண்டிருக்கும் அதேவேளை, தமிழர்கள் தேசியம், தாயகம் மற்றும் சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில், தமது பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் எனும் எதிர்பார்ப்பிலும் உள்ளனர். எவ்வாறாயினும், இவ்விரு இனத்தவர்களின் எதிர்பார்ப்புக்களும் இருபெரும் துருவங்களுக் இடையேயான ஒரு சமரசத்தை ஏற்படுத்தி, சமாதான முயற்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதே சமரசத்தின் ஊடாக அடைந்து கொள்ளக்கூடிய தீர்வாகவும் உள்ளது.

தமிழர்களுக்கு வழங்கப்படும் எந்தத் தீர்வும், நாட்டைத் துண்டாடிவிடும் என்ற விம்பம் சிங்கள மக்களின் மனங்களில் ஆழமாகப் பதிக்கப்பட்டுள்ளது. ஆயினும், இலங்கை பல்லின மக்கள் வாழுகின்ற ஒரு நாடு. ஏன்பதை ஏற்றுக்கொள்ளும் போதே எத்தகைய தீர்வு முயற்சிகளும் சாத்தியமாகும்.

இலங்கையில் இனமுரண்பாட்டிற்கான தீர்வு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்விலேயே தங்கியுள்ளது. இவ்விடயத்தினைத் தெளிவாகப் புரிந்து கொண்டால்தான், இலங்கையில் இனப்பிரச்சினை தீர்ப்பதற்கு இயலாதது ஒன்றல்ல என்பதையும் அறிந்துகொள்ள முடியும். எவ்வாறாயினும், தீர்வு என்பது அதிகாரப் பரவலாக்கத்தின் வடிவிலில்லை. மாறாக, சிறுபான்மை மக்களுக்குப் பிரச்சினை உண்டு என்பதைப் பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொள்வதிலேயே தங்கியுள்ளது. எவ்வாறாயினும், உலகத் தமிழர் பேரவையும், சிறந்த இலங்கைக்கான சங்கங்கள் என்ற

அமைப்பும் கூட்டாக எடுத்த ஒரு முயற்சியின் பயனாக, இமாலயப் பிரகடனம் எனும் ஒரு விடயம் பேசுபொருளாகியது. இமாலயப் பிரகடனம் எத்தகைய இலக்குகளை அடைந்துள்ளது என்பதே இவ்வாய்வாகும்.

**திறவுச் சொற்கள்:** இமாலயப் பிரகடனம், உலகத் தமிழர் பேரவை, இனமுரண்பாடு, தீர்வு முயற்சிகள், அதிகாரப் பரவலாக்கம்

## ஆய்வுப் பிரச்சினை

2009ஆம் ஆண்டின் பின்னர், இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் இனப்பிர்சினைக்கான தீர்வு முயற்சிகள் ஒரு தேக்க நிலையினை அடைந்திருந்தன. இந்நிலையில், தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் செயற்படுவதற்கான பல ஆமைப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டன. ஆதில் முக்கியமானதொன்றாக அடையாளப் படுத்தப்பட்டது உலகத் தமிழர் பேரவையாகும். இவ்வமைப்பும், சிறந்த இலங்கைக்கான சங்கம் எனும் பௌத்த துறவிகளினுடைய அமைப்பும் சேர்ந்து, இமாலயப் பிரகடனம் எனும் பெயரில் ஒரு முன்மொழிவினை இலங்கை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் முன்வைத்தன. இப்பிரகடனம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் அமைந்திருந்ததா? என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப் பட்டுள்ளது.

## ஆய்வின் நோக்கம்

### பிரதான நோக்கம்

இமாலயப் பிரகடனம் தமிழர்களின் இனமுரண்பாட்டைத் தீர்ப்பதற்கான சாதகமான விடயங்களை உள்ளடக்கி யுள்ளதா? என்பதனை அறிதல்.

### துணை நோக்கம்

இமாலயப் பிரகடனம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள விமர்சனங்களின் உண்மைத் தன்மையினை அறிதல்.

## இமாலயப் பிரகடனம்

இவ் இமாலயப் பிரகடனமானது உலகத் தமிழர் பேரவையும், சிறந்த இலங்கைக்கான சங்கம் எனற அமைப்பும் கூட்டாக, தேசிய இனப்பிர்சினையைத் தீர்ப்பதனை நோக்கமாகக் கொண்டு வெளியிடப் பட்டிருந்தது. இதற்காக இவ்விரு தரப்பினரும் 2023ஆம் ஆண்டில் நேபாளத்தில் உள்ள நாகர்கோட் என்னும் இடத்தில் சந்தித்திருந்தனர். இதன் பயனாக இப்பிரகடனமானது உருவாக்கப்பட்டிருந்தது. இப்பிரகடனமே இமாலயப் பிரகடனம் என அழைக்கப்படுகின்றது.

தமிழர் பேரவையின் சார்பில் இலங்கைலிருந்து புலம்பெயர்ந்து கனடா, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வசிக்கும் பிரதிநிதிகளும், பௌத்த தேரர்களும் இப்பிரகடனத்தில் கையொப்பம் இட்டிருந்தனர்.

ஒவ்வொரு தனிநாரும் சமாதானமாகவும் கௌரவத்துடனும் நம்பிக்கையுடனும் எவ்வித பயமும், சந்தேகப்படுத்தலுமின்றிச் சமமான உரிமைகளை அனுபவித்து வாழக்கூடிய ஒரு இலங்கை நாட்டை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்(அருள்தாஸ். ம. 2024). இதனை அடைந்துகொள்ளும் வகையில் இப்பிரகடனத்தில் ஆறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவையாவன:

1. எந்தவொரு சமூகமும் தனது அடையாளத்தையும், வாழிடப் பெருமையையும் இழந்து விடலாமென்ற அச்சமில்லாது வாழக்கூடிய பன்முக அடையாளத்தைப் பாதுகாத்தல், ஊக்குவித்தல்.
2. பொருளாதாரச் சிக்கலிலிருந்து மீள்தல், உள்ளூர் உற்பத்தி, புலம் பெயர் இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டாரின் முதலீடுகளுக்கு வசதி செய்து கொடுத்தல், நாடு வளர்ச்சிப் பாதையில் செல்வதை உறுதி செய்தல் ஆகிய செயற்பாடுகளின் மூலம் இலங்கையை ஒரு உறுதியான மத்திய வருமான நாடாக மாற்றுதல்.
3. தனியார் மற்றும் கூட்டுரிமைகள், சகல மக்களினதும் சமத்துவம், சமக்குடியுரிமை, பொறுப்புள்ள நிறுவனங்கள், மாகாணங்களுக்குப் போதுமான அதிகாரப் பகிர்வு ஆகியவற்றை உறுதி செய்யவல்ல புதிய அசியலமைப்பு ஒன்றை உருவாக்கல். அது நிறைவேற்றப்படும் வரை ஏற்கனவே இருக்கும் அரசியலமைப்பின் பிரிவுகளை விசுவாசத்துடன் செயற்படுத்துதல்.
4. ஒன்றிணைந்த பிரிக்கப்படாத நாட்டில், மக்களின் மத, கலாசார மற்றும் இதர அடையாளங்களை ஏற்றுக் கொண்டு, அவற்றிற்கான மதிப்பை வழங்குதல். இன, மத, சிறுபான்மைக் குழுக்களிடையே நம்பிக்கையை வளர்க்கும் முயற்சிகளில் ஈடுபடுதல்.
5. கடந்தகாலங்களில் கற்றுக்கொண்ட, பொறுப்புக்கூறல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம், இவைபோன்ற துன்பங்கள் இனிமேல் நிகழாது என்பதை உறுதி செய்யக் கூடிய, நல்லிணக்கம் கொண்ட இலங்கையொன்றை உருவாக்குதல்.
6. இரு தரப்பு, பல்தரப்பு ஒப்பதங்கள் மற்றும் சர்வதேசக் கடமைகளை நிறைவேற்றுதல், சுயாதீனமானதும், மாறும் இயல்பு கொண்டதுமான வெளிவிவகாரக் கொள்கையைப் பின்பற்ற நடவடிக்கை எடுத்தல். உலகில் அமைதியான, வளமான ஜனநாயக நாடுகளின் மத்தியில் பெருமதிப்பைப் பெற்ற நாடாக இலங்கையை உருவாக்குதல்.

**பகுப்பாய்வும் வியாக்கியானமும்**

மேற்படி 06 விடயங்களை உள்ளடக்கியுள்ள இமாலயப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களைத் தொகுத்து நோக்கும்போது, இலங்கையில் வாழும் ஒவ்வொரு

குடிமகனும் சமாதானத்துடனும், எந்தவித பயமுமன்றிச் சமமான உரிமைகளை அனுபவித்து வாழக்கூடிய ஒரு நாட்டை உருவாக்குதல் என்ற அடிப்படையிலும், பொருளாதார முன்னேற்றத்தையடைதல் என்ற அடிப்படையிலும், சர்வதேச சமூகத்தில் இலங்கை எதிர்நோக்கும் சவால்களைச் சாதகமாகக் கையாளுதல் எனும் அடிப்படையிலும், விடயங்கள் இமாலயப் பிரகடனத்தின் உள்ளடக்கப் பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கை நாட்டைப் பொறுத்தமட்டில், இனப்பிர்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டுமாயின், சிங்களப் பெரும்பான்மை மக்களின் விருப்பத்தை பெற்றுக் கொள்ளப்படும்போதே சாத்தியமாகும். அன்றில் எத்தகைய முயற்சிகளும் வெற்றி பெறுவது சாத்தியமில்லை என்கின்ற நிலைப்பாடு காணப்படுகின்றது. ஏனெனில், தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கப்பட்டால், அது இலங்கைத் தீவின் பிரிவினைக்கு வழிகோலும் என்பது பெரும்பான்மை மக்களின் எதிர்பார்ப்பு. இதனாலேயே இனப் பிரச்சினைக்கான தீர்வாக முன்வைக்கப் படக்கூடிய சமஷ்டி என்பதை அவர்கள் அடியோடு வெறுக்கின்றனர். இத்தகைய தீர்வு முயற்சிகளில் கடந்தகாலத்தில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் பௌத்த மதகுருமார்களே முன்னணி வகித்திருந்தனர். எனவே, தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கபப்படும்போது, பௌத்த பிக்குகளின் அனுசரணையினைப் பெற்றுக் கொண்டால், தீர்வு முயற்சிகள் சாத்தியமாகலாம் என்னும் அடிப்படையில், உலகத் தமிழர் பேரவை பௌத்த குருமாருடன் சேர்ந்து இத்தகைய முயற்சிகளை முன்னெடுத்திருக்கலாம். எவ்வாறாயினும், தமிழர் தரப்பிலிருந்து உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் பாரிய எதிர்ப்பலைகள் இமாலயப் பிரகடணம் தொடர்பில் ஏற்படத் தொடங்கியிருந்தன. உண்மையில், இம்முறை இத்தீர்வு முயற்சியினை வரலாற்றில் முதல் தடவையாக தமிழ் மக்களே எதிர்க்கத் தொடங்கியிருந்தனர் என்பது இங்கு கவனிக்க வேண்டியதொரு விடயமாகும்.

உலகத்தமிழர் பேரவை இரகசியமாகவே இம்முயற்சியினை ஆரம்பித்திருந்தது. 2023ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் பௌத்த பிக்குகளுடன் இது தொடர்பான கலந்துரையாடல்களில் நேபாளத்தில் ஈடுபட்டுள்ளனர். எவ்வாறாயினும், இதுபற்றிய தகவல்கள் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. ஒரு யுத்தம் இருதரப்பினரிடையே நடைபெற்றுக் கொண்டிருந்ததால் இத்தகைய தீர்வு முயற்சிகள் இரகசியமாக கையாளப்படுவதில் நியாயங்கள் உண்டு. ஆயினும், யுத்தமற்ற ஒரு சூழலில் இரகசியமாக இத்தகைய தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப் படுவதற்கான அவசியமில்லை. இதனால், தமிழ் மக்களின் தீர்வு தொடர்பிலான அபிலாசை என்னவென்பது தொடர்பில் பொதுக் கலந்துரையாடல் ஒன்றினை ஈழத் தமிழர்கள் மத்தியிலோ, அல்லது புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலோ, தமிழ்

அரசியல் கட்சிகளின் மத்தியிலோ பொது இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக் கொண்டு இத்தீர்வு முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இதனாலேயே, தமிழர் தரப்பிலிருந்தே எதிர்ப்புக்கள் முதலில் ஏற்படத் தொடங்கியிருந்தன.

உலகத் தமிழர் பேரவை இது தொடர்பில் குறிப்பிடுகையில், 2009ஆம் ஆண்டின் பின்னர் சமாதான முயற்சிகள் ஒரு தேக்க நிலையினை அடைந்திருந்தன. எனவே, யாராவது தீர்வு முயற்சிகளை ஆரம்பிக்க வேண்யடிதொரு தேவை இருந்தது எனக் குறிப்பிட்டிருந்தனர். இங்கு நோக்கவேண்டிய விடயம், இலங்கைத் தமிழர்களினுடைய போராட்டம் என்பது நீண்டகால வரலாற்றைக் கொண்டது. இதற்குப் பின்னால் நீண்டதொரு இழப்பு, தியாகம் மற்றும் அர்ப்பணிப்பு என்பனவெல்லாம் இருக்கின்றன. அவை மட்டுமன்றி ஓர் அர்த்தபூர்வமான அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் ஏற்கனவே தொடக்கப் புள்ளிகள் இடப்பட்டிருக்கின்றன. எனவே, யாரும் எதனையும் செய்யவில்லை என்று ஒரு எடுகோளை வைத்துக்கொண்டு தீர்வு முயற்ச்சிகள் ஆரம்பிக்கப்படும் போது ஏற்கனவே எட்டப்பட்ட விடயங்கள் மீண்டும் பூச்சிய நிலையை அடைந்துவிடும். இது தொடர்பில் கவனம் செலுத்தாமல், இரகசியமான முறையில் தொடங்கப் பட்டமையினால் தமிழர் தரப்பிலிருந்து உடனடி எதிர்ப்பை எதிர்நோக்க வேண்டியிருந்தது. மறுபுறம், தமிழர்களின் ஏகப் பிரதிநிதியாக இருந்துகொண்டு, இத்தகைய முயற்சிகளை ஆரம்பிக்கக் கூடிய அங்கீகாரத்தையும் உலகத் தமிழர் பேரவை கொண்டிருக்கவில்லை என்பதும் யதார்தமான உண்மையாகும்.

உண்மையில், இனப்பிர்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ் மக்களின் அபிலாசையினை நோக்கும்போது, அர்த்த பூர்வமான அதிகாரப் பரவலாக்கம் எனும் அடிப்படையில் தேசியம், சுயநிர்ணய உரிமை, தாயகம் என்ற அடிப்படையில் தமது இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயம் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அவர்களிடம் உண்டு (தந்தை செல்வா திருவுருவச் சிலை நிர்மானிப்புக்குழு, 2018).

தந்தை செல்வா காலந்தொட்டு ஈழத் தமிழர்களின் பிரச்சினை தேசியம், தாயகம், சுயநிர்ணயம் ஆகிய அம்சங்களின் அடிப்படையில் கையாளப்படுதல் வேண்டும் என்பது தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால், இமாலயப் பிரகடனத்தில் தனியே பன்மைத்துவ சமூகக் கட்டமைப்பில் சமத்துவமான வாழ்வு என்பதனைப் பொதுப்படையாகக் கூறுகின்றனரே ஒழிய, தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பில் எந்தவொரு விடயத்தினையும் தொட்டிருக்கவில்லை. நடைமுறையில் இருக்கின்ற அரசியல் யாப்பில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை எனும் விடயம் கூறப்பட்டிருந்தாலும், ஏனைய மதங்கள் தனித்துவத்துடன்

செயற்படுவதற்கு எத்தகைய தடைகளும் இல்லை. இங்கு சட்ட ரீதியாக அன்றி, நடைமுறையிலேயே ஏனைய மதங்களும், இனங்களும் மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் நடாத்தப்படுகின்றன. எனவே, இமாலயப் பிரகடனம் சமத்துவம் என்பதனை புதிய விடயத்தினைப் போல முன்வைத்திருப்பது தவறு. இது ஏற்கனவே அரசியல் யாப்பில் உண்டு. ஆனால், நடைமுறையிலேயே பிரச்சினைகள் உண்டு. எனவே, நடைமுறைச் சாத்தியமான விடயங்கள் கையாளப் படவில்லை என்னும் குற்றச்சாட்டும் உண்டு (அருள்தாஸ். ம. 2024).

இனமுரண்பாட்டுக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட இப்பிரகடனம், பல்லின மக்கள் வாழும் நாட்டில் சமத்துவமான வாழ்க்கை என்பதற்கு அப்பால், அதிகமாகப் பொருளாதாரம், சர்வதேச உறவு மற்றும் புலம் பெயர்ந்தவர்களின் பொருளாதார ரீதியிலான முதலீடு தொடர்பில் அதிகம் அக்கறை செலுத்துவதாக உள்ளமை தமிழ் மக்கள் மத்தியில் அதிகம் சந்தேகங்களை ஏற்படுத்தியிருந்தது. காரணம், தற்போது அதிகாரத்தில் இருக்கும் ஜனாதிபதியின் பொருளாதார ரீதியான கொள்கைகளை வலுப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகவும் பார்க்கப்படுகின்றது. புலம்பெயர் தமிழர்களின் முதலீட்டினை கவர்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகப் பார்க்கப்படுகின்றது. எனவே, இங்கு சமாதான முயற்சி என்ற போர்வையில், புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளைக் கவருவதற்கான ஒரு முயற்சியாகவே பார்க்கப்படுகின்றது. அத்துடன், சர்வதேச உறவு தொடர்பான விடயங்களையும் உள்ளடக்கி, தற்கலத்தில் யுத்தக் குற்றம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எதிர்நோக்குகின்ற அழுத்தத்தைக் குறைப்பதற்கான ஒரு முயற்சியாகவும் பார்க்கப்படுகின்றது. ஏனெனில் சர்வதேச உறவு தொடர்பில் இப்பிரகடனம் உள்ளடக்கியிருக்க வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை.

அடுத்ததாக இப்பிரகடனம் பொறுப்புக்கூறல் தொடர்பிலும் விடயங்களை உள்ளடக்கியிருந்தது. ஆயினும், பொறுப்புக் கூறல் எத்தகைய கட்டமைப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்பது தொடர்பில் எத்தகைய விடயங்களையும் குறிப்பிடவில்லை. தமிழ் மக்கள் சர்வதேசப் பொறிமுறை தொடர்பிலேயே வலியுறுத்தி வருகின்றனர். ஆயினும், பொறுப்புக் கூறல் தொடர்பில் பொதுப்படையாகக் கூறப்படுவது தமிழ் மக்களுக்குச் சாதாகமாக அமையாது என்பது தெளிவானதொரு விடயமாகும் (யோதிலிங்கம். சி. ஆ, 2023).

அடுத்ததாக, மேற்கத்திய நாடுகள் தற்போது ஆட்சியில் இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியை, மீண்டும் பதவியில் அமர்த்துவதற்காகத் திரைமறைவில் மேற்கொண்டதொரு முயற்சியாகவும் பார்க்கப்படுகின்றது. இதன் மூலம்

சிறுபான்மைத் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட தொரு முயற்சியாகவும் பார்க்கப் படுகின்றது. சுவிஸ்லாந்து நாடே நேபாளத்தில் இடம் பெற்ற இரகசிய பேச்சுவார்த்தைகளுக்கு அனுசரணை வழங்கியதாகக் கூறப்படுவது இத்தகைய சந்தேகங்களை வலுப்படுத்துவதாக அமைந்துவிடுகின்றது (நிலாந்தன், 2024).

**முடிவுரை**

தமிம் மக்களின் விடுதலைப் போராட்டம் நீண்டகால வரலாற்றைக் கொண்டது. இன்று தமிழர்களின் பிரிவினைக்கான போராட்டம் தோல்வி அடைந்திருக் கின்றது. இதனால், தமிழ் மக்கள் பிரிவினையைக் கைவிட்டார்கள் என்பதோ அல்லது ஒற்றுமையாக வாழ இணங்கி விட்டார்கள் என்பதோ அர்த்தமாகாது. ஆயினும், 2009ஆம் ஆண்டில் யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சியில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டிருக்கின்றது என்பது உண்மை. ஈழத் தமிழ் மக்களிடமோ, புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலோ அல்லது தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியிலோ ஒரு ஒருங்கிணைப்பு என்பது இல்லை என்பது இவ் இமாலயப் பிரகடனத்தின் மூலம் வெளிப்படுத்தப் பட்டிருப்பதே இப்பிரகடனம் ஏற்படுத்திய ஒரு சாதகமான அம்சம் எனலாம். தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பில் இப்பிரகடணம் எதையுமே வலியுறுத்தவில்லை. மாறாக சுயநிர்ணய உரிமையைக் கைவிடுதல், இன அழிப்பிற்கான சர்வதேச விசாரணையினைக் கைவிடுதல், ஒற்றையாட்சியினை ஏற்றுக்கொள்ளுதல் என்பவற்றையே இப்பிரகடனம் எடுத்துக் கூறுகின்றது. தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை ஒட்டுமொத்தமாகப் புதைகுழியில் இட்டுமூடியதாக பிரகனப்படுத்திய தொரு பிரகடனமே இவ் இமாலயப் பிரகடனம் எனலாம்.

**உசாத்துணை நூல்கள்**


1. நிலாந்தன், இமாலயப் பிரகடனம்: தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு?, 2024, URL Available on: https://www.nillanthan.com/ 6418/
2. அருள்தாஸ். ம. இமாலயப் பிரகடனம்: தமிழர் பேரவையின் இமாலயத் தந்திரம், உதயன் பத்திரிகை, 2024, URL Available on: https://newuthayan.com/article/
3. மாயமான், இமாலயப் பிரகடனம்: எதிரின் புதிர்; 2024, URL Available on: https://marumoli.com/
4. தந்தை செல்வா திருவுருவச் சிலை நிர்மானிப்புக்குழு, செல்வா சிலை மலர், தந்தை செல்வா திருவுருவச் சிலை நிர்மாணிப்புக்குழு, 2018. மட்டக்களப்பு.
5. யோதிலிங்கம். சி. ஆ, கொள்கைத் தவறுகளையும் அணுகுமுறைத் தவறுகளையும் கொண்ட பிரகடணம், 2023, URL Available on: https://www.elukainews.com/archives/ 48569

# சுற்றுச்சூழல் இயல்

**முனைவர் லெ. அலமேலு**

*உதவிப் பேராசிரியர் & துறைத்தலைவர்*

*தமிழ்த்துறை, ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி, போடிநாயக்கனூர்*

இயற்கையானது வியப்புக்குரியதாய் பரந்து விரிந்து உள்ளது. அதில் திடப்பொருள்கள், திரவப் பொருட்கள், கனிமங்கள், உயிரினங்கள், தாவரங்கள் எனப் பலவகைகள் உள்ளன. அவை அனைத்தும் ஒருங்கிணைத்துத் தொகுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி வாழ்கின்றன வளர்கின்றன.

இயற்கை எழிலை அள்ளித்தரும் காடுகள் இயற்கையின் கொடைகளுள் ஒன்றாகும். இந்தக் காடுகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் நமக்குப் பல்வேறு பயன்களைத் தருகின்றன.

**“மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்**
**காடும் உடையது அரண்”**

**குறள்:742**

என்று வான்புகழ் வள்ளுவர் காட்டு வளத்தின் பெருமையைச் சுட்டிக் காட்டுகிறார். மரம், செடி, கொடிகள் அடர்ந்து வளர்ந்த நிலப்பகுதியே காடு எனப்படும். காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலம் எனப் பழந்தமிழர் போற்றினர்.

இன்று நீலமலை, குற்றாலமலை, அழகர் மலை, பாபநாசமலை, வெள்ளிமலை, மருதமலை, இமயமலை முதலிய இடங்களில் பெருங்காடுகள் அமைந்துள்ளன. காடு நாகரீகத்தின் தாய்வீடாகவும் இயற்கை எழிலின் கூடாகவும் பொருள் வளத்தின் பீடாகவும் கருதப்படுகிறது.

நாம் வாழும் இந்த எழில்மிகு பூமி நமக்கு மட்டும் சொந்தமானதல்ல. எதிர்காலச் சந்ததியிடம் இதைப் பத்திரமாய் ஒப்படைக்க வேண்டும் நாம். அப்போது தான் பூமித்தாய் மகிழ்வாள். இந்தப் பூமியைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய கடமையில் தவறும் சமூகம் தன் சந்ததியைப் பாதுகாக்கத் தவறிவிட்டது என்பது மட்டுமல்ல. மீளமுடியாத படுகுழிக்குள் அவர்களைத் தள்ளிவிட்டது என்பது உண்மை இயற்கையின் மீது மனிதன் அதிகாரம் செலுத்தவும், அழிக்கவும் தொடங்கும் போது இயற்கை மனிதனைத் தண்டிக்கவும், பாடம்புகட்டவும் முனைகிறது. அதிலிருந்து மனிதன் பாடம் கற்காமல் மேலும் இயற்கையின் மீதே பழி சுமத்துகிற போக்கினால் பல பேரிடர்களைச் சந்திக்க நேரிடுகிறது. இன்னும் விழித்துக்கொள்ளாவிட்டால் அதன் விளைவு விவரிக்க இயலாததாகிவிடும். நம் முன்னோர் நம்மிடம் அழகாக ஒப்படைத்தப் பூமியை நாமும் நம் சந்ததிக்கு அழகாகத் தரவேண்டும். எனவே சுற்றுச்சூழல் குறித்த கல்வியும் விழிப்புணர்வும்

இப்போதைய அவசியத் தேவைகளாகும். சுற்றுச்சூழல் என்பது சமூக, பொருளாதார, காரணிகளின் கூட்டுத் தொகையாகும்.

சுற்றுச்சூழல் என்பது ஒருங்கிணைந்த ஒரு சொல் ஆகும். மனிதனைச் சுற்றியுள்ள நிலம், நீர், காற்று, வான்வெளி, சூரியன், தாவரங்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவையும், மனிதனால் உருவாக்கப்பட்ட அவனது வாழ்க்கை நிலை, கலாச்சாரம், தொழில்நுட்பம், சமூக பொருளாதார சட்ட அமைப்பு, அரசியல், சுகாதார அமைப்பு போன்ற அனைத்தையும் உள்ளடக்கியதே சூழல் என்பதாகும். நம்மைச் சுற்றியுள்ள உயிருள்ள, உயிரற்ற செயற்கையான அனைத்தும் சுற்றுச்சூழல் ஆகும். எனினும் சூழல் என்பதில் இயற்கையே முக்கிய இடம் பெறுகிறது. இந்தச் சூழலைப் பொறுத்து மனிதனின் வாழ்க்கை நிர்ணயிக்கப் படுகிறது. எந்த ஓர் உயிரினத்தின் செயல்பாடும், அதன் சூழ்நிலை மண்டலத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சூழலின் மாறுபாடுகள் மனித வாழ்க்கையைப் பாதிக்கும். எனவே மனிதன் தன்னைப் போல இயற்கையை நேசிக்க வேண்டும்.

ஓர் உயிருக்கும் அதனைச் சுற்றியுள்ள பிற உயிர்களுக்கும் அல்லது உயிரற்ற பொருள்களுக்கும் இடையே உள்ள நேச மற்றும் விரோத உறவுகளை விளக்கும் அறிவியல் படிப்பே "சுற்றுச்சூழல் படிப்பு" என்று எர்னஸ் ஹெக்கல் என்ற அறிஞர் கூறியுள்ளார்.

ஆரம்ப காலத்தில் மனிதன் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தான். இயற்கையை நேசித்து வாழ்ந்தான். வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் இயற்கையைத் தன்னுடன் இணைத்து மகிழ்ந்தான்.

**"மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரே!**
**தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே!"**

என்றுப் பாடுவதும், திருமண வாழ்த்தின்போது,

**"ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி"**

என இயற்கையோடு இணைந்து வாழ்த்துவதும் பண்டைய மக்களின் சூழல் நேசத்தைக் காட்டுகிறது. இயற்கையை நேசித்துப் போற்றிய போது இயற்கை மனிதனைப் போற்றி பாதுகாத்தது. இயற்கை எந்தப் பிரதிபலனும் எதிர்பார்க்காமல் அவனது தேவைகள் அனைத்தையும் அமைதியாய் ஆர்ப்பாட்டமில்லாமல் பூர்த்தி செய்தது செய்கிறது. உண்பதற்குச் சுவையான காய்கனிகள், சுவாசிக்கத் தூய்மையான காற்று, வசிக்க அழகான இருப்பிடங்கள் எனும் மனிதனின் அடிப்படைத் தேவைகள் அனைத்தும் இயற்கை அன்னையின் அளவற்றக் கொடைகள்.

இயற்கையின் மகத்துவம் ஓரறிவு கொண்ட புல், பூடு, செடி, கொடி, மரம் ஈரறிவு கொண்ட நத்தை, சங்கு, மூன்றறிவு கொண்ட எறும்பு, கரையான், அட்டை நான்கறிவு கொண்ட நண்டு, தும்பி, வண்டு, ஐந்தறிவு படைத்த விலங்கு, பறவை போன்றவைகள் நிறைந்த இயற்கையை பராமரித்து பாதுகாக்கும் ஆற்றல் மிகுந்த வேலைக்காரர்களாக ஆறறிவு கொண்ட

மனிதனை இறைவன் படைத்துள்ளார். இயற்கை வளத்தை முழுமையான உயிர்ப்போடு அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதே நமது வேலை. அதை உணர்ந்த நமது முன்னோர்கள் இயற்கையோடு இணைந்து அனைத்து உயிரினங்களையும் அரவணைத்துச் சென்றனர். ஒவ்வொன்றின் மகத்துவத்தையும் உணர்ந்து அதன் இனப்பரவலையும் அதிகரித்து வந்தனர். அதில் மரங்களின் அரசனான அரசமரம் முக்கியத்துவம் பெறுகிறது. அரசமரத்தைச் சுற்றி வந்தால் அறிவு வளரும். மரத்தின் அடியில் அமர்ந்தால் மனம் தெளிவடையும். ஒரு அரச மரம் நாளொன்றுக்கு 1800 கிலோ கரியமில வாயுவை எடுத்துக் கொண்டு 2400 கிலோ ஆக்ஸிஜனை அனைத்து உயிரினங்களுக்கும் சமமாக வழங்கி வருகிறது.

நாம் வாழும் இந்த உலகில் உயிர்கள் என்பது மனிதனை மட்டும் குறிப்பதல்ல அனைத்து உயிரினங்களையும் குறிக்கும். சமத்துவம் எனும் வார்த்தை இயற்கையையும் உள்ளடக்கியது. சூழலில் உள்ள எல்லாவற்றையும் சமமாகப் பாவித்தல், தான் வாழும் சூழலுக்கேற்ப வாழக் கற்றுத்தரும் கல்வியே முழுமையானது. இயற்கையை நேசித்து, அதனைப் பாதுகாத்து அதனை அனுபவித்து வாழ்வது உன்னதமானது. சூழலைப்பேணல் என்பது மிகச்சிறந்த மதிப்பு ஆகும். பிற உயிரினங்களின் வாழிடங்களை அழிப்பதும், ஆக்கிரமிப்பதும் மாசுபடுத்துவதும் சமூக அநீதி ஆகும். ஆறறிவு படைத்த மனிதனிடம் இயற்கையை அழிக்கும் சக்தி உள்ளது. அதனைப் பேணத்தக்க அறிவும் உள்ளது. இயற்கையை நீடித்து நிலைக்கச் செய்யும் வாழ்க்கை முறைக்கு மனிதனைப் பழக்குவதே சிறந்த மதிப்புமிக்க கல்வியாகும். சீவகசிந்தாமணியின் ஆசிரியரான திருத்தக்கத்தேவர் ஏமாங்கதநாட்டு வளத்தைக் கூறுமிடத்து,

**“காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்**
**பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து**
**தேமாங்கனி சிதறி வாழைப்பழங்கள் சிந்தும்**
**ஏமாங்கதம் என்றிசை யாற்றிசை போய துண்டே”**

என அழகாக இயற்கையின் எழிலை நாமகள் கலம்பகம் பாடல்.31 வருணிக்கிறார். முற்றிய தேங்காய், கமுக மரத்தின் குலை மீது விழுந்து, பின் பலாப்பழத்தின் மீது விழுந்து சிதறி, பின் வாழைப்பழங்களின் மீது விழுந்து, அவற்றையும் உதிர்த்துப்போடும் அளவிற்குச் செழிப்பாக இருக்கிறது என்கிறார். இங்கு இயற்கையை இயற்கையாகவே மனிதன் விட்டுவைத்திருந்த நிலையைக் காணமுடிகிறது. இயற்கையை மனிதன் மதித்துப் போற்றியதால் இயற்கை எவ்வித இடையூறும் இன்றி செழித்தது.

மனிதனுக்கு வேண்டிய கனி வகைகளையும் தந்தது இயற்கையைத் தேவைக்கு மட்டும் பயன்படுத்துதல், எரிபொருள் சிக்கனம், நீர் நிலைகளைத் தூய்மையாகப் பேணுதல்,

சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருத்தல் போன்றவை சமூக வளர்ச்சிக்கான அடித்தளங்களாகும்.

கடந்த பல ஆண்டுகளாக சுற்றுச் சூழலைப் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 1972-ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புச்சட்டம், 1980-ஆம் ஆண்டு காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1981-ஆம் ஆண்டு நீர் கட்டுப்பாடு சட்டம் மற்றும் காற்று மாசுபாடு கட்டுப்பாடு சட்டம், 1986-ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டம் ஆகிய சட்டங்கள் இயற்றப்பட்டன. மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியங்கள் அமைக்கப்பட்டன. நாட்டின் நிலப்பகுதியில் 4 சதவிகிதம் தேசிய பூங்கா பறவைகள் மற்றும் விலங்குகளுக்கான புகலிடம், சரணாலயம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகள் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டாலும் ஒவ்வொரு தனிமனித முயற்சியும் இணைந்தால் மட்டுமே வெற்றி அடைய முடியும். ஒவ்வொருவரும் தமது வீட்டையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்வது எளிதான ஒன்றாகும். இந்த முயற்சியானது நம் சுற்றுப்புறத்தை முழுவதுமே தூய்மையாக இருப்பதற்கான நற்பணியாகும் என்பதை உணர்ந்தால் நன்மை மட்டுமே மிஞ்சும்.

“வெயிலடிக்கும் சமயத்தில் மழைக்கும் கூட மரத்தடியில் ஒதுங்குகிறோம். பனி, குளிர் என்றால் வீட்டை விட்டு வெளியே வரமாட்டோம். மரமும் ஓர் உயிருள்ள ஜீவன் தானே” ஒவ்வொரு மரத்திலும் உலகம். சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்று எண்ணும்பொழுது அதற்கு இடர்ப்பாடாக இருக்கும். சீமைக்கருவேல மரங்களைப் பற்றி கண்டிப்பாக நாம் அறிந்திருக்க வேண்டும். மத்திய தென்அமெரிக்காவை பூர்விகமாகக் கொண்ட ஐரோப்பியர்களால் 200 ஆண்டுகளுக்கு முன்னர் மிகவும் பயனுள்ள வறட்சியைத் தாங்கக்கூடிய மரம் என்ற அடிப்படையில் ஆசியா, ஆஸ்திரேலியா உள்பட உலகம் முழுவதும் அறிமுகம் செய்யப்பட்ட மரம் சீமைக்கருவேல மரம். வேளாண் பயிர்களுக்கு வேலியாகவும்; சமையலுக்கு விறகாகவும் பயன்படும் என்று நம்பப்பட்டு, கடந்த 1950-60களில் வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டு தூவப்பட்டவை தான் இன்று தீராத சிக்கலாக மாறியிருக்கும் சீமைக் கருவேலம். தமிழ்நாட்டில் தொலைதூரசாலை வழிப்பயணங்களின் போது அதிகமாக கண்ணில் படக்கூடியவை இம்மரங்கள் தான். கடந்த 60ஆண்டுகளாக இவை தமிழ்நாடு முழுவதும் கிளை பரப்பி ஏறத்தாழ 25சதவிகித விளைநிலங்களை ஆக்கிரமித்து பாழ்படுத்திக் கொண்டிருக்கின்றன. இம்மரங்கள் கடும்

வறட்சியிலும் வளரக்கூடியது. மழை பெய்யவில்லை என்றாலும் நிலத்தில் நீரே இல்லை என்றாலும் இவை வளரும் தன்மையுடையவை. தனது வேர்களை பூமியின் ஆழத்தில் நாற்பதுஅடி அகலத்தில் நாற்பது அடி வரையில் பரப்பி நீரை உறிஞ்சி, தன் இலைகளை வாடவிடாமல் பார்த்துக் கொள்கிறது. இதனால் நிலத்தடிநீர் முற்றிலுமாக வற்றி பூமியே வறண்டு விடுகிறது. ஒருவேளை நிலத்தில் நீரே கிடைக்கவில்லை என்றாலும் தன்னைச் சுற்றி இருக்கும் காற்றின் ஈரப்பதத்தை உறிஞ்சி விடுகிறது. தன்னைச் சுற்றி இருக்கும மனிதர்களின் உடலில் இருக்கிற ஈரப்பசையையும், எண்ணெய்ப் பசையையும் கூட உறிஞ்சி விடுவதால் இந்த மரத்தின் அருகில் வசிக்கிறவர்களின் உடலில் தோல்கள் வறண்டு போவதைப் பார்க்க முடியும். இதன் வேர் நிலத்தடி நீரை விஷமாக மாற்றி விடுகிறது. இம்மரம் வளரும் இடங்களில் நிலத்தடி நீர் முழுமையாக உறிஞ்சப்பட்டு வறண்ட பூமியாக மாறிவிடுகிறது.

இம்மரத்தின் நிழலில் மற்ற உயிரினங்கள் வாழ முடியாத நிலை இருக்கிறது. இதன் பக்கத்தில் வேறு எந்த செடியும் வளராது. இம்மரத்தில் எந்த பறவை இனங்களும் கூடு கட்டுவது இல்லை. பிராணவாயுவை மிகக்குறைந்த அளவில் உற்பத்தி செய்கிறது. ஆனால் கரியமில வாயுவை மிக அதிக அளவில் வெளியிடுவதால் சுற்றுப்புற காற்று மண்டலமே நச்சுத்தன்மையாக மாறிவிடுகிறது. அமெரிக்க தாவரவியல் பூங்கா, வளர்க்கக் கூடாத நச்சு மரங்கள் என்று குறிப்பிடும் பட்டியலில் முன்னணியில் இருப்பது சீமைக்கருவேல் மரம் தான். சுற்றுப்புறச் சூழலைக் காப்பதற்கு இம்மரங்களை அழித்தல் முக்கியமாகும். இம்மரத்தைத் தவிர மற்ற மரங்களை அழிக்கக் கூடாது.

ஆனால் கடந்த சில வருடங்களாக சாலை விரிவாக்கம் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்காக ஏராளமான மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன. அவற்றை வேருடன் பிடுங்கி மறுநடவு செய்யாதால் பூமி வெப்பம் அடைந்துள்ளதுடன் காற்று மாசும் ஏற்பட்டு ஆஸ்துமா, சளி, கண்எரிச்சல், மூச்சுத்திணறல் உள்ளிட்ட உடல் கோளாறுகளைச் சந்தித்து வருகின்றோம். அது மட்டுமின்றி ஏராளமான மரங்களை வெட்டி சாய்த்து இயற்கையை அழித்ததன் பலனை கொரோனா என்ற பெருந்தொற்று ஏற்பட்டு ஆக்ஸிஜன் பற்றாக்குறை மூலமாக நமக்குத் தெள்ளத் தெளிவாக உணர்த்தியுள்ளது. நமது சுயநலத்தால் இயற்கை படைத்த ஆக்ஸிஜனை வலுக்கட்டாயமாக அழித்துவிட்டு வாழ்வாதாரத்தை இழந்து நிற்கின்றோம். உயிரைக் காப்பாற்றுவதற்காக செயற்கை ஆக்ஸிஜனைத் தேடியும் அழைந்து கொண்டுள்ளோம். ஆனாலும் ஆக்ஸிஜன் பற்றாக்குறை காரணமாக விலைமதிப்பற்ற ஏராளமான உயிர்களைக் காப்பாற்ற முடியாமல் இழந்து வருகின்றோம். இது

இயற்கை நமக்கு அடித்த மாபெரும் எச்சரிக்கை மணியாகும். இனிமேலும் இயற்கையோடு இணைந்து பயணிக்க வில்லை என்றால் இதுபோன்ற இன்னல்களைத் தொடர்ந்து சந்திக்க வேண்டியிருக்கும். இயற்கையையும் சுற்றுப்புறச் சுகாதாரத்தையும் பாதுகாப்பதற்கு முன்வர வேண்டும். மருத்துவ குணங்களைக் கொண்ட மரங்கள், மூலிகைகளை நடவுசெய்து இயற்கையைக் காப்பதற்குத் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

**பார்வை நூல்கள்**

1. சுற்றுச்சூழல் இயல் - முனைவர். யு. சண்முகக்கனி வெளியீட்டாளர் - பேராசிரியர் நா.இருளப்பன், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை
2. திருக்குறள் - பரிமேலழகர் உரை
3. ஒவ்வொரு மரத்திலும் ஓர் உலகம் - எம்.ஆர்.ராஜகோபாலன், நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் பி.லிட், அம்பத்தூர், சென்னை.
4. சீவகசிந்தாமணி - திருத்தக்கத்தேவர்

# அர்த்தமுள்ள இந்து மதத்தில் மானுட வாழ்வியல்

**கி. கல்யாணசுந்தரம்**

*உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை*

*அய்யன் திருவள்ளுவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி*

*செல்லப்பம்பாளையம், பு. புளியம்பட்டி, ஈரோடு*

**ஆய்வுச் சுருக்கம்**

*அர்த்தமுள்ள இந்துமதத்தில் கவிஞர் கண்ணதாசன் இந்துமதம் சார்ந்த விரிவான பல செய்திகளை விளக்கி இருக்கிறார். அவற்றுள் மனித வாழ்வியல் சம்பந்தமான கருத்துக்களையும் உதாரணங்களுடன் விளக்கிக் கூறியுள்ளார். அக்கருத்துக்களில் மானுட வாழ்வியல் தொடர்புகளை விளக்கக்கூடிய உறவுகள், உளவியல், வாழ்க்கை நிலை, பண்புகள், மனம் சம்பந்தப்பட்ட செய்திகளை இவ்வாய்வுக் கட்டுரை சுருக்கமாக விளக்குகிறது.*

***திறவுச் சொற்கள்:*** *தாய்-தந்தை உறவு, தாய்-சேய் உறவு, தாய்-மகன் உறவு, உடன்பிறந்தோர் உறவு, நட்புறவு, உளவியல், வாழ்க்கை அனுபவங்கள், வாழ்க்கையின் ஏற்ற இறக்கம், வாழ்க்கைத் துன்பம், நாகரிகம், விருந்தோம்பல், விதியின் கையில் மனம், மனக்குதிரை மன நிம்மதி.*

## முன்னுரை

கவிஞர் கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதத்தில் மனித வாழ்வியல் பற்றி விளக்கியுள்ள பல செய்திகளில் சிலவற்றை மட்டும் கட்டுரைக்குப் பயன்படுத்தி உள்ளோம். குறிப்பாக உறவுகள், உளவியல், வாழ்க்கை அனுபவங்கள், பண்புகள், மனம் பற்றிய கருத்துக்களில் கவிஞர் கண்ணதாசனின் வாழ்வியல் பற்றிய சிந்தனைகளில் சிலவற்றை இக்கட்டுரை விளக்கி நிற்கிறது.

## தாய்-தந்தை உறவு

எல்லாவற்றுக்கும் மூலம் என்று ஒன்றுண்டு. மனிதனுக்கு மூலம் என்பது அவனது தாய்-தந்தைதான். தாய்-தந்தையே அவனுக்குப் பிறப்பு கொடுத்து இருப்பதால் அவர்களே அவனுக்கு மூலமும் முதல் கடவுளும் ஆகிறார்கள். இக்கருத்தை வலியுறுத்துவது போல் கண்ணதாசன், "'அன்னையும் பிதாவும் முதல் தெய்வம்' என்பது இந்துக்கள் சம்பிரதாயம். தாயைப் பணிந்தவன் கோவிலுக்குப் போகவேண்டாம் என்பார்கள். தாய்-தந்தையைச் சுற்றி வந்த கணபதிக்குத் தான் சிவபெருமான் மாம்பழத்தை அளித்தார்; உலகத்தைச் சுற்றி வந்த முருகனுக்கு அல்ல"[1] என்று கூறினார்.

**தாய்-சேய் உறவு**

மனித வாழ்க்கையில் குழந்தையைப் பெற்றெடுத்த தாய் பற்றிக் கேட்கும்போது ‘தாயும் சேயும் நலமா?’ என்று விசாரிப்பது வழக்கம். ஏனென்றால் தாய் வேறு குழந்தை வேறாகக் கருதுவதில்லை. அதைப் போன்று தாயின் சிந்தனை அனைத்தும் அந்தக் குழந்தையைப் பற்றியே அமைந்திருக்கும். இதைக் கண்ணதாசன், “தன்னை உதைத்தபோது கூட சொரணையில்லாது உறங்கிய தாய், குழந்தைமீது பூ விழுந்ததும் விழித்துக் கொண்டது எப்படி? அந்த உள்ளம் குழந்தையிடமே லயித்துக் கிடந்ததால்தான்”[2] என்று தாயுள்ளம் பற்றிக் கூறி இருக்கிறார்.

**தாய்-மகன் உறவு**

ஒரு குழந்தையை வளர்ப்பதில் தந்தையின் பங்கைவிட தாயின் பங்கு அதிகம் என்பர். குழந்தை பிறந்ததில் இருந்து சரியான நேரத்தில் பாலூட்டுவது, வளரும் பருவத்தில் குழந்தைக்கு பசி இல்லாவிட்டாலும் உரிய நேரத்தில் உணவளிப்பது என்று அந்தக் குழந்தையின் பசியாற்றுவதில் தாய் கவனத்துடன் இருப்பாள். உண்ணவைப்பது பற்றிக் கண்ணதாசன் கூறுகிறார், “மகனை அளவில்லாமல் உண்ணவைத்து அழகு பார்த்தவள் தாய். வயோதிகக் காலத்தில் அவள் உண்ண அழகு பார்க்கவேண்டியவன் மகன்”[3].

**உடன் பிறந்தோர் உறவு**

அண்ணனாகப் பிறந்தவன் பாதி தந்தைக்குச் சமம் என்றும், அக்காவாகப் பிறந்தவள் பாதி அன்னைக்குச் சமம் என்றும் கூறுவார்கள். தாய் தந்தையைக் கவனிப்பது போல் நாம் அவர்களைப் பராமரிக்க வேண்டும். மூத்தவர்கள் தனக்குப் பின் பிறந்தவர்களை மகனாக, மகளாகக் கருதுவதுண்டு. அப்படியெல்லாம் இல்லாதவர்கள் என்ன நிலைமை அடைவார்கள் என்பதைக் கண்ணதாசன் இப்படிக் கூறுகிறார். “யாரோ ஒருவருக்குச் செய்வதே பரமாத்மாவுக்குச் செய்வதென்றால், உடன்பிறந்தாருக்குச் செய்வது முப்பத்து முக்கோடித் தேவருக்கும் செய்வதாகும். ரத்த பந்தங்களைக் கவனிக்காதவன் எத்தனைக் கோயில்கள் கட்டினாலும், அவற்றிலே கற்சிலை இருக்கும்; ஈஸ்வரன் இருக்க மாட்டான்”[4].

**நட்புறவு**

நண்பர்களால் வாழ்க்கை நிலை உயர்ந்தவர்கள் உண்டு; நண்பர்களால் தரம் தாழ்ந்து போனவர்களும் உண்டு. நல்ல நண்பனைத் தேர்ந்தெடுத்து விட்டால் நமது வாழ்க்கைப் பயணம் தாமாகவே இனிதாக அமைந்துவிடும். இத்தகைய நட்புறவு பற்றிய சிந்தனையைக் கண்ணதாசன் இவ்வாறு கூறுகிறார். “நண்பர்களிலே நல்ல நண்பர் யார் என்பது அனுபவத்தின் மூலமேதான் தெரியுமே தவிர, சாதாரண அறிவினால் கண்டுகொள்ள முடியாது

அவசரத்தில் ஒருவனை நம்பிவிடுவதும், நம்பிக்கைக்கு உரியவன் என்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவனைச் சந்தேகிப்பதும் தீராத துயரத்தைத் தரும் என்றான் வள்ளுவன்”[5].

**வாழ்க்கை அனுபவங்கள்**

மானுட வாழ்வியலில் மனிதனுக்கு ஏற்படும் அனுபவங்கள் ஏராளம் ஏராளம். அந்த அனுபவங்கள் அவனை நல்வழிக்குக் கூட்டியும் செல்லலாம்; தீயபாதையில் தள்ளிவிடவும் செய்யலாம். அனுபவங்கள் என்பது தெய்வம் நமக்குக் காட்டும் அறிகுறி என்றும் கூறலாம். அதனால் கண்ணதாசன் அனுபவங்களை கடவுள் என்று கூறி இருக்கிறார். மேலும் அனுபவங்கள் பற்றிக் கண்ணதாசன்,

“இவ்வளவு போதும் என்று எண்ணுகிற நெஞ்சு, அவ்வளவு கிடைத்ததும், அடுத்த கட்டத்திற்குத் தாண்டுகிறதே, ஏன்? அதுதான் இறைவன் லீலை! ஆசைகள் அற்ற இடத்தில் குற்றங்கள் அற்றுப் போகின்றன. குற்றங்களும் பாவங்களும் அற்றுப் போய்விட்டால் மனிதனுக்கு அனுபவங்கள் இல்லாமல் போய்விடுகின்றன”[6] என்று கூறி இருக்கிறார்.

வாழ்க்கை அனுபவங்கள் எப்போதும் ஒரே மாதிரி அமைவதில்லை. ஒரு சமயம் வசந்த காலம் போல் இன்பம் அளிக்கிறது என்றால் மறுசமயம் கோடைக் காலம் போல் துன்பம் சுட்டெரிக்கவும் செய்கிறது. மேடு பள்ளம் வாழ்க்கையில் வந்தே தீரும் என்பதைக் கண்ணதாசன், “முதற்கட்டம் வரவு என்றால், அடுத்த கட்டம் செலவு. முதற்கட்டம் வறுமை என்றால், அடுத்த கட்டம் செல்வம். முதற்கட்டம் இன்பம் என்றால், அடுத்த கட்டம் துன்பம். இறைவனது தராசில் இரண்டு தட்டுகளும் ஏறி ஏறி இறங்குகின்றன”[7] என்று விளக்குகிறார்.

மனிதர்கள் அனைவரும் தங்கள் வாழ்க்கையின் துன்பத்தை எப்படிச் சமாளிப்பது, அதற்கு ஒரு தீர்வு என்ன என்கின்ற பாதையைத் தான் தேடிக் கொண்டு இருக்கிறார்கள். யாராவது இந்தத் துன்பம் தீர்ப்பதற்கு வழி சொல்லமாட்டார்களா என்று தான் ஏங்குகிறார்கள். அவர்களுக்குக் கண்ணதாசன் கூறும் பதில் இதுதான். “வாழ்க்கையை வாழ்க்கையாக ஒப்புக்கொண்டு, துன்பங்கள் வந்தே தீரும் என்பதைப் போதித்து, வருகிற துன்பங்களை எப்படிச் சமாளிப்பது என்று யோசனை சொன்னால், சராசரி மனிதனுக்கு அது வழிகாட்டும்”[8].

**நாகரிகம்**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகிற்கு நாகரிகம் கற்றுக் கொடுத்த இனம் தமிழ் இனம் என்று சங்ககால இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. நாகரிகம் என்பதற்கு இன்றைய கால மக்கள் கூறும் கருத்துகள் ஏற்புடையதன்று. நாகரிகம் என்பது உள்ளம்

திருந்திய பண்பாடு என்று தமிழ் இலக்கியம் கூறுகிறது. இதனைக் கண்ணதாசன் தனக்கே உரிய பாணியில், “அடுத்தவர் வீட்டில் சாப்பிடும்போது சாப்பாடு மட்டமாக இருந்தாலும் ‘அற்புதமாக இருக்கிறது’ என்று சொல்வது இந்துக்கள் வலியுறுத்தும் நாகரிகம்”[9] என்று கூறி உள்ளார்.

திருக்குறளில் நாகரிகம் பற்றிய கருத்து தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ் இலக்கியங்கள் நாகரிகம் பற்றிக் கூறி இருக்கின்றன. நமக்குப் பிரியமானவர்கள் நம்முன் இருந்து நஞ்சை உண்ணக் கொடுத்தாலும், வாங்கி குடித்துவிடுவர் நாகரிகம் மிக்கோர் என்று நற்றிணை கூறிய செய்தியைக் கண்ணதாசன்,

**“முந்தை யிலிருந்து நட்டோர் கொடுப்பின்**
**நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்’**

என்று திருக்குறளுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுந்த சங்க நூலான நற்றிணை கூறுகிறது”10 என்கிறார்.

**விருந்தோம்பல்**

விருந்தினர்கள் தெய்வத்திற்கு ஒப்பானவர்கள். வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தினரின் மனம் கோணாமல் அவர்களை உபசரிப்பதே இல்லறத்தானின் கடமை ஆகும். முகர்ந்து பார்த்தாலே மலர் வாடி விடும்; நாம் சற்று முறை தவறி நடந்தாலோ விருந்தினர் வாடி விடுவர் என்பது வள்ளுவரின் கருத்து. விருந்தினர் பற்றிக் கண்ணதாசன் இப்படிக் கூறுகிறார். “இல்லறத்தில் உடல் உறவு ஒரு பகுதியே. அதில் மற்றொரு பகுதி வெளி உலகத்தோடு தொடர்புடையது. அதன் பெயரே விருந்தோம்பல். செல்கின்ற விருந்தினரை வழியனுப்பி, வருகின்ற விருந்தினருக்காகக் காத்திருப்பவன் இல்லறவாசி. அதனை ஒருவகை நாகரிகம் என்கிறது இந்து தர்மம். குறைந்தபட்சம், ஓர் அதிதிக்காவது சோறு போடாமல் கணவனும் மனைவியும் சாப்பிடக்கூடாது”[11].

**விதியின் கையில் மனம்**

மனம் எப்போதும் நம் வசத்தில் இருப்பதில்லை அது வினாடிக்கு வினாடி வேறு வேறு விஷயங்களில் தாவிவிடுகிறது. மனதின் போக்கை அறிந்தவன், அடக்கியவன் மனிதன் ஆகிறான் என்று கூறலாம். அதனால் கண்ணதாசன், “மனத்தின் சிந்தனைப் போக்கு எப்படி வேண்டுமானாலும் போகலாம்; ஆனால் அது நடப்பதும் நடக்காததும் உன் விதிக் கோடுகளில் அடங்கி இருக்கிறது”[12] என்றார். மேலும் அக்கருத்துக்கு உதாரணமாக, “வீரன் வெற்றி பெற்றால், அது வீரத்தால் வந்தது. கோழை தோல்வியுற்றால், அது கோழைத்தனத்தால் கிடைத்தது. ஆனால் வீரன் தோல்வியுற்றாலோ, கோழை வெற்றி பெற்றாலோ அவை விதியால் நிர்ணயிக்கப்பட்டவை”13 என்றார்.

**மனக்குதிரை**

மனக்குதிரையின் வேகம் அளவிடற்கரியது. பேராசையால் மனம் சாத்தியமில்லாத பலவற்றைக்கூட உடனே சாதித்துவிட வேண்டுமென துடிக்கிறது; பறக்கிறது. அந்த மனதின் வேகத்தை நாம்தான் கட்டுப்படுத்த வேண்டும். இதற்குக் கீதையின் துணை கொண்டு கண்ணதாசன் இப்படி பதில் கூறுகிறார். "இன்பமோ துன்பமோ எல்லாம் ஒன்றுதான். நடப்பது நடக்கட்டும் என்றிருக்க மனம் விடுவதில்லை. ஒரே சீரான உணர்ச்சிகள் இந்த மனத்துக்குத் தோன்றுவதில்லை. கடிவாளம் இல்லாத இந்த மனக்குதிரையை அடக்குவது எப்படி? 'வைராக்கியத்தால்தான் முடியும்' என்கிறது கீதை"[14].

**மனநிம்மதி**

மானுட வாழ்க்கையில் சிக்கல், குழப்பம், துன்பம் இல்லாத மனிதனே இல்லை எனலாம். துன்பத்தில் தவிக்கும் மனிதன் அதிலிருந்து மீண்டு மனநிம்மதியைத் தேடுகிறான். அத்தகைய மனிதனுக்குக் கண்ணதாசன், "லௌகீக வாழ்க்கைக்கு மனநிம்மதியை வேண்டுபவன், முதலில் அந்த மனதை எந்த அதிர்ச்சியையும் தாங்கக்கூடியதாகப் பக்குவம் செய்து கொள்ள வேண்டும். கீதையில் கண்ணன் சொல்வது போல் எதிலும் சமநோக்கு ஏற்படும் நிலை வந்தால்தான் மனநிம்மதி சாத்தியமாகும்"[15] என்கிறார்.

**முடிவுரை**

கவிஞர் கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதத்தில் மானுட வாழ்வியல் பற்றிய சிந்தனைகள் விரிவாக விளக்கமாகக் காணக் கிடைக்கின்றன. அவற்றுள் மேலே கட்டுரையில் ஆய்வு செய்தவாறு மனித வாழ்வியலின் முக்கிய அம்சங்களான உறவுகள், உளவியல் தத்துவங்கள், வாழ்க்கை அனுபவங்கள், நாகரிகப் பண்புகள், விருந்தோம்பல், மனம் சார்பான செய்திகளை மட்டும் எடுத்து, அவற்றின் விழுமியங்களை இக்கட்டுரை ஆய்வு செய்திருக்கிறது.

**ஆய்வுக்குரிய நூல்**

அர்த்தமுள்ள இந்துமதம். 10 பாகங்கள் - கவிஞர் கண்ணதாசன் - கண்ணதாசன் பதிப்பகம் - சென்னை 600 017 - ஜனவரி 2010

**அடிக்குறிப்புகள்**

1. மேலது நூல் பக்கங்கள் - 43, 100, 386, 388, 91, 24, 29, 186, 77, 200, 280, 52, 58, 97, 151

Vol. 9 Special Issue 1 January 2025 E-ISSN: 2456-5571

# தமிழர் மருத்துவம்

**முனைவர் நா. தீபா சரவணன்**

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*

*குமரகுரு பன்முகக் கலை அறிவியல் கல்லூரி, கோவை*

**முன்னுரை**

பழந்தமிழ் மக்கள் உடற்கூறுகள் பற்றிய அறிவிலும், மருத்துவம் பற்றிய புரிதலிலும் சிறந்து விளங்கினர். உலகில் பல்வேறு மருத்துவ முறைகளுக்கிடையே தனக்கென தனி மரபு சார்ந்த மருத்துவ முறைகளை உருவாக்கி முத்திரை பதித்தவர்கள் தமிழர்கள். நாட்டுப்புற மருத்துவம், பாட்டி வைத்தியம், சித்த மருத்துவம், வீட்டுவைத்தியம், மூலிகை மருத்துவம் எனப் பல பெயர்களில் வழங்கப்பட்டு வந்த மருத்துவ முறையே நம் தமிழர் மருத்துவம். அறிவியல். தொழில்நுட்பம் போன்றவற்றில் வளர்ந்து நிற்கும் தற்கால மருத்துவ முறைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கவல்லது நம் பழந்தமிழ் மருத்துவமுறைகள். சமுதாயத்தின் காலக் கண்ணாடியாகவும், வரலாற்றுப் பதிவுகளாகவும் விளங்கும் இலக்கியங்கள் வழி நம் தமிழரின் மருத்துவப்பெருமை வெளிப்படுகிறது.

**நோய், பிணி**

நோய், பிணி ஆகிய இருசொற்களுமே சங்க இலக்கியங்களில் கையாளப் படுகின்றன. நோய் என்பது சிறிதுகாலம் இருக்கக்கூடியது. உடம்பை சிறிதுகாலம் நொய்த்து எடுத்துவிட்டு மருந்தின் உதவியால் சரிசெய்யக்கூடியது. பிணி என்பது இடையறாது தொடர்ந்து துன்புறுத்தக் கூடியது. நோய், பிணி இவ்விரு சொற்களுமே சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

**'வரினும் நோய் மருந்து அல்லர் வாராது'**

**(நற்றிணை -64/10)**

**'நோய்க்கு மருந்தாகிய கொண்கன் தேரே'**

**(ஐங்குறுநூறு- 101/5)**

**போன்ற இலக்கியப் பாடல்வரிகள் இதற்குச் சான்றுகளாகின்றன.**

**'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்**
**வாய் நாடி வாய்ப்பச் செயல் '**

**(குறள் – 948)**

என்ற குறள், நோய்க்கானக் காரணத்தை அறிந்து அதற்கேற்ப சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

மருந்து உட்கொண்டாலும் சிறிது இடைவெளியில் மீண்டும் உருவெடுப்பது பிணி எனப்படுகிறது. எனவேதான்

மணிமேகலைக்காப்பியம் பசியை 'பிணி' எனக் குறிப்பிடுகிறது. ஆதிரைபிச்சையிட்ட காதையில் பசியைப்பற்றிக் குறிப்பிடுகையில்.

'அமுத சுரபியின் அகன் சுரை நிரைதரப்
பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுகென
ஆதிரை இட்டனள் ஆருயிர்மருந்து என்' 1

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மாணிக்கவாசகர் எட்டாம் திருமுறை புணர்ச்சிப்பத்தில்

**'தாதாய் மூவேழுலகுக்குந்**
**தாயே நாயேன் தனை யாண்ட**
**பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே'[2]**

என மனிதப்பிறவியைப் பின்னணியாகக் கொண்டு பாடல் இயற்றுகிறார். இவ்விலக்கியங்கள் வழி, பிணியின் சொல்லாடலை உணர முடிகிறது.

**'மருந்து' சொல்லாட்சி**

குறிப்பிட்ட சில பொருள் அல்லது பொருட்களின் கலவை நோய்க்கான சிகிச்சையில், அல்லது நோய்த்தடுப்பில் பயன்படுத்தப்படும் பண்புகளைக் கொண்டுள்ளதோ அந்தப்பொருள் மருந்து எனப்படுகிறது. இலக்கியங்களில் மருத்துவம் பற்றிய குறிப்புகளிருப்பது போல சில நூல்களுக்குப் பெயர்கள் மருத்தின் பெயராக வைத்துள்ளனர். திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் போன்றவை இதற்குச் சான்றுகளாகும். சங்க இலக்கியங்களில் மருந்து என்ற சொல் பல்வேறு இடங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.-

**'மருந்து பிறிது இல்லை யான் உற்ற நோய்க்கே'**
**- (நற்றிணை 80/9)**

**'மருந்து எனின் மருந்தே வைப்பு எனின் வைப்பே'**
**(குறுந்தொகை- 71/1)**

**'நோய்க்கு மருந்து ஆகிய பணை தோளோளே**
**'(ஐங்குறுநூறு – 99/4)**

**'மருந்து பிரிது இன்மையின் இருது வினை இலனே'**
**(அகநானூறு- 147/14)**

**'மருந்து கொள் மரத்தின் வாள் மடு மயங்கி'**
**(புறம் 180/5)**

போன்றவை சங்க இலக்கிய எடுத்துக்காட்டுகளாகும். இவைபோலவே

**'மருவு நல்லாதன் மருந்து'**
**(திரிகடுகம் -105/4)**

**'தலைமகனைத் தாழ்க்கும் மருந்து'**
**(சிறுபஞ்சமூலம் 51/4)**

போன்ற சில எடுத்துக்காட்டுகள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலுள்ள மருந்து என்ற சொல்லின் பயன்பாட்டை உணர்த்துகிறது.

**மருந்தின் வகைகள்**

பண்டையத் தமிழர்கள் உணவே மருந்து மருந்தே உணவு என்ற வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர்.

**'உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவெனப்படுவது நிலத்தொடு நீரே'[3]**

என்கிறது புறம்.

ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோதி அலோபதி போன்ற மருத்துவமுறைகள் போன்று,

தமிழர்கள் பயன்படுத்திய மருத்துவ முறைகளை 'சித்த மருத்துவம்' என்று அழைத்தனர். இயற்கையில் கிடைக்கக்கூடிய தாவரம், மரம், செடி, கொடி, பூ, புல், பூண்டு, கொடி, வேர், பட்டை, இலை, பிஞ்சு ,காய், பழம் விதை முதலியவைகளைக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற மாத்திரை, கட்டுகள், பொடிகள், தைலங்கள், கசாயங்கள் போன்றவை சிறந்த மருத்துவ முறைகள் ஆகின்றன.

**சங்க இலக்கியங்களில் மருத்துவக் குறிப்புகள்**

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற பழமொழி நோயின்றி வாழ்தலின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகிறது. உடம்பை நோய்களிலிருந்து பாதுகாக்க உணவும் ஒழுக்கமும் சரியான முறையில் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை இலக்கியங்கள் உணர்த்துகின்றன. உணவை உட்கொள்ளும் முறை அறிந்து உண்ண வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்தியம்புகிறது.

**'கிடந்துண்ணார் நின்றுண்ணார், வெள்ளிடையும் உண்ணார்**

**சிறந்து மிகவுண்ணார், கட்டின்மேல் உண்ணார்**

**இறந்தொன்றும் தின்னற்க நின்று'** [4]

என்ற ஆசாரக்கோவை பாடல் நாவைக்காத்து வேண்டிய அளவு மட்டும் உண்பவனுக்கு நோய்கள் வராது என்பதை விளக்குகிறது. சிறுபஞ்சமூலத்தின் 'காத்திருப்பான் காணான் பிணி' (8;4) என்ற வரி. முறைப்படி உணவை உட்கொண்டால் மருந்தின் தேவையே இராது என்பதை உணர்த்துகிறது

**'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்திய**

**தற்றது போற்றி உணின்** [5]

என்ற குறள். இலக்கியங்களில் நோயின்றி வாழ்தலின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிடப்படுவது போலவே, சில இடங்களில் மருத்துவக் குறிப்புகளும் விளக்கப்படுகின்றன.

போர்க்களத்தில் விழுப்புண் ஏற்படுகின்ற வீரர்களுக்குப் புண்மீது பஞ்சு வைத்துக் கட்டுகின்ற நவீன மருத்துவ முறை பழங்காலத்திலேயே இருந்ததை, 'பஞ்சியும் களையாப் புண்ணர்' (353:16) என்ற புறநானூற்று அடி உறுதி செய்கிறது. இக்காட்சி பாசறையின்கண் என்பதால் தற்போது இராணுவ மருத்துவமனைகள் இயங்குதல் போல அக்காலத்திலும் இராணுவ மருத்துவமனைகள் அமைக்கப்பட்டிருப்பது அறியமுடிகிறது. அறுவை சிகிச்சை மருத்துவ முறை பற்றியக் குறிப்பு பதிற்றுப்பத்தில்,

**'மீன்றோர் கொட்பிற் பனிக்கயம் மூழ்கிச்**

**சிரல் பெயர்ந்தன்ன நெடுவெள் ஊசி**

**நெடுவசி பரந்த வடு வாழ் மார்பின்'**[6]

என்ற அடிகள் வழி விளக்கப்படுகிறது. சிரற்பறவை நீரில் மூழ்கி மேலெழும்போது அதன்

அலகில் மீன்கள் மாட்டி இருபுறமும் தொங்குவதுபோல, காயங்களின் மேலெழும் ஊசியின் காதில் தையல் இழைத் தொங்குதல் ஒப்புமையாகக் காட்டப்பட்டுள்ளது. உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் என்ற கொள்கை உடையவர்களான சித்தர்கள் 'காயகற்பம்' எனும் மருந்தினை உண்டு யோகத்தில் ஈடுபட்டு நீண்டகாலம் வாழும் வல்லமையை பெற்றிருந்தார்கள். இயற்கையாக மனித உடலில் ஏற்படும் நரை, மூப்பு போன்றவற்றைப் போக்கும் இயல்புடையதே காயகற்பமாகும். இதனைச் சாகா மருந்து, அமுதம் என்றும் கூறுவர். இது குறித்துப் பாம்பாட்டி சித்தர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

**"காலமெனும் கொடிதான கடும்பகையைக்**
**கற்பமென்னும் வாளினாற் கடிந்து**
**சாலப் பிறப்பிறப்பினை நாம் கடந்தோம்**
**தற்பறங் கண்டோமென்று ஆடாய்பாம்பே"** [7]

**மருத்துவர் பெருமை**

நோய்க்கானக் காரணமறிந்து, சரியான நேரத்தில், சரியான முறையில் கொடுத்து, நோயைத் தீர்ப்பது மருத்துவரின் கடமையாகக் கருதப்படுகிறது. தொல்காப்பியர் மருத்துவரை 'நோய்மருங்கு அறிநர்' (தொல்.அகம்.192) என்கிறார். மேலும் மருத்துவரை 'அறவோன்' (நற்.136) 'மருந்தன்', 'மருத்துவன்' (கலி17:20;21) எனவும் அழைத்தனர். வள்ளுவர் மருத்துவ நூல்களை கற்றுத் தேர்ந்தான் என்ற பொருளில் 'கற்றான்' (குறள் 949) என்றும், நோய்களைத் தீர்க்கும் மருத்துவ அறிவு பெற்றவன் என்ற நோக்கில் 'தீர்ப்பான்' (குறள்.950) என்றும் குறிப்பிடுகிறார். மருத்துவர் நோயின் தன்மைக்கு ஏற்ப மருந்துகளை ஆய்ந்து, கொடுத்து நோயினை குணப்படுத்தும் தன்மை வாய்ந்தவராக இருந்தார் என்பதை உணர்த்துவதாக அமைந்துள்ளது நற்றிணையின்

**'அரும்பிணி உறுநர்க்கு, வேட்டது கொடாஅது,**
**மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன் போல'**
**(நற் 136:2-3)**

எனவரும் வரிகள்.

மருத்துவன் நோயுற்றவனின் வயதளவையும், நோயின் அளவையும், காலத்தையும் ஆராய்ந்து செயல்பட வேண்டும் என்பதை

**'உற்றான் அளவும் பிணி அளவும் காலமும்**
**கற்றான் கருதிச் செயல்'**
**(குறள்-950)**

என்ற குறள் வழி விளக்குகிறார் வள்ளுவர்.

**எளிய சில வீட்டு வைத்தியங்கள்**

ஊருக்கு ஒரு மருத்துவர். ஒரு வைத்தியர் என்ற காலம் மாறி உடலில் உள்ள ஒவ்வொரு உடல் உறுப்பிற்கும் தனித்தனி மருத்துவ முறை என்ற காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மருத்துவப் பெயர்ப் பலகைகளைக் கண்டு பணத்தைச் செலவழிக்காமல், அடிக்கடி

ஏற்படுகின்ற சில சிறிய உடல் உபாதைகளுக்கு நாம் வீட்டிலேயே வைத்தியம் பார்ப்பது, பணத்தை மிச்சப்படுத்துவதோடு ஆரோக்கியத்தையும் பாதுகாக்கும். தடுப்பூசியை நோக்கி ஓடிக்கொண்டிருந்த கொரோனா போன்ற கொடு நோய்க்கும், மிளகு ரசம் வைத்தும், இஞ்சி, எலுமிச்சை, மஞ்சள் கொதிநீர் வைத்தும் தீர்வு கூறியவர்கள் நம் தமிழர்கள். பாட்டி வைத்தியமாகக் காலங்காலமாக போற்றப்பட்டு வரும் சில வைத்திய முறைகளை நாம் கடைப்பிடிப்பதால் அடிக்கடி மருத்துவமனைக்குச் செல்வதைத் தவிர்க்கலாம். சில வீட்டு வைத்திய முறைகள்.

1. ஓமம், பனங்கற்கண்டு, மிளகு இவற்றைப் பாலில் போட்டுக் காய்ச்சி, காலை மாலை குடித்துவர. சளித் தொல்லைக் குறையும்.
2. வேப்ப இலையை சிறிது எடுத்து அரைத்து, நீரை வடிகட்டி வெறும் வயிற்றில் குடித்தால் பூச்சித்தொல்லை அகலும்.
3. சுக்கு, மிளகு, சீரகம், கொத்தமல்லி விதை, கறிவேப்பிலை இவற்றைச் சம அளவு எடுத்து வறுத்துக் கசாயமாக வைத்துக் குடித்தால் வரட்டு இருமல் குறையும்.
4. வேப்பம் பூவை நன்கு காயவைத்துத் தூளாக்கி வெந்நீரில் கலந்து உட்கொள்வதினால் வாயுத்தொல்லை நீங்கும். ஆறாத வயிற்றுப்புண் ஆறும்

இது போன்று சமையலறையில் நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களே சில வியாதிகளுக்கு மருந்தாகவும் விளங்குகின்றன.

**தவிர்க்க வேண்டியவை**

நோயின்றி வாழ நமது வாழ்க்கை முறையும் முக்கியப்பங்கு வகிக்கிறது. பகட்டுவாழ்க்கை வாழ நினைக்கும் நாம் விளம்பர வாழ்க்கையையும், துரித உணவு வகைகளையும் விரும்பி ஏற்கிறோம். மண்ணாலான வீட்டு உபயோகப் பொருட்கள், பீங்கான், கல்சட்டி, கண்ணாடி,வெண்கலம், செம்பு, பித்தளை போன்றவற்றாலான பாத்திரங்களைப் பயன்படுத்தி வந்தனர். தற்காலத்தில் அழகை விரும்பி, ஆரோக்கியத்தை மறந்து உப்பு முதல் அனைத்து உணவுவகைகளையும், குடிதண்ணீரையும் பாத்திரங்களில் பத்திரப்படுத்துகிறோம். நெகிழி பொருட்களைத் தவிர்ப்பது ஆரோக்கியத்திற்கு மிகவும் சிறப்பு. கவர்ச்சிக்காகவும் ருசிக்காகவும் பல கலவைகளை இட்டு, பல்வேறு வண்ணங்களிலும், வடிவங்களிலும் வருகின்ற பொட்டல உணவு வகைகளைத் தவிர்த்தல் சிறந்தது. குழந்தைகள் விரும்பி உண்ணும் சாலையோர உணவுகளையும், துரித உணவுகளையும் தவிர்த்தல் நலம்.

**முடிவுரை**

பழந்தமிழ் நூல்களில் மருத்துவமுறைகள், பயன்படுத்தப்பட்ட மருந்துகள், மருத்துவன் இயல்பு, மருந்து பெறும் முறைகள் போன்றவை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகின்றது. உயிரைப்பேண உணவு உட்கொள்ளும் முறை, முறையான உறக்கம், இயற்கையோடு இயைந்த வாழ்வியல் போன்றவை மனிதனை நோய்களிலிருந்து காக்கின்றன. மனித இனத்தின் பகுத்தறிவிற்கு இயற்கை அளித்தப் பரிசாகிய பழந்தமிழர் மருத்துவமுறையை பாதுகாத்து வளர்த்தல் நாம் அடுத்த தலைமுறைக்காக சேர்த்து வைக்கும் ஆரோக்கியமான எதிர்காலமாகும். துரித உணவுகளிலும் மேலை நாட்டுக் கலாச்சாரங்களிலும் ஆரோக்கியமற்ற அலங்கார உணவு வகைகளிலும் சிக்கியிருக்கும் நம் அடுத்தத் தலைமுறையினருக்கு, தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளையும், நன்மைகளையும் பயன்பாடுகளையும் எடுத்தியம்புவது நமது கடமையாகும்.

**அடிக்குறிப்புகள்**

1. மணிமேகலை, ஆதிரை பிச்சையிட்ட காதை.பா.133
2. திருவாசகம் சில சிந்தனைகள் - 446/9
3. புறநானூறு,பா.18
4. ஆசாரக்கோவை-23
5. திருக்குறள்,942
6. பதிற்றுப்பத்து -42-2-4
7. பதினெண்சித்தர்கள் பெரிய ஞானக்கோவை சட்டமுனி பாடல்கள்

**துணைநின்ற நூல்கள்**


1. நற்றிணை. பொ.வே.சோமசுந்தரனார் கழகவெளியீடு, சென்னை 1976.
2. பத்துப்பாட்டு மூலமும் உரையும் (1, ) பொ. வே. சோமசுந்தரனார், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 973.
3. திருக்குறள், பரிமேலழகர் உரை, கழக வெளியீடு.1976.
4. தமிழர் கண்ட தாவரவியல், முனைவர் வே.நெடுஞ்செழியன், உலகத் தனிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
5. இலக்கியத்தில் மருத்துவக் கருத்துக்கள், கலாநிதி இ.பாலசுந்தரம், நாட்டார் வழக்கியல் கழகம், யாழ்ப்பாணம், 1990.

# தொகை நூல்கள் காட்டும் மனிதநேயம்

**முனைவர். பா. அங்கயற்கண்ணி**

*உதவிப்பேராசிரியர்*

*ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி, போடிநாயக்கனூர்*

## முன்னுரை

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**

**தீதும் நன்றும் பிறர் தர வாரா"**

என்ற கணியன் பூங்குன்றனின் பாடல் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வரிகள்; உலக மனித நேய ஒற்றுமைக்கு வித்திட்ட பாடலாகும்.

பழக்கவழக்கங்களிலும் பண்பாட்டிலும் தலைசிறந்தவர்களாக இருந்த பழந்தமிழர் மனிதநேயமிக்கவர்களாகவும் வாழ்ந்திருந்தனர் என்பதை தொகை நூல்கள் கொண்டு நிறுவுதலை இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மனிதநேயம்

'மனிதநேயம்' என்ற சொல் மனிதர்களிடையே காணப்படும் நேயத்தைச் சுட்டும். நேயம் என்ற சொல் 'நேசம்' என்றும் வழங்கப்படுகிறது. நேயம் நேசம் என்ற சொல்லுக்கு 'அன்பு' என்று தமிழ்ப்பேரகராதி பொருள் தருகிறது. 'தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை' என்று அருளுடைக்கு விளக்கம் அளிக்கிறார் பரிமேலழகர்.

அன்பு என்பதற்கு ஒருவரின் மனம் நெகிழும்படியாக மற்றொருவர் அவர் மேல் வெளிப்படுத்தும் நேசமும், நட்பும் கலந்த உணர்வு என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி குறிப்பிடுகிறது.

மனிதன் மற்ற உயிர்களிடத்தில் காட்டும் அன்பு மனிதநேயம். மனிதன் என்ற சொல்லானது மனம் என்ற வேர்ச்சொல்லில் இருந்து தோன்றியதாகும். மனிதனை மனிதன் மதிக்க வேண்டுமானால் மற்றவர்களிடம் அன்பு செலுத்த வேண்டும். அன்புதான் இன்பத்தின் ஊற்றுக்கண். அவ்வின்ப ஊற்று மனித இனத்தில் படிந்துள்ள குற்றங்களைப் போக்கி மனிதனது பெருமையையும், உரிமையையும் மதிக்கும் வகையில் போற்றப்படுவது மனிதநேயமாகும்.

அன்பை மனிதன் மனிதன் மீது காட்டுவது மட்டுமல்லாது, பிற உயிரினங்களின் மீதும் காட்டுவதான அன்பும் பரிவுமே மனிதநேயமாகும்.

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்பார் ஔவையார். அப்படி அரிதான

வாழ்க்கையைப் பிறருக்கும் பயன்படும் படியும் அன்பும் செலுத்துவதாகும்.

**தொகைநூல்கள் காட்டும் மனிதநேயம்**

**"எவ்வுயிர்க் காயினும் இரங்குதல் வேண்டும்"**

**(மணி 11.95-96)**

"எவ்வுயிரையும் தன்னுயிரைப் போல எண்ணி இறங்குதலோடு, எவ்விர்க்கும் தீங்கு நேராவண்ணம் காத்தலும் மனிதநேயமாகும்.

தலைவன் ஒருவன் தலைவியைப் பிரிந்து பொருள்தேடச் சென்றவன் வெகுநாட்கள் கழிந்து தலைவியைக் காணும் ஆவலில் தேரில் வருகிறான். வரும் வழியில் திரியும் நண்டுக்களைப் பார்த்த தலைவன் நண்டுகளுக்கு ஊறு நேர்ந்துவிடக் கூடாதே என்றெண்ணி தேரினை மெதுவாகச் செலுத்துகிறான்.

**"ஆழி மருங்கின் அலவன் ஓம்பி**
**வலவன் வள்பு ஆய்ந்து ஊர**
**நிலவு விரிந்தன்றாற் கானலானே"**

**(நற்: 11:7-8)**

என்ற பாடல் வாயிலாக நான் கறிவேயுள்ள நண்டுகளிடம் கூட அன்பு மிக்கவர்களாக இருந்துள்ளார்கள் சங்கமக்கள் என்பதைக் காட்டுகிறது.

உடன்பிறந்தாரையும், பெற்ற தாய், தந்தையையும் உதறித் தள்ளும் இன்றைய காலச் சூழலில், தான் வளர்த்த புன்னை மரத்தினைத் தன் உடன்பிறந்தவளாகத் தன் தலைவனிடம் கூறும் தலைவியை நற்றிணை காட்டுகிறது.

**"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த காழ் முளை அகைய,**
**நெய் பெய் தீம் பால் பெய்து வளர்ப்ப;**
**நம்மினும் சிறந்தது; நுவ்வை ஆகும்" என்று**
**அன்னை கூறினள், புன்னையது நலனே"**

**(நற்: 172:1-5)**

என்ற பாடல் வரிகளின் வாயிலாக மரத்தினைத் தன் உடன்பிறந்தவளாக எண்ணும் உயரிய பண்பினையும், பழந்தமிழர் இயற்கையோடு ஒன்றிய வாழ்வினையும் உடையவர்கள் என்பதை அறிய முடிகிறது.

'நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும்' என்ற அடியால், பெற்ற மகளை விட வளர்த்த மரத்தினை உயர்வாக எண்ணும் சங்க மாந்தரின் சிறப்பு போற்றப்பட வேண்டிய ஒன்றாகும்.

எருது நடை தளர்ந்து போனதால் அதனிடத்து வேலை வாங்காது, துன்புறுத்தாது, புல்வெளியில் மேய விட்டுவிட்ட மனிதநேயச் செயலினை நற்றிணை காட்டுகிறது.

**"நல் எருது நடைவளம் வைத்தென, உழவர்**
**புல்லுடைக் காவில் தொழில் விட்டாங்கு"**

**(நற்: 315: 4-5)**

என்ற பாடல் வாயிலாக அறியலாம்.

இயற்கையுடன் இணைந்த வாழ்வு வாழ்ந்த மாந்தரின் பெருமையையும், மனிதகுலத் தோற்றத்துக்கும், செழுமைக்கும், நிலைத்தன்மைக்கும் ஆணிவேரான அன்பையும்,

காதலையும் பல்லுயிர்க்கும் இரங்கும் பாச மனதையும்

**"பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த**
**தாதுண் பறவை பேதுறல் அஞ்சசி**
**மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்**
**உவக்காண் தோன்றும் குறும்பொறை நாடன்"**

**(அகம்: 4)**

என்ற பாடல் வாயிலாகத் தலைவன் பல நாள் கழித்து பிரிந்து வாடும் தலைவியைக் காணச் சோலையின் வழியாகத் தேரில் வருகிறான். பூவில் தம் துணையோடு தேனில் திளைத்து மகிழும் வண்டுக்கள், தேரின் மணியொலி கேட்டுப் பயந்து கலைந்து விடுமோ என்ற கருணையோடு எண்ணி, தன் தேர் மணிகளின் நாவை ஒலிக்காதவண்ணம் கட்டி, தேரைச் செலுத்துகிறான் என்பதிலிருந்து வண்டினங்கள் மகிழ்வதைச் சிதைத்து விடக்கூடாதே என்ற மனிதநேயம் சிறப்புக்குரியதாகும்.

எவ்வுயிர்க்கும் தன்னால் துன்பம் நேர்ந்து விடக்கூடாது என்பதையும், எவ்வுயிரிடத்தும் அன்பு காட்ட வேண்டும் என்பதையும் குறுங்குடி மருதனார் இப்பாடல் வாயிலாக உணர்த்துகிறார். தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் தன் பணி முடித்துக் குதிரை பூட்டிய தேரில் திரும்பும் போது தன் பாகனிடம் கூறும் கூற்றாக,

**"வா அப்பாணி வயங்கு தொழில் கலிமாத்**
**தாஅத் தாளிணை மெல்ல ஒதுங்க**
**இடமறந் தேமதி வலவ குவிமுகை**
**வாழை வான்பூ ஊழறபு உதிர்ந்த**
**ஒழிகுலை அன்ன திரி மருப்பு ஏற்றொடு**
**கணைக்கல் அம்பிணைக் காமர் புணைநிலை**
**கடுமான் தேர் ஒலி கேட்பின்**
**நடுநாட் கூட்டம் ஆகலும் உண்டே"**

**(அகம்: 134)**

என்ற பாடல் தலைவியை விரைவில் காண வேண்டும் என்று வரும் வழியில், ஆண் மானும், பெண் மானுமாய்க் கூடி மகிழ்ந்திருப்பதைக் கண்ட தலைவன், தேரொலி கேட்டு அவைகள் கலைந்துவிடும் என்று எண்ணி தேரை மெல்ல நடத்திச் செல்க என்று பாகனுக்கு உரைப்பதாகக் காட்டுகிறது.

விலங்குகளிடம் கூட மனிதநேய சிந்தனை இருந்ததாக சேரமான் பெருங்கடுகோ என்ற புலவர் காட்டுகிறார். தலைவனின் பிரிவைத் தாங்கமாட்டாத தலைவியைத் தேற்ற தோழியின் கூற்றாகக் காட்டில் குட்டியானை கலக்கிய சிறிது நீரையும் பெண் யானைக்கு ஊட்டிய பின்பு மீதமிருப்பின் ஆண் யானை பருகும். அக்காட்சியை உன் தலைவன் காண்பான். உடனே உனது நினைவு வரும். ஆகவே, அவன் உன்னை நாடி விரைவில் வருவான் என்பதை,

**"துடி அடிக் கயந்தலைக் கலக்கிய சின்னீரைப்**
**பிடி ஊட்டி பின் உண்ணும் களிறு எனவும்**
**உரைத்தனரே"**

**(கலி: 11)**

என்ற பாடல் வாயிலாக விலங்குகளிடம் கூட மனிதநேய சிந்தனை இருந்தது என்பதை அறிய முடிகிறது.

மரங்கள், விலங்குகள் போன்றவற்றின் மீது இரக்கம் கொண்டிருப்பதைப் போலவே தொன்மை மாந்தர் பறவைகளிடத்தும் இரக்கம் கொண்டிருந்தனர்.

நிலத்தில் விளைந்த விளைச்சலை அறுவடை செய்யும் காலம் வந்தது. வெண்ணெலை அரிந்து எடுக்க எண்ணிய உழவர்கள் 'தண்ணுமை' என்னும் கருவியை முழுக்கி இசையை எழுப்பினர் என்ற செய்தியை,

**"வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ**
**பழனப் பல் புள் இரிய"**

**(நற்: 350: 1-2)**

என்ற அடிகளின் வாயிலாக நெற்பயிரில் சிறுகுருவிகள் கூடு கட்டி வாழ்ந்திருக்கும். நெல்லை அரிந்தெடுக்கும் போது அக்குருவிகளுக்குத் தீங்கு நேரிடும் என்பதால் இசைக்கருவிகளை முழங்கி ஆரவாரம் செய்தால் அக்குருவிகள் தங்கள் கூட்டத்தோடு வேற்றிடம் சென்றுவிடும் என்ற உயர்ந்த மனிதநேயச் சிந்தனையை உடையவர்கள் நம் பழந்தமிழர் என்பதை அறிய முடிகிறது.

**"இன் நிழல் இன்மையான் வருந்திய மடப் பிணைக்குத்**
**தன் நிழலைக் கொடுத்து அளிக்கும் கலை**
**எனவும் உரைத்தனரே"**

**(கலி: 11)**

பெருங்கடுங்கோ அவர்கள் பாலைத் திணையின் தன்மை பற்றிக் கூறும் இப்பாடலில் விலங்கினங்களும், பறவைகளும் தங்கள் துணையிடம் எந்த அளவிற்கு அன்பை வெளிப்படுத்துகிறது என்பதைக் காட்டுகிறார். நிழல் இல்லாமல் வருந்தும் பெண் மானுக்கு அதன் கலைமான் தன் உடம்பு நிழலை கொண்டு காப்பாற்றும்.

**முடிவுரை**

இன்றைய சூழ்நிலையில் மனிதன் மனிதநேயத்தை இழந்து சுயநலத்தோடு வாழ்கிறான். ஆனால், பழந்தமிழர் ஓர் அறிவு உயிர் முதல் ஐந்தறிவு உயிர் வரை உள்ள பிற உயிர்களிடத்தும் மனிதநேயத்தோடு எப்படி வாழ்ந்தார்கள் என்பதை வெளிப்படுத்தும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது. இன்றைய கால சூழ்நிலையில் மனிதநேயம் வளர வேண்டும் என்றால் மனங்களில் அன்பு வளர வேண்டும். அன்பு ஒன்றுதான் உலகை நேசிக்கும் பண்பைக் கொடுக்கும்.

**அடிக்குறிப்பு**

1. க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி, தமிழ்-தமிழ்-ஆங்கிலம் முதல் பதிப்பு 1992
2. ச. சிவகாமி, சங்கத்தமிழியல், மாதவி பதிப்பகம், சென்னை-14
3. குறள் - அருளுடைமை விளக்கம்

**முதன்மை நூல்கள்**

1. நற்றிணை, முதல் பதிப்பு 1999, புலவர் நா. இராமையா பிள்ளை, வர்த்தமானன் பதிப்பகம், தி.நகர், சென்னை-17.
2. திருக்குறள், பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை-2001.
3. புறநானூறு மூலமும் உரையும், அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை – 2002.
4. கலித்தொகை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 41 பி.சிட்கோ எஸ்டேட், சென்னை-98, 2-ஆம் பதிப்பு-1982.
5. மணிமேகலை மூலமும் உரையும், பேரா.ஜெ.ஸ்ரீசந்திரன், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை – 2002.
6. அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 41 பி.சிட்கோ எஸ்டேட், சென்னை-98, 2-ஆம் பதிப்பு-1982.

Vol. 9 Special Issue 1 January 2025 E-ISSN: 2456-5571

# திருவள்ளுவரின் பார்வையில் அரசியலும் இன்றைய சூழலும்

**பேரா. பா. முத்தீஸ்வரி**
*உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை*
*ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌதியா கல்லூரி, உத்தமபாளையம்*

## முன்னுரை

“ கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடியாம்” என்று தமிழ்க்குடியின் பெருமையை பறைசாற்றுவது என்றென்றும் அள்ள அள்ளக் குறையாத அட்சயப்பாத்திரமாம் திருவள்ளுவர் படைத்த திருக்குறளாகும். இது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றினாலும் அன்று மலர்ந்த மலர் போல என்றும் மணம் பரப்பும் தமிழ் மலர் ஆகும். அத்தகைய பெருமைவாய்ந்த திருக்குறளுக்கு தமிழறிஞர் தவிர்த்து பலமேனாட்டு அறிஞர்கள் பலரும் மொழிபெயர்த்தது இதன் பெருமை ஆகும். உலகில் உள்ள நூல்களில் திருக்குறளுக்கு இணைதிருக்குறள் மட்டுமே. இந்நூல் பல நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய பழமையான நூலாக இருந்தாலும் எந்த வித சிதைவும் இன்றி முழு நூலாக கிடைத்திருப்பது நமக்கு கிடைத்தற்கரிய பெட்டகம் ஆகும். வள்ளுவரின் திருக்குறள் பண்புடன், அறநெறியுடன் வாழவிரும்பும் அனைவருக்கும் ஒருவாழ்வியல் வழிகாட்டி நூலாகும்.

## மறைநூல்

திருக்குறள் மறைநூல், அதுவும் பொதுமறை நூல், மேலும் உலகப் பொதுமறைநூல், இத்தகுதிகளுக்கேற்ப, அதுமிக்க பொறுப்புணர்வுடன் தன்நிலையினின்றும் தடம்மாறாது அமைந்துள்ளது. மறை நூல்கள் என்றாலும் அவை தனித்தனியாக நான்கு நூல்களாயிருந்தால் ஒவ்வொன்றுக்கும் தகுதி வேறுபாடு தோன்றிவிடுகிறது. அதனால் தான் தெய்வமறையாகிய திருக்குறள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள் கூறுவதாயிருந்தும் ஒரே மறைநூலாய் திகழ்கின்றது.

## சிறப்பு

திருக்குறளில் இல்லாததுமில்லை, சொல்லாதது மில்லை எனலாம். திருக்குறள் மறை உலகத்தின் ஒப்பற்ற நூலாக அமைந்துள்ளது. ஆரவாரமான கற்பனைகளையும் வீண் பெருக்கங்களையும் கலாச்சார சீர்குலைவையும் பயனற்ற செய்திகளையும் திருக்குறளில் காண இயலாது. உண்மையான செய்திகளை மட்டும் எடுத்துரைப்பதே இதன் சிறப்பாகும். திருக்குறளுக்கு **“ வாயுறைவாழ்த்து”** என்ற பெயர் உண்டு. வாய் என்றால் வாய்மை. வாழ்த்து என்பது இயல்பைச் சொல்லுதல் எனில் “ வாய்மையை மட்டுமே உரைக்கும் இயல்பானநூல்” என்பதுஅதன் சிறப்பு. வாய்மையில் திளைத்தவள்ளுவர் தாய்மை உள்ளம் கொண்ட கருணையுள்ளவர். எனவேதான் எந்தவிதவேற்றுமையும் தோன்றாமல் உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் பொருந்திய வெண் குறளால் அறம் உரைத்தார் போலும். வெண்பாமாட்சியில் அமைக்கப்பட்டதே அதன் சிறப்பாகும். திருக்குறளில் கையாளப்படாத துறைகளே இல்லை. அத்துறையிலும் உற்றுநோக்கி ஆய்ந்துள்ளார்.

## அரசியல் நெறிமுறை

திருக்குறள் ஒரு அறநூல் மட்டுமன்று இது ஒரு அரசியல் சட்டப்புத்தகமாக அங்கீகரிக்கக்கூடிய அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டஅரசியல் நெறிமுறைகளை அள்ளித்தருகின்ற ஒரு அதிசய நூலாகவே கருதலாம். இவருடையகாலப் பதிவுகளால் முக்காலத்திற்கும் அரசியல் கட்டுப்பாடுகளை அள்ளித்தந்திருக்கின்றார் என்றால் அதுமிகையாகாது. ஆயினும் காலச்சுழற்சியில் நடைமுறை மாற்றத்தில் சமூகச் சிதைவின் காரணமாக செந்நாப்போதகரின் வழிகாட்டுதலில் இருந்தும் சமூகத்தின் வழக்காறுகளில் இருந்தும் இன்றைய அரசியல் கருத்தா அசைந்து கொண்டிருக்கிறது. வள்ளுவனின் வழிகாட்டுதலை நாட்டுமக்களுக்கு எதிராக அரசியல் புரிவோரை அவர் வசைபாடுதலை நாட்டுமக்களின் வரன்முறைகளை அளவீடுகளை அரசியல் அடிப்படைத் தன்மைகளை நோக்கும் போது அவருள் பல்லாயிரம் மனிதர்களின் சிந்தனைகளைக் கொண்டு இனிவரும் காலங்களிலும் இவ்வாறு இருக்க வேண்டும் என்று அன்றே அடிக்கல் நாட்டி அடித்தளம் இட்டு அசையாத கோபுரங்களால் அவர்தம் திருக்குறளை வடித்திருக்கிறார் என்று எண்ணும் போது நம் எண்ணத்தில் எண்ணிலடங்கா ஆச்சர்யங்கள் அசை போட்டுக் கொண்டிருக்கின்றன. மூவாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு மனித சமூகம் எவ்வாறெல்லாம் நிலை தடுமாறும் என்று யூகித்து அதற்கு எப்படி கடிவாளம் கட்டுவது என்று கருதி அன்றைக்கே பல்வேறுதன் வரிகளில் வடித்து தந்திருப்பது வார்த்தைகள் அளவிடாமுடியா வர்ணங்களாகும் தகதகக்கும் சொர்ணங்களாகும்.

**அரசனுக்கானஅரசியல் அளவீடு**

**“அறன் இழுக்காது அல்லவை நீக்கிமறன் இழுக்கா மானம் உடையதுஅரசு” -குறள் 384**

என்றவாக்கில் அரசனானவன் ஈகை, கல்வி, அறிவு, அஞ்சாமை, ஊக்கம் முதலிய பண்புகளைப் பெற்றவனாகத் திகழ வேண்டும் என பதிவு செய்துள்ளார். ஆனால் இன்றைக்கு காலச்சிதைவால் இக்கருத்தில் அரசியல் மாறுபட்டிருக்கலாம். அமைச்சனின் அதிகாரவரம்பு, அளவீடு மாறியிருக்கலாம். இருப்பினும் வள்ளுவனின் வாக்கு மேற்கூறிய தகுதியுடைய அமைச்சன் நாட்டுமக்களுக்கு நன்மை தருவான் என்று பதிவு செய்ததை மட்டும் நம் மனத்தின்கண் ஆய்ந்தறிய வேண்டும். இது போல இன்னும் பலகருத்துப் பொக்கிஷங்களை கணக்கீடுகளை வரையறைகளை வடித்துதந்திருக்கும் வள்ளுவனின் வாக்கின்படி அரசியல் நோக்கு இருந்தால் தகுதி இருந்தால் நாட்டுமக்கள் உள்ளத்தில் உள்ளப் பூரிப்போடு உறங்க செல்வார்கள் என்பதற்குநாம் உறுதி அளிக்கலாம். காலத்தின் மாற்றத்தை கண்டுகொண்டால் நமக்கு கனவில் கூட களிப்பு இல்லை.

**“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு” -குறள் 385**

என்ற முதற்பாவலரின் கூற்றுப்படி அரசனாவன் பொருளைப் பெருக்கி அவ்வாறு பெருக்கிய பொருளைகாத்து காத்தபொருளைச் சரியான முறையில் திட்டமிட்டு செலவிடும் முறையையே அமைச்சனுக்கு அழகு என்பதை அறியலாம். இந்த ஒன்றே முக்கால் அடிக்குள்ளே இன்றைய ஆயிரம் திட்டக்குழுக்களின் செயல்பாட்டினை நம் அரசியலுக்கு, மக்கள் நலனுக்கு, நன்று செய்திட எண்ணி நமக்கு தந்துள்ளார். எந்நாடு உயர்ந்துவிளங்கும் எந்நாட்டு அரசன் உயர்குடியாவான் என்பதனை

**“காட்சிக்குஎளியவன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்” - குறள் 386**

என்னும் பொய்யில் புலவனின் குறட்பாவில் குறிப்பிடும் பொழுது அரசனானவன் எவரும் எளிதில் அணுகக்கூடியவனாகவும் குடிமக்களிடம் இன சொல்லைப் பேசுபவனாகவும் இருக்கவேண்டும் என்றுவள்ளுவர் வரையறைதந்துள்ளார். ஆனால் அப்படி ஒரு ஆத்மா இன்றைக்கு நமக்கு அமைய எண்ணினால் நாம் பேராசைக்காரனாகி விடுவோம் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

**அரசியலாரின் தகுதிகள்**

**“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு” - குறள் 467**

என்று அரசியலார் அரசியலுக்கு வருவதற்கு முன்னரே பலமுறை ஆய்ந்து அதனின்று முடிவெடுத்து அரசியலுக்கு வரவேண்டும். அவ்வாறு வந்துவிட்டால் தான் வந்தகாரியத்தை எத்துனை தடைகள் இருப்பினும் செய்து முடிக்க வேண்டும் என்ற கோணத்தில் உற்றுநோக்கினால் இக்குறளுக்கு எத்தனையோ தெளிவுரைகளை ஒப்பிட்டு பார்த்தாலும் இப்பொழுதுநாம் கூறும் காரணத்திற்கும் சாலப் பொருந்துவதாகவே எண்ணத் தோன்றுகிறது.

**“வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல்” - குறள் 471**

என்ற குறளின் ஆழக்கருத்தை அறிந்துவைத்திருக்கும் அரசியலார் தான் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஆயிரம் யோசனைகள் கேட்டறிந்தாலும் அரசியல் அனுபவிக்க ஒரு முன்னவரின் வழிநடந்தாலும் வெற்றிவாகை சூடுவதற்கு வாய்ப்புக்கள் அமையாது போனாலும் இக்குறள் வழி நின்று செயல்பட்டால் வெற்றிவாகை சூடலாம். அத்துனை தந்திரம் வள்ளுவனின் வாக்கில் உள்ளது.

**“இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனைஅவன்கண் விடல்” - குறள் 517**

இக்குறளைப் பல்வேறு பொருளுக்கு, செயலுக்கு ஒத்துப் போவதாக இயற்கையாக அமைந்தாலும் நம்முடைய அரசியல் நோக்கில் இன்றையவேட்பாளர் தேர்வில் மனதில் வைத்தவன் வெற்றிவாகை சூடுவான். இக்குறளுக்கு பல்வேறுதெளிவுரைகள் இருந்தாலும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தனது எண்ணங்களை பதிவுசெய்து இன்றைய காலகட்டத்தை வள்ளுவன் தன் மனக்கண்ணில் வைத்து ஈராயிரம் ஆண்டுகளுக்குபின் இப்படி ஒரு அரசியல் வரும் எனக் கருதி எழுதிவைத்தார் போலும் எனஎண்ணத் தோன்றுகிறது.

**எக்காலத்திலும் ஒத்துப்போகும் வள்ளுவனின் வாக்கு**

மாதானுபங்கி, செந்நாப் போதகர் எனும் வள்ளுவப் பெருந்தகை எப்படி அன்றைய காலகட்டத்தில் இருந்து இன்றைய காலகட்டம் வரையிலும், இனிவரும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் வாழும் மனித இனத்திற்கும் உயிருள்ள உயிரற்ற என அனைத்திற்கும் ஆக பதிவு செய்ததை உற்று நோக்கும் போது ஆச்சர்யங்கள் பலகோடி. அவர் சிந்தனைகளை அளவிட எண்ணினால் அவரது சிந்தனை அளவு ஆகாயத்தை விஞ்சிவிடும். மக்களின் மனநிலையை அவர்களின் சமூக வாழ்க்கையை அவர்களை ஆளுமை செய்யும் அதிகாரவர்க்கத்தை அளவிட்டு அச்சுவார்த்திருக்கிறார் என்றால் அதுமிகையாகாது.

**முடிவுரை**

திருக்குறள் உலகில் உள்ள ஒவ்வொரு துறைக்கும் ஒத்துப் போவது போல் இன்றைய அரசியல் நடை முறைக்கும் ஒத்துப்போகிறது. திருக்குறள் ஒரு முகக்கண்ணாடி இதன் முன்நிற்கும் அத்துனை காலத்தையும் அழகாய்க் காட்டும். "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்து அதிவேக கணினி வாழ் காலம் வரையிலும், இனியும் அறிவியலால் மாற்றம் அடையும் மாயையான காலம் வந்தாலும், வேற்றுகிரகத்தவர் நம்நாட்டில் புலம் பெயர்ந்தாலும் அவர்களுக்கும் அறிவுரைகள், ஆலோசனைகள், அடிப்படை வழிவகைகள், வாழ்நாளிற்குத் தேவையான வகைமுறைகள் மற்றும், இறப்பின் பின் இருப்பதாகக் கணிக்கும் வழக்காறுகள் முதலானவற்றை உச்சிவானம் முதல் அடிபாதாளம் வரை ஜீவிக்கும் உலக உயிரினங்களுக்கு ஒரு தெய்வநூலை, காலச்சுவடுகளில் அழியாத கல்வெட்டாய் விளங்கும் உலகப்பொது மறையாம் திருக்குறளை தந்த தெய்வப்புலவரை வாழ்த்த வயதில்லை என்றாலும் வணங்கி முடிக்கலாம்.

வாழ்கதமிழ் ! வாழ்கபாரதம்!

**துணை நூற்பட்டியல்**

1. திருக்குறள் –தெளிவுரை பூவை. அமுதன்
2. திருக்குறள் மூலமும் உரையும் மு.வ.ரதராசனார்
3. வள்ளுவம் –வ.சு.ப. மாணிக்கனார்
4. பதினென் கீழ்க்கணக்கு நூல்கள்- மூலமும் தெளிவுரையும்- ச.வே.சுப்பிரமணியன்

# சங்க இலக்கியத்தில் மானுடவியல் திருமண முறைகள்

**ப. ரதிதேவி**

*தமிழ்த்துறைத் தலைவர்*

*தேனி கம்மவார் சங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி*

*கொடுவிலார்பட்டி, தேனி*

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க காலம் இனக்குழு வாழ்வு தொடங்கி தாய்வழி சமூகம் தந்தை வழி சமூகம் எனக் குடும்பச் சூழல்களுக்கு ஏற்றவாறு திருமண முறைகளும் மாறுபட்டு வந்திருக்கின்றன என்ற தொல்காப்பியமும் எட்டு வகையான திருமண முறைகளைப் பற்றியும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது. மேலும் இந்து சமய சாஸ்திரங்கள் குடும்பத்தின் தலையாயப் பணியே இனவிருத்தி செய்வது என்ற செய்தியும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

உலகளவில் மனிதச் சமுதாயம் ஏற்படுத்திய திருமண முறைகள் காலத்திற்கு ஏற்றவாறு எவ்வாறு இருந்தன என்பதை பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கமாகும் எனலாம்.

## முன்னுரை

இன்றைய சமுதாயத்தில் திருமணம் என்பது ஆண் - பெண் இருவருக்குமான பொதுவான நியதியாக கருதப்படுகிறது. உலகளவில் மனிதச் சமுதாயம் ஏற்படுத்திய திருமண முறைகள் காலத்திற்கு ஏற்றவாறு பல்வகையில் நிகழ்ந்திருக்கின்றது. இதனை பல சமூக விஞ்ஞான ஆய்வாளர்கள் திருமணம் பற்றிய கருத்துக்களை எவ்வாறு எடுத்துரைத்துள்ளனர் என்பதை இக்கட்டுரையின் வழி காண்போம்.

## தொல்காப்பியம் சுட்டும் திருமண முறை

சங்ககாலம் இனக்குழு வாழ்வு தொடங்கி தாய்வழிச் சமூகம் தந்தைவழி சமூகமாக நிலைபெற்ற பின்னர் குடும்பச் சூழல்களுக்கு ஏற்றவாறு திருமண முறைகளும் மாறுபட்டு வந்திருக்கின்றன என்பதைப் பழமையான இலக்கண நூலான தொல்காப்பியத்தில்>

**“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப”**

**தொல் - பொருள் - நூ. 43**

என்று சமூகத்தில் பொய்யும் தவறான பாலியல் ஒழுக்கக் கேடுகளும் தோன்றிய பின்னரே பெரியோர்கள் திருமணம் என்ற வரையறையை ஏற்படுத்தினர் எனத் தெரியவருகிறது.

## திருமணம் பற்றி அறிஞர் கருத்துக்கள்

மனித இனம் தன்பாலின உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்துகொள்ள ஏற்படுத்திய முறையே திருமணமாகும். (பக். 379 பண்பாட்டு மானுடவியல் பக்தவத்சலம்) என்கிறார் பண்பாட்டு மானுடவியலாளர்.

குழந்தைகளைப் பெற்று அவர்களை வளர்ப்பதற்காக ஏற்பட்ட திட்டவட்டமான தொடர்புகளின் பால் உறவும் அமைந்த குழுவே குடும்பம் ஆகும் என்று மக்ஜவர் என்னும் சமூகவியலாளர் கூறுகிறார்.

தாய்வழிச் சமூகத்தில் பெண்களே குடும்ப பொறுப்பிலும் தலைமை நிலையிலும் இருந்தனர். தந்தைவழிச் சமூகத்தில் தந்தையே அதிகாரம் படைத்தவராகவும் பிறர் குடும்ப உறுப்பினர் அனைவரும் அவருக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் இருந்தனர் என அறியமுடிகிறது.

குடும்பத்தின் தலைமைப் பொறுப்பானது பெரும்பாலும் குடிவழி மரபுரிமை போன்ற இன்றியமையாதக் கூறுகளால் நிர்ணயிக்கப் படுவதால் தந்தை வழியில் அமையும் குடும்பம் தந்தை வழிக்குடும்பம் என்றும் தாய்வழியில் அமையும் குடும்பம் தாய்வழிக் குடும்ப முறை என்றும் கூறப்படும். தாய்மாமனாட்சிக் குடும்ப முறை தாய்வழிச் சமூதாயங்களில் மட்டுமே காணப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (பக். 367 பண்பாட்டு மானுடவியல் பக்தவச்சல பாரதி) என்று தெளிவுபட மணமுறை நிகழ்வை களவழி ஆய்வின் மூலம் விளக்குவதைக் காணமுடிகிறது.

திருமணத்தின் அடிப்படையிலும் குடும்பங்கள் வகைப்படுத்தப் படுகின்றன. இன்றைய சமுதாயத்தில ஒருவன் ஒருத்தியை மணந்து வாழும் ஒரு துணை மனமே வழக்கமாக உள்ளது. இவ்வகை மணங்களால் ஏற்படும் குடும்ப முறை ஒரு துணை மணக்குடும்பம் (Monogamian Family) எனப்படும். இதற்கு நேர்மாறாக ஓர் ஆண் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களையோ ஒரு பெண் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களையோ மணந்துகொண்டு வாழ்க்கை நடத்துவர். இவ்வகையிலான மணங்களால் ஏற்படும் குடும்ப முறை பல துணை மணக்குடும்பம் (Polygamians Family) எனப்படும். இவ்வகைத் திருமண முறைகளைக் கணக்கிட எடுத்துக் கொண்ட 238 சமுதாயங்களில் 193 சமுதாயங்களில் இருவகைத் திருமணம் நடைபெறுகிறது (பக். 367 பண்பாட்டு மானுடவியல்) என்று மர்டாக் (G.P. Mudock) அவர்கள் Social Structure எனும் நூலில் பொதுப்படையாக குறிப்பிட்டு செல்கின்றார்.

**இந்திய – தமிழக வரலாற்றில் திருமணம்**

பழங்காலத்தில் தொன்மையான நிலப்பகுதியாய் விளங்கக்கூடிய சிந்து சமவெளி (மொகஞ்சதாரோ ஹரப்பா) நாகரீகம் தமிழகம் குஜராத் இன்னபிற இடங்களின் வழியாக பழம்பெரும் நிலப்பகுதியாக இருந்ததை வரலாற்று தொன்மையியலாளர்கள் இன்றும் ஆராய்ந்தும் வருகின்றனர்.

உலகில் சுமார் 5000 மொழிகள் வழக்கில் இருந்ததாகவும் அவற்றுள் 2500 மொழிகள் தற்போது வழக்கில் ஏதோ ஒரு நிலப்பகுதியில் மட்டும் பேசப்படுவதாகக் கருதப்படுகின்றது. அவற்றுள் சுமார் 1600க்கும் மேற்பட்ட மொழிகள் இந்தியாவில் பேசப்படுகிறது. இதன்வழி நூறு ஆயிரம் குடிகள் இங்கு வாழ்ந்ததையும் வாழ்வதையும் அறியமுடிகிறது.

இங்குள்ள சமூகச் சூழலியல் தாய்வழிச் சமூக திருமண முறையையும் தந்தைவழி சமூகச் சூழலையும் அறியமுடிகிறது. குறிப்பாக தாய்வழிச் சமூகத்தின் அச்சங்களையும் ஆங்காங்கே காணமுடிகிறது.

இந்தியாவில் சாதி அமைப்புடைய சமுதாய முறை மலர்ச்சியடைந்த காலத்தில் மணத்துணையைத் தேடிக் கொள்வதில் சில கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் ஏற்படுத்தப்பட்டன. குறிப்பாக வர்ண அமைப்பு வலிமையாகப் பின்பற்றிய காலத்தில் ஓர் உயர்குடிப் பெண் கீழ்குடியைச் சேர்ந்த ஆணை மணந்து கொண்டால் மணப்பெண் அவள் சாதித் தகுதியை இழந்துவிடுகிறாள். இங்கு சாதித் தகுதி என்பது சமய சார்புடைய ஒழுக்கத்தோடு (Ritul Purity) தொடர்புடையது.

ஆகவே ஒரு பெண் கீழ்சாதியைச் சேர்ந்த ஒருவனை மணந்துகொண்டால் திருமணம் வரை மணப்பெண் சாதி தகுதி உயர்ந்ததாகவும் திருமணத்திற்குப் பிறகு அது மாறுவதற்கு வாய்ப்பு இல்லை. எனவே தகுதி குறையாமலும் அவர்களின் சமய ஒழுக்கத்திலிருந்து குறைவடையாமலும் இருக்கவும் வேண்டி 'மனுஸ்மிருதி' போன்ற பண்டைய இந்துசமய வழிபாட்டு நெறிகள் இரு திருமண நெறிகளைச் சுட்டிக்காட்டின. (பக். 407 பண்பாட்டு மானுடவியல் பக்தவத்சல பாரதி).

மேலும் இந்து சமயச் சாத்திரங்கள் குடும்பத்தின் தலையான பணி இனவிருத்தி செய்வதே ஆகும். சில இந்திய பழங்குடிகளில் திருமணத்திற்கு முன் மணமக்கள் பல நிலைகளில் பழகும் வாய்ப்பு பெறுகிறாள். அசாம் மாநிலத்தில் வாழும் குக்கிப் பழங்குடியினர் பெண்ணின் வீட்டில் சில வாரங்கள் தங்கி அனைத்து வகையான பொருளாதார சமுதாய செயல்களிலும் மணமகன் ஈடுபடும் சமயத்தில் மனநிலை தகுதி திறமை போன்றவற்றைப் பெண் வீட்டார் மதிப்பிடுவர். அவனை மணமகள் வீட்டாருக்குப் பிடித்து விட்டால் திருமணம் நடைபெறும். இவ்வகைத் திருமணம் தகுதித்திருமணம் (Probationary Marriage) எனப்படும். பில்லர் பழங்குடியில் சமயச் சடங்குகளின் போது கம்பம் அல்லது மரத்தின் மீது தேங்காய் கட்டி அதனைச் சுற்றி பெண்கள் உள்வட்டமாக அமர்ந்து திருமணம் செய்துகொள்வர். (பக். 354 பண்பாட்டு மானுடவியல்).

மகாபாரதம் இராமாயணம் ஆகிய வடமொழி நூல்களின் வழியாக பல கணவர் மணமுறை பலதார மணமுறை ஆகிய இருவகை மணமுறையையும் காண இயலும். குறிப்பாக மஹாபாரதத்தில் பீமனின் தந்தையின் இளைய மனையாளான சத்தியவதியின் மகள் விசித்திர வீரியனுக்கு இரு பெண்களைத் திருமணம் செல்ல முற்படுகின்றனர். திருமணத்திற்குப் பின்னரே வீரியன் இறந்துபோக விதவை எனும் நிலைக்கு ஆளாகின்றனர். அப்போது நாட்டை ஆள்வதற்கு வாரிசுகள் இல்லாத நிலை ஏற்படுகின்றது. அதனால் சத்தியவாதியானவள் இரு பெண்களும் பிள்ளை பேறு பெறவேண்டும் எனும் நோக்கில் ஓர் ஆடவனுடன் உறவுகொள்ள செய்ததும் திருதராட்டினன் பாண்டு ஆகியோர் பிறந்ததும் இங்கு நினைவு கொள்ளத்தக்கதாகும். இராமாயணத்தில் தசரதனுக்கு 3 மனைவிகள் இருந்ததும் இராமன் ஓர் மனைவியுடனேயே வாழ்ந்த நிலையையும் அறியலாம். மேலும் இராமாயணத்தில் 'வாலி' பாத்திரத்தின் வழியாக அவன் தம்பி சுக்கீரவனின் மனைவியை தன் மனைவியாக்கிக் கொண்டநிலை யாவும் சமூகத்தில் நிகழ்ந்த மணமுறை நிகழ்வுகளே ஆகும்.

**தமிழக திருமண முறைகள்**

தொல்காப்பியம் எனும் பழமையான இலக்கண நூல் எட்டு வகையான திருமண முறை பண்டைக் காலத்தில் இருந்ததாகக் குறிப்பிடுகின்றது.

> **"காமக்கூட்டம் காணுங்காலை**
> **மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள்**
> **துறையமை நல்யாழ் துணைமையோர் இயல்பே"**
> **(தொல்.பொருள் 11 நூ. 89)**

என்றுரைக்கிறது.

**எட்டுவகை திருமண முறைகள்**

**1. பிரமம் :**

கன்னிப் பெண்ணொருத்தியை அணிகலன் அணிந்து பிரம்மச்சாரியாய் இருப்பவனுக்கு கொடுப்பது.

2. **பிரசாபத்தியம்**

மகளை கொடுப்பதற்குரிய குலத்தைச் சார்ந்தவர் மகளை வேண்டி வந்து கேட்க ஒத்த குலத்தினர் இருவரும் ஒத்துப்போக நிகழும் திருமணம்.

3. **ஆரிடம்**

பெண்ணோடு ஒன்றோ அல்லது இரண்டோ பசுக்கள் அல்லது ஆனேறு ஆகியவற்றோடு பெண்ணைக் கொடுப்பது.

4. **தெய்வம்**

வேள்விக்கு ஆரியராய் நின்ற பலருள்ளும் ஒருவருக்கு வேள்வித் தீ முன்னர் பெண்ணைக் கொடுப்பது.

5. **காந்தர்வம்**

ஒத்த ஆண் - பெண் இருவரும் தாமாகக் கூடும் கூட்டம் (காதல் திருமணம்).

6. **அசுரம்**

வில் ஏற்றி வலிமையின் பொருட்டு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வது.

7. **இராக்கதம்**

பெண்ணைக் கட்டாயப்படுத்தி வலிந்து மணம் செய்துகொள்வது.

8. **பைசாசம்**

வயதானவர்கள் உறக்கத்தில் இருப் போர்களிடம் கொள்ளும் தகாத உறவுமுறை என்று 8 வகை திருமணங்கள் வடபகுதியில் நிகழ்ந்த திருமண முறையென்று சிலர் கூறுகின்றனர். தொல்காப்பியத்தில் கற்பு மணம் பற்றியும், உடன்போக்கு ஆகிய இரண்டைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

**கற்பு மணம்**

**"கற்பெனப் படுவது கரணமொரு புணர**
**கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியை**
**கொடைக்குள மரபினோர் கொடுப்ப**
**கொள்வதுவே"**

என்று சுட்டப்பெறுகிறது. இதன்வழி பெண்ணை பெற்றுக்கொள்வதற்குரிய மரபினை உடைய ஒத்த குலத்தார் கொடுத்ததற்குரிய தலைவியை கொடுக்கும் மணமே 'கற்பு மணம்' என்றழைக்கப்படுகிறது. இது அடிப்படையில் தந்தை வழி சமூகச் சூழலை வெளிப்படுத்துகின்றது.

பண்டையவரும் பெருஞ்செல்வமும் பெரும்பாலும் சிற்றின்ப உணர்ச்சி சிறந்து காமக்கிழத்தி இற்பரத்தை காதற்பரத்தை முதலியோரையும் கொண்டிருந்தமையால் ஒருவரும் ஈடேறுமான இருதலைக் காம இல்வாழ்க்கை பூதப்பாண்டியனும் அசன் தேவியும் போகாத ஒருசில அரசக் குடும்பங்களையும் உழவரும் இடையரும் போன்ற பொதுமக்களையும் புல மக்களிடையும் தாம் பெரும்பாலும் இருந்துவந்தது. (பண்டைத் தமிழ் நாகரீகமும் பண்பாடும், தேவநேயர். பக். 77) என்று தேவநேயப் பாவாணர் பண்டைச் சமூகத்தை ஆராய்ந்து குறிப்பிடுவதும் நோக்கத்தக்கதாகும்.

மேலும் மன்னர்கள் பிற பெண்டிரைத் திருமணம் செய்து கொண்டதை 'மகட்பாற் காஞ்சி'யும் உணர்த்துகிறது. பெண் கேட்டு செல்லுதல் தர மறுத்தால் போரிடும் நிலையும் பழந்தமிழகத்தில் அரங்கேறியிருக்கிறது என்ற செய்தியையும் நம்மால் அறிய முடிகின்றது.

தமிழகத்தில் நில அடிப்படையில் மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். அவர்களை ஆயர் ஆய்ச்சியர் குறவர் குறத்தியர் உழவர் உழத்தியர் நுழையர் நுழைச்சியர் ஆகியோர் முறையைத் தத்தம் குலத்தில் உள்ள ஒருவரையே மணம் செய்திருக்கவேண்டும் என்று இலக்கியங்கள்வழி சில செய்திகளை அறியமுடிகிறது.

மேலும் ஏறு தழுவுதல் மூலம் பெண்ணைத் திருமணம் செய்துகொண்ட நிலையை கலித்தொகை வழி அறியமுடிகிறது. பக்தி இலக்கிய காலத்துள் சுந்தரர் சங்கிலி நாச்சியார் பரவை நாச்சியார் ஆகிய இருவரைத் திருமணம் செய்துகொண்ட சூழலையும் அறிகிறோம்.

புறநானூற்றில்

**மயக்குறு மக்களை யில்லோர்க்குப்**
**மயக்குறு யில்லைத் தாம் வாழு நாளே**

**- (புறநானூறு.** 18)

என்று மனை வாழ்க்கையில் நன்நயம் நன்மக்கட்பேறு ஆகும் என்றும்

**'ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே'**

**(புறம் பா. 512)**

என்று குழந்தை பெற்றெடுத்து தருதல் பெண்ணின் கடமையென சுட்டப்படுதலையும் குழந்தை செல்வமே முதன்மைச் செல்வமென கருதப்பட்டதையும் அறிகிறோம்.

### முடிவுரை

இவ்வாறு சங்க இலக்கியத்தில் மானுடவியல் திருமண முறைகள் பற்றிய விரிவான செய்தியை இக்கட்டுரையின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

### துணைநூற் பட்டியல்


1. தொல்காப்பியம் இனம்பூரனார் உரை தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம் தஞ்சாவூர் மு. ப. 2008
2. தொல்காப்பியம் இளம்பூரணார் உரை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை மு.ப. 194
3. புறநானூறு உ.வே. சாமிநாதன் உரை உ.வே. சா. நூல் நிலையம் சென்னை. ஏ.ப. 1971
4. சமூகவியல் சா. சாவித்ரி மோகன் பதிப்பகம் சென்னை மு.ப. 1987
5. பண்பாட்டு மானுடவியல் பக்தவத்சல பாரதி வல்லினம் பதிப்பு மு.ப. 2005
6. தமிழ் மக்கள் வரலாறு க.ப. அறவாணன் தமிழ்க் கோட்டம் சென்னை மு.ப. 2005
7. பண்டைத் தமிழ் நாகரீகமும் பண்பாடும் தேவநேயர் தமிழ்மண் பதிப்பகம் இராயப்பேட்டை சென்னை மு.ப. 1996. நினைவுத்தடம் இரா. காமராசு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பக். 32

# சங்க இலக்கியத்தில் உணவும் மருந்தும்

**க. கௌரி சங்கரி**

*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*

*ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌதியா கல்லூரி*

*உத்தமபாளையம்*

மருத்துவம் என்பது நோய்களைக் குணப்படுத்துவதற்கான கலையும், அறிவியலும் ஆகும். இதனைக் நோய்களைக் கண்டுபிடிக்கவும், அவற்றை குணப்படுத்தவும், அவை வராமல் தடு;க்கவும் உதவும் அறிவியல் செயல்பாடு எனலாம். இவ்வகைச் செயல்பாடு மூலம் மனிதர்களின் உடல் நலத்தைப் பேணுதல், மீள்வித்தல் ஆகியவற்றை நிகழ்த்தலாம் என்பது அறிவியலின் கண்டுபிடிப்பிற்கு முன்னரே இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**சங்க இலக்கியத்தில் மருத்துவம்**

சங்க இலக்கியமானது காதல், வீரம், கொடை, போர் முறையினை மட்டும் உணர்த்தாது. மருத்துவம் குறித்த குறிப்புகளையும் தெளிவுப்படுத்தியுள்ளது.

கிரேக்கர்கள் மருத்துவக் குறிப்புகளை இலக்கியங்களிலும், நினைவுச் சின்னமாக ஓவியங்களையும் பயன்படுத்தியுள்ளனர். மருத்துவத்துடன் தொடர்புடைய பண்டையக் கிரேக்கச் சின்னமான ஒற்றைப் பாம்புடன் கூடிய 'அஸ்கிளெப்பியஸ் கோல்' ஒன்றினை மருத்துவத் தொடர்புள்ள பல தற்காலக் கழகங்களும், நிறுவனங்களும் தமது சின்னங்களாக நிறுவியுள்ளனர்.

**புறநானூறு காட்டும் மருத்துவம்**

**'ஒரு வேளை உண்பான் யோகி**
**இரு வேளை உண்பான் போகி**
**முப்பே ஈதும் உண்பான் ரோகி**
**எப்போதும் உண்பான் துரோகி'**

என்றெல்லாம் கூறப்படுகிறது. உணவு முறையானது ஒருவனை பல வித நோய்களிலிருந்து காத்து, அருளை நீட்டித்து பயனளிக்கிறது.

ஆகவே, உணவின் முக்கியமே மருத்துவ பயனை தெளிய வைக்கும் தன்மை கொண்டது.

**"உண்டி கொடுத்தோ குயிர் கொடுத்தோரே**
**உண்டி முதற்றே யுணவின் பிண்டம்**
**உணவெனப் படுவது நிலத்தோடு நீரே**
**நீரும் நிலமும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்தி சிட்னோரே".**

**(புறநானூறு - பாடல்-18)**

இப்பாடலில் சிறந்த உணவு, நீர் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

**"குன்றுகண் டன்ன நிலைப்பல் போர்பு**
**நாள்கடா அழிந்த நனந்தலைக் குப்பை**
**வல்வில் இளையர்க்கு அல்குபதம் மாற்றாத்".**

**(புறநானூறு - பாடல் - 353)**

இப்பாடலில் வீரர்களுக்கு எவ்வாறு உணவு வழங்கப்பட்டது என்பதைன் காட்டுகிறது.

**"கதுவாய் போகிய நுதிவாய் எகமொடு,**
**கஞ்சியும் களையாப் புண்ணர்**
**அஞ்சுதகவு உடையர், இவள் தன்னைமாரே".**

**(புறநானூறு – பாடல் - 355)**

போரில் ஏற்பட்ட புண்ணிற்கு பஞ்சை வைத்து கட்டியுள்ளனர் என்பதனை இப்பாடல் தெளிவுப்படுத்துகிறது.

**"உடலிடைத் தோன்றிற் றொற்றை**
**அறுத்ததின் உதிரம் மூற்றிச்**
**துடறுறச் சுட்டு வேறொர்**
**மருந்தினால் துயரம் தீர்வர்".**

**(கும்பகரணன் வதைப்படலம் - 46)**

வேட்டைக்குச் சென்ற அதியமான் பன்னிரெண்டு ஆண்டுக்கு ஒரு முறை காய்க்கும் நெல்லிக் கனியைப் பறித்துக் கொண்டு வந்து ஔவையாருக்குக் கொடுத்தான். அதற்கு அவர்

**"பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட**
**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது**
**ஆதல் நின்னகத்து அடக்கிச்**
**சாதல் நீங்க, எமக்கு ஈத்தனையே".**

**(புறநானூறு – பாடல் - 91)**

இதே போன்று நெல்லிக்கனி பாடல் சிறுபாணாற்றுப் படையிலும் உள்ளது. பாடியவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்.

**"மால் வரைக்**
**கமழ் பூஞ்சாரல் கவினிய நெல்லி".**

**(சிறுபானாற்றுப்படை – பாடல் - 99 - 103)**

நெல்லிக்கனியின் சிறப்பினை இன்னும் சில இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. காரணம் அது மனிதனின் வாழ்நாளை நீட்டிக்கும்.

### நற்றிணை கூறும் மருத்துவம்

**"அரும்பிணி உறுரர்க்கு வேட்டல் கொடாஅது**
**மருந்தாய்ந்து கொடுத்த அறவோன்"**

**(நற்றிணை – பாடல் - 126)**

### தொல்காப்பியர் குறிப்பிடும் நாட்டு மருத்துவம்

ஒரு நாட்டின் தட்ப வெப்ப நிலைகளால் ஏற்படும் நோய்களுக்கு அந்தந்த நாட்டில் கிடைக்கும் மூலிகைப் பொருளைக் கொண்டு பாமர மக்கள் தம் பட்டறிவால் செய்துவரும் மருத்துவ முறையை "நாட்டு மருத்துவம்" என்று கூறுவர். தொல்காப்பியர் செய்யுளியலில் பெரியோர்கள் வாழ்த்தும் முறை பற்றி ஒரு நூற்பா கூறுவர். தொல்காப்பியர் செய்யுளியலில் பெரியோர்கள் வாழ்த்தும் முறை பற்றி ஒரு நூற்பா பாடியுள்ளார். அதற்கு "வாயுறை வாழ்த்து" என்று பெயர்.

**"வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்**
**வேம்பும் கடுகும் போல வெஞ்சொல்"**

‘வாய்’ என்பது வாய்மொழி, உறை என்பது மருந்து வாயுறை என்பது சொல் மருந்தெனவாகும். அதாவது வாழ்த்து என்பது முன்னால் கசந்து பின்னாளில் நல்லது பயப்பனவாக இருக்க வேண்டும் என்பது பொருளாகும்.

**பிற இலக்கியங்கள்**

நோய்வாய்ப்பட்டவர்களுக்கு அவர் விரும்பியதெல்லாம் கொடுக்காமல் நோய்க்குத்தக்க மருந்தை ஆராய்ந்து பார்த்துக் கொடுப்பவனை ;அறவோன்’ என்று குறிப்பிடுகிறது.

> **“அல்லல் ஒருவற்கு அடைந்தக்கால் மற்றவர்க்கு**
> **நல்ல கிளைகள் எனப்படுவப எனப்படுவார் - நல்ல**
> **வினைமரபின் மற்றதனை கீக்கி மதுவே**
> **மனைமரம் ஆய மருந்து”.**

**(பழமொழி நானூறு – பாடல்; - 53)**

ஒருவருக்குத் துன்பம் வந்த போது உற்றார் எனப்படுபவர்கள் அந்தத் துன்பத்தை நீக்க வேண்டும். அப்படிச் செயின் அவர்கள் வீட்டின்கண் உள்ள பச்சிலை மரம் போல்வர் என்பது பாடலின் கருத்தாகும்.

- பழந்தமிழர் மூலிகைகளைக் கொண்ட “ஆயுர்வேதம்” என்னும் மருத்துவ முறையை நன்கு அறிந்திருந்தனர் என்பதை இளங்கோவடிகள் இந்திர விழா ஊரெடுத்த காதையில் குறிப்பிடுகிறார்.
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களான திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் ஆகிய மூன்றும் தம் பெயரிலேயே மருத்துவக் குறிப்புகளைக் கொண்டு, நாட்டு மருத்துவ நூல்களாகத் திகழ்கின்றன.
- திருவள்ளுவர் ‘மருந்து’ என்னும் அதிகாரத்தில் மருத்துவக் குறிப்புகளைக் காட்டியுள்ளார்.

**சித்தர்களின் மருத்துவம்**

இர.வாசுதேவன் என்பவர் தமிழில் மருத்துவ இலக்கியங்கள் என்று நூலை எழுதியுள்ளார். இந்நூலில் இவர் சித்த மருத்துவ நூல்களில் மருத்துவகலை குறித்த ஆய்வுக் குறிப்புகளையும், தமிழ் இலக்கியத்தில் சித்த மருத்துவம் தொடர்பான கருத்துகளையும் தொகுத்து அளித்துள்ளார்.

சித்தர்கள் அறிவியல் என்ற விஞ்ஞானம் தோன்றுவதற்கு முன்னரே சித்த மருத்துவத்தில் கைதேர்ந்தவர்களாக இருக்கின்றனர். அவர்கள் ஓர்; உயிரினை பிறதோர் உடம்பில் செலுத்தவும், அவ்வாறு உயிர் பிரிந்த உடலினை காயகல்பம் பூசி பல ஆண்டுகள் பாதுகாக்கும் வல்லமை பெற்றவராக இருந்தனர். மேலும் நாம் உண்ணும் உணவே மருத்துவ தன்மை கொண்டதாக இருப்பினும், தனிவிதமான மருந்தினை

பயன்படுத்தவும் தேவைப்படாது இருந்திருக்கும் என்கின்றனர்.

**“நாம் உண்ணும் உணவே உயிர்**
**உடலிருக்க செய்யும் மருந்தாகும்**
**அவரவர் தேகத்திற்குப்**
**பொருந்தாத மற்றும்**
**முறையில்லாமல் உண்பதனாலும்**
**நோய்கள் உற்பத்தியாகின்றன”.**

“தன்வந்திரி தைலம்” என்ற தனி நூலே உள்ளது. தைலங்களைப் பற்றி மட்டுமே தனி நூல்கள் இருப்பது மேல்நாட்டு மருத்துவ விஞ்ஞானிக்கு விந்தையாக இருந்திருக்கிறது. இன்னும் அரிய மருத்துவத்தை சித்தர்கள் அருளிச் சென்றனர்.

**முடிவுரை**

தற்காலத்தில் ஆங்கில மருந்துகளும், அறுவைச் சிகிச்சைகளுமே நோய் தீர்க்கும் காப்பகமாக இருக்கிறது. ஆனால், முந்தைய காலங்களில் உணவினையே மருந்தாக பயன்படுத்து மூலிகைகளை நோய்க் காப்பானாக கருதினர். தமிழ் இலக்கியங்கள் மருத்துவக்குறிப்புகள் அதிகம் நிறைந்த தகவல் களஞ்சியமாக செயல்படுவதை நம்மால் அறிய முடிகிறது.

**பார்வை நூல்கள்**

1. புறநானூறு - இரா.செயபால் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
2. பத்துப்பாட்டு -வி.நாகராசன்- நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
3. குறுந்தொகை - கு.வெ.பாலசுப்பிரமணியன் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

# பிரபஞ்சன் சிறுகதைகளில் மனிதநேய சிந்தனைகள்

**ம. சாரதா**

*முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)*

*அரசு கலைக் கல்லூரி, பரமக்குடி*

*அழகப்பா பல்கலைக்கழகம்*

**முன்னுரை**

மானிட வாழ்வு மகத்தானது. நாடோடிகளாகச் சுற்றித்திரிந்த மனிதன் தன் வாழ்வை ஒரு கட்டமைப்புக்குள் வரையறுத்து வாழத் தொடங்கிய போது நாகரிக நிலை எய்தினான். மனித வாழ்வு செம்மை படவும் சிறப்பாக இயக்கம் பெறவும் இலக்கியங்கள் வழிவகை புரிந்துள்ளன. சிந்திக்கவும் சிந்தித்தவற்றைப் பேசவும் கூடிய ஆற்றல் மனித இனத்திற்கு மட்டுமே உரிய தனிச்சிறப்பாகும். உண்பதும் உடுப்பதும் மனித இனத்தின் அடிப்படை தேவைகளாகும். எனினும் நடைமுறை வாழ்வில் மனித இனம் ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டிருக்கிறது. மனித வாழ்வில் தோன்றும் மனிதர்களின் ஏக்கங்களையும், துன்ப துயரங்களையும் தனதாக்கி கொண்டு அவர்களது இன்னல்களைக் களைந்து இன்பாக்கும் ஏற்றமிகு இரக்ககுணம் மனிதநேயமாகும். தன்னைப்போல் பிறரை நேசித்தலும், பகைவனுக்கு அருளும் மனப்பக்குவம், வறுமையில் வாடியவர்களுக்கு உதவும் மனிதரின் விரிவடைந்த அன்பு நிலைப் பற்றி பிரபஞ்சன் தனது ஒரு ஊரில் ரெண்டு மனிதர்கள், நான் இருக்கிறேன், கரிய முகம் ஆகிய சிறுகதைகளின் வழி மனித நேய சிந்தனைகளை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை விளக்குகிறது.

**மனித நேயம்**

மனிதனை மனிதன் மதித்தலும் மனித மதிப்பை பேணுதலே மனித நேயமாகும். மனிதனை மனிதன் மதிக்க வேண்டுமானால் முதலில் மனிதன் தன்னைப் போன்றே மற்ற மனிதர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும். அன்பே இன்பத்தின் ஊற்றாகும். இதனை திருவள்ளுவர்,

> **“அன்பின் வழிய உயர்நிலை அஃதிலார்க்கு**
> **என்புதோல் போர்த்த உடம்பு”**(1)

என்று அன்பை உலகப் பொதுமையாக்குவார். மேலும்

மனிதனானவன் ஆறறிவு பெற்ற மகத்துவத்தினை உணர வைப்பது என்பது மனிதநேய வெளிப்பாட்டில்தான் உள்ளது என்பதைத் தொல்காப்பியர்

> **“ஆறறி வதுவே அவற்றோடு மனனே”**(2)

என்று மனதால் உணரக்கூடிய அறிவினையே ஆறாவது அறிவாகக் குறிப்பிடுகின்றார். ஆறாம் அறிவு என்பது பகுத்தறிவினைக் குறிக்கும். அத்தகைய பகுத்தறிவைக் கொண்டு திகழ்வதே மனித இனம். எனவே அன்பும், இரக்கமும்

மனிதனுடைய அடிப்படைப் பண்பே மனிதநேயம் எனலாம். மனிதனுடைய உள்ள வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமைகள் வளர வழி வகுக்கிறது.

**வறுமையிலும் உதவும் மனித நேயம்**

மனித பண்புகளில் இன்றியமையாதது மனிதநேயம். இதற்கு அடிப்படையாய் அமைவது அன்பே ஆகும். மனித வாழ்வு மகிழ்வுடன் இயக்கம் பெற முதல் நிலை காரணமே அன்பு தான் என்பதை பிரபஞ்சன் சிறுகதையான "ஒரு ஊரில் ரெண்டு மனிதர்கள்" என்னும் கதையில் கிருஷ்ணமூர்த்தி அரிசி கடை ஒன்றை நடத்தி வருகிறார். தான் நடத்தி வந்த அரிசி கடை நஷ்டத்தில் சென்றதால் கடையை மூட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. வறுமையின் காரணமாக தன்னிடம் கடன் வாங்கிய கோபாலுவிடம் பணத்தைக் கொடுக்குமாறு கேட்கிறார். ஆனால் கோபால், உடனே தர முடியாது என கூறவும், கிருஷ்ணமூர்த்தி ஒரு வாரத்திற்குள் பணத்தைக் கொடுக்காவிட்டால் வேலைக்குச் செல்ல முடியாதபடி கை, கால்களை உடைத்து விடுவதாக மிரட்டுகிறார்.

இதனைக் கேட்ட கோபால் மறுநாள் காலையில் அவருக்கு கொடுக்க வேண்டிய பணத்தில் நூறு ரூபாயைக் கொண்டு வந்து கொடுக்கிறார். மேலும் இந்த மாதம் வரவைக் காட்டிலும் செலவு மிகுதியாகி விட்டதனால் முழுமையும் கொடுக்கத் தன்னால் இயலவில்லை எனக் கூறுகிறார். இதனைக் கேட்ட கிருஷ்ணமூர்த்தி அவருடைய வறுமை நிலையை எண்ணி வருந்தி தான் ஏதாவது தவறாக பேசியிருந்தால், என்னை மன்னிக்க வேண்டும் என்று கூறுகிறார்.

அதற்கு கோபாலு **"சேச்சே, தப்பு என்னோடது தான், நான் ஒழுங்கா கொடுத்திருக்கலாம் நான் கஷ்டப்பட்ட நேரத்துல நீ கொடுத்து உதவின. உன் கஷ்டத்துக்கு நான் உதவல்லே"**(3) எனக் கூறுகிறார். இந்நிலையில் கோபாலுவிற்க்குக் குழந்தை பிறந்திருக்கிறது என்பதை அறிந்த கிருஷ்ணமூர்த்தி, தான் வறுமையில் இருப்பதையும் பொருட்படுத்தாமல் மீதிப்பணத்தை தர வேண்டாம் என்றும், அப்பணத்தில் என் சார்பாக குழந்தைக்கு ஆடை வாங்கி கொடுக்குமாறும் கூறுகிறார் மேலும் கையில் உள்ள இருபது ரூபாயையும் கொடுத்து விடுகிறார்.

சூழல்தான் மனிதனை மாற்றும் தன்மையாக இருக்கின்றது. அதைப் புரிந்து நடந்து கொண்டால் மனித உறவில் பிரிவு என்பதே இருக்காது என்பதை இவ்விருவரின் வழி அறிய முடிகிறது. ஒருவரை ஒருவர் உணர்ந்து கொண்டு தம்முள் இருக்கும் மனிதநேயத்தை வெளிப்படுத்தும் போதுதான் சக மனிதரின் அன்பு வெளிப்பட்டு, பகைமை முற்றிலும் குறைந்து வாழ்க்கை வளமாக அமையும் என்பதை அறிய முடிகிறது.

**பிறருக்காக வாழும் மனித நேயம்**

அன்பு, கருணை, இரக்கம், அன்பான புன்னகை, பாசம், அரவணைப்பு இவைதான் மனிதநேயத்தின் வெளிப்பாடாக திகழ்கிறது. ஆகையால் யாரும் தனி மனிதர்களாக வாழ முடியாது. நம் வாழ்வனைத்தும் சக மனிதர்களது மனித

நேயத்தினால் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை உணர்த்தும் விதமாக பிரபஞ்சனின் “நான் இருக்கிறேன்” என்ற சிறுகதையில் வரும் ராஜலட்சுமி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் ஒருவரை காதலிக்கிறாள். இச்செய்தியை அறிந்த அவளுடைய அப்பா வெளியூரில் உள்ள கல்லூரியில் சேர்க்கின்றார். கல்லூரியில் சேர்ந்த ஆறு மாதத்திற்குப் பின்பு தான் அவள் வயிற்றில் குழந்தையைச் சுமக்கின்றாள் என்று அனைவருக்கும் தெரிய வர, இதனை அறிந்த கல்லூரி முதல்வர் கல்லூரியை விட்டு வெளியே அனுப்புகின்றார். இதனை அறிந்த ராஜலட்சுமியின் தந்தையும், தனக்கு மகளே இல்லை; இறந்துவிட்டாள் என்று கூறிச் சென்று விடுகிறார். வாழ்வதற்கு வழி தெரியாமல் நடுத்தெருவில் நின்று கொண்டிருந்த ராஜலெட்சுமியிடம், அதே கல்லூரியின் மூன்றாம் ஆண்டு படிக்கும் மாணவனான சண்முகம்,

**“ராஜலெட்சுமி, நீங்கள் விரும்பினால் என்னுடன் வரலாம். உங்களுக்குச் சம்மதம் என்றால் நான் உங்களை ஏற்றுக் கொள்கிறேன். இனி ஒருபோதும், உங்கள் வாழ்நாளில் நீங்கள் அழும் நிலை வராமல் நான் உங்களைப் பார்த்துக்கொள்கிறேன்”**(4) என்று கூறுகின்றார். பின்னர் அவளின் துன்பத்தினை எண்ணி வருந்துபவனாய் இருப்பதோடு இல்லாமல் திருமணம் செய்து கொள்கின்றார்.

கற்பிழந்த பெண்ணை ஏளனம் செய்வதும், பழி தூற்றுவதும் மட்டும்தான் இன்றைய சமூகத்தின் செயலாக இருக்கிறது. இச்சமூகத்தில் அத்தகைய நீதி வழங்க சில மகாத்மாக்கள் இருக்கின்றார்கள் என்பதை **“மகாத்மாக்கள் போர்பந்தரில் தான் பிறக்க வேண்டுமா? நம் அண்டை வீட்டிலும் தோன்றலாம்”**(5) என கூறுகிறார் பிரபஞ்சன். பிறருடைய துன்பத்தினைப் போக்குபவர்களே உண்மையான மனிதர்கள். ஒவ்வொருவரும் பிறருக்காக வாழும் போது சமூகம் மனிதநேயம் கொண்ட சமூகமாக மாறும் என்பதை வலியுறுத்துகின்றார்.

**திருடனிடத்திலும் அன்பு காட்டும் மனித நேயம்**

இவ்வுலகில் பிறந்தவர்கள் வாழும் குறுகிய காலத்தில் எல்லா மனிதர்களிடத்தும் மதம், சாதி, இனம், தொழில் என்ற எல்லா வேறுபாடுகளையும் கடந்து ஒருவர் மீது இரக்கத்தையும், நேசத்தையும் உண்டாக்கும் சக்தி மனிதநேயமாகும். அதன் அடிப்படையில் திருடனாக இருந்தாலும் அவனிடத்திலும் அன்பு காட்டும் மனித நேயத்தை பிரபஞ்சனின் “கரியமுகம்” எனும் சிறுகதையில் வரும் செங்கோடனும் அவனுடைய நண்பர்களும் மாநில வங்கியில் வேலை பார்க்கும் தம்பதியினரின் வீட்டில் திருடுகின்றனர். சிறு வயது இளைஞனான செங்கோடன் மற்றும் அகப்பட்டுக் கொள்கின்றான். சுற்றியிருந்த அனைவரும் செங்கோடனைக் அடித்து கொடுமைப் படுத்துகின்றனர். அனைவரும் அவனை துன்புறுத்திய போதும், வீட்டின் உரிமையாளரும் அவருடைய மனைவியும் அத்திருடனிடம் அன்பு காட்டி, அவனை காவல்துறையினரிடம் ஒப்படைக்க வேண்டும் என்கின்றனர். பசியின் கொடுமையால் தவித்த அவனுக்கு குடிப்பதற்கு தேநீர்

கொடுத்தனர். பின்பு அங்கு கூடி இருந்தவர்களிடம் **“செங்கோடன் செய்த செயல் சட்டப்படி தவறாக இருந்தாலும் அடித்து துன்புறுத்தியிருக்கக் கூடாது, நம்மைப் போல மனிதன் தான் என்று அன்பு காட்டி அரவணைக்கிறார் வீட்டுக்கார அம்மாள்.”**(6)

மனிதனை மனிதனாக மதித்து பரிவு காட்டும்போது அவன் தவறான வழியில் செல்லக்கூடியவனாக இருந்தாலும், நற்சிந்தனை உடையவனாக மாறுவான் என்பதை உணர்த்தியுள்ளார் பிரபஞ்சன்.

### முடிவுரை

மனிதனை மனிதன் மதித்தலும், மனித ஆற்றலை உணர்த்தி மனித பண்பை உயர்த்துதலும், மனித மதிப்பைப் போற்றிப் பேணுதலும், மனிதன் தன்னைப் போன்ற மற்ற மனிதர்களிடத்தும் அன்பு செலுத்துவதும் மனிதநேயமாகும். ‘வாடிய பயிரையும் கண்டு வருந்துகிற மனோபாவமே மனிதம்’ என்னும் கொள்கையுடைய பிரபஞ்சன் வறுமையின் துயரைக் கண்டு மனம் வருந்தி உதவும் மனப்பான்மையும், ஏமாற்றப்பட்ட ஆதரவற்ற பெண்ணை மணந்து கொள்ளும் இளைஞனின் மனிதநேயத்தையும், தவறு செய்தவர்களையும் மன்னித்து அன்பு காட்டி அரவணைக்கும் மனிதநேயம் மக்களுக்கு வேண்டும் என்பதையும் தன் சிறுகதையில் சுட்டிக்காட்டியுள்ளார். மனிதனாக பிறந்த அனைவரும் மனித நேயத்துடன் வாழ்கின்ற போதே சமூகமானது சிறப்பாக வாழ வழியமைக்கும். “மனித நேயம் ஒவ்வொருவர் வாழ்விலும் பிறக்கட்டும் மற்றவரை ஏற்றுக்கொள்ளும் தன்மை இன்னும் வளரட்டும்” எனும் வரிகளுக்கு ஏற்ப மனித நேயத்தை வளர்ப்போம்.

### அடிக்குறிப்பு

1. திருக்குறள் அன்புடைமை - அதிகாரம், 8 – ப-730
2. தொல்காப்பியம் பொருளதிகாரம், ப-520
3. பிரபஞ்சன் சிறுகதை தொகுதி - 1 ஒரு ஊரில் ரெண்டு மனிதர்கள் ப-28
4. பிரபஞ்சன் சிறு தொகுதி – 2, நான் இருக்கிறேன், ப - 14
5. மேலது, ப - 15
6. பிரபஞ்சன் சிறு தொகுதி – 2, கரியமுகம் ப – 91

### மேற்பார்வை நூல்கள்


1. இளம்பூரணர் (உ.ஆ) தொல்காப்பியம், சாரதா பதிப்பகம் சென்னை – 600 014 முதல் பதிப்பு - 2005
2. கௌமாரிஸ்வரி.எஸ் - பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சாரதா பதிப்பகம் சென்னை 600014 முதல் பதிப்பு 2009
3. பிரபஞ்சன் - பிரபஞ்சன் சிறுகதைகள் தொகுதி டிஸ்கவரி புக் பேலஸ்-1(ம) 2, சென்னை, ஏப்ரல் 2017.

# திணை இலக்கியங்களில் சமூக அமைப்பும் சமுதாய மதிப்பும்

**முனைவர் ச. சதானந்தவேல்**

*கௌரவவிரிவுரையாளர், தமிழ்த்துறை*

*அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வீரபாண்டி*

**முன்னுரை**

இலக்கியம் என்பது மக்களின் வாழ்வியலைக் காட்டும் காலக் கண்ணாடி ஆகும். எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் இணைந்த தொகுப்பே திணைஇலக்கியம் என்றும் சங்க இலக்கியங்கள் என்றும் அழைக்கப் படுகின்றன. சங்க காலத் தமிழர் வாழ்வை வகுத்துக் கொண்டும், இயற்கையோடு இயைந்தும் வாழ்ந்தனர். ஐந்திணைகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் பழக்கவழக்கங்கள், தொழில், வாழ்க்கை போன்றவற்றை அமைத்துக் கொண்டனர். திணை இலக்கியத்தில் காணப்படும் சமூக அமைப்பையும் சமுதாய மதிப்புகளையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சமூக அமைப்பு**

மக்களின் வாழ்க்கை முறைக்கேற்ப, செய்கின்ற தொழிலின் அடிப்படையில் சமூக அமைப்பானது பகுக்கப் பட்டுள்ளது. அரசன், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற சமூக அமைப்பு நிலவியதை,

**"அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்**
**ஐவகை மரபின் அரசர் பக்கமும்**
**இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்"**

**(தொல்.பொருள்.புறத்.74)**

அறுவகைப்பட்ட தொழில்களையுடைய பார்ப்பனப் பகுதியும், ஐவகைத் தொழில்களையுடைய அரசர், வணிகர், வேளாளர் பகுதியும் கொண்டதாக சமூகம் அமைந்துள்ளதை அறியலாம்.

**சமுதாய மதிப்புகள்**

சமுதாயத்தின் ஓர் அங்கமாய், அதனோடு இணைந்தும் முரண்பட்டும் ஒரு குறிப்பிட்ட சூழலில் வாழ்கிறான் மனிதன். மனிதனிடம் காணப்படும் பகுத்தறிவுச்சிந்தனை சக்தியால் விலங்குகளிடம் இருந்து தனியே பிறித்து இனம் காணப்படுகின்றான். சமுதாய மதிப்புகளாக காதல், கற்பு, தாய்மை, பாசம், புகழ், பக்தி, கொடை ஆகியவற்றைக் கொள்ளலாம்.

**காதல்**

எட்டுத்தொகை நூல்களைப் பற்றி குறிப்பிடும் போது 'நல்ல குறுந்தொகை' என்றே அடைமொழி கொடுத்துச் சொல்லப்படுகின்ற குறுந்தொகையில்

காதல் என்பது பாசம் அன்பு என்ற அடிப்படையில் காணப்படுவதை,

**"யாயும் ஞாயும் யார் ஆகியரே**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளீர்**
**யானும் நீயும் எவ்வழிஅறிதும்**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"**

**(குறுந்.40)**

மேற்காணும் பாடல் வாயிலாக நமக்கு காதலின் ஆழத்தை மிகவும் தெளிவாகக் காட்டியுள்ளார்.

### கற்பு

சங்ககாலத்தில் இருந்து கற்பு பெரிதும் போற்றப்படுகிறது. கற்புநெறியில் இருந்து தவறாத பெண்களைப் போற்றியுள்ளனர். இதனால் தான் அறத்தொடு நிற்கும் நிலை பின்பற்றப் பட்டுள்ளதை அறியமுடிகின்றது. குறிஞ்சிப்பாட்டில் முத்தாலும், மணியாலும், பொன்னாலும் செய்யப்பட்ட அணிகலன்கள் குறைவு ஏற்பட்டால் அதனை சரிசெய்து விடலாம். ஆனால் மனிதர்களால் சால்பும் பண்புநிலையும் கெட்டழிந்து போகுமாயின் அதனை நிலைநிறுத்தல் கடினம் என்னும் செய்தியினை,

**"முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை**
**நேர்வருங் குரையகலங்கெடிற் புணரும்**
**சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்**
**மாசறக் கழிஇ வயங்குபுகழ்நிறுத்தல்"**

**(குறிஞ்சிப்பாட்டு 13-16)**

இவ்வாறு கற்புநிலைக் காணப்பட்டதை அறியமுடிகிறது.

### தாய்மை

பெண்களுக்குத் தாய்மை என்பது மிகவும் முக்கியம். குடும்பவாழ்வு குழந்தையின்றி முழுமை பெறுவதில்லை என்பது சான்றோர் கொள்கையாக இருந்தது. பாண்டிய மன்னன் ஒருவன் மக்கட்பேற்றின் பெருமையினை,

**"படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்**
**உடைப்பெருஞ் செல்வராயினும் இடைப்படக்**
**குறுகுறு நடந்து சிறுகைநீட்டி**
**இட்டும் தொட்டும் கவ்வியும்ததுழந்தும்**
**நெய்யுடையடிசில் மெய்படவிதிர்த்தும்**
**மயக்குறுமக்களையில்லோர்க்குப்**
**பயக்குறையில்லைத்தாம் வாழுநாளே"**

**(புறம்.188)**

ஆறிவறிந்த மக்கட்பேறுபோல் சிறந்த பேறில்லை என்கிறார். குழந்தைபேறு மூலம் கிடைக்கும் இன்பத்தைவிட வேறு இன்பம் உலகத்தில் கிடையாது என்கிறார்.

### பாசம்

பாசம் என்பதற்க்கு நட்பு என்று பொருள் கொள்ளலாம். அதியமான் ஔவையாரிடம் கொண்ட நட்பு நோக்குதற்குரியது. மலையுச்சியில் கிடைத்த அரிய நெல்லிக்கனியின் சிறப்பை உண்ணும் முன் தெரிவிக்காது. உண்ட பின்னர்

ஔவையிடம் தெரிவித்து அவள் மீதுள்ள பாசத்தை அன்பினை வெளிப்படுத்து கின்றான் என்பதை,

**"நீல மணிமிடற்று ஒருவன் போல**
**மன்னுக - பெரும நீயே"**

**(புறம்.91)**

**வீரம்**

வீரம் என்பத ஆண்மகனுக்கு அடையாளமாக அமைவது. வீரம் அக்காலத்தில் வாழ்ந்த மன்னர்களுக்கு மட்டுமல்லாமல் சாதாரன குடிமக்களுக்கும் இருந்தது என்பதை,

**"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்**
**யுhண்டுளனொ? ஏன வினவுதி என் மகன்**
**ஈன்ற வயிறோ இதுவே**
**தோன்றுவன் மாதே போர்க்களத்தானே"**

**(புறம்.86)**

ஏன இப்பாடல் விளக்குகின்றது. எப்பொழுதும் போர்க்களத்தில் இருப்பவன் சிறந்த வீரனாவான். மன்னன் மட்டுமல்லாமல் குடிமக்களுக்கும் வீரம் இருப்பது இதிலிருந்து தெளிவாகிறது.

**கொடை**

பிறர்க்கு கொடுத்து உதவுவது கொடையாகும். புத்தப்பாட்ட நர்ல்களில் ஐந்து ஆற்றுப்படை நூல்கள் உள்ளன. இதில் திருமுருகாற்றுப்படையை தவிர்த்து மீதமுள்ள ஆற்றுபடைகள் அரசனிடம் பொருளைப் பெறுகின்ற கொடைப்பண்பை வெளிப்படத்துகின்றது. பொருநராற்றுப்படையில் கரிகாற் பெருவளத்தான் தன்னை நாடி வந்தவர்களுக்கு பாம்பு உரித்தாற் போன்ற வெண்மையான ஆடையும் செம்மறியாட்டின் கொழுத்த இறைச்சியையும் கொடுத்தான் பொருநனுக்கு என்பதை,

**"நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்கனிந்து**
**அரவுரியன்ன அறுவை நல்கி"**

**(பொருந.82-83)**

ஏன்னும் பாடல் வரிகள் மூலம் கரிகாற் பெருவளத்தானின் கொடைத்தன்மையை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

சங்ககாலச் சமூகமானது அரசன், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற வகையில் அமைந்திருந்ததை அறிய முடிகின்றது. சமுதாய மதிப்புகள் மூலமாக அன்பின் ஆழத்தையும், கொடைத் தன்மையின் மூலமாக விருந்தோம்பல் பண்பாட்டையும், அறத்தொடு நிற்றல் மூலம் பெண்களின் கற்புநெறி குறித்தும் அறிய முடிகின்றது.

**பயன்பாட்டு நூல்கள்**

1. தொல்காப்பியம் - புலியூர்க் கேசிகன் - சாரதா பதிப்பகம்.
2. குறுந்தொகை - புலியூர்க் கேசிகன் - சரண் புக்ஸ்.

3. குறிஞ்சிப் பாட்டு இலக்கியத் திறனாய்வு விளக்கம் - தமிழண்ணல் - பாரி நிலையம்.
4. புறநானூறு செய்யுளும் செய்திகளும் - டாக்டர் ரா. சீனிவாசன் - அணியகம் பதிப்பகம்.
5. பொருநராற்றுப்படை விளக்கம் - கி.வா.ஜகன்நாதன் - அமுத நிலையம்.

Vol. 9 Special Issue 1 January 2025 E-ISSN: 2456-5571

# மு.மேத்தா கவிதைகளில் உள சிந்தனைகள்

**முனைவர் ஜ. தேவர் பொம்மி நாயக்கர்**

*கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை*

*ஏ.வி.முத்தையா மகளிர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திண்டுக்கல்*

**முன்னுரை**

மனநலம் என்பது மனத்தின் நல்வாழ்வு மற்றும் மனக்குறைபாடு இல்லாத நிலைகளைக் குறிப்பதாகும். மனநிலை என்பது உணர்ச்சி, நடத்தை நிலைகளைச் சார்ந்து அமைகின்றன. ஒருசில செயல்கள் மனதினை சமநிலையில் வைத்திருக்கவும், சில செயல்கள் மன உலைச்சலினை பெறவும் செய்கின்றன. நல்ல பழக்க வழக்கங்களே மனசிக்கலை நீக்கி, ஆற்றலையும் உத்வேகத்தையும் கொடுக்கும். ஆகவே, மனிதன் மனமே சமுதாயத்தில் நிகழும் செயல்களையும், சிக்கல்களையும் ஆராய்ந்து அறிந்து உணர்வு பூர்வமான படைப்புகளுக்கான காரணிகளாக அமைகின்றன. படைப்பாளியின் எண்ண ஓட்டத்திலேயே இலக்கியங்கள் உருவாகின்றன. எனவே, அவ்வகையில் அமைந்த கவிஞர் மு.மேத்தாவின் படைப்புகளின் வழி உளச் சிந்தனையினை இக்கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

**நீங்கா நினைவுகள்**

ஒவ்வொரு நாளும் அழகும் இளமையும் சேர்ந்தபடி நகர்ந்து செல்வது காதலின் நீங்காத நினைவுகள் ஆகும். மனதிற்குள் சின்னஞ்சிறு எண்ணங்களை வட்டமிட்டு பத்திரப்படுத்திக் கொள்கிறது காதல். காதலின் நினைவலைகள் சிலருடைய வாழ்வில் வந்து செல்லும் பசுமையான நினைவுகள். அவையே, இயந்திரமான வாழ்க்கையில் தன்னையும் அறியாமல் எண்ண ஓட்டங்களில் ஊடுருவிச் சென்று மதியினைத் தெளிவுபெறச் செய்து இனிமை தருவது காதலின் அற்புதமான நினைவுகள்தான். மாற்றங்களும், மறதியும் நிறைந்த இவ்வுலகில் இன்பத்தை திகட்டாமல் தரும் காதலின் நீங்கா நினைவுகள் குறித்து மு.மேத்தாவின் பின்வரும் கவிதை வரிகள் நமக்குப் புலப்படுத்தும்.

**"பூந்தோட்டத்தைச்**
**சுற்றிப்பார்த்தேன்**
**யோசனையோடு**
**ஒவ்வொரு பூவும்**
**மலர்ந்திருந்தது**
**அவள்**

**வாசனையோடு”**

**(மு.மேத்தா, கனவுகளின் மெய்யெழுத்து, ப.12)**

முதற்காதல் அவ்வப்பொழுது வண்ணத்துப் பூச்சியாக சிறகடித்து வந்து நினைவூட்டும் என்பதனை மு.மேத்தாவின் இக்கவிதை வரிகள் உணர்த்துகின்றன.

**காதல் ஊடகம்**

காதல் என்பது ஈர்ப்பினையும் தாண்டிய மனதின் ஆழமான உணர்வுகள் ஆகும். ஆசைகளின் ஏக்கம் ஒருபுறமும், பிரிவுகளின் துன்பம் மறுபுறமும்மாக உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பது காதல் எனப்படும். காதல் முளைக்கும் கனங்கள் எண்ணிலடங்காதவை. காதலை நல்லமுறையில் வெளிப்படுத்தினால் வெற்றி நிச்சயம். காதலை வெளிப்படுத்துவதில் கண்களுக்கு முக்கிய பங்கு உண்டு. கண்கள் வார்த்தைகளின்றி ஓராயிரம் கவிதைகளையும், வண்ணங்களின்றி அழகு ஓவியங்களையும் தருவதுண்டு. காதலுக்கென்று தனிப்பட்ட மொழி வழக்கில் உண்டு என்பதற்கு

**“கண்ணொடு கண்இணை நோக்கொக்கின்**
**வாய்ச்சொற்கள்**
**என்ன பயனும் இல”**

**(குறள் – குறிப்பறிதல் - 1100)**

என்ற வள்ளுவனின் கூற்றே சான்றாகும்.

**“காதல் தீபத்தை**
**ஏற்றுவதற்குத்**
**கைகள் எதற்கு?**
**கண்கள் போதாதா?”**

**(மு.மேத்தா, கனவுக்குதிரைகள், ப.68)**

காதலில் உள்ளக்குறிப்பை அறிந்த பின் சொற்கள் பயனற்று போய் விடுகின்றன. மௌனத்தின் வார்த்தைகள் காவியம் பாடுகின்றன என்பதாக மு.மேத்தாவின் கவிதை வரிகள் நமக்கு உணர்த்துகின்றன.

**ஒருதலைக் காதல்**

தலைவன், தலைவி இருவருள் ஒருவரிடத்தில் மட்டும் தோன்றுவது ஒருதலைக்காதல் என்று கூறலாம். கரையான் தின்ற புத்தகமாய் காதலால் தான் செல்லறித்து நின்ற போதும், தனக்கு பிடித்த அவளை அல்லது அவனைத் தேடி ஓடி நெடுங்காலமாய் காத்திருக்கும் ஒரு சுகமே ஒருதலைக் காதலின் தனித்துவம் வாய்ந்த பண்பாகக் கொள்ளலாம். முகவரி தெரியாமல், காற்றோடு முட்டி மோதி, அவை கானலே! என தெரிந்தும் காலங்கள் கடந்தும் காதல் கொள்வதே ஒருதலைக் காதலின் உச்சம் என்றால் அதுமிகையல்ல. தவிர்ப்பதில் உண்டான தவிப்பையும், விழிசுழிப்பில் வெளிவந்த வெறுப்பையும் இதயம் கடக்க மறுக்கின்ற காதலின் நிலையினை பின்வரும் கவிதை வரிகள் அழகாக உணர்த்தி நிற்கின்றன.

**“உணவு விடுதியில் உட்கார்ந்தார்கள்**
**சட்டென்று கேட்டான் சம்மதமா என்று**

**அவசர அவசரமாய் அவள் சாப்பிட்டாள்**

**அவனும் தனிமையில் அவளைச் சாப்பிட்டான்"**

**(ஒருவானம் இருசிறகு, ப.39)**

மனதில் வலிகளுடனும், வேதனை களுடனும் புலம்பும் ஒருபக்க அன்பு கொண்டோரின் மனக்குமுறலை மு.மேத்தாவின் கவிதைவரிகள் ஒருதலைக்காதலை நினைவு படுத்துகின்றன.

**இளமைக்கால நினைவுகள்**

எத்தனையோ நினைவலைகள் நெஞ்சிலே புதைந்திருந்தாலும் இன்பங்களும், துன்பங்களும் கூட்டலுடன் கழித்தலுமாய் சின்னச் சின்ன செயல்கள் பெருகி வரும் மனமுழுதாய் இளமைக் காலம் நிறைந்திருக்கின்றன. வசந்தமெங்கும் பரவிநிற்க, சிந்தையிலே சிறகடித்து கவலையின்றி வாழ்ந்த காலம் இளமைக்காலம். இனிமையான இளவயதின் இதயம் தொட்ட காதல் நினைவுகளை தள்ளாத வயதில் அசைபோடுகின்ற போது நினைவுகளும் சுகம் தருகின்றன. கள்ளமில்லா காதல் வாழ்வு பசுமரத்தாணியாக மீண்டும் மீண்டும் வந்து இன்னல்களையும் தாண்டி இன்பங்களைக் கொண்டு சேர்க்கும் என்பதனை

**"பாட்டியாகி விட்டாய் நீ…**

**தாத்தா ஆகி விட்டேன்**

**நான்!**

**ஆனாலும்**

**இன்னும் இளமையாய்**

**வாழ்கிறது நம் காதல்"**

(மு.மேத்தா – கனவுகளின் கையெழுத்து – ப.95)

வயது என்பது காதலுக்கில்லை. ஆண்டுகள் கடந்தாலும் இளமை மாறி முதுமை அடைந்தாலும் மனதில் கொண்ட காதல் உணர்வு எப்போதும் மாறாது என்பதனை கவிஞரின் கவிதை வரிகள் நமக்குப் புலப்படுத்துகின்றன.

**உறவு**

தனியொரு மனிதனை சமுதாயக் குழுவாக ஒழுங்குபடுத்துவதற்கான மிகவும் அடிப்படையான கூறுகில் ஒன்று உறவுமுறை ஆகும். உள்ளொன்று வைத்து புறமொன்று கூறுவார் உறவு களவாமை வேணடும் என்பார் வள்ளலார். இவை உறகளை மேம்படுத்த வள்ளலார் கூறும் அறிவுரையாகும். நமது உயர்நிலை கண்டு உதடுகள் வாழ்த்த உள்ளத்தில் பொறாமை நெருப்பை மனதில் கொள்வதே இன்றைய உறவுகளின் நிலையாகும். பந்தங்களைச் சேர்ப்பதைவிட பணத்தை சேகரிப்பதற்கே உறவுகள் நாளும் அலைகின்றனர். நாம் எத்தனை காலம் வாழ்ந்தோம் என்பதே பெரும் சிறப்புத்தருவதாகும். துரத்துகின்ற வாழ்க்கை ஓட்டத்தில் துன்பநிலை நெருங்கி வரும்போது நழுவிச் செல்லுகின்ற உறவுகளே அதிகம். செல்வம் இழந்தால் கண்டும் காணாமல் செல்வதே இன்றைய உறவுகள் என்பதனை

**"வெற்றி பெறக்**

**கற்றுக்கொள்!**

**சுற்றம் உனைச்**

**சுற்றி வரும்**

**சொந்தம் பந்தம்**

**தொடந்து வரும்"**

(மு.மேத்தா – ஒற்றைத் தீக்குச்சி – ப.74)

வெற்றியாளனாக வெற்றி பெற்றால் உறவுகள் உங்களை வாழ்த்தி அழகான பூங்காடாய் அருகிலிருந்து அன்பு மழை பொழியும் என மு.மேத்தாவின் கவிதைவரிகள் போலி உறவுகளை தோலுரித்துக் காட்டுகின்றன.

**நிலையாமை**

நிலையற்ற வாழ்க்கையில் நிஜத்தை எதிர்பார்த்து அனைவரது வாழ்வும் ஓடிக் கொண்டிருக்கிறது. உடல் கூட்டுக்குள் உயிர் இருக்கும் வரைதான். அவரவர் மனிதன் என்று ஆகின்றனர். ஆவி பிரிந்தால் மதிப்பிழந்து போய் விடுகிறனர். இவை மனிதனுக்கு மட்டும் அன்று. எல்லா உயிர்களுக்கும் பொருந்தும்

**"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்**

**தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந் தனரே"**

என்கிறார் புறநானூற்று புலவர் பெருந்தலைச் சாத்தனார்.

**"நில்லாத வற்றை நிலையின் என்றுணரும்**

**புல்லறி வாண்மை கடை"**

(குறள் – நிலையாமை. 331)

என்று வாழ்வின் இழிந்த நிலையினை வள்ளுவர் கூறுகின்றார்.

**"முக்கியமான தென்று**

**எடுத்து வைத்ததை**

**கிழிக்கத் தோன்றியது**

**கிழிக்கப் போனதை**

**மீண்டும்**

**பத்திரப்படுத்த தோன்றியது**

**முடிவில் தோன்றியது**

**முக்கியமானது**

**முக்கிய மில்லாதது என்று**

**எதுவுமில்லையெனும்**

**முக்கியமானது"**

(மு.மேத்தா – கனவுகளின் கையெழுத்து – ப.66)

நம்வாழ்வில் தேவையானது, தேவையற்றது என்பது வாழும் சூழலுக்கேற்ப மாறிக்கொண்டே இருக்கும் என்பதனை கவிஞர் மு.மேத்தா கவிதை வழி உணர்த்துகின்றார்.

**மனிதநேயம்**

அனைத்து உயிர்களின் மீதும் அன்பு, கருணை, இரக்கம் கொள்வதே மனிதநேயம் என்பதாகும்.

**"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**

**என்புதோல் போர்த்த உடம்பு"**

(குறள் – அன்புடமை, 80)

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

**"மனிதர் உணவை மனிதர் பறிக்கும்**

**வழக்கு இனி யுண்டோ**

**மனிதர் நோக மனிதர் பார்க்கும்**

**வாழ்க்கை இனியுண்டோ"**

(பாரதியாரின் தேசியகீதங்கள் – 17.பாரத சமுதாயம்)

சமஉடைமை சமுதாயத்தையும், மனிதநேய உணர்வையும் கவிதைவழி வெளிப்படுத்துகிறார் மகாகவி பாரதி.

**"தமக்காக அஞ்சித்**

**தயங்கி நிற்காமல்**

**உறவுகளை நினைத்து**

**ஒதுங்கி விடாமல்**

**ஓடோடிப் போராடி**

**ஊரார் உயிர் காத்த**

**இளைஞர்கள் யார் யாரோ**

**அவர்களின்**

**இதயத்துடிப்பொலியில் கடவுள்"**

(மு.மேத்தா – கனவுகளின் கையெழுத்து – ப.62)

சென்னையில் பெய்த பெருமழையின் காரணமாக மாநகரமே பெரு வெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த வேளையில் மனித நேயமிக்க இளைஞர்கள் ஆபத்திலிருந்து மக்களைக் காத்தனர். அங்கு பலஉயிர்கள் மீட்டெடுத்த மனிதநேய உணர்வினை மு.மேத்தா அவர்கள் தனது கவிதைவழி வெளிப்படுத்துகிறார்.

**வறுமை**

வறுமை ஏக்கங்களாலும், வலிகளாலும் நிரம்பிய கொடூரமானது. இளசுகளின் இளமையையும் இனிமையும் வெறி கொண்டு பறிக்கும் மிருகம்தான் அது. வறுமை என்பது உணவு, உடை, உறைவிடம், குடிநீர், கல்வி, சகமனிதர்களிடம் மதிப்புப் பெறுதல் போன்றவை உட்பட்ட வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிக்க கூடியதை இழந்த நிலையே வறுமை ஆகும்.

**"என்னுடைய சம்பளநாளில்**

**எண்ணி வாங்குற**

**பள பளக்கும் நோட்டுகளில்**

**எவரெவர் முகமோ**

**தெரியும்**

**என்முகத்தைத் தவிர!**

(மு.மேத்தா – ஊர்வலம் – ப.42)

அடிப்படை வசதிகள் பெற்ற நடுத்தர குடும்பத்தினர்; குறைந்த ஊதியத்தில் நிறைவில்லா வாழ்வினை வாழுகின்றனர். பற்றாக்குறை வருமானம், அடிப்படைத் தேவைகள் மற்றும் விலைவாசி உயர்வு ஆகிய காரணங்களினால் ஆசைகள், தேவைகள், இலட்சியங்கள் இவை அனைத்தும் கானல் நீராய் மறைந்து விடுகின்றன. அடிப்படை வாழ்க்கையையே முழுமையாக நடுத்தர மக்களால் வாழமுடியாத நிலையினை கவிஞர் மு.மேத்தா தனது கவிதையில் உணர்வு பொங்க உணர்த்துகிறார்.

**முடிவுரை**

உளச்சிந்தனை அறிவியல் துறையாக பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. சங்க இலக்கியம் தொட்டே உணர்வு, சமூக மதிப்பீடுகள் அறிவுநிலை வெளிப்பாட்டில் எத்தகைய உளச்சிந்தனை பழந் தமிழரிடத்தே இருந்துள்ளது என்பதனை இலக்கியங்களின் மூலம் அறிந்து கொள்ளமுடிகின்றது. மனிதர்களின் கூட்டு வடிவமான சமுதாயத்தின் வாழ்வியல் சூழலினை மு.மேத்தாவின் கவிதைகள் உள்ளத்தில் தெளிவு பெற உணர்த்துகின்றன. முக்கால உணர்வுகளை அசைபோடுவதாகவும், மனித இயல்புகளை வெளிப்படுத்தும் விதமாகவும், மானுட சிறப்புகளை வெளிப்படுத்துவதாகவும், உண்மைகளை உரக்க உரைப்பதாகவும் இக்கட்டுரை அமைகின்றன.

**துணை நூற்பட்டியல்**


1. மு.மேத்தா - கனவுகளின் மெய்யெழுத்து.
2. மு.மேத்தா - கனவுக்குதிரைகள்.
3. மு.மேத்தா - ஒருவானம் இருசிறகு.
4. மு.மேத்தா – கனவுகளின் கையெழுத்து.
5. மு.மேத்தா – ஒற்றைத் தீக்குச்சி.
6. மு.மேத்தா – ஊர்வலம்

# வாழ்வியல் நெறியும் மனித நேயமும்

**அனுபிரியா. அ & திவினா. கு**

*மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ்ப்படைப்பாக்கம்*

*குமரகுரு பன்முகக் கலை அறிவியல் கல்லூரி, கோவை*

## முன்னுரை

“உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” என்பது நம் மரபு. முன்னோர்கள் தங்களை நாடி வந்தவர்களுக்கு எக்குறையும் இன்றி பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பினர். அவ்வகையில் வாழ்வியல் முறைகளும், பிறருக்கு உதவும் பண்பும், மனித நேயமும் கொண்டு நம் முன்னோர்கள் வாழ்ந்தனர் என்பதை இக்கட்டுரை வழி காணலாம்.

## வாழ்வியல் நெறிகள்

சங்க இலக்கியத்தில் பண்டையத் தமிழர்கள் செறிவார்ந்த வாழ்வியல் நெறிகளோடு வாழ்ந்தனர். இலக்கியத்தில் காதல், வீரம், கொடை மட்டுமின்றி விருந்தோம்பல் இன்றளவும் மக்களிடையே காணப்படுகிறது. சில சங்க இலக்கியப் பாடல்கள் வழி விருந்தோம்பலின் மேன்மையை உணர முடிகிறது.

**“அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்”**

**(நற் – 142:9)**

என்ற நற்றிணை வரிகள் விருந்தினர் எந்த நேரத்தில் வந்தாலும் விருந்தோம்பும் தலைவியின் சிறப்பைப் புலப்படுத்துகிறது. பண்டையத் தமிழர்கள் வாய்மை, செய்ந்நன்றி அறிதல், நடுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, புறங்கூறாமை, இன்னாசெய்யாமை, ஈகை, விருந்தோம்பல் போன்ற அறம் சார் நெறிகளையும் வாழ்வியல் நெறிகளாகக் கடைப்பிடித்தனர்.

## ஈகைச் சிறப்பு

அனைத்து சமயங்களிலும் ஈகையினைப் புகழ்ந்தும் வறியோர்க்கு ஒன்று ஈவதே ஈகை என்றும் கூறுகின்றனர்.

**“இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது**
**வல்வாங்கு வாழ்வதும் என்னாது நீயும்**
**எல்லோருக்கும் கொடுமதி”.**

**(புறம் – 163)**

என்ற பெருஞ்சித்தரனார், தான் பெற்ற பெரும் செல்வத்தை மற்றவருக்கு கொடுத்து வாழ வேண்டும் என்பதைக் கூறியுள்ளமையைக் காணமுடிகிறது.

**செல்வத்துப் பயனே ஈதல்**

**(புறம் – 189)**

இதன் வழியில் ஈதலின் தன்மையைக் காண முடிகிறது.

**"ஈதல் இசைப்பட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு".**

**(குறள் – 231)**

என்ற குறள் வழி வறியவர்க்கு ஈதல் வேண்டும் அதனால் புகழ் உண்டாக வேண்டும். அப்புகழ் அல்லாமல் உயிருக்கு ஊதியம் ஆனது வேறொன்றுமில்லை, என்ற குறள் வழி வள்ளுவர் ஈகையைப் பற்றி விளக்குகிறார்.

சங்க கால மக்கள் தனக்குக் கிடைத்தச் செல்வங்களை வைத்து, தான் மட்டும் இன்புற்று வாழாமல், பிறருக்கும் கொடுத்து வாழ்ந்தனர். மனிதர்களுக்கு மட்டுமே இன்றி பிற உயிரினங்களுக்கும் உணவு கொடுத்து மகிழ்வித்துத் தானும் மகிழ்ச்சியடையும் பண்பாட்டினை உடையவர்களாக விளங்கினர்.

**"முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்**
**எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத் – தொல்லை**
**இரவாமல் எந்த இறைவர்போல் நீயும்**
**கரவாமல் ஈகை கடன்".**

என விளக்குகிறது புறப்பொருள் வெண்பாமாலை.

இப்பண்பினை இன்றளவும் நம் மக்களிடையேக் காணலாம். மேலும், தாம் துன்பமுற்ற காலத்தில் உதவியவர்க்கு நன்றி மறவாது இருந்தனர். செல்வம் வந்த காலத்தில் இல்லாதவர்களுக்கு உதவ வேண்டும் என்ற தன்னலமற்றப் போக்கினையும் காண முடிகிறது.

**ஒழுக்க உயர்வு**

சங்க கால மக்கள் ஒழுக்கத்தில் உயர்ந்தவர்களாக இருந்தனர்.

**"நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே".**

**(புறம் – 187)**

நாம் வசிக்கும் பகுதி சிறப்பாக இருக்க வேண்டுமெனில் அப்பகுதியில் வாழ்கின்ற ஆண்மகன் வீரத்திலும் ஒழுக்கத்திலும் சிறந்தவனாக இருக்க வேண்டுமென்று எண்ணினர். இவ்வாறு நாடாக இருந்தால் என்ன? காடாக இருந்தால் என்ன? பள்ளமாய் இருந்தால் என்ன? மேடாய் இருந்தால் என்ன? எங்கே ஆண்கள் நல்லவர்களாக இருக்கிறார்களோ அந்த நிலம் வாழ்வதற்கு உரிய நல்ல இடமாக இருக்கும் என்பதைப் பாடல் விளக்குகிறது.

வீட்டிற்குப் பெண்ணும், நாட்டிற்கு ஆணும் என சமூகம் அமைந்த காலகட்டத்தில் ஆடவர் ஒழுக்கமே உலக மேன்மைக்கு அடிப்படையாக விளங்கிற்று.

**"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்".**

**(குறள் – 133)**

என்ற குறளின் வழி வள்ளுவர் ஒழுக்கத்தின் தன்மையைக் கூறுகிறார்.

**சான்றோர் பண்பு**

சான்றோர்கள் அறிவில் மட்டும் சிறந்தவர்களாக இல்லாமல் பண்பு நலன்களிலும் சிறந்து விளங்கினர்.

> **“உண்டா லம்ம இவ்வுலக மிந்திரர்**
> **அமிழ்த மியைவ தாயினும், இனிது எனத்**
> **தமியர் உண்டதும் இலரே.....”**
>
> **(புறம் – 182)**

என்ற வரிகள் சான்றோர்கள் தேவர்களின் உணவாகிய அமிர்தம் தமக்கு தவப் பயனால் கிடைத்திருந்தாலும் தெய்வத்தின் மூலம் கிடைத்திருந்தாலும் தான் மட்டும் உண்ணமாட்டார்கள். பிறருக்குக் கொடுத்து உண்பர் என்பதை உணர்த்துகிறது. யார் மீதும் வெறுப்பைக் காட்டாமல் பழிப் பாவங்களுக்கு அஞ்சி வாழ்ந்தனர். பழி என்றால் இவ்வுலகம் முழுவதையும் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இத்தகைய பெருமை பொருந்திய குணங்களை உடையவர்களாகவும், ஒரு போதும் தமக்கு என்று முயற்சித்து வாழாமல் பிறருக்காக முயற்சித்து நல்லது செய்து வாழ்ந்தனர்.

இத்தகையப்பலரின் வாழ்க்கைத் தியாகங்களே இவ்வுலகை சிறப்புற இயக்குகிறது.

**விருந்தோம்பல் பண்பு**

> **“வந்தோரை வரவேற்பது நம் மரபு” அவ்வகையில் அவர்களை உபசரிப்பதும் மரபாகும்.**

> **“விருந்து புறந்தருதலும் சுற்றமோ ஓம்பலும்**
> **பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்.”**
>
> **(கற்பியல்,11)**

இல்லறத்தில் கணவன் மனைவியர் இருவரும் இணைந்து விருந்தோம்ப வேண்டும் என்பதை, இளங்கோவடிகளும், கம்பரும் தம் காப்பியங்களில் புலப்படுத்தியுள்ளனர்.

கண்ணகி கோவலனை விட்டுப் பிரிந்த நிலையில்,

> **“அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்**
> **துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
> **விருந்தெதிர் கோடலும் இழந்த தென்னை”**
>
> **(சிலம்பு – 71-74 வரி)**

என்ற சிலப்பதிகார பாடலின் மூலம் விந்தோம்பலின் சிறப்பு வெளிப்படுகிறது.

**மனித நேயம்**

மனிதனை மனிதன் மதிக்க வேண்டுமானால் மற்றவர்களிடம் அன்பு செலுத்துதல் வேண்டும். அன்புதான் இன்பத்தின் ஊற்றுக்கண் அவ்வின்ப ஊற்று மனித. இனத்தில் படிந்துள்ள குற்றங்களைப் போக்கி மனிதனது பெருமையும் உரிமையும் மதிக்கும் வகையில் போற்றப்படுவது மனித நேயமாகும்.

மணிமேகலையில் இடம்பெற்ற அமுத சுரபியானது முதலில் ஆபுத்திரனிடம் இருந்தது. அமுதசுரபியைக் கொண்டு வறுமையில் வாடிய எவர்க்கும் உதவி செய்தான். பிறகு அந்த நாடு

செழுமை அடைந்ததால் வறுமையில் வாடும் மக்களைத் தேடி சென்றும் அட்சய பாத்திரத்திற்குப் பயனில்லாமல் போனது. இவ்விதம் உலக பசிப்பிணியை நீக்கியது அமுதசுரபி.

**"யாதும் ஊரே, யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா...**
**பெரியோரை வியத்தலும் இலமே**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"**
**(புறம். பா.எண் 192)**

மனிதன் பெரியோரையும், சிறியோரையும் வியத்தலும், இகழ்தலும் செய்யக் கூடாது என்ற பண்பையும், மனிதனின் வாழ்க்கை நெறியையும் கணியன் பூங்குன்றனார் குறிப்பிடுகிறார்.

**"பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியம் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி"**

பசி, பிணி, பகை ஆகிய மூன்றும் மக்களைத் துன்புறுத்தக் கூடியது. எனவே உலக உயிர்கள் வாழ உணவு தேவைப்படுகிறது. பாரகம் அடங்கலும் பசிப்பிணி நீங்க வேண்டும் என்பதை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டுள்ளதை இப்பாடல் உணர்த்துகிறது.

**முடிவுரை**

மனிதனின் வாழ்க்கை என்பது நன்மை செய்து வாழ்வது ஆகும். நல்லதை செய்யாவிட்டாலும் பிறருக்குத் துன்பம் செய்யாமலாவது இருத்தல் வேண்டும். இரத்தமும் சதையும் உயிர்வாழ எப்படி முக்கியமோ அதுபோன்று ஒழுக்கமும் வாழ்வியல் நெறிகளைக் கடைபிடிப்பதும் வாழ்க்கைக்கு முக்கியமாகும். ஒருவனுடைய உயர்வு என்பது அவன் ஈட்டும் பொருளில் இல்லை, அவனுடைய ஒழுக்க நெறியில் உள்ளது.

சீரான சமுதாயம், சீரான வாழ்க்கை என வாழ்ந்த நம் முன்னோரின் வாழ்க்கையை அழகுற எடுத்தியம்புகிறது. சங்கால மக்கள் காதல், வீரத்தில் சிறந்து விளங்கியது போலவே ஒழுக்கத்திலும், ஈகையிலும், மனிதநேயத்திலும் சிறப்புடையவர்களாக விளங்கினர். சமுதாயத்தின் காலக்கண்ணாடியாம் இலக்கியங்கள் இம்மானுட மேன்மைகளை அழகுற எடுத்தியம்புகின்றன.

**துணை நூற்பட்டியல்**

1. உ.வே.சாமிநாதையர், நற்றிணை மூலமும் உரையும், பதிப்பாளர் சென்னை (உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்) 1989.
2. புலியூர்க் கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், சென்னை சாரதா பதிப்பகம், 2010.
3. மு.வரதராசன் உரை, திருக்குறள் தெளிவுரை, பாரி நிலையம், 2014.
4. புலியூர்க் கேசிகன் உரை, சிலப்பதிகாரம் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், 2018.
5. ச.திருஞானசம்பந்தம், புறப்பொருள் வெண்பாமாலை தெளிவுரை ,கதிர் பதிப்பகம் (மறுபதிப்பு) – 2017.

# நாலடியார் சுட்டும் வாழ்வியல் அறங்கள்

**கூ. பத்மப்பிரியா**

*உதவிப் பேராசிரியை*

*தேனி கம்மவார் சங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி*

*கொடுவிலார்பட்டி, தேனி*

**ஆய்வுச் சுருக்கம்**

நாலடியார் என்னும் அறநூலில் இடம்பெற்றுள்ள வாழ்வியல் அறங்கள் பற்றி இந்த ஆய்வுக்கட்டுரை எடுத்தியம்புகிறது. மனிதன் வையத்துள் மாண்புற வாழ்வதற்கு சில நல்ல அறங்கள் செய்தல் வேண்டும் என்ற கருத்தை நாலடியார் சுட்டிக்காட்டுகின்றது. அவ்வாறு நல்ல அறங்களை செய்வதன் மூலம் அவன் வாழ்வில் அடையும் பயன்களையும் அழகுற விளக்குகின்றது. நாலடியாரில் பல அறங்கள் கூறப்பட்டிருப்பினும், அனைவராலும் எளிதாக செய்யமுடியும், செய்யவேண்டிய வாழ்வியல் அறங்களை பற்றி வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது. மனித வாழ்வின் மேன்மைக்கு உயர்நட்பு அவசியம். அறவாழ்வு வாழ பொருள் தேவை. இவ்விரண்டும் இருந்தால் வாழ்வு இன்பமாய் இருக்குமென உணர்த்துகிறது நாலடியார்.

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் அற இலக்கியங்கள் தோன்றிய காலமாகக் களப்பிரர் காலம் குறிக்கப் பெறுகின்றது. பதினெண் கீழ்க்கணக்கு என அவை அழைக்கப்பெறும். இதில் 11 அற இலக்கியங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வற இலக்கியங்கள் அனைத்தும் மக்களின் பொறாமை, பேராசை, சினம், தீயசொல், பகை, பாவம் போன்றவற்றை நீக்கி பெருமையைத் தரும். செல்வத்தையும் நல்கும். அறநெறியில் வாழ்வதே வாழ்வின் இன்பம் என கூறுகிறது. இக்கட்டுரையானது நாலடியாரில் இடம்பெற்றுள்ள இறக்கருத்துக்களை ஆராய்வதாக அமைந்துள்ளது.

**கலைச்சொற்கள்**

1. அறம் - கடமை, 2. பிறை – நிலவு, 3. கேண்மை – நட்பு, 4. பேதமை – அசடு, 5. கீழோர் உறவு – சிறியோரின் உறவு

**அறம் விளக்கம்**

அறம் எனும் சொல்லிற்கு அகராதியில் பல்வேறு விளக்கங்களை காண முடிகின்றது. கழகத் தமிழ் அகராதி அறம் என்னும் சொல்லிற்கு “கடமை, நோன்பு, தருமம், கற்பு இல்லறம், துறவறம், நல்வினை, அறநூல், அறக்கடவுள், தரும தேவதை, தீப்பயனுண்டாக் குஞ்சொல்”[1] என்று விளக்கம் அளிக்கிறது. “அறமெனப் பகுவது அலந்தவர்க்கு உதவுதல்” என கலித்தொதையின் கூற்றும் இங்கு குறிப்பிடத்தக்கதது.

**அறம் வலிமையானது என்பதால் தான் தமிழ் மூதாட்டி ஔவையும்,**

**"அறம் செய விரும்பு"[2]**

என்கிறார்.

எளிமையாக கூற வேண்டுமானால் பிறருக்குத் தீங்கு செய்யாத அனைத்து நற்செயல்களும் அறம் என்றே கூறப்படுகிறது. மனிதன் தனக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியின் முழுநிறை வடிவமே அறம். வள்ளுவரும் இக்கருத்தையே வலியுறுத்தி,

**"அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை**
**மறத்தலின் ஊங்கில்லை கேடு"**

**திருக்குறள் - 32**

ஒருவனுக்கு அறம் செய்வதைவிட மேலானது நன்மையைத் தருவது வேறு எதுவுமில்லை என்று வள்ளுவர் அறத்தின் சிறப்பை வலியுறுத்துகிறார்.

**வாழ்வியல் அறங்கள்**

மனிதன் இப்பூமியில் பிறந்தது முதல் இறக்கும் வரை அவன் வாழ்வில் பல நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அவன் இப்பூமியில் வாழும் சில ஆண்டுகளில் அவன் வாழ்கின்ற வாழ்வில் உன்னால் இயன்ற அளவு அறங்களை செய்யுங்கள் என நம் முன்னோர்கள் நீதி இலக்கியங்கள் மூலம் நல்ல செய்திகளை உணர்த்தினர். அதில் நாலடியாரும் ஒன்று. அந்நூலில் கூறியுள்ள வாழ்வியல் அறங்கள் பற்றிய செய்திகளைக் காண்போம்.

**அறத்தின் வலிமை**

அன்பு நெஞ்சமே, நீ அறத்தை மறந்து செல்வம் சம்பாதித்து உலகில் நிலையாக வாழலாம் என மயங்கிப் பொருள் தேடுவதிலேயே முயன்று வாழ்கிறாய். முதுமையில் மறுமைக்கு உதவி தரும் செயலாக உன்னால் என்ன செய்யமுடியும் என எண்ணிப்பார் என்று நெஞ்சை நோக்கிக் கூறுவதாக அமைந்துள்ளதை,

**"அகத்தாரே வாழ்வாரென்று அண்ணாந்து நோக்குப்**
**புகத்தாம் பெறாஅர் புறல் கடை பற்றி**
**மிகத்தாம் வருந்தியிருப்பரே மேலைத்**
**தவத்தால் தவஞ்செய் யாதார்"**

**- நாலடி – 31**

என இப்பாடல் எடுத்துரைப்பதைக் காணலாம். பணம் மட்டுமே வாழ்க்கை அன்று. அறம் செய்து வாழ்வதே வாழ்க்கை என்பதை இப்பாடல் புலப்படுத்துவதை இதன்கண் அறியலாம். இக்கருத்தை வலியுறுத்தி மணிமேகலையும்,

**"அறம் எனப்படுவது யாது?" எனக்கேட் பின்**
**மறவாது இதுகேள: மன் உயிர்க்கு எல்லாம்**
**உண்டியும், உடையும், உறையுளும், அல்லது**
**கண்டது இல்"[3]**

என்று விளக்கம் தருகிறது. ஒருவனுக்கு உணவு, உடை, உறையுள் தருவதே சிறந்த அறம் என கூறுகிறது.

**நட்பறம்**

தமிழ் இலக்கியம் காலந்தோறும் நட்பு எனும் விழுமியத்திற்கு உயர்ந்த இடத்தினை தந்து வந்துள்ளது. தொல்காப்பியர்,

**"தாங்கு அரும் சிறப்பின் தோழி மேன"**

எனத் தோழியைச் சிறப்பித்துக் கூறுவார். சங்க அகத்திணைப் பாடல்களில் தோழி பெறும் இடம் முதன்மையானது. நாலடியார், 'நட்பாராய்தல்', 'நட்பில் பிழை பொறுத்தல்', 'கூடா நட்பு' என்று

மூன்று தலைப்புகளில் நட்பின் இலக்கணத்தை எடுத்து இயம்புகின்றது.

**“பெரியவர் கேண்மை, பிறை போல நாளும்**
**வரிசை வரிசையா நத்தும் - வரிசையால்**
**வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே**
**தானே, சிறியார் தொடர்பு”**

**- நாலடி – 225**

பெரியோர் நட்புப் பிறைச் சந்திரனைப் போல் நாள்தோறும் படிப்படியாக வளரும். கீழோர் உறவு வானத்தில் தவழும் முழுமதி நாள்தோறும் சிறிது சிறிதாகத் தானே தேய்ந்து குறைந்து ஒழியும். வள்ளுவரும் இக்கருத்தை வலியுறுத்தி கூறுயுள்ளார்.

**“நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்**
**பின்னீர பேதையார் நட்பு”**

**- திருக்குறள் : 782**

பிறை நாளும் வளர்வது போல, அறிவுடையார் நட்பு வளரும்: முழு நிலவு தேய்வது போலப் பேதைகளின் நட்பு தேயும்.

நல்ல நண்பரை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதற்கு விடையாக மனிதர் உள்ளொன்றும், புறம் ஒன்றாக நடிப்பர், ஏமாற்றுவர். அதை உணர்ந்து பிறந்த குடி, நடுவில் மாறா மனநிலை முதலியவற்றை விசாரித்து அறிந்த பின்னரே நண்பனைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**பலநாளும் பக்கத்தார் ஆயினும் நெஞ்சில்**
**சிலநாளும் ஒட்டாரோடு ஒட்டார் - பலநாளும்**
**நீத்தார் எனக்கைவிடல் உண்டோ தம் நெஞ்சத்து**
**யாத்தாரோடு யாத்த தொடர்பு**

**- நாலடி : 214**

இதன்மூலம் நட்புக்கு காலமும், தூரமும் தேவையில்லை. ஆழமும், அன்புமே அடிப்படைகள் என்பதை அறியமுடிகிறது.

**ஈகை அறம்**

மனிதர்கள் தன்னுடைய ஆயுளில் பாதியை செல்வம் ஈட்டலையும் அதை மற்றவர்களுக்கு பகிர்ந்தளித்தலையும் கடமையாகக் கொண்டு வாழ்ந்து வருவது மட்டுமல்லாமல் கண்களை இமை காப்பது போல ஈகையை காத்துவந்தனர். இல்லாதவருக்கு பொருள் கொடுத்தலே ஈகை எனப்படும். மற்றவர்களுக்குக் கொடுப்பதெல்லாம் பயன் கருதிச் செய்வதாகும்.

**“வறியார்க்கொகென்று ஈவதே ஈகைமற் றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து”**

**- திருக்குறள் : 221**

என்கிறார் வள்ளுவர். இக்கருத்தையே நாலடியாரும்

**“முன்னரே சாம்நாள் முனிதக்க மூப்புள**
**பின்னரும் பீடழிக்கும் நோயுள: - கொன்னே**
**பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதும்**
**கரவன்மின் கைத்துண்டாம் போழ்து”**

**- நாலடி : 92**

நாம் வாழக்கூடிய நாட்கள் மிகவும் குறைவு. அதிலும் உடல்நலக் கேடும், முதுமையும், சாகும் நாளும் இருக்கிறது. இப்படி துயர் சூழ்ந்த வாழ்க்கையின் நடுவே நாம் பணத்திற்காக அலைவதை விட்டு அனைவருடனும் பகிர்ந்துண்டு வாழும் வாழ்க்கையை வாழவேண்டும் என்பதை நாலடியார் குறிப்பிடுகிறது.

**'அறனை மறவேல்'[5]**

என்ற ஔவையின் கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது.

**நல்லொழுக்க அறம்**

**"அஞ்சுவது அஞ்சாமை பேதமை அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில்"**

**- திருக்குறள் : 428**

என்னும் திருக்குறளுக்கு ஏற்றவகையில் ஒருவன் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கநெறிகளைக் கையேடாகக் கொண்டு அறிந்துகொள்ள வேண்டியவற்றை அறிந்து கொண்டு அடக்கமுடையவராக, அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சி செய்யும் காரியங்களை உலகம் மகிழும்படி செய்துவாழும் உயர்ந்த குணமுடையவர்கள் துன்பம் அடைவதில்லை.

**அறிவது அறிந்து அடங்கி அஞ்சுவது அஞ்சி**
**உறுவது உலகுவப்பச் செய்து – பெறுவதனால்**
**இன்புற்று வாழும் இயல்பினார் எஞ்ஞான்றும்**
**துன்புற்று வாழ்தல் அரிது**

**நாலடி : 74**

நல்லறிவுடனும், நல்லொழுக்கத்துடனும், போதுமென்ற உள்ளத்துடனும் வாழ்பவர்கள் துன்பமில்லாது இன்பமாக வாழ்வார்கள் என்பதை இப்பாடல் வலியுறுத்துகின்றது.

**பிறன்மனை நயவாமை**

ஒழுக்கமுடையவனாக வாழ விரும்பு கின்ற தன்னை நற்பண்பாளனாக உயர்த்திக்கொள்ள விரும்புகின்ற ஒவ்வொருவனும் கடைபிடிக்க வேண்டிய இன்றியமையாத அறநெறி பிறன்மனை நயவாமை ஆகும்.

கற்புநெறி ஆடவர் மகளிர் இருவர்க்கும் பொது நெறியாகும். இதனை,

**"அறம்புகழ் கேண்மை பெருமை இந்நான்கும்**
**பிறந்தாரம் நச்சுவார்ச்சேரா – பிறன்தாரம்**
**நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவம் என்று**
**அச்சத்தோ டிந்நாற் பொருள்"**

**- நாலடி : 82**

என்னும் பாடலால் பிறன்மனையை விரும்புவனிடம் அறம், புகழ், சான்றோர் நட்பு, பெருமை போன்ற நான்கு பொருளும் சேராது. மாறாகப் பகை, பழி, பாவம், அச்சம் என்னும் நான்கே சேரும் என்கிறது நாலடியார்.

இக்கருத்தை வள்ளுவரும்,

**"பகைபாவம் அச்சம் பழியென நான்கும்**
**இகவாவாம் இல்லிறப்பான் காண்"**

**- திருக்குறள் : 146**

என்னும் பாடலில் எடுத்து இயம்புகிறார். பிறருடைய மனைவியை விரும்பி நெறிதவறி நடப்பவனிடத்தில் இருந்து பகை, பாவம், அச்சம், பழி என்னும் நான்கும் நீங்காமலிருக்கும்.

**சமுதாய அறம்**

சமுதாயம் என்பது மனித இனத்தின் மேம்பாடான வடிவமாகும். மாசு நீங்கிய தெளிவினை உடையார் பிறர் பொருளை கவரமாட்டார். கள் அருந்தமாட்டார், பிறரை அவமதித்து இகழ்ந்து உரையாடாமல் விளங்குவர். பொய் சொல்லமாட்டார் என்று மேன்மக்களின் இயல்புகளை கூறி மக்களை நல்வழிபடுத்துகிறது.

ஒரு வரையறுக்கப்பட்ட பரப்பின் கீழ்வாழும் மக்களுடைய சமூக வாழ்க்கையின் முழுமையான அமைப்பே சமுதாயம் எனப்படுகிறது. மனிதன் அறிவினாலே உலகம் வளர்ச்சியடைந்துள்ளது.

எனவே, மனிதன் நிலை தடுமாறும் போது அறிவினால் தானே தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும். நல்ல மனிதனுக்குப் பொன்னையும், பொருளையும் விட உயர்ந்த உடைமை அறிவுடைமையே,

**நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை**
**நிலைகலக்கிக் கீழிடு வானும், நிலையினும்**
**மேன்மேல் உயர்ந்து நிறுப்பானும் தன்னைத்**
**தலையாகச் செய்வானும் தான்**

**- நாலடி : 248**

ஒருவனது உயர்வும் தாழ்வும் அவனது முயற்சியின் அளவைப் பொறுத்தே அமைந்துள்ளது. அவனவன் அறிவுடைமையே ஒருவனுக்கு உயர்வும் தாழ்வும் தருவது என்பதை இப்பாடல் விளக்குகிறது.

**கல்வி அறம்**

தனிமனித வாழ்வையும், நாட்டின் முன்னேற்றத்தையும் உயர்த்துவது கல்வி. கல்வி என்ற சொல்லுக்கு மனத்தைப் பண்படுத்துதல் என்பதே பொருள். கல்வியே மக்களின் வாழ்க்கையில் அழியாத, குறையாத வளரும் செல்வமாக இடம்பெறுகின்றது. பிறவிதோறும் பயனைத்தரும் சிறப்பினை உடையது கல்வி என்பதை திருவள்ளுவர்,

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து**

**- திருக்குறள் : 398**

என்று குறிப்பிடுகிறார். கல்வி என்பது அறியாமை நோயை வேரோடு அழிப்பது. இதனையே,

**"இம்மை பயக்குமால்: ஈயக் குறைவின்றால்:**
**தம்மை விளக்குமால்: தாமுறராக் கேடின்றால்**
**எம்மை உலகத்தும் யாங்காணேம், கல்விபோல்**
**மம்மர் அறுக்கும் மருந்து"**

**- நாலடி : 132**

என்று கல்வியின் மகத்துவம் கூறப்பட்டுள்ளது. ஏனையவை கொடுக்கக் குறையும் கல்வியோ கொடுக்கக் கொடுக்கப் பெருகும். இதுவே கல்வியின் தனிச் சிறப்புகளுள் முதன்மையானது. இன்றைய உலகத்தில் புற்றீசல் போல் நிறைய நூல்கள் உள்ளன. எல்லாவற்றையும் கற்க வேண்டியதில்லை. வாழ்க்கைக்கு ஏற்புடைய நல்ல நூல்களை மட்டுமே கற்கவேண்டும்.

**முடிவுரை**

மனித வாழ்வினை நெறிப்படுத்த உதவும் கருவியாக அறம் விளங்குகிறது. மனிதன் அடையும் மேன்மைகளும், சிறந்த பண்பும், அப்பண்பினால் கிடைக்கும் சிறப்பு, உயர்வு முதலான பல கருத்துக்களும் எக்காலத்திற்கும் பொருந்துவதாக அமைந்துள்ளன. நாலடியாரின் அறக்கருத்துகள் போற்றப்படுவதற்கும் இன்றும் நிலைத்து வாழ்வதற்கும் அடிப்படைக் காரணம் மனிதனின் நல்லுள்ளமே. நாலடியார் நவிலும் கருத்துகள் அடிப்படையானவை, ஆழமானவை, தொலைநோக்குப் பார்வையுடையவை. எனவே, மனித வாழ்வு உன்னத நிலையை அடைய நாள்தோறும் அறவாழ்வு வாழவேண்டும்.

**நன்றி!!!**

**அடிக்குறிப்புகள்**

1. கழக வெளியீடு – கழகத் தமிழ் அகராதி. பக் : 60

2. மூதறிஞர் வ.சுப. மாணிக்கம், ஏழிளந்தமிழ் (நீதிநூல்கள்) – பக் : 13
3. ம. மார்க்கபந்து, எம்.ஏ., மணிமேகலை (பாட்டும் உரையும்). பக் : 296
4. தொல்காப்பியம் பொருளதிகாரம் - முனைவர். தமிழண்ணல். பக் : 150, நூற்பா : 1060
5. மூதறிஞர் வ.சுப. மாணிக்கம், ஏழிளந்தமிழ் (நீதிநூல்கள்) பக் : 15

**துணைநூற் பட்டியல்**

1. திருக்குறள் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம் - 2000
2. கழக வெளியீடு, கழகத் தமிழ் அகராதி மறு அச்சு – 2010
3. ஏழிளந்தமிழ் நீதிநூல்கள், மூதறிஞர் வ.சுப. மாணிக்கம், மணிவாசகர் பதிப்பகம் – 2006
4. மணிமேகலை (பாட்டும் உரையும்), ம. மார்க்கபந்து, எம்.ஏ., - இளஞானம் பதிப்பகம் – 2006
5. தொல்காப்பியம் பொருளாதிகாரம், முனைவர். தமிழண்ணல், மணிவாசகம் பதிப்பகம் - 2006

# புறநானூறு நவிலும் மகளிர் வரலாறு

**க. தனலெட்சுமி**

*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*

*ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி, போடிநாயக்கனூர்*

**முன்னுரை**

தொன்மைச் சிறப்புமிக்க குடியினரான தமிழரின் வரலாறும் பண்பாடும் தோண்டத் தோண்ட நீண்டு கொண்டே செல்கிறது. அத்தகைய நம் முன்னோர்களின் வாழ்வியல் கூறுகளாக அமைந்த பண்பாட்டினைத் தெரிந்து கொள்வதும் அதனைத் தொடர்ந்து பின்பற்றுவதும் நம் இளைய தலைமுறையினரின் தலையாய கடமையாகும்.

**"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே**
**வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி"**

என்கிறது புறப்பொருள் வெண்பாமாலை. ஆதிமனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தான். பரிணாம வளர்ச்சியின் விளைவாக மனிதர்களிடையே ஒற்றுமை உணர்ச்சி உருவாகியது. திணை அடிப்படையிலான ஒழுக்கம் மேற்கொண்ட மனிதன் **'திருந்திய ஒழுக்க'** நெறியினை மேற்கொண்டான். பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம் என்பார் பாவாணர். **'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்'** என்கிறது கலித்தொகை.

**புறநானூறு**

ஒரு மொழியின் ஏற்றம் அதன் இலக்கிய வளத்தாலும், இலக்கணச் செழிப்பாலும் உணரப்படும். அவற்றைத் தொகுத்து அறியும் போதுதான் முழுமையான மொழித்தன்மை புலப்படும். கடைச்சங்க காலத்தில் தோன்றிய நூல்களைப் பண்டைய இலக்கிய அறிஞர்கள் பாட்டு, தொகை என்று பாகுபாடு செய்துள்ளனர். சங்ககால மக்களின் வாழ்வியல் நிலைகளை ஓவியம்போல எடுத்துரைக்க வல்லன எட்டுத்தொகை நூல்கள். இம்மக்கள் 'வீரத்தையும் ஈரத்தையும்' இரு கண்களாகப் போற்றினர். அவ்வகையில் 'புறநானூறு நவிலும் மகளிர் வரலாறு' என்னும் இக்கட்டுரையானது சங்ககால பெண்களின் வீரம், கடமை, அறிவுச் சிறப்பு, விருந்தோம்பல், கருணை மற்றும் மனிதநேயத்தைப் பற்றி வெளிப் படுத்துகிறது.

புறநானூறு என்னும் தொகைநூல் நானூறு பாடல்களைக் கொண்ட புறத்திணை சார்ந்த ஒரு சங்கத்தமிழ் நூலாகும். இந்நூல் புறம், புறப்பாட்டு, நந்தாவிளக்கம் என்னும் வேறு பெயர்களாலும் வழங்கப்படுகிறது. 4 அடி முதல்

40 அடி வரையிலான ஆசிரியப்பாவால் அமைந்தவை. புலவர் வரலாற்றையும், புரவலர் வரலாற்றையும், மாந்தர் இன வரலாற்றையும் விளக்கும் ஓர் மணிமகுடமாகும் புறநானூறு.

பால்மணம் மாறாத பச்சிளம் குழந்தைக்குக் கையில் வேல் கொடுத்துப் போருக்கு அனுப்பும் மகளிர், முறத்தால் புலியை விரட்டும் மகளிர் எனப் பெண்களின் வீரத்தையும் அக்கால சமூக நிலையையும் வெளிக்காட்டும் கண்ணாடியாகவும் விளங்குகிறது புறநானூறு.

**சங்ககால மகளிர்**

சங்ககாலத்தில் அரசன் இறைவனுக்கு நிகராக கருதப்பட்டான். வீரம் மிக்க காவலனாகவும், சுற்றம் காக்கும் தாய் போலவும் விளங்கினான். அதனை போலவே சங்ககால மகளிர் இல்லறம் காக்கும் இயல்புடையவர்கள் மட்டுமின்றி வீரம் காக்கும் வீராங்கனைகளாகவும் திகழ்ந்தனர். கணவன் போர் வினையாற்றச் சென்றிருக்கும் போது, மகளிர் பூச்சூடாதவர்களாய், போரில் கணவனை இழந்த மகளிர் நடுகல்லை வழிபட்டும் வாழ்ந்துள்ளனர். ஆண்களுக்கு நிகராக பெண்களும் அரசியல், போர், இல்லறம் போன்ற பல துறைகளிலும் மேன்மையுடன் விளங்கியுள்ளனர்.

**"உயிரினும் சிறந்தன்ற நாணே நாணினும்**
**செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்ததன்று"**

**(தொல் – களவியல்.23)**

சங்ககாலப் பெண்கள் உயிரினும் மானமே சிறந்தது என்ற கொள்கையை கடைபிடித்தனர் என்பதை தொல்காப்பியர் தன்னுடைய நூலில் எடுத்தியம்புகிறார். தமிழுக்கு எழுத்து, சொல் என்று இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் பெண்களுக்கான இலக்கிணத்தையும் வகுத்துள்ளார்.

**"அச்சமும் நாணமும் மடனும் முந்துறுதல்**
**நிச்சமும் பெண்பாற் குரிய என்ப."**

**(தொல் – களவியல்.96)**

என்கிறார். சுருங்கக்கூறின் சங்ககால பெண்கள் கல்வி, வீரம், கற்பு, இல்லறம், ஆளுமை போன்ற அனைத்து நிலைகளிலும் மேன்மையுற்று விளங்கினர் என்பது மறுக்க இயலாத உண்மை எனத் தெளிவாகிறது.

**கடமையும் வீரமும்**

**"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;**
**வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;"**

**(புறம்-312)**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு தாயாக நின்று வீட்டிற்கும், நாட்டிற்கும் உள்ள கடமைகளைச் சுட்டிக் காட்டிய ஆளுமையுள்ள தலைசிறந்த பெண்மணியாக பொன்முடியார் திகழ்ந்துள்ளார் என்பதனை மேற்காணும் பாடல் வரிகள் விளக்குகின்றன. குழந்தையைப்

பெற்றெடுப்பதை விட அப்பிள்ளையைப் பாதுகாத்துப் பேணி வளர்ப்பதே சமூகத்தின் தலையாய கடமையாகும் என்பதை நினைவுருத்து கின்றார் பொன்முடியார். மேலும், புறநானூற்றில் குழந்தைகள் முதல் அரசன் வரை அவரவர்க்குரிய கடமைகளை அழகுத்தமிழில் அழகுறச் சொல்லியிருப்பது வியக்கத்தக்கதாகும்.

**"செங்களத் துழவுகோள் சிதைந்துவே றாகிய**
**படுமகன் கிடக்கை காணூஉ**
**ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தணளே"**

**(புறம்-278)**

நரைத்த கூந்தலையுடைய முதியோள் மகன் போர்க்களத்தில் பகைவர் யானைகளைக் கொன்று தானும் விழுப்புண்பட்டு இறந்துவிடுகிறான். அதனைச் சான்றோன் வாயிலாகக் கேட்ட அத்தாய் அவனை ஈன்ற பொழுது பெற்ற மகிழ்ச்சியைக் காட்டிலும் பேருவகை கொண்டதாகப் பூங்கணுத்திரையார் கூறுகிறார்.

**வீரத்தாய்**

**"சிற்றில் நல்தூண் பற்றி நின்மகன்**
**யாண்டுஉள னோஎன வினவுதி; என்மகன்**
**யாண்டுஉளன் ஆயினும் அறியேன் ஓடும்**
**புலி சேர்ந்து போகிய கல்அளை போல**
**ஈன்ற வயிறோ இதுவே ;**
**தோன்றுவன் மாதே போர்க்களத் தானே"**

**(புறம்- 86)**

வாகைத்திணை பற்றிய இப்பாடலில் சிறிய வீட்டின் நல்ல தூணைப் பற்றிக் கொண்டு உன் மகன் எவ்விடத்து உள்ளான்? என்று வினவுகிறாய்; என்மகன் எவ்விடத்து உள்ளான் என்று அறியேன்; புலி தங்கிச் சென்ற குகையைப் போல அவனை பெற்ற வயிறு இதுவாம்; அவன் போர்க்களத்தில் தோன்றுவான்; அங்குப் போய்ப் பார் என்று கூறுவதன் மூலம் தன் மகனின் வீரத்தின் மேல் தாய் வைத்திருந்த நம்பிக்கையும், நாட்டைப் பாதுகாப்பதில் ஆண்மக்களை பெற்றெடுத்த பெண்களின் வீரத்தையும் அறிந்து கொள்ள முடிகிறது.

**விருந்தோம்பல்**

இல்லறம் காக்கும் இனியவளின் முதல் கடமை விருந்தோம்பல். விருந்தோம்பல் என்பது இல்லம் தேடிப் புதிதாக வருபவர்களை இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பதாகும். வீரமகளிர் சமூகத்தோடு இரண்டறக் கலந்து ஊரோடு பசித்திருந்தும், கிடைத்ததை ஊரோடு பகிர்ந்துண்டு, தம் மனையை நாடி வருவோரைப் பசித்துயர் நீக்கிய நிலையைப் புறநானூறு கூறுகின்றது. இதனை

**"ஒலிமென் கூந்தல் உண்ணுதல் அரிவை**
**நடுகல் கைதொழுது பரவும் ஓடியது**
**விருந்தெதிர் பெறுகதில் யானே"**

**(புறம்- 306)**

என்ற வரிகள் நாள்தோறும் விருந்து வருதல் வேண்டுமென நடுகல் வழிபாடு நிகழ்த்துவதை எடுத்துக்காட்டுகிறது. கோவலனைப் பிரிந்திருந்த

கண்ணகி தனக்கு நேர்ந்த இழப்புகளைக் கூறும்போது

**"விருந்தெதிர் கோடலும் இந்த என்னை"**

**(சிலம்பு)**

என்று பகருவதன் மூலம் 'விருந்தோம்பல் பண்பு" சமூகத்தில் இடம்பெற்றிருந்த உயரிய நிலையினை அறிய முடிகிறது.

**உடன்கட்டை மற்றும் கைம்மை நோன்பும்**

**"எளிய தாமே சிறு வெள் ளாமல்,**
**இளையம் ஆகத் தழையா யினவே,**
**பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுதுமறுத்து,**
**இன்னா வைகல் உண்ணும்,**
**அல்லிப் படுஉம் புல்லா யினவே"**

**(புறம்- 248)**

சிறுவயதில் இந்த அல்லியின் இலைகள் எனக்கு உடையாக உதவின. இப்பொழுது, பெரிய செல்வமுடைய என் கணவன் இறந்தால், காலம் தாழ்த்தித் துன்பத்தோடு, நாளும் உண்ணும் புல்லரிசியாக இந்த அல்லி பயன்படுகிறது என்கிறாள் புறநானூற்று பெண்ணொருத்தி. மேலும், **'உடன்கட்டை'** ஏறுதல் என்னும் பெருவழக்கம் சங்ககாலத்தில் இருந்தது என்பதை புறநானூற்று பாடல் 246 கூறுகிறது. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் இறந்துபட அவன் மனைவி இளம்வயதிலேயே விதவைக் கோலம் அடைகிறாள். அமைச்சர்கள் யாவரும் உடன்கட்டை ஏறுதல் வேண்டாமென வற்புறுத்த

**"பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்புஅற**
**வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை**
**நள்ளிரும் பொய்கையும் தீயும்ஓர் அற்றே"**

**(புறம்- 246)**

என்கிறாள். எல்லோரும் நெருங்குவதற்கு அச்சப்படும் இந்த ஈமத்தீ அரும்பே இல்லாமல் பொய்கையில் முழுவதும் பூத்திருக்கும் குளிர்ந்த தாமரை தடாகத்திற்று ஒப்பாகும் என கூறி தன்உயிரை மாய்க்கத் துணிந்தாள் மன்னனின் மனைவியாகிய கோப்பெரும் பெண்டு. இப்பாடல்கள் மூலம் கணவனை இழந்த பெண்கள் உயிரை காட்டிலும் கற்பே சிறப்புடையது என்ற எண்ணம் உடையவர்களாக விளங்கினர் என்கின்ற செய்தியினை நம்மால் உணரமுடிகின்றது.

**அறிவுப்பெட்டகம்**

**"ஆணுக்குப் பெண் இளைப்பில்லை"** என்ற பாரதியின் கூற்றினை அன்றே மெய்ப்பித்துக் காட்டியவர்கள் நம் சங்ககாலப் பெண்கள்.

**"அன்பு அறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு**
**இன்றியமை யாத மூன்று"**

**(குறள்- 682)**

என்னும் குறளுக்கு இலக்கணமாய் அறிவில் சிறப்புற்று விளங்கியவர்கள் சங்ககாலப் பெண்கள். அவற்றில் அதியமானின் உயிர்

நண்பரும் பெண்பால் புலவர்களில் தலை சிறந்தவருமான ஔவையாரின் அறிவுநுட்பம் இங்கு குறிப்பிடத்தகுந்ததாகும்.

**"இவ்வே பீலியணிந்து மாலை சூட்டி**
**கண்திரள் நோன்காழ் திருத்திஇ நெய் அணிந்து"**

**(புறம்- 682)**

என்ற பாடல் வரிகளில் அதியமானுக்காக தொண்டைமானிடம் தூது சென்ற ஔவை; உன்னுடைய படைக்கலங்கள் அனைத்தும் புதியதாக அழகுடன் மிளிர்கின்றன ஆனால் அதியமானின் படைக்கலங்கள் கூர்மலிங்கி, சிதைந்து துரும்பு எறியவையாக கொல்லன் படைக் களத்தில் கிடக்கிறது என்கிறார். இதன்மூலம் அதியமான் போர் தொழிலை நன்கு அறிந்தவன் என்றும், நீயோ போர் பற்றிய வாடையே அறியாதவன் என்ற செய்தியினையும் தொண்டைமானிடம் கூறி; அவனை புகழ்வது போல இகழ்ந்து பாடுகிறார். ஒரு பெரும் போரை நிறுத்திய ஔவையின் அறிவுக்கூர்மை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது எனலாம்.

**மனிதநேயம்**

குமணவள்ளலிடம் பெரும் செல்வம் பெற்றுவந்த பெருஞ்சித்திரனார் தன் மனைவியிடம் பொருளை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து மகிழுமாறு கூறுகிறார்.

**"இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது**
**வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்**
**எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே"**

**(புறம்- 163)**

மேற்கூறிய பாடல் மூலம் தலைவன் கொண்டுவந்த செல்வத்தை மனைவியிடம் கொடுத்து எல்லோர்க்கும் வாரி வழங்கச் சொல்வது அவளிடமிருந்த நம்பிக்கை, ஆளுமை மற்றும் மனிதநேயப் பண்பின் வெளிப்பாடு என்பது இங்கு புலனாகிறது.

**மனையறம் காக்கும் மான்பு**

இயற்கை வழிபாடுகளில் நம் முன்னோர்கள் அதிக நம்பிக்கை உடையவர்கள். இயற்கையோடு இணைந்த வாழ்வியலை மேற்கொண்ட இவர்கள் தங்களுக்கு நேரும் உடல்சார்ந்த நோய்களை காக்கும் இயற்கை மூலிகைகளைப் பற்றிய அறிவினைப் பெற்றிருந்தனர். அதிலும் வீட்டினைப் பேணும் பெண்களும் கூட இயற்கை மூலிகைகளைக் கையாளும் திறனைப் பெற்றிருந்தனர் என்பதை கீழ்காணும் புறநானூற்றுப் பாடல் வரிகள் விளக்குகிறது.

**"வேப்புசினை ஒடிப்பவும் காஞ்சி பாடவும்**
**நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்**
**எல்லா மனையும் கல்லென் றவ்வே"**

போருக்குச் சென்று வென்று திரும்பும் போது **'வேப்ப மரத்தின் கிளைகளை ஒடித்து வாயில்**

**கட்டியும், வெண்கடுகைப் புகைத்தும் வீட்டினுள் ஆண்களை அழைத்தனர்'.** வேம்பும் வெண்கடுகு புகையும் கிருமிநாசினி என்ற அறிவியல் நாம் அனைவரும் அறிந்ததே. நீண்ட நாட்கள் படைக்களத்தில் புழங்கியதாலும், விழுப்புண் பட்டவர்கள், மாண்டவர்கள் என அனைத்து நிகழ்வுகளிலும் ஆண்கள் பங்கெடுத்தமையால் நோய் தொற்று ஏற்படுவது இயல்பு. அத்தகைய சமயங்களில் நோய் வீட்டின் உள்ளே வராமல் இருப்பதற்காகவும், வீட்டிற்கு வரும் வீரர்களுக்கு நோய் தொற்று இருந்தால் அவற்றைப் போக்குவிதமாக இச்செயல்களை இல்லத்தரசிகள் செய்தனர் என்பதை காணமுடிகிறது. இதன்மூலம் வீட்டினை பேணிக் காக்கும் மனையறத்தை சங்ககால மகளிர் பெற்றிருந்தனர் என்பதை நன்கு உணரமுடிகின்றது.

**முடிவுரை**

சங்ககாலத்தில் பெண்கள் வீரமிக்கவர்களாக மட்டுமின்றி, வீரத்தாயாக, இல்லறம் காக்கும் இல்லோள் செம்மலாக, அறிவுப்பெட்டகமாக, ஆளுமை மிக்கவர்களாக, அன்பிற்கினியவர்களாக என பல்வேறு பரிணாமங்களை பெற்றவர்களாக விளங்கினார்கள் என்பதை புறநானூற்று இலக்கியம் வாயிலாக அறியமுடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**

1. புறநானூறு – புலவர். இரா.இளங்குமரனார் உரை.
2. புறநானூறு மூலமும் உரையும் – புலியூர் கேசிகன் உரை.
3. தொல்காப்பியம் –பொருளதிகாரம் – திருஞானசம்பந்தம் உரை.

# சு.சமுத்திரம் புதினங்களில் நாட்டுப்புறப் பாடல்கள் வெளிப்படுத்தும் மக்களின் வாழ்வியல் கூறுகள்

**ம. ஹரிகிருஷ்ணன்**
முனைவர் பட்ட ஆய்வாளர் *(முழுநேரம்)*
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி
பெரியார் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது, சேலம்

**முனைவர் அ. திலகவதி**
இணைப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி
பெரியார் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது, சேலம்

## முன்னுரை

நாட்டுப்புற மக்களால் பாடப்படும் பாடல்கள் நாட்டுப்புறப்பாடல்களாகும். நாட்டுப்புறப்பாடல்கள் நாட்டுப்புற மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தவை. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நிகழ்வுகள் நாட்டுப்புறப் பாடல்களின் பொருண்மைகளாகின்றன. மண்ணின் மைந்தர் தம் மனக்கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உயிர்பெற்று உலா வரும் உள்ளத்தின் உண்மையான வெளிப்பாடுகளே நாட்டுப்புறப்பாடல்கள் என்பர். அவ்வகையில் சு.சமுத்திரம் அவர்களின், ஊருக்குள் ஒரு புரட்சி, இல்லம் தோறும் இதயங்கள், சாமியாடிகள், வாடாமல்லி ஆகிய புதினங்களில், இடம்பெற்றுள்ள நாட்டுப்புறப் பாடல்களின்வழி மக்களின் வாழ்வியல் கூறுகளை இனம்கண்டு, அவற்றை வெளிக்கொணர்ந்திடும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்**

நாட்டுப்புறப்பாடல், உணர்வு, ஒப்பாரி, சீர்திருத்தம், இல்லம்தோறும் இதயங்கள், ஊருக்குள் ஒரு புரட்சி, வாடாமல்லி, சாமியாடிகள்.

## நாட்டுப்புறப்பாடலின் வேறு பெயர்கள்

**“நாட்டுப்பாடல், நாடோடிப்பாடல், நாட்டார் பாடல், வாய்மொழிப் பாடல், பாமரர் பாடல், பரம்பரைப்பாடல், கிராமியப்பாடல், கல்லாதார் பாடல், மக்கள் பாடல், ஏட்டில் எழுதாக் கவிதை, மலையருவி, காட்டுப்பூக்கள், வனமலர், காற்றிலே மிதந்த கவிதை”**[1] என்றெல்லாம்

நாட்டுப்புறப் பாடலைப் பலவாறு அழைக்கின்றனர்.

ஒவ்வொரு மனிதனின் பிறப்பிலிருந்து இறப்பு வரையுள்ள காலகட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை நாட்டுப்புறப்பாடல்கள் ஆகும். இப்பாடல்கள் மனித மனத்தின் உள்ளார்ந்த ஓசைகளை வெளிப்படுத்துபவை. நேரடியாகவும், இலைமறை காயாகவும் வாழ்வியல் முறைகளை அடையாளப்படுத்துபவை.

மனித உள்ளத்தின் ஆழத்தையும் அங்கே எதிரொலிக்கும் பல்வேறு விதமான இதய ஒலிகளையும், இன்ப துன்பங்களையும், ஆசாபாசங்களையும், வாழ்க்கைப் போராட்டங்களையும், பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் முதலிய பல கூறுகளையும் உள்ளடக்கிக் கொண்டு நாட்டு நடப்பினை மிகவும் எதார்த்தமாக உண்மையான முறையில் படம்பிடித்துக் காட்டக் கூடியவை நாட்டுப் புறப்பாடல்கள் ஆகும்.

## பாடல்களின் வகைப்பாடு

சு.சமுத்திரம் அவர்களின் புதினத்தில் இடம்பெற்றுள்ள நாட்டுப்புறப் பாடல்களை, கீழ்க்குறிக்கப்பெறும் வகைமைகளில் பாகுபடுத்தி ஆய இயல்கிறது.

6. உணர்வுப் பாடல்கள்
7. ஒப்பாரிப் பாடல்கள்
8. சீர்த்திருத்தப் பாடல்கள்

## 1. உணர்வுப்பாடல்கள்

தொல்காப்பியர், ஒவ்வொரு மனித மனத்திலும் எண்வகையான உணர்வுகளின் அடிப்படையில் முப்பத்திரண்டு உணர்வுகள் செயலாக்கம் பெறுகின்றன என்கிறார்.

இவ்வுணர்வினை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்று வரையறுக்கின்றார். இவ்வுணர்வுகள் அவரவர் எண்ண ஓட்டம், சூழல் அடிப்படையில் இன்பத்தையோ அல்லது துன்பத்தையோ தருகின்றன. மகிழ்வினால் உருவாகும் நிகழ்வுகளின் அடிப்படையில் உருவாகும் பாடல்களை விடவும், துயரத்தினால் உருவாகும் நிகழ்வுகளின் அடிப்படையில் வெளிப்படும் பாடல்களே மக்களின் வாழ்வியலை மிகவும் எதார்த்தமாகப் பிரதிபலிக்கின்றன. அவ்வகையில்,

### ஊருக்குள் ஒரு புரட்சி

இப்புதினத்தின் கதைத் தலைவனான ஆண்டியப்பனை வளர்த்தவர் அவனுடைய தாய்மாமா அடைக்கலசாமி. அவ்வூரில் வாழும் பண்ணையாருக்கும், ஆண்டியப் பனுக்கும் பிரச்சினை உருவாகிறது. இந்நிலையில் ஆண்டியப்பனது மாட்டைப் பிடித்து வருமாறு பண்ணையார் அடைக்கலசாமிக்கு உத்தரவிடுகிறார். இருதலைக்கொள்ளியான நிலைக்குத் தள்ளப்படுகிறார் அடைக்கலசாமி. மாட்டைப் பிடித்து பண்ணையாரிடம் ஒப்படைக்கும் முயற்சியில் இறங்கிய அடைக்கலசாமியை, வெட்டுவதற்காக அரிவாளை எடுத்து ஓடுகிறான் ஆண்டியப்பன். அப்போது, நோய் வாய்ப்பட்டு, படுத்த நிலையில் எழமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் ஆண்டியப்பனின் தங்கை மீனாட்சி, உள்ளத்து உணர்வுகளை ஆற்றாமை மீதுற வெளிப்படுத்துகிறாள், அண்ணன் -

தங்கையின் வாழ்வைப் படம் பிடிக்கிறது இப்பாடல்,

**"ஆயிரம் செய்தாலும் அவரு**
**நம்ம தாய்மாமா அண்ணாச்சி**
**அய்யாவுக்கு அய்யாவா**
**நம்ம வளர்த்தவரு அண்ணாச்சி**
**தோளுல தூக்கி வச்சு**
**தூங்க வச்சவரு அண்ணாச்சி**
**அவர வெட்டுமுன்ன**
**என்ன வெட்டு அண்ணாச்சி"**[2]

எனும் இப்பாடலடிகள், தங்கை மகன், மகள் மீது தாய்மாமன் வைத்திருக்கும் அன்பினையும், பாசத்தினையும் உணர்ந்து கொள்ள முடிகிறது. பெற்ற பிள்ளைகளையும் சுமையாகக் கருதும் சில பெற்றோர்களுக்கு நடுவில் பெற்றவனாய் நின்ற அடைக்கலசாமி உண்மையில் அடைக்கலம் தந்து சாமியாக வாழ்கின்றார் மீனாட்சியின் மனத்தில் என்பதை இப்பாடல் தெளிவுபடுத்துகிறது.

**வாடாமல்லி**

கூத்தாண்டவர் விழாவில் தங்கள் கணவனான அரவானின் தலை வெட்டுபட்டுக் கீழே விழும்போது பாடும் பாடலால் திருநங்கைகளின் உள்ளத்து உணர்வுகளையும், மன வலிகளையும், வாழ்வியல் அவலத்தையும் அறிய முடிகிறது. உடம்பில் பட்ட சூடுகளையும், மனத்தில் பட்ட வடுக்களையும் நினைந்து நினைந்து அழுகின்றனர். அவர்களில் ஒருத்தி, ஆற்றாமை மீதுற,

**"காகிதப் பூவுன்னு கண்மூடிப்**
**போனீரோ – என் ராசாவே**
**வாடாமல்லின்னு பேசாமல்**
**போனீரோ நானும்**
**அப்பனுக்கு வேப்பங்காய்**
**அண்ணனுக்கு எட்டிக்காய்**
**ஊருக்கு திருஷ்டிக்காய்**
**ஒனக்குக்கூட ஊமத்தங்காய்"**[3] எனவும்,

**"அப்பனுக்கு வேப்பங்காய்**
**அண்ணனுக்கு எட்டிக்காய்**
**தமக்கைக்கு விஷக்காய்**
**தங்கைக்கோ சுண்டைக்காய்"**[4]

எனவும் பாடலை மாற்றிப் பாடி தன் மன உணர்வினை வெளிப்படுத்துகிறாள். இதே புதினத்தில் கதைத் தலைவன் திருநங்கை சுயம்பு எனும் மேகலை அவள் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளை எதார்த்தமாகப் பாடுவதையும் காணமுடிகிறது.

**"செடியாய் முளைச்சிருந்தால்**
**பூவாய் மலர்ந்திருப்பேன்**
**கொடியாய் வளர்ந்திருந்தால்**
**கொம்புலே படர்ந்திருப்பேன்**
**நதியாய்ப் பிறந்திருந்தால்**
**கடலிலே சேர்ந்திருப்பேன்**
**நண்டாய்ப் பிறந்தாலும்**
**வளையிலே வாழ்ந்திருப்பேன்**
**இரண்டாய்ப் பிறந்ததாலே**
**துண்டுபட்டு நிக்கேனே!**
**சூடுபட்ட மனசும்**
**சொன்னாலும் கேட்கலியே**
**வீடு போக வேணுமுன்னு**
**வெறிபிடித்து துடிக்குதய்யோ"**[5]

எனும் இவ்வடிகள் திருநங்கைகள் படும் வேதனைகளைப் புலப்படுத்துகின்றன. நற்சடங்குகள் பலவற்றிற்கும் முன்னின்று வாழ்த்த அவர்களை வரவேற்கும் இச்சமுதாயம் அவர்களும் வாழ்க்கையில் துயரங்கள் நீங்கி இன்பமாக வாழ வழி செய்ய அனைவரும் முன்வரவேண்டும் எனும் வேண்டுகோளை

ஆசிரியர் விடுப்பதாக இப்பாடல் வலியுறுத்துவதை அறியமுடிகிறது.

### சாமியாடிகள்

கதைத்தலைவி கோலவடிவை சினிமாவில் நடிக்கச் சொல்லி 'அலங்காரி' என்பவள் கூறுகிறாள். இச்செய்தி கோலவடிவின் தாயின் செவிக்குச் செல்ல, அலங்காரியை வன்சொற்களால் திட்டுகிறாள். அதைக் கேட்டவள் மனம் பேதலித்தவளாய் இறைவனை நோக்கி,

> **"தூக்கி வைக்கும் கால்களுக்கு சுடலைக்கு**
> **துத்திப்பூவு சல்லடமாம்**
> **எடுத்து வைக்கும் கால்களுக்கு சுடலைக்கு**
> **எருக்கலம்பூ சல்லடமாம்**
> **சல்லடமும் குல்லாயுமாய் சுடலையே**
> **சங்கடத்தை போக்க வாரும்"[6]**

என்று பாடுகிறாள். இதன் வழி அலங்காரி தன் துயரத்தைக் களைக்க இறைவன் வர வேண்டும் என வேதனையுடன் பாடி அழுவதைக் காணமுடிகிறது.

### இல்லம் தோறும் இதயங்கள்

கதைத்தலைவி மணிமேகலை, தன் தந்தைக்கு இரண்டு ரூபாய் கொடுத்து மாத்திரை வாங்கிக்கொடுக்கவும் யோசிக்கும் சகோதரர்களை நினைத்து வேதனையடைகிறாள். இதனைக் கண்ட 'கூத்து கோவிந்தன்' அவளுடைய மன உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில்,

> **"அய்யாவே அய்யாவே அழகான அய்யாவே – ஒமக்கு**
> **மருந்து கொடுக்காமல் மாளடித்த பாவியில்ல**
> **பொற்காசு போமென்று உம்மை போகவைத்த பாவியல்ல**
> **முடங்கிக் கிடந்த ஒம்மை மூலையிலே சாத்தவில்லை**
> **அடங்கிக்கிடந்த ஒம்மை அடுக்களையில் வைக்கவில்லை**
> **விடமுண்(ட) நீலகண்டன் விடையேறி ஈஸ்வரனாம்**
> **அசந்து படுத்த அந்த அருணாசலம் போல – நீர்**
> **அசந்து படுக்கையிலே சுமந்து நின்ற மகளல்லவா"[7]**

என்று பாடுகின்றான். இப்பாடலின் மூலம் ஆசிரியர், தந்தைக்குப் பிள்ளைகள் செய்ய வேண்டிய கடமைகளை மறந்து வாழும் பிள்ளைகளின் மனோநிலையை வெளிப்படுத்துவதாக கட்டமைத்திருக்கிறார்.

## 2. ஒப்பாரிப் பாடல்கள்

இறந்தவர்களை நினைத்துப் பாடும் பாடல் ஒப்பாரி. இறந்தவருக்கும். தனக்குமான உறவைப் பாடுவர். வாழ்க்கையின் முன்னுரை தாலாட்டு எனில் முடிவுரை ஒப்பாரி.

இதனை, பிலாக்கணம், பிணக்கானம், கையறுநிலை, புலம்பல், இரங்கற்பா, சாவுப்பாட்டு, இழவுப்பாட்டு, அழுகைப்பாட்டு எனும் பலப் பெயர்களில் வழங்குகின்றனர்.

### ஊருக்குள் ஒரு புரட்சி

கதைத் தலைவி தங்கம்மா. அதே ஊரைச் சேர்ந்த ஆண்டியப்பனுடன் உடன்போக்கு மேற்கொண்டாள் என்று சிலர் ஊருக்குள் வதந்தியைப்

பரப்புகின்றனர். பிள்ளை குலமழித்தால் பெத்தவன் என்ன செய்வானோ அதையே அக்கிழவரும் செய்து தன்மானம் காக்கின்றார். செய்யாத தவறுக்கு தண்டனை தந்து விட்டுச் சென்று விட்ட தன் தந்தையையும், அவருடைய தன்மானத்தையும் நினைத்து தங்கம்மாள் ஒப்பாரியிடுகிறாள்.

**"அய்யாவே அய்யாவே ஆசையுள்ள**

**அய்யாவே – ஒம்ம**

**கொல்லாமல் கொன்னுட்டேனே**

**கொலை பண்ணாமப் பண்ணிட்டனே – நான்**

**இல்லாமல் போயிட்டேனே – நீரு**

**எங்கேயோ போயிட்டீரே**

**என்னையும் கூட்டிப் போவும்**

**இரக்கமுள்ள அய்யாவே"[8]**

என்று பாடுகிறாள். நடப்பியல் காலகட்டத்தில் பிள்ளைகளின் உடன்போக்கிற்கு பெற்றோர் உயிரையும் விடும் மனநிலை அறுபது வயது கிழவரிடத்தும் இருக்கின்றது என்பதை ஆசிரியர் இதன்மூலம் வெளிப்படுத்துகிறார்

### 3. சீர்த்திருத்தப் பாடல்கள்

'திருத்தம்' என்பது சரிசெய்வது. 'சீர்த்திருந்தம்' என்பது அனைத்தையும் சமநிலையில் சரிசெய்வது. மனித இனத்தில் மட்டுமே சாதி, மத, இன வேறுபாட்டில் தன்னைத் தானே அழித்துக் கொண்டும், ஏமாற்றியும் வாழ்ந்து வருகின்றனர். சிலரின் சுயநலத்திற்காக பலவாறு பகுக்கப்பட்டும், பிரிக்கப்பட்டும் முற்று பெறாத தொடர்கதையாக சாதி நீண்டு செல்கிறது. இதை சரிப்படுத்தும் நோக்கில் சமூக அக்கறையுடன் **'ஊருக்குள் ஒரு புரட்சி'** எனும் புதினத்தில் சீர்த்திருத்தப் பாடல் ஒன்றைச் சிறுவர். சிறுமியர், பெரியோர் என அனைவரும் முழங்குவதாக ஆசிரியர் படைத்திருப்பதைக் காணமுடிகிறது.

**"புதிய ஜாதி புதிய ஜாதி**

**புதிய ஜாதி பிறக்குது**

**புன்மை கொன்று நன்மை ஆக்க**

**புதிய ஜாதி பிறக்குது!**

**சர்வஜாதி செத்துமே**

**சமதர்ம ஜாதி பிறக்குது! (புதிய)**

**பாட்டாளி ஜாதி பிறக்குது!**

**பாட்டாளி ஜாதி பிறக்குது! (புதிய)"[9]**

எனும் இவ்வீர முழக்கம் சாதி எனும் மூட்டத்தைத் தகர்த்தெரியும் சூரியனாக இப்பாடல் விளங்குவதை அறிய முடிகிறது. ஏழை - பணக்காரன் என்னும் வர்க்கத்தின் அடிப்படையிலேயே ஜாதியில் வாழ்பவரின் நிலை உள்ளது என்பதை இப்பாடல் உள்ளுறையாகக் கூறுகிறது. ஏழ்மையான நிலையில் வாழும் உயர்ந்த, தாழ்ந்த வகுப்பினரும் ; பணக்காரர்களாக வாழும் உயர்ந்த, தாழ்ந்த வகுப்பினரும் அவரவர் சமூகத்தில் பிளவுபட்டு இருப்பதை இப்பாடல் மூலம் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

### இல்லந்தோறும் இதயங்கள்

சமூகத்தில் மனிதன் உயர்ந்த மாண்புகளை இழந்து கொண்டிருக்கின்றான். அன்பு, மனிதநேயம், கருணை, உதவி முதலிய உயரிய விழுமியங்கள் தகர்த்தெறியப்பட்டு வருகின்றது. இந்த அவலநிலை மாற வேண்டும். அனைவர் உள்ளத்திலும் மானுடம் பெறுக வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் 'இல்லம்

தோறும் இதயங்கள்' எனும் புதினத்தில் கிருத்தவர்களின் பேரின்ப விழாவில் ஒருவர்,

**"இல்லங்கள் யாவிலும்**
**உள்ளங்கள் உண்டல்லோ**
**உள்ளங்கள் உண்டல்லோ**
**காடு மலைகளிலும் – பல**
**வீடுகள் சிதறி உண்டே**
**தோட்டத்தில் உண்டு, தீவினில் உண்டு.**
**செல்வதுதான் யாரோ**
**சொல்வதுதான் யாரோ (இல்லங்கள்)**

**பிள்ளையைக் கொடுப்பாயா – இல்லை**
**உன்னையே தருவாயா**
**உன்னையே தருவாயா**
**உன் ஜெபம் தாங்குமோ**
**உன் பொருள் வருமோ**
**உன்னதர் கேட்கிறாரே உன்னிடம்**
**உன்னதர் கேட்கிறாரே"**[10]

என்று இல்லம் தோறும் இதயங்கள் இருக்க இந்த மானுடம் எங்கே செல்கிறது? எனும் வினாவை எழுப்புவதாக இப்பாடலைப் பாடி சமூகத்தில் புரையோடிக்கிடக்கும் தவறுகளைச் சுட்டிக் காண்பிக்கும் வகையில் இப்பாடல் அமைந்துள்ளமையைக் காணமுடிகிறது.

**தொகுப்புரை**

'நாட்டுப்புறப் பாடல்கள்' என்பவை காலத்தின் கண்ணாடியாக விளங்குபவை. சு.சமுத்திரம் அவர்களுடைய நாட்டுப் புறப்பாடல்களில் உணர்வுப் பாடல்கள் மனதின் உணர்வுகளையும், மனப் பிளவுகளையும், ரணங்களையும் வெளிப்படுத்துவனவாக விளங்குகின்றன. அதேபோல ஒப்பாரிப் பாடல்கள் களவுவாழ்க்கை மேற்கொண்டு உடன் போக்கு மேற்கொள்வது பெற்றோருக்கு எமனாகவும் அமையும் என்பதை அறிவுறுத்துவதாக அமைந்துள்ளது.

சீர்திருத்தப் பாடல்கள் 'ஒன்றே குலம்' எனும் மந்திரத்தை உச்சரிக்கும் வகையிலும், மானுட மாண்புகளை வளர்க்கும் நோக்கிலும் அமைந்துள்ளது. நாட்டுப்புறப்பாடல்கள் இம்மண்ணில் வாழும் மனித குலத்தின் எண்ண வீச்சுகளை வெளிப்படுத்தி சமூகத்தை நெறிப்படுத்தக் கூடியன என்பதை இதன்மூலம் அறியமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. சு.சக்திவேல், நாட்டுப்புறப்பாடல்கள், ப.28
2. சு.சமுத்திரம், ஊருக்குள் ஒரு புரட்சி,ப.32
3. சு.சமுத்திரம், வாடாமாமல்லி, ப.271
4. மேலது,ப.273
5. மேலது,ப.272
6. சு.சமுத்திரம், சாமியாடிகள்ப.54
7. சு.சமுத்திரம், இல்லம் தோறும் இதயங்கள்,பக்.141-142
8. சு.சமுத்திரம், ஊருக்குள் ஒரு புரட்சி,ப.75
9. மேலது,ப.240
10. சு.சமுத்திரம், இல்லம் தோறும் இதயங்கள்,ப.184

**துணைநூற் பட்டியல்**

1. டாக்டர் சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை – 600108.

2. சு.சமுத்திரம், ஊருக்குள் ஒரு புரட்சி, திருவரசு புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை – 600017.
3. சு.சமுத்திரம், வாடாமல்லி, பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 600014.
4. சு.சமுத்திரம், சாமியாடிகள், திருவரசு புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை – 600017.
5. சு.சமுத்திரம், இல்லந்தோறும் இதயங்கள், கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை – 600017.

# ஆற்றுப்படை இலக்கியங்களில் விருந்தோம்பல்

**தே. இன்பென்ட் ஜெபர்சன் ஜீசஸ்**

*உதவிப் பேராசியர்*

*தேனி கம்மவார் சங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி*

*கொடுவிலார்பட்டி, தேனி மாவட்டம்*

**முன்னுரை**

சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள், புலவர்கள் அறிவுச் சமூகமாக வாழ்ந்தனர். தான் பெற்ற கலையை, அறிவை, தான் பெற்ற இன்பத்தை தான் மட்டும் பயன்படுத்தாமல் பிறரும் பெறவேண்டும் என்ற நோக்கில் வழிவகை செய்தார்கள். கலைகள்வளர்ந்தோங்கிய நிலையில் இருந்தாலும் கலைஞர்களின் வாழ்வு வளமையானதாக இல்லை. ஒருவேளை சோற்றுக்கே அல்லற்படும் நிலையில் தான் கலைஞர்களின் வாழ்வு இருந்தது. அந்த வறுமையிலும் கலைஞர்கள் தங்களின் நிலைகளிலிருந்து நெறிபிறழாமல் வாழ்ந்து வந்தனர். இவ்வாறாக ஆற்றுப்படை இலக்கியத்தில்; கலைஞர்களின் நிலை குறித்தும் அவர்களின் வாழ்க்கை முறை குறித்தும் ஆராயப்படுகின்றன.

**ஆற்றுப்படை – விளக்கம்**

ஆற்றுப்படை என்னும் இலக்கிய வகை தமிழில் உள்ள தனி இலக்கிய வடிவமாகும். கூத்தர், பொருநர், பாணர், விறலியர் இவர்களில் பரிசில் பெற்றுத் திரும்பும் ஒருவர் வறுமையால் வருந்தும் மற்றொருவரைப் பார்த்து, நீயும், உன் குடும்பமும் அடைந்த கொடிய வறுமை தீர்த்து, நீயும் உன் சுற்றத்தாரும் நன்றாக வாழ்வதற்கு ஒரு வழி சொல்வேன், இன்ன ஊரிலுள்ள, இன்னாரிடம் சென்று அவனைப் பாடுக, அவன் பரிசில் தருவன், அப்பரிசைப் பெற்று மகிழ்க, அவ்வாறே நானும் அரசனை அகமகிழ்ந்ததால் தான் அப்பரிசை பெற்றேன் என்று கலைஞன்.; கலைஞனை ஆற்றுப்படுத்தும் விதமாக அமைவதே ஆற்றுப்படை இலக்கியம் ஆகும்.

**ஆறு – வழி, படை – எடுத்தல், அதாவது வழிபடுத்துதல்**

**ஆற்றுப்ப படையின் இலக்கணம் குறித்து நிதால் காப்பியர்,**

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்ரு**
**ஆற்றிடைக் காட்சி யுறடித் தோன்றிப் பெற்ற**
**பெருவளம் பெறார்க் கறிவுறீஇச்**
**சென்றி பய னெதிரச் சொன்ன பக்கமும்**
**- தொல் - புறத்திணை (36)**

இவ்வாறாக தொல்காப்பியர் அவர்கள் ஆற்றிப்படையில்; கலைஞர்களின் வாழ்வியலை கூறுகின்றார்.

**கலைஞன்**

கலை எவ்வளவு சிறந்ததாயினும் அது தோன்றுகின்ற விதம் மனிதனின் சக்தியில் அடங்கியுள்ளது. அந்த கலையைப் படைக்கும் சக்தி இயற்கையாக அமைவதாகும். அதனை எவரும் கற்றுக்கொடுக்க முடியாது. கலைஞன் மனத்தில் மறைந்து கிடக்கும் இச்சக்தி வெளிவரும்போது கலை உண்டாகிறது. அக்கலையின் வடிவமும், உட்பொருளும் கலைஞன் மனத்தின் ஆழத்திலிருந்தே வெளிப்படுகின்றன. கலைஞனின் மனமானது மற்றவர்களைக் காட்டிலும் வேறுபட்டது. ஒரு செயலையோ, பொருளையோ காணும்போது அவன் மற்றவரிடமிருந்து வேறுபட்டு உணர்கிறான். "கலைஞன் எதனை அழகு என்று பற்றுகிறானோ அது உண்மைப் பொருளாகவே இருக்கும்" என்கிறார் கீட்ஸ்.

**ஆற்றுப்படை இலக்கியத்தில் கலைஞர்கள்**

மன்னர்கள் புலவர்களைப் பெருமையுடன் போற்றினர். அரசியலில் வகுக்கும் எந்த திட்டங்களாக இருந்தாலும் புலவர்களின் கருத்துக்களையும், அறிவுரைகளையும் ஏற்றனர். தனது ஆட்சி சிறப்பினைப் புலவர்கள் புகழ்ந்து பாடுதல். பெறிதற்குரிய பெரும் பேறனக் கருதினர். கல்வி பொதுவுடைமையாக இருந்ததால் புலவர்களும், ஒரு குறிப்பிட்ட இனத்தவராக இல்லாமல் சமூகத்தில் காணப்பட்ட பல்வேறு இனத்தைச் சார்ந்தவராக இருந்தனர்.

ஆற்றுப்படை இலக்கியங்கள், கலைஞர்கள், வள்ளல்களைப் புகழ்ந்துதுப்பாடி, பெருஞ்செல்வத்தைப் பரிசாகப் பெற்று தங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டனர் கலைஞர்கள்.

ஆற்றுப்படை இலக்கியங்களில் காணப்படும் கலைஞர்கள் ஒவ்வொரு திறமைக்கும் ஒவ்வொரு பெயரில் அழைக்கப்பட்டனர்.

**பாணர், பாடினி, கூத்தர், விறலியர், பொருநர்** என்று இவ்வாறு அழைக்கப்படுகின்றனர் என்று ஆற்றுப்படை கூறுகிறது.

**பாணர்**

பாணர் இசைக்கலையில் சிறந்து விளங்கிய வல்லுநர்களே பாணர் என்று அழைப்பர். பலநரம்புகளை உடைய பெரிய யாழை இசைத்துப் பாடுபவர் 'பெரும்பாணர்' எனப்பட்டனர். சீறியாழை இசைத்துப் பாடுபவர் 'சிறியபாணர்' எப்பட்டனர். இப்பாணர்கள் வள்ளல்களை நாடிச்சென்று பாடி பரிசில் பெற்றனர். வறுமை அவனை வாட்டும்போது, அவன் பெற்ற கல்வியை இகழ்ந்துப் பேசுவதாய், பெரும்பாணாற்றுப்படை,

> **"சல்லென் சுற்றமொரு கால் கிளர்ந்து திரிதரும்**
> **புல்லென் யாக்கைப் பலவுவாய்ப்ப பாணர்"**
> - (பெரும்)

என்று குறிப்பிடுகிறது.

**பாடினி**

இசையில் சிறந்து விளங்கிய மகளிரை பாடினி என்று அழைக்கும் வழக்கம் பொருநராற்றுப் படையில் காணப்படுகிறது. கரிகாலனின் பொருநராற்ுறுப்படையில் பாடினியின் தோற்றம் விளக்கப்படுகிறது. "அறல் போல கூந்தல், பறைபோல் திருநுதல், தொலைவில் புருவத்து, கொழுங்கடை மழைக்கண் பெடையில் உருவின் பொருந்ற்கு பாடினி"

**"இலவதழ் புரையும் இன்மொழித்**
**துவர்பாய்ப்**
**பழவுறும் முத்தில் பழிதீர் வெண்பில்**
**பெடைமயில் உருவின் பெருந்தகு பாடினி"**

என்று பாடினி வருணணை பொருநராற்றுப் படை கூறுகின்றது.

**விறலியர்**

விறலியர் என்பவள் நடனக்கலையில் சிறந்த தேர்ச்சிப் பெற்றவளாக இருப்பாள். அவளும் பொருநருடனும், பாணருடனும், கூத்தருடனும் சென்று தன் கலைத்திறனை அரசனிடமும், வள்ளல்கள் மத்தியில் ஆடிக்காட்டிப் பரிசில் பெறுவது விறலியரின் வழக்கமாக இருந்தது. இவர்களை நடனமகளிர், விறலி, கூத்தி, ஆடுமகள், ஆடுகளமகள் என்றெல்லாம் பிற பெயர்களில் அழைத்தனர்.

விறலியரின் அழகையும், நடன அசைவுகளையம் சிறுபனாற்றுப் படை விளக்குகிறது.

**"ஐதுவீழ் இகுவயல் அழகுகொண்டு அருளி**
**நெய்களிந்து இருளிய கதுப்பின் கதுப்பு என"**
**மடமான் நோக்கின் வாள்நுதல் விறலியர்"**

என்று விறலியரின் வருணையை சிறுபானாற்றுப்படை விளக்குகிறது.

**பொருநர்**

பொருநர் என்பவர் இசைக் கருவிகளை இசைத்துப் பாடினார்கள். திருவிழாக்கள் நடக்கும் ஊர்களில் தங்கள் இசைத்திறனைக் காட்டி மக்களை மகிழ்விப்பார்கள். திருவிழா முடிந்தவுடன் தங்கள் ஊர்களுக்குச் செல்வது வழக்கமாக கொண்டிருந்தனர் பொருநர். ஏர்களம் பாடுபவர், போர்களம் பாடுபவர்களாக இருந்தனர்.

**"அறாஅ யாணர் அதன் தலைப் பேர் ஊர்**
**சாறு கழி வழிநாள் சோறுநசை உறாஅது**
**வேறுபுலம் முன்றிய விரகுஅறி பொருந'**

என்றும் பொருநராற்றுப் படை அடிகளால் அறியலாம்.

பொருநர் வள்ளல்களின் அரண்மனையில் வைகறையில் சென்று தங்கள் இணைப் பிறறையோ பிற இசைக் கருவிகளையோ இசைத்து வள்ளலின் புகழைப் பாடுதல் வழக்கமாகும். இவர்கள் இசைக் கலை குறித்த நூல்களைக் கற்றவர்களாக விளங்கினர்.

**அரசர் கலைஞர்களை பேணுகின்ற முறை**

தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களாக பார்க்கப்படுகின்ற சேர, சோழ, பாண்டியர் என்ற முடியுடை வேந்தர்களும், பாரி, காரி, அதியமான் போன்ற சிற்றரசர்களும் தம்மை நாடி வந்த இயற்றமிழில் வல்ல பாணரையும், நடகத்தமிழில் வலை கூத்தரையும் மலர்ந்த முகத்துடன் வரவேற்றனர். அருகிலிருந்து உணவு அளித்தனர். உயர்தரமான ஆடைகளை வழங்கினர். அரண்மனையிலேயே பல நாட்கள் இருந்து செய்தனர். இறுதியில் இசைக்கலைஞர்கள் வேண்டிய எல்லா பரிசிலை நல்கி பிரியாவிடை கொடுத்தனர்.

ஓய்மா நாட்டை ஆண்ட நல்லியக் கோடனது அரண்மனை. வாயில் பொருநருக்கும், பாணர்க்கும், கூத்தருக்கும், விறலியருக்கும், புலவருக்கும் தடையின்றி அரண்மனை திறந்துவைக்கப்பட்டு இருந்தது. அவர்கள் எந்த நேரத்திலும் மன்னனைக் காண வசதி அளிக்கப்பட்டு இருந்தது.

**பொருநர்க்கு ஆயினும் புலவர்க்கும் ஆயினும்**
**ஆடையா வாயில் அவன் அருங் கடைகுறுகி**
**- (சிறுபனாற்றுப்படை)**

என்ற அடிகள் விளங்குகின்றன.

நன்னன் பகைவரை வென்று அவரிடமிருந்து பெற்ற பேரணிகலன்களை புலவர், பாணர், கூத்தர் முதலியோர்க்கு வழங்கினான். மழைபோல பொன்னை வாரி வழங்கினான். பருவம் பொய்யாத மேகம் போல மேன்மேலும் குறையாமல் வாரி வழங்கினான். இதனை மலைபடுகடாம்,

**“தொலையா நல்லிசை உலகமொரு நிற்பிய**
**வரீயாது சுரக்கும் அவன் நாஸ்மகிழ் இருக்கையும்”**

என்றும் அடிகள் குறிப்பிடுகிறது.

**கலைஞர்களின் வறுமை நிலை**

பண்டையக் காலத்தில் கலைஞர்களாக கருதப்படுகின்ற பாணன், கூத்தன், பொருநன், விறலியர் போன்ற கலைஞர்கள் வறுமையின் கொடுமையில் சிக்கித் தவித்துள்ளனர். இவ்வறுமையின் துயரத்தால் பசி என்னும் கொடுமையான நோயினால் பாதிக்கப்பட்டள்ளனர். இந்நோயினை போக்கிய மருந்தாகவும், மருத்துவனாகவும் இருந்தவர்கள் அரசர்கள், வள்ளல்கள். சிறுபனாற்றுப் படையில் சிறிய யாழை வாசிக்கின்ற பாணன் வறுமையில் வாடியரி இலையில் அவன் மனைவியும் வறுமையில் வருந்துகின்றாள். சமைக்க உணவுப்பொருள் இல்லை, அதனால் அவள் குப்பைக் கீரையை தன் நகங்களால் கிள்ளினாள். வீட்டில் உப்பின்மையால் அதை உப்பின்றியே வேகவைத்தாள். அதை தாங்கள் உண்பதை வெளியார் பார்த்தால் இழிவாகக் கருதுவர் என்ற எண்ணித்தான் வீட்டுக்கதவை தாழிட்டாள். பின்பு தன் வீட்டாருடன் தானும் இருந்து உண்டாள் எனக் குறிப்பிடுகிறது சிறுபனாற்றுப்படை,

**வளைக்முக, கிளைமகள் உள்உதிர்க் குறைந்த**
**குப்பை வேலை உப்புஇலி எவந்ததை**
**மடவோர் காட்சி நாணி கடை அடைத்து**
**இரும்பேர் ஒக்கலொரு ஒருங்குஉடன் மிசையும்**

என்னும் அடிகளாய் பாணரின் வறுமையைக் காணலாம்.

**கலைஞர்களின் வாழ்வியல்**

இச்சமூகத்தில் அறிவுசார்ந்த சமூகமாக வாழ்ந்த புலவர்களின் வாழ்க்கை வளமையானதாக அமையவில்லை. வறுமையில் உழன்ற புலவர்கள், அரசர்களிடமும், வள்ளல்களிடமும் சென்று அவர்களின் கொடைத் தன்மையைப் பாராட்டி தம் சுற்றத்தார், மனைவி, மக்களின் துன்பத்தை எடுத்துரைத்து அதனை நீக்குமாறு பாடியுள்ளனர். பாணனும், அவன் மனைவி விறலியும் காடும், மலையும் கடந்துசென்று வள்ளல்களைக் கண்டு அவர்களைப் புகழ்ந்துபாட பாணன் இசைக்கருவிகளை இசைத்துப் பாட விறலி அதற்கேற்ப நடனமாடி வள்ளல்களிடமிருந்து பரிசில் பெற்று வாழ்க்கை நடத்தினர்.

கரிகாலன் தன்னைப் பாடிவந்த பொருநர்க்கு இழைபோன வழி இது என்று காணவியலாத நுண்மையுடைய வேலைப்பாடு நிறைந்த பாப்பின் தோலை ஒத்த ஆடையை நல்கினான் என பொருநராற்றுப்படை குறிப்பிடுகிறது. இதனை,

**நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்களிந்து**
**அரவுரி யள்ள அறுவை**
**மழையென மருளும் மகிழச்செய் மாடற்று**
**இழையணி வனப்பி னின்மை மகளிர்**

என்று பொருநருக்கு ஆடை கொடுத்த நிகழ்வைக் கூறுகிறது.

**'நெய் கனித்து இருளிய கதிப்பின்'**

என்று சிறுபணாற்றுப் படையில், விறலி தன் முன்கையில் தொடி அணிந்ததை கூறுகிறது.

நன்னனைக் காணச் சென்ற கூத்தருடன் இருந்த விறலியர் தாங்கள் அணிந்திருந்த அணிகலனின் தன்மையால் 'இலங்குவளை விறலியர்' என அழைக்கப்பட்டனர். இவ்விறலியர் தம் கைகளில் வளையல்களையும், தொடியையும் அணிந்திருந்தனர். இதனை,

'இலங்குவளை விறலியர் நிற்புறஞ் சுற்றக்'

என்று மலைபடுதடாம் கூறுகின்றது. இவ்வாறு இசைக் கலைஞரின் வாழ்வியல் காணப்பட்டது.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் என்பது நாட்டில் பரவலான பண்பாட்டின் கூறு என்றாலும் தமிழ் இனத்திற்கான தணித்த அடையாளமாக விளங்குகிறது. புதிதாக வருபவர்களையே விருநதினர் என்றுரைக்க வழி காட்டுகிறது தொல்காப்பியம்.

**"விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின்மேற்றே"**

**- தொல் - செய். 231**

விருந்து என்பது பதுமை என்ற பொருளையே முன்னிறுத்துகிறது. ஓம்புதல் என்பது போற்றுதலைக் குறிக்கிறது. ஆக, புதுமையைப் போற்றுதலே விருந்தோம்பல் என்ற பொருள் புரிதலைப் பண்டு இலக்கியங்கள் எடுத்துரைத்துள்ளன. ஊடலை அகற்ற, களவு, கற்பு, ஒழுக்கத்தில், வினைமுடித்து மீளல், செலவழுங்குவித்தல் எனப் பல்நிலைகளில் விருந்தோம்பல் நடைபெற்றதை அகப்புற இலக்கியங்கள் எடுத்துரைத்துள்ளன. ஆயினும், ஆற்றுப்படை இலக்கியங்கள் உணர்த்தும் விருந்தோம்பல் அறியாதவரைப் போற்றுதல் என்னும் பண்பினைத் தெற்றெனப் புலப்படுத்துகின்றது.

**சிறுபாணாற்றுப்படையில் விருந்தோம்பல்**

சீறிய யாழை இசைத்துப்பாடும் திறம் கொண்டவர்களையே சிறுபாணர் என்பர். இந்தப் பாணர்களை ஆற்றுப்படுத்தும் தன்மையையே சிறுபாணாற்றுப் படை எடுத்து விளம்புகிறது. நல்லியக்கோடனிடம் பரிசில் பெற்று மீளும் சிறுபாணன் ஒருவன் வழியில் வறுமையில் வாழும் பாணன் ஒருவனை வள்ளல நல்லியக்கோடன்பால் ஆற்றுப்படுத்துவதே இப்படை நூலாம்.

நல்லியக் கோடன் குறிஞ்சி நாட்டுத்தலைவன் அவனைக் காண வருபவர்கள் நெய்தல் நிலம், எயிற்பட்டினம், முல்லை நிலம், மருதநிலம் ஆகியவற்றைக் கடந்து செல்வதே நெறியாம். அவ்வாறு செல்லும்போது ஒவ்வொரு நிலத்தில் உள்ளவரும், அவர்களின் நிலத்திற்கு உரிய உணவு முறைகளாலே விருந்து உபசரணை செய்கின்றனர். எயினர் வாழும் ஊரைக் கடந்து செல்லுங்கால் இனிய புளிச்சோறினை ஆமானின் இறைச்சியுடன் பசியாற்றுவர் எயினர் பெண்கள் என்பதை,

**“எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு**
**தேமா மேனிச் சில்வளை ஆயமொடு**
**ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவீர்”**

**- சிறுபா. 175 – 177**

என்ற அடிகள் வழி விளக்குகின்றனர்.

கிடைக்கும் பொருளின்வழி சிறப்பாக விருந்தோம்பி விருந்தினரின் மனத்தை மகிழ்விக்கும் தமிழரின் மாண்பினை சிறுபாணாற்றுப்படை எடுத்து மொழி கின்றது. பாணர்கள் வறியநிலையில் இருந்தனர். ஆயினும், மற்றோர்கள் தூற்றாத வகையில் உப்பில்லா குப்பைக் கீரையை தன்சுற்றத்தோடு பகிர்ந்துண்ணும் மரபினைப் பெற்றிருந்ததை,

ஒல்குபசி உழந்த ஒழுங்குநுண் மருங்குல்
வளைக்கை, கிணைமகள் வள்உகிர் குறைத்த
**குப்பைவேலை உப்புஇலி வெந்ததை**
**மடவோர் காட்சி நாணி, கடைஅடைத்து,**
**இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்**
**அழிபசி வருத்தம் வீட.....**

**- சிறுபா. 135 – 1450**

என்ற அடிகள் விளக்கி நிற்கிறது. இத்தகு வறுமை நிலையிலிருந்து மீட்சிபெற நல்லியக்கோடனை நாடிச்சென்ற பாணர்களை ஆமுர் மக்கள் தங்கள் நிலத்தில் கிடைத்த வெண்சோற்றினை நண்டுக்கலவையுடன் உண்ணத் தருகின்ற காட்சியை,

**"வலம்பட நடக்கும் வலிபுணர் எருத்தின்**
**உரன் கெழு நோன் பகட்டு உழவர் தங்கை,**
**பிடிக்கை அன்ன பின்பை வீழ் சிறுபுறத்து,**
**தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப**
**அவைப்பு மாண்அரிசி அமலை வெண்சோறு,**
**கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுவீர்**

**(சிறுபா. 187 – 195)**

என்று படம் பிடித்துக் காட்டுகிறார். "மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழியே" என்று வாழும் மரபு தமிழனுடையது. மன்னர்கள் மக்களின் நலம்பாடிகள். அவர்கள் செழுமையுடன் வாழ்வதையே மன்னர்கள் விரும்புவர்.

**"படைகுடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும்**
**உடையனாம் அரசருள் ஏறு"**

**கு.எ. 381**

என்று வள்ளுவர் அரசனின் பண்பினை எடுத்துக் காட்டுகின்றார். எனவே, குடி ஒம்புதல் மன்னனின் தலையாய கடமையாம். இத்தகு மன்னன் வறியோராய் வந்துள்ள பாணர்களைப் புறந்தள்ளாது அவர்களைத் தன்னருகில் அமர்த்தி அவர்களுக்கு கலிங்கம் நல்கி, தேறலுடன் பல்வேறு சுவையுடைய உணவினை முன்னின்று உண்ணச்செய்த அழகிய நிலைப்பாட்டை,

**"பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்கி,**
**காளி யூட்டிய கவர்கணைத் தூணிப்**
**பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்**
**பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசல்**
**வாள்நிற விசும்பின் கோள்மீன் சூழ்ந்த**
**இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து**
**விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி,**
**ஆனா விருப்பின் தான்நின்று ஊட்டி"**

**- சிறுபா. 237 – 345**

என்று விளக்கி வரைகிறது". அரச குணம் என்பது தான் மட்டும் பதுக்கிக் கொண்டு உண்பது இல்லை. அனைவருக்கும் அளிப்பதுதான் ராஜகுணம். பலரோடு அமர்ந்து, சமமாக நடத்தி உணவை உண்ணும்போது தான் பரந்த உள்ளம் வெளிப்படுகிறது. உணவில் தான் ஒருவர் தன் பெருந்தன்மையைக் காட்டமுடியும். யாரெல்லாம் மற்றவர்களையும் சமமாக அமரவைத்துச் சாப்பிட வைக்கிறார்களோ அவர்கள் அரச குணம் கொண்டவர்களாகவே கருதப்படுவார்கள்" என்ற கூற்றும் இங்கு ஒப்புநோக்கத் தக்கதாய் இடம் பெறுகிறது.

**"நீசில மொழியா அளவை மாசில்**
**காம்பு சொலித்தன்ன அறுவை உடிஇ"**

**- சிறுபா. 285 – 286)**

எனக் கந்தலாடை அகற்றி சிறந்த ஆடையை வழங்கிய பண்பு விளக்கப்பட்டுள்ளது.

**பெரும்பாணாற்றுப்படையில் விருந்தோம்பல்**

தொண்டைமான் இளந்திரைனைச் சந்திக்கச் செல்லும் கடியலூர் உருத்திரங்கண்ணார் தாம் சந்திக்கும் விருந்தோம்பல் நிகழ்வினை சிறப்புற எடுத்து மொழிகின்றார். வளமையானோர் உடல் உறுதியுடன் இருக்க உரலில் அரிசியை இட்டு குத்தியெடுத்து உணவு சமைத்துப் பரிமாறிய செய்தியையும், புல்லரிசினைச் சோற்றினைக் கருவாட்டுன் தேக்கிலையில் வைத்தக் கொடுத்த நிகழ்வும் எழிலுற எடுத்துக்காட்டப்படுகிறது. சிறுகுடிலில் வாழும் இயற்றியார், விளிம்புகள் உடைந்த பானைகளிலும் புல்லரிசி இட்டு உணவு சமைத்தாலும் இன்முகத்துடன் மனமுவந்து விருந்தினை உபசரித்த பொக்கினை எடுத்துக் காட்டுகின்றது. பெரும்பாணாற்றுப்படை பெரிய யாழைக் கொண்டு இசைமீட்டும் செறிவு கொண்ட பாணர்கள் உள்ளம் மகிழுமாறு,

**"தெய்வ மடையின் தேக்கிலைக் குவை இறும்**
**பைதீர் கடும்பொடு பதம் மிகப் பெறுகுவீர்"**

**பெரும்பா. 104 – 105**

என்று கொடுத்தும்,

**உறை அமை தீம்தயிர் கலக்கி, நுரைதெரிந்து**
**புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇ....**
**மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்**
**இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப்பு அன்ன**
**பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவீர**

**- பெரும்பா. 467 – 470**

என மோர் விற்றதில் கிடைத்த நெல் கொண்டு சுற்றம் ஒம்பும் இடையர் மகள் தினைச்சோற்றைப் பாலுடன் பருகத் தருகின்ற பாங்கமைப் பண்பாடாம் விருந்தோம்பல் திறத்தைப் பெறும்பாணற்றுப்படை இங்ஙனம் எடுத்து மொழிகின்றது.

பெரும்பாணாற்றுப் படையில் பாணர்களுக்குக் கலிங்கம் நல்கிய காட்சியை,

**"அந்நிலை அணுகல் வேண்டி நின்னரைப்**
**பாசி யன்ன சிதர்வை நீக்கி**
**ஆவி யன்ன அவிர்நூற் கலிங்கம்**
**இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் உடீஇ"**

**பெரும்பா. 467 – 470**

என்று எடுத்துக்காட்டுகிறது.

மன்னனைச் சந்தித்தும் பாணர்களின் நிலைகண்டு அவர்களை விரும்பி அழைத்து உடைமாற்றி பாலாவி போன்ற ஆடை நல்கிய நிலை சுட்டப்படுவதிலிருந்து மன்னன் மக்களைக் காத்த மென்மை நிலைப்பாடு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அமிழ்தம் போன்ற உணவினை விண்மீன் போன்ற வெள்ளிக் கலத்தில் கொடுத்த காட்சியில், தாய் பிள்ளையைக் காப்பது போன்று வற்புறுத்தி உணவு படைத்த பாங்கு,

**"மீன்புத் தன்ன வான்கலம் பரப்பி,**
**மகமுறை மகமுறை நோக்கி, முகன்அய்ந்து**
**ஆனா விருப்பின் தான் நின்று விரட்டி**
**மங்குல் வொனத்துத் திங்கள் ஏய்க்கும்"**

**- பெரும்பா. 477 – 480**

என்று திறம்பட மொழியப்பட்டுள்ளது.

**பொருநராற்றுப்படையில் விருந்தோம்பல்**

கரிகாற் பெருவளத்தானை முடத்தமாக் கண்ணியர் பாடியதே பொருநராற்றுப் படையாம். பொருநன் வழியாக கரிகாற் பெருவளத்தானின் புகழினை எடுத்துரைப்பதே இந்நூல். மன்னன் விருந்தோம்பிய சிறப்பு நிலை இந்நூலில் கொற்றமாய் உயர்ந்து நிற்கிறது. பொருநர்களைத் தம் கேளீர் போன்ற வாரித்து, எழும்பு உருகும்படிப் பார்த்து, ஈரும் பேனும் நிறைந்து, நைந்துபோன ஆடையைக் களைந்து இழைபோன வழியறியா ஆடையை ஈந்த நிகழ்வினை,

**"கேளீர் போல கேள் கொளல் வேண்டி....**
**பருகு அன்ன அருகா நோக்கமோடு,**
**உருகுபவை போல் என்புகுளிர் கொளீஇ**
**ஈரும் பேனும் இருந்து இறைகூடி**
**வேரொடு நனைந்து, வேற்று இழை**
**துன்னர் சிதாஅர் துவர நீக்கி...,**
**நோக்கு நுழைகல்லா நுண்மையைக் கணித்து**
**அரவு உரி அன்ன அறுவை நல்கி"**

**- பொருந. 74 – 76, 80,84-83**

என்ற அடிகள் சுட்டுகின்றன. ஆடை நல்குவதோடு மட்டுமின்றி உணவிட்டு ஓம்பிய முறையினை,

**"முரவை போகிய முரிய அரிசி**
**விரல் எனநிமிர்ந்த நிரல்அமை புழுக்கல்,**
**புரல்வறைக் கருணை, காடியின் பிதப்ப**
**அயின்ற காலை பயின்று இனிது இருந்து**
**கொல்லை உழுக்கோழு ஏய்ப்ப பல்லே**
**எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்கி,**
**உயிர்ப்பிடம் பெறாது ஊண் முனிந்து."**

**பொருந : 113 119**

என்ற அடிகளால் எடுத்துக்காட்டுகிறார். கண்ணியார் பற்கள் தமது கூர்மையை இழக்கும் வண்ணம் இரவும் பகலும் இறைச்சி கொடுத்து உடனிருந்து கரிகாளப் பெருவளத்தான் கவனித்த நிகழ்வின் வழி விருந்தோம்பல் பண்பு தெற்றெனப் புலப்படுத்தப்படுகின்றது.

**முடிவுரை**

கலைஞர்களின் வாழ்க்கையையும், அவர்களின் வாழ்வியல் முறைகளையும், அவர்கள் அடைந்த துன்பங்களையும், அத்துன்பங்களைப் போக்கி நல்வாழ்விற்கு வழிகாட்டியாக இருந்த அரசர்கள், வள்ளர்கள் பற்றியும், அவர்கள் இசைக்கலைஞர்களாய் இருக்கின்ற பாணர், கூத்தர், விறலியர், பொருநர் அவர்களுக்கு ஆற்றிய பணிகளை சீரிய முறையில் கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

**துணைநின்ற நூல்கள்**

1. சி.பாலசுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வரலாறு,ப.56
2. தொல்- பொருள்-புறத்திணை, நூ.36
3. வெண்பாப் பாட்டியல்,நூ.51
4. பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.48
5. மு.கருணாநிதி, திருக்குறள்(உரை.), ப.65
6. இறையன்பு, இலக்கியத்தில் விருந்தோம்பல், ப.89

# புறநானூறு காட்டும் வாழ்வியல் நெறிகள்

**பா. ஜமுனா ராணி**

*பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்*

*பதிவு எண் : 19221204022024*

*தமிழ்த்துறை, ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)*

*குற்றாலம், தமிழ்நாடு, இந்தியா*

*(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம்*

*திருநெல்வேலி இணைவு பெற்றது)*

## முன்னுரை

தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் நேசிக்க தொடங்கிய மனிதன் உலக உயிர்கள் அனைத்தையும் நேசிக்கத் தொடாங்கினான். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பரந்த உணர்வைப் பெற்றான். எல்லா உயிர்களும் இன்புற்றிற்க்கத் தன்னால் இயன்ற தியாகங்களைச் செய்தான். தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழத் தலைப்பட்டான். இவ்வாறு பயன் கருதாது விளைவுகளை விரும்பாது தியாக வாழ்க்கை வாழ்தலே பண்பாடு. பண்பாடு நம் வாழ்க்கையை நெறிப்படுத்துவது மட்டுமல்லாது சமூகத்தில் நன்மதிப்புகளையும் உருவாக்கும் நம்மிடம் இருக்க வேண்டிய வாழ்க்கைக்குத் தேவையான நன் நெறிகளை புறநானூறு எவ்வாறு இயம்புகிறது என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அன்பு

அன்பு என்பது வாழும் உயிர்களுக்குப் பொதுவான ஒன்றாகும். இது இயற்கையான உணர்வுகளில் ஒன்று. அதனால் தான் மனிதப் பிறவி உயர்ந்தது என்று ஆன்றோர்களால் போற்றப் படுகிறது.

மன்னன் உயிர்த்தலை மலர்தலை உலகம் என்பது வழக்கு. மன்னன் தீயவழியில் செல்லாமல் சிறந்தவனாக, உயர் சிந்தனை உடையவனாக, நடுநிலை ஆட்சி நடத்துபவனாக, குடிகள் மீது அன்பு உடையவனாக இருந்தால், அந்த ஆட்சி சிறப்பாகவும், மக்கள் மகிழ்ச்சியாகவும் வாழ்வர் என்பதற்கிணங்க இரும்பொறையைக் கண்ட நரிவெரூக் தலையார்

**"அருளும் அன்பும் நீக்கி, நீங்கா**
**நிரயம் கொள்பரோடு நன்றாது காவல்**
**குழவி கொள்பவரின் ஓப்புமதி**

**அறிதோ தானே! அது பெறல் அருங்குரைத்தே**

**(பாடல்-5)**

என்ற பாடல் அருளையும் அன்பையும் ஒழிக்கின்றவரோடு சேராது உன்னால் காக்கப்படும் நாட்டைக் குழந்தையைப் பேணுபவர் போல நின்று பாதுகாத்திடுக. அத்தகைய காவல் அருளுடையது அத்தகை நிலையும் பெறுவதற்கு அரிது.

**"ஆவும் ஆன் இயற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடையீரும், பேணித்**
**தென்புல வாழ்நர்க்கு அருள் கடன் இறுக்கும்"**

**(பாடல்-9)**

என்ற பாடல் பழந்தமிழர் பசுக் கூட்டங்களையும் பார்ப்பனரையும், பெண்டிரையும், பேணிதற்குரியவர்களாகக் கருதினர். பசு முதலாகிய பலரையும் காத்தல் அரசர்தம் கடன்மாற்றரசாயினும் முன் அறிவிப்பு செய்து போரால் அவர் இடையூறு அடையாதிருக்குமாறு கூறும் முறை சிறப்பும் குரியதாக கூறப்படுகிறது.

**அறம்**

சமூகத்தை உருவாக்கும் தனி மனிதர்களின் பண்புகள் முதன்மை யானவை. தனிமனித அறங்கள் மக்கள் வாழ்விற்குத் தேவையான ஒன்று என்பதனை நரிவெரூஉத் தலையார் என்னும் புலவர்.

**நல்லது செய்தல் ஆற்றீராயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்**
**எல்லாரும் உவப்பது அன்றியும்**
**நல்லாளற்றுப் பகுஉம் நெறியுமார் அதுவே**

**(பாடல்-195)**

ஒருவருக்கு நன்மையைச் செய்யா விட்டாலும் பரவாயில்லை, தீய செயல்களைச் செய்யாமல் இருந்தாலே அதுவே மிகப்பெரிய செயலாகக் கருதப்படுகிறது.

இரண்டாயிரம் ஆண்டிற்கு முன்பே பழந்தமிழ் சாதி, மதம், இனம் கடந்து மக்கள் அனைவரும் ஒற்றுமை பண்புடையவர்களாகத் திகழ வேண்டும் என்று,

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர் தரவாரா"**

இவ்வுலகினில் பிறந்தவர் ஒரே ஊர், ஒரே குலம் என்ற உலகத் தத்துவத்தை வெளிப்படுத்திய திறம் நன்மையோ தீமையோ நாம் செய்யும் செயலின் மூலமே நடைபெறும் என்ற கருத்தினை எளிமையாக வெளிப்படுத்தி உள்ளார்.

உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தம் கடமையைச் சரிவர செய்தாலே உலகில் அமைதி நிலைபெறும்

**"உண்டி கொடுத்தோர்**
**உயிர் கொடுத்தோரே"**
**"உண்டி முதற்றே உணவின் பிண்டம்"**

பிறருக்கு உதவுதல், வறியோருக்கு கொடுத்தல் போன்ற செய்திகளை ஒவ்வொரு

தனிமனிதனும் அறமாக நின்று செயல்பட வேண்டும்.

நேர்மை மிகச்சிறந்த கொள்கை மனசாட்சி உள்ளவர்கள் நேர்மையுடனும் நாணயத்துடனும் இருப்பார்கள். பரந்த அளவுடைய பொருள்களை ஆராயும் துலாக் கோலின் சமன்கோல் போன்று நீயும் ஒரு பக்கம் சார்ந்து நில்லாதே என்று பெருவழுதியாரிடம் காரிக் கிழார் கூறும் செய்தி

**"உருவும் புகழும் ஆகி, விரிசீர்த்**

**தெரிகோல் ஓமன்ன் பேரி ஒரு தினம்**

**பற்றல் இலியரோ"**

**(பாடல்-6)**

என்று எடுத்துரைக்கிறார்.

**ஈகை**

மன்னர்கள் ஈகையாளர்களாய், கொடையாளர்களாய் திகழ்ந்தார்கள்.

**உண்பது நாழி உடுப்பவை இரண்டே**

**பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே**

**அதனால் செல்வத்துப் பயனே ஈதல்**

**துய்ப்போம் எனினே தப்புந பலலே**

**(பாடல்-189)**

உலகை ஆளும் அரசன் என்றாலும் வேட்டையாடிடும் எல்லா வேடன் என்றாலும் உண்ணும் பொருள் நாழி தானியமும் உடுக்கப் படுவதும் இரண்டு உடையும் என பலவும் பொதுவானவையாக இருக்கும்போது தனக்கென எதையும் வைத்துக் கொள்ளாது பிறருக்கு கொடுத்து வாழ்வதே செல்வத்தின் பயன் என்றனர்.

**"வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும்இ**

**வருந்தி வந்தோர் மருங்கு நோக்கிஇ அருள**

**ஆகுமதி"**

**(பாடல்-27)**

யாராயினும் தம்மை நாடி வருந்தி வந்தவர்கள் யாராயினும், அவர்தம் முகம் நோக்கி பசி போக்குக என்றுரைத்துள்ளனர். பிறர் துயர் தீர்க்க வேண்டும் என்பதே வாழ்வின் பண்பு என்று எடுத்துரைக்கிறார்.

**விருந்தோம்பல்**

விருந்து என்ற சொல்லுக்கு புதுமை என்பது பொருள் நம் தமிழர்கள் அறியாதவர்களையும் அழைத்து உணவழித்து இடமளித்து உபசரித்து மகிழ்ந்தனர்.

குடும்பங்களில் விருந்தோம்பல் பண்பினைப் புலவர்கள் பாட, அதனால் பெறும் புகழையும், உயர்வையும் எண்ணி வளர்ச்சியுற்ற செல்வர்களும் தலைவர்களும் இப்பண்புகளை சிறப்போடு வளர்க்கத் தொடங்கினர். சிறுகுடி கிழான் பண்ணன் இல்லம், விருந்தோம்பும் பண்பின் காரணமாகவே

**"பசிப்பிணி மருத்துவன் இல்லம்**

**அணித்தே சேய்த்தோ உறுமின் எமக்கே"**

**(பாடல்-173)**

என்ற பாடல் உணவளித்தல் இல்லத்தில் சிறப்புற்றிருந்ததைப் புறநூல் விளக்குகிறது.

மக்கள் தமக்கென வாழாது பிறருக்கென வாழ்ந்தனர். அமுதமே கிடைப்பினும் பிறருக்குக் கொடுத்துத் தாம் உண்ணும் இயல்புடையவர்களாக இருந்தனர்.

**அமிர்தம் இயைவதாயினும் இனிதெனத்**
**தமியரும் உண்டலும் இலரே**
**(பாடல்-182)**

சமூகக் கடமையில் முக்கியமானது விருந்தோம்பலாகக் கருதப்பட்டது. தமிழகப் பண்பாடுகளுள் சிறந்தப் பண்பாடகவும் கருதப்படுகிறது.

**கல்வி**

கல்வி ஒவ்வொரு மனிதனும் கற்க வேண்டிய உயர் செல்வமாகும். கல்வியை எப்படியாவது ஒவ்வொரு வரும் கற்க வேண்டும். அதனை பெற பிச்சை எடுத்தாவது கற்க வேண்டும் என்னும் அதற்காக வருத்தப்படக்கூடாது என்பதை

**"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே**
**ஒரு குடி பிறந்த பல்லோருள்ளும்**
**மூத்தோன் வருக என்னாது அவருள்**
**அறிவுடையோன் ஆறு அரசு செல்லும்"**

என கற்றவர் பெருமையை எடுத்துரைக்கின்றது. கல்வியின் பெருமையைப் பழந்தமிழர் அறிந்திருந்தனர். அனைவரும் கல்வியறிவு உடையவர் களாக இருந்தனர் என்பதும் பழந்தமிழகத்தில் கல்வி என்பது போர்க்களக் கல்வி என்பதும் உண்மை.

**முடிவுரை**

மிகப் பழங்காலத்தில் பிறருக்காக வாழ்வதே வாழ்க்கை எனும் மரபு இருந்தது. சுயநலமின்றி சமூக மக்கள் அனைவரும் சமூகத்திற்காகவே வாழ்ந்தனர். பாரதிதாசன் "தன்பெண்டு, தன்பிள்ளை என்பதைக் கடுகு உள்ளம் என்று சொல்லும் அளவிற்கு நாம் சுருங்கிவிட்டோம். சமூக அவலங்களையோ, சமூக இழப்புகளையோ, சமூக இடையூறுகளையோ குறித்து நாம் கவலைப்படாமல் இருக்கின்றோம். கடமை தவறினால் அதன் பலாபலன்களை அறுவடை செய்ய வேண்டியது தான். இதனால் வாழ்வாதாரங்களை நாம் இழந்து கொண்டிருக்கின்றோம். இவை எல்லாம் நம் கடமை தவறிய செயல்களால் தான். இலக்கியங்களைப் புறக்கணித் கின்றோம். இலக்கிய ஈடுபாடு இல்லை. நிச்சயம் பழந்தமிழ் இலக்கியங்கள் வீணானவை அல்ல. அவை காரணத்துடன் படைக்கப்பட்டவையே.

**வரப்புயர நீர் உயரும்**
**நீர் உயர நெல் உயரும்**
**நெல் உயர குடி உயரும்**
**குடி உயர கோன் உயரும்**

என்பதை உணரலாம். பழைய இலக்கியச் செய்திகளை அறிந்து நம் பண்பாடுகளை பேணிப் பாதுகாப்போம்.

**துணை நூற்பட்டியல்**

1. சமூக மதிப்புக் கல்வி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம்
2. சங்க இலக்கியம் - புறநானூறு (மூலமும் உரையும்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
3. சங்கத் தமிழர் வாழ்வியல் முனைவர் தா.நீலகண்ட பிள்ளை

# சிலம்பு உணர்த்தும் மானுட வாழ்வியலும் மதிப்புகளும்

**இரா. ஜான்சிராணி**

*பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்*

*உதவி பேராசிரியர், தமிழ்த்துறை*

*ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌதியா கல்லூரி, உத்தமபாளையம்*

## முன்னுரை

மனித நடத்தை, மனித உயிரியல், கலாச்சாரங்கள், சமூகங்கள் மற்றும் மொழியியல் ஆகியவற்றில் அக்கறை கொண்ட மனித குலத்தின் அறிவியல் ஆய்வே மானுட மதிப்புகள் ஆகும். **வெயிட்ஸ்** என்பவர் "**மானுடவியலை மனிதனின் இயல்பு பற்றிய அறிவியல்**" என்று வரையறுக்கிறார். நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்று பாட்டுக்கொரு புலவனான பாரதி போற்றிய சிலப்பதிகாரத்தில் மானுட வாழ்வியலும் மதிப்புகளும் போற்றிய திறத்தை இக்கட்டுரை விவரிக்கின்றது.

## காப்பியத்தின் சிறப்பு

சிலப்பதிகாரம் ஒரு தனி மனிதன் மற்றும் மனித சமுதாயம் எப்படி வாழ வேண்டும் என்ற நியதிகளை எடுத்துரைப்பதற்காக எழுந்த முதல் காப்பிய இலக்கியமாகும்.

> "**அரசியல் பிழைத்தோருக்கு அறங் கூற்றாகும்**
> **உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்**
> **ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்**"

என்ற மூன்று உண்மைகளையும் கருப்பொருளாகக் கொண்டு அமைந்துள்ளது. அன்றைய காலத்தில் வாழ்ந்த மக்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், கலைகள், பத்தினி தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு என்று தமிழ் மண்ணின் பெருமைகளை பறை சாற்றும் காப்பியமாகும். ஆள்பவனை, ஆண்டவனைப் பாடிய ஆசிரியப்பாவை மக்களைப் பாடுவதற்குப் பொருள் தொடர்நிலைச் செய்யுளாகப் பாடுவதற்கு முதன் முதலில் முனைந்தவர் **இளங்கோவடிகள்** ஆவார்.

**“வேர்மட்ட வெகுமக்களின் வெகுளி, மேல் மட்டங்களைத் தரைமட்டத்திற்குப் புரட்டிப்போடும் என்பது புரட்சியின் சூத்திரம். சிலப்பதிகாரம் அத்தகைய புரட்சி வரலாற்றின் உயிரெழுத்தால் ஆன உயில் ஆவணம். மங்கையின் காலணி, மன்னனின் தலையணியாம் மகுடத்தைச் சாய்த்தது.** (கவியருவி தி.மு. அப்துல் காதர் - சிலப்பதிகாரத்தில் அறக்கோட்பாடுகள் பக்.29).

**சிலம்பில் இல்லற மாண்புகள்**

மனித சமுதாயத்தின் ஆரம்ப காலத்தில் எதற்கும் எப்பொழுதும் கட்டுபாடுகள் விதிக்கப்படவில்லை. எனவே, மனிதன் தன் தேவைகள் சார்ந்து எதனையும் பெற்று வந்தான். ஆனால், காலப் போக்கில் இத்தகைய செயல்பாடுகள் மனிதனைப் பொறுப்பற்றவனாக ஆக்கியதோடு சமூகத்தில் பல்வேறு குழப்பங்கள் உருவாகவும் வாய்ப்பினை ஏற்படுத்தின. எனவே, இதிலிருந்து சமூகத்தை ஒழுங்கு படுத்தவும், கட்டுப்படுத்தவும் சில விதிமுறைகள் உருவாக்கப்பட்டன. அதில் மிக முக்கியமான ஒன்றாகத் திருமணம் அமைந்தது. திருமணத்தின் அடிப்படையே இல்லறமாகும்.

இல்லறம் முழுக்க இல்லாளைச் சார்ந்தது. அவளாலேயே சிறப்புப் பெறுவது. எனவே, இல்லறம் நல்லறமாக அமைய வேண்டும். பிற செயல்களில் எவ்வளவு புகழுக்குரியவர்களாக இருப்பினும் இல்லறத்தில் தவறு ஏற்படின் ஏணை சிறப்புகள் அனைத்தும் சிதைந்து விடும். எனவே, ஒவ்வொரு மனிதனுக்கும் இல்லறக் கடமையே முக்கியமான கடமையாக அமைகின்றது என்பதை சிலப்பதிகாரம் வலியுறுத்துகின்றது.

கண்ணகியைக் அறிமுகப்படுத்தும் இளங்கோவடிகள் தீதிலா வடமீனின் திறம் இவள் திறமென்றும், மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக் காதலாள் என்றும், சாலி ஒரு மீன் தகையாள் என்றும் குறிப்பிடுவது இல்லறத்தில் இணையும் பெண் கற்பில் சிறந்தவளாக இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

இது பெண்ணுக்கு மட்டுமின்றி ஆணுக்கும் பொதுவானது. வினையே ஆடவர்க்கு உயிராக இருப்பினும் இல்லற இயல்புகளை மீறி நடப்பவர்க்குத் துன்பமே நேரும் என்பதற்குச் சான்றாகிறது கோவலனின் வாழ்வு. மனைவியை விடுத்து மாற்றாளுடன் சென்ற தன்மை அவனின் பெருமையை மட்டுமின்றி அவன் குடிப் பெருமையையும் அழித்து விடுகின்றது. எனவே, கணவன் மனைவி இருவரும் கற்பெனும் உறுதி பூண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதை சிலம்பு வலியுறுத்துகின்றது.

**“அன்பும் அறனும் உடைத்தயாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது”**

**(குறள் – 45)**

என்று இல்லற நெறியின் இலக்கணம் பகர்கின்றது உலகப் பொதுமறை. இல்லறக் கோட்பாட்டின் இலக்கிய முகம் கண்ணகி. கண்ணகி இல்லறக் கடன்களை மேற்கொள்ள ஏதுவாக, கோவலன் பெற்றோர் அவர்களைத் தனிக்குடித்தனம் வைத்தனர்.

**“மறப்பரும் கேண்மையொடு அறப்பரிசாரமும்**
**விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்**
**உரிமைச் சுற்றமொடு ஒரு தனிப் புணர்க”**

**(சிலம்பு – மனையறம் படுத்தக் காதை, பக்-57)**

என்பதை எடுத்துரைக்கின்றது. மேலும் "**வேறு படு திருவின் வீறு பெறக்காண்**" (மேலது பக்-57) எனத் தமக்குரிய செல்வங்களில் ஒரு பகுதியை புது வாழ்க்கை தொடங்கும் மணமக்களுக்குப் பொருளாதாரத் தற்சார்பு வரும் வரை உதவட்டுமே என்று பெற்றோர் பொருள் வழங்கியதும் புலப்படுகிறது.

கோவலனைப் பிரிந்து கண்ணகி "**மங்கல அணியே அன்றியும் பிறிதணி மகிழான்**" என்றது மங்கல அணி கணவனுக்கு உரியது மற்ற அணிகள் தான் கண்ணகியோடு சேராததால் அழகிழந்து விட்டன என்று கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே முதல் தரமான இலக்கிய உத்தியை இளங்கோவடிகள் முன்னெடுத்துள்ளார் என்பது வியப்பிற்குரியது.

**"கடிமலர் அங்கையின் காதலன் அடிநீர்**
**சுடுமண் மண்டையின் தொழுதனள் மாற்றி"**

எனக் கண்ணகி வள்ளுவரின் வாக்கிற்கேற்ப கணவனைத் தொழுது வணங்கி இல்லற நெறியின் இலக்கணமாகத் திகழ்கிறாள்.

மாதவியிடமிருந்து மீண்டு வந்த கோவலன் கணவனாகத் தான் ஆற்ற வேண்டிய இல்லறக் கடமைகளை ஆற்றவில்லையே எனக் கலங்கிய தருணத்தில் ஆணுக்கான இல்லறக் கடமைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அது வரையில் கணவனைக் கடிந்து ஒரு சொல்லும் உதிர்க்காத கண்ணகி அவன் உள்ளம் நெகிழ்ந்த தருணத்தில்

**"போற்றா ஒழுக்கம் புரிந்தீர் யாவதும்**
**மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலின்**
**ஏற்று எழுந்தனன் யான்"**

என்று பொய் முறுவல் முத்துகளை இதழில் வெளிப்படுத்தி தன் இல்லற மாண்பைப் போற்றி ஒழுகுகிறாள்.

சிறப்புக்குரிய பெண்ணைத் திருமணம் செய்யும் ஆணும் அதே தகுதியோடு இருக்க வேண்டும் அல்லது கூடுதல் தகுதியோடு இருக்க வேண்டும் என்பதை

**"பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோ**
**டுருவு நிறுத்த காம வாயில்**
**நிறையே யருளே உணர்வோடு திருவென**
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"**

**(தொல் - மெய்ப்பாட்டியல் -25)**

என்று தலை மக்களுக்கான பண்புகளை வரையறை செய்கிறது.

இவ்வொப்புமைப் பண்புகளில் கண்ணகிக்கும் கோவலனுக்கும் பொருந்தி வருபவை அதிகம் எனினும் உணர்வு என்பது வேறுபடுகிறது. கோவலன் இயல்பிலேயே கலையார்வமிக்கவன். "**வண்ணச் சீறடி மணமகள் அறியாதவள் கண்ணகி**" உணர்வால் ஒன்று படாமல் போனதன் விளைவே அவர்களின் பிரிவு. எனவே, இல்லறம் சிறக்க கணவனும் மனைவியும் பொருத்தமுடையவர்களாக இருக்க வேண்டும் என்பது இல்லற நெறியாக வலியுறுத்தப்படுகிறது.

**சிலம்பு உணர்த்தும் அரசியல் மாண்புகள்**

அரசையே அதிகாரம் செய்த பழைய காலணி ஆதிக்க வரலாறே சிலப்பதிகாரம் ஆகும். வேர்மட்ட மக்கள் வெகுண்டெழுந்து ஆட்டிப் படைத்த ஆட்சியாள்களை மாற்றி மக்களாட்சியை நிறுவிய புரட்சிகள் வரலாற்றில் பல உண்டு. அந்த வகையில் சிலம்பும் ஒரு பெண்ணால் முடியுடை வேந்தனின் முறையற்ற ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்த தமிழ் மண்ணின் வரலாற்றுக் காப்பியத்தின் ஆழ்நிலை எனலாம்.

சிலம்பு உணர்த்தும் மூன்று உண்மைகளில் முதலிடம் வகுப்பது அரசியல். **"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்"** என்பதாம். மங்கல வாழ்த்துப் பாடலில் திங்களோடு ஆட்சியடையாளமான வெண் கொற்றக் குடையும், ஞாயிற்றோடு ஆட்சியடையாளமான ஆணைச் சக்கரமும், மாமழையோடு ஆட்சியாளனின் தண்ணளிக் கருணையும் இணைத்துப் பாடப்பட்டுள்ளது. இது இயற்கைக்கும் ஆட்சிக்கும் உள்ள தொடர்பாகும். இயற்கை நியதியை அரசியல் நெறிமீறல் பாதிக்கும்.

**"அரைசு கெடுத்து அலம் வரும் அல்லற் காலை**
**கறைகெழு குடிகள் கைதலை வைப்ப**
**அறைபோகு குடிகளோடு ஒருதிறம் பற்றி**
**வலம்படு தானை மன்னன் இல்வழி**
**புலம்பட இறுத்த விருந்தின் மன்னரின்"**

**(மேலது பக்-118)**

என்று கடமையோடு வரி செலுத்தும் நற்குடி மக்கள் வருந்தும்படி கீழறுப்பு செய்யும் குடிகளைத் துணையாகக் கொண்டு, வெற்றி பொருந்திய படை வேந்தன் இல்லாத போது அவன் நாடெல்லாம் கெடும் படிப் புதிதாக வந்து தங்கிய குறுநில மன்னன் போல புகார் நகரிலே பகல் முடிந்து இருள் தொடங்கியது என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். இது

**"வாள்போல் பகையை அஞ்சற்க அஞ்சுக**
**கேள்போல் பகைவர் தொடர்பு"**

**(குறள் – 882)**

எனும் வள்ளுவர் வாக்கினோடு பொருந்துகிறது. அரசு எதிரிகளால் வீழ்ந்ததை விட உறவினர் போல் நடிப்போரின் தொடர்பில் தான் விழும் என்பதைச் சங்க இலக்கியமான புறநானூறும் எடுத்துரைக்கின்றது.

**"கடுஞ்சினந்த கொல்களிலும்**
**கதழ்ப்பரிய கலிமாவும்**
**நெடுங்கொடிய நிமிர் தேரும்**
**நெஞ்சுடைய புகல் மறவரும் என**
**நான்குடன் மாண்டதாயினும்**
**அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"**

**(புறநானூறு பாடல்-52)**

அறநெறியே ஆட்சி நிலைக்க முதன்மைத் தேவையாகும், பொன் செய் கொல்லன் தன் சொல் கேட்டதனால் தான் பாண்டியன் அறநெறி பிறழ்ந்தான் என்பதை சிலம்பு உணர்த்துகிறது.

கவுந்தியடிகள், கோவலன், கண்ணகி ஆகிய மூவரும் சுடுபகல் எப்போது விடைபெறும், குளிர் இரவு எப்போது துளிர்விடும் என்று எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிறார்கள் என்பதை அரசியல் சார்ந்த உவமையோடு இயம்புகின்றார் அடிகள்

**“கொடுங்கோல் வேந்தன் குடிகள் போலப்**
**படுங்கதிர் அமயம் பார்த்திருந்தோர்க்கு”**

**(சிலம்பு – புறஞ்சேரியிறுத்த காதை, பக்-55)**

மேலும்,

**“அறம்புரி மாந்தர் அன்றிச் சேராப்**
**புறஞ்சிறை மூதூர்”**

**(மேலது பக்-60)**

என மதுரை நகரின் உட்பகுதி தான் கயவர் புகமுடியாத கண்காணிப்பு மிகுந்த பகுதியாயிருக்கும். ஆனால், புற நகரும் அறத்தை விரும்பும் சான்றோர் அன்றிப் பிற கொடியவர் யாரும் புக முடியாத பகுதியாக இருக்கும். இதனை,

**“பகை தெறல் அறியாப்**
**பயங்கெழு வீதி”**

**(சிலம்பு - ஊர்காண் காதை பக்-86)**

**என்றும்**

**“தனிநீர் கழியினும் தகைக்குநர் இல்”**

**(சிலம்பு – புறஞ்சேரியிறுத்த காதை, பக்-58)**

என்றும் இளங்கோவடிகள் குறிப்பிடு கின்றார்.

ஆராயாது நீதி வழங்கிய பாண்டிய மன்னன் ”யானோ அரசன்? யானே கள்வன்” என்று தன் தவறுக்குத் தானே தண்டனை கொடுத்து உயிர் துறக்கிறான். பாண்டி மன்னனின் மறைவைக் கேள்வியுற்ற சேரன் செங்குட்டவன்,

**“எம்மோ ரன்ன வேந்தற்கு உற்ற**
**செம்மையின் இகந்த சொல் செவிப்புலம் படாமுன்**
**வல்வினை வளைந்த கோலை மன்னவன்**
**செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோல் ஆக்கியது”**

**(சிலம்பு - காட்சிக் காதை, பக்-27)**

குடிமக்களைக் கொடுங்கோலின்றிப் பாதுகாத்தல் மன்னர்களின் காவல் முறையாகும். அரசியல் அறமும், அது தவறிய வழி உயிர்த்தியாகமும் தான் சிலம்பின் உயிரனைய உயரிய அறக் கோட்பாடாகும்.

பத்தினிக் கடவுள் கண்ணகிக்குச் சிலையெடுக்க வடபுலம் நோக்கிச் செல்லும் நான் வெல்லவிட்டால் **குடி நடுக்குறும் கோலோன் ஆகுக** எனச் சேரன் செங்குட்டுவன் கூறும் வஞ்சினத்திலும் அன்றைய மன்னர்கள் வசை வருவதை விரும்பவில்லை என்று தெளிவாகிறது.

**“வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய**
**வாழ்வாரே வாழா தவர்”**

**(குறள் – 240)**

என்ற குறளின் கோட்பாடே மன்னர்கள் உயிர் கொடுத்துக் காப்பாற்ற விரும்பிய கொள்கையாகும்.

### சிலம்பு உணர்த்தும் சமூக மாண்புகள்

**“நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்”**

**(தொல் - பொருள் அகத்திணை – 56)**

எனத் தொல்காப்பியம் இலக்கியத்தை இரண்டு வகையில் உருவாவதாகச் சொல்கிறது. ஒன்று ஆசிரியன் கற்பனையாக நூல் வடிப்பதை நாடக வழக்கு என்றும், வாழும் காலத்து மக்கள் வாழ்வை அப்படியே பதிவு செய்பதை உலகியல் வழக்கு என்று வகை செய்கிறது. எனவே சிலப்பதிகாரம் அன்றைய மக்களின் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

நல்லவர்களால் மட்டுமே ஒரு நகரம் நடுக்கமின்றி நிலையாக இருக்க முடியும் என்ற சமுதாய அறக்கருத்தை,

**"ஆங்கு**
**பொதியில் ஆயினும் இமயம் ஆயினும்**
**பதியெழு அறியாப் பழங்குடி கெழீஇய**
**பொது அறு சிறப்பின் புகாரே ஆயினும்**
**நடுக்கின்றி நிலைஇய"**

**(சிலம்பு - மங்கலவாழ்த்து பக்-46)**

என்று இளங்கோவடிகள் குறிப்பிடு கின்றார். இதனையே

**"தமக்கென முயலா நோன்றாள்**
**பிறர்க்கென முழலுநர் உண்மையானே**
**உண்டாலம்ம இவ்வுலகம்"**

**(புறநானூறு - 182)**

எனும் புறநானூற்றுப் பாடல் உலகம் நிலைத்திருப்பதற்கான காரணத்தை உரக்கச் சொல்கிறது.

கண்ணகியின் தந்தையை **மாக வான் நிகர் வண்கை மாநாய்கன்** என்றும், கோவலனின் தந்தையை **வருநிதி பிறர்க்கு ஆர்த்தும் ஓங்கு செல்வத்தான்** என்றும் மங்கல வாழ்த்துப் பாடலில் அறிமுகம் செய்கிறார் இளங்கோவடிகள். உழைத்துத் தேடிய செல்வதைத் தனக்கென ஒதுக்காமல் பிறர்க்கு உதவிட வழங்கும் ஈகையாளர்கள் அன்றைய தமிழ்ச் சமூகத்தில் இருந்தனர் என்பதைப் பதிவு செய்கிறது. இதனையே

**"தாளாற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"**

**(குறள் – 212)**

என்று வள்ளுவரும் வலியுறுத்துகிறார்.

மேலும்,

**"உரைசால் சிறப்பின் அரைசுவிழை திருவின**
**பரதவர் இருக்கும் உளர்"**

**(சிலம்பு – மனையறம்படுத்த காதை பக்-55)**

என அரசனுக்கே கடன் கொடுக்கக் கூடிய பொருள் வளம் உள்ளவர்கள் புகார் நகரில் இருந்தார்கள் என்பதை எடுத்துரைக்கின்றது சிலம்பு.

பிறநாட்டிலிருந்து புகாருக்கு வந்த புதியவர்கள் தம் பண்டங்கள் அடங்கிய மூட்டை மீது பெயர், அளவு, எடை, இவற்றைப் பொறித்த அடையாள எழுத்தை இலச்சினையாக இட்டு அங்கிருந்த பண்டக சாலையில் குவித்து வைத்திருந்தனர். அதற்கு எவரும் காவல் புரியவில்லை என்று வெள்ளிடை மன்றத்தின் சிறப்பை

**"வம்ப மாக்கள் தம் பெயர் பொறித்த**
**கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பலபொறி**
**கடைமுக வாயிலும் கருந்தாள் காவலும்**
**உடையோர் காவலும் ஒரீஇய ஆகி"**

**(சிலம்பு – இந்திரவிழவூர் எடுத்த காதை பக்-134)**

என்று குறிப்பிடுகிறார். எனவே அன்றைய தமிழ் மக்கள் நல்லறச் சமூகமாக விளங்கியதை அறிய முடிகிறது.

மேலும் கண்ணகியின் சாபத்தால் மூண்ட நெருப்பானது

**"பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர்**
**மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டு"**

**(சிலம்பு - வஞ்சினமாலை பக்-215)**

என மற்றவர்களை அழித்தது என்று குறிப்பிடுகிறார். எவற்றாலெல்லாம் அன்றிருந்த சமூகத்துக்குக் கேடு விளைந்ததோ அவையெல்லாம் எரிந்து அழிந்ததாகக் காட்டுகின்றார் இளங்கோவடிகள்.

**"கள்ளும், களவும் காமமும் பொய்யும்**
**வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்**
**இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா**
**உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது**
**செல்லும் தேயத்துக்கு வறுதுணை நேருமின்"**

**(சிலம்பு – வரந்தருகாதை பக்-167)**

சமூகம் பொதுவாகக் கடைபிடிக்க வேண்டிய அறங்களைப் பட்டியலிட்டு சமூக அறத்தை வலியுறுத்துகிறார்.

**முடிவுரை**

தமிழ்த் தாயின் மணியாரமாகத் திகழும் சிறப்பினை உடையது சிலப்பதிகாரம். தமிழிலக்கிய மரபில் பல்வேறு புதுமைகளைச் செய்த புரட்சிக் காப்பியமாகும். மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே என்ற தன்மையை ஏற்றுக் கொண்டு வாழ்ந்த பெண்களுக்கு மத்தியில் கணவனுக்காக சினங்கொண்டு எழுந்த கண்ணகியின் வீரத்தையும் உலகிற்கே பறை சாற்றிய காப்பியம். இல்லறம் மட்டுமின்றி நல்லறத்தையும் எடுத்துக்காட்டிய குடிமக்கள் காப்பியம் தமிழ் மக்களின் வரலாற்றையும் பண்பாட்டையும் எடுத்தியம்பும் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்கிறது.

**மேற்பார்வை நூல்கள்**


1. சிலப்பதிகாரம் மூலமும் உரையும் - ந.மு.வேங்கடசாமி நாட்டார், ராமையா பதிப்பகம், 2014
2. சிலப்பதிகாரம் அறக்கோட்பாடுகள் – பேராசிரியர் கவியருவி அப்துல்காதர் நேஷனல் பப்ளிஷர்ஸ் – 2019
3. திருக்குறள் – இனிய பரிமேலழகர் உரை, அம்சா ஆப்செட் -2009
4. தொல்காப்பியம் –பொருளதிகாரம் இளம்பூரணார் உரை, சாரதா பதிப்பகம் – 2019
5. புறநானூறு – புறநானூறு புலியூர்க் கேசிகன் தெளிவுரை, ஸ்ரீ பாரதி பப்ளிகேஷன் – 2022.

# திருப்பாவை பாடல்களில் விழுமியங்கள்

**முனைவர் ஜெ. காவேரி**

*தமிழ்த்துறை உதவிப்பேராசிரியை*

*வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்*

மனிதனை ஓர் சமூக விலங்கு எனலாம். சமுதாயமாகச் சேர்ந்து வாழும் மனிதர்கள் நல்முறையில் வாழ வாழ்வியல் நெறிகளையும் அறக்கருத்துக்களையும் இலக்கியங்கள் கற்றுக் கொடுக்கின்றன. மனிதனுக்கு வாழ்வியலைக் கற்றுக் கொடுப்பதுடன் எவ்வாறு வாழக்கூடாது என்பதையும் அறிவுறுத்துகின்றது. தனிமனித வாழ்வியல் மேன்மைக்கும் சமூக வாழ்வியல் மேன்மைக்கும் இவ்விலக்கியங்கள் துணைபுரிகின்றன. அவ்விலக்கியங்கள் உள்ளத்தைத் திறப்பதற்கும், அதைத் திருத்திச் செம்மைப் படுத்துவதற்கும், தவறுகளைப் போக்கும் வன்மை உண்டாகுவதற்கும், நல்லனவற்றை மேற்கொள்வதற்கும், அவற்றைப் பிறர்க்கு எடுத்துக் கூறுவதற்கும், பிறரை நல்வழியில் செலுத்துவதற்கும் பயன்பட வேண்டும் என்கிறார் வைகவுண்ட் மன்லே (Selected Essays From The Writing Of Viscount Manlay P.51). அவ்வகையில் மக்களை பக்தி நெறிப்படுத்த வேண்டும் எனும் நோக்கில் அமையப்பெற்ற பக்தி இலக்கியங்கள் மனிதர்களுக்கு பக்தியைப் போதிப்பதுடன் வாழ்வியல் முறையையே பெரிதும் விளம்புகின்றன. ஆழ்வார்களில் ஒரே பெண் ஆழ்வாரான ஆண்டாள் தன் திருப்பாவையில் திருமாலை அடையும் நோக்கில் இயற்றப்படும் பாவை நோன்பு பற்றிய கருத்துக்களுடன் மக்களுக்கு வாழ்வியல் விழுமியங்களையும் எடுத்துரைக்கின்றார். திருப்பாவை பாடல்ளில் இடம்பெறும் வாழ்வியல் விழுமியங்களை வெளிப்படுத்துவதாய் இக்கட்டுரை அமைகின்றது.

**விழுமியங்கள்**

மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றின் உருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதே **விழுமியம்** (*Value*) எனப்படுகின்றது. விழுமியங்கள் இரு வகையாகக் கருதப்படலாம்.

1. தனி மனித விழுமியங்கள்
2. பண்பாட்டு விழுமியங்கள்

தனி மனித விழுமியங்கள் தனி மனிதருடைய வாழ்வை ஒழுங்கமைப் பதை நோக்கமாகக் கொண்டவை. அவை ஒட்டு மொத்தமாகச் சமுதாயத்தின் ஒழுங்கமைவுக்கு அத்தியாவசியமாக இருக்க வேண்டும்

என்பதில்லை. ஒரு சமூகத்தில் பொதுவாக உள்ள விழுமியங்கள் பண்பாட்டு விழுமியங்கள் எனப்படுகின்றன. இன்னொரு வகையில், மனிதர்கள் சேர்ந்து வாழ்வதற்கு எந்தெந்த விழுமியங்கள் சிறப்பாகத் தேவைப் படுகின்றனவோ அவை பண்பாட்டு விழுமியங்கள் எனலாம்.

**பாவை பாடல்கள்**

திருப்பாவை பன்னிரண்டு வைணவ ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் பாடிய நூல் ஆகும். இது 30 பாடல்களால் ஆனது. வைணவப் பக்தி நூல்களின் தொகுப்பான நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் 474 தொடக்கம் 503 வரையுள்ள பாடல்கள் திருப்பாவைப் பாடல்கள் ஆகும். தமிழ் நாட்டில் மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் பாவை நோன்பு நோற்றனர். இதன் போது விடியும் முன்பே எழும் கன்னியர், பிற பெண்களையும் துயில் எழுப்பிக்கொண்டு ஆற்றில் நீராடி இறைவனைத் துதித்து வழிபடுவர். இதனைப் பின்னணியாகக் கொண்டு எழுந்ததே இந்நூல். இதனால் தற்காலத்திலும் பாவை நோன்புக் காலத்தில் இப்பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. பெண்கள் இருக்கும் நோன்பைப் பற்றிய பாடலாக இருப்பதால் திருப்பாவை எனப் பெயர் பெற்றன. திருமாலை மணம் புரிய வேண்டும். தன் விருப்பப்படியே திருமாலை கணவராக மணம் செய்தவர். திருமாலைத் தவிர வேறு எவரையும் மணவாளனாக ஏற்க மறுத்தவர்

திருப்பாவையின் தொகுப்பு பாடப்பட்ட நோக்கத்தை எடுத்துரைப்பது முதல் பாடல். 2 முதல் 5 வரை உள்ள பாடல் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் நாராயணரின் சிறப்பைக் கூறும் பாடலாக அமைந்துள்ளன. 6 முதல் 15 வரை துதிப்பாடல்கள் பெண் தோழர்களை கற்பனை செய்து ஆழ்வார்களுக்கு ஒப்பாக கொண்டு அவர்களை எழுப்பி நீராடிவிட்டு கோவிலுக்கு செல்வதை பற்றி எடுத்துரைக்கும். 16 முதல் 30 வரையில் உள்ள பாடல்கள் வெண்ணை உண்ட கிருஷ்ணனை உருகி பாடப்படும். உன்னையே கணவனாக எண்ணி கொண்டுள்ள என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக பாடப்பட்டது.

இவ்வாறு திருப்பாவை பாடலின் அமைப்பானது அமைந்துள்ளது. இதில் பாவை நோன்பு குறித்த செய்திகளுடன் வாழ்வியல் விழுமியங்கள் குறித்த செய்திகளும் அமைந்துள்ளன.

**தனிமனிதக் கட்டுப்பாடு**

திருப்பாவை என்று சுட்டப்படுகின்ற பொழுதே அதில் முதலாவதாக எண்ணக்கூடியது பாவை நோன்பே. பாவை நோன்பு இருப்பதன் வழி திருமாலை அடையலாம் என்ற எண்ணத்தில்

சுட்டப்பட்டுள்ளது. பாவை நோன்பு இருக்கும் முறையினைக் குறிப்பிடும் பொழுது ஆண்டாள்,

**“வையத்து வாழ்வீர்காள் நாமும் நம்பாவைக்குச்**
**செய்யும் கிரிசைகள் கேளீரோ**
**நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி**
**மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்”**

**(திருப்பாவை – பாடல் எண் 2)**

என்று குறிப்பிடுகின்றார். இதில் பரந்தாமனுக்காக நோன்பு இருக்க வேண்டும் என்று சுட்டுகின்ற பொழுது தனிமனித ஒழுக்கமும் கட்டுப்பாடுமே பிரதானமாக பேசப்படுகின்றது. நெய்யுண்ணோம், பாலுண்ணோம், மையிட்டு எழுதோம், மலரிட்டு நாம் முடியோம் என்று சுட்டுகின்ற பொழுது புற அழகிற்கும் ஆசைக்கும் முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது என்று சுட்டுகின்ற நிலை தெரிகின்றது. அதிலும் குறிப்பாக நெய்யுண்ணோம், பாலுண்ணோம் என்று குறிப்பாக சுட்டுகின்ற காரணத்தை உற்று நோக்குகின்ற பொழுது, ஆயர்கள் வசிக்கின்ற பகுதியில் அவர்களுக்கு எளிதில் கிடைக்கின்ற பொருள் எப்பொழுதும் கண்முன்னே காண்கின்ற பொருள் இவையிரண்டுமே. எனவே இவை இரண்டையும் அச்சமூக மக்கள் விடுவதென்பது சிறிது கடினமான செயல். இதன் உட்பொருளாவது, கண்ணில் படுகின்ற பொழுது, இவையிரண்டின் மீதும் ஆசை எழத்தான் செய்யும். அதனை அடக்கலே மனக்கட்டுப்பாடு. ஆசையே அனைத்திற்கும் காரணம். எனவே ஆசையை அடக்குவதன் மூலமே வாழ்வில் பரந்தாமனை மட்டுமல்ல அனைத்தையும் அடைய முடியும் என்று அறிவுறுத்துவதற்காக கிடைக்காத பொருளை விடுங்கள், என்று கூறாது எளிதாக நம் முன் இருக்கும் பொருளைத் துறக்க ஆண்டாள் சுட்டுகின்றார்.

மையிட்டெழுதோம், மலரிட்டு நாம் முடியோம் என்று குறிப்பிடுவதும் அதைனைப் போன்றதே. பெண்களுக்கு அழகுணர்ச்சி என்பது பிறப்பால் இயல்பில் அமைந்துள்ளது. இவ்வியல்பான ஆசையைக் கட்டுப் படுத்தி இருத்தலை இங்கு குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு மனக்கட்டுப்பாடே அனைத்து வெற்றிக்கும் வித்து என்ற சீரிய கருத்தை இதில் அறிய முடிகின்றது.

**உதவிடல்**

பாவை நோன்பு இருக்கும் முறையில் அடுத்து சுட்டுவது, ”ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி” என்று சுட்டுகின்றார். உலகில் உள்ள அறத்திலெல்லாம் தலையாய அறம் பிறருக்கு உதவிடல். நம்மால் முடிந்த அளவுக்கு நோன்பு காலத்தில் பிறருக்கு உதவிட வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். இதில் ஐயம், பிச்சை என்ற இரு சொற்களும் நோக்க ஒன்று போன்று தோன்றினும் இரண்டிற்கும் சிற்சில

வேறுபாடுகள் உள்ளன. ஐயம் என்பது வேண்டுபவர்களுக்கு நாம் தேடிச் சென்று உதவுவது. பிச்சை என்பது நம்மைத் தேடி வருவோருக்கு உதவுதல். எவ்வாறாயினும் நம்மால் முடிந்த அளவு பிறருக்கு உதவ வேண்டும் என்று கருத்து இதில் வெளிப்படுகின்றது.

**தீயனவற்றை ஒதுக்கல்**

பாவை நோன்பு நோற்கும் முறையில் அடுத்தபடியாக ஆண்டாள் குறிப்பிடுவது, ”செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்”. அதாவது இவ்வுலகில் செய்யக்கூடாது என்று ஒதுக்கி வைத்துள்ள செயல்கள் பல உள்ளன. அவற்றை நோன்பு காலத்தில் மட்டுமாவது செய்யாதொழிக்க வேண்டும் என்கின்றார். அதனைப் போன்றே இவ்வுலகில் கூர்மையான ஆயுதம் மனிதனின் வாய். அதனால் யாரையும் எளிதில் வீழ்த்தி விடலாம். பிறர் மனம் புண்படும்படியாகப் பேசுவதை ஒழிக்க வேண்டும்.

இவ்வாறு திருப்பாவையில் ஆண்டாள் பாவை நோன்பு இருக்கும் முறையினைச் சுட்டுகின்ற பொழுது வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய நல்லொழுக்கங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

**ஒற்றுமையுணர்வு**

பாவை நோன்பில் நீராடலே முதன்மைச் செயல், பின்பு பாவைக்களம் புகுந்து வழிபாடு செய்தல். இந்த அதிகாலைப் பொழுது, புனிதமானது. அப்பொழுதில் செய்யப்படும் காரியங்கள் சிறப்பாக அமையும். ஆதலால் அப்பொழுதில் வழிபடத் துணிகிறார்கள். கூட்டு வழிபாட்டு முறையில், பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்பிக் கொண்டு கூடிச்சென்று ஆறு, குளங்களில் நீராடுவர். அந்த அதிகாலை நேரத்தைத் தவறாமல் அவர்கள் கடைப் பிடித்துள்ளனர். தவறியவர்களை இடித்துரைத்தும், கேலிசெய்தும் அவர்களைச் செயலூக்கம் கொடுத்து அழைத்துச் செல்லும் பாங்கு போற்றுதற்குரியதாகும்.

**"எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும் நங்காய்!**
**எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்**
**சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்**
**பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய்"**

**(திருப்பாவை- பாடல் எண் 14)**

என்று ஆண்டாள் எழுப்பி அழைத்துச் செல்கின்றாள். இங்கு, "ஞாலம் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தாய் செயின்" (குறள் -484) என்ற குறளின் வழி இடம் காலம் கருதி செயல்பட்டுள்ளனர். மேலும் தனக்கு கிடைக்கும் நற்பேறு அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று எண்ணி ஒற்றுமையுணர்வுடன் செயல்படும் பாங்கினையும் அறிய முடிகின்றது. தங்களுடன் வர வேண்டிய பெண்ணொருத்தி வராவிடினும் விடாது அவளை அனைத்துப்

பெண்களும் வாசலில் நின்று அழைத்து கூவி அழைத்துச் செல்லும் ஒற்றுமையுணர்வு எண்ணி வியத்தற்குரியதொன்று.

**பொதுநலவுணர்வு**

பாவை நோன்பு இருப்பதன் நோக்கமே நாராயணன் தனக்கு கிட்ட வேண்டும் என்ற உணர்வே. இது சுயநலத்துடன் இருக்கும் விருப்பமே ஆயினும் பாவை நோன்பு இருப்பதால் கிடைக்கும் நன்மைகளைப் பட்டியலிடும் போது, ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி

**நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்**
**தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரி பெய்து**
**ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடுகயல் உகளப்**
**பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப**
**தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி**
**வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்**
**நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்!**

**(திருப்பாவை – பாடல் எண் 3)**

இப்பாடலில் பொது நலத்துடன் பாவை நோன்பு இருப்பதன் பலன்களைச் சுட்டியுள்ளார் ஆண்டாள். ஆயர்குலத்தில் வசிப்பவர்களுக்கு நீர் வளமும் அதனால் ஆநிரைக் கூட்டங்களிடம் இருந்து கிடைக்கும் செல்வ வளமும் சுட்டப்பட்டுள்ளது.

**தொகுப்புரை**

வாழ்வியல் விழுமியங்கள் என்பது இலக்கியங்கள் மனிதனுக்கு வாழ்வியலைக் கற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் எழுதப்பட்டவை ஆதலின் அனைத்து வகை இலக்கியங்களிலும் அவை பிரதான இடத்தைப் பெற்றிருக்கும். அவ்வகையில் ஆண்டாளின் திருப்பாவையில் பக்திச்சுவை நனி சொட்ட சொட்ட பாடல்கள் காணப்படினும் வாழ்வியல் விழுமியக் கருத்துக்களும் ஆங்காங்கே உள்ளன.

- மனிதன் வாழ்வில் வெற்றி பெறுவதற்கு ஆசையை ஒழிக்க வேண்டும்.
- தன்னால் முடிந்தவரை தானமமும் தர்மும் பிறருக்கு அளிக்க வேண்டும்.
- வாழ்வில் செய்யக்கூடாது என ஒதுக்கியவற்றை நீக்க வேண்டும்.
- நாவொழுக்கம் தேவை.
- ஒற்றுமையுணர்வுடன் எத்தகைய செயலையும் செய்ய வேண்டும்.
- தனிமனித மேம்பாட்டிலும் பொதுநலத்துடன் திகழ வேண்டும்.

போன்ற கருத்துக்கள் ஆண்டாளின் திருப்பாவையில் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

**துணை நூற்பட்டியல்**

1. சடகோபன் .கு, . (உரையாசிரியர்), – சங்கத்தமிழ் மாலை, காவ்யா பதிப்பகம், சென்னை, 29.

2. வரதராசன் .மு. (உரையாசிரியர்) – திருக்குறள், சுதந்திர பதிப்பகம், சென்னை. (2017)
3. https://www.researchgate.net/publication/340439438_Analyzing_the_Devotional_Biology_of_Andalusian_LiceA_Study/fulltext/5e914546a6fdcca7890a4814/Analyzing-the-Devotional-Biology-of-Andalusian-Lice-A-Study.pdf

# திருமந்திரம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

**திருமதி. சே. மாசிலாமணி**

*உதவிப்பேராசிரியை*

*ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி, போடிநாயக்கனூர்*

## முன்னுரை

திருமூலர் அருளிய திருமந்திரம் என்ற இறைநூல், தமிழ்ச்சாத்திரம், தமிழ் மூவாயிரம், மந்திரமாலை என்ற பல பெயர்களில் கூறப்படுகிறது. இந்நூலில் உள்ள சிறப்பான கருத்தாழம் மிக்க பாடல்களினால் சைவத்திருமுறைகளில் பத்தாவது திருமுறையாக வைத்து போற்றப்படுகிறது. திருமந்திரம் ஒன்பது திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. பகுத்தறிவு கோட்பாடுடன் இந்நூலினை நோக்கும்போது ஆன்மீக நெறியில்; மக்கள் சிறந்து விளங்கினர். அதனால் அவர்கள்; அறநெறியில் வாழ்ந்து செம்மைநிலை அடைந்தனர். தற்பொழுது மக்கள் இந்நெறியிலிருந்து தவறி அமைதியை இழந்து சீரழிவை நோக்கி வாழந்து வருகின்றனர். இந்நிலையிலிருந்து விடுபடவும் மனஅமைதியுடன் நோயின்றி நீண்ட ஆயுளுடன் நிறைவான வாழ்க்கை வாழ திருமூலர் பொதுவுடைமை நோக்கில் வாழ்க்கைக்குத் தேவையான அறங்களைக் கூறியுள்;;ளார். 'தென் தமிழ்ப்பயன்' என்று சேக்கிழாரும், திருத்தொண்டத்தொகையில் சுந்தரர் அவர்களும் "நம்பிரான் திருமூலர் அடியார்க்கும் அடியேன்" எனப் பாடியுள்ளார். இறை உணர்வினைத் தமிழகத்தில் எடுத்துச் சொல்வதற்காகவே வந்திருப்பதாக திருமூலரே கூறியிருக்கின்றார்.

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"**

**திருமந்திரம்-152**

இத்தகைய சிறப்பினை உடைய திருமந்திரத்தில் உள்ள வாழ்வியல் கோட்பாடுகளைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

## நிலையாமை

திருமந்திரத்தில் 'யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, உயிர் நிலையாமை' என்று நிலையாமை பற்றிக் கூறுகிறார். நமது உடலைப் பற்றிக் கூறும் போது ஏழு தாதுக்களால் கட்டப்பட்ட இவ்வுடம்பு நான் யார் என்ற வினாவிற்கு விடையளிக்கும் விதமாக பசு, பதி, பாசம் முதலியவற்றைப் பற்றி கூறுகிறார். உயிர் இல்லாத உடல் நிலைத்து நிற்காது. இந்த உடலானது அழியும் தன்மை வாய்ந்தது. இளமையும் எப்போதும் நிலைத்து நிற்காது. செல்வமும் ஓரிடத்தில் ஒருவரிடம் இருந்தால்

மற்றொரு நாள் வேறொருவரிடம் சென்று விடும். செல்வமானது சகடகால் போல மாறி மாறி பயணம் செய்யும் என்பதை என்றும் இவை நிலையற்றது என்று கூறுகிறார்.

**“ஊரெல்லாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**

**பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்**

**சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு**

**நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே”**

**திருமந்திரம்-489**

என்று திருமந்திரத்தில் திருமூலர் உடல், உயிர், இளமை யாவும் ஒரு மனிதனுக்கு நிலையற்றது என்று கூறுகிறார்.

**அறவழிச் செயல்**

அறம் என்ற சொல் பரந்து விரிந்த பொருளையுடையது. திருக்குறளில் அறத்துப்பாலில்

**“காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்**

**அன்ன நீரர்க்கே உள”**

**- திருக்குறள்- 527;**

என்ற திருக்குறளில் வள்ளுவர், காக்கை தனக்கு கிடைத்ததை மறைக்காமல் தனது சுற்றத்தைக் கூவி அழைத்து உண்ணும் இயல்பு உண்டு. அத்தகைய இயல்பு அன்பு உடையவர்க்கே உண்டு என்கிறார். திருமூலரும் தனது பாடலின் மூலம்,

**“ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்**

**பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்**

**வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்**

**காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே”**

**- திருமந்திரம்- 250**

என்ற பாடல் வரி;யில் காக்கை தன் உணவைக் கண்டபோது மறைத்து வைக்காமல் அனைத்து காகங்களையும் அழைத்து பகுத்துண்ணும் பழக்கமும் வழக்கமும் கொண்டது. இதனால் மனிததர்மம் ஆனதுசெல்வம் பெருகியவன் அடுத்தவர்க்குப் பகிர்ந்து அளித்தலே யாகும். அதுவே அறவழிச்செயல் என்று திருமந்திரமும் கூறுகிறது.

**“எட்டி பழுத்த இருங்கனி வீழ்;ந்தன்ன**

**ஒட்டிய நல்லறஞ் செய்யாதவர் செல்வம்**

**வட்டி கொண்டீட்டியே மண்ணின் முகந்திடும்**

**பட்டிப் பதகர் பயனறி யாரே”**

**திருமந்திரம்- 258**

என்ற பாடல்வரியில் செல்வமானது எட்டிப் பழம் பழுத்து கீழே விழுந்தாலும் பயன்படாது. அதுபோல நல்ல அறம் செய்யாதவரின் செல்வமும் பயன அற்றது; வட்டி வாங்கிப் பணத்தைச் பெருக்;கும் வஞ்சனை உடைய பாதகர்கள் செல்வத்தின் பயனை அறிய மாட்டார்கள் அறத்திற்க்குப் பயன்படும் போது தான் செல்வத்திற்கும் சிறப்பு என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள். மேலும் அவர்கள் கொடிய

நோய்களான இருமல், சோகை,ஈழை,வெப்பு போன்ற நோய்களால் பாதிக்கப்படுவார்கள் என்றும், அறம் செய்வாரைப் பாம்பு தீண்டாது இடி விழாது என்று கூறுகிறார்.

**“யாவர்க்கு மாமிறைவற்கொரு பச்சிலை**
**யாவர்க்கு மாம்பசுவுக்கொரு வாயுறை**
**யாவர்க்கு மாமுண்ணும் பொழொரு கைப்பிடி**
**யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே”**

**திருமந்திரம்- 252**

என்ற பாடல்வரிகளின் மூலம் ஒருமனிதனின் அறச் செயல்களைப் பட்டியலிடுகிறார். இறைவனை வணங்குவதற்காக ஒரு பச்சிலையும், பசுவுக்கொருவாய் உணவும், தான் உண்ணும் போது பிறர்க்கு ஒரு கைப்பிடி உணவும் பிறரோடு பேசுவதற்கு இனிதான சொல்லும் என மனிதனுக்கே உரித்தான செயல்கள் என்றும் அவற்றை எண்ணி அதன்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறார்.

ஒரு மனிதன் செய்யத்தகாத செயல்கள் என்று கொலை, களவு, கள், காமம், பொய்கூறல் ஆகிய ஐந்தும் மிகப் பெரிய குற்றச் செயல்களாகும் என்கிறார்.

**“கொலையே களவுகட் காமம் பொய் கூறல்**
**மலையான பாதக மாம் அவைநீக்கித்**
**தலையாஞ் சிவனடி சார்ந்தின் பஞ்சார்ந் தோர்க்**
**கிலையாம் இவைஞானந்தத் திருத்தலே”**

என்று கூறுகிறார். மேற் கூறிய இக்குற்றங்களைத் தவிர்த்து தன் தலையின் மேல் இறைவன் திருவடிகளைச் சூடி எல்லாம் வல்ல இறைவனின் இன்பததைப் பெற்று பேரின்பம் அடைய வேண்டும் என்பதே திருமூலரின் நோக்கமாகும்.

**“ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்**
**ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்**
**ஆசைப்படப் பட ஆய்வரும் துன்பங்கள்**
**ஆசை விடவிட ஆனந்த மாமே”**

**-திருமந்திரம்- 2570**

என்ற பாடல் வரியில் மக்கள் அனைவரும் தன்னுடைய விருப்பத்தினை பொருளில் ஈடுபடாமல் ஆசையை முழுவதுமாக நீக்கியும், அந்த ஆசைஈசனுடன் என்றாலும் ஆசையை நீக்கி துன்பம் என்ற மாயப் பொருளில் உழலாமல் விலகி இன்பத்தை அடைய ஆசையை அறுமின் என்கிறார். இதையே புத்தர் “ஆசையே துன்பத்pற்கு காரணம்” எனக் கூறுகிறார்.

**ஆசிரியர் மாணவர் இயல்பு**

**“சற் குணம் வாய்மை தயாவி வேகம்; தன்மை**
**சற்குரு பாதமே சாயை போல் நீங்காமை**
**சிற்பர ஞானம் தெளியத் தெளிவோர்தல்**
**அற்புதமே தோன்றல் ஆகும் சற்சீடனே”**

**திருமந்திரம்- 1703**

என்ற பாடல் வரியில் மாணவன் குருவிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்குகிறார். நற்குணத்திடனும், உண்மை பேசுதல், அன்பு செய்தல், விவேகமுடைமை,

கருணையுடைமை போன்ற நல்ல குணங்களுடன் ஒரு மாணவன் திகழ வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். மேலும் ஒரு நல்ல ஆசிரியர் மாணவனிடம் உள்ள ஆணவம், கண்மம், மாயை போன்ற மும்மலத்தினை நீக்கி மாணவனுக்கு நற்குணங்களையும், உண்மையையும், அடக்கத்தினையும் கற்பிக்க வல்லவர் என்று ஆசிரியர் மாணவனின் இயல்புகளாக கூறுகிறார்.

**அன்பே சிவம்**

மனிதர்கள் மற்ற உயிர்களிடத்தில் செலுத்தும் அன்பில் தான் உலகம்; வாழந்து கொண்டிருக்கிறது. உலகத்தில் தோன்றியுள்ள கடவுள் சார்புடைய மதங்களும், கடவுள் மறுப்புச் சமயங்களும் அன்பினையே பெரிதும் போற்றுகின்றது. இதனை திருமூலா,;

**“அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்**
**அன்பே சிவம் ஆவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய அமர்ந்திருந்தாரே”**

**திருமந்திரம்-257**

மேற்கண்ட பாடலில் நமது உள்ளமே கோவில் இறைவனை அறிவதற்கும் அடைவதற்கும் இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று இறைவனை மனதிலேயே நினைத்து வழிபடும் தியானம் மற்றும் தவ வழிபாடு இது அகவழிபாடு முறையாகும். மற்றொன்று புறவழிபாடு பூஜை, தொண்டு ஆகியவற்றின் மூலம் உள்ளம் பெருங்கோவில் என்று கூறிய திருமூலர் கடவுள் வெளியே இல்லை உன் உடலினுள் இருக்கிறார் என்பது கடவுள் பற்றிய அவரது கொள்கையாகும்.

**“அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்றி**
**என்போன் மணியினை எய்த ஒண்ணாதே”**

**–திருமந்திரம் 259**

**“கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு**
**மகிழ்ந்தன்பு செய்யும் அருளது வாமே**

**-திருமந்திரம் 267**

கோயிலுக்குச் சென்று பூஜை செய்வது மந்திரம் சொல்வது படையல் வைப்பது மட்டுமே பக்தி இல்லை. நம் மனதினில் உண்மையான அன்பு வேண்டும். உள்மனமானது குழைந்து இறைவனை வணங்கிச் சரணடைய வேண்டும் என்கிறார். விண்வெளியையும், கோள்களையும் ஆராய்ச்சி செய்துள்ள இக்கால கட்டத்தில் தன்னை யார் என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும் என்கிறார். உன்னை நீயே அறிந்துகொள் அப்படிச் செய்தால் அனைத்தையும் அறிந்து கொள்ளலாம் என்கிறார்.

**“என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்**
**என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன”**

**திருமந்திரம் 2366**

ஆன்மீகமும் அறிவியலும் இரண்டும் ஒன்று என்கிறார். ஆன்மீகத்தால் தான் பெற்ற அறிவியல் கருத்துக்களை மக்களுக்காக எடுத்துரைத்தார்.

**முடிவுரை**

திருமூலர் உலக மக்களின் நலன் கருதி ஒருசில வாழ்வியல் தத்துவங்களை மக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறுகிறார். அத்தகைய அறநெறிக் கருத்துக்களையும் தத்துவங்களையும் கடைபிடிக்கும் போது வீடு, நாடு, சமுதாயம் என அனைத்து உயிர்களும் உலக மக்களும் பயனடைவார்கள் என்று கூறி இளமை, யாக்கை, செல்வம் இவையெல்லாம் நிலையற்றது என்றும் செல்வத்தின் பயன் வறியவர்களுக்கு கொடுத்து உதவுவதற்கே ஆகும். கொலை,களவு, கள், காமம், பொய்கூறல போன்ற செயல்கள் மூலம் மக்களுக்கு அறிவுரை கூறுகிறார். பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மனிதன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை தற்போது உள்ள மனிதர்களுக்கு விளக்குவதாக திருமூலரின் திருமந்திரம் விளங்குகின்றது. மேலும் ஆசிரியர் மாணவர் இயல்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் ஆசைநம்மை நல்வழியில் கொண்டு செல்லாது என்பதையும் தெளிவாக எடுத்துரைக் கின்றார். திருமந்திரத்தில் சுட்டியுள்ள வாழ்வியல் நெறிகளையும் தத்துவங்களையும் அனைவரும் கடைப்பிடித்து அனைவரும் வாழ்வின் பயன்பெறலாம்.

**துணை நூற்பட்டியல்**

1. பதிணென் சித்தர்கள் வரலாறு- சி.எஸ். முருகேசன்
2. திருமந்திரம் – விளக்க உரை – ஞா. மாணிக்கவாசகன்
3. அன்பே சிவம் – கு.அறிவுமதி
4. திருமந்திரம்- விரிவுரை – ஜி.வரதராசன்

# வாணிதாசனார் படைப்பில் விழுமியங்கள்

**முனைவர் சு. முத்தையா**

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*

*விவேகானந்தா கல்லூரி, திருவேடகம், மதுரை*

**முன்னுரை**

உலகில் மனிதகுலம் தமக்குத் தேவையான மானுட வாழ்வியல் விழுமியங்களை அமைத்துக் கொள்கிறது. அவ்விழுமியங்களுள் பல மனித இனக்குழுக்களுக்குள் வேறுபடுகின்றன. தமிழ் இலக்கியங்கள் புகட்டும் விழுமியங்கள் உலகு தழுவியதாக இருக்கின்றன. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர் வாணிதாசனார் படைப்பில் ஏராளமான வாழ்வியல் விழுமியங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. அவரின் தீர்த்த யாத்திரை என்னும் கவிதைத் தொகுதி கதைகள் வழி மானுட வாழ்விற்குத் தேவையான விழுமியங்களைப் பதிவு செய்திருக்கிறது. அவ்விழுமியங்களை மதிப்பிடுவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**வாணிதாசனார்**

கவிஞர் வாணிதாசன் (22.07.1915-07.08.1974) வில்லியனூரில் அரங்க. திருக்காமு, துளசியம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். அவர் இயற்பெயர் அரங்கசாமி என்ற எத்திராசலு என்பதாகும். 'கவிஞரேறு', 'பாவலர் மணி', தமிழகத்தின் வேர்ட்ஸ்வார்த்' என்று அழைக்கப்பட்டார். பிரெஞ்சுக் குடியரசுத்தலைவர் அவருக்குச் 'செவாலியர்' என்ற விருதினை வழங்கியுள்ளார். இரவு வரவில்லை, இன்ப இலக்கியம், இனிக்கும் பாட்டு, எழில் விருத்தம், எழிலோவியம், குழந்தை இலக்கியம், கொடி முல்லை, சிரித்த நுணா, தமிழச்சி, தீர்த்த யாத்திரை, தொடுவானம், பாட்டரங்கப் பாடல்கள், பாட்டுப் பிறக்குமடா, பெரிய இடத்துச் செய்தி, பொங்கற்பரிசு வாணிதாசன் கவிதைகள் (மூன்று தொகுதிகள்), விட்டர் விகோவின் ஆன்மெல்லோ ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

**தீர்த்த யாத்திரை**

தீர்த்த யாத்திரை என்பது புனிதத்தலம் நோக்கிய பயணம் என்னும் பொருள்படும். தீர்த்த யாத்திரை என்னும் நூல் 12 நீண்ட கவிதைகளைக் கொண்டது. அக்கவிதைகள் 1. தீர்த்த யாத்திரை 2.பெரிய மனிதர்கள் 3.திருடி 4.வீட்டிற் பகை 5.மன்னிப்பு 6.பேரின்பம் 7.புதுமொட்டு 8.யார் பொறுப்பு? 9.வேலையில்லாத் திண்டாட்டம் 10.வீரச் சிறுமி 11.கொலைகாரன்

12.பிள்ளைத்தாய்ச்சி ஆகிய தலைப்புகளைக் கொண்டன. இந்நூலில் இடம்பெற்ற முதல் கவிதை தீர்த்த யாத்திரை. இக்கவிதைகள் யாவும் எளியநடையில் தனித்தனிக் கதைகளைக் கூறுவதாக அமைந்துள்ளன.

**விழுமியங்கள்**

தமிழிலக்கியங்கள் காலந்தோறும் வாழ்விற்குத் தேவையான விழுமியங்களைப் புகட்டி வருகின்றன. மனிதகுலத்திற்கு வகுக்கப்பட்ட நெறிகளில் இருந்து மனிதர் யாரேனும் சிறிது தடம் மாறினாலும் அவர்களை நெறிப்படுத்துவதற்குப் பற்பல அறநெறிகள் பற்பல முறை வலியுறுத்தப்படுகின்றன. சங்க இலக்கியம் முதலாக நவீன இலக்கியம் ஈறாக அறநெறிகளின் அறுபடாத தொடர்ச்சியைக் காண இயலுகின்றது.

"ஒரு பண்பாட்டைச் சேர்ந்தோரின் வாழ்வியலுக்கும் செயல்களுக்கும், நடத்தைமுறைக்கும் (behaviour pattern) எவை எவை அவசியமென்று கருதப்படுகிறதோ அவையே அப்பண்பாட்டினரின் விழுமியங்கள் (values) ஆகும். மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து வாழ முற்படும்போது எவை எவை எல்லாம் இன்றியமையாதது எனக் கருதப்படுகிறதோ அவை பண்பாட்டு விழுமியங்கள்' (cultural values) எனப்படும். எடுத்துக்காட்டாக, 'அனைவருக்கும் சமவாய்ப்பு' (equality of opportunity) என்பது நம் சமுதாயத்தில் ஓர் இன்றியமையாத விழுமியமாகக் கருதப்படுகிறது. பண்பாட்டு விழுமியங்கள் தனிமனிதரின் விழுமியங் களிலிருந்து மாறுபட்டவை. தனி மனிதரின் விழுமியமானது அவரின் வாழ்விற்கு எவை அவசியமானவை, அவரின் நடத்தை முறைக்கு அவர் கூறும் அர்த்தங்கள் ஆகியவற்றைச் சார்ந்தது. பணம், அதிகாரம், தகுதி போன்றவை தனிமனிதரின் விழுமியங்களாக இருக்கலாம். ஆனால், பண்பாட்டு விழுமியங்கள் தனிமனிதரைச் சாராமல் அவர் சார்ந்த குழுவிற்கும் சமுதாயத்திற்கும் பொருந்தக்கூடியவையாக இருக்கும். அவை சமுதாயத்தில் நிகழும் நடத்தைமுறைகளை மதிப்பிட்டுக் கூறுவதாக இருக்கும் அல்லது அதற்கான அர்த்தத்தை வெளிப்படுத்துவதாக இருக்கும். எடுத்துக்காட்டாக, நீதிக்குக் கட்டுப்படுதல், அறம் செய்து வாழ்தல், வாய்மையே பேசுதல், வாய்மையே வெல்லும், பிறன்மனை நோக்காமை, நல்லது செய்யின் நல்லது விளையும், தினை விதைத்தவன் தினை அறுப்பான், உப்புத் தின்றவன் தண்ணீர் குடிப்பான் போன்ற எண்ணற்ற விழுமியங்கள் தமிழரின் வாழ்வில் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்தும் சமுதாய வாழ்விற்கு இன்றியமையாதவை என மதிக்கப் படுகிறது." (பக்தவசலபாரதி 2009 ப.159) தமிழர் வாழ்வியலானது பண்பாட்டு விழுமியங்களாலானது. அவ்விழுமியங்கள் பரந்துபட்ட பார்வை கொண்டதாக இலங்குகிறது.

**தீர்த்த யாத்திரையில் விழுமியங்கள்**

படைப்பின் நோக்கம் கலை கலைக்கானதாக மட்டுமே இருந்துவிடக் கூடாது. அது மக்களுக்கானதாக - சமுதாயத்திற்கு நற்பயன் விளைக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்ற படைப்பறமும் சமூக அக்கறையும் கொண்டதாக விளங்க வேண்டும் என்பது படைப்பாளரின் கொள்கையாக இருப்பதைத் தீர்த்த யாத்திரை வழி அறியமுடிகிறது. தீர்த்த யாத்திரை நூல் தமிழர் விழுமியங்கள் பலவற்றை பதிவு செய்கின்றது. ஒவ்வொரு கவிதையும் மானுட வாழ்விற்குத் தேவையான விழுமியங்களைக் கதைப் போக்கில் அறிவுறுத்துகின்றது. ஒழுக்கக் கேடுகளையும் கண்டிக்கின்றது. படைப்பாளர் தம் படைப்பில் இனியன எவை, இன்னாதன எவை, வேண்டியன எவை, வேண்டாதன எவை என நேரடியாகக் கவிக் கூற்றாய் சொல்லுதலுண்டு. சான்றாக முறையே கபிலர், பூதஞ்சேந்தனார், வள்ளலார், உலகநாதப்பண்டிதர் பாக்கள் அமைகின்றன. படைப்பாளி தம் படைப்பில் இடம்பெற்ற கதைமாந்தர்கள் வழி வாசகர்க்கு அறிவுறுத்துவதுண்டு. சான்றாக மு.வரதராசனாரின் படைப்புகள் அமைகின்றன. அவ்விரு நிலைகளிலும் இடம்பெறும் விழுமியங்கள் கொண்டதாகத் தீர்த்த யாத்திரை என்னும் படைப்பு அமைந்துள்ளது.

**அறவாழ்வு**

விழுமியங்கள் மிகுந்த மனிதன் ஒருவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்குச் சான்றாய் வாணிதாசனார் தீர்த்த யாத்திரை என்ற கவிதையில் அறிமுகம் செய்யும் வணிகர் ஒருவர் பொருந்தி வருகிறார். அவர் அறநிலையோடு வணிகம் செய்யக் கூடியவர். அழகானவர்; வலிமையானவர்; வாய்மை நிறைந்தவர்; கொடை வள்ளல்; அருங்குணம் படைத்தவர்; பிறருக்கு வந்த துன்பத்தையும் தனக்கு வந்ததாகக் கருதி வருந்துபவர்; பிறருக்குக் கொடுத்துதவும் செல்வந்தர்; பல புத்தகங்களைப் படித்தவர்; நுழைபுலம் உடையவர்; தமிழில் ஈடுபாடு கொண்டவர்; இனிமையாகப் பேசக் கூடியவர் என்று வாணிதாசனார் குறிப்பிடுகிறார்.

**"அறநிலை வணிகன் ; அழகன் ; திரண்ட**
**மறத்தோ ளாளன் ; வாய்மையின் இருப்பு**
**வருவோர்க் கெல்லாம் வழங்கும் வள்ளல்**
**அருங்குணத் தோன்றல் ; அயலார் முகத்தில்**
**வாட்டங் கண்டால் வாட்ட மடைவோன்**
**கேட்டதை நல்கும் பெருநிதிக் கிழவன் ;**
**நூல்பல கற்றோன் ; நுழைபுல முடையோன் ;**
**வேலை இல்லா வேளையி லெல்லாம்**
**தமிழுரை கேட்கும் தன்மையன் ; தமிழில்**
**மிகுசுவை யுடையோன்; வெல்லப் பேச்சினன் ;"**

**(தீர்த்த யாத்திரை ப.1)**

அவ்வணிகரின் மனைவி அழகு நிறைந்தவர், இனிமையாகப் பேசக் கூடியவர் என்கிறார் வாணிதாசனார்.

**"அழகோ வியமவள் ; பழகு தீந்தமிழ்**
**குழைந்த பேச்சினள் ; குறும்புக் காரி!"**

**(தீர்த்த யாத்திரை ப.2)**

இத்தகைய இயல்புகள் கொண்ட இருவரும் கணவன் மனைவியாய் இல்லறம் நடத்துகின்றனர். அக்குடும்ப வாழ்வில் பிறருக்குப் பொருளுதவிகள் பல நல்கி வாழ்ந்தனர் என்கிறார் வாணிதாசனார்.

**"நல்லறம் பேணி இல்லறம் நடத்தினர்**

**(தீர்த்த யாத்திரை ப.2)**

**"இல்லோர் இருப்போர்க் கீந்து பலநாள் வாழ்ந்தனர்;**
**மற்றவர் வாழ வாழ்ந்தனர் !"**

**(தீர்த்த யாத்திரை ப.2)**

இத்தகைய அறவாழ்வு குறித்த கருத்தாக்கங்களை நேர்மறையாகப் படைப்பாளர் வாசகரிடம் விதைக்கின்றார்.

**துயர்களைதல்**

பிறருக்கு வந்த துன்பத்தையும் தனக்கு வந்த துன்பமாகக் கருதி உதவுபவரே அறிவுள்ளவராகவும் கருணயின் வடிவமாகவும் கொள்ளப்படுவார். பெரியமனிதர்கள் என்னும் கவிதையில் பள்ளர் சமூகம் சார்ந்த கறுப்பன் என்பவர் வாயிலாகச் சில விழுமியங்களைக் கவிஞர் முன் வைக்கின்றார். கறுப்பன் கள்ளம் அறியாதவர்; பொறுப்போடு உழைக்கும் உழவர்; வெறுப்பு இல்லாதவர்; ஏழ்மை கண்டு பதறுபவர்; கொடுமைகள் அறிந்தால் அதில் கவனம் செலுத்துபவர்; நாட்டின் மீது அன்பு செலுத்துபவர்; தற்கொலைக்கு முயன்ற பெண்ணைக் காத்தவர்; பழக்கமில்லாத அப் பெண்ணிற்காக உயிரையும் தர முன்வருபவர் என்பதன் வழி சமூகம் பின்பற்ற வேண்டிய பண்புகளை முன்மொழிகின்றார். மேலும் துன்பத்தில் தத்தளிப்பவருக்கு நம்பிக்கை தரும் இதமான ஆறுதல் வார்த்தைகளைக் கூறுபவர்; ஆதரவற்றவர்க்கு உணவையும் உறைவிடத்தையும் உறவினர்களையும் தருபவர்; எதிர்காலம் குறித்த நம்பிக்கையை விதைப்பவர்; தூய்மை நிறைந்தவர்; பகையை விரட்டக்கூடிய ஏழை என்றும் குறிப்பிடுகிறார்.

**"என்னால்**
**தடுத்தாண்ட இவ்வுயிர்க்கே என்னுயிரை என்றும்**
**கொடுத்தாண்டு கொள்வேன்; கலங்கேல்!"**

**(பெரியமனிதர்கள் ப. 8)**

என்று முன்பின் அறியா ஒருவருக்கு இரங்குகின்ற உயிர்மநேயத்தை இக்கவிதை வழி கவிஞர் வெளிப் படுத்துகிறார்.

**கற்புநெறி காத்தல்**

தமிழர் வாழ்வில் நெகிழ்வற்ற விழுமியமாகத் தொடர்வது கற்பு நெறியாகும். பெண் உடலாலும் உள்ளத்தாலும் தூய்மையாக இருத்தல் கற்பெனக் கற்பிக்கப்பட்டது. இருபதாம் நூற்றாண்டில்

அக்கருத்தியல் கட்டுடைக்கப்பட்டது. பெரியமனிதர்கள் என்னும் கவிதைக் கதைமாந்தர் வழி தற்காப்பு, மானம், வீரம், தவறிழைத்தாரை ஒறுத்தல் உள்ளிட்ட விழுமியங்களைக் கவிஞர் முன் வைக்கிறார். அக்கதை மாந்தர் தன்னை வன்புணர முயன்ற பெரிய மனிதரைத் தாக்கிக் கொன்று தன் மானங் காக்கிறார்.

**"பொதுவாகப் புன்மையின் ஊற்றாம் கதவைத் திறந்துவிடு ! இன்றேல் செயல்வேறாம் ! ' என்றாள் ' "!"**

**(பெரியமனிதர்கள் ப. 13)**

**"கற்பெனப்படுவது சொல் திறம்பாமை"**

**(கொன்றவேந்தன் ப. 14)**

என்கிறார் ஔவையார்.

**"கற்புநிலை என்று சொல்ல வந்தால் இரு**
**கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"**

**(பெண்கள் விடுதலைக் கும்மி :5)**

என்கிறார் பாரதியார்.

கற்பு என்பது சொன்ன வண்ணம் செய்வதாகும். மேலும் அது பால்பாகுபாடு கடந்தது. திருடி என்னும் கவிதையில் படித்த இளைஞர்களின் மதிப்புகளை வாணிதாசனார் சுட்டுகிறார். ஓரிளைஞரைப் படித்த உழவர்; வலிமை வாய்ந்தவர்; சிரித்த முகத்தை உடையவர்; ஏழைக்கு உதவும் இயல்பை உடையவர்; இனிமையான சொற்களைப் பேசுபவர் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுபவர்; காதலித்தவரையே கைத்தலம் பற்றும் உறுதியாளர் எனக் குறிப்பிடுகிறார்.

மேலும் மனதால் ஆசைப்பட்டவரை விடுத்து மாற்றானை மணக்கமாட்டேன் என்னும் கருத்துப் பிடிப்பு கொண்ட பெண்ணையும் கவிஞர் காட்சிப்படுத்து கின்றார்.

"காட்டு மலர்க்கு நீட்டிய கழுத்து
நாட்டெம் மலர்க்கும் நீட்டா தத்தான்!
மறந்தால் வாழேன் ; வாழேன்!'
என்றாள் ! "

**(திருடி ப.19)**

பால்பாகுபாடற்ற சொல் திறம்பா மாந்தர்கள் வழி கற்பு என்னும் விழுமியத்தைக் கவிஞர் மக்களுக்கு ஊட்டுகிறார்.

'வீட்டிற் பகை' என்னும் கவிதையில் தற்கொலை செய்ய முயன்ற இளம்பெண்ணைக் காப்பாற்றி, வழிகாட்டி, அறிவுரைப் பகர்ந்து பெற்றோரிடம் ஒப்படைக்கின்றார் ஒருவர்.

" ஓர்நல்லாள்
சென்னிவரை மூழ்கித் திணறும் ஒலிகேட்டான் ;
பாய்ந்து குதித்தோடிப் பாவை உயிர்மீட்டான்" (வீட்டிற் பகை ப.23)

**"மணிப்புறவு போலெழுந்த மங்கை வழிமறித்து , '**
**வீட்டிற்குச் செல்வோம் ! உயிரை விழலாக்கல்**

**நாட்டிற்கே என்னாம் ? நட ! ' என்றான் ; பின்தொடர்ந்தாள் ... ;**

**...கருத்தே தொடர்வாள்வாழ்**

**நாளை நினைத்தே நலிய மனம்வருந்தி,**

**இல்லுக்கா கட்டும் ! இதிலென்ன தப்**

**(பு) ? ' என்றே"**

**(வீட்டிற் பகை ப. 26)**

தற்கொலை செய்தல் கூடாது. அது தீர்வாகாது. உலகம் பெரிது. வாழ்வதற்காகப் பிறந்துள்ளோம். தவறுகளைத் திருத்திக்கொண்டு வாழ்தல் வேண்டும். ஆபத்தில் இருப்பவரைக் காப்பாற்ற வேண்டும். நெறிப்படுத்த வேண்டும் என இக்கவிதை வழி கவிஞர் விவரிக்கின்றார்.

**பொறையுடைமை**

பொறுமை என்னும் பண்பானது இயந்திரமயமான இன்றைய உலகிற்குப் பெரிதும் தேவையான ஒன்றாக இருக்கிறது. மன்னிப்பு என்னும் கவிதையில் தகாத உறவு கொள்ளும் தன் மனைவியைக் கொல்ல முற்பட்ட கணவன் அவள் வயிற்றில் இருக்கும் குழந்தைக்காகக் கொல்லாமல் விடுவதும் பின்னர் தவறு உணர்ந்து வந்த மனைவிக்கு மன்னிப்பு வழங்கி ஏற்றுக்கொள்வதுமாகக் கவிஞர் காட்டுகிறார்.

**“நினைத்துப்பார், பிள்ளை ! ' யென்றாள் ! கழுத்தைக்கத்தி**

**தொடுநேரம் கண்டுவிட்டான் முன்ச ரிந்த தொந்தியினைக்; கலங்குகின்றான்! மனித னன்றோ "**

**("மன்னிப்பு ப.28)**

**“உங்கள் பணிபுரிவேன்! ' என்றுரைத்தாள் ! ' தவறல் இந்தப் பாரினிலே உண் ' டென்று சொன்ன துள்ளம்!**

**("மன்னிப்பு ப.29)**

இன்றைக்கு மனிதர்கள் சின்னஞ்சிறு விடயங்களுக்குக் கூட சினங்கொள்கின்றனர். ஆனால் வாணிதாசனார் வெகுளாமையை ஏற்கும் நோக்கில் கவிதை வழிப் போதிக்கின்றார்.

**நிலையாமை**

முடி சூடிய மன்னரும் முடிவில் பிடி சாம்பலாவர். நெற்றியில் பூசும் திருநீறு அதை நினைவூட்டுகிறது. சித்தார்த்தர் நிலையாமையை உணர்ந்து புத்தப் பெருமான் ஆனார். அதைப் பாடல் அடிகளில் கொணர்ந்து சேர்க்கிறார் கவிஞர்.

**"வீழும் எலும்புடலாய்க்**

**கடந்தான் அவ்வழி ஓர்முதியோன் !**

**...எனநினைத்தான் !**

**சித்தார்த் தன்மன எண்ணமெலாம்".**

**(புதுமொட்டு ப.39)**

உடல் அழியக்கூடியது; இளமை நிலையற்றது: இறப்பு உறுதியானது என்பவற்றைக் கவிஞர் புதுமொட்டு என்னும் கவிதையில் சுட்டுகிறார்.

**தன்னையே சார்ந்திருத்தல்**

மனிதன் ஒரு சார்ந்துண்ணி. இருப்பினும் அவன் பிறரையே நம்பியிராமல் தன்னையே சார்ந்திருக்கும் ஆளுமையை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். திருமணம் என்பது ஒரு பாலினர்க்கு இன்னொரு பாலினரைத் துணையாகக் கொள்ளும் உடன்படிக்கை ஆகும். அது புனிதமானதாகக் கருதப்படுகிறது. இருப்பினும் அவ்வுறவில் ஆணாதிக்கம் விஞ்சிக் காணப்படும். மேலும் திருமணம் பெண்ணுக்குக் கட்டாயமானதாக இருக்கிறது. மீறியவர் துறவியாக வாழ்தலும் விதிவிலக்காகிறது. பேரின்பம் கவிதையில் நாட்டையே வழங்கி அரசியாக்குவதாக அரசன் அழைத்தும் ஆண்களை அட்டைப் பூச்சிகளாய்க் கருதி மணமே வேண்டாம் என்று மறுக்கும் துணிவும் உறுதியும் கொண்ட பாத்திரமாகப் பெண்ணொருத்தியை வாணிதாசனார் படைக்கிறார்.

**“இனி**

**என்னை மறந்திடுவீர் ! -மனத்துள்**

**இல்லை எவர்க்குமிடம் !**

**(பேரின்பம் ப.31)**

ஆணின் துணையின்றி பெண் வாழ இயலும்; அரசிப் பட்டமும் வேண்டாம்; தான் என்னும் சுயத்தன்மையும் சுதந்திரமுமே வேண்டும். திருமண உறவால் இன்னொருவருக்கு அடிமையாக இருக்க வேண்டியதில்லை என்னும் கருத்தியல் கொண்ட கதைமாந்தரை இக்கவிதை வழி கவிஞர் உருவாக்குகிறார். வழக்கத்திற்கு மாறான இன்றைய தீவிரவாதப் பெண்ணியக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவான விழுமியமாக இது கட்டமைக்கப்படுகிறது. இது விதி விலக்கு.

**களவு செய்யாமை**

ஒழுக்கம், அறிவு, தன்னம்பிக்கை உள்ளிட்டவற்றிற்காகக் கல்வி கற்றலை விட வேலைவாய்ப்பை நோக்கியதாக இன்றைய கற்றல் அமைகிறது. கற்ற கல்விக்கேற்ற வேலை வாய்ப்பின்றி வறுமையில் வாடித் திருடத் தொடங்கிய நண்பனை உடனே திருத்தி, எந்தத் தொழிலும் இழிவானதன்று என உணர்த்தும் பண்பை, உணரும் பண்பை வேலையில்லாத் திண்டாட்டம் என்னும் கவிதை வழி வாணிதாசனார் கூறுகிறார்.

**"எந்தத் தொழிலும் இழிதொழி லன்று!"**

**(வேலையில்லாத் திண்டாட்டம் ப.40)**

**“வேலை யிலாதான் வேறென் செய்வான் ?**

**குரைத்துப் பெற்ற செல்வம் குரைக்குமா ?**

**உரைத்தான் இணக்கம் ; உயிர்வாழ லானான் !"**

**(வேலையில்லாத் திண்டாட்டம் ப.40)**

என்னும் கவிதையில் திருடுவது தவறு. உழைத்துப் பொருளீட்டும் தொழில் யாவும் உயர்ந்தது எனக் கவிஞர் இக் கவிதை வழி வலியுறுத்துகிறார்.

**நாட்டுப்பற்று**

பெற்ற தாயைப் போல பிறந்த நாட்டை நேசிக்க வேண்டும் என்ற சிந்தனை தமிழர்களிடம் வேரூன்றியுள்ளது. நாட்டில் மக்களாட்சியைத் தக்க வைப்பதற்காகத் தன் இன்னுயிரையோ இன்ப துன்பத்தையோ பற்றிக் கவலைப்படாமல் போராடும் பாத்திரங்கள் வீரச்சிறுமி என்னும் கவிதையில் சுட்டப்படுகின்றன.

**"தாயின் மேலாம் தாயக வேட்கை**
**மாய்தல் இல்லை: வரலாற்(று) உண்மை!**

**(வீரச்சிறுமி ப.44)**

இமைப் பொழுதும் சோராதிருத்தல், நாட்டிற்குழைத்தல், ரௌத்திரம் பழகுதல் ஆகியன வாழ்வியல் மதிப்பு களாகின்றன. பணத்தாசைக்கு மயங்காமல் நாட்டுப்பற்றுடன் மக்கள் கூட்டம் வாழ்கிறது. கோடிப் பொன் தந்து வீடு, விளைநிலம், விதவிதமான அணிகலன்கள் தருவதாய் ஆசை காட்டியபோதும் மயங்கிக் காட்டிக் கொடுக்காத ஆளுமையும் கயவர் கூட்டத்தைக் கூண்டோடு எரிக்கும் வல்லமையும் மக்களாட்சியை உண்மையாக நேசிப்பவர்க்கு உண்டு எனச் சிறுமி ஒருத்தி வழி வாணிதாசனார் காட்சிப்படுத்துகின்றார். வீரம் என்பது குறிப்பிட்ட ஒரு பாலினருக்கே உரியதன்று; பெரியோர்க்கே உரியதன்று; அது மாந்தர் யாவருக்குமானது என்பதை இச்சிறுமி வழி கவிஞர் உணர்த்துகின்றார்.

**"பெண்புலி போலப் பேசா தெழுந்தாள் ;**
**விண்ணைப் பார்த்தாள்; வெளியைப் பார்த்தாள்;**
**வீட்டைச் சுற்றி வெளிப்புறக் குழியில்**
**காட்டு விறகில் மூட்டினாள் தீயை!"**

**(வீரச்சிறுமி ப.46)**

நாட்டுப்பற்றை விட மேலான ஒன்று குடிமக்களிடம் இல்லை என்பதையே இக்கவிதை வழி கவிஞர் உணர்த்துகிறார். ஆனால் மானுடநேயம் நாடு கடந்தது.

**விதிமீறல்கள்**

உலகில் ஒவ்வோர் இனக்குழுவும் தமக்கான மரபார்ந்த விதிகளை உருவாக்கிப் பின்பற்றுகிறது. திருமணம் குறித்த விதிகளில் மிகுந்த கட்டுக்கோப்பைக் கொண்டிருக்கிறது. மீறுவோரைத் தண்டிக்கின்றது. கொலைகாரன் என்னும் கவிதையில் ஓர் இளைஞன் தான் காதலித்தவள் தன் தகப்பனின் இரண்டாவது மனைவியின் மகள் என்று அறிந்து, தவறுக்குக் காரணமான தந்தையைத் தண்டிக் கின்றான். இக்கவிதை குற்றம் இழைத்தவரைத் தண்டித்தல், குற்றம் சாட்டப்பட்டவரின் கருத்தை அறிதல், குற்றமிழைத்தவர் தவறை உணர்தல், காதலர் பெற்றோரின் இசைவோடு மணம்புரிய முற்படுதல் ஆகிய நற்செயல்களை நவில்கின்றது.

**முடிவுரை**

தமிழர்கள் பல்வேறு பண்பாட்டு விழுமியங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளனர். அவற்றை இலக்கியங்கள் வழி தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இருபதாம் நூற்றாண்டிலும் அவ்விழுமியங்கள் பேசப்பட்டுள்ளன. வாணிதாசனாரின் தீர்த்த யாத்திரை என்னும் பனுவல் பல்வேறு விழுமியங்களை வலியுறுத்தியுள்ளது. என்பன அவற்றுள் குறிப்பிடத்தகுந்த விழுமியங்களாகும். இவ்விழுமியங்கள் கவிதை கூறும் கதைப் போக்கில் போகிறப் போக்கில்' சொல்வது போல மிக இயல்பாய்ச் சொல்லப்பட்டுள்ளன. மேலும் அவை வாசிப்பவர் மனமுவந்து ஏற்கும் வண்ணம் அவர்களின் நெஞ்சில் விதைக்கப்பட்டுள்ளன.

**ஆதார நூல்கள்**

1. உஷாராணி சு. (உரை) பாரதியார் கவிதைகள் வர்த்தமானன் பதிப்பகம் சென்னை - 17 மூன்றாம் பதிப்பு ஜூன் 2019
2. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல் மெய்யப்பன் பதிப்பகம் சிதம்பரம் 608001 நான்காம் பதிப்பு அக்டோபர் 2009.
3. பத்மதேவன், தமிழ்ப்ரியன் (உரை) நீதிநூல் களஞ்சியம் கொற்றவை வெளியீடு, சென்னை - 600017 செப்டம்பர் 2016.
4. வாணிதாசன் தீர்த்த யாத்திரை (கவிதைக் கதை) வள்ளுவர் பண்ணை சென்னை-1 முதற்பதிப்பு பிப்ரவரி 1959.

# நா. இளங்கோவின் ‘மறுபக்கம்’ சிறுகதை வெளிப்படுத்தும் மானுடம்

**முனைவர் பா. சிங்காரவேலன்**
இணைப்பேராசிரியர் மற்றும் தழிழ்த்துறைத்தலைவர்
அரசுக் கலைக்கல்லூரி, மேலூர்

**திருமதி. த. முத்துலெட்சுமி**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை

**முன்னுரை**

மனிதன் சமுதாயத்தோடு இயைந்து வாழ்பவன். அதன் அடிப்படையில் அவன் படைத்த இலக்கியக்கியக் கருத்துகளும் சமுதாயத்தோடு தொடர்புடையது. மேலும் மனித நாகரீகப் பண்பாடுகளைப் பாதுகாப்பதிலும் வளர்ப்பதிலும் எழுத்துத்தாளனின் பங்கு மகத்தானது. கண்ணுக்கினிய காட்சிகள் ஓவியக்கலைக்கு பெருமை சேர்ப்பது போல், சிந்தனைகளைத் தூண்டக்கூடிய இலக்கியங்கள் எழுத்திற்கு பெருமை சேர்கின்றன. எனவே எழுத்திற்கு சிந்தனைத் தூண்டலே முத்திரை அடையாளமாகும் இன்றைய நவீன உலக காலகட்டத்தில் மனிதநேயத்தின் பண்பாடு குறைந்து கொண்டே வருகின்றது. நமது முன்னோர்களின் சிந்தனைகளில் பொதுச் சிந்தனைகள் மிகுந்தும் சுயநலம் குறைந்தும் காணப்பட்டன. ஆனால் இன்றைய அறிவியல் வளர்ச்சியில் அணு ஆயுதங்களின் பயன்பாடு போன்றவை மனிதனை சுயநலக்காரனாக மாற்றியுள்ளன என்பதே நிதர்சனம். “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்ற பொய்யாப்புலனின் சிந்தனையும் ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற திருமூலரின் சிந்தனையும் “யாதும் ஊரே, யாவரும் கேளிர்” என்ற கணியன் பூங்குன்றனின் சிந்தனையும் மனித நேயத்தின் மாற்றுருக்களாக தோன்றுகின்றன. சாதி, மதம், மொழி எனப் பரிந்து, சிலரின் சுயநலத்திற்காக விரோதம் வளர்க்கும் இன்றைய காலகட்டத்தில் மானுட சிந்தனைகள் அதிகம் தேவைப்படுகின்றன. அதை உணர்த்தும் நோக்கில் மானுடப் பண்புகளை நா.இளங்கோ அவர்கள் மறுபக்கம் என்னும் சிறுகதைகளின் மூலம் நமக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

அவற்றினை எடுத்துரைப்பதே இக் கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

**மானுடம்**

மானுடம் எனும் சொல் மனித குலம் முழுவதையும் உள்ளடக்கும் ஒரு முழுமை சொல்லாகவே உள்ளது. இச்சொல் இன்று பல்வேறு களங்களில் வழங்கப்பட்டு வருகின்றது. நாடு, மொழி,கால எல்லைகளைக் கடந்து ஒட்டுமொத்த மனித இனத்தையும் மனிதர் இயல்புகள், மாண்புகள் என அனைத்தையும் உள்ளடக்கிக் காட்டும் ஒரு குறியீட்டுச் சொல்லே மானுடம் ஆகும். ஆங்கிலத்தில் இதனை Humanism என்பர். "மனிதனை அன்றேல் மனிதநலத்தை மையக் கருவாகக் கொண்ட எந்நோக்கினையும் "ஹியூமனிஜம்" என்று கொள்ளும் மரபே மேனாட்டுச் சிந்தனைப் பாரம்பரியத்தில் இப்பெயரை பெற்றது" என்று கா. சுவதம்பி கூறியவற்றால் அறியலாம். இனம், மொழி, நாகரீகம் கடந்து எல்லோரும் ஓர் உரிமையுடையோர் என்னும் மனப்பான்மையே மானுடமாகும்.

"மனிதப்பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே", "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்றே மானிடத்தின் பெருமையினை வியந்து போற்றியுள்ளனர் நம் முன்னோர்கள். பல கோடி ஆண்டுகள் பாதை தெரியாமல் வாழ்ந்த மானுடம் இன்று விண்ணை எட்டும் வியத்தகு ஆற்றல் பெற்றுள்ளது. சிந்தனை அறிவாகி, அறிவு ஞானமாகி, பெற்ற ஞானம் மானுட வளர்ச்சிக்கு உரமூட்டியது. பல ஞானிகள், தத்துவ வித்தகர்கள், கருத்து கொடையாளர்கள், காவியப்படைப்பாளர்கள் மானுடத்தின் மேன்மைகாக தங்கள் சிந்தனைகளை விதைத்து மானுடத்தினை வளர்த்தார்கள்.

"முதற்கே உலகு" என்று முதற்குறளாய் தன் எழுத்தாணி மூலம் இயங்க விட்டான் பொதுமறை தந்த புலவர் பெருமான். "உலகம் யாவையும் தாமுளவாக்கலும்" என்றார் கம்பநாடார். "உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கரியவன்" என வாழ்த்தித் தொடங்கிய சேக்கிழார் "உலகெல்லாம்" என்றே தன் காவியத்தை நிறைவு செய்கிறார். "உலகம் உவப்ப வலனேர்ப " என ஆற்றுப்படுத்தி அருள்கிறார் நக்கீரர். உலகம்.... உலகம்.... உலகம்.... என்று இவர்கள் ஓதுவதன் உட்பொருள் எண்ணிப் பார்த்தால் உலக உயர்வுக்காக தம் ப டைப்புகளை உருவாக்கினர் என்பது நமக்கு புலனாகும். உலகை முதன்மைப்படுத்தியே தங்கள் கருத்துகளை மொழிந்தனர். இங்கு உலகம் என்பது ஆகுபெயராகி மக்களின் மானுடத்தினையேச் சுட்டுகிறது. இவர்களின் வரிசையில் நா.இளங்கோ மகதான மானுடத்தின் தன்மையினை தம் படைப்புகளின் வழியாக சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார்.

**மனிதாபிமானம்**

மனிதனின் மனநிலையானது மாறக் கூடியது. இன்றையக் காலக்கட்டத்தில் எத்தனை உயர்வான மனிதன் இருந்தாலும் உயர்வான எண்ணம் இல்லாமல் இருப்பது வருந்தக்கூடியதாக உள்ளது. 'மொய்ப்பணம்' என்னும் சிறுகதையில், கண்ணனும் கணுசனும் கல்லூரி காலத்தோழர்கள் ஒருநாள் நண்பர்கள் இருவரும் பேசிக்கடிகாண்டு போகும் போது விபத்தில் சிக்கவிருந்த தன் நண்பனைக் காப்பாற்றி தன் காலில் எலுப்புமுறிவு வாங்கிக்கொண்டவன் கணேசன். அப்படிபட்ட கணேசன் "தன்மகளின் கல்யாணச்செலவிற்காக ஆறாயிரம் ரூபாய் கடன் கேட்டான். மொய்பணத்தில் திருப்பித் தந்து விடுவதாகவும் சொன்னான். அவனது வாக்குத் தவறாத நிலை எனக்கு நன்றாகத் தெரியும். எனக்கு ஆறாயிரம் ரூபாய் என்பது பெரிதல்ல. ஆனால் சுமதி உதவ வேண்டாம் என்கிறாள்." என்று பலவாகு புலம்பி தவிக்கிறான் கண்ணன். தன்னால் உதவி செய்ய முடியாத நிலையோடு திருமணவரவேற்பு நிகழ்ச்சிகாக பயணித்த கண்ணன் மற்றும் அவரது மனைவி சுமதி ஆகிய இருவருக்கும் பலத்த அடி. அவர்களை கணேசன் தம்பதிகள் மருத்துவமணையில் அவர்களை சேர்த்து மருத்துவ உதவிக்கான பணத்தினையும் செலுத்தி காப்பாற்றியுள்ளனர்.

**"நீ கேட்ட பணத்தை என்னால் தரமுடியல எப்படிடா சமாளிச்ச? எனக் கேட்டதற்கு**

**"அய்யய்யோ! யார்கிட்டேயும் கடன்வாங்கலீங்க! மொய்பணமுங்க, அத்தனையும் மொய்பணமுங்க! உங்களுக்கு உதவாத மொய்பணம் எதுக்குங்க?**

கணேசனின் மனைவி சிதறிய வார்த்தைகள் சம்மட்டிகளாக மாறி என் நெஞ்சில் அறைந்தன.

நான் தேம்பித் தேம்பி அழ ஆரப்பித்தேன். நான் மட்டுமா! சும்மட்டிகள் சுமதியின் நெஞ்சிலும் அறையப்பட்தை அவளுடைய தொடர் அழுகை காட்டியது. ஆம் சுமதிக்கு நினைவு திரும்பி விட்டது. நினைவு மட்டுமா?"

"மனிதநேயமும், அன்பும், மெய்யான நட்பின் இலக்கணமாக விளங்கும் கணேசனைக் காட்டுவதாக அமைகிறது இக்கதை. வடிவ செம்மையும் மனிதத் தன்மையை எடுத்துக் கூறுவதாக அமைகிறது இக்கதை.

**வறுமை**

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்பது வள்ளுவனின் வாக்கு இவ்வாக்கு அன்று முதல் இன்று வரை மெய்யான வாக்காக உள்ளது. "அறம், பொருள், இன்பம் வீட்டையடைதல் நூற்பயனே" என்று நன்னூலாரும் குறிப்பிடுகிறார். இவ்வறுமையினைப் பற்றி அன்றைய புலவர்கள் முதல் இன்றைய புலவர்கள் வரை பாடாதவர்கள் இல்லை என்றே கூறலாம்." கொடிது, கொடிது வறுமை கொடிது என்றார் ஔவையார். பண்டைய காலத்தில் தொடங்கிய வறுமை

தற்காலத்திலும் நீடிப்பது பற்றி நெஞ்சுருகிய பாரதியும்,

**"கஞ்சி குடிப்பதற் கிலார் - அதன்**
**காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்**
**பஞ்சமோ பஞ்சம் என்றே நிதம்**
**பரிதவித்தே உயிர் துடித்துடித்துத்**
**துஞ்சி மடிகின்றாரே?**

என்று பாடுகின்றார்.

இந்தியா வளர்ச்சியின் உச்சிக்கு ஒருபுறம் சென்று கொண்டிருந்தாலும் மறுபுறம் கொடிய பிணியான வறுமையினை ஒரு சில சிறுகதை வழியாக சுட்டிக்காட்டியுள்ளார் நா. இளங்கோ.

'ஊறுவா' என்னும் சிறுகதை உழைக்கும் அடிமட்டத்து மக்களின் வறுமையை ஒருவாய் சோற்றுக்கு அல்லாடும் கொடுமையை, கணவன் இறந்த பின் வீட்டில் பத்துப்பாத்திரம் கழுவி பிழைப்பு நடத்தும் பெண் தன் மகனின் பசியினைப் போக்க தன் முதலாளி அம்மாவிடம் பரிதவித்து பெற்ற மீதமான பழையச் சோற்றினை ஆசையாக கொண்டு போய் தன் மகன் "உண்டனச்சோறு ... அய்யா !உண்டன சோறுச் சோறு என்று வழிநெடுக அதைப்பற்றியே பேசிக்கொண்டு வருகிறான். போராடி வாங்கி வந்த சோற்றில் கையை விட்டு கிண்டும் போது கையில் ஏதோ பட்ட மாதிரி தோன்றுகிறது.

**"அம்மா பசிக்குது சீக்கிரம் சோத்த போடு"**
**செல்லப்பாண்டியின் குரல் என் வவுத்துல புளியக் கரச்சிச்சு**
**'பல்லி விழுந்த சோத்தத் திங்கக் கூடாதுடா மவனே ! என் செல்லமே**
**நான் அழுதுக்கிட்டே சொன்னபடியே என் மவன் பக்கமா திரும்பினேன்**
**அவன் ஊறுவாவ சக்கிட்டிருந்தான்"**

பேச்சு மொழியில் எழுதப்பட்டுள்ள இக்கதையின் முடிவு வரி மிகமிக அழுத்தமாக மன வலிமையினை கொடுப்பதாக அமைந்துள்ளது.

**தீண்டாமை**

சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனும் பிற மனிதர்களை சக உயிர்களாகக் கருத வேண்டும். சாதி, மத, பண அடிப்படையில் எற்றத் தாழ்வை அகற்றி சமதர்ம எண்ணங்களோடு பழகும் மனதை பெற வேண்டும் என்ற எண்ணத்தை விதைப்பதாக பல சிறுகதைகளில் வெளிப்படுத்தியுள்ளார் நா. இளங்கோ. சாதி மற்றும் கருப்பு சிவப்பு தோல் போன்றவற்றினை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ள பெண்ணின் மனப்போரடத்தினை காட்டும் சிறுகதை 'நத்தம் இல்ல ரத்தம்' என்னும் சிறுகதை 'செவத்த உருண்டு திரண்ட உடம்பும் சுருட்டை முடியும் உள்ள தர்மராஜாவின் தாய் சிறுவயதிலேயே தன் கணவனை பாம்பு கடித்து பறிகொடுத்தவள், தன் மகன்தான் எல்லாம் என்று வாழ்ந்தவளுக்கு

தன் மகன் கருப்பாக உள்ள பெண்ணை திருமணம் செய்து கொள்ளவும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாமல் தவிக்கும் படிப்பறிவில்லாத தாயின் மூலம் கதை சொல்லப்படுகிறது. மக்களிடையே சாதி, மொழி, நாடு பால் வேறுபாடு காட்ட முடியாது அனைவரிடமும் ஓடும் ரத்தம் ஓரே நிறமானது என்றும் சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனும் பிற மனிதர்களை சக உயிர்களாக கருத வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது இக்கதை.

**சமுதாயப் பிரச்சனைகள்**

சமுதாயம் இன்று பல பிரச்சனைகளை எதிர்கொண்டு வலம் வருகின்றன. அப்பிரச்சனைகள் சமுதாயத்தில் வாழும் மக்களை பாதிப்படைய வைக்கின்றன. நா.இளங்கோ தமதுப் படைப்புகளில் பல இடங்களில் இதனை சுட்டிக்காட்டுகிறார்.

சருகு சிறுகதை விபத்து நடந்த இடத்தில் விபத்தில் காயம் பட்டவர்களுக்கு உதவும் மனப்பான்மை சிறிதும் இல்லாமல் எரிந்த வீட்டில் பிடுங்கியது ஆதாயம் என காணும் இழிவான மனிதர்களை சித்தரிப்பதாக இக்கதை உள்ளது. ஒரு நாள் ஒருவிபத்தில் தான் கண்ட கனவு கலைந்து விட்ட நிலையாக அமைந்துள்ளது இக்கதை. மகனை பொறியியல் படிப்பில் சேர்பதற்காக நகையை அடகு வைத்து பணத்தை கட்ட கல்லூரிக்கு செல்லும் முன் தம்பதிகள் விபத்தில் சிக்க மனைவி கமலம் முன் கணவர் ஒரு வாய் தண்ணீருக்காக போராடி உயிர் விடுகிறார்.

“அய்யா ! அவருக்குக் கொஞ்சம் தண்ணி கொடு;க்க உங்களைக் கெஞ்சி கேட்கிறேன் தயவு செஞ்சு தண்ணி கோடுங்கையா... என்று கெஞ்சினால் அவள். பெண் என்றால் பேயும் இரங்குமாம். சும்மா இரும்மா” என்று சொன்ன அவர்கள் பணப்பெட்டியை மூடித் தூக்கினர்”

வெளியில் தெரியும் தோற்றத்தில் ஒரு சிலர் நல்லவர்களாக தோன்றினாலும் தம் உள்ளத்திலும் செயலிலும் தீமை குணம் கொண்டவர்களாக காணப் படுவதைச் சுட்டிகாட்டும் சிறுகதையே மறுபக்கம் என்னும் கதை. பாலியல் சிந்தனைகளைத் தூண்டிவிடக் கூடிய ஒரு சிலரின் செய்கை சமுதாயத்ததை சீரழிக்கும் நச்சுப்பாம்பாக உள்ளதை எடுத்துரைக்கும் விதமாகவும் மனிதப் பண்புகளையும் சமூக வாழ்்வுயும் அழுத்தமாக படம்பிடித்துக்காட்டுவையாக இககதைகள் உள்ளது.

**நிலையாமை**

‘கிடக்கப்படுத்தார் கிடந்தொழிந்தாரே’ என்றார் திருமூலர். அவர் கூறிய கருத்ததை விளக்குவதாக எழுதப்பட்ட சிறுகதையே திருமந்திரம் என்னும் சிறுகதை. இக்கதை மனித வாழ்கை நிலையில்லாதது என்று கூறுகிறது. எதிர்பாராத அதிர்ச்சி தரும் முடிவு நோக்கி ஆர்வத்தினைத் தூண்டும் விதமாகவும் மனித வாழ்கை நிலையற்றது என்பதினை எடுத்துரைப்பதாக உள்ளது.

**முடிவுரை**

மனிதன் என்பவன் பல கலாச்சார கூறுகளைக் கொண்டிருந்நதாலும் மானுடம் ஒன்றுதான், அனைவரின் வாழ்க்கைத் தேவைகளும் ஒன்றுதான். மானுடத்தை ஒன்று சேர்க்க சமூகக் கருத்துகக்களை தமது படைப்பின் மூலம் சுட்டிக்காட்டியபாங்கு போற்றக்கூடிய ஒன்றாகும்.

**துணைநூற்பட்டியல்**

1. மறுபக்கம் - நா.இளங்கோ வைரமுத்து ஆய்வுக்களஞ்சியம் - நம்.சீனிவாசன்

# சங்க இலக்கியத்தில் பண்பாடு

**ச. முத்துவேல்**

*உதவிப் பேராசிரியர்*

*தேனி கம்மவார் சங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி*

*கொடுவிலார்பட்டி, தேனி மாவட்டம்*

## முன்னுரை

மனிதனை விலங்கினின்றும் வேறுபடுத்துவது பண்பாடாகும், ஒரு நாட்டினரை, சமுதாயத்தினரை அடையாளப்படுத்துவதும், அவரது பெருமைகளையும், சிறப்புகளையும் எடுத்தியம்பும் காலக் கண்ணாடியாகவும் அது திகழ்கிறது.

பண்பாடு என்பது பண்படு என்னும், சொல்லின் வினையடியாகப் பிறந்தது. பண்பட்ட நிலம் பண்பட்ட மனம் என்று கூறுவது போன்று பொருள் உணர்த்தக்கூடிய சொல்தான் பண்பாடு.

இசைவு பெறுதல், பண்படுதல், ஒன்றுபடுதல், இசைந்து ஒழுகுதல் போன்ற பொருளைக் குறிக்கிறது. அதாவது, பண்படுதலே பண்பாடு ஆகும்.

மக்கள் பண்பு என்று சொல்லப்படுவது உலக வழக்கம் அறிந்தொழுகுதல் என்று பண்பாடு குறித்து நச்சினார்க்கினியார் உரை வகுத்துள்ளார்.

சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப்பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கிறோம் என்று தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் கூறுகிறார்.

## பண்பாட்டு வாழ்க்கை

மானிட இனத்தின் உயர் பண்புகளால் அமைவதே பண்பாடு எனப்படும். மனிதன் காட்டுமிராண்டி வாழ்க்கையிலிருந்து பக்குவப்பட்ட பண்பட்ட நிலையில் வாழ்வதற்கு நற்பண்புகளே காரணம் ஆகும். தமிழர்கள் எல்லாவிதமான அறப்பண்புகளை உள்ளடக்கியவர்களாகவும் வாழ்ந்தனர்.

பண்பாட்டைப் போற்றி வாழ்ந்த அவர்களிடம் தென்பட்ட பண்புகளுக்கு மிகத் தலையாயப் பண்பு விருந்தோம்பல் பண்பு ஆகும்.

## விருந்தோம்பல் பண்பு

விருந்து என்றால் புதுமை, புதியவர் என்று பொருள். விருந்தே புதுமை என்பர் தொல்காப்பியர். இன்றைக்கு விருந்தினர் என்றால் உற்றார் உறவினர், நண்பர்கள் போன்றோரைக் கூறுகின்றோம். ஆனால் பண்டைக் காலத்தில் முன்பே

அறியாதவர்களாய் வீடு தேடி வருவோராயினும் விருந்தினர் எனப் பெற்றனர். விருந்தினரை முகம் மலர்ச்சியோடு உபசரித்தால் தான் விருந்து சிறக்கும். இதனையே திருவள்ளுவர்,

**"மோப்பக்குழையும் அனிச்சம் முகம் திரிந்து**
**நோக்கம் குழையும் விருந்து"**

**விருந்தினரைக் கையொழியாது போற்றிய செய்தி**

**'விருந்தோடு கைதுடவா'**

என்று கலித்தொகையில் காணப்படுகிறது.

இவ்வாறாகத் தமிழரின் தலையாய பண்பைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் பல எடுத்துரைக்கின்றன.

**இல்லற வாழ்க்கை**

நம் பண்பாடுகளுள் தலைசிறந்து விளங்குவது இல்லற வாழ்க்கையாலும் இன்று வாழ்க்கைக்கு அர்த்தம் புரியாமலே வாழ்ந்து கொண்டிருப்போர் பலர். ஆனால் சங்க இலக்கியங்கள் வாழ்க்கை என்பதற்கு இலக்கணம் வகுத்துக் கொடுக்கின்றன.

**அரும்பொருள் வேட்கையின் உள்ளம் துரப்ப**
**பிரிந்து உறை சூழாதி – ஐய விரும்பி நீ**
**என்தோள் எழுதிய தொய்யிலும் யாழநின்**
**மைந்துடை மார்பில் கணங்கும் நினைத்துக் கான்**
**சென்றோர் முகப்பப் பொருளும் கிடவாது**
**இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்**
**வளமை விழைத்தக்கது உண்டோ உளநாள்**
**ஒரோடு கை தம்முள் தழீஇ ஒரோஒகை**
**ஒழந்தவர் எல்லாரும் உண்ணாதும் செல்லார்**
**ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்**
**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை**
**சென்ற இளமை தாற்கு**

மனம் வாழக்கூடிய அன்பான வாழ்க்கையே இல்லற வாழ்வில் அடிப்படை பண்பாகும். அதுபோல ஒவ்வொருவரும் கடமையறம் ஆற்றினர். அகவாழ்க்கை அமைவதைக் கடமையாகக் கொண்டு மகளிரும் வினையறம் மேற்கொண்டு புற வாழ்க்கையைப் பேனிக் காப்பதை ஆடவரும் கடமையாக மேற்கொண்டனர்.

**வினையே ஆடவர்க்குயிரே வான்நுதல்**
**மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரென**
**நமக்கு உரைத்தோரும் தாமே**
**அழாஅல் - தோழி அழுங்குவர் செலவே**

என்று குறுந்தொகை கூறுகின்றது.

ஆடவர் பொருள்வயிற் பிரதலை மனையுறை மாந்தர் இயல்பென ஏற்றுக்கொண்டனர். ஆடவர் அவ்வாறு பிரிவதை மறுத்துக்கூறாது உடன் படுதலைத் தம் பண்பாகவும் கொண்டு இருந்தனர். அறஞ்செய்வதற்குப் பொருள் இன்றியமையாதது என்பதால் பொருள் வயிற் பிரிவது ஆடவர் பண்பாக இருந்தது.

**ஈகைப் பண்பு**

சங்க இலக்கியத்தில் ஈதல் பண்பை அறம் என்று ஔவையார் கூறியுள்ளார். தனிமனித வாழ்வில் இரத்தல் இழிவாகப் கருதப் பெறினும் சமூக

வாழ்வில் ஈகை உயர்ந்த அறமாகக் கருதப்பெற்றது.

**திருமணம்**

இல்லறத்தில் திருமணம் என்பது மனிதப் பண்பாடு. வாழ்வினைச் செம்மையாகச் செயல்படுத்த மண உறவு மிகமிகத் தேவை. தலைவனும்இ தலைவியும் இணையும் இல்லற வாழ்க்கையில் அன்பைப் பண்பாகவும் கொண்டு வாழ்வதே சிறந்த பண்பாகும். வேங்கைப்பூக்கும் காலம் திருமணம் நடத்துவதற்கு உரிய காலம்இ குறிஞ்சி நில மக்கள் வேங்கை மரத்தின் கீழிருந்து திருமண முடிவு செய்வர் என்பதை,

**நன்று ஆகின்றால் - தோழி நம் வள்ளையுள்**
**ஒன்றி நாம் பாட மறைநின்று கேட்டு அருளி**
**மென்தோட்ட கிழவனும் வந்தனன் நந்தையும்**

**மன்றல் வேங்கைக்கீழ் இருந்தது**
**மணம் நயந்தனன்**

என்ற கலித்தொகை பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

**பழிபாவங்களுக்கு அஞ்சுதல்**

மக்கள் பழிவாங்களுக்கு அஞ்சி வாழும்போது சமுதாயத்தில் குற்றங்கள் குறையும். இதைக் கடைபிடித்தவர்கள் சங்கச் சான்றார்கள். மன்னர்களும் குடிமக்களின் பழிக்கு ஆளாகும் வாழவேண்டும் என்று கொள்கை யுடையவர்களாக இருந்துள்ளனர். பாண்டியன் அறிவுடை நம்பி மக்கள் மீது அதிகவரி விதிக்க வரிச்சுமை கண்ட பிசிராந்தையார் வரியை குறைவாக முறையாக அமைத்தால் மக்கள் பயன்பெறுவர் இல்லையேல் நாடு சீரழியும் என்பதனை

**வரிசை யறி கல்லென் சுற்றமொரு**
**பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்**
**யானைபுக்க புலம் போலத்**
**தானு முண்ணா னுலகமும் கெடுமே**

என்கிறார்.

**கல்வி**

கல்வியின் மகத்துவத்தை நன்கு உணர்ந்தவர்கள் சங்க சான்றோர்கள். கல்வியானது தாயின் மனதையும் மாற்றும் ஆற்றல் பெற்றது. ஒரு குடியில் பிறந்தோருள்ளும் மூத்தோனுக்கு மதிப்பளிக்காது. அறிவுடையவனையே அரசனும் சிறப்பளிப்பான்.

**ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்**
**மூத்தோன் வருக வென்னா தவருள்**
**அறிவுடை யோனா நரசுஞ் செல்லும்**

என்ற ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியின் சிறப்பினை போற்றியுள்ளான்.

**முடிவுரை**

சங்ககாலச் சமுதாய இலக்கியங்கள் பண்பாடுகளை வலியுறுத்துவதன் மூலம் மக்களை

பண்பாட்டுக்கு வழிகாட்டுவதாய் அமைகின்றன. பண்பாட்டு வாழ்க்கை, விருந்தோம்பல் பண்புஇ இல்லற வாழ்க்கைஇ ஈகைப்பண்புஇ திருமணம் பழிபாவங்களுக்கு அஞ்சுதல்இ கல்வி ஆகியவற்றில் சிறப்புடன் விளங்கியமையை அறியமுடிகிறது.

**பார்வையிட்ட நூல்கள்**

1. கு.பெ. பாலசுப்பிரமணியன் – குறுந்தொகை
2. கு.வெ. பாலசுப்பிரமணியன் – கலித்தொகை
3. பெ. மாதையன் சங்க இலக்கியத்தில் குடும்பம்

# மானுடவியல் நோக்கில் முல்லை நில மக்களின் வாழ்வியலும் மதிப்புக்களும்

**ல. நிவேதா**

*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்*

*தமிழ்த்துறை உயராய்வு மையம்*

*அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழனி*

**முன்னுரை**

மானுடவியல் என்பது மனித குலத்தை ஆராயும் ஒரு தனிப்பெரும் துறையாக வளர்ச்சி அடைகிறது. இத்துறை மனிதனை உயிரியல் நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் ஆராய்கிறது. நாடோடி வாழ்வை மேற்கொண்டு வந்த தொடக்ககால மக்கள் நிலையான வாழ்க்கையை மேற்கொண்டபின் தாங்கள் வாழ்ந்த நிலத்தின் தன்மைக்கு ஏற்ப பலத் தொழில்களைச் செய்து வந்தனர். பிற்காலத்தில் பல தொழில்களைச் செய்தவர்கள் பல அமைப்புகளில் பிரிக்கப்பப்பட்டனர். இவ்வமைப்புகள் தோற்றம் பெற்ற பின் அவர்தம் சமூக அமைப்புகளிலும், பழக்கவழக்கங்களிலும் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டன. இம்மாறுதல்கள் மானுடவியலின் வளர்ச்சிக்கு வித்திட்டன எனலாம். இதன் அடிப்படையில் காடும் காடு சார்ந்த இடமும், மண்திணிந்த நிலமும் உடைய முல்லை நில மக்களும் அவர்கள் முதற்பொருளுடனும், கருப்பொருளுடனும் இணைந்து மானுட சமூகத்திற்கு நல்கிய பங்களிப்புகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**மானுடவியல்**

மானுடவியல் பற்றிய சிந்தனைகள் பல நுற்றாண்டுகளுக்கு முன்னரே தோன்றிவிட்ட மானுடவியலார் என்னும் பொருடைய 'anthropologist' என்ற சொல்லை முதன் முதலில் அரிஸ்டாடில் பயன்படுத்தினார். கிரேக்க முறையில் இச்சொற்கள் மனிதன், அறிவியல் என்னும் பொருளைச் சுட்டு மானுடவியல் எதைப்பற்றியது என்பதை மிகச் சுருக்கமாக கூறவேண்டுமானால் மனிதனைப் பற்றிய அறிவியல் என்று கூறுவதே பொருந்தும். ஐரோப்பியர்கள் வருகைக்கும் பின்னரே இந்தியாவில் மானுடவியல் தோற்றம் பெற்றது.

> **"உலகம் முழுவதும் எண்ணிலடங்கா வகைகளில் பரவி வரும் சமுதாயங்களின் பண்பாட்டை காலப் பரிமாணங்களுடன் ஆராயும் மானிடவியல் பிரிவே பண்பாட்டு மானிடவியலாகும்"**[1]

என்கின்றனர். சமுதாய மானிடவியல், பண்பாட்டு மானிடவியல் ஆகிய இரண்டும் இன வரைவியல், இன ஒப்பாய்வியல் ஆகிய இரு உட்பிரிவுகளின் அடித்தளத்தின் மீது செயல்படுகின்றன. மானுடவியல் என்பது

மானிடத்தோற்றம், உடலியல் தோற்றம், பண்பாட்டு வளர்ச்சி, இனவகைப்பாடு, மனித நம்பிக்கைகள் என எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு மரபு சார்ந்த வெளிப்பாடாகும்.

### முல்லை நில மக்கள்

காடும் காடு சார்ந்த பகுதியை முல்லை என அழைக்கப்படுகின்றது. முல்லை நில மக்களின் தொழிலான கால்நடை மேய்த்தல் என்ற முறையில் மேட்டுப் பகுதி நிலமாக இந்நிலம் அமைந்துள்ளது. அந்த வகையில் பழந்தமிழ்ச் சமூகம் பல இனக்குழுக்களின் வாழ்க்கை முறையைக் கொண்டுள்ளது. ஐவகை நிலமும் ஒவ்வொடு இனச்சமூகத்தை எடுத்தியம்புகின்றன. அந்த வகையில் முல்லை நில இனக்குழுமக்கள் இடையர்கள் எனப்பட்டனர். முல்லை நில மக்களான இடையர்களது எச்சமானது இன்று வரை காலம் காலமாக சமூகத்தில் பிரதிபலப்பதன் மூலம் சங்கப்பாக்களில் முல்லைநில மக்களின் வாழ்க்கை முறையை அறியமுடிகின்றது.

முல்லை நிலத்தில் கால்நடைத் தொழில் செய்யும் இடையர், ஆயர், கோவலர் எனப் பல பொருண்மைகளில் அழைக்கப்படுகின்றனர். கால் நடை மேய்க்கும் இவர்களை,

**'முல்லையாளர், கோவலர், இடையர்**
**சொல்லிய வண்டர், பொதுவர், ஆன்வல்லோர்**
**குடவர், பாலர், தொறுவர், கோவிந்தர்**
**அண்டர், கோபாலர், ஆயர், அமுதர் என்று**
**இங்கிவை முல்லை நிலத்தவர் பெயரே'**

என்று திவாகர நிகண்டு கூறுகின்றது.

திணை மாந்தர் பெயர் என்ற முறையில் முல்லை நில ஆயர் என ஆகாத்தல் தொழிலால் வரும் என்று

**"ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப்பெயர்**
**ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே"[2]**

என்னும் நூற்பா மூலம் தொல்காப்பியர் கூறுகிறார். சங்க இலக்கியங்களில் கால்நடை வளர்ப்பவர்கள் ஆயர், இடையர், கோவலர் என்ற பெயர்களில் முல்லை நில மக்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

### முல்லை நில மக்களின் வாழ்வியல்

மலைநாட்டு மக்களான குறிஞ்சி நில மக்கள் நடத்துவது போன்ற இன்ப வாழ்க்கையைக் கால்நடை வளர்ப்பவர்களான ஆயர்களும் முல்லை நிலத்தில் நடத்தி வந்தனர். இடையர்களின் வாழ்க்கை இடம்விட்டு இடம் அலைந்து திரிவதாக இருந்தது என்றும் ஆனால் முல்லை நிலம் செழிப்பாக இருந்த காரணத்தினால் அவர்கள் எல்லாக் காலங்களிலும் ஆடு, மாடுகளுக்கு வேண்டிய உணவு கிடைத்ததால் இடம் விட்டு இடம் பெயராமல் ஓரிடத்திலேயே நிலையாக தங்கி இருந்ததாக அறிய முடிகின்றது. கொல்லைகளில் குடிவாழும் ஆயர்களுக்கு உரிமையுடையதான சிறிய நிற்கும் குறுகிய கிளைகளைக் கொண்ட குரா புனத்தில் வளர்ந்த மரத்தின் குவிந்த கொத்தில் உள்ள வெண்ணிற மலர்கள் ஆடுகளை மேய்ந்தும் இடைமகன் அணிந்து மகிழும் வண்ணம் மலரும் என்று முல்லை நில ஆயர்களின் நிலை சுட்டப்படுவதை,

**"கொல்லைக் கோவலர் குறும்புனம் சேர்த்த**
**குறுங் காற் குரவின் குவி இணர் வான்பூ**
**ஆடுடை இடைமகன் சூடப் பூக்கும்"[3]**

என்ற நற்றிணைப் பாடலடிகள் எடுத்துரைக்கின்றது.

**முல்லையும் மானுட வாழ்வும்**

முல்லை நிலத்தில் மாலை நேரமானது பிரிந்திருக்கும் தலைவியின் கூந்தலில் முல்லை சூட உகந்த நேரமாகும்.முல்லை பூக்கும் மாலை நேரம் அந்த மாலை நேரம் முல்லை மணத்தால் தலைவன், தலைவி ஆகிய முதன்மை மாந்தர்களுக்கு இடையே மாலை மயக்கத்தை தரும் நல்வேளையாகும். மாலை நேர நிகழ்வில் முல்லையைப், பற்றி

**" விரை நீர் முடுக**

**செல்லும் நெடுந்தகை தேரே**

**முல்லை மாலை நகர் புகல் ஆய்ந்தே!"[4]**

நகருக்குள் மாலை நேரத்தில் சரியாக நாம் சென்று சேர வேண்டும் என்ற குறிக்கோளோடு தலைவனின் தேர் விரைவாகச் செல்கிறது என்பதை அகநானூற்றுப் பாடலின் வழி அறியமுடிகின்றது. கால்நடைச் சமூகமாகிய முல்லை நிலத்தில் மேயச் செல்லும் ஆநிரைகள் தம் இல்லம் திரும்பும் நேரம் மாலை நேரமாகும். அம்மாலை நேரத்தை தான் பிரிந்து சென்ற தலைவனும் தம் இல்லம் திருப்பும் நேரமாகத் தேர்ந்தெடுக் கின்றான் இங்கு மாலை என்ற சொல் முல்லையோடு இணைத்துச் சொல்வது குறிப்படத்தக்தது.

**முல்லை நில மக்களின் தொழில்கள்**

மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு அடிப்படையாக அமைவது தொழிலாகும். மக்கள் தாங்கள் வாழம் நிலத்தின் அடிப்படையில் தொழில்கள் அமைகின்றன. இதனடிப்படையில் காடும் காடு சார்ந்த நிலத்தில் வாழ்ந்த முல்லை நில மக்களின் தொழில்களும், மகளிரின் தொழில்களும் பதிவிடப்படுகின்றன. வைகறைப் பொழுதில், எழுந்து ஆய்ச்சியர் தயிர் கடைதலை

**"பால்கடை நுரையின் பரூஉ மதிப்பு"[5]**

என்ற பாடலடிகள் பதிவு செய்கின்றன. ஆயர் மகளிர் காலையில் தலையின் மேல் மெல்லிய சுமட்டின் கண் மோர்ப்பானையைக் கொண்டு சென்று புதிய மோரை விற்பர். அதற்கு ஈடாக நெல் முதலியவற்றைப் பெறுவார்கள். ஆயர் மகளிர் மோர் விற்றலை கலித்தொகை,

**"..................................................**

**பேருருஞ் சிற்றூருங் கௌவை யெடுப்பவள் போல்**

**மோரோடு வந்தாள்....................."[6]**

பாடல் வரிகளின் வழி காட்டுகிறது. மேலும் ஆயர் மகளிரும் ஆநிரையை மேய்ப்பதற்காக ஓட்டிச் செல்வார்கள். இதனை கலித்தொகை

**தீம்பால் கறந்த கலம்மாற்றிக் கன்றெல்லாம்**

**தாம்பின் பிணித்து, மனைநிறீஇ , யாய்தந்த**

**பூங்கரை நீலம் புடைதாழ மெய்அசைஇ, பாங்கரும்**

**முல்லையும் தாய பாட்டங்கால்! தோழி- நம்**

**புல்லினத்து ஆயர் மகளிரோடு எல்லாம்"[7]**

என்ற பாடல் காட்டுகிறது.

**முல்லை நில மக்களின் வாழ்வியலும் மதிப்புகளும்**

முல்லை நிலம் என்பது பண்டையத் தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐவகை நிலங்களில் ஒன்றாகும். பழங்காலத்து முல்லை நில மக்களின் வாழ்வியலைப் பற்றி அறிவதற்கு சங்க இலக்கியங்களே பயன்படுகின்றது. முல்லை நில மக்கள் வீரத்தையும், காதலையும் மதித்துப் போற்றனர். பழங்கால முல்லை நில மக்களிடமே ஏறு தழுவி மணமுடிக்கும் முறை காணப்பட்டது.

**"எளியவோ ஆயமகள் தோள்**
**விலை வேண்டா ரெம்மினத் தாயர் மகளிர்**
**கொலையேற்றுக் கோட்டிடைத் தாம் வீழ்வார் மார்பின்**
**முலையிடைப் போலப் புகின்"**[8]

என்ற பாடலடிகள் சங்க காலத்தில் திருமணத்தின் போது ஆண்களே பெண்களுக்கு பொருள் தரும் பழக்கம் இருந்தது என்றாலும் ஏறு தழுவிய ஆண்மகனிடம் பொருள் பெறுவதில்லை என்ற பழக்கம் முல்லை நில மக்கள் கொண்டிருந்ததைச் சுட்டுகின்றது. ஏறுதழுவுதல் காட்சிகளும் சங்ககால இலக்கியங்களில் முல்லைக் கலியில் மட்டுமே மிக அழகாக வருணிக்கப்பட்டுள்ளது.

பழங்கலைகளுள் ஒன்றான இசைக்கலையும் தோன்றியது. இவர்கள் தமது மனமகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்காகவே குரவைக் கூத்தாடினர் என்பதையும் இலக்கியங்கள் பதிவிடுகின்றன.

**முடிவுரை**

மனித சமுதாயம் என்பது பண்பாடு, நாகரீகம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்ததாகும். பண்டைய சமுதாயத்தில் வாழ்ந்த முல்லை நில மக்களிடையே நற்சிந்தனைகளும் நல்ல பழக்க வழக்கங்களும் நிரம்பி கிடந்ததை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. சங்க இலக்கியத்தில் முல்லைத் திணை அதன் தன்மையில் சிறந்து விளங்குவதைக் காண முடிகிறது. இயற்கையும், முல்லை நில மக்களின் வாழ்க்கை முறையும் ஒன்றியுள்ளது. ஏறு தழுவுதல் பற்றிய செய்திகளும் முல்லை நில மக்களின் வாழ்வியலும் மானுடவியல் நோக்கில் இவ்வாய்வின் மூலம் அறிய முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.150
2. தொல்காப்பியம் பொருளதிகாரம், அகத்திணையியல், நூ.எ.967
3. நற்றிணை ,பா.எ.266:1-3
4. அகநானூறு,பா.எ.324:13-15
5. மேலது, பா.எ.224:6
6. கலித்தொகை, பா.எ.109:6-7
7. மேலது, பா.எ.111:1-5
8. மேலது, பா.எ.41

**துணை நூற்பட்டியல்**

1. பக்தவத்சல பாரதி - பண்பாட்டு மானிடவியல், திருஞானசம்பந்தம் -

தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும் (அகத்திணையியல்)

2. சாமிநாதையர், உ.வே - நற்றிணை மூலமும் உரையும் வேங்கடசாமி நாட்டார், ந.மு - அகநானூறு மூலமும் உரையும்

3. சாமிநாதையர், உ.வே - கலித்தொகை மூலமும் நச்சினார்கினியர் உரையும்.

# திருக்குறள் உணர்த்தும் வாழ்வியல் அறங்கள்

**திருமதி M. பூச்செல்வி**

*உதவிப் பேராசிரியை, கணிதத்துறை*

*ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி, போடிநாயக்கனூர்*

**முன்னுரை**

உலகப் பொதுமறையாகத் திகழும் திருக்குறள் நீதிநூலாக மட்டுமல்லாமல் மனிதனின் வாழ்க்கைக்குத் தேவையான வாழ்வியல் உண்மைகளை கூறும் நூலாகத் திகழ்கிறது. திருக்குறளில் உள்ள கருத்துக்கள் இனம், மொழி, நாடு என்னும் எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை மேம்படுத்துகிறது. அறம், பொருள், இன்பம் என்று மூன்று பிரிவுகளில் திருவள்ளுவரால் இயற்றப்பட்டுள்ளது. பதிணென்கீழ்க்கணக்கு நூல்களில் முதலாவதாக வைத்து போற்றப்படுகிறது. இந்நூல் மனித வாழ்விற்கு தேவையான அறம் சார்ந்த கருத்துக்களை எந்தக் காலத்திற்கும் பொருந்தும் வகையில் எடுத்துக்கூறுகிறது. நமது பழங்காலத் தொன்மையான நூல்களில் பண்பாட்டுச் சிறப்பினையும், பல்வேறு அறநெறிக் கருத்துக்களையும் தன்னுள் உள்ளடக்கிய திருக்குறள் 'உலகப் பொதுமறை' என்ற சிறப்பினைப் பெற்றுள்ளது. அத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்குறளில் மானிட வாழ்க்கைக்கு தேவையான அறங்கள் பற்றிக் கூறும் கருத்துக்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**திருக்குறள்; உணர்த்தும் இல்லறம்**

இல்லறம் என்பது கணவனும், மனைவியும் இணைந்து வாழும் பண்பினை அன்புடனும், அறத்துடனும் வாழ்ந்து பயன்பெறுதலாகும். முனைவி மற்றும் குழந்தைகளிடத்தில் அன்பும், தேடிய பொருளை நட்பு சுற்றங்களுடன் பகிர்ந்து கொள்ளும் அறம் இருந்தால் அதுவே இல்லற வாழ்வி;ன் பயனாகும் என்று கூறுகிறார். இதனையே வள்ளுவர்

> **"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
> **பண்பும் பயனும் அது"**

**- இல்வாழ்க்கை 45**

இத்தகைய அன்பில் தான் மனித வளம் மேம்படும். அன்புடையவர் பிறர் துன்பம் கண்டு வருந்துவார்கள். தன்னிடம் உள்ள பொருள்களை தான் மட்டும் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்ற நோக்கத்தினை உடையவர்கள்.

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"**

**- அன்புடைமை 72**

என்கிறார் வள்ளுவர். இதன் மூலம் இல்லறம் நல்லறமாக இருப்பதற்கு அன்பு செலுத்துதல் என்பது முக்கியமான செயலாகும். ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்கும் விட்டுக்கொடுத்து வாழ்வதற்கும், இல்லற வாழ்க்கை சிறப்பாக அமைவதற்கும் அன்பே அடிப்படை என்று தெய்வப் புலவர் கூறுகிறார்.

**இல்லற வாழ்க்கையின் கடமை**

இல்லற வாழ்க்கை இனிதாக அமைய ஒரு பெண்ணின் பண்பும் கடமையும் மிகவும் முக்கியமானது. நற்பண்பும், நல்ஒழுக்கமும் கொண்டு கற்பொழுக்கத்தில் மேன்மையுடையவராக ஒரு பெண் இருக்க வேண்டும் என்பதை வள்ளுவர்

**"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**

**இல்லவள் மாணாக் கடை"**

**- இல்வாழ்க்கை- 53**

ஒரு வீட்டில் மனைவி நற்குணம் உள்ளவளாக இருந்தால் வளமான வாழ்வு அமையும். மாறுபட்ட குணம் பொருந்திய மனைவி அமைந்தால் வாழ்க்கை பயனற்றதாக அமையும். கணவன் ஈட்டும் பொருளுக்கேற்ப குடும்பத்தைக் கொண்டு செலுத்தி கணவனை தெய்வமாகப் போற்றி நன்மக்களைப் பெறுவதே இல்லாளின் சிறப்பு என்பதை திருவள்ளுவர்

**"மங்கலம் என்பமனை மாட்சி மற்றதன்**

**நன்கலம் நன்மக்கட் பேறு"**

**- வாழ்க்கைத் துணை நலம்;-60**

மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்றும், நல்ல மக்களைப் பெறுதல் அதற்கு அணிகலன் ஆகும் என்கிறார். தான் பெற்ற குழந்தைகளை வளர்த்தல் என்பது ஒரு கலையாகும். நமது வருங்கால சமுதாயம் சீரும் சிறப்புமாகத் திகழ குழந்தைகளை பண்புடனும், அறிவுடனும், ஒழுக்கத்துடனும், அற சிந்தனையுடனும் வளர்க்க வேண்டும். பண்புடைய குழந்தைகளைப் பெற்று வளர்த்தல் பெற்றோரின் கடமை என்கிறார் வள்ளுவர்

**"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**

**முந்தி யிருப்பச் செயல்"**

**புதல்வரைப் பெறுதல்;-67**

**விருந்தோம்பல்**

தமிழர் பண்பாட்டு மரபில் விருந்தோம்பல் பண்பு மிக முக்கியமான ஒன்று. செல்வத்தை தேடிச் சேர்த்து வைப்பதால் ஒரு பயனும் இல்லை. அச் செல்வத்தைக்கொண்டு தன் இல்லம் நாடி வரும் விருந்தினர்களுக்கு உபசரித்தலே மிகச்சிறந்த பண்பாகும். நமது பழந்தமிழர்கள் தங்களது வீட்டிற்கு வரும் விருந்தினர்களை முக மலர்ச்சியோடு வரவேற்று உபசரித்தனர். மேலும்

அவர்கள் திரும்பச் செல்லும்போது அந்த வீட்டில் உள்ளவர்கள் ஏழடி சென்று வழியனுப்பி வைத்ததாக பொருநராற்றுப்படை என்னும் நூலில் முடத்தாமக் கண்ணியார் குறிப்பிடுகிறார். இதனையே வள்ளுவரும் விருந்தோம்பல் என்ற அதிகாரத்தின் மூலம் தெளிவு படுத்துகிறார்.

**"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"**

**– விருந்தோம்பல் 81**

**"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று"**

**-விருந்தோம்பல்-83**

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகனமாந்து**
**நோக்கங் குழையும் விருந்து**

**"விருந்தோம்பல்-90**

அனிச்ச மலர் முகர்ந்து பார்த்த உடனே வாடிவிடுவதைப் போல முகம் மலராமல் வேறுபட்டு வரவேற்றால் விருந்தினரின் முகம் வாடிவிடும் என்கிறார். இல்லற வாழ்க்கையில் ஈடுபடுவோhகள்; பொருள்களைக் காப்பாற்றி வாழும் வாழ்க்கையெல்லாம் வந்த விருந்தினரை உபசரித்து அவர்களுக்கு உபகாரம் செய்வதற்காகத் தான் எனவும், விருந்தினர்களை முகமலர்ச்சியோடு உள்ளார்ந்த அன்போடு உபசரிப்பு செய்வதால் திருமகளும் விருமபி உறைவாள் என்பதை,

**"அகன் அமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து**
**நல்விருந்து ஓம்புவான் இல்" -84**

என்ற குறளின் மூலம் அறியலாம்.

**வாழ்வியல் கூறுகள்.**

வள்ளுவம் தான் தோன்றிய காலத்தில் மட்டுமல்லாமல் எக்காலத்திலும் மனிதனுக்கு வாழக்கூடிய வாழ்க்கை முறைகளைக் கூறுகிறார். மனிதன் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாக திருக்குறள் இயற்றப்பட்டுள்ளது. புவியில் வாழும் உயிரினங்களில் மிகவும் மகத்தான படைப்பாக மனிதப் படைப்பு உள்ளது. அவனது வாழ்க்கையினைப் பிரித்து அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பெரும் பிரிவுகளில் பிறர்க்கு பயன்படக்கூடிய வாழ்க்கை முறைகளை வாழ திருக்குறள் வழி வகுக்கிறது. மது அருந்துதலும், புலால் உண்ணுதலும் தவறு என்ற நிலையை மாற்றி மனித மனத்தினை மாற்றும் வழிகளைக் கூறுகிறார்

**சிறிய கட் பெறினே எமக்கீயும் மன்னே**
**பெரிய கட்பெறினே யாம்பாடத் தான்**
**மகிழ்ந்தது உண்ணும் மன்னே**

**-புறநானூறு - 235**

மது அருந்துதலும், புலால் உண்ணுதலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்கம் என்ற நிலையை மாற்றி மனித மனத்தின் வாழ்வின் பயனை எடுத்துக் கூறியுள்ளார். 'தேறல் மடுப்ப நாளும் மகிழ்ந்து இனிது உறைமதி பெரும' என்று

கள்ளுண்ணுதலை பெருமித வாழ்வாக எண்ணி இருந்த காலத்தில் அதனைச் சமுதாயத் தீமையாக கூறினார்.

**"உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரான்**
**எண்ணப் படவேண்டா தார்"**

**கள்ளுண்hமை-922**

**"ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்**
**சான்றோர் முகத்துக் களி"**

**கள்ளுண்hமை-923**

என்ற குறட்பாக்களின் மூலம் கள்ளுண்ணாமை பற்றியும் ஒருவன் கள்உண்டான் என்றால் அது அவனைப் பெற்ற தாயின் முகத்திலும்; துன்பம் தரும் செயலாக இருக்கும் என்று கூறுகிறார். குற்றம் கடியும் இயல்பு சான்றோர்களின் முகத்திலும் தெரியும் என்று கூறினார். தெய்வப்புலவர் வள்ளுவர் "புலால் மறுத்தல்" என்ற அதிகாரத்தில் விளக்கமாக எடுத்துரைக்கிறார்.

**"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்"**

**புலால் மறுத்தல்-**

என்ற குறட்பா மனிதன் எந்த ஒரு உயிரினையும் கொல்லாமல் வாழ்ந்தால் அவனை அனைத்து உயிர்களும் தொழும் என்று மனிதன் உயர்வதற்கான வழியைக் கூறுகிறது. அன்பு, பண்பு, நட்பு, புகழ் போன்ற வாழ்வியல் நோக்கங்களை மனித மனம் ஏற்கும் வகையில் தனிமனித வாழ்க்கையினை வள்ளுவர் தெரிவிக்கிறார்.

**அறநெறியில் வாழ்க்கை**

மனிதனின் வாழ்க்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. மனித மனங்களை தூய்மைப்படுத்தி அறவழியில் சமுதாயத்தை உருவாக்குவது திருக்குறளின் நோக்கமாகக் கருதப்படுகிறது.

**"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற"**

**அறன் வலியுறுத்தல் -34**

மனதில் எந்தவிதமான தீய எண்ணங்களும் ஆணவம், கன்மம், மாயை போன்ற அகங்காரங்களும் இன்றி மனம் தூய்மையுடன் இருக்கவேண்டும் என்று வாழ்க்கை நெறிமுறைகளைக் குறிப்பிடுகிறார். "அறமெனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாத இது கேள் மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும், உடையும், உறையுளும்"; என்ற மணிமேகலையில் உள்ள கருத்தினையொட்டி அறம் என்பது மனத்தூய்மை, ஈகை, காதல் என்ற தூய்மையான நெறிகளே ஆகும் என்று உணர்த்தியுள்ளார். மனிதர்களின் வாழ்க்கை நெறிகளை உயர்த்தும் கோட்பாடுகளாக மூன்று அறங்களைக் குறிப்பிடுகின்றார். ஆன்மீக அறம், ஈதல் அறம், காதல் அறம் என்பதாகும்.; கடவுளை அறிவு, ஆற்றல், அப்பாற்பட்ட நிலை என்றும் தெளிவுபடுத்திய தெய்வப்புலவர் மனித ஒருமைப்

பாட்டிற்கும், சமுதாய அமைதிக்கும் திருக்குறளின் மூலம் தெரியப் படுத்துகிறார். கடவுளின் பெயராலும் மதத்தின் பெயராலும் சண்டையிட்டுக் கொள்ளும் மனிதனுக்கு ஒரு புதிய ஆனமீக அறத்தினைக் கூறியுள்ளார். இறைவன் பேரறிவாளன், தூய்மையான அறிவுடையவன். ஆன்பின் திருவுருவமாக என்றென்றும் விளங்குபவன் என விளக்குகிறார். தனது முதல் அதிகாரமான கடவுள் வாழ்த்தில் இறைவனின் திருவடியைச் சேராதவர்கள் என்றென்றும் பிறவியாகிய பெருங்கடலில் கரைசேர மாட்டார் என்று விளக்குகிறார். மேலும் கடவுள் என்பவர் ஆணும், பெண்ணும் இல்லை என்றும் அவர் எல்லையில்லாதவர் கடவுளுக்கு கோபுரங்களோ, கோட்டைகளோ தேவையில்லை

**பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தாதார்**

**இறைவன் அடி சேராதவர்**

**கடவுள் வாழ்த்து-10**

மனிதனை தெய்வமாக உயர்த்துவது ஈகைப்பண்பேயாகும். பிறர்க்கு கொடுத்து மகிழும் மனம் பெற்றவனால் மட்டுமே பக்குவப்பட்ட உயர்ந்த நிலையை அடைய முடியும்.போட்டியும், பொறாமையும் அடுத்தவர் பொருள்களைக் கவரும் எண்ணம் இருந்தால் அது மனிதனை மிருக நிலைக்கு கொண்டு போய்ச் சேர்த்துவிடும் என்பதையும், ஈகைக்குணமே உயிரின் ஊதியமாகும் என்கிறார்.

**"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல**

**ஊதியம் இல்லை உயிர்க்கு"**

**புகழ்- 231**

என்ற குறட்பாவின் வழியில் அறியலாம் .

**முடிவுரை**

சங்க காலத்தை தொடர்ந்து தமிழுக்கும், தமிழர்க்கும் கிடைத்த அரிய களஞ்சியமான திருக்குறளில் உலகளாவிய சிந்தனைகளும் மனிதனை உயர்த்துவதற்கான பல அரிய நோக்குகளும் காணப்படுகிறது. திருக்குறள் தமிழனுக்குரியது என்ற நிலையைக் கடந்து உலகில் உள்ள மக்கள் அனைவருக்கும் உரியது. என்பதை உணர்ந்த பாரதி 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்கொண்ட தமிழ்நாடு' எனப் புகழ்ந்து கூறுகிறார். இதனை உணர்ந்த மதுரைத் தமிழ் நாகனார் 'எல்லாப் பொருளும் இதன் பால் உள' என்று கூறுகிறார். பாரதிதாசன் 'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே இவ்வையகம்' என்று சிறப்பிக்கிறார். ஔவையார் அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத்தரித்த குறள்' என்றும் சிறப்பித்துள்ளனர். திருவள்ளுவமாலை என்ற நூல் என்றென்றும் திருக்குறளின் பெருமையை பறை சாற்றுகின்றது. திருக்குறள் அன்பு, பண்பு. வாய்மை, இன்சொல், நன்றியறிதல் போன்ற பலவகையான மாண்புகளை எடுத்தியம்புகின்றது. காலமும் எல்லையும் கடந்து சிறப்பைக்

கூறுகின்றது. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்று காலத்திற்கும் மக்களின் வளர்ச்சிக்கு திருக்குறளில் உள்ள கருத்துக்கள் உறுதுணையாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**துணை நூற்பட்டியல்**


1. திருக்குறள் –தெளிவுரை பூவை. அமுதன்
2. திருக்குறள் மூலமும் உரையும் மு.வ.ரதராசனார்
3. வள்ளுவம் –வ.சு.ப. மாணிக்கனார்
4. பதிணென் கீழ்க்கணக்கு நூல்கள்- மூலமும் தெளிவுரையும்- ச.வே.சுப்பிரமணியன்

# சிலப்பதிகார வழக்குரை காதையில் மானிட வாழ்வியல்

**பெ. ரேணுகாதேவி**

*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)*

*ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி, போடிநாயக்கனூர்*

**முன்னுரை**

மானிடவியல் என்பது மனித இனத்தை ஆராயும் அறிவியல் துறையைச் சார்ந்தது. கள ஆய்வுக்களமாகத் திகழ்ந்து வந்த இத்துறை சமீப காலங்களில் இலக்கியத்தையும் ஆய்வுக்களமாகக் கொண்டு ஆராய்ந்து வருகின்றது. ஒரு குறிப்பிட்ட இனத்தை அல்லது இடத்தைச் சமூகத்தைச் சார்ந்த அனைத்துச் செய்திகளையும் அடையாளப்படுத்துவதுதான் மானிடவியல். அதனை அடிப்படையாகக் கொண்டு சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் வழக்குரை காதையின் வழி 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்ற சிலப்பதிகாரத்தின் மூன்று கருத்துக்களில் முதல் கருத்தினை மையமாகக் கொண்டு மானிட வாழ்க்கை முறை எவ்வாறு அமைந்தால் சிறப்படையும் என்ற செய்திகளையும், இலக்கியங்களில் மானுட வாழ்க்கைமுறையின் பண்புகள் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளன என்பதனையும் ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது.

**சிலப்பதிகாரத்தின் சிறப்புக்கள்**

காப்பியங்கள் என்றாலே அறம், பொருள், இன்பம், வீடு என்ற நால்வகைப் பயன்களை விளக்கு பவையாக அமையும். அத்தகைய சிறப்பு வாய்ந்த காப்பியங்களில் முதலாவதாக அமைந்த காப்பியம் சிலப்பதிகாரம். இக்காப்பியம் சிலம்பினை மையமாக வைத்து அமைந்தது. மனிதன் மனிதனாக வாழ வேண்டும் எத்தகைய சூழ்நிலையிலும் அறநெறியில் இருந்து தவறிவிடக் கூடாது என்பதற்காக அனைத்து மக்களுக்கும் எக்காலத்திற்கும் பொருந்தும் வகையில்மூன்று அறக் கருத்துக்களை தெளிவாக உணர்த்துகிறது.

**"அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூஉம்,**
**உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,**
**ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூம்,**
**சூழ்வினைச் சிலம்பு காரணமாக**
**சிலப்பதிகாரம் என்னும் பெயரால்**
**நாட்டுதும் யாம் ஓர் பாட்டு உடைச்செய்யுள்"**

**சிலப்பதிகாரம்- பா.எண். 55-60**

மேற்கண்ட இப்பாடலின் மூலம் அரசாட்சி செய்யும் முறைமையில் அரசன் சிறிது தவறினாலும் அவனை அறக்கடவுளே எமனாகிக் கொல்லும் என்பதும், கற்புடைய பெண்ணை இவ்வுலக மக்களே அன்றி தேவர் முதலிய உயர்ந்தோரும் போற்றுவார்கள் என்பதையும், நாம் முன்பிறவியில் செய்த நல்வினைகளும், தீவினைகளும் செய்த முறையால் செய்தவனைத் தொடர்ந்து தன் பயனை ஊட்டியே தீரும். ஆகவே நாம் நல்வினைகளைச் செய்து நல்ல கருத்துக்களை ஏற்றுக்கொண்டு அறத்தோடு வாழ Nவுண்டும் என்பதை இக்காப்பியம் உணர்த்துகிறது.

**வழக்குரை காதையின் வழி அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாதல்**

சிலப்பதிகாரத்தின் கதை நாயகனும், புகார் நகரில் வாழ்ந்த மாசாத்துவான் என்ற பெருவணிகரின் மகனான கோவலனிற்கும். மாநாய்கன் என்ற பெருவணிகரின் மகளான கண்ணகிக்கும் திருமணம் இனிதே நடைபெறுகின்றது. அதன்பின் விதி வசத்தால் கோவலன், மாதவி என்ற ஆடல் மகளிடம் சேர்ந்து தனது வாழ்வை தொடர்கிறான். பின்பு இந்திரவிழாவில் மாதவி கானல்வரி பாடல் பாடிய பொழுது அதில் ஊடல் ஏற்பட்டு இருவரும் பிரிகின்றனர். புறன்பு கோவலன் புகார் நகரை விட்டு பாண்டிய நாடான மதுரையை அடைந்து தன் வாழ்வை மேம்படுத்துவதற்காக கண்ணகியின் காற்சிலம்பை விற்கச் செல்கின்றான். அப்பொழுது பொற்கொல்லன் ஒருவனால் இவன் கள்வன் என குற்றம் சாட்டப்பட்டு பாண்டியன் நெடுஞ்செழியன் என்ற மன்னனால் தூக்கிலிடப்படுகிறான். இதனை அறிந்த கண்ணகி தனது மற்றொரு காற்சிலம்பினைக் காட்டி பாண்டிய மன்னனிடம் வாதாடி தன் கணவன் குற்றமற்றவன் என நிரூபிக்கிறாள்.

**“நல்திறம் படராக் கொற்கை வேந்தே!**
**என் கால் பொன் சிலம்பு மணி உடை அரியே”**

**சிலம்பு பா.எண்- 60**

**“தேமொழி உரைத்தது செவ்வை நல்மொழி**
**யாம் உடைச்சிலம்பு முத்து உடை அரியே**
**தருக எனத் தந்து தான் முன் வைப்ப”**

**சிலம்பு பா.எண்- 65**

**அறநெறியோடு வாழ்வதே வாழ்வு**

கண்ணகி மாணிக்க மணியைத் தன்னிடத்தே கொண்ட அணிகலனான காற்சிலம்பினைக் கையில் எடுத்து மன்னன் முன்னிலையில் உடைத்தாள். அச்சிலம்பினுள் இருந்த பரல்களுள் ஒன்று அரசனுடைய வாயிதழில் பட்டு தெறித்தது. அதனைக் கண்ட மன்னனும் தன் உயிரைத் துறந்தான்

**“தாழ்ந்த குடையன், தளர்;ந்த செங்கோலன்,**
**பொன்செய் கொல்லன்- தன் சொல்கேட்ட**
**யானோ அரசன்? யானே கள்வன்;;,**

**மன்பதை காக்கும் தென்புலம் காவல்**

**என் முதல் பிழைத்தது, கெடுக என் ஆயள்"**

**சிலம்பு பா.எண்- 75**

பாண்டியன் ஆராய்ந்து அறிந்து நீதியினை நிலைநாட்டாதவன். அதனால் 'யானோ அரசன்? யானே கள்வன் எனக் கூறிக் கொண்டே தான் செய்த குற்றத்திற்காக தன் இன்னுயிரை மாய்த்துக்கொண்டான். அறநெறியோடு வாழவதே வாழ்வு என்பதனை இதன்மூலம் நாம் அறியலாம்.

**அறத்தினை விதைக்கும் இலக்கியங்கள்**

திருக்குறளில் திருவள்ளுவர் சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூஉம், என்ற வரியினை சிறப்பிக்கும் வகையில் 'அறன் வலியுறுத்தல்' என்ற அதிகாரத்தில் அறத்தின் மேன்மையினை விளக்குகிறார்.

**"சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு**

**ஆக்கம் எவனோ உயிர்க்கு"**

**திருக்குறள் -31**

அறன் வலியுறுத்தல் என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் அறமே நமக்குச் சிறப்பினைக் கொடுக்கும், செல்வத்தினைக் கொடுக்கும். அறம் இல்லாத வாழ்வு வாழ்வே இல்லை என மனிதனை மனிதனாக்கும் கருத்துக்களை விளக்குகிறார்.

**'அறம் செய விரும்பு'**

**ஆத்திசூடி-முதல் வரி**

ஔவையார் தான் எழுதிய ஆத்திசூடியில் முதல் வரியிலேயே அறத்திற்கு முக்கியத்துவம் தருகிறார்.

**"அகத்தாரே வாழவாரென் றண்ணாந்து நோக்கிப்**

**புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி**

**மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்**

**தவத்தாற் றவஞ் யெ;யாதார்" நாலடியார் அறன் வலியுறுத்தல்**

**பா.எண.;-31**

முற்பிறப்பில் தவம் செய்யதார் இப்பிறப்பில் இல் வாழ்க்கையாரே வாழ்பவர்கள் என்று தலை வாயிலைப் பற்றி உள்ளே நுழையாதவர்களாய் வருத்தப்பட்டிருப்பார்கள் என்ற அறத்தின் சிறப்பினை நாலடியார் பாடல் விளக்குகிறது. இதனைப் போன்றே அனைத்து அற இலக்கியங்களும் அறத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன.

**அறத்தினால் வரும் சிறப்பும் பெருமிதமும்**

சிலப்பதிகாரம் வழக்குரை காதையில் கண்ணகி பாண்டிய நாட்டின் மன்னன் பாண்டிய நெடுஞ்செழியனிடம் தன் கணவன் கோவலனிற்காக நீதியை நிலைநாட்டச் செல்கிறாள். அங்கு பாண்டிய மன்னன் நீர் சொரியும் கண்களுடன் வந்திருப்பவளே நீ யார்? ஏன வினவுகிறான்.

**"தேரா மன்னா! செப்புவது உடையேன்**

**எள்அறு சிறப்பின் இமையவர் வியப்ப**

**புள்உறு புன்கண் தீர்த்தோன், அன்றியும்,**

**வாயில் கடைமணி நடு நா நடுங்க**

**ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுட தான் தன்**

**அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்,**

**பெரும் பெயர்ப் புகர் என்பதியே, அவ்ஊர்**

**ஏசாச் சிறப்பின,; இசை விளங்கு பெருங்குடி**

**மாசாத்து வாணிகன் மகனை ஆகி**

**………………………………………..**

**நின்பால்**

**கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி**

**கண்ணகி என்பது என்பெயரே"**

**சிலம்பு- பா.எண்- 50-60**

புறாவிற்காக தன் தசையையே அறுத்துக் கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியும் பசுவிற்காhக தன்மகனையே தேர்க்காலில் இட்டுக் கொன்ற மனுநீச்சோழனும் வாழ்ந்த புகார் நகரில் இருந்து வந்திருப்பவள் தான் நான் எனக் கூறியதோடு தான் வாழும் ஊரில் அறநெறி தவறாமல் ஆட்சி செய்தார்கள் என்ற செய்தியினையும் எடுத்துரைக்கிறாள்.

மேலும் நெடுஞ்செழியன் வாழும் அரண்மனையின் வாயிலைக் காக்கும் வாயிற் காப்போனிடம்

**"வாயிலோயே! வாயிலோயே!**

**அறிவு அறைபோகிய பொறி அறு நெஞ்சத்து**

**இறை முறை பிழைத்தோன் வாயிலோயே!"**

**சிலம்பு –பா.எண் 25**

ஆராய்ந்து அறியாமல் நீதியினை வழங்கும் மன்னனின் அரண்மனை வாயிலினைக் காக்கும் வாயிற் காப்போனே! ஏன இடித்துரைக்கிறாள்

**வழக்குரைக் காதை உணர்த்தும் மானிட பண்புகள்**

இலக்கியத்திற்கு இன்றியமையாத கூறுகளில் அறிவுக்கூறு என்பதும் ஒன்று. அறிவுக்கூறு என்பது செய்தி, சிந்தனை மானிட உண்மை, வாழ்வியல் உண்மை சிறந்த இலக்கியம் இதனை விளக்குவதாக அமைய வேண்டும்

இக்காதையில் அறத்திற்கு முக்கியத்துவும் கொடுக்கப்பட்டுள்ளது. அறநெறியில் இருந்து தவறினால் என்னவாகும்? அறநெறி இல்லாத வாழ்வு வாழ்வா? ஏன்பதனை விவரிக்கும் விதத்தில் அமைந்து இப்பண்புகள் இருந்தால் தான் சிறப்பு என்பதனையும் எடுத்தியம்புகிறது.

**ஆய்வின் மூலம் அறியும் செய்திகள்**

அற வாழ்வு மடடுமே நமக்குச் சிறப்பான வாழ்வினைத் தரும். நாம் அனைவரும் மனச்சாட்சியின்படி வாழவேண்டும். அறமே என்றும் சிறப்பினையும் செல்வத்தினையும் கொடுக்கும். நாம் செய்யும் குற்றங்களுக்கான தண்டனைகள் அடுத்த பிறவியிலும் தொடர்ந்து வருகிறது. எனவே நாம் நடுவுநிலைமையோடு வாழவேண்டும்

**முடிவுரை**

இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி. நாம் வாழும் வாழ்க்கையை மிகவும் துல்லியமாக எடுத்தியம்புவது இலக்கியங்களே ஆகும். நமது வாழ்வில் குறை இருப்பின் திருத்திக்கொள்ளவோம். நிறை இருப்பின் அதனையே வாழ்வின் எல்லை வரை தொடர்வோம் அறத்தின் வழி நின்று வாழும் வாழ்க்கையினை நேசிப்போம். அறத்தினையே உயிர் மூச்சாகக் கொள்வோம்.

**பார்வை நூல்கள்**

1. இலக்கியத் திறனாய்வியல்- முனைவர். தா.ஏ. ஞானமூர்த்தி
2. இலக்கியக்கலை- அ.ச. ஞானசம்பந்தன்
3. தமிழ் இலக்கிய வரலாறு – முனைவர் சிவப்பிரியா
4. சிலப்பதிகாரம் - முனைவர் ப. சரவணன்
5. தமிழ் இலக்கிய வரலாறு- பாவை தமிழ் உரை
6. புதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்- ச.வே. சுப்பிரமணியன்

Vol. 9 Special Issue 1 January 2025 E-ISSN: 2456-5571

# பொதுமறை காட்டும் வாழ்வியல் நெறிகள் - ஒரு பார்வை

**முனைவர் பா. சாந்தி**

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*

*ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌதியா கல்லூரி, உத்தமபாளையம்*

**முன்னுரை**

பொன்னாலும் பொருளாலும் நமக்கு கிடைக்கும் இன்பங்கள் எல்லாம் நிலையற்றது. நிலையான இன்பம் என்பது இலக்கியத்தினால் அடையக் கூடியது. இலக்கியம் என்பது வாழ்வின் கண்ணாடியைப் போன்றது..வாழ்க்கையைப் பிரதிபலிப்பது இலக்கியமே. வாழ்வியல் மற்றும் அறம் சார்ந்த செய்திகளை உள்ளடக்கியது. தனி மனிதனுடைய வாழ்க்கையில் செல்வாக்கு செலுத்துவதோடு வாழ்வியல் மாற்றங்களை ஏற்படுத்தவும் துணை செய்கின்றது.

மக்களின் வாழ்க்கை முறை அவர்களின் வீரதீர செயல்களினை எடுத்துரைக்க கூடியதாக அமைகின்றது. மனிதனின் தீரா வேட்கை பல்வேறு தவறுகளை செய்ய தூண்டுகிறது. அநீதிகளை தடுக்க நீதி இலக்க்pயங்கள் உருவாயின. சமூக கட்டமைப்பை ஒழுங்குபடுத்தி மக்களை அதற்கேற்ப வாழ வழிவகுக்க முயன்றதே இலக்கியத்தின் பணியாக இருந்திருக் கின்றது. உலகளாவிய அளவில் தமிழுக்கென்று ஒரு தனி இடமும், பெருமையும் உண்டென்றால் அப்பெருமை திருக்குறளைப் பெற்றதால் பெற்ற பெருமையே. ‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு’ என்று பாரதியார் புகழாரம் சூட்டுகின்றார். வள்ளுவர் வாழ்வில் எப்பகுதிக்கும் தீர்வு காணாமல் சென்றதே இல்லை. வாழ்வியல் அறங்களையும், வாழ்வியல் நெறிமுறைகளையும் அற இலக்கியமான திருக்குறள் உணர்த்துகின்றது. திருக்குறளானது பல்வேறுபட்ட வாழ்க்கைக்கான போதனைகளை எடுத்துரைக்க கூடியதாக இருக்கின்றது.

**கல்வியின் சிறப்பு**

சாக்ரடீஸின் புகழ் பெற்ற வாசகம் ஒன்று ‘உன்னையே நீ அறிவாய்’ என்பது. ஏன்? எதற்கு? எப்படி? எதனால்? எவ்வாறு? என்னும் கேள்விகளால் மக்களின் சிந்;தனையைத் தூண்டி விட்டார். அறிவால் சிந்தித்து நீயே அறிந்து கொள் என்கிறார் அறியாமை எனும் இருள் நீங்கி அறிவு எனும் ஒளியைப் பெறுவது கல்வியின் மூலமே அவ்வறிவானது வளர்ச்சியடைவதும் கல்வியால்தான். மனிதன் ஒழுக்கத்தை கடைபிடித்து சீராக வாழ்வதற்கு கல்வி அவசியமான ஒன்று. தனிமனிதன் மற்றும் சமூக

முன்னேற்றத்திற்கு மூல காரணமாக இருப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. எதிர்காலத்திற்கு நாம் சேர்த்து வைக்கும் செல்வமானது அழிந்து போகக்கூடும். அழிவில்லாத செல்வம் கல்வி மட்டுமே என்பதை வள்ளுவர்.

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு**
**மாடல்ல மற்றவை யவை**

**(குறள் 400)**

**கல்வியைக் காட்டிலும் சிறந்த செல்வம் வேறு இல்லை என்கிறார். மேலும்**

**யாதானும் நாடாமல் ஊராமல் என்ஒருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு**

**(குறள்-397)**

நிரம்ப கற்றவனுக்கு எந்த நாடும், எந்த ஊரும் சொந்த நாடாகவும் சொந்த ஊராகவும்; திகழும் என்றிருக்க ஒருவன் சாகும்வரை கல்;லாமல் இருப்பதை பற்றியும் வள்ளுவர் விளக்குகிறார்.

இதனையே, ஔவை மூதாட்டியும் 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்கிறார். ஒரு பிறவியில் தான் கற்ற கல்வியானது அவனுக்கு தொடர்ந்து ஏழு பிறவிகளிலும் அவனைப் பாதுகாக்கும் சிறப்புடையது.

மனித வாழ்க்கையை அறிவினால் மேன்மையுறச் செய்வது கல்வியே

**உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே**
**பிறப்போ ரன்ன உடன்வயிற்று உள்ளும்**
**சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்**
**ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்.**

**(புறம்-183)**

தமக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்க்குத் தேவைப்படும் பொழுது உதவி செய்தும் மிகுந்த அளவு பொருள் கொடுத்தேனும் பணிவோடு வெறுப்பின்றி கல்வி கற்றல் நன்று என்கிறது புறநானூறு பாடல். பாரதிதாசனும் இருண்டவீடு என்னும் நூலில்

**எல்லா நலமும் ஈந்திடும் கல்வி**
**இல்லா வீட்டை இருண்ட வீடென்க என்று கூறுகிறார்.**

**கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையவர் கல்லா தவர்**

**(குறள்-393)**

கல்வியைக் கற்றவர்கள் கண்ணுடையவார் கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்களை உடையவர் என்று வள்ளுவர் கல்வியின் சிறப்பினையும், கல்லாதவரின் இயல்பினையும் இடித்துரைக்கிறார்.

**நிலையாமை**

மானிட பிறவியாகப் பிறந்த ஒவ்வொரு மனிதனும் அறத்தைப் பின்பற்றி அதன் வழி வாழ வேண்டும். வாழ்க்கையில் நிலையாமை என்பதை புரிந்துக் கொள்ள வேண்டும். திருக்குறளுக்கு அடுத்த இடத்தில் வைத்து எண்ணப்படும் நூல்

நாலடியார். இந்நூலிலும் செல்வம், இளமை, யாக்கை இவையாவும் நிலையானது இல்லை என்ற அழகிய உவமைகளை விளக்குகிறது.

செல்வம் நிலையாமையைப் பற்றி;

**கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவிளிந் தற்று**

**(குறள்-332)**

ஒருவனுக்கு பெருஞ்செல்வம் சேர்வது கூத்தாடும் இடத்தில் கூட்டம் வந்து கூடுவதைப் போன்றது. கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவது போன்று செல்வம் அவனை விட்டு நீங்கிவிடும் என்கிறார் வள்ளுவர்.

**மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே**
**கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லுங் கலம்போல்**

**(திருமந்திரம்-217)**

தேனைச் சேர்க்கும் தேனீ போன்று சேர்த்த செல்வமும், செல்வத்தால் பெறப்படுகின்ற பொருளும் நீரில் செல்லும் மரக்கலம் கவிழ்வது போல அழிந்தொழியும் என செல்வ நிலையாமையைத் திருமூலர் கூறுகிறார்.

**பனிபடு சோலைப் பயன்மரம் எல்லாம்**
**கனிஉதிர்ந்து வீழ்ந்தற்று இளமை**

**(நாலடியார்-17)**

இளமை பருவமானது குளிர்ச்சி மிக்க சோலையில் உள்ள பயன்தரும் மரங்களிலிருந்து கனிகள் உதிர்வதனைப் போல இளமை ஒரு நாள் முதுமைப் பெறும் என்று இந்நூல் கூறுகிறது.

**குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே**
**உடம்பொடு உயிரிடை நட்பு**

**(குறள்-338)**

உடம்போடு உயிர்க்கு உள்ள உறவு முட்டைக்கூடு தனித்துக் கிடக்க அதனுள் இருந்த பறவைக்குஞ்சு பறந்து சென்றதைப் போன்றது என்கிறார் வள்ளுவர்.

**குடமுடைந் தால்அவை ஓடென்று வைப்பர்**
**உடலுடைந் தால்இறைப் போதும் வையாரே**

**(திருமந்திரம்-202)**

உடைந்த குடத்தைக் கூட ஓடென்று வீட்டில் ஓர் இடத்தில் பல நாள்கள் வைத்திருப்பர். ஆனால் உயிரில்லாத உடலை அவ்வாறு வைக்க இயலாது என்று திருமந்திரம் உரைக்கிறது.

எனவே நிலையானது,நிலையற்றது எது என்பதை உணர்ந்து இழிவான அற்ப ஆசைகளை விட்டொழிக்க வேண்டும்

**செய்நன்றியறிதல்**

மனித வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் தேவைகளும் ஏற்படும். சில நேரங்களில் தீங்கும் நேரிடும். அப்போது பிறருடைய உதவி தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட நேரத்தில் கிடைத்த உதவியையும், உதவியோரையும் மறக்காமல் நன்றியுணர்வோடு இருத்தல் வேண்டும் என்ற உயரிய பண்பாட்டை வள்ளுவம் நமக்கு கற்பிக்கிறது.

**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்க்கண்**

**விழுமம் துடைத்தவர் நட்பு**

**(குறள்-107)**

நன்றியுடையவர்கள் தங்கள் துன்பத்தைப் போக்கியவருடைய நட்பினை ஏழேழு பிறவியிலும் நினைப்பார்கள்.

**கொன்றன்ன இன்னசெயினும் அவர் செய்த**

**ஒன்று நன்றுள்ளக் கெடும்**

**(குறள்-109)**

கொள்வதைப் போன்ற தீமையை ஒருவர் நமக்கு செய்தாலும் அவர் செய்த நன்மை ஒன்றை நினைத்தால் அது மறந்துவிடும். புறநானூற்று பாடல் ஒன்று

**ஆன்முலை யறுத்த அறனில் லோர்க்கும்**

**மாணிழை மகளீர் கருச்சிதைத் தோர்க்கம்**

**பார்ப்பார் தப்பிய கொடுமை யோர்க்கும்**

**வழுவாய் மருங்கின் கழுவாயும் உளவென**

**(புறம்-34)**

பசுவின் பால்தரும் முலையை அறுத்து முலையால் பெறும் பயனைக் கெடுத்த தீவினையாளர்க்கும பெண்டிரது கர்ப்பத்தை அழித்தோர்க்கும் கூட அதிலிருந்து தப்பிக்க வழியுண்டு. ஆனால் செய்நன்றியை மறந்த ஒருவனுக்கு அவற்றிலிருந்து பிழைக்க வழியில்லை என்று கூறுகிறது.

செய்நன்றியறிதலுக்கு இராமாயணத்தில் கும்பகர்ணனையும் மகாபாரதத்தில் கர்ணனையும் இங்கு உதாரணமாகக் கூறலாம்.

**கள்ளையும்;. ஊனையும் மறுத்தல்**

மனிதன் மகிழ்சியாகவும் துன்பமாகவும் இருந்த போதில் கள்ளை உண்டு மகிழ்ந்திருந்தனர். சங்கத் தமிழர் விரும்பி உண்ட கள்ளையும் ஊனையும் வள்ளுவர் கண்டித்தார்.

**துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எந்நாளும்**

**நஞ்சுண்பார்கள் உண் பவர்**

**(குறள்-926)**

கள்ளுண்டவரை வள்ளுவர் உறங்குபவர் உயிருடையவரே ஆயினும் இறந்தவரை ஒப்பவர். அதுபோல கள்ளுண்பவர் அறிவு மயங்குதலால் நஞ்சுண்பவரே என்கிறார்.

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**

**எல்லா உயிரும் தொழும்**

**(குறள்-260)**

ஒரு உயிரையும் கொல்லாமலும், புலால் உண்ணாமலும் வாழும் உயர்ந்த பண்புடையவனை எல்லா உயிர்களும் கைதொழுது வணங்கும்.

**ஊனைத் தின்று ஊனைப் பெருக்குதல் முன்**

**இன்னா (23)**

**கொன்றுண்பான் நாச்சாம்**

**(சிறுபஞ்சமூலம்-8)**

உயிர்களைக் கொன்று அவற்றின் ஊனை உண்பவனின் நாக்கு அழியும் என்று இந்நூல்கள் கூறுகிறது.

**தொக்க விலங்கிற்;கும் புள்ளிற்கும் காடே**

**புலம்கெட்ட புல்லறிவாளர் வயிறு**

**(நாலடியார் -121)**

சமண சமயத்தின் உயிர் நாடியான கொள்கைகளுள் கொல்லாமையும், புலால்மறுத்தலும் அடங்கும். புலால் உண்பாரின் வயிற்றினை பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் உரிய சுடுகாடு என்று நாலடியார் விளக்குகிறது. வேள்விகள் ஆயிரம் செய்வதனைவிட ஒரு உயிரைக் கொன்று அதன் தசைகளை உண்ணாதிருத்தல் பெரிய அறம் என்கிறார்கள்.

**செங்கோலாட்சி முறை**

மன்னனின் ஆட்சி நேர்மையானதாகவும் நெறி வழுவாததாகவும் அமைய வேண்டும் என்பதன் பொருட்டே செங்கோல் என்னும் நேரிய தண்டு அரசன் கையில் காணப்படும்.

**வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்**
**கோல்நோக்கி வாழும் குடி**

**(குறள்-542)**

உலகத்தில் உள்ள உயிர்கள் மழையை எதிர்பார்த்து வாழும். குடிமக்கள் எல்லாரும் அரசனது செங்கோலை எதிர்பார்த்து வாழ்வார்கள் என்று மன்னனின் செங்கோன்மையை வள்ளுவர் விளக்குகிறார்.

மனுநீதிச் சோழன் எனும் அரசன் பசுவின் துயருக்காக தன் மகனைத் தேரினைச் செலுத்தி கொன்று நேர்மையான ஆட்சியினை நிலை நாட்டினான் என்ற செய்தியை நாம் அறிவோம். ஓர் அரசன் போரில் பெறும் வெற்றி படைபலத்தால் மட்டுமே அன்று அறநெறி வழுவாத ஆட்சியாலேயாகும்.

**முடிவுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் காலந்தோறும் அறம் சிறந்து விளங்குகிறது. வாழ்வியலில் நற்பண்புகளை எடுத்துக்காட்டுகிறது. மக்களாக பிறந்தவர்கள் எல்லோரும் உயர்வாக மதிக்கப்படுவதில்லை. அவர்களில் அற ஒழுக்கம் உடையவர்களே உயர்ந்தவர்கள் என மக்களால் மதிக்கப்படுகிறார்கள். ஒரு மனித இனத்தில் காணப்படும் நற்குணங்களான பொறுமை, சகிப்புத்தன்மை, அன்பு காட்டல் போன்றவற்றை தனது வாழ்க்கையில் கடைபிடிப்பதற்கு இத்தகைய இலக்கியமே காரணம்.

ஒரு மனிதனுடைய வாழ்வில் இன்பம், துன்பம் இரண்டும் மாறி மாறி வரக்கூடியது. இன்பத்தைக் கண்டு மகிழ்ச்சியில் ஆடாமலும், துன்பத்தைக் கண்டு துவண்டு போகாமலும் இருக்க வேண்டும் என்பதை இலக்கியங்களின் வாயிலாக எடுத்துரைக்க முடிகிறது. இ;து அடிப்படையில் வாழ்வியல் நூலாகும்.

**துணை நின்ற நூல்கள்**

1. திருக்குறள்-ஆசிரியர் புலவர் குழந்தை, பூம்புகார் பதிப்பகம் சென்னை -108 மு.ப - 2007

2. புறநானூறு –அ.ப.பாலையன், சாரதா பதிப்பகம் சென்னை-14 மு.ப-2008
3. நாலடியார்- புலியூர் கேசிகன்,சூர்யா பிரின்டர்ஸ் அண்டு பைண்டர்ஸ்- சென்னை, மு.ப-2013
4. திருமந்திரம்- மாணிக்கவாசகன் உமா பதிப்பகம்
5. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்- மூலமும் தெளிவுரையும் - சா.வே. சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம் சென்னை-08

Vol. 9 Special Issue 1 January 2025 E-ISSN: 2456-5571

# தெருகூத்தில் மக்கள்சார் – சடங்கியல்கள்

**பெ. செல்வம்**

*முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)*

*அ.அ.அரசு கலைக்கல்லூரி செய்யாறு*

*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு – வேலூர்*

**நாட்டுப்புற** நிகழ்த்துக்கலைகள் நாட்டுப்புற மக்களின் வாழ்வியலுடன் பின்னிணைந்துள்ளன. பல்வேறு சமூக, வெளிப்பாட்டின் அடிப்படையில் அவை உருவாகின்றன. அவையாவும் வெளிப்படுத்தும் உணர்வுகளுக்கு ஏற்ப மொழிவழியே இசை, பாட்டு என இயக்கம் கொண்டுள்ளன. தொடர்ந்து சமூகவியல் நிகழ்வுகளாலும் சடங்கியல், கலையியல், பொருளாதார மாற்றங்கள் என்னும் பல்வேறு சூழல்களுக்கு ஏற்ப அக்கலைகள் சிற்சில மாற்றங்களுடன் தொடர் நிகழ்வுகளாக நிகழ்த்தப் பெறுகிறது. அவ்வாறு தமிழ் மரபின் தொன்மை இலக்கியங்களாகவும் இதிகாசங்களாகவும் கருதப்பெறும் இராமாயணம் – மகாபாரதம் உள்ளிட்ட பிரதிகளின் கிளைக்கதைகளைத் தழுவிவாறு தமிழ்நாட்டில் ஆங்காங்கே நிகழ்த்தப்பெறும் தெருக்கூத்தின் மரபை ஆராய்ந்து அவற்றில் கணலாகும் மக்கள்சார் சடங்கியல் நிகழ்வுகளை விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நிகழ்த்துக் கலை**

'நிகழ்த்து கலை' என்பது அரங்கில் ஒருவரோ அல்லது பலரோ நிகழ்த்திக் காட்டும் கலையம்சத்தைக் குறிப்பதாகும். இது ஓவியம், சிற்பம், சிலையமைவு, எழுத்து என வடிவத்திற்கேற்ப வேறுபடுகிறது. நிகழ்த்துக் கலைகள் பெரும்பாலும் நுண்திறன் வெளிப் பாடுகளாக அமைந்து - காண்பவரின் உள்ளுணர்வுடன் உறவு கொள்ளு தன்மை கொண்டவைகளாக உள்ளன. அதனால் இவை 'நுண்கலைகள்' என்றழைக்கப்படுகிறது. இதில் சில 'நெகிழ் (சி)தன்மை' கொண்ட கலையாகவும் அறியப்ப பெறுகிறது. குறிப்பாக அரங்கில் நிகழ்த்தப்பெறும் கலை வடிவங்கள் இவ்வகையின. 'தெருக்கூத்து' என்னும் நுண்கலை வடிவமும் அரங்கத்தின் வழியே நிகழ்த்தப்பெறும் நிகழ்த்துக்கலையாக இருப்பதால் அதனையும் நெகிழ்வுத் தன்மைக் கொண்ட கலை வெளிப்பாடாகக் காணலாம்.

**'கூத்து' - சொல் விளக்கம்**

தமிழ் மரபில் 'கூத்து' என்னும் கலைவடிவமும் 'கூத்து' என்னும் சொல்லின் பயன்பாடும் தொன்று தொட்டே இருந்துவருகிறது. 'கூத்து' என்னும் சொல்லுக்கு ***"நாடகம், நடனம், வியத்தகு செயல், குழப்பம், விளையாட்டு, சேட்டை, நூதன செய்கை, கோலாகலம், பரிகாசக் கூத்து, பிரபஞ்ச நடிப்பு, திருக்கூத்து"1*** என பலவாறு பொருள் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. எனவே 'கூத்து' என்னும் சொல் ஆட்டம், நாடகம் என்னும் நிகழ்த்துக்கலை வடிவங்களைக் குறிப்பதாகிறது. மேலும் இச்சொல்லின் பயன்பாடு எதனை அடிப்படையாகக் கொண்டது? அல்லது எதனால் கூத்து என்ற சொல்லின் வழக்கம் ஏற்பட்டது என்பது குறித்த தெளிவான விளக்கங்கள் இல்லை. இருந்தும் இக்கேள்விகளுக்கு பேரா.அறிவுநம்பி, வே.மு.ஜகான்கனி, செ.இரவீந்திரன், கா.சிவதம்பி, பத்மநாபன், ரிச்சர்ட்ஃப்ராஸ்கா போன்ற ஆய்வாளர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். ***"குதித்தல் என்ற சொல்லை அடியாகக் கொண்டு 'கூத்து' என்ற சொல் உருவாகியிருக்க கூடும் என்று ஒரு கருத்தும் நிலவுகிறது"2 "ஆடுவார் தம் கால்களை நிலத்தில் குத்தி ஆடியதால் கூத்து என்றானது. குத்து என்ற சொல் பழஞ்சொல். அது மட்டுதல், ஊன்றுதல் என்னு பொருளில் வருகிறது"3*** இதன்றி சங்கப் பாடல்களில் 'கூத்து' என்னும் சொல் பொதுவாக எல்லா வகையான ஆட்ட முறைகளையும் குறிக்கப் பயன்பட்டுள்ளதையும் காணமுடிகிறது. ஆடல், கதை தழுவி வரும் கூத்து (நாடகம்) என்னும் நிகழ்த்துக்கலை வடிவங்களைக் குறிப்பிட பொதுவாகக் 'கூத்து' என்னும் சொல்லை உரையாசிரியர்கள் பரவராலப் பயன்படுத்தியுள்ளனர். எனினும்,

***"வாழ்க்கை அதுவாகக் கொண்ட முது பார்ப்பான்***
***வீழ்க்கைப் பெருங் கருங்கூத்து"4***

***"செடுக்குறித்தாரை உவகைக் கூத்தாட்டும்"5***

என்றவாறு கலித்தொகை 'கூத்து' என்னும் சொல்லை நேரடியாகக் குறிப்பிட்டுள்ளது. தொல்காப்பியத்திலும் 'கூத்தர், கூத்தியர்' என்னும் சொற்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால் 'கூத்து' என்னும் சொல்வழக்கு நேரடியாகக் குறிப்பிடப்படவில்லை. அத்துடன் காப்பிய இலக்கியத்தில் சிலப்பதிகாரம் 'கூத்து' என்னும் சொல்லினை பலவாறு சுட்டியுள்ளது. அதன்றி,

***"ஆட்டம் கூத்தில் அடிவாரம்மே***
***ஆட்டம் பாட்டம் அவிநயம் என்ன***
***மூவலை என்பர் கூத்தின் முறைமை***
***ஆட்டம் பிறந்தது பாட்டம்; பாட்டம்***
***அதனிடைப் பிறந்தது அவினயக் கூத்தே"6***

என்னும் சாத்தனாரின் கூத்த நூலில் இச்சொல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூல் எழுந்த காலம் எதுவென்று தெரியவில்லை. ஆனால் ஆட்டமும் பாட்டும் அவினயத்துடன் அமைந்த

நிகழ்த்துக்கலை ‘கூத்து’ என்பதை இப்பாடலடிகள் விவரிக்கின்றன. இம்மரபு நாட்டார் வழக்காற்றியலிலும் நாட்டுப்புற இலக்கியங்களில் பின்பற்றப்பட்டு இன்றளவில் நிகழ்த்து வரும் நிகழ்த்துகலை மரபாக ‘தெருக்கூத்து’ தமிழ் நாடெங்கிலும் பல்வேறு விழாக்களில் நிகழ்த்தப் படுகிறது.

**தமிழகத்தில் கூத்து**

தமிழ்நாட்டில் மற்ற மாவட்டங்களை விடவும் வடஆர்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களில் திரௌபதியம்மன் விழா நிகழ்வுகள் வெகுவிமர்சியாகக் கொண்டாடப்படுகின்றன. குறைந்த பட்சமாக விழா நிகழும் ஊர்தோறும் பத்து நாட்கள் இவ்விழா நடைபெறுவதைப் பரவலாகக் காணலாம். விழா தொடங்கி இரண்டொரு நாட்களில் பாரதபிரசங்க நிகழ்வுகள் தொடங்குகின்றன. அதனைத் தொடர்ந்து இரவு நேரங்களில் தெருக்கூத்து நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுகிறது.

திருவிழா நாட்களில் கோயிலிலும் தெருக்கூத்து நிகழ்விலும் பல்வேறு சடங்குகள் நிகழ்த்தப்பெறுகின்றன. அதில் தெருக்கூத்து கலைஞர்களின் பங்களிப்பு இன்றியமையாதாகிறது. பத்துநாள் திருவிழா முடியும் வரை தெருக்கூத்துக் கலைஞர்கள் அவ்வூரிலேயே தங்கியிருந்து வில் வளைப்பு, சுபத்திரைகல்யாணம், துகிலுரிப்பு, அருச்சுனன் தபசு, அரவான் களப்பலி, கிருட்டிணன் தூது, கர்ணமோட்சம், பதினெட்டாம்நாள் போர், படுகளம், அல்லி அருச்சுனன் முதலான பாரதக் கதையாடல்களை நிகழ்த்தி, அக்கதையாடலில் இடம் பெறும் கதைமாந்தர்களாகவே அவ்வூர் மக்களால் உணரப்படுகின்றனர். மேற்கண்ட பத்துநாள் நிகழ்வில் அருச்சுனன் தபசு, அரவான் களப்பலி, துரியோதனன் படுகளம் உள்ளிட்ட கூத்து நிகழ்வுகள் காலை, பகல் பொழுது, மாலை என பல்வேறு நம்பிக்கை சடங்குகளுடன் நிகழ்த்தப் படுகிறது.

**தெருக்கூத்தில் சடங்கியல் வெளிப்பாடுகள்**

கோயில்களில் திருவிழாவில் சடங்கியலின் ஒரு பகுதியாகவே தெருக்கூத்து நிகழ்கிறது. அதனால் தெருக்கூத்தின் பல நிகழ்வுகள் கோயிலுடன் தொடர்பு கொண்டுள்ளன.

> ***நாடகம் தொடங்குவதற்கு முன் கோயிலில் பூசைகள் நடைபெறும். அங்கிருந்து பூசை நடத்துபவர் திருநீறு எடுத்துவந்து நடிகர்களுக்குக் கொடுத்து ஆசி கொடுப்பார்”7***

நாடகம் முடியும்வரை மழையோ வேறுவித இடையீடோ ஏற்படக்கூடாது என்பதற்கான அவை நிகழ்த்தப் பெறலாம். அதுபோல, நாட்டார் நிகழ்த்துகலை மரபில் நடப்பியல் நிகழ்வுகள் மக்கள் வழக்காற்றியலை உலகியல் தன்மையின்கீழ் கால-இட வரைமுறைகளுக்கு

உட்பட்டு காட்சிகளாக பரிமாற்றம் செய்கின்றன. இத்தன்மையை நாட்டார் வழக்காற்றியல் மற்றும் பாரதக் கதையாடல்களில் இடம்பெறும் சடங்கியல்ளிலும் அதற்கான குறியீடுகளிலும் பார்க்க முடிகிறது. தெருக்கூத்தில் சடங்கியல் உடலசைவுகளாலும் சைகைகளாலும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. அதேபோல இவ்விரண்டுக்குமான பொதுமைக் கூறாக பழங்கதை யாடல்களும் மெய்யசைவுகளும் அமைந்திருக்கக் காணலாம்.

சடங்கில் 'உணர்ச்சி வயப்படுதல்' நிகழ்கிறது. அதனால் அந்த நபர் சிந்திக்கும் ஆற்றலை இழந்து, சாதாரண மனித இயல்புகளிலிருந்து மாறுபடுகிறார். அப்பொழுது அவர் வெளிப்படுத்தும் செய்கைகளும் அசைவுகளும் பண்பாட்டு வழி வந்த குறியீடுகளாக அமைகின்றன. எடுத்துக் காட்டாக உடலை முறுக்கேற்றுதல், நாக்கை மடித்துவைத்து பற்களைக் கடித்தல், கண்களை உருட்டுதல், ஆடுதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இச்செய்கைகளை கூத்துக் கலைஞர்கள் உணர்வுப்பூர்வமாக உள்வாங்கி சுய நினைவுடன் நிகழ்த்தும் பொழுது, இயல்பும் யதார்த்தமும் குறையும் சூழல் நிலவுகிறது. இவ்வாறு சடங்கிலும் கூத்திலும் ஈடுபடுவர்களின் உள்ளுணர்வின் நிலைபாடுகள் வேறுபட்டிருப்பினும் - சடங்கியல் விட்டுச்சென்ற காட்சிகளையும் நிகழ்வுகளை ஏந்தியவாறே கலைகள் வெளிப்படுகின்றன. அதன்வழி தெருக்கூத்து பாரதக்கதைகள் சுட்டிக்காட்டும் மண்ணியல் மணத்தையும் அடையாளத்தையும் விவரிக்கின்றன. இவற்றை கிராமங்களில் காணப்பெறும் சிறுதெய்வ வழிபாட்டு சிலைகளுடன் பொருத்திப்பார்த்து – தெருக்கூத்தின் ஒப்பனையால் உய்த்துணரலாம். அவ்வகையில் நாட்டார் வழிபாட்டு மரபுடனான சடங்கியல்கள் தெருக்கூத்து கலைஞர்களால் பெரிதும் வெளிப்படுத்தப்படுகிறது. சடங்கியலில் இடம்பெறும் முத்திரைகள் அல்லது சைகைகள் அதற்கு பெரிதும் துணைபுரிகின்றன. இதனை,

> ***"இன்றளவும் பாரதக்கூத்தில் கொடூரத்தன்மையை வெளிப்படுத்துவதாக இருந்தால் ஒலியெழுப்புதல், நாக்கினை மடக்கிக் கடித்தல், பற்களைக் கடித்தல், ஆட்காட்டி விரலைக் காட்டுதல், உடலை அசைத்து நடுக்குதல் போன்ற சைகைகளின் வழிக் கோபத்தையும் கொடூரத்தையும் கலைஞர்கள்*** *வெளிப்படுத்துகின்றனர்.* ***இச்செய்கைகளைக் கிராமத்து மக்கள் அவர்தம் கோபதாபங்களிலும் காணலாம். இவ்வகையிலான உணர்ச்சி வெளிப்பாடுகள் யாதார்ந்தமாக சடங்கியலுக்குள் சென்று, அங்கிருந்து தெருக்கூத்து முதலான கலை வெளிப்பாட்டிற்குள் சேர்ந்துள்ளன."8***

என்பதாக இராசு குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

**பார்வையாளர்களின் சார்பு கதையாடல்**

நிகழ்த்துகலை வடிவங்களில் முக்கியத்துவத்தை தெருக்கூத்து பலவாறு விவரிக்கிறது. அதிலொன்றாக தெருக்கூத்துக்கென நிரந்தரமாக இருக்கும் பார்வையாளர்களைக் குறிப்பிடலாம். ஏனெனில் தெருக்கூத்தை கோயில் திருவிழாவின் ஒரு பகுதியாகத்தான் பொதுமக்கள் கவனிக்கின்றனர். மேலும் அதன் புனிதத்தன்மையையும் சமயச் சடங்கியலையும் அவர்கள் கூத்துடன் தொடர்புபடுத்தியே உணர்கின்றனர். இதனை, ***“தவசு மரத்திற்கான தூணை நேர்த்திக் கடனாகத் தருவதைப் போலவே, தூணில் அர்ச்சுனன் மேலேறியவுடன் குறுக்குச் சட்டங்களில் சேலை, வேட்டி, துண்டு இவற்றைத் தொங்க விட்டும், தூளி கட்டி வணங்குவதையும், இன்னும் நேர்த்திக் கடனாக வேண்டிக்கொண்டவர்கள் அர்ச்சுனன் தபசு தூணில் மேல் ஏறிக்கொண்டிருக்கும் பொழுது, குளித்துத் திரும்பியவர்களாக ஈர உடையுடன் அம்மரத்தை வலம் வந்து வேண்டிக் கொள்வதையும் குறிப்பிடலாம்”9*** இதன்வழியே அருச்சுனன் ஏறும் தபசு மரத்தை அவர்கள் ஒரு உபகருவியாக உணர்வதைக் காணலாம். இதன்வழியே தெருக் கூத்து கலை கோயில் சார்புக்கலை என்னும் வகையில் பார்க்கப்படுகிறது. பெரும்பாலான ஊர்களில் காவல் தெய்வமாக அம்மன் சிலைகளும் கோயில்களும் நிறுவப் பட்டுள்ளன. இச்சூழலில் தெருக்கூத்து கலை அம்மன் கோயிலுக்கான திருவிழாக்களில் மட்டுமே அதிக அளவில் நிகழ்த்தப்படுகிறது. அதனால் தெருக்கூத்து கோயில் சார்பு கலையாகவும் அமைந்திருக்கிறது.

**முடிவுரை**

கிராமங்களில் நிகழ்த்தப் பெறும் திரோபதி ‘தீமிதி விழா’க்களில் நடைபெறும் பத்து நாள் தெருக்கூத்து நிகழ்வுகள் வெறும் கலையாக்க நிகழ்வாக மட்டுமின்றி மக்களின் வழிபாட்டு சடங்குகளுடன் நெறுங்கிய தொடர்புகொண்டதாக இருக்கிறது. பெரும்பாலும் இவ்விழாக்களில் நிகழ்த்தப்பெறும் தெருக்கூத்து நிகழ்வுகள் பாரதக் கதையில் இடம்பெறும் முக்கிய நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அதனால் பொதுமக்களின் வளமைச் சடங்கியல்களுடனான தொடர்பை இந்நிகழ்வுகள் தன்னகத்தேக் கொண்டுள்ளன.

கிராமங்களில் நிகழும் விழாவில் நடைபெறும் தெருக்கூத்து நிகழ்வுகளிலும் பொதுமக்களின் வளச்சடங்குகளை தெருக்கூத்துக் கலைஞர்கள் நிகழ்த்திக்காட்டுகின்றனர். மேலும் பத்து நாட்களும் தெருக்கூத்துக் கலைஞர்கள் அந்த ஊரில் ஒருவராகவே வாழ்கின்றனர். இச்சடங்கியல் நிகழ்வுகள் பொதுமக்களின் உற்பத்தி பெருக்கத்திற்கான வளமையும், வழிபாட்டின் வழியான நம்பிக்கை சார்ந்த வாழ்வியலையும் தன்னகத்தே க் கொண்டுள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1. நீ.ஏகாம்பரம்., கூத்துக்கலை., ப.32., கெவின்கார்க்கி பதிப்பகம், சென்னை., (2022)
2. அ.அறிவுநம்பி., தமிழரின் கூத்தியல்., ப.155., அறிவரங்கம்., புதுவைப் பல்கலைக்கழகம்., (1989)
3. வே.மு.ஷாஜகான்கனி., தமிழ்நாடக வகையும் வரலாறும்., ப.20., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை., (2010)
4. புலியூர் கேசிகன் (உ.ஆ)., கலித்தொகை., 65 : 28-29., கங்கை புத்தகநிலையம்., சென்னை., (2010)
5. மேலது., கலித்தொகை., 85 : 34
6. ச.து.சயோகியார், மே.வி.வேனுகோபால பிள்ளை (ப.ஆ) சாத்தனார் அருளியச் செய்த கூத்தநூல்., ப.150., தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வெளியீடு, சென்னை., (1987)
7. தகவலாளர்., திரு.சுந்தரேசனார்., வயது 70, சாமந்திபுரம், சேத்துப்பட்டு வட்டம்.
8. இரா.இராசு., அம்மன் வழிபாட்டுச் சடங்குகளில் நாடக் கூறுகள்., ப.42., தமிழ்ப் பல்கலைக்கழகம்., தஞ்சாவூர்., (2002)
9. தகவலாளர்., திருமதி ராசாத்தியம்மாள்., வயது 61., கலபாக்கம்.

# மானுடம் பாடிய வானம்பாடி ஈரோடு தமிழன்பன்

**முனைவர் க. செல்வராஜ்**
*இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி*
*இராசிபுரம், நாமக்கல் மாவட்டம்*

**கவிதை இலக்கியம்**

தமிழ் இலக்கியத்தின் பல்வேறு பரிணாமங்களுள் கவிதைக்கலையும் ஒன்று. இக்கவிதை, ஆரம்ப காலங்களில் இருந்து இன்று வரை பல நிலைகளில் மாற்றங்களைக் கண்டு வந்துள்ளது. மரபுக்கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூ, சென்ரியூ, லிமரிக் போன்ற நிலைகளில் தன்னுடைய எல்லைகளை விரிவுபடுத்திக் கொண்டே செல்கிறது. பல எதிர்ப்புக்களுக்கிடையில் தோன்றிய புதுக்கவிதைத் துறை மென்மேலும் வளர்ந்து தனிப்பெரும் துறையாகி இக்கால இலக்கியங்களில் தவிர்க்க முடியாத இடத்தைப் பெற்றுள்ளது.

**புதுக்கவிதையின் வரையறைகள்**

**"சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது**
**சொற்புதிது சோதிமிக்க நவகவிதை"**

**(பாரதியார் கவிதைகள், ப.எ.261)**

என்றார் பாரதி. இந்த வரிகள் புதுக்கவிதைக்கும் பொருந்தும் என்பார்கள். புதிய, புதிய சொல்லாக்கங்களை உருவாக்கும் உத்தி, அதை சுவைபடக்கூறும் முறை ஆகியவை புதுக்கவிதையின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தன.

புதுக்கவிதையைப் பற்றிக் கூற வந்த வைரமுத்து,

**"புதுக்கவிதை**
**என்பது**
**சொற்கள் கொண்டாடும்**
**சுதந்திரத் திருவிழா"**

**(வைரமுத்து, திருத்தி எழுதிய தீர்ப்புகள், ப.74)**

என்கிறார். புதுக்கவிதையைப் பற்றி மு.மேத்தா கூறும்போது,

**"இலக்கணச் செங்கோல்**
**யாப்புச் சிம்மாசனம்**
**எதுகைப் பல்லக்கு**
**மோனைத் தேர்கள்**
**தனிமொழிச் சேனை**
**பண்டித பவனி**
**இவை எதுவுமில்லாத**
**கருத்துக்கள் தம்மைத்**
**தாமே ஆளக்**

**கற்றுக் கொண்ட**
**புதிய மக்களாட்சி முறையே**
**புதுக்கவிதை"**
**(ஆனந்தன் மு., இலக்கிய வரலாறு, ப.எ.274)**

என்று பாடுகிறார். புதுமையை நோக்கி நகர்ந்த கவிதை புதுக்கவிதை. பல எதிர்ப்புகளுக்கு இடையிலும் புதுக்கவிதையை தமிழ் உலகம் வரவேற்கத் தயாரானது.

**வானம்பாடிப் பரம்பரை**

புதுக்கவிதை வளர்ச்சியின் உச்சத்தைத் தொட்ட காலம் வானம்பாடிக் கவிஞர்களின் காலம். முற்போக்குச் சிந்தனை. தொலைநோக்குப் பார்வை, மனிதநேயம், சமுதாய அவலங்கள், நிகழ்காலத்தைப் பற்றிய தெளிந்த பார்வை எதிர்காலத்தைப் பற்றிய புரிதல் என ஒரு எல்லா நிலைகளிலும் தங்களுடைய பங்களிப்பைக் கொடுத்து செழுமையான கவிதைகளை உருவாக்கி புதுக்கவிதையின் வளத்தைப் பெருக்கினர்.

**"வானம்பாடிப் பரம்பரை,**
**மானுடம் பாடும் வானம்பாடிகள்"**
**(வல்லிக்கண்ணன், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், ப.எ.220)**

எனத் தங்களைக் குறிப்பிட்டுக் கொண்டனர். புவியரசு, ஞானி, முல்லை ஆதவன், அக்கினிப்புத்திரன், சிற்பி, கங்கை கொண்டான், தமிழ்நாடன், சக்திகனல், மு.மேத்தா, தமிழன்பன், ரவீந்திரன், பா.செயப்பிரகாசம், பிரபஞ்சன், பாலா, கோ.ராஜாராம் முதலியோர் வானம்பாடிக் கவிஞர்களாக வலம் வந்தனர்.

புதுக்கவிதையின் வளர்ச்சியில் வானம்பாடிக் கவிஞர்களின் பங்களிப்பு அனைவராலும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். சமூக அடித்தட்டு மக்களை மேன்மை நிலைக்குக் கொண்டுவர தங்களுடைய கவிதைகளைப் படைத்தனர். உலகக் கவிதையின் தரத்திற்குத் தமிழ்க் கவிதைகளின் தரத்தையும் உயர்த்த வேண்டும் என்ற வேட்கை இவர்களிடையே இருந்தது. வானம்பாடிக் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர் ஈரோடு தமிழன்பன். இவரின் கவிதைகளில் மனிதநேயம், சமுதாய அக்கறை, பெண்ணியச் சிந்தனைகள், மகளிருக்கான இடம் போன்ற கருத்துக்கள் உயர்ந்தோங்கும். அந்தவகையில் இச்சமூகத்தில் பெண்கள் நிலை எவ்வாறு உள்ளது என்பதைத் தமிழன்பன் கவிதைகள் கூறுவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**தமிழன்பன் கவிதைகளில் மகளிர் சிக்கல்கள்**

புராண காலந்தொட்டு தற்காலம் வரையிலும் பெண்களுக்குண்டான சிக்கல்களும் சமூக அவலங்களும் இன்னும் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றன. பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைச் சுட்டிக்காட்ட வேண்டும் எனும் நோக்கில்,

**"மாதர் தம்மை இழிவு செய்யும்**
**மடமை தன்னை கொளுத்துவோம்."**
**(பாரதியார் கவிதைகள், ப.எ.445)**

என்று பாடினார் பாரதி. அதே கருத்தை மையப்படுத்தியே தனது கவிதையைப் படைக்கிறார் தமிழன்பன். பாரதியின் கருத்தை ஏற்றுக்கொண்டவராகவும் மீண்டும் பாரதியே பேசுவது போலவும் எழுதுகிறார். மாதருக்கு இழைக்கப்படும் மடமைகளை கொளுத்தச் சொன்னேன். மாறாக மாதரையே கொளுத்துகிறீர்களே என பாரதி வேதனைப்படுவதாக காட்டுகிறார். தான் கூற

வந்த கருத்தை காதில் வாங்கிக் கொள்ளாதவர்களைப் பார்த்து இவர்களுக்காகவா நாம் கவிதை செய்தோம். கவிதை தந்ததற்குப் பதிலாக வேறு எதையோ தந்திருக்கலாம் என்ற எண்ணம் பாரதிக்குத் தோன்றுகிறது. இதனை அடியொட்டியே,

**"மாதர் தம்மை**
**இழிவு செய்யும் மடமையைக்**
**கொளுத்தென்றேன்**
**நீங்களோ**
**மாதரையே கொளுத்துகிறீர்கள்!**
**கவிதை தந்ததற்குப்**
**பதிலாக – உங்களுக்குக்**
**காது கேட்கும்**
**கருவி நான் தந்திருக்கலாம்"**

**(தமிழன்பன், திரும்பி வந்த தேர்வலம், ப.எ.28)**

என்ற கவிதையை படைக்கிறார். காதில் வாங்கும் நற்கருத்தை மனத்தில் இருத்தினால் அதன் விளைவு பயனளிக்கும். சமுதாயத்தின் மேல் அக்கறை இல்லாதவர்களைச் சாட வேண்டும் எனும் நோக்கில் கவிதைக்குப் பதில் காது கேட்கும் கருவியைத் தந்திருக்கலாம் என்கிறார்.

மற்றொரு கவிதையில் பெண்களை வர்ணிக்கும் பல புலவர்கள் மத்தியில் பாரதி மட்டும் பெண்ணைப் பெண்ணாகவே பார்த்தான் என்கிறார். இதை,.

**"பெண்ணை மயில் என்றோம் – அவள்**
**ஆட்டத்தை அடக்கி விட்டோம்!**
**அவளைக் குயில் என்றோம்**
**பாட்டை முடக்கி விட்டோம்!**
**அவளை நிலவென்றோம்....**
**பிறைகளை அபகரித்தோம்...**
**பாரதி**
**பெண்ணைப் பெண் என்றான்**
**அவள்**
**பிறப்புக்கு அர்த்தம் கண்டான்"**

**(தமிழன்பன், வார்த்தைகள் கேட்ட வரம், ப.எ.139)**

என்ற கவிதையின் மூலம் சுட்டிக்காட்டுகிறார். மயில், குயில், நிலவு போன்றவற்றோடு உவமைக்கூறியது போதும். இனி பெண்களைப் பெண்களாக பார்ப்போம். அப்பொழுது தான் அவர்களுடைய உண்மை நிலையை நம்மால் உணர முடியும். பெண்ணுக்கு முழு சுதந்திரத்தை இச்சமுதாயம் கொடுத்ததா, இல்லையா, எனக் கண்டறிய முடியும். பெண்களின் பிறப்பையும் பெருமைப்படுத்த முடியும். பெண்களின் பிறப்புக்கு அர்த்தம் கண்டவன் பாரதி என்கிறார்.

ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை என்பர். அதுபோழ்து எக்கட்சி ஆட்சிக்கட்டில் ஏறினாலும் பெண்களுக்குட்டான 33 விழுக்காடு தள்ளிக் கொண்டே போகிறது என்பதை,

**"நான் மட்டுமா வந்துள்ளேன்...**
**வந்திருக்கிறாள்**
**முப்பத்து மூன்று விழுக்காடு**
**தள்ளிப்போன**
**சோகத்தோடு**
**பாரத தேவியும் முழுசாக!**
**என்னோடு தான் வந்தாள்**
**என்றாலும், வண்டியில் கூட**
**இட ஒதுக்கீடு கிடைக்கவில்லை"**

**(தமிழன்பன், திரும்பி வந்த தேர்வலம், ப.எ.220)**

என்ற கவிதையின் மூலம் குறிப்பிடுகிறார். ஒட்டு மொத்த பெண்களின் சார்பில் பாரத மாதாவே வந்துள்ளார் என கூறிய கவிஞர் வண்டியில் கூட பெண்களுக்குண்டான இடம் கிடைக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுவதாக கவிஞர் கூறுவதை வார்த்தைகள் கேட்ட வரம் எனும் நூலின் வாயிலாக அறிய முடிகிறது.

கல்வியறிவுதான் பெண்களின் முன்னேற்றத்திற்கான முதல்வழி. அதனால்தான் பாவேந்தரும்,

**"கல்வியில்லாத பெண்கள் களர்நிலம் அந்நிலத்தில்**
**புல்விளைந் திடலாம் நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை**
**கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி அங்கே**
**நல்லறிவுடைய மக்கள் விளைவது நவில வோநான்"**

**(ஆனந்தன் மு., இலக்கிய வரலாறு, ப.எ.278)**

என்று பாடுகிறார். பெண்களுக்கான கல்வி தற்காலச்சூழலில் அவசியமாகிறது. கல்வியறிவில்லாமல் பெண்கள் வீட்டுக்கணக்குகளை சுவற்றில் குறித்து வைத்தது போதும். இனி உங்கள் விரல்கள் எழுதுகோலை எடுக்கட்டும். பெண்கல்வி வளரட்டும். எல்லாத் துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு பெறட்டும். விண்ணுக்கும் மண்ணுக்கும் வியாபித்திருக்கும் விஞ்ஞானத்துறையில் பெண்களின் பங்களிப்பு நிலை இருக்கட்டும் என்பதை,

**"பால், மோர் கணக்கிற்குச்**
**சுவரில்**
**கீறல் போட்ட உங்கள்**
**விரல்களின் சுவடுகளில்**
**விஞ்ஞானம் - இனி**
**விளையட்டும்"**

**(தமிழன்பன், அந்த நந்தனை எரிந்த நெருப்பின் மிச்சம், ப.எ.86)**

என்று தெளிவு படுத்துகிறார். பெண்கள் முன்னேற்றம் என்பது நாட்டின் வளர்ச்சியோடு தொடர்புடையது. அதனாலேயே பெண் கல்வியை அனைவரும் போற்றினர். அந்த வகையில் தமிழன்பனும் பெண்கல்வியை ஆதரிக்கும் விதமாக கவிதை படைத்திருப்பதை உணர முடிகிறது.

ஆண்மக்களை வளர்த்தெடுப்பதைக் காட்டிலும் பெண்மக்களை வளர்த் தெடுப்பதில்தான் சிக்கல்கள் அதிகம் இருப்பதாகப் பெற்றோர்கள் கருதுகின்றனர். வளர் பருவத்தின் பல்வேறு படிநிலைகளில் நடக்க வேண்டிய செயல்கள் அனைத்தும் தொய்வில்லாமல் நடந்து வந்தால் பெற்றவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் மகிழ்ச்சி. "பருவத்தே பயிர் செய்" என்பது நாட்டார் வழக்கு. அது எல்லாவற்றிற்கும் பொருந்தும். திருமண வாழ்வைக் கூறவந்த கவிஞர்,

**"கலியாணம் ஆகவில்லையே**
**என்று - முன்பும்**
**கலியாணம் ஆகிவிட்டதே**
**என்று - பின்பும்**
**முகாம் மாறி**
**முகாரி வைப்பதன்றி**
**வாழ்க்கையின் வரவேற்பு**
**உனக்கு**
**வாய்ப்பதுண்டா,"**

**(தமிழன்பன், அந்த நந்தனை எரிந்த நெருப்பின் மிச்சம், ப.எ.27)**

என்ற கேள்வியை முன்வைக்கிறார். குறிப்பிட்ட பருவத்தில் திருமணம் நடக்கவில்லை என்றால் அதை நினைத்து பெற்றவர்களும் பிள்ளைகளும் வருத்தப்படுவர். அதே சமயத்தில் நல்ல துணை அமையாத பெண்களின் நிலை வருந்தத்தக்கதாக இருக்கும். இக்கரைக்கு அக்கரைப் பச்சை என்பார்கள் அதுபோல மணமாகவில்லை என்றால் ஏக்கத்தினால் துன்பம். மணவாழ்வு சரியாக அமையாவிட்டால் வாழ்க்கை முழுவதும் துன்பம் என்பதை தன்னுடைய கவிதை மூலம் தமிழன்பன் வெளிப்படுத்துகிறார்.

மனித வாழ்வு என்பது தனிமனிதன் மற்றும் சமுதாயம் என இரண்டின் வழி அமைந்தது.

ஒவ்வொரு மனிதனும் தனக்காகவும் சமுதாயத்திற்காகவும் வாழ வேண்டியுள்ளது. தனிப்பட்ட மனிதனின் வாழ்வில் நடைபெறும் சம்பவங்களில் பல சமுதாயத்தால் தீர்மானிக்கப்படுகின்றன. அந்த வகையில் வரதட்சணை வாங்குவதும் கொடுப்பதும் ஒரு சில சமூக அமைப்புகளால் வந்தது தான் என்பதை,

**"உன்**
**புன்னகையைப்**
**பறிமுதல் செய்தது**
**வரதட்சணை அல்ல...**
**வாழும் சமூகச்**
**சுரண்டல் அமைப்புகள்"**

**(தமிழன்பன், அந்த நந்தனை எரிந்த நெருப்பின் மிச்சம், ப.எ.28)**

என்ற கவிதையின் வழி வெளிப்படுத்துகிறார். வரதட்சணையால் மகிழ்ச்சியை பறிகொடுத்த பெண்ணைப் பார்த்து வரதட்சணை மட்டுமா காரணம், அதோடு சமுதாயமும் தான் காரணம் என்கிறார். உயர்வு. தாழ்வு, ஏழை, பணக்காரன் போன்ற சமுதாய கட்டமைப்புகள் ஒரு சிலரின் சுயநலத்திற்காக உருவானதாகும். அது படிப்படியாக வளர்ந்து இன்று பல பெண்களில் வாழ்வைச் சீரழிக்கும் அசுர சக்தியாக உருவெடுத்து விட்டது என்பதை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

பதினாறு செல்வங்களில் குழந்தைச் செல்வமும் ஒன்று. அக்குழந்தை பாக்கியம் கிடைக்காதவர்கள் மனதளவில் பாதிக்கப்படுகிறார்கள். அப்படியே குழந்தை பேறு கிட்டியவுடன் பெண்குழந்தையாக இருக்கும் பட்சத்தில் முழுவதுமான மகிழ்ச்சியை அவர்கள் வெளிப்படுத்துவதில்லை. ஆண் குழந்தைப் பிறந்தால் அளவில்லா மகிழ்ச்சி அடைகிறார்கள். பெண் சிசுவை விரும்பாதவர்கள் கள்ளிப்பால் கொடுத்துக் கொன்றதும் இச்சமுதாயத்தில் நடந்த கொடுமைதான். குப்பைத் தொட்டியில் பெண் சிசுவை போட்டுச் செல்லும் நிலைமை இன்னும் ஒழிந்தபாடில்லை. இத்தகைய இழிநிலையைப் போக்குவதற்காகத்தான் அரசின் சார்பில் தொட்டில் குழந்தைத்திட்டம் தொடங்கப்பட்டது. ஆனாலும் சிலர் திருந்தவில்லை என்பதை,

**"மசக்கை இல்லாமல்**
**மாவடு திண்ணாமல் தெருக்**
**குப்பைத்தொட்டிகள்**
**குழந்தைகளைப் பெறுகின்றன"**

**(தமிழன்பன், வார்த்தைகள் கேட்ட வரம், ப.எ.85)**

என்ற கவிதையின் வழி வெளிக்காட்டுகிறார் கவிஞர். பிறக்கின்ற குழந்தைகளை வளர்த்தெடுக்க வழி தெரியாதவர்கள் எதற்காகப் பிள்ளைகளைப் பெற வேண்டும். மண்ணுலக உயிர்களுள் மனிதப்பிறவி என்பது மகத்தானபிறவி. அப்பிறவியில் சிலரை அநாதைகளாக்கும் அவலநிலை இச்சமுதாயத்தில் இருப்பதை ஈரோடு தமிழன்பன் சுட்டிக்காட்டுகிறார்.

எந்தக்குழந்தையும் நல்லக்குழந்தைதான் மண்ணின் பிறக்கையிலே. அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே என்பர். அப்படிப் பிறக்கின்ற குழந்தைக்கு நல்ல கல்வியைக் கொடுப்பது பெற்றோரின் கடமை. அக்கடமையிலிருந்து யாரும் தவறக் கூடாது. ஆண்பிள்ளைகளுக்கு அவசியம் கல்வி கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற உணர்வு அனைவரிடம் மேலோங்கியுள்ளது. பெண் பிள்ளைகளுக்கான கல்வியில் தேக்கநிலை ஏற்படுகிறது. இந்நிலையைப் போக்க பெண் பிள்ளைகளைக் கட்டாயம் படிக்க வைக்க வேண்டும் எனும் நோக்கில்,

**"ஈன்று பெண்ணை**
**வளர்ப்பவர் – அவளின்**
**மூன்றாம் கண்ணைத்**
**திறக்காவிட்டால்**

**பிறந்ததால் அவள் பெரும்பயன்**
**இறந்து போகாதா,"**

**(தமிழன்பன், இடுகுறிப் பெயரில்லை இஸ்லாம், ப.எ.67)**

என்ற கேள்வியை எழுப்புகிறார். ஒருவருக்கு மூன்றாம் கண் என வர்ணிக்கப்படுவது கல்வி. அக் கல்வியைப் பெண்களுக்கு முழுமையாகக் கொடுக்காவிட்டால் பிறப்பிற்கான பெரும்பயனை அப்பெண் அடைய மாட்டாள். ஆதலால், பெண்கல்வியை ஊக்கப்படுத்துவோம் என்று தமிழன்பன் கூறுவதை அவர் கவிதை வாயிலாக அறிய முடிகிறது.

பெண்கள் என்றாலே சமைப்பதற்கும் மகிழ்ச்சியைத் தருவதற்காக மட்டும் என்ற நிலை சமுதாயத்தில் இருப்பதைக் குறை கூறுகிறார் கவிஞர். ஆண்களுக்கு மனமாற்றம் ஏற்பட்டால் இதுபோன்ற நிகழ்வுகள் நடப்பதற்கு வாய்ப்பில்லை என்பதை,

**"மையலுக்கும்**
**சமையலுக்கும்**
**மட்டுமே**
**தையல் என்று**
**இழைக்கும் பிழையை**
**ஆடவர் கூட்டம்**
**இனியேனும் உணர்ந்து**
**முகம் காட்டும் புதிய**
**ஆயிஷாக்களுக்கு**
**முட்டுக்கட்டை போடாமல்**
**முகம்மது சொன்னதை**
**அகம்மது கொள்க!"**

**(தமிழன்பன், இடுகுறிப் பெயரில்லை இஸ்லாம், ப.எ.67)**

என்று எழுதுகிறார். பெண்களின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைப்போடாமல் அவர்களின் மன உணர்வுகளைப் புரிந்து கொண்டால் அவர்களின் வாழ்வில் முன்னேற்றத்தைப் பார்க்க முடியும். அதன்வழி சமுதாய முன்னேற்றத்தையும் பார்க்கலாம். இதற்கு ஆடவர் முன்வருதல் அவசியம் என்கிறார்.

**முடிவுரை**

மானுட சமுதாயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடித்தளமாய் இருப்பவர்கள் பெண்கள். அவர்களின் வாழ்க்கை மேம்பட்டால்தான் சமுதாயம் மேம்படும். பெண்களுக்கான கல்வி சமுதாயத்திற்கான கல்வி, பெண்களுக்கான முன்னேற்றம் சமுதாயத்திற்கான முன்னேற்றம். ஆகையால் மகளிர் மேம்பாட்டிற்காக மகளிர் மட்டும் உழைத்தால் போதாது. ஆடவர்களும் அவர்களுக்குத் துணையாக நிற்க வேண்டும் எனத் தமிழன்பன் கூறுவதை இக்கட்டுரை மூலம் அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**


1. தமிழன்பன், அந்த நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம், பூம்புகார் பதிப்பகம், 127, பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை 600 - 108.
2. தமிழன்பன், திரும்பி வந்த தேர்வலம், பூம்புகார் பதிப்பகம், 127, பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை 600 - 108, முதற்பதிப்பு 1985.
3. தமிழன்பன், வார்த்தைகள் கேட்ட வரம், விழிகள் பதிப்பகம், (எம்.139) ஏழாம் குறுக்குத் தெரு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை – 600 041, முதற்பதிப்பு செப்டம்பர் 2002.

4. தமிழன்பன், இடுகுறிப் பெயரில்லை இஸ்லாம், ரஹ்மத் அறக்கட்டளை, 6, இரண்டாவது பிரதான சாலை, ஐ.டி.காலனி, மைலாப்பூர், சென்னை – 4, முதற்பதிப்பு 2008.
5. பாரதியார் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், 8/7 சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 600 108, செம்பதிப்பு டிசம்பர் 1997.
6. ஆனந்தன் சு., இலக்கிய வரலாறு, கண்மணி பதிப்பகம், எ.2. சங்கர் அபோட்ஸ் – கிரவுண் 23, சங்கரன் பிள்ளை சாலை, திருச்சி – 620 002, ஐந்தாம் பதிப்பு ஜீன் 2003.
7. வல்லிக்கண்ணன், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், அகரம் பதிப்பகம், மனை எண் – 1, நிர்மலா நகர், தஞ்சாவூர் – 613 009, ஐந்தாம் பதிப்பு மே 2004.

# வைணவ இலக்கியம் வளர்த்தெடுத்த மனிதப் பண்பாக்கங்கள்

**உ. ஸ்ரீதேவி**

*முனைவர் பட்ட ஆய்வாளர்*

*இராஜா நந்திவர்மன் கலை அறிவியல் கல்லூரி, தெள்ளாறு*

*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு*

**முன்னுரை**

ஒவ்வொரு மொழியும், அம்மொழிப் பேசும் மக்கள் கருத்துக்கும் பண்பாட்டுக்கு ஏற்ப வளர்ச்சியடைகின்றன. மக்களின் பண்பாடும் கருத்தாக்கங்களும் பெரும்பாலும் அவர்கள் மேற்கொள்கின்ற மதக் கோட்பாடுகளைச் சார்ந்தே அமைந்திருக்கிறது. இம்முறையில்தான் பண்டைய கால இலக்கியங்களின் வளர்ப்பத்தில் மதங்கள் முதலிடம் பெற்றிருக்கக் காண்கிறோம். மக்களுக்கு விளக்கப்பட்ட பல்வேறு விதமான ஆக்க மற்றும் அழிவாக்கக் கொள்கைகள் யாவும் முதலாவதாக மதங்கள் மூலமாகவே வளர்க்கப்பட்டது என்பதைத்தான் நமது தமிழ் இலக்கிய வரலாறு குறிப்பிடும். கால அடிப்படையிலான வகைப்பாட்டு இம்முறையில் தமிழ் கருப்பொருள் விளக்குவனவாக அமைந்திருக்கின்றன. மொழியும் காலத்தொன்மை வாய்ந்ததால் சமயங்கள் சார்பான வளப்பத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. தமிழ் மொழியின் இலக்கிய வரலாற்றை இரண்டு முக்கிய பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று சமயச்சார்பற்ற இலக்கியம், மற்றொன்று சமயச் சார்பான இலக்கியம். இவ்விலக்கியங்களின் காலங்களே அதன் சமயத்திற்கான கோட்பாடுகளையும் வரையறைகளையும் தீர்மானிப்பவைகளாக அமைந்திருக்கின்றன.

**வைணவ இலக்கியத் தோற்றம்**

தன் கை தான்விரித்து பிழைப்புத் தேடி தமிழகம் வந்தேரிய ஆரியக் கூட்டத்தினர், தமிழகத்தில் மனிதர்களுக்கு இடையிலான உயர்வு தாழ்வு கற்பிதங்கள் முதல் பார்ப்பனர்களின் மேலாண்மை, பெண்கள் மீதான இழிவானப்பார்வை, பல்வேறு விதமான வேள்விகள் (உயிர்பலியிடல்) என பல்வேறு நச்சுக் கருத்தாக்கங்களைப் பரப்பினர். இவர்கள் பரப்பி வளர்த்த இக்கருத்துக்கள் நீதிநெறிக் காலத்தில் தழற்செடிகளென பரவின. அதன் தாக்கத்தில்தான், வள்ளுவர்

***"பிறப்பில் அனைத்து உயிர்களும் சமம்"1***

என்று உரத்தக் குரலாகப் பேசியிருக்கிறார். அதன் தொடர்ச்சி யாகவே திருக்குறள், சிலயிடங்களில்

*“பெண்ணின் பெருமைகளையும்”2 “வேள்வி-யாகம் என்னும் பெயரில் உயிர்ப் பலியிடுதலை எதிர்த்தும்”3*

குறிப்பிட்டுள்ளது. இன்னும்,

*”இளைக முள்மரம் கொல்க; களையுநர்*
*கைக்கொல்லும் காழ்த்த இடத்து”4*

என்று குறிப்பிட்ட 'முள்மரம்' என்னும் குறியீடு ஆரியர்கள் விதைத்த நச்சுச்செடிகளையேக் குறிப்பதாக அமைந்திருப்பது. இதனை தீவிரமாக நீதியிலக்கியங்களில் - அதிலும் தலைமைப் பண்புடையதாகக் கருதப்படும் திருக்குறளில் ஆரியர்களுக்கு எதிரான கருத்தாக்கங்கள் விளக்கப்பட்ட போதும் -அக்காலத் தமிழர்கள் அதனை ஏற்கத் தயாராகயில்லை. அந்த சூழலில்தான் வள்ளுவர் திருக்குறளில் காமத்துப்பாலை இயற்றியிருக்கிறார் என்பது கவனித்தக்கது. இச்சூழலில் தான் வைணவ இலக்கியங்களும் ஆழ்வார்களின் கருத்துக்களும் தோற்றம் பெற்றன.

**வைணவ இலக்கியத்தின் வளர்ச்சி**

ஆரியர்களின் இழிவானக் கருத்துக்களில் மிகவும் வலிமையானதும் பெரும் பாதிப்புக்குள்ளானதும் பெண்கள் மீதான அடக்குமுறை. அன்றிருந்த சமூகம் ஆரியர்களின் நச்சுக்கருத்துக்களில் ஊறிய தமிழ்ச் சமூகமாக இருந்ததால் - பெண்கள் அக்காலச் சூழலில் இழிப்பிறப்பாகவே கருதப்பட்டனர். அதன் அடுத்தக்கட்ட வளர்ச்சியாகத்தான் பெண்களின் இயல்பான சமத்துவங்கள் மறுக்கப்பட்டு - பெண் பிறப்பிலேயே இழிவானவள். அசுத்தமானவள் என்ற கருத்துக்கள் விதைக்கப்பட்டன. அதன் விளைவால் ‘பெண் துறவு’ என்பது முற்றிலும் ஒழிக்கப்பட்டது. இத்தகைய இழிநிலைப்பாடுகளை நீக்க ஆழ்வார்கள் போராடத் தொடங்கினர். அவ்வாறு போராடிய ‘ஆண்டாள்’ பன்னிரு ஆழ்வார்களுள் குறிப்பிடத்தக்கவராகப் போற்றப்படுகிறார். அதனடிப்படையில் காரைக்கால் அம்மையாரையும் திருநாவுக்கரசரின் தமக்கையரான திலகவதியாரையும் வைணவம் ஆழ்வார்களாக்கியது குறிப்பிடத்தக்கது.

சைவம் வகுத்த வேதங்களையும், சடங்குகளையும் முற்றிலுமாக வைணவம் ஓரங்கட்டியது. மாற்றாக கோதையின் பாடல்களை மட்டும் கையில் எடுத்தது. அதன்கீழ்,

*“பாதகங்கள் தீர்க்கும், பரமனடி காட்டும்*
*வேதமனைத்துக்கும் வித்தாக்கும் கோதை தமிழ்*
*ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை*
*வையம் சுமப்பதும் வம்பு"5*

என்று பாடி மகிழ்ந்தது. இதன் வளர்ச்சியாகவே ‘கோதாஸ்துதி’ என்னும் நூலின் தலைவியாக 'ஆண்டாள்' புகழ்பெற்றாள். அதேபோல்,

*“சூடிக்கொடுத்த சுடற்கொடி நாச்சியாராம் ஆண்டாளின் வளர்ப்புத் தந்தை பெரியாழ்வார். பெரியாழ்வார் கண்ணன் அருளியச் செயல்களை 473 பாடல்களிலே போற்றிப் பாடினார்”6*

இதிலவர் கண்ணன் வாழ்க்கையில் நிகழ்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளைப் பட்டியலிட்டுள்ளார். அவ்வாறு கண்ணனின் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளைப் பற்றி அவர் எழுதிய பாடல்களே பிற்காலத்தில் 'பிள்ளைத்தமிழ்' என்னும் சிற்றிலக்கிய வகைமையின் தொடக்கமாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**மனிதப் பண்பாக்கங்கள்**

**(அ) சமரச சன்மார்க்கம் –**

திருமாலின் உருவமும் சிவனின் உருவமும் இணைந்த காட்சியினைச் 'சமரசம்' என்று சமய இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. 'அரியும் சிவனும் ஒண்ணு; அறியாதவன் வாயில் மண்ணு' என்னும் பழமொழி இதனை உறுதிப்படுத்தும், சைவம், வைணவம் என்னும் இருபெரும் சமய இலக்கியங்களுக்குள் பெரிய வேறுபாடுகள் இல்லை என்பது பொதுக்கருத்து. வைணவ ஆழ்வார்கள் கூட, திருமாலையும் சிவனையும் இரண்டாக (முற்றாக) பிரித்துப் பார்க்கவில்லை. எடுத்துக்காட்டாக,

*"தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்*
*சூழ் அரவும் பொன்நாணும் தோன்றுமால் சூழும்*
*திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு*
*இரண்டுருவும் ஒன்றாய் இணைந்து"7*

எனும் பேயாழ்வாரின் பாடலைக் குறிப்பிடலாம்.

**(ஆ) மைப்பொருள் காணல் -**

வையகம் உருபெற காரணமானது முதலும் துணையும் முடிவும் ஆகும். இதற்கான சான்றாக வைணவ இலக்கியம் குறிப்பிடும் தொன்மம் 'பானை'. ஒரு பானை உருவாவதற்கு முதற் காரணம் மண், பானை உருவாகப் பயன்படும் கருவி என்னும் சக்கரம் இரண்டாவது காரணம், நிறைவான காரணமாவது பானையினை சக்கரத்திலிட்டு புனையும் குயவன். அதுபோல உலகம் என்ற ஒன்று உருவாக எல்லாவிதத்திலும் காரணமாக இருப்பவன் 'திருமால்' என்பது வைணவ நெறியாகிறது.

இலக்கியம் குறிப்பிடும் பக்திநெறி என்பது விரதம்-தவம் மேற்கொள்ளல், தியானித்தல், பிராணாயாமம் என்னும் மூச்சுப் பயிற்சி ஆகியவையே. இந்நெறியியல் பொதுவாக எல்லா சமயத்தவர்களும் பின்பற்ற இயலாத தன்மைக் கொண்டதாக அமைந்திருக்கிறது. இதிலிருந்தே வைணவம் பிரபக்தி நெறியியல் தன்மைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக தன்னை அடையாளப் படுத்திக் கொள்கிறது. இங்கு 'பிரபக்தி' என்பது 'சிறந்த' அல்லது 'மேன்மையான' என்று பொருள் கொள்ளப்படுகிறது. இந்நெறிமுறைக்கு நீராடுதல், மந்திரம் சொல்லுதல் என்பது போன்ற தனித்தக் கட்டுப்பாடுகள் ஏதுமில்லை. மேலும் இது புகழ் விரும்பாததாகவும் இருக்கிறது.

**(இ) அறநோக்கு -**

திருமாலை ‘அறவன்', ‘அறமுதல்வன்’, ‘மலராள் மார்வ’, ’அறம் பெரியன்' என்றெல்லாம் அழைப்பர். அதேபோல திருமாலின் திருவருட்பயனால் அமைவுடைய அறநெறி அனைத்தையும் பெறுதல் ‘அறநிலம்’ (2106) என்பதாகிறது.

**(ஈ) மன்னனும் மாலும் –**

***“திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே”8***

இத்தொடர் இறைவனிடம் விரும்பி வேண்டும் தேவைகள் ஈடேறும் நெறியிலைக் குறிப்பதாகிறது. மேலும் இறைவனின் உயரிய குணங்களை மன்னனிடம் எதிர்பார்ப்பதும், மக்கள் தங்களின் விருப்பங்கள் ஈடேறுவதற்காக இறைவனால் அனுப்பட்டவன் ‘அரசன்’ என கருதுவதையும் இத்தொடர் குறிப்பதாக அமைந்திருக்கிறது. அதேபோல,

***“தான் நோக்காது எத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்***
***கோல் நோக்கிவாழும் குடிபோன்று இருந்தேனே”9***

என்னும் குலசேகரர் பாடற்பகுதி மக்கள் மன்னனை நோக்கியே வாழ்க்கை நடத்தினர் என்ற கருத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

**(உ) செல்வ மறுப்பு –**

வாழ்க்கை நடைமுறைக்குத் தேவையான செல்வ வாய்ப்புகள் நிலையற்றவை என்னும் கருத்து வழிவழியாக வழங்கிவருகிறது. சங்க இலக்கியங்களும் அறநூல்களும் இச்சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளன. அதன் தொடர்ச்சியாய்

***“ஒரு நாயகமாய் ஓட உலகுடன் ஆண்டவர்***
***கரு நாய்கவர்ந்த காலர் சிதையிய பானையர்***
***பெரு நாடுகாண இம்மையிலே பிச்சைதாம் கொள்வர்”10***

என்னும் ஆழ்வார் திருப்பாடல் அமைந்திருக்கிறது. அத்துடன், நிலையில்லாத செல்வத்தை நிலையெனக் கொண்டு அதனைச் சேர்த்துவைத்து வாழும் மனிதரை மட்டுமே சுற்றத்தினரும் சுற்றுவர் என்னும் உலகியல்பை,

***“துணையும் சார்வும் ஆகுவார்போல் சுற்றத்தவர் பிறரும்***
***அணையவந்த ஆக்கமுண்டேல் அட்டைகள் போல் சுவைப்பர்” 11***

என்னும் பாடற்பகுதி விளக்குவதாக அமைந்திருக்கிறது.

**(ஊ) சிற்றினம் சேரா செம்மை –**

பெரியாரைத் துணைக்கொள்ளும் பெருந்தகைமைக்கு எதிர்நிலையாகச் சிற்றினம் சேராமையும் உணரத்தக்க அறநெறியே ஆகும். இதனை,

*“தீதில் நன்னெறி நிற்கவல்லாது செய்*

*நீதியாரொடும் கூடுவதில்லை யான்" 12*

என்று குறிப்பிடும் குலசேகர ஆழ்வார்,

*“எத்தனையும் வான் மறந்த காலத்தும் பைங்கூழ்கள்*

*மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்” 13*

என்றவாறு தான், சிற்றினம் சேராமல் இறைவனையே சேர காத்திருப்பதாகக் குறிப்பிடுகிறார்.

திருமால், தன்னடி அடைந்த சிற்றினம் சேராத மெய்யடியார்கள் தவறு செய்தாலும், அது தவறு ஆகாது என்றே குறிப்பிடுவார். இந்நம்பிக்கையை,

*“தன்னடியார் திறத்தகத்து தாமரையாள் ஆகிலம் சிதகுருரைக்குமேல்*

*என்னடியார் அது செய்யார்; செய்தாரேல் நன்று செய்தார்” 14*

என்றவாறு பெரியாழ்வார் திருமொழி உறுதிப்படுத்துகிறது.

**(எ) சமத்துவ நோக்கு –**

அறிவுரை கூறும் போக்கிலும் ஆழ்வார்கள் சமத்துவ எண்ணங்கள் மக்கள் மனதில் ஆழமாகப் பதியச் செய்துள்ளனர். எடுத்துக்காட்டாக,

*“இழிந்த தொழிலைச் செய்யும் ஊனகாரர்கள் ஆயினும்*

*போனகம் செய்த சேடம் தருவரேல் அவரும் புனிதர் ஆவர்” 15*

என்னும் சமத்துவச் சிந்தனையைக் குறிப்பிடலாம்.

**முடிவுரை**

வைணவ இலக்கியத்தின் காலம் ஏறக்குறைய கி.பி 5-ஆம் நூற்றாண்டில் களப்பிர அரசர் காலத்திலே, பௌத்த சமணச் சமயங்களுக்கு எதிர்ப்பாகவும், சைவ - வைணவ சமயங்களுக்கு எதிர்ப்பாகவும் எழுதப்பட்டு ஒரு புதிய பக்தி இயக்கப் போக்கைத் தோற்றுவித்திருந்தாலும் அவை, சங்க மரபாகக் கருதப்பட்ட அகம் + புறம் என்னும் தோற்ற மரபுகளையும் தாண்டி, மனித மாண்புக்கான ஆக்கங்களாக அழிவற்றுச் சிறப்புறத் திகழ தேவையான கருத்தாக்கங்களைக் கொண்டதாகிறது. அதன்படியே அந்தணராகிய மதுரகவி ஆழ்வார் வேளாளராகிய நம்மாழ்வாரைத் தம் குருவாக ஏற்றுப் போற்றியுள்ளார். திருமழிசை ஆழ்வார் திருவலன் என அழைக்கப்பெறும் ‘பிரம்பன்’ குலத்தில் தோன்றியவராகக் கருதப்பெறுகின்றார். ஆனால் அவர் பெரும்புலியூர் அடிகள் என்பவரால் மதிக்கப்பெற்றுள்ளார். இத்தகைய வரலாறுகள் 'இறைஅன்பர்' என்னும் பொது உணர்வின் அடிப்படையில் அமைந்தவைகளாக இருக்கக் காணலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. *“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்”* – கு.எ.972., ப.214
2. *”இல்லதுஎன் இல்லவள் மாண்பு ஆனால் உள்ளதுஎன்*
3. *இல்லவள் மாணாக் கடை”* – கு.எ.53., ப.28
4. *”அவசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்*
5. *உயிர்செகுத் துண்ணாமை நன்று”* – கு.எ.259., ப.69
6. *”இளைதாக முள்மரம் கொல்க”* – கு.எ. 879., ப.195
7. சி,பாலசுப்பிரமணியம், (உ.வி)., திருவெம்பாவை விளக்கம்., ப.107., பாரிநிலையம், சென்னை – 108, பதிப்பு 1995
8. பெரியாழ்வார் திருமொழி., திருப்பல்லாண்டு பாடல்கள்., பா.எ.461., ஸ்ரீ வைஷ்ணவஸ்ரீ வெளியீடு, சென்னை – 24., மறுபதிப்பு யுவ ஆண்டு 1995)
9. சே.கிருஷ்ணமாசாரியார்.,(ப.ஆ)., நாலாயிரத்திவ்ய பிரபந்தம்., மர்ரே : 2344., கணேச அச்சுக்கூடம், சென்னை. பதிப்பு 1999
10. பு.ரா.புருஷோத்தம நாயுடு., திருவாய்மொழி (ஈட்டின் தமிழாக்கம்)., மர்ரே : 2456., சென்னைப் பல்கலைக்கழகம்., பதிப்பு 1945
11. குலசேகரபெருமாள்., பெருமாள் திருமொழி., செ.எ.690., ஸ்ரீ வைணவ கிரந்த முத்ராபக் சபை, சென்னை., பதிப்பு 1924
12. பு.ரா.புருஷோத்தம நாயுடு., திருவாய் மொழி (ஈட்டின் தமிழாக்கம்)., மர்ரே : 2414., சென்னைப் பல்கலைக்கழகம்., பதிப்பு 1945
13. மேலது., திருவாய்மொழி (ஒன்பதாம் பத்து) மர்ரே : 2965
14. குலசேகரபெருமாள்., பெருமாள்திருமொழி., செ.எ.675.,ஸ்ரீ வைணவ கிரந்த முத்ராபக் சபை, சென்னை., பதிப்பு 1924
15. மேலது., செ.எ.696
16. மேலது., செ.எ.413
17. மேலது., செ.எ.912.

Vol. 9 Special Issue 1 January 2025 E-ISSN: 2456-5571

# ஏறுதழுவுதலும் மனித மாண்பும்

**முனைவர் சோ. தண்டபானி**

*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*

*எம்.வி. முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்*

**முன்னுரை**

சங்க கால இலக்கியம் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியலை எடுத்துரைக்கும் பெட்டகமாகத் திகழ்கிறது. மனித இன வரலாற்றில் தமிழ் இனம் தனித்த அடையாளத்தைக் கொண்டது என்பதை சங்க இலக்கியங்கள் வழி அறியலாம். சங்க காலத்து வாழ்வியல் மரபுகள் தனித்த அடையாளமாகும். களவு, கற்பு என்ற வாழ்வியல் கட்டமைப்பு ஆண், பெண் இல்வாழ்வு, வாழ்வில் இரு வினைபங்கு, மனித அறம், விருந்தோம்பலின் சிறப்பு, மனித நேயம் ஆகிய அனைத்தும் மானுட மதிப்பைப் பறைசாற்றும் வாழ்வியல் கூறுகள் ஆகும்.* தமிழர் வாழ்வியலில் பண்பாடு என்பது ஒவ்வொரு தனிமனிதனின் அடையாளக் கருவூலமாகும். அந்த வகையில் தமிழரின் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றான ஏறுதழுவல் சங்கம் தொட்டு இன்று முதல் மனித மதிப்பிற்கான அடையாளமாகத் திகழ்வதை இவ்வாய்வுக் கட்டுரை விளக்க முற்படுகிறது.

**சங்க இலக்கியங்களில் ஏறு தழுவல்**

பழந்தமிழ் நூலான கலித்தொகையின் முல்லைக் கலியில் இடம்பெறும் பாடல்களில் ஏறுதழுவுதல் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது மலைபடுகடாம் நூலிலும் (330-355), பட்டினப் பாலையிலும், சிலப்பதிகாரத்திலும் ஏறு தழுவுதல் பற்றிய பல குறிப்புகள் உள்ளன.

குறிஞ்சி நில மக்களும் முல்லை குல மக்களும் தங்கள் நிலங்களில் உள்ள வலிமை வாய்ந்த எருதுகளை ஒன்றுடன் ஒன்று பொரும்படியாகச் செய்து ஆரவாரம் செய்வர். இவ்வெருதுகளின் வெற்றியைத் தங்கள் வெற்றியாக எண்ணி மகிழ்வர் இதனை,

**இனத்தின் தீர்ந்த துளங்கு இமில் நல்லேறு**
**மலைத் தலைவந்த மரையான் கதழ்விடை,**
**மாறா மைந்தின் ஊறுபடத் தாக்கி,**
**கோவலர் குறவரோடு ஒருங்கு இயைந்து ஆர்ப்ப,**
**வள் இதழ்க் குளவியும் குறிஞ்சியும் குழைய,**
**நல் ஏறு பொரூஉம் கல்லென் கம்பலை,**

**(மலைபடுகடாம் 330-345)**

என மலைபடுகடாம் நூல் குறிப்பிடும்.

ஏழு தழுவுதலுக்கு முதல் நாள் அல்லது அன்றைய நாளில் குரவைக் கூத்து நடைபெறும். முதல் நாள் நடந்தால் பெண்கள் ஏறு தழுவும் வீரன் வெற்றி பெற வேண்டிப்பாடுவர். ஏறு தழுவும் நாளின் மாலையில் குரவைக்கூத்து நடைபெற்றால் வெற்றி பெற்ற வீரனின் வெற்றியைப் புகழ்ந்து பாடுவர், வளமுடைய இளைய காளையை அடக்கி, ஏறியவருக்கு உரியவள் இம் முல்லை மலரை அணிந்துள்ள மென்மையான கூந்தலை உடையவள் என ஆய்ச்சியர்கள் ஆடிப்பாடுவதைச் சிலப்பதிகாரம்.

**மல்லல் மழவிடை ஊர்ந்தார்க்கு உரியள்**
**இம் முல்லையம் பூங்குழல் தான்**
**(சிலம்பு. ஆய்ச்சி. கொளு-8)**

என்று குறிப்பிடும்.

**கொல்லேற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும்**
**புல்லாளே, ஆயமகள்.**
**அஞ்சார் கொலைஏறு கொள்பவர் அல்லதை,**
**நெஞ்சிலார் தோய்தற்கு அரிய – உயிர்துறந்து**
**நைவாரா ஆயமகள் தோள்.**
**(கலி.முல்லை.103:63-67)**

என ஏறு தழுவும் இளைஞர்களைப் பண்டைத் தமிழ்ப் பெண்கள் விரும்பி மணம் முடிந்தமையை முல்லைக்கலி குறிப்பிடுகிறது. கொலைத் தொழிலையுடைய காளையை அடங்கும் வலிமையில்லாதவனைப் பண்டைக்கால ஆயமகளிர் மணப்பது இல்லை. எனவே தமிழர்களின் திருமண வாழ்வுடன் தொடர்புடைய ஏறு தழுவுதல் மிகப்பெரிய இனக்குழு அடையாளமாகக் கருதலாம்.

**மாண்புயர் மறப்பண்பு**

ஏறு தழுவுதல் என்பது முல்லைநில மக்களின் மற மாண்பையும் குடிச்சால்பையும் பறைசாற்றி நிற்கும் வீர விளையாட்டாகும். முல்லை நிலத்து ஆடவர்களின் ஆண்மைத் திறப் புலப்பாடாக அமைந்த இந்த விளையாட்டைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு அந்நில மக்கள் வழங்கிய கொடையாகவே கருத வேண்டும் இந்த ஏறுதழுவுதல் விளையாட்டானது அன்றைய பதிவுகளின் நீட்சியாகவே தமிழகத்தின் சில பகுதிகளில் இன்னும் நிலவி வருவதைக் காணமுடிகின்றது. இந்நிகழ்வு ஏறுகோடல், ஏறு தழுவுதல், ஏறு கோள், ஏறு விடுதல் என்னும் பெயர்களில் முல்லைக்களியிலும், இக்காலத்தில் ஜல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு, மாடுபிடித்தல், கூளிபித்தல், கூளியாடுதல் என்னும் பெயர்களிலும் வழங்கப்பட்டு வருகின்றது.

ஆவினங்களையே அடிப்படை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள முல்லை நிலச் சமுதாயத்தில் பிறப்பு முதல் இறப்பு வரையிலான அனைத்து நிகழ்வுகளும் அவ் ஆவினங்களை முன்நிறுத்தியே மேற்கொள்ளப் பட்டுள்ளமை அறியலாகிறது. இரண்டு வகையான ஏறுதழுவுதல்கள் குறித்த

செய்திகள் முல்லைக் கலியில் இடம் பெற்றுள்ளன. தொழுவத்தில் நிகழும் ஏறு தழுவுதலைப் பற்றியும், ஆறாம் பாடல் வியன்புலம் என்று கொல்லப்படுகின்ற மேய்ச்சல் நிலத்தின் தற்செயலாக நிகழும் ஏறுதழுவுதல் பற்றியும் குறிப்பிடுகிறது. இளைஞன் ஒருவன் தனது வீரத்தால் காளையை அடக்கி வெற்றி காண்பதே வீரம் சார்ந்த மதிப்பாகக் கருதப்படுகிறது.

**ஆயர்தம் குலமரபு மாண்பு**

கொல்லும் தன்மையுடைய ஏற்றினைத் தழுவியடக்கும் ஆயர்குல வீர மறவனே, அக்குலத்தில் பிறந்த கற்புடைய மங்கையை மணக்கத் தகுதியானவன் எனும் மரபார்ந்த வழக்கத்தையுடையவர்கள் ஆயர்கள். அவ்வழக்கப்படி ஆயர் குலத்தில் ஒரு பெண் பிறந்தவுடனேயே தம் தொழுவத்தில் ஒரு ஆனேற்றுக் கன்றையும் வளர்க்கத் தொடங்குவர். அவளுக்குரிய அவ்வேற்றினை அடக்கியே அவளை மணக்க விரும்புவோர் மணக்க முடியும்.

அவ் ஆய்மகளை விரும்பும் ஆயரிளைஞன்தான் அவளை முறைப்படி ஏறுதழுவிப் பின் மணம்செய்து கொள்வதாகத் தன் பெற்றோர்க்கு அறிவிப்பான். இவ்விளைஞனின் விருப்பத்தினை அறிந்த அவளுடைய பெற்றோர் ஏறுதழுவுதல் நிகழ்வுக்குரிய நாளை முடிவுசெய்துகொண்டு, அவ்விளைஞனேயன்றித் தம் சுற்றத்தாருள், பெண்ணை மணக்கும் முறைமையுடைய இளைஞர்களுக்கும் ஏறுதழுவுவதற்கு உரிய நாளைப் பறையறைந்து தெரிவிப்பர். ஆயரினமக்கள் ஏற்றினைத் தழுவியடக்கவியலாத ஒருவன் ஆயர்குலப் பெண்ணைத் தீண்டவியலாது என்பதனை வரைமுறையாகக் கொண்டொழுகினர். இதனை,

**"பொருபுகல் நல்லேறு கொள்பவரல்லால்**

**திருமாமெய் தீண்டலர்"**

எனும் முல்லைக்கலிப் பாடலடிகளால் அறியலாம்.

மூவினத்து ஆயரும் ஏறுதழுவுதல் முல்லைக் கலியில் மூவினத்து ஆயரிளைஞர்கள் ஏற்றினைத் தழுவியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் கோட்டினத்தாயர், கோவினத்தாயர், புல்லினத்தாயர் எனப்பட்டனர். இது,

**"கோட்டினத்தாயர் மகனன்றே மீட்டோரான்"**

**"கோவினத்தாயர் மகனன்றே ஓவான்"**

எனும் அடிகளால் புலனாகிறது. கோட்டினத்தாயர்கள் எனப்படுபவர் கோடுகளையுடைய எருமைத் திரளுக்கு உரியவர்களாவர். கோவினத்தாயர்கள் பசுத்திரளையுடையவர்களாவர்.

புல்லினத்தாயர்கள் எனப்படுபவர்கள் ஆட்டுமந்தையை யுடையவர்களாவர். இவ்வாறு மூவினத்து ஆயரிளைஞர்களும் ஏறுகளைத் தழுவுகின்றனர்.

**ஏறு தழுவுதல் குறித்துச் சிலப்பதிகாரக் கருத்து**

கோவலன் சிலம்பு விற்க மதுரை நகருக்குள் நகருக சென்றுள்ளான். மதுரைப் புறநகரில் கண்ணகி ஆயர்குலப் பெண்ணான மாதரி வீட்டில் தங்கியுள்ளாள். அப்போது சில தீநிமித்தங்கள் தோன்றின. அதனால் மாதரி குரவைக் கூத்து நடத்திக் கண்ணன், பலராமன் முதலான தெய்வங்களைப் போற்றித் துதித்தால் தீங்கு எதுவும் வாராது என நம்பி ஆய்ச்சியர் குரவைக்கு ஆயத்தம் செய்தாள்.

"காரி கதனஞ்சான் பாய்ந்தானைக் காமுறுமிவ் வேரிமலர்க் கோதையாள் சுட்டு." பொருள்: கரிய எருதின் சீற்றப்பாய்ச்சலைக் கண்டு அஞ்சாமல் அதன்மேல் பாய்ந்து அதனை அடக்கியவனை, தேன்நிறைந்த மலர்மாலை அணிந்த இப்பெண் விரும்பி ஏற்பாள். காளையை அடக்கியவனுக்கே காரிகை.

**"நெற்றிச் செகிலை அடர்த்தாற்(கு) உரியவிப் பொற்றொடி மாதரால் தோள்." "மல்லல் மழவிடை ஊர்ந்தாற்(கு) உரியளிம் முல்லையம் பூங்குழல் தான்." "நுண்பொறி வெள்ளை அடர்த்தாற்கே ஆகுமிப் பெண்கொடி மாதர்தன் தோள்." "பொற்பொறி வெள்ளை அடர்த்தாற்கே ஆகுமிந் நற்கொடி மென்முலை தான்." "வென்றி மழவிடை ஊர்ந்தாற்(கு) உரியளிக் கொன்றையம் பூங்குழ லாள்." "தூநிற வெள்ளை அடர்த்தாற்(கு) உரியளிப் பூவை புதுமல ராள்".**

கலித்தொகையில் குறிப்பிடப்பட்டவாறே சிலப்பதிகாரத்திலும் கூறப் பட்டுள்ளன. ஆய்ச்சியர் குரவையாடித் தெய்வத்தை (கண்ணன், பலராமன், நப்பின்னை முதலானோரை)த் தொழுது, நாட்டையாளும் மன்னவனை வாழ்த்தி இறுதியில் உலகத்தை வாழ்த்தி முடித்தனர்.

இவ்வாறு ஏறு தழுவுதலைப் பற்றிக் கலித்தொகையிலும் கூறப்பட்டுள்ளது.

**"ஏறுதழுவுவோன் சிலரின் உதவியோடு காளையினை அடக்கிக் கொன்றுவிடுவான்."**

அதாவது ஒரு மைதானத்தில் கையில் நிறத்துணியுடன் வலிமையான களமிறங்குவர். சிவப்பு வீரனும், காளையும் காளையிடம் வீரன் தோற்க நேர்ந்தால் அவன் இறக்க நேரிடும். வீரன் வெற்றிபெற்றால் காளையினைக் களத்திலேயே கொன்றுவிடுவது இங்கு வாடிக்கையாகும். இதனால் உயிச்சேதம் ஏற்படுகின்றது. ஆனால் இதனை இவர்கள் பொருட்படுத்துவதில்லை. இங்குதான் நம் தமிழரின் உயர்ந்த பொற்றப்படுகின்றது.

சங்காலத்தமிழர்கள் அறம் தோற்றாலும், வென்றாலும் காளைகளைக் கொன்றதாக வரலாறில்லை. இதுவே தமிழரின் அறக்கோட்பாடகும். மேற்கண்ட பாடல் வரிகள் வாயிலாக அறியப்படுகின்றது.

சங்ககாலத் தமிழர்கள் விலங்குகளைத் தங்களது உடைமையாகக் கருதி வளர்த்து வந்ததனை இதன் மூலம் முல்லைக்கலி பட்டினப்பாலையில் ஓரிடத்திலும், அறியலாம். தவிர மலைபடுகடாமில் (330-335) சற்று ஏறுதழுவுதல் விரிவாகவும் குறித்துச் சுட்டபட்டுள்ளது. இலக்கண நூலான புறப்பொருள் வெண்பாமாலையில் ஒழிபியல் பிரிவில் 'ஏறுகோள்' குறித்துக் கூறப்பட்டுள்ளது. இதற்கான கல்வெட்டுச்சான்றுகளும் கிடைகின்றன.

## தொகுப்புரை

சங்க காலத் தமிழ் மக்கள் மனிதனுடைய வாழ்க்கை, மதிப்பும் பயனும் வாய்ந்ததாக அமைய வேண்டும் என்பதில் பேரார்வம் காட்டினர். அதற்குரிய சிறந்த கருவி இல்வாழ்க்கை என்பதைத அவர்கள் நன்கு உணர்ந்து இருந்தனர். இல்வாழ்வு என்பது அன்பும் வீரமும் நிறைந்த வாழ்வு என்பதை சங்க இலக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன. தமிழிலக்கியங்களில் இதற்கான சான்றுகளைக் காணலாம். மனித மதிப்பு, அவன் வாழும் வாழ்க்கை, சமூகம் ஆகியவற்றோடு மதிப்பிடப்படுகிறது. வரைவு வேண்டி பொருள் தேடச் செல்லுதல், வரைவு வேண்டி வீரம் நிரூபித்தல் ஆகிய இவை மனித மாண்பை மேன்மைப்படுத்தும் செயலாக இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன. சமூகம் சார் மதிப்பு என்பது மனிதன் தான் சார்ந்து வாழ்கின்ற சமூகத்தின் பண்பாடு, கலாச்சாரத்தால் அமைகிறது. அத்தகு பண்பாடுகளில் ஒன்றான ஏறுதழுவுதல் மானுட மதிப்பை மேன்மைப்படுத்துகிறது. அன்றும் இன்றும் ஒட்டுமொத்த தமிழர்களின் அடையாளமாகவும் தனியொரு மனிதனின் மாண்பாகவும் ‘ஏறுதழுவுதல்’ அமைகிறது.

## துணைநூல் பட்டியல்

1. கு.வெ.பாலசுப்பிரமணியன் கலித்தொகை நியுசெஞ்சுரி புத்தக நிலையம்
2. க.த.திருநாவுக்கரசு தமிழ்ப்பண்பாடு 2009 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை

# நுழைந்த அந்நிய படையெடுப்புகளும், தொலைந்த தமிழ் மொழியின் மெய்ஞான கோட்பாடுகளும்

**க. தியாகராஜா**

*உதவிப்பேராசிரியர், முதுகலை வரலாற்றுத்துறை*

*ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி, போடிநாயக்கனூர், தேனி*

**ஆய்வுச் சுருக்கம்**

*பாரதநாட்டில் குறிப்பாக தென்னகத்தில் மேற்க்கொள்ளப்பட்ட அந்நியப்படையெடுப்புகள் மூலம் தமிழ் மொழியின் மெய் ஞானக்கோட்பாடுகளை அந்நியர்கள் கவர்ந்து சென்றதனைப்பற்றி இந்த ஆய்வுக்கட்டுரை எடுத்துக் கூறுகின்றது. சங்ககாலத்திற்கு பின் களப்பிரர்கள் தொடங்கி ஆங்கிலேயர்கள் வரை மேற்க்கொண்ட படையெடுப்புகள் மெய்ஞான கோடபாடுகளை இலக்கண, இலக்கிய படைப்புகளை மொழிபெயர்ப்பு என்ற பெயரில் மேற்க்கொண்ட அறிவுத்திருட்டினை படம்பிடித்து ஆதாரத்துடன் விளக்குகின்றது. தமிழ் மொழியின் தோற்றம் பற்றிய நடராஜர் தத்துவம் குறித்த கோட்பாடும் அவற்றினை தெளிவுபடுத்தும் ஆதாரத்தினை மறைக்க திருக்குறளில் மேற்க்கொண்ட எழுத்து திருத்தம் பற்றியும் தெளிவுபடுத்துகின்றது.*

**முன்னுரை**

மனிதன் என்று காட்டினை அழித்து ஆற்றங்கரையினை ஆதாரமாக வைத்து நாட்டினை உருவாக்கி அரசாங்கம் அமைத்தானோ அன்று முதல் ஒவ்வொரு மேம்பட்ட வாழ்வியல் விழிமியங்கள் அனைத்தும் ஒருங்கிணைத்து நாகரிகங்கள் என உருமாருகின்ற நிலையில், காலத்திற்க்கு ஏற்றார் போல் அதிகார எல்கை விரிவாக்கம் ஒவ்வொரு பண்பட்ட அரசியல், சமூகம், பொருளாதரம் மற்றும் கலாச்சாரம் போன்ற அடிப்படை கட்டமைப்புகளை தோற்றுவித்தலும் நிலைநிருத்துதலும், களைத்தலும் மற்றும் அழித்தலும் இயல்பே ஆகும்.

இந்திய வரலாறு குறிப்பாக, தமிழக வரலாறு கடந்து வந்த பாதைகளை எண்ணி வழி நெடுகிலும் பின்னோக்கி பார்க்க புறப்பொருள் வெண்பாமாலை கூறும் “வெட்சி நிரைகவர்தல், மீட்டல் கரந்தையாம்” என்ற பாடல் வரிகள் ஆநிரைகளை கவர்தலும் மீட்டுதலினை மட்டும் நினைவு படுத்தவில்லை தமிழ்மொழியின் மெய்ஞானக் கோட்பாட்டினை கவர்தலையும், களைத்தலையும் மற்றும் அழித்தலையும் பற்றி தெளிவுபடுத்துகின்றது.

மெய் ஞான கோட்பாடு எங்கு தோன்றுகின்;றது, கால மாற்றங்களுக்கு ஏற்ப்ப

ஒருவன் தன்னை ஒழுக்க நெறிப்படுத்திக் கொள்ள முயலும் பொழுது அவன் மனதில் பிறர்நலன் பேணும் எண்ணங்கள் தோன்றி வளர ஆரம்பம் ஆகின்றது, அத்தருணமே மெய்ஞானத்தினை உணர தலைப்படுகின்றான், அச்சூழலுக்கு ஏற்ப்ப சமூகத்தினை நெறிப்படுத்த என்ன தேவையோ அவற்றினை உணர்ந்து அறிய, அவற்றினை ஒழுங்குபடுத்த தேவையான ஆற்றலினை பிரபஞ்சம் தான் மேற்க்கொள்ளும் அற்பணிப்பு பணியில் சிந்தனையினையும் செயலினையும் ஒருங்கிணைக்கும் (ஆழ்நிலை தியானம்) வழியே கருத்து பதிவுகளை மெய்ஞானத்தின் வழியில் முயன்று கற்றல் படிநிலைகளில் (அமனுஷ்ய சக்திகள் இல்லை) ஒழுங்குபடுத்தி நிரப்பி இலக்கியங்கள், இலக்கணங்கள், இயந்திரங்கள் போன்றவற்றினை படைத்து சமூகத்திற்க்கு வழங்க, காலச்சூழல் அவற்றினை அரங்கேற்றம் செய்ய வழிவகுத்து தரும்.

மேற்க்கூறிய மெய்ஞானத்தின் தொடர்பான எண்ண அலைகளை பிரபஞ்ச ஆற்றல் ஆழ்நிலை தூக்கத்தின் பொழுது ஆழ்மனத்தின் கண் தென்படும் கனவுகளாக தெய்வ முறையீடுகள் தன்னைச்சுற்றியுள்ள பொருட்களில் வெளிப்படுத்தி காரண, காரியங்களை மறைபொருளாக நின்று காட்சி படுத்தியும் மற்றும் குரல் ஒலியினை எழுப்பியும் வரையறுத்து இருக்கும். இதனை மேலும் தெளிவுபடுத்தும் பொருட்டு மொகஞ்சதாரோ முத்திரைகளின் மேல் பொறிக்கப் பட்டுள்ள எழுத்துகளுக்கும் கி.மு. இரண்டு, மூன்றாம் நூற்றாண்டுகளில் பொறிக்கப்பட்ட தமிழ்-பிராமி எழுத்துக்களுக்கும் இடையே பல இயைபுகள் காணப்படுகின்றன. இவ்வெழுத்துக்கள் வெளியிடும் செய்திகள் அனைத்துமே கடவுள் மாட்டுக் கொடுத்துக்கொள்ளும் (தெய்வ முறையீடுகள்) விண்ணப்பங்களாக அமைகின்றது.

**கலைச்சொற்கள்**

அந்நிய படையெடுப்பு - இலக்கணம் - இலக்கியம் - மெய்ஞான கோட்பாடு - நடராஜர் தத்துவம் - திருக்குறள்.

**அந்நிய படையெடுப்புகள்**

**பண்டையகாலம்**

முச்சங்க கால வரலாற்றிற்கு பிறகு, பாரதநாட்டின் தென்பகுதியில் மேற்க்கொண்ட அந்நிய படையெடுப்புகளான களப்பிரர்கள், பல்லவர்கள், டெல்லி சுல்தானியர்க்ள், நாயக்கர்கள் மற்றும் ஐரோப்பியர்கள் தென்னகத்தின் அரசியலிலும், சமூகத்திலும், பொருளாதரத்திலும், கலாச்சாரத்திலும், பண்பாட்டுக்கூறுகளில் பல்வேறு தாக்கங்களை இனம், மொழி, மதம் சார்ந்த கொள்கை கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு சாதகமாகவும், பாதகமாகவும் பல்வேறு தாக்கங்களை ஏற்ப்படுத்தியது குறிப்பிடதக்கது.

**தமிழ் மொழியில் மெய்ஞானம் கோட்பாடு**

மொழியின் பரிணாம வளர்ச்சியானது சைகை, கிறுக்கல், உருவப்படம், சித்திரவடிவ எழுத்துக்களில் செயலினை எழுத்தாகவும், செயல் விளக்க உருவப்படத்தினை முன்வைத்து கருத்துக்களை தனியே படம்பிடித்து வெளிப்படுத்திய மக்கள், பின் தனது செயலினையும் சிந்தனையினையும் ஒருங்கிணைத்து வெளிப்படுத்த தொடங்கிய பொழுது பிரபஞ்ச மெய் ஞானத்தினை அடைந்து அதன்வழியே செயலினையும் சிந்தனையும் ஒருங்கிணைத்த கருத்தியல் எழுத்துக்களை மெய் ஞானத்தின் வழியே "அண்டத்தில் உள்ளதே பிண்டம், பிண்டத்தில் உள்ளதே அண்டம் உணர்ந்துதான் பார்க்கும் பொழுதே" என்ற பிரபஞ்ச தத்துவத்தினை (நடராஜர் தத்துவம்) அடிப்படையாக கொண்டு கருத்தியல் எழுத்துக்களை கட்டமைத்தனர்.

மேலும் இவற்றிற்கான ஆதாரமாக சிந்துசமவெளி எழுத்து முத்திரைகளில் உருவம் பொறித்த யோக நிலை முத்திரை தெளிவுபடுத்துகின்றது. தமிழ் மொழியும் இதுபோன்ற மெய்ஞான தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டுதான் வரையறுக்கப்பட்டது.

**கருத்தியல் எழுத்துக்களின் தோற்றமும் நடராஜர் தத்துவமும்**

வி.கோ. சூரியநாரயண சாஸ்திரியாரின் (பரிதிமாற்கலைஞர்) கருத்தியல் மொழித்தோன்றல் பற்றிய கருத்தினை தனது நூலான தமிழ் இலக்கிய வரலாற்றில் "தமிழ் நூலாசிரியர் பலரும்,இக்காலத்தினும் ஆங்கில நூற் பயிற்சியில்லாத நண்பருட் சிலரும் தமிழ்மொழியும் வடமொழியுந்தேவ பாஷைகளைன்றும், இவ்விரண்டும் முறையே அகத்தியனார்க்கும் பாணிநியார்க்கும் சிவபெருமானால் உபதேசிக்கப்பட்ட வென்றும் கூறாநிற்பர்.

"ஆதியிற் றமிழ் நூலகத்தியற் குணர்த்திய மாதொரு பாகனை வாழ்த்துதும்" எனவும் வடமொழியியைப் பாணிநிக்கு வகுத்தருளி யதற கிணையாகத் தொடர்புடைய தென்மொழியைத் தொடுகடல்சூழ் வரைப்பதனிற் குடமுனிக்கு வற்புறுத்தார் கொல்லேற்றுப் பாகர்" எனவும் கூறப்படுகின்றது.

மு.வரதராசனாரின் கருத்தியல் மொழித்தோன்றல் பற்றிய கருத்து தனது படைப்பான தமிழ் இலக்கிய வரலாற்றில் திருநாவுக்கரசர் (கி.பி. ஏழாம் நூற்றாண்டில்) சிவ பெருமான் எல்லாம் ஆனவன் என்று பாடும் இடத்தில், 'ஆரியன் கண்டாய் தமிழ்கண்டாய்' என்று இந்தியாவின் கலைவழிப்பட்ட பாகுபாட்டை இரண்டு இனமாகவே குறிப்பிட்டார். சிவபெருமானின் தமருகத்தின் ஒரு பக்கத்திலிருந்து பிறந்த ஒலி தமிழ் ஆயிற்று என்றும், அந்த தமருகத்தின் மற்றொரு பக்கத்திலிருந்து பிறந்த ஒலி வடமொழி ஆயிற்று என்றும் புராணக்கதை வழக்கத் தொடங்கியது. சிவன் வடமொழியியைப்

பாணினிக்கும தென்மொழியை அகத்தியருக்கும் கற்றுக்கொடுத்து இரு மொழிகளையும் வளரச் செய்தான். என்று வழங்கும் புராணக்கதையின் அடிப்படையும் இதுவே ஆகும்.

கா.கோ.வேங்கடாரமன், தனது நூலான தமிழ் இலக்கிய வரலாற்றில், "உலகத்தோற்றத்தின் போது, சிவபெருமானின் உடுக்கையிலிருந்து ஒரு புறம் தமிழும் மறுபுறம் வடமொழியும் தோன்றின என்று தொன்மத்தார் (புராணக்காரர்கள்) கூறுவர். இச்செய்தியினையே "தழற்புரை நிறக்கடவுள் தந்ததமிழ் என்று கம்பரும்", "ஆதிசிவன் பெற்றுவிட்டான்-என்னை என்று தமிழன்னை கூறுவதாகப் பாரதியாரும்"; வழிமொழிகின்றனர்.

ஐராவதம் மகாதேவன் மொழியியல் வள்ளுநர், கல்வெட்டு நிபுணரின் கூற்று "புராணங்களில் மொழிகள் சிவனின் (நடராஜர்) உடுக்கையின் அதிர்வு ஒலியில் இடப்புறம் தமிழ்மொழியும,; வலப்புறம் சமஸ்கிருதமும் தோன்றியது"

**சிவனின் உடுக்கையில் தமிழ் மொழி தோற்றம் பற்றிய கோட்பாடு பகுப்பாய்வு:**

பொதுக்கூற்று: மேற்காணும் தமிழ் மொழியியல் ஆய்வாளர்களின் மேற்க்கோள்கள் யாவும் தமிழ்மொழியின் தோற்றம் பற்றி ஒரே புள்ளியில் நிற்க்கின்றனர். அதாவது, "சிவனின் உடுக்கையின் இடப்புறம் தமிழ்மொழியும் வலப்புறம் வடமொழியும் தோன்றியது" என்பது உறுதியாகின்றது.

இறைவனின் ஐந்தொழில் தத்துவமே நடராஜ உருவத்தின் தத்துவமாகும். நடராஜர் உருவத்தில் அமைந்துள்ள உடுக்கை - படைத்தல் தொழிலினையும், அபயகரம் - காத்தல் தொழிலினையும், நெருப்பு - அழித்தல் தொழிலினையும், ஊன்றிய பாதம் - மறைத்தல் தொழிலினையும், தூக்கிய திருவடி அருளுதல் தொழிலினையும் குறிக்கின்றன.

**தொலைத்த தமிழ் மொழியின் தோற்றம் பற்றி மெய்ஞான கோட்பாடுட்டினை விளக்கும் திருக்குறள்**

வரலாற்றில் இன்றளவும் பண்நெடுங்காலத்தினை கடந்து நீடித்து நிலைத்து நிற்க்ககூடிய இலக்கண இலக்கிய படைப்புகள் யாவும் தூய மெய்ஞானத்தின் வெளிப்பாடே ஆகும்.இதனை பண்டைய தமிழர்கள் நன்கு உணர்ந்து தெளிந்து எண்ணிலடங்கா அகப்பொருள் மற்றும் புறப்பொருள் சார்ந்த படைப்புகளை கொடுத்தார்கள், இன்றளவும் அளித்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

குறிப்பாக "பெரும்பாலும் கிருத்துவ மத போதகர்கள் முதன்முதலில் ஐரோப்பிய மொழிபெயர்ப்பாளர்களாக இருந்தனர். அவர்களது மொழி பெயர்ப்புகளும், இந்திய நூல் பதிப்புகளும் மேற்கத்தியத் தத்துவ அளவுகோலின் படி சீரமைக்கப் பட்டவையாக, முன்முடிவுகளைக் கொண்டவைகளாக எழுதப் பட்டிருந்தன." இந்த மொழிபெயர்ப்புத் தந்திரத்தையும் இந்திய

நூல்களில் நீங்கள் ஆராய்ந்து தெரிந்து கொள்ளலாம்.

**எழுத்து திருத்தம்**

**குறள்:**

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு. (1-1330)**

விளக்கம்

**ஞா.தேவநேயப்பாவாணர் உரை**

நெடுங்கணக்கில் (அல்லது குறுங்கணக்கில்) உள்ள எழுத்துக்ளெல்லாம் அகரத்தை முதலாக வுடையன; அதுபோல உலகம் முதற்பகவனை முதலாவதாகவுடையது.

**மு.வரதராசனார் உரை**

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாக கொண்டிருக்கின்றன. அது போல உலகம் கடவுளை அடிப்படையாக கொண்டிருக்கின்றது.

**மணக்குடவர் உரை**

எழுத்துக்களெல்லாம் அகரமாகிய வெழுத்தை தமக்கு முதலாக வுடையன.அவ்வண்ணம் உலகம் ஆதியாகிய பகவனைத் தனக்கு முதலாக வுடைத்து

**சாலமன் பாப்பையா உரை**

எழுத்தக்கள் எல்லாம் அகரத்தில் தொடங்குகின்றன, (அதுபோல) உலகம் கடவுளில் தொடங்குகின்றது.

**மு.கருணாநிதி உரை**

அகர எழுத்துக்களுக்கு முதன்மை, ஆதிபகவன், உலகில் வாழும் உயிர்களுக்கு முதன்மை.

**ஆய்வுக்கருத்து**

**குறள்**

**“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு.” (1-1330)**

மேற்காணும் குறளானது காலப் போக்கில் மெய்ஞானக் கருத்தக்களை விளக்கி உணர்த்துவதற்க்கு மாறாக குறள் மற்றும் பொருள் திரிந்து நிற்க்கின்றது. தமிழ் மொழியின் தோற்றம் குறித்த பல தமிழ் ஆய்வாளர்களின் கருத்தக்களுடன் ஒப்பிட்டு பார்க்கும் பொழுது உண்மை புலப்படுகின்றது.

**“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உ(அ)லகு.” (1-1330)**

குறள் திருத்தம்: ‘ உலகு’ – என்பது ‘அலகு’ ‘உ’ - ‘அ’ என மாற வேண்டும். அப்பொழுதுதான் இக்குறளுக்கான முழுமையான, ஒருமனதான விளக்கம் கிடைக்கும்.

**பொருள்**

அகரம் முதலான எழுத்துக்கள் எல்லாம் ஆதிபகவன் (நடராஜரை) முதற்க் கொண்டே அல்லது அடிப்படையாகக் கொண்டே அலகிடப்படுகின்றது.

**விளக்க உரை**

அகரம் முதலான எழுத்துக்கள் எல்லாம் ஆதியாகிய சக்தியினையும் (மதுரைமீனாட்சி); பகவனாகிய சிவனையும் (சுந்தரேஸ்வரர்) குறிப்பாக இருவரும் இணைந்த சக்தியும் சிவனையும் அர்த்தநாரீஸ்வரரான மீனாட்சி-சுந்தரேஸ்வரரான வெள்ளியம்பல நடராஜ பெருமானை முதற்கொண்டே அலகிடப்படுகின்றது. என ஒருமனதான கருத்தினை விளக்கி நிற்க்கின்றது.

தற்போதைய மதுரையே மூன்றாம் தமிழ்ச்சங்கத்தின் தலைமையிடமாகும் எனவே தமிழ்மொழியின் தோற்றம் குறித்த மெய்ஞானக் கோட்பாட்டினை நிலை நிறுத்துவதற்க்காகவே வெள்ளியம்பல நடராஜர் இடக்கால் தூக்கி கோலத்தில் காட்சியளிக்கின்றார். அதுமட்டுமின்றி நடராஜரின் இடதுகையில் இருக்கவேண்டிய உடுக்கை வலது கையில் இருப்பது தமிழ்மொழியின் தோற்றம் பற்றிய மெய்ஞான கோட்பாட்டினை சிதைப்பதற்க்கான தோற்றம் ஆகும். இந்த மெய்ஞான கோட்பாட்டிற்கான சிதைக்க காரணமான படையெடுப்பு களப்பிர்களா அல்லது சமண சமங்களா? என்பது புதிராக உள்ளது. இந்த இடக்கால் தூக்கி நிற்க்கின்ற கோலம் மதுரையில் மட்டுமே இருப்பது தமிழ் மொழியின் தோற்றம் பற்றி விளக்குவதற்க்காவே உள்ளது.

**நடராஜர் தத்துவமும் கலைகளின் தோற்றம் வளர்ச்சியும்**

கி.பி 7ம் நூற்றாண்டுகளில் பல்லவர் காலத்திலேயே சைவ சமயத்தில் நடராஜர் தத்துவம் வளர்ந்து விட்டது. சோழர் காலத்தில் அது சிற்பத்திலும், ஓவியத்திலும் வடிக்கப்பட்டது. வடமொழி ஆகமங்கள் தமிழகத்தில் பரவியதன் விளைவாக சைவசமயம் புத்துணர்ச்சி பெற்றது. சமய குரவர்கள் நால்வரும் தம்பாடல்களில் மூலம் சைவ வழிபாட்டையும், நடராஜ தத்துவத்தையும் நாடறிய பரப்பினார்கள். எனினும் அவர்களுடைய தமிழ்மறையில் பொதித்து கிடந்த மெய்பொருளை தனியே திரட்டிச் சிலைகளில் வடித்துக்காட்டிய பெருமை சோழர்களையே சாரும்.

கி.பி 10 முதல் கி.பி 13ம் நுற்றாண்டு காலங்களில் சோழர்களின் ஆட்சிகாலத்தில் தமிழகத்தில் கலைகளை சிறப்பாக வளர்த்து எடுத்தனர். குறிப்பாக கோயில்களில் கல்லாலும், வெண்கல சிலைகள் யாவற்றிலும் அழகிலும், அமைப்பிலும் தத்துவவிளக்கத்திலும் மிகச்சிறந்து விளங்குவது நடராஜரின் உருவமாகும். நடராஜரின் உருவங்கள் பலவகையான தோற்றங்களில் வார்க்கப்பட்டது.

**முடிவுரை**

காலத்திற்க்கு ஏற்ப்ப நிகழும் அரசியல் ஆதிக்கத்தில் உள்ள ஆட்சியாளர் அல்லது ஆட்சியாளரை அழுத்தும் சக்திகளாக இருப்பவர்கள் தன்னுடைய மதம், இனம், வழிபாட்டுமுறை, கருத்தியல் நடைமுறையில் உள்ள பண்பாட்டுக்கூறுகளை அடிப்படையாகக்

கொண்ட கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் ரீதியாக அணுகி ஒவ்வொரு மெய்ஞான கோட்பாட்டினையும் காத்தும், அழித்தும, மறைத்துமாக வரலாற்றுச்சக்கரம் சுழன்றது.

மனித நாகரீக பண்பாட்டு சுழற்ச்சியானது படைத்தல், நிலைத்தல், களைத்தல், அழித்தல் என நான்கு படி நிலைகளை வெளிப்படுத்துகின்றது. அதுவே, இறையியல் கோட்பாட்டு சுழற்ச்சியானது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் மற்றும் அருளல் என ஐந்து நிலைகளைக் குறிப்பிடுகின்றது. இவ்வாரு இருக்க எந்த ஒரு மெய்ஞானத்தினையும் நீண்டகாலம் ஒழித்தோ, மறைத்தோ, வைக்க முடியாது உரியவன் உரிய காலத்தில் வரும்பொழுது நீண்டகாலம் ஒழித்தோ, மறைத்தோ வைக்கப் பட்டிருந்த மெய் ஞானக்கோட்பாட்டு தத்துவங்கள் தவறிக்கற்றல் வழியே சாமானிய மனிதன் மூலம் மீண்டும் நிலைநிருத்தப்படும். இதன் மூலம் வரலாறு மீண்டும் திரும்பும்.

**துணை நூல்பட்டியல்**


1. டாக்டர்.கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2023, சென்னை.
2. வி.கோ. சூரியநாரயண சாஸ்திரியார். பி.ஏ. தமிழ்மொழியின் வரலாறு (மொழி நூல்), 1903, சென்னை.
3. மு.வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, 1972, புதுதில்லி.
4. Hindu daily, an epigraphy perspective on the antiquity of Tamil, English edition, June 24th, 2010.5.
5. ந.முத்துமோகன், இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும், 2016, நியு செஞ்சுரி புக் கவுஸ், சென்னை.
6. முனைவர்.சி.சேதுராமன், தமிழ் இலக்கிய வரலாறு, 2019, நியு செஞ்சுரி புக் கவுஸ், சென்னை.
7. வீ.அரசு,தமிழ் இலக்கிய வரலாறு பத்தொன்பதாம் நூற்றாண்டு, இளங்கணி பதிப்பகம், சென்னை. tamilvu.com
8. Dharampal. The Beautiful Tree 2nd edition, annexure –F, pp. 346 -351. (Correspondence between Mahatma Gandhi and Sri Philip u;artog )
9. இராமகிருஷ்ணன்,எஸ்., தமிழ் இலக்கிய வரலாறு ஓர் அறிமுகம்,1962.
10. Nilakanda Sastri, K.A., The u;istory and Culture of the Tamils.11 Pillai.K.K.., A Social History of the Tamils.
11. கல்விச்சிந்தனைகள் பாரதியார்- தொகுப்பு கலாநிதி.ந.இரவீந்திரன்.
13. தமிழ்,தமிழர்,தமிழர் வரலாற்று வரைவு பேராசிரியர் எஸ்.ஜெயசீலன் ஸ்டீபன் எழுத்தக்கள் குறித்த மதீப்பீடுகள், தொகுப்பாசிரியர். பா. இரவிக்குமார்.

# சங்க இலக்கியங்களில் வணிகர்களின் வாழ்வியல் அறங்கள்

**சீ. விஜயதர்ஷினி**

*முதுகலை வணிகவியல் துறை*

*ஏல விவசாயிகள் சங்கக், கல்லூரி, போடிநாயக்கனூர்*

**முன்னுரை**

தமிழர்கள் மொழி, நாகரீகம், பண்பாடு, கலை, இனம் ஆகியவற்றோடு இணைந்து வாழ்ந்தவர்கள். அவ்வாறு வாழ்ந்த இவர்கள் காதலையும், வீரத்தையும் இரு கண்களாக மதித்தனர். புற வாழ்க்கையில் வாழ்வில் ஈடுபட்ட தமிழர்கள் தவத்தில் சிறந்தோர்களுக்கும், ஏனைய உயிர்களுக்கும் உணவளித்து விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர். அறத்தின் வழியாகப் பொருள் தேடி அதன் மூலமாக இன்பத்தில் சிறந்து விளங்கினர். இத்தகைய மனித வாழ்க்கை என்பது உலகில் வேறு எங்கும் காணவியலாத வாழ்வியல் அறங்களாகும். தொல்காப்பியர் கால கட்டத்திலிருந்து அன்பின் ஐந்திணைகளின் வாழ்க்கை முறைகளோடு இயைந்த நம் தமிழர்கள் வணிகக்கலை பண்பாட்டில் உலக மக்களோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்ற வாழ்வியல் நோக்கங்களோடு இக்கட்டுரையை காணலாம்.

**வணிகக் கலை**

தமிழர்களின் மேலைநாட்டுத் தொடர்பு வாணிபத்தின் மூலமாக வளர்ந்துள்ளது என்பதை தொல்காப்பியம் என்ற பழந்தமிழ் இலக்கண நூலில் ஆசிரியர் அரசர், அந்தணர், வேளாளர், வணிகர் என்ற நான்கு பிரிவுகளை கூறியுள்ளார். வணிகர்கள் என்போர் உணவு தானியங்களை விற்கவும், ஏற்றுமதி, இறக்குமதி போன்றவற்றின் வழியாக சுங்கவரியின் மூலமாக அரசிற்கு வருவாய் ஈட்டியும் உள்ளனர். வணிகர்கள் கண்ணி மற்றும் மாலையும் சூடிக்கொள்ளலாம் என்று உரிமையுடையவர்கள். இவர்கள் தமக்குரிய நூல்களை ஓதுதல், யாகங்களைச் செய்தல், தாம் பெற்ற பொருட்களை நல்ல வழியில் செலவிடுதல் உழவு செய்வித்தல், பசுக்களை காத்தல், என்ற வாழ்வியல் செயல்களையும் காத்து வந்தனர் என்பது தெரிய வருகிறது.

வணிகர்களில் ஒரு பிரிவினர் தானியங்களை விற்பனை செய்யும் கூலவணிகர்கள் (சீத்தலைச் சாத்தனார்); என்றும், பொன் வணிகர், அறுவை வணிகர் என்னும் துணி வியாபாரிகள் (இளவேட்டனார்), மணிவணிகர், ஓலைக்கடை வணிகர் (ஆயத்தனார்), என்னும் பிரிவுகளுடன் வாழ்ந்தனர் என்பதை நம் பழந்தமிழ்

புலவர்களின் பெயர்களின் வாயிலாக அறிய முடிகிறது.

**சங்க இலக்கியம் புலப்படுத்தும் வணிகர்கள்**

சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் வணிகர்களின் நெறிகள் பதிவாகி யுள்ளன. நெய்தல் நில மக்களின் முதன்மையான தொழில்களில் உப்பும், மீனும் இடம் பெற்றுள்ளன. மீன் விற்பவர்களை மதுரைக்காஞ்சி என்ற நூலில் மாங்குடி மருதனார் என்ற புலவர் "ஐயமீன் முகந்து கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்" என்றும் உப்பு விற்பவரை "இருங்கழிச் செலவின் வெள்ளுப்புப் பகர்நர்" என்று குறிப்பிட்டுள்ளார். பூ விற்பனை செய்பவர்கள் "பூவும் புகையும் ஆயும் மாக்கள் அருவினை நறும்பூ" என்ற அடிகளால் அறிய முடிகிறது. கூலமாகிய தானியங்களை விற்போர் கூலம் விற்போர் என்றும; துணி விற்போரை "கலிங்கம் பகர்நர்" எனவும், செம்பு விற்பனை செய்வோரை செம்பு விற்பனை செய்வோரை "செம்பு நிறைய கொண்மர்"; எனவும் கூறுகிறது. கடலில் கிடைக்கும் முத்து விற்போரை குறித்து "வளைபடு முத்தம் பரதவர் பகரும்" எனக் கூறுகிறது ஐங்குறுநூற்றில் மருதத் திணையில் குறிப்பிடப்படுகிறது. நெல் விற்போரின் நிகழ்வை "நெல் விற்போர்" என்று மலைபடுகடாம் என்ற நூலில் பெருங்கௌசிகனார் கூறுகிறார். பல பொருட்களையும் விற்பனை செய்யும் செய்திகளை அகநானூற்றில் "பகாஅர் பண்டம் நாறும் "என்பதையும், மேலும் பகலில் பொருட்கள் விற்கள் கடைகளை 'நாளங்காடி' எனவும் இரவில் விற்பனை செய்யும் கடைகளை 'அல்லங்காடி' எனவும் வகைப்படுத்தியுள்ளார். இவை மட்டுமல்லாமல் கள் விற்பனையும் நடந்திருக்கிறது என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது.

**வணிகர்களின் சிறப்புக்கள்**

தொல்லியல் கால தமிழக வணிகர்கள் பல்வேறு நகரங்களிலும், கிராமங்களிலும் வாழ்ந்து வந்தனர். வணிகர்கள் என்பவர்கள் நடுநிலை மிக்கவர்கள். விற்கும் பொருள்களை குறைத்துக் கொள்ளவும் மாட்டார்கள். மக்களிடம் பெறும் பணத்திற்கு ஏற்றவாறு அவர்களின் பொருட்கள் குறையாமல் இருக்கும் என்று பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங் கண்ணனார் கூறியுள்ளார்.

கொள்வதூம் மிகை கொள்ளாது
கொடுப்பதூம் குறைகொடாது
**பல்பண்டம் பகர்ந்து வீசும்"**

**- பட்டினப்பாலை- 206**

எனப் புலப்படுத்தியுள்ள பாடல் அடிகள் மூலம் அறியலாம்.

வணிகர்கள் அறநெறி பிறழாது வாழ்ந்தனர் என்பதை "அறநெறி பிழையாதாற்றினொழுகி" என்பதால் அறியலாம். பண்டைத் தமிழர்கள் சமூகத்தில் வணிகக் குழுக்கள் பலர் இருந்தனர். பாடலிபுரம், சாவகம், மலேசியா, பர்மா,

இலங்கை, அரபுநாடுகள், எகிப்து, உரோம் போன்ற வெளிநாடுகளுடன் வாணிக உறவு வைத்திருந்தனர். பண்டமாற்று முறையில் காசுகளும் வழக்கத்தில் இருந்தன. வணிகர்கள் போக்குவரத்திற்கு கோவேறு கழுதைகளும், குதிரைகளும் பயன்பட்டன. மாட்டுவண்டி மிக முக்கியமான போக்குவரத்து வாகனமாக பயன்படுத்தப்பட்டுள்ளன. தரை வணிகமின்றி கடல் வழியாக பெருமளவில் வணிகம் நடைபெற்றது. தமிழகத்தில் கடல் துறைமுகங்களான பூம்புகார், குமரி, தொண்டி, மருங்கூர், முசிறி, அரிக்கமேடு, காவிரிப் பூம்பட்டினம் என்பன திகழ்ந்தன. கடல் பரவை, ஆழி, ஆர்கலி, முந்நீர் என்றும் கலத்தை ஓடம், கலம், மரக்கலம், தோணி, மிதவை, கட்டுமரம், கப்பல், நாவாய், மரம், திமில், அம்பி, பாய்மரப் படகு போன்ற பல பெயர்களால் அறியப்படுகிறது. வணிக மேலாண்மையில் வரி விதிப்பும், பொருள்களுக்கு முத்திரை இடுவதும் முக்கிய பணியாக இருந்தது என்று குறிப்பிடப்படுகிறது. படடினப்பாலையில் சுங்கவரி பெறுவோர் நள்ளிரவில் காவிரியாற்று மணலில் உறங்குவார்கள். பண்டங்கள் அடங்கிய மூட்டைகளுக்கு சோழனுடைய புலிச்சின்ன முத்திரை இடப்பட்டு ஏற்றுமதிக்கான அடையாளத்தினை உறுதி செய்தனர்.

**பண்டமாற்று வணிக முறை**

தொன்மைக் காலத்தில் நிலம்சார் மக்களின் வாழ்வியலில் பண்டமாற்று வணிக முறையே செயல்பட்டது. புறநானூற்றுப் பாடலில் இறைச்சிக்கு தயிரும், தயிருக்கு நெல்லும் பண்டமாற்று முறையில் அளிக்கப் பட்டது.

அகநானூற்றில் உமணர்கள் உப்பிற்கு பதிலாக நெல் பெற்றனர் என்ற பண்ட மாற்று நிகழ்வை,

**"கதழ்கோல் உமணர்காதல் மடமகள்**
**சில்கோல் எவ்வளை தெரிப்ப வீசி**
**நெல்லின் நேரே வெண்கல் உப்பின்"**

**அகநானூறு-பா.எண் -30**

எனப் பாடியுள்ளார். உப்பு விற்கச் செல்லும் உமணர்கள் வண்டியில் பல எருதுகளைப் பூட்டி ஓட்டிச்செல்வர். உப்பு வண்டிகள் பல ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கும். இதற்கு ஒழுகை என்று பெயர். இந்த ஒழுகை போல இளையவரும் முதியவரும் ஒன்று திரண்டு மீனுடன் வரும் திமிலை மணல் கரைக்கு ஒன்றாக ஒலி எழுப்பி இழுப்பார்.

**முடிவுரை**

தமிழக வணிகர்களின் வாழ்வியல் என்பது பிறமக்களுக்கு வாழ்வியல் ஆதாரமாக அமைந்துள்ளது. செம்மொழி இலக்கியத்தில் அமைந்த சங்கப் பாடல்களில் வணிகர்களின் வாழ்வியல் என்பது உள்நாட்டு மற்றும்

வெளிநாட்டு வாணிபத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சங்ககால மக்களின் வாழ்க்கை முறையானது நிலங்களை அடிப்படையாகக் கொண்டு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைகளின் பிரிவுகளில்; வாழந்து வந்தனர். அவர்கள் முதலில் பண்டமாற்று வியாபாரம் மூலம் ஒரு திணையில் கிடைக்கும் உணவுப் பொருட்களை மற்றொரு திணை மக்களுக்கு அளித்து அங்கு விளையும் பொருட்களைப் பெற்று வந்தனர். உப்புக்கும், மீனுக்குச் சமமாக நெல்லும் கொடுக்கப்பட்டது. ஏற்றுமதி இறக்குமதிக்கு ஏற்ற பல்வேறு துறைமுகங்கள் இருந்தன. துறைமுகங்களில் வந்து இறங்கிய பொருட்களுக்கும், ஏற்றுமதிப் பொருட்களுக்கும் முத்திரை இடப்பட்ட நிகழ்வுகள் நடைபெற்றன என்பதும் தெரியவருகிறது. பண்டங்களை விற்பனை செய்யும் கடைத் தெருக்களிலும், சந்தைகளிலும் பண்டங்களின் பெயர்கள் தாங்கிய கொடிகள்; பறக்கவிடப்பட்டுள்ளன. இரவு நேரங்களில் வண்ண விளக்குகள் ஒளிர விடப்பட்டு வியாபாரம் செய்த தொன்மை தமிழக வணிகர்களுக்கு இருந்தது என்பதை பண்டைய இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன என்பதை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

**துணை நூற்பட்டியல்**


1. பத்துப்பாட்டு நூல்கள்- மூலமும் விளக்கமும்- ஞா. மாணிக்கவாசகன்
2. அகநானூறு மூலமும் விளக்கமும்- ந.மு. வேங்கடசாமி நாட்டார்
3. புறநானூறு – புலியூர் கேசிகன் உரை
4. தமிழ் இலக்கிய வரலாறு- மு.வ.ரதராசனார்

# ‘அம்மாவின் புலம்பல்கள்’ சிறுகதைகள் புலப்படுத்தும் வாழ்வியல் விழுமியங்கள்

**முனைவர் செ. யோகம்**

*உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை*

*வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்*

**முன்னுரை**

உலகம் முழுவதும் பல அறநெறிகள் உள்ளன. அவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாகச் சுட்டக் கூடிய சொல்லே விழுமியம் ஆகும். விழுமியம் என்பது மனிதனின் வாழ்வை ஒழுங்கமைப்பதை நோக்கமாகக் கொண்டது. விழுமியத்தை தனிமனித விழுமியங்கள், பண்பாட்டு விழுமியங்கள் என இரண்டாகப் பிரிக்கலாம். தனி மனித வாழ்வு ஒழுங்கமையும் போது சமுதாய, பண்பாட்டு விழுமியங்களும் ஒருங்கமைகின்றன. தனி மனித ஒழுக்கம், தனி மனித மதிப்பு, நல்வாழ்வு, சுயமதிப்பு, போன்றவற்றை விழுமியங்கள் எடுத்துக் கூறுகின்றன. சங்க இலக்கியத்திலிருந்து இன்றைய இலக்கியங்கள் வரை அனைத்திலும் மனித மதிப்பீடுகள் ஆழமாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இங்கு முகிலை இராச பாண்டியன் எழுதிய ‘அம்மாவின் புலம்பல்கள்’ என்ற சிறுகதை நூலில் உள்ள கதைகளில் காணப்படும் விழுமியங்களை, மதிப்பீடுகளை ஆயும் விதமாக இவ்வியல் அமைகிறது.

**தனி மனித ஒழுக்கம்**

தனி மனித ஒழுக்கம் இன்று அதிகமாக வலியுறுத்தப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது. ஏனெனில் தனிமனித ஒழுக்கமே நல்ல சமுதாயத்தை உருவாக்க ஆணிவேராக உள்ளது. உள்ளங்கையில் உலகம் என்று திறன் பேசி வந்த பிறகு மனித மனங்கள் திரிந்து போக ஆரம்பித்து விட்டன. சிறுவயதிலேயே உண்மையாகவும், நேர்மையாகவும் இருக்க வேண்டும் என்ற மனநிலை வந்துவிட்டால் அவன் சமுதாயத்தில் உயர்ந்த மனிதனாகிறான். ‘அம்மாவின் புலம்பல்கள்’ நூலில் இடம் பெறும் ‘நாணயம்’ மற்றும் ‘ஓட்டம்’ என்ற கதைகளில் வரும் இரு சிறுவர்களும் நேர்மையானவர்களாகப் படைக்கப் பட்டிருக்கின்றனர்.

‘நாணயம்’ சிறுகதையில் வரும் சிறுவன் காலையில் பேருந்து நிலையத்தில் நாளிதழ்

விற்கிறான். பேருந்து புறப்படுவதற்காகப் பேருந்தில் காத்திருக்கும் ஒரு நபர் அச்சிறுவனிடம் ஒரு நாளிதழை வாங்கிக் கொண்டு நூறு ரூபாய் கொடுக்கிறார். சிறுவன் சில்லறை மாற்றிக் கொண்டு வந்து தருகிறேன் என்று விரைந்து செல்கிறான். அவன் வருவதற்குத் தாமதமானவுடன், அவருக்கும், அவர் மனைவி மற்றும் அவருடன் பேருந்தில் அமர்ந்திருப்பவர்களும் சிறுவன் உங்களை ஏமாற்றிவிட்டான் என்கிறார்கள். பேருந்து வேகமெடுத்துக் கிளம்ப ஆரம்பிக்கும் பொழுது அப்பையன் பேருந்தை நிறுத்தச் சொல்லி வேகமாக ஓடி வருகிறான். பேருந்தை நோக்கி அப்படி அவன் வரும் பொழுது அருகிலிருந்த போஸ்ட் தட்டியதால் நாளிதழ்கள் கீழே விழுகின்றன. அவன் அதைப் பொருட்படுத்தாமல் வெளியே நின்றபடியே "சார்.. இந்தாங்க சார்.... ஒங்க பணம்" என்று மூச்சிரைத்த படியே ஒன்பது பத்து ரூபாய் நோட்டுகளைக் கொடுத்தான். மேலும் சில்லறையைப் பேருந்திற்குள் போட்டு விடுகிறான். இப்பொழுது அச்சிறுவனைத் தவறாக நினைத்த அவர் மனம் அவமானத்தால் சிறுத்துப் போகிறது என ஆசிரியர் குறிப்பிடுகிறார். மேலும் அந்தப் பேப்பர் பையனின் முகத்தில் காலம் எல்லாம் எங்களுக்காகவே உழைத்த என் தந்தையாரின் முகம் தெரிந்தது' என்று அவர் நினைப்பதாக அக்கதை நிறைவடைகிறது.

சிறுவனால் ஏமாற்றப்பட்டோம் என அவர் நினைத்த போது அவனைத் திட்டிய அதே நபர். அவன் உண்மையானவன், நேர்மையானவன் எனத் தெரிந்ததும். தனது தந்தையின் இடத்தில் அவனை வைத்துப் பார்க்கிறார். இது தான் தனி மனித ஒழுக்கமாகிய நேர்மைக்குக் கிடைக்கும் பரிசு.

'ஓட்டம்' என்னும் சிறுகதையில் வரும் சிறுவன் லிங்கசாமி வண்டியின் டயரை உருட்டி விளையாடுவதில் மகிழ்பவன். அவனின் சொந்தக்காரர் கடையின் அருகில் மடிக்கப்பட்டுக் கிடக்கும் நூறு ரூபாய் நோட்டைப் பார்க்கிறான் யாரும் பார்க்காமல் அதை எடுத்து விட வேண்டும் எனநினைக்கிறான். ஆனால் முடியவில்லை இறுதியில் செல்லையா மாமாவிடம் சொல்லி விட்டு ரூபாயை எடுக்கலாம் என நினைத்துக் கொண்டு அவரிடம் சொல்கிறான். ஆனால் அவரோ யாரும் பார்கிறார்களா எனப் பார்த்து அவன் சொல்லி முடிப்பதற்குள் பணத்தை எடுத்து மடியில் வைத்துக் கொள்கிறார். லிங்கசாமி முதலில் யாரும் பார்க்காமல் பணத்தை எடுக்க நினைத்தாலும் மனம் மாறி கடையில் இருப்பவரிடம் சொல்கிறான். பணம் கிடைக்கவில்லை என்பது தெரிந்ததும் அதற்காக அவன் வருத்தமோ, துயரமோ அடையவில்லை. மாறாக வண்டியை வேகமாக ஒட்டிக் கொண்டு செல்கிறான். இது அவனுடைய உண்மைத் திறத்துக்கு சவால். அவன் அதில் வெற்றி

யடைகிறான். மடியில் கணமிருந்தால் தான் வழியில் பயமிருக்கும்' என்பார்கள். லிங்கசாமிக்கு இப்போது எந்த மனக் குழப்பமும் இல்லை. பணம் கீழே கிடந்ததால் நான்கு ஐந்து முறை அந்த இடத்தையே சுற்றி வந்தவன் இப்போது வண்டியின் பின்னால் செல்கிறான் "இப்போது அவனது மனம் ரூபாயை நோக்கி ஓடவில்லை வண்டியின் பின்னால் வேகமாகக் கவலை இல்லாமல் ஓடியது" எனக் கதை முடிகிறது. உண்மையும் நேர்மையும் இருக்குமிடத்தில் எந்தக் கவலையும் துன்பமும் இருக்காது. எல்லா மனிதர்களும் இச்சிறவர்களைப் போல இருந்தால் இளைய சமுதாயம் மேன்மையானதாக உருவாகும்.

**தவறை உணர்தல்**

கீழே விழுவது தவறு அல்ல எழுந்து நடக்காமல் வீழ்ந்தே கிடப்பது தான் தவறு என்பது போல தவறு செய்வது மனித இயல்பு. ஆனால் அதை உணர்ந்து திருந்தும் போது தான் முழுமனிதனாகிறான். தன் தவறைத் தானே உணரும் பண்பு எல்லா மனிதரிடமும் இருந்து விடாது. தவறை உணர்ந்தால் பணிபுரியும் இடமும் குடும்பமும் நல்ல விதமாக மாறும். உறவுகளும் மேம்படும் 'இமைக்கும் பொழுதில்' என்ற கதையில் வரும் கதைத் தலைவன் ஒரு இடத்தில் கூட நிலையாகப் பணிபுரிய மாட்டான். ஏதாவது காரணத்தால் தவறு செய்து வெளியேறுவதை வாடிக்கையாக வைத்திருந்தான். தற்போது வேலை பார்த்த இடத்தில் 'செக்'கை உரிய நேரத்தில் வங்கியில் போடாததற்காக வேலையை விட்டு முதலாளி அனுப்பிவிட்டார். வீட்டிற்குச் சென்று மனைவி குழந்தைகளைப் பார்க்கப் பிடிக்காமல் கடற்கரைக்குச் செல்கிறான். வேடிக்கை பார்த்துக் கொண்டு அமர்ந்திருக்கிறான். திடீரென்று அந்த இடத்தில் பரபரப்பு கடலில் கால் நனைத்துக் கொண்டு நின்றிருந்தவர்களில் ஒருவரை இமைக்கும் நேரத்தில் கடல் அலை இழுத்துக் கொண்டு சென்று விட்டது என்று பேசிக் கொண்டார்கள். அந்த வார்த்தையைக் கேட்டு மனம் மாறுகிறான். "இமை தட்டும் நேரத்தில் உயிரே போய்விடும் என்றால் செக்கைப் போட வேண்டிய நேரத்தில் போடாமல் விட்டது என் தவறு தான் என்று எனக்குப் புரிந்தது" என்று அவன் நினைப்பதிலிருந்து அவன் தவறை உணர்ந்தான் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். நாளை எப்படியாவது முதலாளியிடம் பேசி வேலை வாங்கி விடலாம் என்ற நம்பிக்கை அவனுக்குப் பிறக்கிறது. தவறை உணரும் போது வாழ்க்கையின் மீது எல்லோருக்கும் வரும் நம்பிக்கை அவனுக்கும் வருகிறது.

'என் உயிர் நின்னதன்றோ!' என்ற கதையில் வரும் செல்வநாதன் இளமைக் காலத்தில் குடித்து உடலைக் கெடுத்து தற்போது இரண்டு கிட்னியும்

செயலிழந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பவர். தன் மனைவிக்கும் மகன்களுக்கும் அவர் எந்தவொரு மகிழ்ச்சியையும் கொடுக்காத சூழ்நிலையிலும் அவர்கள் அவரை நன்கு கவனித்துக் கொள்கிறார்கள். அவர் எப்பொழுது வெளியே சென்றாலும் அவர் மனைவி அவருக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார். மகன் வேலையை விட்டுவிட்டு வந்து அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வது, அவருக்குத் தேவையானவற்றைச் செய்வது என வீட்டிலேயே இருக்கிறான். இச்சூழலில் செல்வநாதன் இளமையில் தான் குடித்து விட்டு வந்து செய்த தவறுகளை எல்லாம் நினைத்து வருகிறார். அதோடு மட்டுமல்லாமல் மேலும் ஒரு தவறு செய்ய நினைக்கிறார். மனைவிக்கும் மகன்களுக்கும் தொல்லை கொடுக்காமல் தற்கொலை செய்து வாழ்வை முடித்துக் கொள்ளலாம் என நினைத்து கயிறு வாங்கி வந்து யாரும் பார்க்காத நேரத்தில் ஸ்டூலை இழுத்து அதன் மேல் ஏறிக் கயிறை உத்தரத்தில் மாட்டுகிறார். கயிறை சரியாகப் பிடிக்க முடியாமல் கீழே விழுகிறார். அடுத்து முயற்சிக்கும் போது மனைவி முத்துலட்சுமியின் பொட்டு வைத்த முகமும், மகன் ஆசையாய் வாங்கிக் கொலுசை அவள் காலில் மாட்டிக் கொண்டு வந்ததும் நினைவில் வருகிறது. அப்பொழுது முன்பை விடப் இப்பொழுது பெரிய தப்பு செய்யப் போனேனே என்று வருந்துகிறார். தவறு செய்ததற்காக வருந்தும் செல்வநாதன் என் உயிர் என் மனைவிக்குச் சொந்தம் என நினைத்துக் "கயிற்றை அவிழ்த்து பீரோவுக்குக் கீழே போடும்போது வாசலில் கொலுசு சத்தம் கேட்டது" எனக் கதை நிறைவடைகிறது. தன் தவறை உணரும் போது மனிதன் பிறரைத் துன்புறுத்த நினைக்கமாட்டான் என்பதை இக்கதை நிரூபிக்கிறது.

**மனித நேயம்**

மனிதனாகப் பிறந்த அனைவருக்கும் இருக்க வேண்டியது மனித நேயம். தன்னை நேசிப்பது போல மனிதன் அனைத்து உயிர்கள் மேலும் அன்புடையவனாக இருக்க வேண்டும். மனித நேயம் தான் அனைவரையும் வாழச் செய்கிறது. யாரென்றே தெரியாதவர்களுக்கு நாம் செய்யும் நல்ல செயல் நமது நல்ல உள்ளத்தையும், பிறருக்கு வாழ வேண்டும். நாமும் பிறருக்கு நம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தையும் உருவாக்கும். 'பாடம்' என்ற கதை பள்ளிக்குக் கால தாமதமாக வந்த சிறுவனின் உழைப்பைப் பற்றிக் கூறுகிறது. தினமும் தாமதமாக வரும் சிறுவனை எதனால் தாமதம் என்று காரணம் கேட்காமல் இனிமேல் பள்ளிக்குக் காலந்தவறாமல் வருவேன் அப்டீன்னு ஐந்நூறு தடவை எழுதித் தந்துட்டுத்தான் வீட்டுக்குப் போகனும்' என்று தண்டனை தருகிறார் ஆசிரியர். எழுதிக் கொடுத்து விட்டுத்

தாமதமாகத் தனது தந்தையின் கடைக்குச் சென்று அங்கு தந்தையிடம் வேலை பார்க்க வராமல் எங்கே விளையாடி விட்டு வருகிறாயா என்று தந்தையிடம் செந்தில் திட்டு வாங்குவதை ஆசிரியர் பார்க்கிறார். "காலையிலும் மாலையிலும் தனது தந்தையாருக்கு உதவியாக இருக்கும் ஒருவனின் நேரத்தை 'இம்போசீசன்' என்ற பெயரில் வீணடித்து விட்டேன்" என்று ஆசிரியர் நினைக்கிறார். இங்கே அவரின் மனித நேயம் வெளிப்படுகிறது. மேலும் 'அவசரமாய் ஒரு முடிவு' என்ற கதையில் சுகாதார ஊழியன் துரைச்சாமி தனது டியூட்டி நேரம் முடிந்து அடுத்த டியூட்டிக்குரிய சேகர் வரவில்லை யென்று அவன் வரும் வரை அவனைத் திட்டிக் கொண்டே இருக்கிறான். பசியால் அவன் கோபம் அதிகமாகிறது. எனவே தாமதமாக வரும் சேகரைக் காரணம் கேட்காமலேயே திட்டுகிறான். அதன்பின் வீட்டுக்கு வந்து பார்க்கிறான். அவன் மனைவி காலில் கட்டுப் போட்டு இருக்கிறார். காரணம் கேட்டபோது கீழே விழுந்த தன்னை சேகர்தான் தூக்கிக் கொண்டு வந்து வைத்தியரை கூட்டி வந்து கட்டுப்போட வைத்தான் என்ற செய்தியைக் கேட்டவுடன் சேகரைத் திட்டிவிட்டோமே என்று கவலையடைகிறான். சேகர் மனித நேயத்தால் செய்த செயல், துரைச்சாமியைச் சிந்திக்கவும் கவலை கொள்ளவும் வைக்கிறது.

மேலும் இந்நூலில் சுயமதிப்பு, அன்பு போன்றவற்றை வெளிப்படுத்தும் கதைகள் உள்ளன.

**முடிவுரை**

மனித மதிப்பீடுகள் காலந்தோறும் நிலைத்து நிற்பவை. மனிதநேயம், ஒழுக்கம், சுயமதிப்பு, பிறரைமதித்தல் போன்றவற்றைக் கடைபிடிக்கும் மனிதர்களால் உலகம் இயங்குகிறது. இவைகளை எல்லாம் 'அம்மாவின் புலம்பல்கள்' என்றும் சிறுகதை நூலின் ஆசிரியர் தனது கதைகளில் பிரதிபலிக்கிறார். அன்றாடம் நாம் வாழ்வில் சந்திக்கும் மனிதர்கள் வழியாக வாழ்வியல் விழுமியங்கள் வெளிப்படுவதை உணரலாம்.

**துணைநூற்பட்டியல்**

1. முகிலை இராசபாண்டியன், அம்மாவின் புலம்பல்கள், கோவன் பதிப்பகம், 72, எம்.ஜி. ஆர் சாலை, சென்னை, முதற்பதிப்பு: செப்டம்பர் 2011.
2. டாக்டர் சி.பாலசுப்பிரமணியன், வாழ்வியல் நெறிகள், நறுமலர்ப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 1990.

# இந்தி ஒழிக - தமிழ் வாழ்க - எனது முதல் போராட்டம்

**தமிழ்ச்செம்மல்**
**கவிஞர். தஸ்லிம் காஜா**
*சமூகச் சிந்தனை எழுத்தாளர்*
*புரவலர்: தமிழ்ச்சங்கம், இராமநாதபுரம்*

தமிழ் அழகான மொழி, அன்பான மொழி, அற்புதமான மொழி, அன்னைக்கு நிகரான மொழி, அனைவரும் விரும்பிடும் மொழி, அறிவை வளர்த்திடும் மொழி, அழியா விருட்சமாக துளிர்த்திடும் மொழி, அனைத்து மொழிகளுக்கும் தாய்மொழி, அதிசயம் படைத்திடும் உன்னத மொழி, அணையா விளக்காய்ப் பளிச்சிடும் மொழி, அய்யன் திருவள்ளுவரின் பொதுமறை தந்த மொழி, அகிலமெங்கும் பெரும்பாலான மக்கள் பேசும் உயர்ந்த மொழி எமது தமிழ் மொழி.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்தமொழி எங்கள் தமிழ்மொழி – யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று சொன்னார் மகாகவி பாரதியார். அவர் தமிழைத் தவிர சமஸ்கிருதம், ஆங்கிலம், இந்தி, மலையாளம், வங்காளம், உட்பட பத்திற்கும் மேற்பட்ட மொழிகளை நன்கு கற்றறிந்து ஆய்வுக்கு உட்படுத்தியும் பல மொழி ஆய்வறிஞர்களின் தெளிவான விளக்கங்களை அறிந்த பின்னருமே இப்படியொரு கருத்தை பதிவு செய்தார். அந்த அளவிற்கு தமிழை நன்கறிந்தவர் மகாகவி அவர்கள் தமிழ்மொழி உலகின் !மூத்த மொழி மட்டுமல்ல உன்னதமான மொழியும் கூட, உயர்ந்த மொழியும் கூட, அப்படிப்பட்ட தமிழை தாய் மொழியாகக் கொண்டது, நமக்குகிடைத்த பெரும் வரமே, அந்தத்தாய் மொழித் தமிழுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால், உயிரைக்கொடுத்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு.

அதன் வெளிப்பாடாகவே துவங்கியது எனது முதல் போராட்டம், என் கடைசி மூச்சு இருக்கும் வரை எழுதிக்கொண்டே இருக்கும் என்னை, உலகுக்கு பெருமையுடன் அறிமுகப்படுத்திய தமிழ் மொழிக்காக நான் முதல் போராட்டத்தை (இந்திஒழிக - தமிழ்வாழ்க) துவங்கியதை நினைக்கும் போதெல்லாம் எனக்கு மகிழ்ச்சியைக்கொடுத்துக் கொண்டே இருக்கின்றது. நான் சமூகச் சிந்தனை எழுத்தாளனாக வருவதற்கு அன்றே (1969 லேயே) விதைக்கப்பட்டு இன்று வரை விருட்சமாக வளர்ந்து நிற்கிறேன் என்பதே உண்மை.

**மொழிக்காவலர்களின்; – வாழ்வும் வரலாறும் இக்கட்டுரையின் நோக்கம்**

வயது பதினொன்று வளரும் பருவம் அது. என்ன நடக்கிறது என்பதே புரிந்துகொள்ள இயலாத சிறுபிள்ளையாக இருந்தகாலம் அது. தெரிந்ததெல்லாம் பெற்றதாயும் நெருங்கிய உறவினர்களும், பள்ளித் தோழர்களும் மட்டுமே. வீட்டைவிட்டால் பள்ளி தெரியும். பள்ளிக்கும் வீட்டிற்கும் உரியபாதை மட்டுமே தெரியும் அடிக்கடி அதே பாதையில் சென்று வருவதால் - அடுத்த தெருவில் கூட எதுசரியான பாதை என்று தெரியாத அந்தப்பருவம். எங்காவது போய் மாட்டிக்கொண்டால் வழிதெரியாமல் விழிபிதுங்கி அழுதுகொண்டே விசாரித்து வீடுவந்து சேர்ந்திடும். அந்தக் காலங்களில் இப்படித்தான் அனைத்து சிறுவர்களின் நிலையும், எனது நிலையும் கூட அதுவே தான்.

இராமநாதபுரம் மத்தியில் அமைந்துள்ள சுவார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளியில் ஆறாம் வகுப்பில் சேர்ந்து சில மாதங்கள் ஓடியநிலையில் அன்றாடம் தன் பள்ளித்தோழர்களோடு சேர்ந்து பள்ளிக்கு வருவதும், பள்ளியில் பாடங்களை நன்கு படித்துவிட்டு விளையாட்டு நேரங்களில் விளையாட்டை முடித்துவிட்டு, மாலையில் தன் பள்ளித்தோழர்களுடன் வீடு வந்து சேர்ந்து, அன்றைய வீட்டுப்பாடங்களையும் படித்துமுடித்து, அன்றைய நாளை நிறைவு செய்வதும், பள்ளிக்கு சில பர்லாங் தூரத்தில் உள்ள சின்னக்கடை பகுதியில் வீடு அமைந்து இருந்ததால் தினசரி பள்ளிக்கும் வீட்டிற்கும் நான்கு தடவைகள் தன் பள்ளி நண்பர்களுடன் இணைந்து சென்று வந்ததே ஒரு சிறப்பான அனுபவமாக இருந்தாலுமே, அந்த நாட்களில் பள்ளிக்குச் செல்லும் போது ஊதா கலர் அரைக்கால் சட்டையும், வெள்ளை வெளீர்நிற அரைக்கை சட்டையும் அணிந்து சாரை சாரையாகப்

பள்ளிக்குச் செல்லும் எங்களைப் பார்த்து பலரும் வியப்படைவார்கள். இராணுவ அணி வகுப்புபோல் நாங்கள் கம்பீரமாகச் செல்வதும் மனதில் துளியும் கவலையில்லா அந்த பள்ளிப் பயணம் எங்களையும் மெய்சிலிர்க்க வைக்கும். சந்தோசத்தை ஏற்படுத்திடும் அந்த நாட்களை இன்று நினைத்தாலும் மனம் துள்ளிக்குதித்திடும் மகிழ்வு ஏற்படுவதுண்டு அப்படிப்பட்ட பள்ளி நாட்கள் மிக இனிமையாகச் சென்று கொண்டிருந்த நிலையிலே.

சில மாதங்கள் இனிமையாகவும் பரபரப்பாகவும் பள்ளிப்படிப்பு ஓடிக்கொண்டிருந்த நிலையில், 1969 நவம்பர் மாதம் திங்கள்கிழமை பள்ளி வகுப்புகள் நடைபெற்று காலை இடைவேளைப் பிரிவு நிறைவுபெற்று, மீண்டும் பள்ளிகூடிய நேரத்தில் சரியாக மணி பதினொன்று இருக்கும், வகுப்புகளிலிருந்து நன்றாகப் பாடங்களை படித்துக்கொண்டிருந்த நிலையில் திடீரென ஒரே களேபரமான ஒரு வித்தியாசமான பதற்றத்துடன் சப்தம் வந்தது. என்ன சப்தம், என்ன ஏதுவென்று தெரியாமலேயே பள்ளியிலிருந்த அனைத்து மாணவர்களும் பெரும் பதற்றமடைந்த நிலையில் தங்கள் புத்தகப்பை உடமைகளுடன் பள்ளி வகுப்புகளிலிருந்து வெளிவாசலுக்கு ஓடிட, இதைக்கண்டு பாடம் நடத்திக்கொண்டிருந்த பள்ளி ஆசிரியர்களும் தடுக்கவும் இல்லை. எந்த ஒருவிபரமும் கூறவும் இல்லை. அவர்களும் என்ன ஏதுவென்று சொல்லாமலே, மற்ற ஆசிரியர் நண்பர்களுடன் சேர்ந்து பதற்றத்துடன் ஏதேதோ பேசிக்கொண்டிருந்த நிலையில்,

அவசர அவசரமாக பெரும் பயம்கலந்த தைரியத்துடன் எனது உடமைகளோடு நானும் பள்ளியைவிட்டு வெளியில் வர, வந்த எனக்கோ, பெரும் அச்சமாகவும் பதற்றமாகவும் இருந்தது. சக நண்பர்கள் யாரையும் அந்தக்கூட்டத்தில் கண்டுபிடிக்க இயலவில்லை, விவரம் கேட்டிடவும் முடியவில்லை. பள்ளியின் முன்உள்ள சாலை முழுவதும் ஒரே மாணவர்கள் கூட்டம், ஒரேகளேபரமான அதிக ஆர்ப்பாட்டமாய் சப்தமிட்டுக் கொண்டிருந்தார்கள். என்னவென்று முழுதாய் அறிந்து கொள்ளவே இயலாத நிலையில், வெள்ளைச்சட்டையும், வெள்ளை அரைக்கால் சட்டையும் அணிந்த செய்யதம்மாள் மேல்நிலைப்பள்ளி மாணவர்களும,; மற்றும் வெள்ளைச்சட்டையும் காக்கி அரைக்கால் சட்டையும் அணிந்திருந்த ராஜா மேல்நிலைப்பள்ளி மாணவர்களும,; இன்னும் சில அரசியல் கட்சியைச் சார்ந்த பிரமுகர்களும் கூட்டமாய் கூடிநின்று எனது சுவார்ட்ஸ் பள்ளியின்முன்பு நின்றுகொண்டு இந்தி ஒழிக - தமிழ் வாழ்க - இந்தி ஒழிக - தமிழ் வாழ்க என்று ஓங்கி உரத்தகுரலில் கத்திக் கொண்டிருந்தார்கள்.

மிகப்பெரிய போராட்டக்களமாக இருந்த இந்த சூழ்நிலையில் சுவார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளியின் அனைத்து மாணவர்களும் பள்ளியைவிட்டு வெளியேறி இந்தக் கூட்டத்தில் சேர்ந்துகொண்டனர். இதை உறுதி செய்துகொண்ட போராட்டத்தலைமை வழிகாட்டிகள் எல்லோரையும் வரிசைப்படுத்தி ஊர்வலமாக தொடர்ந்து வரவேண்டும் என வலியுறுத்திக் கூறியவர்கள், சுவார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளியின் கிழக்குப்பகுதியில் அமைந்துள்ள ரோடு வழியாகச் சென்ற ஊர்வலம் நேராக காந்திசிலை அமைந்துள்ள நகராட்சி அலுவலகம் வந்தடைந்தது. அப்படியே வண்டிக்காரத்தெரு வழியாகச்சென்று சண்முகாதியேட்டர், சந்தைப்பேட்டை ரோடு வழியாக சின்னக்கடை பகுதிக்குச்சென்ற ஊர்வலம், சின்னக்கடைப்பகுதியில் நான்கு முக்குரோட்டில் தெற்கே தர்பசயனம் ரோட்டின் வழியாகச்சென்று அரசு விருந்தினர் மாளிகை வழியாகச் சென்ற ஊர்வலம் நேராக இராமநாதபுரம் இரயில்வே நிலையத்தை வந்தடைந்தனர்.

சுவார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளியிலிருந்து அந்த ஊர்வலத்தோடு தொடர்ந்து வந்த நானும் சின்னக்கடைப்பகுதியில் வந்தபொழுது அருகில்உள்ள எனதுவீட்டில் எனது பள்ளி உடமைகளை வைத்து விட்டு, மீண்டும் ஓடிவந்து நானும் மற்றவர்களோடு இணைந்து “இந்தி ஒழிக” “தமிழ் வாழ்க” என உரத்தகுரலில் கோசமிட்டவாறு ஊர்வலத்தோடு சென்று நானும் இரயில்வே நிலையத்தில் உள்ளே வந்து கூட்டத்தோடு கூட்டமாய் கோசம் போட்டுக்கொண்டே இருந்தோம்.

சில நிமிடங்கள் கழிந்தநிலையில் ஒருவர் ஏணி மற்றும் தார்டின்னுடன் வந்தவர் இரயில் நிலையத்தின் கிழக்கு கடைசிப்பகுதிக்கு வந்து இராமநாதபுரம் என்ற பெயர்பலகை இருக்கும் இடத்திற்கு வந்தவர், அந்த பெயர்போர்டில் ஏணியை சாய்த்துக்கொண்டு மேலே ஏறிய அந்தநபர், அருகில் நின்ற என்னை நோக்கி “தம்பி அந்த தார்டின்னை எடுத்துக்கொடுப்பா” எனக் கூறியதைக் கேட்டநானோ உடனே சற்றும் யோசிக்காமல் அந்த தார்டின்னை தூக்கிக் கொடுத்தேன் ஏணியின் மேல்பகுதியில் நின்ற அந்தப்போராளிக்கு நான் கொடுத்ததை எட்டிப்பிடிக்க இயலவில்லை.

உடனே அவர் என்னை "ஏணியில் ஏறிவந்து தாடா" என்று சொல்லியதைக்கேட்ட நானோ தார்டின்னோடு ஏணியில் ஏறிடமுயன்றபோது நான் சற்று நிலைதடுமாறிட, என்னை ஒருவன் தள்ளி விட்டுவிட்டு "நான் ஏறுகிறேன்" என்று சொல்லிவந்த அவரிடமே நான் தார்டின்னை கொடுத்துவிட்டு, நான் ஏணியில் ஏறி 3-வது படியில் நின்றிட தார்டின் வைத்திருந்தவன் அந்த தார்டின்னை என்னிடம் தந்திடவும், உடனே மேலிருந்து அவர் தார்டின்னை என்னிடமிருந்து பெற்றுக்கொண்டு நான் ஏணியின்மேல் ஏறிநின்று கெட்டியாகப் பிடித்துக்கொண்டதும் உடனே அவர் அந்த தார்டின்னில் இருந்து நைந்தமட்டையில் தயாரான ப்ரஸ் மூலமாக தாரை எடுத்து இராமநாதபுரம் என்று எழுதியிருந்த இந்தி எழுத்துக்களைத் தாரால் அடித்துவிட்டு இறங்கியவர் "தம்பி தார்டின்னை அப்படியே அங்கே எடுத்து வா" என்று என்னைக் கூறிட, நானும் அவர் சொன்னது போல் அந்த நிலையத்தில் அவருடன் சேர்ந்து நான்கு ஐந்து இடங்களில் எழுதப்பட்டிருந்த இந்தி எழுத்துக்களையெல்லாம் தார்பூசி அழித்துவிட உதவி செய்தபின் அனைத்து இந்தி எழுத்துக்களையெல்லாம் தாரால் அடித்துவிட்டோம்.

அங்கே தாரால் மறைக்கப்பட்ட அத்தனை இந்தி எழுத்துக்களையும் அழித்துவிட நானே தார்டின்னை தூக்கிக்கொண்டு போய்க்கொடுத்தேன். இப்படி ஒரேகளேபரமாக இருந்தது அந்த போராட்டக்களம் இந்தி எழுத்துக்கள் முழுவதும் அழிக்கப்பட்ட நிகழ்வுகள் முடிந்தபின்னர் மதியம் சுமார் ஒரு மணியளவில் ஒரு இரயில் வந்தது. இராமேஸ்வரத்திலிருந்து வந்த அந்த இரயிலை அத்தனை மாணவர்களும் நின்று வேடிக்கையாகப் பார்த்தோம். இந்த ரயிலைப் பார்த்து ரசித்த பின்பு உடனே சில மாணவர்களும் நானும் "இந்தி ஒழிக - தமிழ் வாழ்க" எனக் கோசம்போட்டோம். அதைக்கேட்ட அத்தனை மாணவர்களும் இதேபோல் கோசம்போட இரயில்நிலையமே அதிர்ந்ததுபோல் இருந்தது. தமிழுக்கு ஆதரவாகவும் - இந்திக்கு எதிராகவும் நடந்த இந்த போராட்டத்தின் உண்மையை விளங்கிக் கொண்ட – அந்த ரயிலில் வந்த பயணிகள் அனைவரும் எங்களுக்கு ஆதரவு தெரிவித்து புன்னகையுடன் கையசைத்த நிகழ்வைக் கண்ட நாங்கள் - எங்களின் போராட்டக் களத்தை மேலும்உற்சாகமுடன் சப்தமிட்டு கோசமிட்டுக் கொண்டே இருந்தோம். உடனே சிலநிமிடங்களில் இரயில் புறப்பட்டுச் சென்றவுடன் அனைத்து மாணவர்களும் கோசம்போட்டவாறே இரயில்நிலையத்திலிருந்து வெளியில்வந்தோம். இரயில்வே பகுதியைத்தாண்டி பேருந்து நிலையப்பகுதியில் ரோட்டுக்கு வந்தபின்பு அவரவர் கலைந்து வீட்டிற்குச் சென்றிட நானும் எனது வீட்டிற்கு வந்துவிட்டேன்.

வீடடில் எனதுதாயார் கேட்டபொழுது "பள்ளிக்கூடம் ஸ்டிரைக்" என்ற ஒரே வார்த்தையை மட்டும் கூறி இந்தப்பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு அடுத்து எனது தெருவிளையாட்டு நண்பர்களோடு அன்றைய வேலைகளிலும் கவனம் சென்றதேயொழிய நாம் என்னசெய்தோம், எந்தப்போராட்டத்தில் கலந்து கொண்டு வந்து இருக்கிறோம், அதன் பணிஎன்ன? அதன்பயன்கள் என்ன? அந்த பதற்றமான சூழ்நிலையின் விளைவுகள் என்ன? இப்படி அந்தப் போராட்டத்தைப்பற்றி எந்தவிதத் தாக்கமும் தெரியாமல் ஒரு விளையாட்டாய் நடந்துமுடிந்த நிகழ்வுகள் போலே நடந்தசெயல்கள் எதுவுமே என் மனதினில் நிற்கவில்லை. இதில் மீதமிருந்த அன்றைய நாளும் எப்பொழுதும்போல் கடந்தது. அடுத்தநாள் செவ்வாய்க்கிழமையும் வந்துவிடிந்திட எப்போதும்போல் காலை ஏழுமணிக்கே அன்றைய தினமும் எழுந்து எனது வீட்டிற்கு அருகில் இருந்த காயிதேமில்லத் படிப்பகம் சென்று தினசரி பேப்பர் படித்துக்கொண்டிருந்த நிலையில் அரைமணி நேரம் கழித்து பின்பு இறுதியாக ஒருதினசரியைப் புரட்டினேன். அப்போது நான் கண்டகாட்சி என்னையே மெய்சிலிர்க்க வைத்துவிட்டது. மிகப்பெரிய சந்தோசமாக மனது அல்லாடிக் குதித்தது. ஒரே மகிழ்ச்சி வெள்ளமாக இருந்தது. அந்த மகிழ்ச்சிக்கு காரணமாக இருந்தது நான் கலந்து கொண்ட "இந்தி எதிர்ப்பு போராட்டமே" .

தினசரி செய்தித்தாளில் படித்த அந்தச்செய்தி என்மனதை ஆழமாகத் தொட்டது நேற்றைய தினம் இந்த போராட்டத்தில் தான் - நாம் கலந்து கொண்டோமோ, இதற்காகத்தான் அவ்வளவு பெரிய கூட்டத்தோடு ஆர்ப்பாட்டமுடன் சென்றோமோ – என்ற உணர்வைத் தந்தது. இந்த ஊடகச்செய்தி, இதற்கு பின்புதான் நாம் பேசுவதும், எழுதுவதும், படிப்பதும், தமிழ் மொழி என்றும், நமக்கு விரோதமான மொழி இந்தி மொழி என்ற விபரமே என் கவனத்திற்கு வந்தது.

அந்தச் செய்தியில் இராமநாதபுரத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் அனைத்துப்பள்ளி மாணவர்களும் கலந்துகொண்டு நகரில் ஊர்வலமாகச் சென்று இராமநாதபுரம் இரயில்வே நிலையத்தில் இருந்த அத்தனை பெயர்பலகைகளிலும் இருந்த இந்தி எழுத்துக்களையும் தார்ஊற்றி அழித்தனர் என்றும், அதில் அனைத்துப்பள்ளி மாணவர்களும் சில அரசியல் கட்சியினரும் திரளாக கலந்து கொண்டனர் என்றும் அத்துடன் செய்தியுடன் இணைந்த ஒருபுகைப்படத்தையும் இணைத்திருந்தனர்.

இந்தச் செய்தி அடங்கிய பேப்பரின்; ஒருபகுதியை மடித்து எடுத்துக்கொண்டு வீடுசென்ற நானும் எனது அம்மாவிடம் அதைப்படித்துக்காட்டிவிட்டு, நானும் திரும்பத்திரும்ப பலமுறை படித்துவிட்டு அதை என்னுடைய கணக்குநோட்டில் அந்தப்பேப்பரை மடித்து வைத்துக்கொண்டு எனது பள்ளிக்குச்சென்று அனைத்து நண்பர்களிடமும் காட்டினேன். அவர்களும் அதைப்பார்த்துவிட்டு சந்தோசம் அடைந்தவர்களாய் மற்ற பல மாணவர்களிடமும் கூறிட நிறைய மாணவர்கள் என் வகுப்பிற்கு வந்து எனது பெயரைச்சொல்லி அந்த பேப்பர் செய்தியை பார்த்து, இந்தா நான் நிற்கிறேன், இந்தா நீ நிற்கிறாய், என்று பலரும் பார்த்து மகிழ்ந்து கொண்டு உறவாடிய காட்சிகள் இன்றும் என் மனதினில் பசுமையாக நிழலாடுகிறது என்பதே உண்மை. கடைசியாக அந்தப் பேப்பரை எனது பள்ளி ஆசிரியரும் கண்டு அந்தச்செய்தி முழுவதையும் படித்து முடித்துவிட்டு மற்ற ஆசிரியர்களிடமும் பகிர்ந்து கொள்ள, இந்த பேப்பர் ஆசிரியர்களின் கைகளிலேயே மாறிமாறிச் சென்றிட கடைசியாக அந்தப் பேப்பர் என்கைக்கு வந்து சேரவேயில்லை.

நான் கலந்துகொண்ட எனது முதல்போராட்டம் எனது பள்ளிப்பருவத்திலேயே தொடங்கிய “இந்தி எதிர்ப்பு போராட்டம்” என்பதை நினைத்து இன்றும் நான் பெருமைப்படுகிறேன். என்ன ஏதுவென்று அறியாப்பருவத்திலேயே ஒரு மிகப்பெரும் மாநிலம் தழுவிய மொழிப்போராட்டத்திலேயே பங்கேற்று சிலபணிகளையும் நான் செய்து முடித்தேன் என்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியே. மாநிலம்தழுவிய நிலையில் நடைபெற்ற இந்த இந்திஎதிர்ப்பு போராட்டமும், இரயில்மறியல் போராட்டமும் மத்திய அரசின் கவனத்தை ஈர்த்தது. அந்த போராட்டத்திற்கு பின்பு அன்றைய நமது பாரதப்பிரதமர் திரு.ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்திபேசாத மக்கள் விரும்பாதவரை இருமொழிக் கொள்கைகளாகவே (ஆங்கிலம் - தமிழ்) தொடரும் முறையே கடைப்பிடிக்கப்படும் என்றும் எக்காரணம் கொண்டும் இந்தி திணிக்கப்படமாட்டாது என்றும் ஒரு திடமான அறிவிப்பை வெளியிட்டதாக பின்பு நான் கேள்விப்பட்டேன். முன்னாள் நமது பாரதப்பிரதமராக இருந்த திரு.ஜவஹர்லால் நேரு அவர்களின் அறிவிப்பிற்கு காரணமாய் இருந்த இந்த இந்திஎதிர்ப்பு போராட்டத்தில் நானும் கலந்து கொண்டதை எண்ணி மிக்க மகிழ்கிறேன். எனது வாழ்நாளில் இறைவன் அளித்த மிகப்பெரும் நாட்டுப்பற்று நிறைந்த நலப்பணியை இளம் வயதிலேயே செய்திருக்கிறோம் என்ற மனமகிழ்வோடு இந்த போராட்டத்தை இன்று நினைத்தாலும் எனக்கு மிகப்பெரும் பெருமையாகவே உள்ளது என்பதே எனக்கு ஒவ்வொரு நொடியும் மகிழ்ச்சியே. இந்தி ஒழிக - தமிழ் வாழ்க” இதுவே நான் பங்கு கொண்ட “முதல் போராட்டம்”.

**தாய்மொழித் தமிழோடு தொடரும் எனது பயணம்**

இராமநாதபுரம் நகர், வெளிப்பட்டனம் மீன்காரத்தெருவின் பூர்வீகக்குடியான ஜனாப். அப்துல்மஜிது (எ) மஜீதுகான் - கொல்சாஅம்மாள் தம்பதியினருக்கு 11.08.1957 இல் பிறந்த ஆ.மு.காஜா முகைதீன் என்ற நான் சிறுவயதிலிருந்தே எனது தந்தையை அறியாது எனது தாயார் கொல்சா அம்மாள் அவர்களின் அரவணைப்பில் வளர்ந்து வந்தேன் எனது தந்தை மஜிதுகான் அவர்கள் இந்திய தேசிய இராணுவத்தில் ஹவில்தாரராக பணியாற்றியவர். 1956-ஆம் ஆண்டில் சுதந்திரதினவிழா கொண்டாட்டம் நிறைவடைந்த நிலையில் விடுமுறையில் ஊர்வந்த எனது தந்தையார் ஐந்தாறு மாதம் விடுமுறை நிறைவடைந்த நிலையில் 1957 மார்ச்வாக்கில் திரும்பவும் இராணுவத்திற்குச் செல்கிறேன் என்று எனது தாயாரிடம் கூறிவிட்டுச் சென்றவர் அதன் பின்பு எந்தவித நேரடித் தொடர்போ, கடிதத்தொடர்போ இல்லாமல் போய்விட்டதாகவும் , பின்பு 11.08.1957 அன்று நான் பிறந்த பிறகும் எனது தந்தையிடமிருந்து எந்தவிதத் தொடர்புமின்றி எனது தாயார் தன் உறவினர்களோடு என்னை வளர்த்து வந்தார்.

எனது தந்தையின் தேடல்விசயத்தில் தந்தை வீட்டாரால் ஆவணங்கள் எல்லாம் மறைக்கப்பட்ட நிலையில் நானும் எனது தாயாரும்; இராணுவ வீரர்கள் சம்பந்தப்பட்ட பல அலுவலகங்களுக்கு நடையாய் நடந்து அலைந்தபின், உங்கள் தந்தை மஜிதுகான்

அவர்கள் ஒரு போரில் ஈடுபட்ட நிலையில் காணாமல் போனவர்கள் பட்டியலில் இருக்கும் உங்கள் தந்தையைத் தேடிக் கொண்டிருக்கிறோம் என்ற ஒரே பதில் தான் கிடைத்ததே தவிர, இதுவரை எனது தந்தையை கண்டுபிடித்தாகவும் இல்லை, எங்கள் குடும்பத்திற்கு எந்த சரியான தகவலும் இல்லை, எங்கள் குடும்பத்திற்கு அரசு சலுகைகளும் நிவாரணங்களும் இதுவரை கிடைக்கவில்லை என்பதே உண்மை. இதுவும் இந்திய நாட்டிற்கு எங்கள் குடும்பம் செய்த அர்ப்பணிப்பு என்றே நான் பெருமை அடைகிறேன்.

நான் சிறுவயதில் ஆரம்பக்கல்வியைச் சாத்தையாசேர்வை நகராட்சிப் பள்ளியிலும், பின்பு உயர்கல்வியை சுவார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளியிலும் படித்துக்கொண்டே, மாலைநேரங்களிலும் விடுமுறை தினங்களிலும் எனது உறவினரின் உணவகத்தில் வேலைபார்த்துக்கொண்டே படித்தநிலையில், கல்வியில் ஏழாம்வகுப்பு நிறைவுசெய்ய இயலாத நிலையானதினால், எனது பனிரெண்டாம் வயதினிலேயே முதன்முதலாக காலிபாட்டில் வியாபாரம் செய்தேன். சில மாதங்கள் கழித்து 1970 ஆம் ஆண்டில் எனது உறவினர் ஒருவரின் மூலமாக மதுரைசென்ற நான் கீழக்கரை வடக்குத் தெருவைச்சார்ந்த அப்பாஸ்இப்ராகிம் என்பவரின் தினசரி செய்தித்தாள் மற்றும் புத்தகக்கடையில், பத்தாண்டுகாலம் அங்கே பணிசெய்த நிலையில் 1980 ஆம் ஆண்டில் இராமநாதபுரத்தில் சொந்தத்தொழில் (தஸ்லிம் ஸ்டோர்) செய்யத் தொடங்கினேன்.

நான் தொழில் செய்துகொண்டே தமிழ்மொழி சார்ந்த பல அமைப்புகளில் - உறுப்பினராகவும் நிர்வாகியாகவும் தமிழ்மொழி ஆர்வலராகவும் செயல்பட்டதோடு, இராமநாதபுரம் தமிழ்ச்சங்கத்தின் நிறுவனரும் சேதுநாட்டு வரலாற்று பேராசிரியருமான டாக்டர்.எஸ்.எம்.கமால் அவர்களின் தொடர்பும் நட்பும் என்னை மிகத்தீவிர தமிழ் தொண்டராக மாற்றியது. அவரது துணையோடு தமிழ்ச்சங்க உறுப்பினராகவும,; இராமநாதபுரம் வர்த்தகர் சங்க உறுப்பினராகவும், கம்பன் கழகம், திருவருட் பேரவை, தமிழ் இலக்கியக்கழகம், உட்பட தமிழ்மொழி சார்ந்த பல அமைப்புகளில் உறுப்பினராகவும், நிர்வாகியாகவும் தேர்வுபெற்று தமிழ் மொழிக்காகவே பல பணிகள் செய்திடும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றது.

இதன் தொடர்ச்சியாக பல கவிதைகள், கட்டுரைகள், கதைகள், எழுதிக் கொண்டே இருக்கும் நான் - மக்கள் நலம் சார்ந்த – நாட்டு நலம் சார்ந்த – பல ஊடகங்களுக்கு செய்திகள் எழுதிக்கொண்டே இருப்பேன். நான் எழுதிய தகவல்கள் எல்லாம் பல தினசரி ஊடகங்களில் வெளிவந்துள்ளது. சில ஊடகச் செய்திகள், மேதகு இந்திய ஜனாதிபதிக்கும் - இந்திய பிரதமர் - இந்திய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி - இந்திய மனித உரிமைகள் கழக ஆணையர் - இந்திய தலைமை தேர்தல் அதிகாரி – போன்ற தலைசிறந்த நிர்வாகிகளின் கவனத்தையும் எனது ஊடகச் செய்திகள் பெற்றுள்ளன. இதனைத் தொடர்ந்து – உலகத் தமிழ்சங்க இயக்குநர் திரு.கா.மு.சேகர் அவர்கள் முன்னிலையில் தமிழ்வளர்ச்சித்துறை அதிகாரிகளின் தலைமையில் ஒரே நாளில் பத்து நூல்கள் (சராசரி 148 பக்கங்கள்) வெளியிட்டு சாதனை படைத்த நான் - தற்பொழுது கல்லூரி – பல்கலைக்கழகங்களில் நடக்கும் பன்னாட்டுக் கருத்தரங்கு நிகழ்வுகளில் கலந்துகொண்டு வரலாற்று சிறப்புமிக்க தலைப்புகளில் சுமார் எழுபதுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை வழங்கியுள்ளேன். இதுபோல் இன்னும் பல கட்டுரைகளும், நூல்களும் வெளியிட்டு எனது தாய்த்தமிழ் மொழியை சிறப்புச்செய்திட தொடர்ந்து உழைத்துக் கொண்டே வருகிறேன்.

நான் தமிழ்ச்சங்கம், வர்த்தகர்கள் சங்கம் உட்பட மக்கள் நலம் சார்ந்த பல அமைப்புகளில் உறுப்பினராகவும், நிர்வாகியாகவும் இருந்தாலும், தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கும் திராவிட அரசியல் கட்சியிலும் 1972 முதல் உறுப்பினராகவும், பல பொறுப்புகளிலும் இருந்த நான், தற்போது மாவட்ட இலக்கிய அணியின் துணைத் தலைவராகவும் இருந்து எனது தமிழ்ப்;பணியை செய்துகொண்டு இருக்கிறேன். சென்ற ஐம்பதாண்டு காலத்திற்கும் மேலாக மக்கள் பணிசெய்த நான், மேற்கண்ட அமைப்புகளிலும், அரசியல் கட்சிகளிலும் - மக்களுக்காகப் பல போராட்டங்களை முன்னின்று சந்தித்துள்ளேன். பொதுக்கூட்ட நிகழ்வுகளிலும், ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதப் போராட்டம், மறியல் போராட்டம், மனிதச் சங்கிலி போராட்டம், சிறை நிரப்பும் போராட்டம், கடையடைப்பு போராட்டம் இப்படி எண்ணற்ற போராட்டங்களில்

கலந்துகொண்ட நான், பத்துக்கும் மேற்பட்ட முறை சிறை சென்றுள்ளேன். இப்படி எனது வாழ்க்கை சென்று கொண்டே இருக்கும் நிலையில் நான் கலந்துகொண்ட எனது முதல் போராட்டத்தை நினைவு கொள்கிறேன். என்னை நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் உழைத்திட வைத்தது, உயிர்த் துடிப்புடன் செயல்பட வைத்தது, உண்மைகளை எழுதிட வைத்தது, உயர்வுகளை பெற்றிட வைத்தது இப்படி எல்லாமே என் முதல் போராட்டத்தால் கிடைத்த வெற்றியாக நான் நம்புகிறேன். சமூகச் சிந்தனை நிறைந்த, எழுத்தாற்றல் நிறைந்த என் வாழ்க்கை சிகரமாக அமைந்ததோடு எனது எழுத்தாற்றலுக்காகவும் - எனது தமிழ்ப் பணிக்காகவும் - தமிழ்நாடு அரசின் தமிழ்ச்செம்மல் விருது உட்பட பத்திற்கும் மேற்பட்ட விருதுகள் பெற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததே எனது இந்த முதல் போராட்டமேயாகும். இந்தி ஒழிக - தமிழ் வாழ்க - இந்தி ஒழிக - தமிழ் வாழ்க என்பதை என்மனம் உச்சரித்துக் கொண்டே இருக்கும்.

**"இந்தி ஒழிக - தமிழ் வாழ்க " எனது முதல் போராட்டமே...**
**இதுவே என்னை எழுத்தாளனாக்கிய முத்தமிழ் சிகரமே...**
**இலக்கை அடைந்திட எனது பணி மேலும் தொடருமே...**
**இன்னும் எழுதிக் கொண்டே இருப்பது எனது இலட்சியமே..."**

## பயன்பாட்டு நூல்கள்

1. மலையைக் குடைந்த மணங்கள் - கவிஞர் தஸ்லீம் காஜா.
2. சிந்தையில் மலர்ந்த காவியங்கள் - கவிஞர் தஸ்லீம் காஜா.
3. எண்ணங்களே செயல்களில் தொடர்ந்திடுமே! - கவிஞர் தஸ்லீம் காஜா.

Vol. 9 Special Issue 1 January 2025 E-ISSN: 2456-5571

# மானுடவியலின் அணுகுமுறையில் சங்க தமிழ் இலக்கியங்களில் குடும்ப நிலைகள்

**பேரா. எம். பாபு**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
தியாகராஜர் பொறியியல் கல்லூரி, திருப்பரங்குன்றம், மதுரை

மனித இனத்தின் பல்வேறு கூறுகளை விளக்குவது மானிடவியலாகும். அதில் மானிடப் பண்பாட்டை விளக்குவது மானுடவியலின் ஒரு பிரிவாகும். பண்பாட்டு மானுடவியல் என்ற பிரிவில் மக்களின் குடும்பம் பற்றி அறிந்து கொள்ளும்போது அம்மக்களினுடைய சமுதாயம், கலச்சாரம், பண்பாடு, பழக்கவழக்கம், வாழ்க்கை முறை, வழிபாட்டுமுறை, போன்றவற்றை உணர்ந்து கொள்ளமுடிகிறது. இதனால் மனிதப் பரிணாமத்தின் வளர்ச்சியினையும் அறிந்து கொள்ளமுடிகிறது ஆகவே மானுடவியல் குறித்த குடும்ப இயல்புகளை உணர்த்தும் களமாக இவ்ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

## மானுடவியல்விளக்கம்

மானுடவியல் (Anthropology) மனித இனம் பற்றிய அறிவியல் கல்வித்துறை ஆகும். இதுமனித குலத்தைச் சமூகநிலை, பண்பாட்டுநிலை, உயிரியல்நிலை போன்ற வேறுபட்ட நிலைகளில் கடந்தகால மக்களையும், சமகால மக்களையும் (அதாவது எல்லாக் காலத்து மக்களையும் எல்லா இடங்களின் மக்களையும்) ஆராயும் பரந்த விரிந்த இலக்குடையதாக உள்ளது.

## இனத்தோற்றம்

மானிட சமுதாயம் தோன்றியதற்கான ஆராய்ச்சிகள் பல நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. இருப்பினும் முதல் மானிட இனம் இலெமூரியா கண்டத்தில் தோன்றியது என்பது அறிவியிலாளர்கள் கருத்தாகும். இக்கண்டத்தை மனித நாகரீகத்தின் தொட்டில் என்றழைப்பர். தென்கரை வழியாய் ஆப்பிரிக்காவின் கீழ்கரைவரைக்கும் பரவியிருந்த ஒரு கண்டமாயிருந்த்தது. களேற்றர் இப்பழங்கால பெருங்கண்டத்திற்கும் அதில் வந்த குரங்கொத்த உயிரிப்பற்றி இலெமூரியா என்று பெயரிட்டிருக்கின்றார். இக்கண்டம் மாந்தனின் பிறந்தகமாயிருந்திருக்க கூடுமாதலின், இதுவே மிக முதன்மையானதாகும் என்று கூறுகின்றார். பாவணர். (தழிழர்வரலாறுப.6) அக்கண்டம் தமிழ் இலக்கியங்களில் குமரிக்கண்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை இளங்கோவடிகள் **“பஃறுளியாற்றுடன் பன்மலையடுக் கத்துக் குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள”** என்று தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில் எடுத்துரைக்கிறார். இதனை ஜான் இங்கிலாந்து என்னும் மேலை நாட்டு அறிஞர் லெமூரியா எனும் குமரிக்கண்டம் ஆப்பரிக்கண்டத்துடன் இணைந்திருந்தது என்பார். ஆகவே முதல் மானிட இனம் தோன்றிய இடம் குமரிக்கண்டம் என்றும் முதல் மானிட இனம் தமிழ் இனம் என்றும் புலனாகிறது.

**குடும்பம்**

மனித சமுதாயத்தின் மிகத் தொன்மையான அமைப்பாகத் திகழ்வது குடும்பமேயாகும். இது எல்லாச் சமுதாயங்களிலும் எல்லாக் காலங்களிலும் பொதுவாக நிலவிவருகிறது. இன்று நூற்றுக்கணக்கான சமுதாயங்கள் காலங்காலமாகப் பல்வேறு நிறுவனங்களை ஏற்படுத்திக்கொண்டு அதன் அமைப்பாலும் செயலாலும் வேறுபடுகின்றன. ஆனால் அனைத்திலும் குடும்பம் என்னும் நிறுவனமே மிகவும் இன்றியமையாத, அடிப்படை அலகாகச் செயற்படுகின்றது. அவ்வாறே மக்கள் வாழ்நாள் முழவதும் எண்ணற்ற குழுக்களில் பங்குபெற்று அவர்களின் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்து கொண்டாலும் குடும்பம் என்னும் அமைப்பே முதலிடம் பெறுகிறது. (பன்பாட்டு மானுடவியல்ப.350) கூடிவாழ்தல் குடும்பமாகும். இவை மானிட இனத்திற்கு மட்டுமல்லாது அனைத்து உயிர்களுக்கும் பொதுவாகத் திகழ்கிறது. குடும்பங்களின் வாழிடங்கள் குடும்பம் என்னும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படைத் திருமணமேயாகும். குடும்பம், திருமணம், இரண்டும் ஒன்றெயொன்று சார்ந்தே செயல்படுகின்றன. ஒருநாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல இன்று நாம் வழங்கும் "திருமணம்" குடும்பம், ஆகிய இரண்டு சொற்களும் புதிய சொல்லாட்சியாகும்.

பழந்தமிழ்நூல்ளான தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் இச்சொல்லாட்சி இடம் பெற்றதாகத் தெரியவில்லை மாறாக குடிமை, குடி, கூடி போன்ற சொல்லாட்சிகள் இடம் பெறுகின்றன. ஆகவே குடும்பம் என்னும் சொல் பிற்காலத்தில் தான் தோன்றியிருக்க வேண்டும். குடும்பம் என்னும் சொல் முதன் முதலில் திருக்குறளில் தான் நேரடியாகப் பயின்று வருகிறது.

> **“இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்**
> **குற்ற மறைப்பான் உடம்பு” (குறள்-1026)**

என்ற குறளுக்கு உரை செய்த மு.வஅவர்கள் தன் குடிக்குவரக்குடிய குற்றத்தை வராமல் நீக்க முயல்கின்ற ஒருவனுடைய உடம்பு துன்பத்திற்கே இருப்பிடமானதோ என்று உரை எழுதுகிறார். வள்ளுவர் பயன்படுத்திய குடும்பம் என்னும் புதிய சொல்லாட்சியைக் குடி என்றே குறிக்கிறார். சங்க இலக்கியத்தில் குடும்பம் என்னும் சொல்லுக்கு, **‘குடம்பை, குடும்பு, கடும்பு’** ஆகியசொற்கள் இடம்பெறுகின்றன. ‘குடும்பை’ என்ற சொல் இருபது இடங்களில் பயின்று வருகிறது என்பார் பேராசிரியர் மாதையன். மேலும் "குடும்பு" என்னும் சொல் கூடிவாழதல் என்றும் பொருள்படுகின்றது என்கிறார். நற்றினையில். **"கருங்கலை கடும்பு ஆட்டு வருடையொடுதாவன உகளும் (நற்-119)** என்னும் பாடல் மலை ஆட்டு இனத்தின் கூட்டு வாழ்வைச் சுட்டுகிறது. குடும்பு என்னும் சொல்லுடன் ‘அம்’ விகுதி சேர்ந்து பொருண்மை விரிவாக்கமாக ((SEMANTIC EXTENSION) குடும்பம் எனும் சொல் அமைந்தது. (இலக்கிய மானுடவியல் பக். 348,349)

தொல்காப்பிய நூற்பாக்களில் இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை,

வனப்பு, முற்றம், நகர் மாடம் முதலிய சொற்கள் குடும்பங்களின் வாழ்விடத்தில் உள்ள வேறுபாடுகளையும், வகைகளையும் சுட்டுகின்றன. குடும்பம் என்னும் அமைப்பானது ஓர் ஆணும் பெண்ணும் அவர்களுடைய சமுதாய மரபுப்படி மணவாழ்வில் ஈடுபடும் நிலையால் மட்டுமே தோன்றமுடியும். அவ்வாறு இணைந்தால் தான் அச்சமுதாயத்தில் அவர்கள் ஒரு குடும்பமாக ஏற்றுக்கொள்ளப்படுவர். அவ்வாறின்றி ஒரே வீட்டில் ஓர் ஆணும், பெண்ணும் உண்டு மகிழ்ந்து வாழ்ந்தாலும் அவர்களிடையை சமுதாயம் ஏற்றுக்கொள்ளக்கூடிய கணவன்-மனைவி உறவு அமையாதவரை அவர்கள் குடும்பம் என்னும் அமைப்பை ஏற்படுத்தவியலாது. இங்குக் குடும்பம் என்னும் அங்கீகாரம் அந்தந்தச் சமுதாயத்தின் அகவயக் கருத்தாக்கத்தின் (EMIC CONCEPT) மூலமே அளிக்கப்படும் சில பழங்குடிகளில் காதலர்கள் திருமணத்திற்கு முன்னரே தனிக் குடிசையில் ஒன்று சேர்ந்து வாழ அனுமதிக்கப்படுவர். சில காலம் கழித்துத்தான் திருமணம் நடைபெறும், ஆயினும் இப்பழங்குடிகள் திருமணத்திற்கு முன்னர் வாழும் நிலையிலிருந்தே குடும்பம் ஏற்பட்டு விடுகிறதென்று எண்ணுகின்றனர். (பன்பாட்டுமானிடவியல்- ப.352)

குடியிருப்பைக் குறிக்கும் நகர் என்னும் சொல் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் பயின்று வருகின்றது. தொல்காப்பியத்தைக் காட்டிலும் சங்க இலக்கியங்களே அக்கால சமுதாயத்தின் எல்லா வகையான உயர்வு, தாழ்வுகளையும் சுட்டிக்காட்டுகின்றன. மேலும் மனைவியகம், கணவனகம், புதிய அகம்பரத்தியர் அகம் போன்ற வகையினங்கள் சங்ககாலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்ததை அறியமுடிகிறது. சங்ககாலத்தில் பெண் திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் "தாயகமுறை" இருந்துள்ளது.

ஆண் திருமணத்திற்குப் பின்மனைவியகத்திற்குச் சென்று பெண்ணின் இல்லத்தில் வாழ்ந்திருக்கிறான். இத்தகைய பெண்ணின் இல், "எம் இல்" என வழங்கப்பட்டிருப்பதைப் பல சங்கப்பாடல்கள் பதிவு செய்துள்ளன.நற்றினையில்

**மாதோ எம் இல் பொம்மல் ஒதியைத்தன் மொழிக்கொளீ இக்கொண்டு உடன் போகவலித்தவன் கண்காளையை ஈன்றதாயே( நற்- பா-293)**

என்றும், குறுந்தொகையில்

**எம் இல் அயலதோழி உம்பர் மயில் அடி இலையமாக் குரல் நொச்சி (குறு-பா-138)**

என்றும், கலித்தொகையில்

**யாம் வாட ஏதிலார் தொடியுள்ள வடுக்காட்டி ஈங்கு எம் இல்வருவதை (கலி- பா-78)**

**விடா அது நீஎம் இல்வந்தாய் அவ்யானை கடா அம்படுமிடத்து ஓம்பு (கலி-பா 97)**

என்ற பாடல்வரிகள் மணவாழ்க்கைக்குப் பின்தங்கும் பெண் இல்லத்தைச் சுட்டுகிறது. ஆனால் தற்போது பெண் இல்லத்தில் தங்குவது என்பது ஆண் மகனுக்கு இழிவாகக் கூடும் என்னும் தவறான பாதைக்குச் சமுதாயம் தள்ளப்பட்டு விட்டது. பெரியாழ்வார் தாம் இயற்றிய திருவாய்மொழியில் பெண் திருமணத்திற்குப் பின்னரும் தன்னுடைய தாயகத்திலேயே தொடர்ந்து வாழ்ந்த முறையைப் பதிவு செய்துள்ளார்.

**பெருப்பெருத்த கண்ணாலங்கள் செய்து**
**பேணி நம்மில்லத்துள்ளே**
**இருத்து வான் எண்ணிநாமிருக்க**
**(திருவாய்மொழி 3; 7-10 )**

திருமணத்திற்கு முந்தைய ஆணின் இல்

**'தம் இல்' என வழங்கப்பட்டிருப்பதையும் காணமுடிகிறது. அன்னைதம் இல்தமது உண்டன்ன சினை தொறும் தீம்பழம் தூங்கும் பலவின் ஒங்கு மலை நாடனை வரும் என்றோளே. ( குறு. பா-83)**

மேற்கூறிய பாடலில் திருமணம் செய்யவரும் ஆணின் இல்லம் 'தம்இல்' எனும் தனி வழக்கில் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் பொதியில் எனும் சொல்லையும் காணமுடிகிறது. வெளியூரிலிருந்து வரும் பாணர்கள் பொதியில் தங்கினர். என்ற குறிப்பு புறநானூற்றின் வழி அறியமுடிகிறது.

**தமிழில் இலக்கியமானுடவியல்**

இங்கு நாம் அனுமானிக்க முயலும் செய்தி என்ன வென்றால், அவர்கள் கையாண்டகலப்புப் புல அணுகுமுறையின் ஊடாகவே 'இலக்கிய மானிடவியல்' என்ற கலப்புப்புல ஆய்வு முறையானது அத்தமிழறிஞர்களுடைய முன் திட்டமிடல் எதுவுமில்லாமல், தன்னியல் பாகத் தோன்றிவிட்டது என்பது தான்.

இலக்கியத்தின் பால் ஆர்வம் காட்டியஃபெர்னாண்டோ பொயத்தோஸ் உள்ளிட்ட மானிடவியர்கள், ஆங்கிலம் உள்ளிட்ட மேற்கத்திய மொழிகளில் தத்தம் தொடர் முயற்சியின் வாயிலாகப் படிப்படியாக உருவாக்கிய இலக்கிய மானுடவியல் என்பது, தமிழ் இலக்கிய நூல்களில் மிகவும் ஆய்ந்துத் தோய்ந்தவர்களானக. கைலாசபதி முதலிய அறிஞர்கள் தாங்கள் மானுடவியலின் பால்காட்டிய ஈடுபாட்டின் காரணமாக, அவர்களுடைய கலப்புப்புல அணுகு முறையின் மூலம் அவர்கள் அறியாமலேயே இலக்கிய மானுடவியல் தோற்றம் பெற்றுவிட்டது எனலாம்.

இவ்வாறு சொல்வதற்குரிய வலுவான காரணிகள், அவர்களுடைய எழுத்துக்களில் பொதிந்துள்ளன. அதாவது, அவ்வெழுத்துக்கள் (அ) அறிவுப்புலங்களுக்கு இடையிலான மரபான சுவர்களைக் கடந்த கலப்புப்புலச் சொல்லாடல் களாகத்திகழ்கின்றன. (ஆ) 'இலக்கியத் திணைப் பகுத்தாராய்ந்து, அதற்குள் இருக்கும் மானிடவியல் தரவினைக் கண்டுபிடிப்பதே இலக்கிய மானுடவியலின் இலக்காகும். அதற்கு உதவும் கருவியாக அமைவது இலக்கியமாகும்' என்னும் இக்கருத்து, ஒரு மறை முகவிதியாக அவ்வெழுத்துக்களில் செயல்படுவதை உணரமுடிகிறது. அத்துடன் (இ) 'எழுத்திலக்கிய மற்றமக்களையும் கவனத்தில் கொள்ளக்கூடிய வகையில், இலக்கிய மானுடவியல் பண்பாட்டிடை ஒப்பாய் வினைச்சாத்தியமானதாக ஆக்கவேண்டும்' என்பது ஒரு பரிந்துரையாக வைக்கப்பட்டுள்ளது.

இப்பரிந்துரையை 'இலக்கிய உலகம் காட்டும் பண்பாட்டுச் செய்திகளைப் பண்பாட்டிடை ஒப்பாய்வுக்கு உட்படுத்தும் வண்ணம் இலக்கிய மானுடவியல் அமைய வேண்டும்' என்று சற்று மாற்றி அமைத்துக்கொள்ளும் வண்ணம், மேற்குறிப்பிட்ட அறிஞர்களுடைய எழுத்துக்களில்

பண்பாட்டிடை ஒப்பாய்வுக் கண்ணோட்டம் பொருத்தமாகக் கையாளப்பட்டுள்ளமையை இங்குச்சுட்டிக்காட்டுவது தேவையாகும்.

மேற்கண்டவாறு இலக்கிய மானுடவியலின் இயல்புகளில் சில நன்கு பொருந்துமாறு அமைந்துள்ள ஓர் ஆய்வுக் கட்டுரையை உதாரணமாகக் காட்டவேண்டு மென்றால் கைலாசபதியின் 'பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்' நூலில் இடம்பெற்றுள்ள "பேய்மகளிர்" என்னும் கட்டுரையைக் குறிப்பிடலாம்

**தமிழ்இலக்கியமானுடவியலின்முன்னோடி**

இலக்கியம் மானுடவியல் ஆகிய இரு வேறு புலங்கள் தத்தம் எல்லைகளைக் கடந்துசென்று, ஒன்றை ஒன்று நெருங்குதல் என்னும் படிமுறையை உள்ளடக்கிய இலக்கிய மானுடவியலின் அடிப்படையான விதியானது பேராசிரியர் கைலாசபதியின் 'பேய்மகளிர்' என்னும் கட்டுரையில் மிகவும் நுட்பமாகச் செயல் படுவதையே நம்மால் தெளிவாகக்காணமுடிகிறது.

மானிடவியலில் அவர் பெற்றிருந்த ஈடுபாடும் பயிற்சியும் கோட்பாட்டுப் புரிதலும் தமிழ் இலக்கியத்தினை முதன்மைப் படுத்திய கலப்புப் புல அணுகுமுறையை மிகவும் இலாவகமாகக் கையாளுவதற்கு அவருக்கு உதவியுள்ளன. (மானுடவியல் பற்றி விமர்சனப் பார்வையும் பேராசிரியருக்கு உண்டு. காண்க: சமூகவியலும் இலக்கியமும், 2002: 22-24) அவ்வகையில் தமிழில் கலப்புப் புல அணுகு முறையைத் தனித் தன்மையோடு கையாண்ட முன்னோடியாகவும் அவரை நாம்பார்க்கிறோம்.

இலக்கியம்- மானுடவியல் என்னும் இருவேறு கல்விப் புலங்களின் சிந்தனைகளை ஒருங்கிணைத்துக் கொண்டிருக்கும் கலப்புப்புல அணுகுமுறையின் வாயிலாகப் 'பேய்மகளிர்' பற்றிய இலக்கியச் செய்திகளை ஆராய்வதற்குத் தான் அவர் கலப்புப்புல அணுகு முறையைத் திட்டமிட்டுக் கையாண்டார் என்றாலும், அவருடைய கட்டுரை எழுதப்பட்டு ஏறக்குறைய இருபதாண்டுகள் கடந்த பின்னர், அறிமுகம் செய்யப்பட்ட இலக்கிய மானுடவியல் என்பது தன்னியல்பில் அக்கலப்புப்புல அணுகுமுறையின் வாயிலாக மிகவும் தெளிவாக வெளிப்பட்டுள்ளது என்பதே நமது கணிப்பாக உள்ளது.

**சங்ககால இலக்கியங்களில் இனக்குழுச் சமுதாயம்**

இலக்கியப் படைப்புகள் பேசக்கூடிய சமூகம் பற்றிய செய்திகளை ஓர் ஆராய்ச்சியாளர் அவற்றின் இயல்பிலே மட்டுமே புரிந்து கொண்டால் போதும் என்று தன்னை ஒருவகை எல்லைக்குள்ளேயே நிறுத்திக்கொள்ளாமல், காலம் மற்றும் தளப்பார்வையோடு மானுடவியல் என்னும் ஒரு சமூக அறிவியற் புலத்தினைச் சார்ந்து அதன் கருத்தியல் தளங்களில் இருந்தவாறு அவ்விலக்கியச் செய்திகளைச் சரியான கோணத்தில் அணுகுவதற்குரிய கலப்புப்புல அணுகுமுறையையே பேராசிரியர் கைலாசபதியின் கட்டுரையில் நாம் பார்த்தோம். ஏறக்குறைய இப்பாங்கில் அமைந்த அணுகுமுறையினை வேறு சில ஆராய்ச்சியாளர்களுடைய எழுத்துக்களிலும் பிரதிபலிக்கக்காண்கிறோம்.

தமிழில் வழங்கும் தொன்மையான இலக்கியங்களைப் பற்றிப் பேசும் போது 'சங்க காலம்' 'சங்ககால இலக்கியம்' என்னும்

சொல்லாட்சிகளை அறிஞர்கள் பொதுவாகத்தத்தம் எழுத்துக்களில் கையாளுகின்றனர்.

சங்ககாலம் பற்றிய கால எல்லைகள் குறித்து அவர்களிடையே கருத்துமாறுபாடுகள் காணப்படுகின்றன. இந்நிலையில் கி.மு.மூன்றாம் நூற்றாண்டுகள் தொடங்கி கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரையில் அமைந்த காலக்கட்டத்தையே சங்ககாலம் என்றும் இக்காலக்கட்டத்திலே தோன்றியவற்றையே சங்ககால இலக்கியங்கள் என்றும் குறிப்பர் (கைலாசபதி, 1999:61,) சங்க இலக்கியங்கள் தோன்றிய காலக்கட்டம் பற்றிக் குறிப்பிடும்போது, அக்காலத்தில் நிலவிய சமுதாயம், 'முற்று முழுதானபுராதனச் சமுதாயம் எனக்கொள்ள முடியாது.

ஏனெனில் தாய்வழிச் சமூகம் சங்ககாலத்தில் மாறத்தொடங்கி விட்டது. சங்ககாலத் தமிழகம் 'நாகரிகப்' பாதையிலே நடைபோடத் தொடங்கியிருந்தது... அங்குக் குலங்களும் குடிகளும் மறைந்து, அரசுகள் தோன்றியிருந்தன....' என்று பேராசிரியர் கைலாசபதி மதிப்பிடுகிறார் (1999:61)

'சங்ககாலம் என்பது ஒரு பெரும் சமூகமாற்றம் நிகழ்ந்த கட்டத்தினைக் குறிப்பிடுகிறது. அதாவது, இனக்குழுச் சமூகவாழ்க்கை முறை அழிந்து, நிலவுடைமை மலரும் காலகட்டத்தைக் குறிக்கிறது' என்று சங்க இலக்கியங்களின் சான்றுகளைக் கொண்டு பேசும் ஆராய்ச்சியாளரின் கருத்துக்களை அடியொற்றியும், அதேசமயத்தில் சற்று மாறுபட்ட நிலையிலும்... "சங்ககாலத்திலும் சங்க முற்காலத்திலும் இனக் குழுவாழ்க்கை தமிழகத்தில் நிலவிவந்தது.

இக்காரணத்தாலேயே சங்க இலக்கியங்களில் இனக் குழுவாழ்க்கையைப் பிரதிபலிக்கும் பலநிகழ்காலச் செய்திகளையும் எச்சங்களையும் காணலாம்" என்னும் முற்கோளை முன்னிறுத்தி சங்ககால சமுதாயம் என்னும் தம்முடைய நூலில் "சங்க இலக்கியத்தில் இனக்குழு வாழ்க்கை" என்ற தலைப்பிட்ட கட்டுரையில் ஆராய்கிறார் பேராசிரியர் கா.சுப்பிரமணியன். (1982: 9-53)

சங்க இலக்கியப் படைப்புகளான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரண்டு தொகுப்புகளில் அடங்கும் பாடல்களில் சிலவற்றை முதன்மையான ஆதாரங்களாக எடுத்துக்கொண்டு அவற்றில் காணப்படும் சமூக-பண்பாட்டுத் தகவல்களை, மானுடவியல் தரவுகளாக இனங்காணுவது, மானுடவியல் நூற்கருத்துக்கள் கோட்பாடுகள் ஊடாக இனக்குழுச் சமூக நிறுவனங்களை, இலக்கியப் பிரதிகள் பிரதிபலிக்கும் சமூக நிறுவனங்களோடு ஒப்பிட்டுக்காட்டுதல், பண்டையத் தமிழ் இனக்குழுக்களைத் தற்கால இனக்குழுக்களோடு ஒப்பிட்டு நோக்குதல் என்பன போன்ற படிநிலைகளின் வாயிலாக கா.சுப்பிரமணியன் சங்ககால இனக்குழுச் சமூகவாழ்க்கையை ஒரு தெளிவான சித்திரமாகத் தீட்டிக்காட்டுகிறார்.

பேராசிரியர் வானமாமலை கூறுவது போல, க.கைலாசபதி, சிவத்தம்பி, டி.பி, சட்டோபாத்யாயா முதலிய அறிஞர்களின் நூல்களையும்ஃப்ரேசர், மாலினோவ்ஸ்கி, டி.என்.மஜும்தார் போன்ற மானிடவியலர்களின் நூல்களையும் பயின்றதன்

வாயிலாகத் தமது கலப்புப்புல அணுகுமுறை சார்ந்த முறையியலை மிகவும் திறமையாகக்கையாண்டு, சங்கப்பாடல்களை ஆராய்ந்துள்ளார்.

'சங்க இலக்கியத்தில் இனக்குழு வாழ்க்கை 'சங்ககால அரசர்,' 'நாள் மகிழிருக்கை', 'சங்ககாலச் சமுதாயவாழ்க்கையில் மந்திரம், சமயம்ஆகியவற்றின் பங்கு', 'ஆற்றுப்படை- ஒரு சமுதாய வரலாற்று விளக்கம்' ஆகிய ஐந்து கட்டுரைகள் அடங்கிய கா.சுப்பிரமணியனின் சங்ககாலச் சமுதாயம் (1982) என்னும் நூல், சில முக்கியமானகாரணங்களால் தனித்துவமான இடத்தைப் பெறுகிறது.

**முடிவுரை**

மானிடவியல ரானஃபெர்னாண்டோ பொயத்தோசின் முயற்சி காரணமாக எண்பதுகளில் கனடா, ஹங்கேரி, இந்தியா, ஜப்பான், ஸ்பெயின், யுகோஸ்லாவியா உள்ளிட்ட நாடுகளில் ஆங்கிலம் உட்பட பிறமொழிகளில் இலக்கியமானுடவியல் அறிமுகமானது. இந்தியாவில் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கின் வாயிலாக அறிமுகப்படுத்தப்பட்டது.

மானுடவியல் நோக்கினை சங்க இலக்கியங்களோடு பொருத்திப்பார்ப் பதன் மூலம் ஆய்வு செய்வதற்கான களங்கள் பலவற்றை கொண்டுள்ளதாகத் திகழ்கிறது. மக்களின் பண்பாடு, சமுதாயம், குடும்பம், திருமணம், உறவு முறைபோன்றவற்றை ஆராயும்போது அவை முறையாகவும், நெறியாகவும் அமைந்துள்ளன என்பது நமக்கு அறியமுடிகிறது. தற்போது திசை மாறிப்போகும் நம்பண்பாட்டைச் சீர்பெறச் செய்ய மானுடவியல் ஆய்வுகள் மிக இன்றியமையாததாகத் திகழ்கிறது என்பதினைப் புலப்படுத்தும் நோக்கமே இக்கட்டுரையாகும்.

தமிழ் இலக்கிய நூல்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தொடர்பான நீண்ட வரலாற்றில் காணப்படும் தனித்ததோர் ஆய்வுத்தடம் ஒன்றினைக் குறிப்பிட வேண்டுமானால், அது பன்முக அறிவுப் புலங்கள் தழுவிய கலப்புப்புல அணுகு முறையேயாகும். வரலாறு, தொல்லியல், சமூகவியல், மானுடவியல் போன்றவற்றை உள்ளடக்கிய பன்முகக் கலப்புப்புல அணுகுமுறையானது தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வில் செறிவாகக்கையாளப்பட்டது.

இந்த அணுகுமுறையிலிருந்து ஒருசிறிது தனித்துக்கிளைவிட்ட ஒரு நெறிமுறையே 'இலக்கியம் பற்றிய மானுடவியல் கண்ணோட்டமாகும்.' இந்த நெறிமுறையிலிருந்து ஒரு சில அறிஞர்களுடைய ஆய்வுப்படைப்புகளின் ஊடாகத் தன்னியல்பாகத் தோன்றிய கலப்புப்புல அணுகுமுறையே தமிழ் இலக்கிய மானிடவியலாகும்.

**நூல்கள்**

4. பக்தவத்சலபாரதி, பண்பாட்டுமானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
5. பக்தவத்சலபாரதி, இலக்கிய மானுடவியல் அடையாளம் பதிப்பு. திருச்சிபதிப்பு 2014
6. தொல்காப்பியம், கழகவெளியீடு. திருநெல்வேலி.
7. சங்க இலக்கியம் முழுவதும், நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ்

Vol. 9 Special Issue 1 January 2025 E-ISSN: 2456-5571

# செவ்வியல் இலக்கியங்களில் வேளாண்மைத் தொழில்நுட்பம்

**முனைவர் நா. பால்பாண்டி**
*உதவிப் பேராசிரியர் & தலைவர்*
*தமிழ்த்துறை, கார்டமம் பிளாண்டர்ஸ் அசோசியேசன் காலேஜ், போடிநாயக்கனூர்*

**'வேள்'** என்னும் சொல்லின் அடியாகப் பிறந்ததே வேளாண்மை என்னும் பதம். இது கொடை, ஈகை, என்னும் பொருண்மையில் வழங்கி வருகின்றது. ஏனெனில், நிலமானது மக்களுக்கு வழங்கும் கொடை ஆதலால் இப்பெயர்கள் வழங்கியிருக்கலாம். மேலும், வேளாண்மை என்னும் சொல் வெள்ளத்தை ஆளுமை செய்தல் என்ற பொருளிலும் வழங்கியதாக லெக்சிகன் தமிழகராதி விளக்கம் தருகின்றது. வேளாண்மையைக் குறிக்கும் **Agriculture** என்னும் ஆங்கிலப் பதத்தில் உள்ள **'Agri'** என்னும் சொல் நிலத்தினையும், **'Culture'** என்ற சொல் பண்பாட்டினையும் குறிக்கின்றது. எனவே, நிலத்தினை பண்படுத்தி பண்பாட்டுடன் கூடிய வேளாண்மையே சிறப்புடையது என்பதை அச்சொல் குறித்து நின்றது எனலாம். அந்த வகையிலே நம் செவ்வியல் மாந்தர்கள் பண்பாட்டுடன் கூடிய வேளாண்மைத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வந்துள்ளனர் என்ற உண்மையை தமிழ்சார் நல்லுலகத்திற்கு எடுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

சங்க காலத்தில், தமிழர்களின் வாழ்க்கையின் முதன்மைப் பகுதியாக வேளாண்மை இருந்தது. இது வாழ்க்கைக்கு அவசியமான ஒன்றாகவும் கருதப்பட்டது, எனவே அனைத்து தொழில்களையும்விட இது முதன்மை வகித்தது. தற்போதைய நிலைபோல் இல்லாமல் உழவர்கள் சமூக நிலையில் மேலே இருந்தனர். அவர்கள் உணவு தானிய உற்பத்தியாளர்களாக இருந்ததால், சுய மரியாதையுடன் வாழ்ந்தனர். மிகவும் திட்டமிட்ட முறையில் சாகுபடி செய்தனர். உழுதல், விதைத்தல், உரமிடுதல்,களையெடுப்பு, நீர்ப்பாசனம், பயிர் பாதுகாப்பு போன்ற தொழில் நுட்பங்களைச் சரியான முறையில் செய்திருந்தனர் என்பதனை சங்க இலக்கியங்களின் வழி நாம் அறியக் காணலாம்.

### நீர்மேலாண்மைத் தொழில்நுட்பம்

**"நீரின்று அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்;**
**உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே ;**
**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசினோரே;"**

(புறம்-18: 18-23)

உடலும் உயிரும் வளர்ப்பதற்கு உணவு எவ்வளவு முக்கியமோ அதனைப் போன்றதே உணவினை உற்பத்தி செய்யும் நிலமும், நீரும். இதனைப் படைத்தோர் அறம் முதலிய மூன்றினையும் படைத்தோருக்குச் சமமாவர். நீர் இன்றியமையாதது என்பது **'நீரின்றியமையா உலகு'** (குறள்-20) என வள்ளுவத்திலும், உணவு உயிராகக் கருதப்படுவதை **'மண் திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'** (மணி. 11.95-6) என மணிமேகலையிலும் அறியக் கிடக்கின்றது. நீர் சேமிப்பைப் புறநானூறு கூறும்போது

**"நிலன் நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்**
**தட்டோர் அம்ம ; இவண் தட்டோரே"**

(புறம். 18: 28-29)

அதாவது, இயல்பாகவே ஆழ்ந்திருக்கும் நிலப்பகுதியைத் தேர்ந்தெடுத்து நீர்நிலைகளை அமைப்பது இயல்பான ஒன்றாகும். எனவேதான் **"நிலன் நெளி மருங்கு"** என்கிறார் ஆசிரியர். மேலும்; பிறை நிலவின் வடிவிலே நீண்ட கரையை அமைத்து நீரைத்தேக்கி வேண்டுமளவு பயன்படுமாறு அணையைக் கட்டினர் எனும்போது;

**"அறையும் பொறையும் மணந்த தலைய**
**எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்**
**தெள் நீர்ச் சிறுகுளம்"**

(புறம். 118: 1-3)

வேள்பாரியை கபிலர் பாடும்போது; பாறைகளையும், சிறுமலைகளையும் இடையிடையே அமைய இணைத்து, பிறை வடிவில் ஏரிகளுக்குக் கரையமைத்து நீரினைப் பாதுகாத்தனர் என்பதை அறியமுடிகின்றது. இம்முறை பண்டு தொட்டே இருந்து வருகின்றது என்பதனை **'தேய்பிறை உருவக் கேணி'** (சீவக. 2998), **'ஏரி அளாவிக் கிடந்தது போலம் இளம் பிறையே'** (திருநா. தேவாரம்.) ஆகிய இலக்கியங்கள் வழிக் காணக்கிடைக்கிறது. அதுமட்டுமல்லாது சிறுகுளங்களில் நீர் மிகுதியாக நிரம்பும் காலத்து அதன் கரை உடையா வண்ணம்

காவல் காக்கும் மரபும் இருந்தது என்பதையும் அறியமுடிகின்றது. நீரின் வேகத்தையும், அழுத்தத்தையும் கட்டுப்படுத்தும்

**"வருந்திக் கொண்ட வல்வாய்க் கொடுஞ்சிறை**
**மீதுஅழி கடுநீர் நோக்கிப் பைப்பல"**

*(அகம். நித். 346: 9-10)*

உழவர்கள் நெற்பயிரினை உடைய பெரிய வயலின் பசிய பள்ளங்களிலே நீரைத்தேக்கி, வலிய இடத்தினையுடைய வளைந்த கல்லால் ஆன (கற்சிறை) அணையினை வருத்தமுற்று அமைத்தனர். அதன் மேலிருந்து தேங்கிய நீரானது விரைந்து வழியும்படி அதன் மதகுகள் அமைத்தனர் என்கின்ற விபரந்தன்னை அகநானூற்று வழி அறியமுடிகின்றது.

**உழுதல் தொழில்நுட்பம்**

உழுதல் தொழிலை மரபாகக் கொண்ட நம்தமிழர்கள் பருவமழை பெய்தபோது ஒருமுறைக்கு பலமுறை உழுதபின்பு விதைவிதைத்தனர் என்பதனை **"பலவுழவு புன்செய் மண்போல் நெகிழ்ந்து"** *(அகம். 26: 24)* என்னும் அகநானூற்று வரிகளால் அறியமுடிகின்றது. **"உறுபெயல் தண்துளிக்கு ஏற்ற பலஉழு செஞ்செய் மண்போல் நெகிழ்ந்து"** *(அகம்.களி. 26: 23-25)* என்னும் பாடல் வரிகளில் தலைவியின் உள்ளத்தை வெளிப்படுத்த விரும்பிய புலவன் அதனை உழுதநிலத்தின் பண்பிற்கு ஒப்பாக கூறிச்செல்வதன் மூலம் பலமுறை உழுதல் தொழில் என்பது வழக்கத்தில் இருந்தது என்பதனை நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும்;

**"குடிநிறை வல்சிச் செஞ்சால் உழவர்**
**நடைநவில் பெரும் பகடு புதவில் பூட்டப்**
**பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்**
**உடுப்புமுக முழுக்கொழு மூழ்க ஊன்றித்**
**தொடுப்பு எறிந்து உழுத துளர்படு துடவெ"**

*(பெரும்.பா: 196-200)*

என்ற பாடலில், பலசால் சிறக்க உழப் பழகிய உழவர்; ஏரில் நன்கு நடந்து பழகிய பெரிய எருதுகளை மனையின் முன்பாக நுகத்தடியில் பூட்டி; பெண்யானையின் வாயை ஒத்த வளைந்த வாயை உடைய கலப்பையில் உள்ள உடுப்புமுகம் போன்ற பெரியகொழு; மண்ணில் மறையும்படி அழுத்திப் பிடித்து சாலை உழுதனர் என்கின்ற செய்தியை அறியமுடிகின்றது. மேலும், உழாமல் விதைக்கும் நவீன அறிவுசார்ந்த தொழில்நுட்பத்தையும் உழவர்கள் கற்றிருந்தனர் என்ற செய்தியை

**"கவைத்தாள் அலவன் அளற்று அளை சிதையப்**
**பைஞ்சாய் கொன்ற மண்படு மருப்பின்**
**கார் ஏறு பொருத கண்ணகன் செறுவின்**
**உழாஅ நுண்தொளி நிரவிய வினைஞர்**
**முடிநாறு அழுத்திய நெடுநீர்ச் செறுவில்"**

*(பெரும்.பா: 208-212)*

என்ற பெரும்பாணாற்றுப்படை பாடல் வரிகள் மூலம் அறியமுடிகின்றது. அதாவது, நீர் நிறைந்த வயலில் கருமையான எருதுகள் தமது வலிமையான கால்களால் நிலத்தில் அழுந்தும்படி போரிட்ட காரணத்தால்; மீண்டும் உழவேண்டிய தேவையில்லாததால் உழவர்கள் மேடுபள்ளங்களான சேற்றினை கால்களால் சமன்செய்து; கொண்டுவந்த நாற்றினை நட்டு வேளாண்மை செய்த தமிழரின் அறிவுநுட்பத்தை காணமுடிகின்றது. அதனைப் போன்றே **"கடுங் கண் கேழல் உழுத பூமி நல்நாள் வருபதம் நோக்கி, குறவர் உழாஅது வித்திய பரூஉக்குற் சிறுதிணை"** *(புறம் 18: 18-23)* என்னும் புறநானூற்றுப் பாடலில் காந்தள் செடியின் கிழங்கினை தின்பதற்காக கூட்டம் சேர்ந்த பன்றிகள்; கிழங்கினை அகழ்ந்து எடுப்பதற்காக கிண்டிய நிலத்தில் மேலும் உழத்தேவையில்லாமையால் குறிஞ்சி நில மக்கள் நல்ல நாள் பார்த்து விதை விதைத்தனர் என்ற செய்தியை அறியமுடிகின்றது.

**விதைத்தல் தொழில்நுட்பம்**

பெருமழை பெய்து விடிந்த காலைப் பொழுதில் புழுதி கீழ்மேலாகப் புரழும்படி உழப்பட்ட செம்மண் நிலத்தின் ஈரத்தில், ஊனைக் கிழித்ததைப் போன்ற சிவப்பான மேட்டு நிலத்தைப் பிளந்து சென்ற உழவுசாலிடத்து விதைகள் விதைக்கப்பட்டு; விதைத்த இடங்களில் விதைகள் பலவும் முளைத்து வளர்ந்தன என்ற செய்தி

**"ஊன்கிழித் தன்ன செஞ்சுவல் நெடுஞ்சால்,**
**வித்திய மருங்கின் விதைபல நாறி,"**

*(அகம். மணி.பவ. 194: 4-5)*

அகநானூற்று பாடல்கள் வழி அறியமுடிகின்றது. விதைவிதைக்கும் ஆயர்கள் பலமுறை உழுது பண்பட்ட பழங்கொல்லைப் புழுதியில் நிறைவுற வரகினை விதைத்தனர் என்ற செய்தியை **"விதையர் கொன்ற முதைபில் பூமி இடுமுறை நிரப்பிய ஈஇலை வரகின்"** *(நற்.121: 1-2)* நற்றினைப் பாடல்வரிகள் விளக்குகின்றன. இதனைப் போன்றே குறிஞ்சித் திணைப் பாடல்களில் குறவர்கள் மழைகாலங்களில் அகலமாகவும், வளைந்தும் உள்ள நிலங்களை உழுது அந்நிலத்தில் விதைகளைப் பரவலாக விதைத்தனர் என்ற செய்தியை **"கான்உழு குறவர் சில வித்து அகல**

**இட்டென, பல விளைந்த"** என்ற நற்றிணைப் பாடல் வரிகள் *(209: 2-3)* விளக்குகின்றன. மருதநில உழத்தியர்கள் நீர்நிறைந்த சேற்றுநிலத்தில் நாற்றுக்களை அழுத்தமாக நடுவதற்கு குழுவாக செல்லும் காட்சியினை **"நீர் உறுசெறுவின் நாறுமுடி அழுத்த, நின் நடுநரொடு சேறிஆயின்"** *(நற். 60: 7-8)* என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன. அதே கருத்துடைய அடிகளை **"முடிநாறு அழுத்திய நெடுநீர்ச் செறுவல்"** என்று பெரும்பாணாற்றுப்படையிலும் *(212)* காணமுடிகின்றது. இரண்டிலும் அழுத்தி நடுதல் என்ற பொதுவான பண்பினைக் காணமுடிகின்றது. மேலும் உழவர்கள் உழவு சாலிடத்தே ஒளிக்கதிர் விளங்கும் சிறந்த மணிகளை விதைக்கும் பாங்கினை **"பல்விதை உழவின் சில்லேராளர்"** என்ற பதிற்றுப்பத்து *(76: 11)* பாடல் வரிகளிலும், உழவர்கள் காலைப் பொழுதில் நாற்றுக்களை நட்டு வீடுதிரும்பும் போது விதைகள் கொண்டு சென்ற வட்டில்களில் மலர்களைக் கொய்து வந்தனர் என்பதை **"உழவர் விதைக்குறு வட்டி போதொடு பொதுள"** என்ற குறுந்தொகைப் *(155: 1-2)* பாடல் வரிகள் மூலமும் அறிந்து கொள்ள முடிகின்றது.

**விதை அறிவியல் தொழில்நுட்பம்**

> **"..................................துவன்றிய**
> **கயத்து இட்ட வித்து வறத்தின் சாவாது**
> **கழைக் கரும்பின் ஒலிக்குந்து"**
>
> *(புறம். 137: 4-6)*

நீர்நிறைந்த பள்ளங்களில் விதைக்கப்பட்ட விதைகள் நீர் இல்லாத கோடைகாலமாக இருந்தாலும் செழிப்பாக கரும்புபோல வளர்ந்து நிற்கும் என்பது அனைவரும் அறிந்ததே. காரணம், வெய்யிலின் தாக்கம் பள்ளங்களில் நிறைந்திருக்கின்ற நீரை ஆவியாக்கி வற்றிவிடச் செய்யும் வரை பயிரானது செழித்து வளரும் என்ற அறிவியல் தொழில்நுட்பத்தை தமிழர்கள் அறிந்திருந்ததே இதற்கு காரணம் எனக் கூறலாம். மேலும், விதைப்பதற்கு வைத்திருக்கும் வித்தினை உண்போமேயானால் அடுத்த பயிரிடுதல் தொழில் என்பது நடைபெறாமல் மக்கள் உணவிற்கு வழியில்லாமல்; வாழ்வில் பல துன்பங்களை அனுபவிக்க நேரிடும். எனவே, அவ்வாறான செயல்களைச் செய்யும் உழவன் கூற்றுவனுக்கு ஒப்பாவான் என்னும் கருத்தை **"வீழ்குடி உழவன் வித்துஉண் டாஅங்கு"** *(புறம். 230: 13)* புறநானூற்று பாடல் வழி அறியலாம். இக்கருத்தை வழியுறுத்தியே ஆடுதுறை மாசாத்தனார் **"விரகுஇன் மையின் வித்து அட்டு உண்டனை!"** *(புறம். 227: 2)* என்கிறார்.

> **"வித்தி வான் நோக்கும் புன்புலம் கண்அகன்**
> **வைப்பிற்று ஆயினும், நண்ணி ஆனும்**
> **இறைவன் தாட்கு உதவாதே"**
>
> *(புறம். 18: 24-26)*

நெல் முதலிய வித்துக்களை உடைய புன்செய் நிலம் அகன்ற இடமுடைய நிலமாக இருந்தாலும் பயிர்கள் நெருக்கமாக இல்லாமல் இருந்தால் அது அந்நிலம் சார்ந்து வாழும் யாருக்கும் உதவாது என்பதனை மேலே காணும் பாடல் வரிகளால் அறியலாம். எனவே நெருக்கமாக நாற்று நட்டு விளைச்சலைக் கூட்டினர் என்ற அறிவியல் சிந்தனையை **"ஒருபிடி படியும் சீறிடம் எழு களிறு புரக்கும் நாடு கிழவோயே!"** *(புறம். 40: 10-11)* என்னும் பாடல் வரிகள் நமக்கு தெளிவுபடுத்துகின்றன. ஒரு பெண்யானை படியும் சிறிய இடத்தில் ஏழு களிற்று யானைகளுக்கான உணவை உற்பத்தி செய்யும் நாடு நம் நாடு என்னும் செய்தியும் இதன்மூலம் அறியக்காணலாம்.

**எருவிடுதல் தொழில்நுட்பம்**

**'கிடையிடுதல்'** என்னும் பெயரில் ஆட்டு மந்தைகளை வயல்வெளிகளில் இரவு முழுவதும் அடைத்து வைத்து காலையில் திறந்துவிடும் நடைமுறை இன்றும் நாட்டுப்புறங்களில் காணமுடிகிறது. அவ்வாறு ஆட்டு மந்தைகளால் வெளியிடும் கழிவுகளை எருவாக பயன்படுத்தும் வழக்கம் பண்டைய காலம் முதலே பழக்கத்தில் இருந்ததாக பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது. வெள்ளாடுகளை அடைத்து வைக்க, முள் கொண்டு வேலி அமைத்தும், அவ்வாடுகள் கழித்த எருக்குப்பைகளை அடுத்தடுத்து குவித்தும் வைத்தனர் என்பதனை **"இடுமுள் வேலி எருப்படு வரைப்பின்"** *(பெரும். 154)* என்னும் பாடல் வரி விளக்குகின்றது. மலர்களின் மகரந்தத் தாதுகளே எருவாகக் கிடந்தது என்பதை **"தாதெரு மறுகு"** *(நற். 343: 3)* என்னும் பாடல் வரியும், காஞ்சிப்பூ தாது உதிர்த்தாற் போன்று எருவை உடைய மன்றம் என்னும் பொருளில் **"காஞ்சித் தாது உக்கன்ன தாதொரு மன்றத்துத்"** *(கலி. 108: 60)* கலித்தொகைப் பாடல் வரியும் எருவிடுதலை விளக்குகின்றது. மேலும், எருவிடுதல் என்னும் செயல் நடைபெறாமல் போனால் விளைச்சல் பாழ்பட்டுப் போகும் என்பதனை **" தாதெரு மறுத்த கலியழி மன்றத்து"** *(பதி. இ.ப 13: 17)* என்னும் பதிற்றுப்பத்து பாடல் வரிமூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**பயிர்பாதுகாப்பு தொழில்நுட்பம்**

பயிர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால் வேலிகள் என்னும் அமைப்பு மிகவும் அவசியம் என்பது அனைவரும் அறிந்த பயிர்பாதுகாப்பு தொழில்நுடபமாகும். இத்தொழில்நுட்பம் பண்டையத் தமிழர்களால் மிகவும் அழகாக பயன்படுத்தப்பட்டது என்பதனை **"வயலே நெல்லின் வேலி நீடிய கரும்பின் பாத்திப் பன்மலர் பூத்த தும்பின்"** *(புறம். 386: 10-11)* என்ற புலவர் கோவூர்கிழாரின் புறநானூற்று பாடல் வழி அறியமுடிகின்றது. நெல்லிற்கு வேலியாக கரும்பானது நடப்படுவதும்.அவ்வாறு நடுவதற்கு இருந்த பாத்தியில் பலவகையான பூக்கள் பூத்திருந்த தகவலும் கிடைக்கப் பெறுகின்றன. புன்செய் நிலத்தில் பருத்தி வேலியாக இருந்தது என்பதனை

**"பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்**
**புன்புலம் தழீஇய அங்குடிச் சீறூர்"**

*(புறம். 324: 7-8)*

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகளில் அறியமுடிகின்றது. நெல்லி மரங்களால் சூழப்பட்ட வேலி என்பதனை

**"மரை பிரித்து உண்ட நெல்லி வேலி**
**பரலுடை முன்றில்இ அம் குடிச் சீறூர்"**

*(புறம். 170: 1-2)*

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகளிலும், முள் வேலியினை பயிர் பாதுகாப்பிற்காக பயன்படுத்தினர் என்பதனை **"இடு முள் படப்பை"** *(புறம். 197: 10)* என்னும் பாடல் வரிமூலமும் அறிந்து கொள்ள முடிகின்றது. தலைவியும் தோழியும் தினைப்புனம் பாதுகாத்தனர் என்பதனை அகநானூற்று **"காவல் கண்ணினம் தினையே"** *(அகம். களி.நி. 92: 7)* என்னும் வரிகள் மூலமும், பறவை மற்றும் விலங்கினங்களிடம் இருந்து பயிர்களைப் பாதுகாத்ததன் சிறப்பை **"சிறுதினைப் படுகிளி கடீஇயர்"** *(அகம். களி.நி. 32: 5)* என்னும் அகநானூற்றுப் பாடல்கள் வழியிலும் அறிந்து கொள்ளமுடிகிறது.

**மரபு சார்ந்த களைக்கட்டுப்பாடு தொழில்நுட்பம்**

**"நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்**
**புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்"**

*(மூதுரை - 10)*

நெல்லுக்கு பாய்ச்சிய நீர்; புற்களுக்கும் பாய்வதைப் போல; நன்மை செய்யும் இடத்தில் சில தீமைகளும் பயனடையும் என்ற செய்தியை மூதுரை விளக்குகின்றது. எனினும், புல்லினை வளர்த்தெடுக்க ஆசைப்படுவோமானால் உணவிற்குப் பயன்படும் நெல்லின் விளைச்சல் குறையும். எனவே, களைகளைப் பறித்தெறிவதை பண்டைய மக்கள் மரபு சார்ந்த பண்பாகக் கொண்டிருந்தனர். இதனை அகநானூற்று பாடல் வரிகள் விளக்குகின்றன.

**"நெடுநெல் அடைச்சிய கழனிஏர் புகுந்து**
**குடுமிக் கட்டிய படப்பையொடு மிளிர,**
**அரிகால் போழ்ந்து தெரிபகட்டு உழவர்"**

*(அகம்.களி. 41: 4-6)*

நெற்கதிர்களைக் கட்டுகளாகக் கட்டி கழனியில் சேர்த்தபின்பு நிலத்தில் உள்ள களைகளோடு சேர்ந்த அருத்த நாற்றின் அடிப்பகுதியோடு சேர்த்து, தேர்ந்தெடுத்த காளைகளைக் கொண்டு உழுவர் என்ற செய்தி கூறப்படுகிறது. இதனால், வயலில் களைகளே இல்லாத வெற்று நிலமாக, அடுத்த விளைச்சலுக்கு தயார்படுத்தக் கூடிய நிகழ்வு இங்கு விளக்கப்படுகிறது. அதேபோன்று அகநானூற்று பாடல் ஒன்றில் **"களைக்கால் கழீஇய பெரும்யீபன வரகின்"** *(அகம்.மணி. 194: 9)* களைகளை வேரோடு வெட்டி எடுத்து தூய்மை செய்த பெரிய நிலம் என்ற செய்தியும். கோரைப் புற்களும், நெய்தல் மலர்களும் களையெனக் கருதப்பட்ட நிகழ்வினை **"சாயும் நெய்தலும் ஓம்புமதி ………"** *(நற். 60: 9)* என்ற நற்றினைப் பாடல் வரிகள் மூலமும் மரபு சார்ந்த களைக்கட்டுப்பாட்டு நடைமுறைகளைக் காணமுடிகிறது. மேலும், ஊடுபயிர்கள் மூலம் களைகளைப் பாதுகாத்தனர் என்பதனைக் குறுந்தொகைப் பாடல்கள் வரிகள் மூலம் அறியமுடிகிறது. **"………………. மாமலைப் பரீஇ வித்திய ஏனற்"** *(குறு. 72: 3-4)* தினைப்புனத்திற்கு இடையே பருத்திச் செடிகள் பயிரிடப்பட்டதை இதன் வரிகள் உணர்த்துகின்றன.

**அறுவடை தொழில்நுட்பம்**

பெரும்பாணாற்றுப்படையில் நெற்கதிர்கள் அறுவடை செய்வதற்காக அதன் அடிக்கற்றைகளாகிய திரண்ட தாள்களை உழவர்கள் அறுத்தெடுத்த செய்தியை

**"பைதற விளைந்த பெருஞ்செந் நெல்லின்**
**தூம்புடைத் திரள்தாள் துமித்த வினைஞர்"**

*(பெரும். 230-231)*

என்னும் பாடல் வரிகள் விளக்குகின்றன. மேலும், நெற்கதிர்களை கோபுரங்களாகக் குவித்தபின்பு, அவற்றை களங்களில் பரப்பி காளை வைத்து கதிரடித்து, வைக்கோளையும் களத்தையும் அகற்றி மேலே உள்ள பதரும் தூசும் நீங்க மேல் காற்றிலே தூற்றி எடுத்த

நெற்குவியல்களை பக்குவப்படுத்திப் பிரித்தெடுத்தனர் என்ற படிமுறைகளை பெரும்பாணாற்றுப்படையின் வழிக் காணக்கிடைக்கின்றது. இதனை

**“குழுமுநிலைப் போரின் முழுமுதல் தெலைச்சிப்**
**பகடு ஊர்பு இழிந்த பின்றைத் துகள்தப**
**வையும் துரும்பும் நீக்கிப் பைது அறக்**
**குடகாற்று எறிந்த குப்பை”**

*(பெரும். 237-240)*

என்ற வரிகளால் அறியலாம் மேலும், அகநானூற்றில்

**“நீர்சூழ் வியன்களம் பொலியப் போர்ப்பழித்துக்**
**கள்ளார் களமர் பகடுதளை மாற்றி**
**கடுங்காற்று எறியப் போகிய துரும்புடன்”**

*(அகம். 366: 2-4)*

என்ற வரிகள் நீரால் சூழப்பட்ட பெரிய களத்தில் நெற்கதிர்களின் கற்றைகளை அடுக்கி போரினைப் பிரித்துக் காவிட்ட பின்பு கள்ளுண்ட களமர்கள் தங்களின் பகடுகளை பூட்டவிழ்த்து விடுவர். அதன் பின்பு வேகமாக வீசும் காற்றில் நெல்லினைத் தூற்றி தூசினைப் போக்குவதாக கூறுகிறது அகநானூற்றுப் பாடல்.

**சந்தைப்படுத்துதல் தொழில்நுட்பம்**

**“மான்தசை சொரிந்த வட்டியும், ஆய்மகள்**
**தயிர் கொடு வந்த தசும்பும், நிறைய**
**ஏரின் வாழ்நர் பேர்இல் அரிவையர்**
**குளக்கீழ் விளைந்த களக் கொள் வெண்ணெல்**
**முகந்தனர் கொடுப்ப, உகந்தனர் பெயரும்”**

*(புறம். 33: 2-7)*

வேடனானவன் கொண்டு வந்து கொடுத்த மான் இறைச்சியையும், ஆயர்மகளிர் கொண்டுவந்து கொடுத்த தயிருக்கு ஈடாக; உழவர் மகளிர் குளத்திற்கு கீழாக விளைந்த களத்திலிருந்து பெற்ற வெண்ணெல்லை முகந்து பண்டமாற்று முறையில் தருவர் என்ற சந்தைப்படுத்துதல் செய்தி கூறப்படுகிறது. மேலும், இடைச்சியர்கள் நெய்யைப் பண்டமாற்று செய்யாமல் காசுக்கு விற்று குறிப்பிட்ட தொகை சேரும் வரை காத்திருந்து அந்தக் காசுகளைக் கொண்டு ஆநிரைகளை வாங்கினர் என்ற செய்தியை பெரும்பாணாற்றுப்படைக் கூறுகிறது.

**“நெல்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்**
**எருமை நல்லான் கருநாகு பொறூஉம்**
**மடிவாய்க் கோவலர்”**

*(பெரும். 164-166)*

மீனவர்கள் மீன்களைப் பண்டமாற்று முறையில் பிற நிலத்தவர்களுக்கு கொடுத்து அவர்களிடம் இருந்து பெற்ற நெல், மிளகு, பொன் பொருட்களை வீட்டில் கொண்டு சேர்த்தனர் என்ற செய்தியை புறநானூற்று பாடல் நமக்கு பகருகிறது. *(புறம். 343: 1-5)*

இந்த உலகில் வாழ்கின்ற மனித இனம் தனக்கென்று ஒரு தனித்துவமான நாகரீகத்தையும், சமூக அடையாளங்களையும் மற்றும் நீண்ட வரலாற்றுப் பின்னணியையும் கொண்டது. இதில் மூத்த இனமாக தமிழினம் மிகநீண்ட வரலாற்றினைக் கொண்டுள்ளது. பண்பட்ட மண்ணில்தான் செடிகளும் கொடிகளும் துளிர்விடும். அதுபோல இந்தச் சமூகம் பண்பட வேண்டும் என்றால் நல்ல வாழ்வியலும் பண்பாடும் இருக்க வேண்டும் என்பதனை தமிழினம் இத்தரணிக்குக் கற்று கொடுத்திருக்கிறது. அந்த வகையில் வேளாண் தொழிலின் முக்கியத்துவத்தையும் அதன் மகத்துவத்தையும் வேளாண்மைத் தொழிலை வளர்த்தெடுக்க தமிழர்கள் கையாண்ட தொழில்நுட்பங்களையும், பண்பாட்டினையும் மேலே காணும் ஆய்வின் வழித் தெளிவாகக் காணமுடிகின்றது..

**பயன்பட்ட நூல்கள்**


1. சங்க இலக்கியம் கலித்தொகை – முனைவர் அ.விசுவநாதன்இ நியூ செஞ்சூரி புக் ஹவுஸ், 2004.
2. சங்க இலக்கியம் நற்றிணை - முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன்இ நியூ செஞ்சூரி புக் ஹவுஸ், 2004
3. அகநானூறு - மணிமிடைப் பவளம் மூலமும் உரையும் – புலியூர்க் கேசிகன் – சாரதா பதிப்பகம், 2010.
4. புறநானூறு மூலமும் உரையும் – புலியூர்க் கேசிகன் – சாரதா பதிப்பகம், 2010
5. பதிற்றுப்பத்து தெளிவுரை - புலியூர்க் கேசிகன் – பாரி நிலையம், 2005.
6. பெரும்பாணாட்ற்றுப்படை விளக்கவுரை – புலவர். கா.கோவிந்தனார் – எழிலகம் வெளியீடு, 1996.

Vol. 9 Special Issue 1 January 2025 E-ISSN: 2456-5571

# மூங்கிலணை காமாட்சியம்மன் கோயில் திருவிழாவும் வழிபாட்டு முறைகளும்

**ந. செல்வராஜ்**
*கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை*
*கார்டமம் பிளாண்டர்ஸ் அசோசியேசன் காலேஜ், போடிநாயக்கனூர்*

**முன்னுரை**

மக்களின் நம்பிக்கையே கோயில்களின் வளர்ச்சிக்கு அடிப்படை. உள்ளத்தின் அன்போடும் கலாச்சாரப் பண்புகளோடும் உணர்வுகளை ஒருமுகப்படுத்தி இறைவன்பால் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளுதல் எளிமையான நிறைவான வழிபாட்டு நெறியாகும். தவறுகள் தகர்க்கப்பட்டு மனித மாண்புகள் மதிக்கப்பட்டு அன்பு, கருணை எல்லாம் வெளிவர மனிதனைத் தயார்படுத்தும் பட்டறைகளே கோயில்கள் ஆகும். நாட்டின் வரலாறுகளையும் பண்பாடுகளையும் நாகரீகங்களையும் காலங்காலமாகத் தாங்கி நின்று வருங்காலச் சமுதாயத்திற்குக் கடந்தகாலச் சமுதாயங்களை வெளிச்சமிட்டுக் காட்டும் ஒளிப்பேழைகளாகக் கோயில்கள் விளங்குகின்றன.

**மூங்கிலணை காமாட்சியம்மன் திருக்கோயில்**

காமாட்சி அம்மன் கோவில் கொண்டிருக்கும் தேவதானப்பட்டி எனும் ஊர் தேனி மாவட்டம், பெரியகுளம் வத்தலகுண்டு மேற்காக எட்டு மைல் தூரத்திலிருக்கிறது. இக்கோயில் தேனியிலிருந்து சுமார் 20 கி.மீ தொலைவில் உள்ளது. காமாட்சியம்மன் முந்நூறு மூங்கிலில் முதலில் பிறந்தவர். இவர் கேரளா மாநிலத்தில் இருந்து ஆற்று தண்ணியின் வழியே வந்தவர் என்று நாட்டுப்புறப் பாடல் ஒன்று விளக்குகின்றது. தண்ணியிலே காமாட்சியம்மன் மூங்கிலில் மிதந்து வந்ததால் மூங்கிலணைக் காமாட்சியம்மன் என்று பெயர் பெற்றதாகக் கூறுவர். காமாட்சி அம்மன் அருள் பொழிந்து மக்களுக்கு நல்வழி காட்டிவரும் தெய்வங்களில் முதல் தெய்வமாக இருப்பவள் ஆதிபராசக்தி. அவளின் மறு அவதாரமாகக் கருதப்படுபவள் காமாட்சி அம்மனாகும். காஞ்சிபுரம் காமாட்சி அம்மனுக்கு அடுத்தபடியாக தேவதானப்பட்டி மூங்கிலணைக் காமாட்சி அம்மன் பிரசித்தி பெற்ற தெய்வமாகும். அதற்குக் காரணம் காஞ்சி காமாட்சியே மூங்கிலணைக் காமாட்சி அம்மனாக இருந்து வருகிறாள் என்று தல வரலாறும் கூறுகிறது.

வங்கிசபுரி நகரத்திற்குச் சூலபாணி என்னும் அசுரன் மன்னனாக ஆண்டு வந்தான். இவன் சிவபெருமானை நோக்கி கடுந்தவம் புரிந்து அரிய வரங்களைப் பெற்றிருந்தான். இத்தவத்தின் பலனாக அவனுக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் பெயர் வச்சிரதந்தன். சூலபாணிக்கு பிறகு வச்சிரதந்தன் அரசன் ஆனான். மாங்குசானன் என்பவன் அமைச்சனாகவும் துட்டபுத்தி என்பவன் தளபதியாகவும் இருந்தான். இவர்கள் இருவரின் ஆலோசனைப்படி அசுரன் கொடுங்கோலனாக மாறி மக்களை அளவற்ற கொடுமைப்படுத்தி வந்தான். தவத்தினால் பல பிரசித்தி பெற்ற சக்திகளைப் பெற்றதால் வச்சிரதந்தனை ஒன்றும் செய்ய முடியவில்லை. வச்சிரதந்தனை அழிக்க அன்னை பராசக்தியால் மட்டுமே முடியும் என்று அனைத்து தேவர்களும் வேண்டினர். பராசக்தியின் மறுஅவதாரம் தான் காமாட்சி என்பதால் தேவர்கள் காஞ்சிபுரம் சென்று அன்னையை வேண்டினர். அனைவரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட அன்னை காமாட்சி, தன் சலங்கை ஒலிக்க, ஜெகமெல்லாம் திருப்பாதச்சீரடி வைத்துப் புறப்பட்டாள்.

வங்கசபுரி வரும் வழியில் பன்றிமலை வச்சிரதந்தனுடன் போரிட துர்க்காதேவியை அனுப்பி வைத்தாள். துர்க்காதேவி அங்கிருந்து புறப்பட்டு வங்கிசபுரி வந்து வச்சிரதந்தனோடு தொடர்ந்து போர் செய்து அவன் சிங்கத் தலையைத் துண்டித்தாள். அத்தலைத் துண்டுபட்ட உடனே அவன் புலித்தலையைப் பெற்றுத் தோன்றினான். பின்னும் அறுபட கரடி, காட்டெருமை முதலிய பல உருவங்களைப் பெற்று போரிட்டான் அவ் அசுரன். துர்க்காதேவியும் போரிட்டு ஓய்ந்தாள். இவ்வரக்கனைச் சம்காரம் செய்ய காமாட்சி அம்மனாலேயே முடியும் என்று உணர்ந்த துர்க்கை, அன்னையிடம் சென்று முறையிட்டாள். அதன்படி, வச்சிரதந்தனோடு போர் புரிய அண்டத்தைக் காத்து வரும் அன்னை காமாட்சியே திக்கெட்டும் ஒளி மழை பொழிய, அண்டசராசரம் நடுங்க மலர்ப்பாதங்கள்

வைத்துப் புறப்பட்டாள். கொடுமைக்கு ஆளானவர்களைச் சுமந்த துன்பம் நீங்கப் போகிற மகிழ்ச்சியால் வங்கிசபுரி மன்னன் சீரான தோற்றத்தோடு இறுமாந்து காட்சி அளித்தான். ஆங்கார தோற்றத்துடன் அன்னை போர்க்கோலம் பூண்டு வங்கிசபுரி வந்தாள். உலகத்தாயோடு போர்புரிய வந்த வச்சிரதந்தன் ஏவிய ஆயுதம் மூன்று முறை தேவியை வலம் வந்து மீண்டும் அவனிடமே சென்றது. இதைக்கண்ட அசுரன் தன் இறுதியை உணர்ந்தான். அதன்பின் அம்மனை வணங்கி துதித்த பிறகே போரிட்டான்.

இதையறிந்த அம்மன் உடனே துர்க்கையை வரவழைத்து அசுரனது தலை கீழே விழுந்தவுடன் காலால் மிதித்து அழுத்திடக் கூறி தலையைத் துண்டித்தாள். உடனே துர்க்கை கீழே விழுந்த அசுரனின் தலையை மிதிக்க அது சிதறியது. மறுதலையை எடுக்க முடியாததால் வச்சிரதந்தன் மாண்டான். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். அசுரனது தலையைத் துர்க்கை மிதித்த இடமே தலையாறு என்றும் மூளை சிதறிப் போய் விழுந்த இடமே மூளையாறு என்றும் குலைக்காய் ஈரல் விழுந்த இடமே குலையூத்து என்றும் உடல் குறுக்காக விழுந்த இடமே குறுக்குமலை என்றும் இன்றும் வழங்கி வருகின்றது. குறுக்குமலை என்பது தற்போதுள்ள கொடைக்கானல் மலைப்பாதை ஆரம்பமாகும் மலையாகும் என்று தலத்தின் தோற்றம் அறிய முடிகின்றது. இவ்விடத்தில் அருகில் தான் தேவதானப்பட்டியும் மூங்கிலணைக் காமாட்சியம்மன் கோவிலும் அமைந்துள்ளது.

**தெய்வத்தின் தோற்றம்**

வச்சிரதந்தனை வதைத்து தர்மத்தை நிலைநாட்டிய தேவி சாந்தியை வேண்டி தவ வடிவெடுத்து தலையாற்றில் உள்ள மூங்கில் புதரில் தவமிருந்தாள். அம்மன் தவமிருந்த திருவிடத்தில் பின்னர் சிறிய கோவிலொன்று கட்டப்பட்டது. ‘அம்மா மச்சு’ என்று இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது. இது தேவதானப்பட்டியிலிருந்து சுமார் ஐந்து மைல் தூரத்தில் நீர்வீழ்ச்சியின் அருகில் உள்ளது. பின்னர் வங்கிசபுரி என்ற தெய்வப்பதி இராஜகம்பள நாயக்கர் என்ற ஜமீன்தாரின் ஆட்சியில் கீழிருந்தது. ஜமீனைச் சேர்ந்த மாடுகளை மேய்க்க தினசரி ஒருவன் செல்வான். அதில் காராம்பசுவானது மாடுகள் கூட்டத்தை விட்டு தனியாகச் சென்று மாலை வீடு திரும்பும் போது தான் திரும்பி வரும். இதைக் கண்ட மாடு மேய்ப்பவன் மறுநாள் அந்த மாட்டின் பின்னே சென்று எங்கு செல்கிறது என்று பார்த்தான். மூங்கிற்புதரொன்றில் அழகே வடிவான ஒளி பொருந்திய ஒரு பெண் அப்பசுவில் பால் அருந்துவதைக் கண்டான். அவன் கண்டது சாதாரணப் பெண் அல்ல. உலகிற்கு ஆதாரமாய் விளங்கும் ஒப்பற்ற நாயகியாம் கருணை தெய்வமாய் காக்கும் கன்னித் தெய்வமாம் காமாட்சி அம்மன் தான் என்று உணர்ந்தான்.

மாடு மேய்ப்பவன் அக்காட்சியைக் கண்டவுடன் கண்களைப் பறித்துக் கொண்டாள் அம்மன். உடனே அலறி அடித்துக்கொண்டு ஜமீன்தாரிடம் நடந்தவற்றை அப்படியே மாடு மேய்ப்பவன் ஜமீன்தாரிடம் கூறினான். தெய்வக் குற்றமாக இருக்குமென்று கருதிய ஜமீன்தார் பூஜையிட்டு வழிபட்டார். அம்மன் அவன் முன் வந்து, “முன்னர் வச்சரதந்தன் என்ற அசுரனை வதைத்த நான் சாந்திக்காக இங்கே தவமிருக்கிறேன். தவமிருக்கும் என்னை கண்டு ஒளி தாங்காமல் கண்களை இழந்தான். இன்னும் ஒரு வாரத்தில் பெரும் மழை பெய்து ஆற்றில் வெள்ளம் வரும். அந்த வெள்ளத்தின் மீது மிதந்து வரும் மூங்கில் பெட்டியில் நான் அமர்ந்து வருவேன். ஒரு இடத்தில் மூங்கிற்புதர் அணையிட்டு பெட்டியை நிறுத்தும். அப்பெட்டியை எடுத்து வைத்து வழிபட்டால் கண்கள் தெரியும். கன்னித் தெய்வமான என்னருகில் இல்லறத்தோர் குடியிருக்கக் கூடாது. நெய்விளக்கு தவிர வேறு விளக்கு போடக் கூடாது. தேங்காயும் பழமும் நிவேதித்தால் போதும். அன்ன நிவேத்தியம் வேண்டாம் என்று கூறினார்.

காமாட்சியம்மன் முந்நூறு மூங்கிலில் முதலில் பிறந்தவர். இவர் கேரளா மாநிலத்தில் இருந்து ஆற்றுத்தண்ணியின் வழியே வந்தவர் என்று நாட்டுப்புறப்பாடல் ஒன்று விளக்குகின்றது.

> **“தலையாத்து தண்ணியிலே தங்கி வந்த காமாட்சி**
> **மூலையாத்து தண்ணியிலே முங்கி வந்த காமாட்சி**
> **முந்நூறு மூங்கிலிலே முதலில் பிறந்த காமாட்சி**
> **வரட்டாறு தண்ணியிலே வந்து நிண்ட காமாட்சி**
> **இருட்டாறு தண்ணியிலே இருந்து வந்த காமாட்சி”**

என்பதே அந்த நாட்டுப்புறப்பாடலாகும். அம்மன் தண்ணியிலே மூங்கிலில் மிதந்து வரும் போது பூ விற்கும் பண்டாரம் எனும் பெண்மணி நீராடிக் கொண்டிருக்கும் போது அத்தண்ணியில் பெட்டி ஒன்று

மிதந்து வந்தது. அப்பெட்டியினை எடுத்து முப்பது முக்கோடி தேவர்களுக்கும் தீர்ப்பு வழங்கக் கூடிய திறம்வாய்ந்த கூட்டாம்புலி எனும் ஊர்த்தலைவர் வழிபட்டார். அம்மனுக்கு முதலில் ஒரு கருவறை மட்டுமே இருந்தது. அம்மன் இருக்கும் இடத்தில் யாரும் உள்ளே செல்ல மாட்டார். ஏனென்றால் அம்மனைக் கண்டால் தலைவெடித்து இறந்து விடுவர். அதைக் கருத்தில் கொண்டு கூட்டாம்புலி சபை ஒன்றை நிறுவி அம்மனுக்கு கோவில் கட்டினார். அன்று முதல் இன்று வரை அம்மனுக்கு காமாட்சி புல்லில் கூரை வேய்ந்து வழிபடுவர். அக்கூரையை வேய்பவர் அம்மனுக்காக ஒருநாள் முழுவதும் விரதமிருந்து கண்ணையும் வாயினையும் மஞ்சள் துணியினால் கட்டிக்கொண்டு காமாட்சி அருளால் அக்கூரையை வேய்ந்தனர். காமாட்சியம்மன் இக்கூரையின் கீழ் அமர்ந்து மக்களுக்கு அருளுகின்றார்.

**மாசி மாத மஹா சிவராத்திரி**

மாசி மாதம் மஹா சிவராத்திரி பெருந் திருவிழா அன்று மூங்கிலணை காமாட்சியம்மன் கோயிலில் திருவிழா நடைபெறும். ஆடி மாதம் ஆடிப்பள்ளயம் மூன்று நாட்கள் நடைபெறும். ஏராளமான பக்தர்கள் இத்திருவிழாவில் கலந்து கொள்வர். இங்கு மூலவரோ, உற்சவரோ கிடையாது. எனவே ஐந்து நாள் திருவிழா காலத்தில் முதல் நான்கு நாட்கள் கோயில் அருகில் உள்ள ஆற்றுக்கு மூங்கில் தட்டில் மாம்பழம், பலாபழம், வாழைப்பழம், தேங்காய், பூ மாலை மற்றும் அபிசேகப் பொருட்களும் கொண்டு செல்வர். கோடாங்கி நாயக்கர் மேளதாளத்துடன் பூஜை பொருட்களைக் கோயிலுக்கு எடுத்து வந்து இரவு முழுவதும் வைத்திருப்பார். மறுநாள் காலையில் தான் பூஜை செய்வார். இதற்கு பள்ளயம் என்று பெயர். ஐந்தாவது நாள் வரும் பள்ளயத்தை ஜமீன்தார் வீட்டிற்கு அனுப்புவர். நெய் வாங்கி ஊற்றுவது நேர்த்திக்கடனாக உள்ளது. திருவிழாக்காலத்தில் சேரும் ஐம்பது பானை நெய் வருடம் முழுவதும் தீபத்திற்காகப் பயன்படுத்துவர். இந்த நெய் பானைகளில் ஈயோ எறும்போ மொய்ப்பதில்லை.

**ஊர் சாட்டுதல்**

காமாட்சியம்மன் கோயிலை முதலில் இராஜகம்பளத்தாரின் முன்னிலையில் காமாட்சியம்மன் கோயில் மஹா சிவராத்திரி நாளன்று தீர்மானித்து மக்கள் மத்தியில் கோயிலைச் சாட்டுவர். கோயிலைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள மக்கள் சுத்தமாக வீடு வாசலைத் தூய்மை செய்து கொள்வர். திருவிழாவிற்கு பதினைந்து நாட்கள் இருக்கிறது என்பதனை நினைவூட்டும் வகையில் கொடிக்கம்பு நாட்டுவர். பரம்பரையாக இருக்கும் அறங்காவலார்களால் ஸ்ரீகாமாக்காளுக்கு சிரார்த்தம், அதனைத் தொடர்ந்து முகூர்த்தக்கால் நாட்டுதல் நடைபெறும்.

**முதல் நாள் திருவிழா**

செவ்வாய்க்கிழமை முதல் நாள் திருவிழா ஆரம்பமாகும். அன்று காலை ஏழு மணி முதல் ஒன்பது மணி வரை இராஜ கம்பத்தார் தேவராட்டத்துடன் பள்ளயம் ஆலயம் வருதல், அம்மனுக்கு பூசை நடைபெறும். அன்று கோயிலில் பலவகையான பயிர்களை வேக வைத்து அவற்றை அம்மனுக்கு படையல் வைப்பர். பிறகு அதனைக் கோயிலில் வரும் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்குவர். பின் கோயிலில் விஸ்வ கம்பளத்தார், முந்நூறு வீட்டு திருச்செந்திரையர் பங்காளிகள் சங்கம் சார்ந்தவர்கள் சேர்ந்து இரவில் இன்னிசைக் கச்சேரி முதலிய பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்வர். முதல் நாள் நடைபெறும் திருவிழா என்பதால் பக்தர்கள் கணக்கற்றோர் கலந்து கொண்டு அம்மனைத் தரிசிப்பர். தங்களின் வேண்டுதல்கள் நிறைவடைந்தால் நேர்த்திக்கடனும் செலுத்துவர்.

**இரண்டாம் நாள் விழா**

இரண்டாம் நாள் விழாவில் அம்மனுக்கு பல புண்ணிய ஸ்தலங்களில் இருந்து தீர்த்தங்கள் கொண்டு வருவர். கொண்டு வந்த அந்த தீர்த்தத்தால் அம்மனுக்கு அபிசேகம் செய்வர். அம்மனை ஒவ்வொரு நிறத்தில் உள்ள பல ஆடைகளைக் கொண்டும் பல பூக்களை வைத்து அலங்கரித்தும் பூஜை செய்வர். தேவராட்டத்துடன் பள்ளயம் ஜமீன்தார் அறங்காவலரிடம் வந்து பள்ளயம் அம்மனுக்குப் பூஜை, ஆராதனைகள் செய்வர். இன்றும் இரவில் இன்னிசை நிகழ்ச்சிகளும் திரையிசை நடன நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

**மூன்றாம் நாள் திருவிழா**

மூன்றாம் நாள் திருவிழாவிலும் தேவராட்டத்துடன் வந்து பள்ளயம் ஜமீன்தார் அறங்காவலரிடம் வந்து பள்ளயம் அம்மனுக்கு பூஜை, ஆராதனைகள் செய்வார்.

பின் ஜமீன்தார் தலைமையில் இன்னிசை அரங்கேற்றம் முதலியவை ஏழு மணி முதல் பத்து மணி வரை நடைபெறும். இந்நாளில் பக்தர்கள் அம்மனுக்குப் பொங்கல் வைத்து படையல் செய்வர். அம்மனிடம் தங்கள் வேண்டுதல் நிறைவேறியதற்காகவும் உடல் நலத்திற்க்காகவும் அரிசிமாவால் மாவிளக்கு செய்து விளக்கேற்றி அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துவர். பல பகுதியைச் சேர்ந்த மக்கள் பூச்சட்டி எனும் தீச்சட்டியை எடுத்து வந்து அம்மன் கோயிலுக்கு வந்து நேர்த்திக்கடனை முடிப்பர்.

**நான்காம் நாள் விழா**

ஜமீன்தார் வீட்டில் இருந்து தேவராட்டத்துடன் பள்ளயம், அறங்காவவலரிடம் வந்து சேரும். பள்ளயம் அம்மனுக்கு பூஜை, ஆராதனைகள் நடைபெறும். நான்காம் நாளும் மக்கள் நேர்த்திக்கடன் செலுத்த தீச்சட்டியினை எடுப்பர். நான்காம் நாளும் இன்னிசை கச்சேரி நடைபெறும். இந்நாளில் இரவு நேரங்களிலும் அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறும். வெளியூர்களில் இருந்து வரும் பக்தர்களும் இக்கோயிலுக்கு வந்து அம்மனை தரிசித்து அன்னதானம் செய்வர். அம்மனிடம் பிள்ளை வரம் வேண்டிக் கொண்ட தம்பதியினர் தங்கள் வேண்டுதல் நிறைவேறியவுடன் அக்குழந்தைகளுக்கு மொட்டையடித்து தங்கள் நேர்த்திக்கடனை நிறைவேற்றுவர்.

**ஐந்தாம் நாள் திருவிழா**

ஐந்தாம் நாள் திருவிழாவில் அம்மன் கோபுரத்தில் சிறப்பு பூஜைகளும் வழிபாடும் நடைபெறும். இக்கோயிலில் வேண்டிக்கொண்ட பக்தர்கள் தங்களால் முடிந்த செலவில் அம்மனுக்கு பட்டாடைகள் வாங்கித் தருவர். பின் கோயிலைச் சுற்றியுள்ள மக்கள் ஒருவருக்கொருவர் மஞ்சள் தண்ணீர் கலந்து ஒருவர் மீது ஒருவர் ஊற்றி மகிழ்ச்சியுடன் விளையாடுவர். தேவதானப்பட்டி அரண்மனை ஜமீன்தார் கோயிலுக்கு வந்து அம்மனுக்கு பூஜை ஆராதனை செய்வார். வெளியூரில் இருந்து வரும் பல பக்தர்கள் விழா நடைபெறும் ஐந்து நாட்களிலும் இங்கு வந்து தங்கியிருந்து தங்களின் பக்தியையும் நேர்த்திக்கடனையும் செலுத்திச் செல்வர். அம்மனுக்கு பல இடங்களிலும் இருந்து வந்த தீர்த்தத்தை வைத்து பூஜை செய்வர்.

**கோயில் திறக்கும் நேரம்**

தினமும் கோயில் காலை ஆறு மணி முதல் இரவு எட்டு மணி வரை திறந்திருக்கும்.

**வேண்டுதல்கள்**

மூங்கிலணைக் காமாட்சியம்மன் பகைவர்களை வெல்லும் சக்தியைத் தருவாள் என்பது மக்கள் நம்பிக்கையாக உள்ளது. திருமண வரம், குழந்தை வரம், தொழில் வரம் மற்றும் மன அமைதிக்கான வரங்களையும் தருகிறாள் அம்மன். புதிய காரியங்கள் தொடங்க இங்கு வந்து கௌிலி குறி கேட்பதும் நடைபெறுகின்றது.

**நேர்த்திக்கடன்**

மக்கள் தாங்கள் அம்மனிடம் வேண்டிக் கொண்ட வேண்டுதல்கள் நிறைவேறியவுடன் பலவித நேர்த்திக்கடனைச் செலுத்துவர். நெய் வாங்கி ஊற்றுதல், அம்மனுக்கு புடவை சாத்துதல், முடி காணிக்கை, அபிசேகம், பூஜை முதலிய நேர்த்திக்கடனைச் செலுத்துவர். இவை தவிர கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் கொடுப்பர். வசதி படைத்தோர் கோயில் திருப்பணிக்காக பொருளுதவியும் செய்வர்.

**முடிவுரை**

மாசி மாதம் மஹா சிவராத்திரி பெருந் திருவிழா அன்று மூங்கிலணை காமாட்சியம்மன் கோயிலில் திருவிழா நடைபெறும். ஆடி மாதம் ஆடிப்பள்ளயம் மூன்று நாட்கள் நடைபெறும். ஏராளமான பக்தர்கள் இத்திருவிழாவில் கலந்து கொள்வர். இங்கு மூலவரோ, உற்சவரோ கிடையாது. ஐந்து நாள் திருவிழா காலத்தில் முதல் நான்கு நாட்கள் கோயில் அருகில் உள்ள ஆற்றுக்கு மூங்கில் தட்டில் மாம்பழம், பலாபழம், வாழைப்பழம், தேங்காய், பூ மாலை மற்றும் அபிசேகப் பொருட்களும் கொண்டு செல்வர். கோடாங்கி நாயக்கர் மேளதாளத்துடன் பூஜை பொருட்களைக் கோயிலுக்கு எடுத்து வந்து இரவு முழுவதும் வைத்திருப்பார். மறுநாள் காலையில் தான் பூஜை செய்வார். இதற்கு பள்ளயம் என்று பெயர். ஐந்தாவது நாள் வரும் பள்ளயத்தை ஜமீன்தார் வீட்டிற்கு அனுப்புவர். நெய் வாங்கி ஊற்றுவது நேர்த்திக்கடனாக உள்ளது. திருவிழாக்காலத்தில் சேரும் ஐம்பது பானை நெய் வருடம் முழுவதும் தீபத்திற்காகப் பயன்படுத்துவர். இந்த நெய் பானைகளில் ஈயோ எறும்போ மொய்ப்பதில்லை. இவ்வாறு மூங்கிலணை காமாட்சியம்மனின் வழிபாடுகள் நடைபெறுகின்றன.

**தகவலாளர்கள்**

1. திரு. கணேசன் மற்றும் திரு. மணி - ஊர் பொதுமக்கள் - தேவதானப்பட்டி - தேனி மாவட்டம்.
2. திரு. குமார் மூங்கிலை காமாட்சி அம்மன் கோவில் ஐயர் - தேவதானப்பட்டி - தேனி மாவட்டம்.

# கீழ்க்கணக்கு உணர்த்தும் இல்லற விழுமியங்கள்

**முனைவர் செ. சரஸ்வதி**
*கௌரவவிரிவுரையாளர், தமிழ்த்துறை*
*அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திட்டமலை, நம்பியூர்*

தமிழ் உலக மொழிகளில் தனிப் பெருமை கொண்டது. ஒப்பற்ற பெருமை கொண்டது தமிழ். தமிழில் ஒவ்வொரு கால இடைவெளிகளிலும் ஒவ்வொரு வகையான பாடு பொருள்களைக் கொண்ட இலக்கியங்கள் தோன்றியுள்ளன.

கீழ்க்கணக்கு என்ற வகைப்பாடு சங்க காலத்தின் அடுத்;த மருவிய காலங்களில் தோன்றின. சங்க இலக்கியத்தில் அகம், புறம் என்ற கூறுகளைப் பாடுவனவாய் இருந்த இலக்கியம் சங்க மருவிய காலத்தில் அறம் பொருள் இன்பம் என்ற மூன்றினையும் பாடுபொருளாய்க் கொண்டு இலக்கியங்கள் தோன்றின.

திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம் சிறுபஞ்சமூலம், ஏலாதி, பழமொழி, ஆசாரக்கோவை, இன்னிலை என்ற பதினோரு நூல்களும் கீழ்க்கணக்கில் அறம் பாடுவதாய் உள்ளன.

பண்டைய காலத்தில் தனிமனிதனாக வாழ்ந்த போதும் அறநெறியின் தேவையை நாடியிருக்க வேண்டிய அவகியமில்லை. சமுதாயமாகக் கூடி வாழும் போது ஏற்படும் எதிர்மறை எண்ணங்கள், வளர்க்கக் கூடிய நேர்மறை எண்ணங்கள் குறித்து அறிவுறுத்தல் வளரத் தொடங்கின.

அறங்கள் பின்னர் பரந்த நிலையில் மாறிச் செம்மை பெற்றன. ஆழசயட என்ற சொல் ஆழசநள என்பதற்கு பழக்க வழக்கம் என்பதே பொருள் எனவே, பெரியோர் பின்பற்றிய நெறிமுறைகளே அறமாகக் கருதப்பட்டன என்பதை உணரலாம். இதனைத் தொல்காப்பியர்

**வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே**
**நிகழ்ச்சி அவர்கட் டாகலான்**" (1) (தொல்காப்பியம் பொருளதிகாரம் மரபியல் -94)

எனக் கூறியுள்ளார்.அறம் என்னும் சொல்லிற்குப் பின்வரும் விளக்கம் தரப்படுகின்றது. "மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே முழுநிறை வடிவமே, அறம் என்று கூறுவர். பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையின் பயனாகிய அறியாமையை அறுத்தெரிவதே அறம் என்று ஆன்மீக வண்ணம் குழைத்த மற்றொரு விளக்கமும் தரப்படுவதுண்டு.(2) (இராமலட்சுமணன், நீதி நூல்கள் ப.5)

இல்லறம், துறவறம் என இரு வகை இல்லறம் கொடுத்தல், மறித்தலும் கோடலும் இன்மையும், ஒழுக்கம், புணர்தல், புணர்ந்தோர்ப் பேணல் மற்றையவுமாம்(3) (ஆ. சிங்கார வேலு முதலியார்; அபிதான சிந்தாமணி ப.168 )என்று இல்லறத்திற்கு அபிதான சிந்தாமணி விளக்கம் தருகின்றது.

### நீதி நூல்களில் அறம்

களப்பிரர் படையெடுப்பால் மதுரையில் இருந்த கடைச் சங்கம் அழிந்த தென்றும், கிபி 470-இல் வச்சிர நந்தி சமண முனிவர் திராவிட சங்கம்' நிறுவினார் என்றும் கூறுவர். அச்சங்கத்தார் பண்டைய அறவொழுக்கங்களைப் போற்றி மக்கள் ஒழுகுதற் கேற்ப அறநூல்களாக இயற்றினார்.(4) (முனைவர் ஆ. சண்முகம். விழுமியங்கள் ப.18.) என்ற கருத்தும் உண்டு.

உலகியல் நீதிகள் பல கூறுவனவாக அற இலக்கியங்கள் அமைகின்றன. அறிவுரையாகவும், அறிவுறுத்தல் நோக்குடனும் அமையும். சமுதாய வாழ்வியலில் நன்மை நெறி வேண்டுவனவற்றை அறிவுறுத்துகின்றன. இல்லறம் என்பது இல்லத்திற்கான அறம். இல்லம் என்பது கணவனும் மனைவியும் சேர்ந்து வாழும் இடம். இல்லம் என்பது இடம் மட்டும் அல்ல. கணவன் மனைவி இருவரின் உறவுக்கான களம். இல்லத்தில் இருந்து தமக்கும், பிறர்க்கும் செய்யும் அறங்களே' இல்லறம்' எனலாம். இல்லறம் என்பதை பரிமேலழகர் இல்லாளோடு கூடி வாழ்தலின் சிறப்பு, இளநிலை, அறம் செய்வதற்கு இருவகை நிலைக்கும் முதலாகும் என்கிறார். இதனையே மணக்குடவர் இல் வாழ்க்கை யாவது இல்லின் கண் இருந்து வாழும் திறன் கூறுதல்

என்கிறார்.(5) (கி.வா ஜகநாதன் (ப.ஆ) திருக்குறள் ஆராய்ச்சியில் பதிப்பு ப.37.) ஒருவன் தன் கற்புடை மனைவியொடு கூடி இல்லத்தின் கண் இருந்து வாழும் அறவாழ்க்கையே இல்வாழ்க்கை (6) (ஞா. தேவநேயப் பாவாணர் திருக்குறள் தமிழ் மரபுரை ப.77) என்கிறார் தேவநேயப் பாவாணர் மணம் புரிந்து கொண்டு குடும்பமாக வாழ்வதே இல்லறம் (7) (தமிழறிஞர் சாமி சிதம்பரனார் வள்ளுவர் வாழ்ந்த தமிழகம் ப.78.) என்கிறார் சாமி சிதம்பர நாதன். எனவே இல்லறம் என்பது குடும்பத்தில் கணவன் மனைவி இருவரும் அறம் செய்து வாழ்தலே என்பதை உணர முடிகின்றது. சமுதாயத்தின் அடிப்படை அழகு குடும்பம் குடும்பத்திலுள்ள உறுப்பினர்களை அன்பு, பாசம் என்னும் இழையினால் அணைக்கப்படும் பொழுதுதான் சமுதாயம் ஒற்றுமையுடன் செயல்பட முடியும் (8) (அ.பிச்சை - பாரதியார் படைப்புகளில் சாதி சமூக நல்லிணக்கம் ப. 1014). என்கிறார். அ.பிச்சை. உலகத்தின் அனைத்து உயிரினங்களும் குடும்பம் என்ற அமைப்புடன் இலங்குகின்றது. மனித சமுதாயத்தின் அடிப்படை அலகு! குடும்பமே, சமூகம்,நாடு, உலகம் இவற்றின் ஆரோக்கியமான முன்னேற்றமும் குடும்பத்தைச் சார்ந்தவையே இந்த இல்லம் என்பது.

**“அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன் பழிப்பது இல்லாயின் நன்று”** . (குறள் 495)

இல்வாழ்க்கை என்பதே அறம் அதுவும் பிறன் பழிப்பது இல்லாமல் குடும்ப வாழ்க்கை இருக்க வேண்டும் என்கிறார். குடும்பம் பிறன் பழிக்காமல் இருக்க வேண்டும் எனில் அன்பும், அறனும் உடையதாய் இருக்க வேண்டும் என்கிறார்.

**'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது'** (குறள் 45)

இதனையே இன்னிலை

**ஒப்புயர்வில் வேட்டோன் ஒருநிலைப்பட்(டு)**
**ஆழ்ந்த செயல் நபப்பின்னை ஞாலம் ஒருங்கறிய**
**தும்பராய்த் தூமலரின் மென்மையுறு தோற்றத்தை**
**வைத்துய்க்க ஏமக் கிழத்தி அறிந்து”** (இன்னிலை 22)

ஒப்பும், உயர்வும் இன்றி இல்லக் கிழத்தியை நன்கு புரிந்து கொண்டு இல்லற வாழ்வினை இனிது நடத்தல் வேண்டும் என்று இன்னிலை கூறுகின்றது. நட்டாரை பாக்கிப் பகைபணித்து வையெயிற்றுப் இல்லத் தன்பில் துறவா உடம்பினான் ஆய பயன் (சிறுபஞ்சமூலம்18) அழகிய பெண்ணை மணம் செய்து அவள் சுற்றத்திலும், தன் சுற்றத்திலும் அன்போடிருந்தல் மக்கட் பிறப்பின் பயனாகும் என்கிறது சிறுபஞ்சமூலம்.

**கணவன்**

இவ்வாழ்வான் என்பாள் இல்லாளோடு கூடி கடமைகளைத் தவறாமல் செய்து கொண்டு சிறந்த மகனாய் வாழ்கின்றவன்(9) (ந.சுப்பு ரெட்டியார், தமிழ் இலக்கியங்களில் அறம் நீதி முறைமை ப.128.) என்று வரையறுக்கலாம். இல்லறத்தின் தலையாய அறமாக பெண்ணுக்கு வேண்டிய நற்பண்புகளைச் சுட்டுகிறது. "மனைமாட்சி' (குறள் 52). புகழ்புரிந்த இல் இல்லோர்க்கு இல்லை" (குறள் 59). கணவன் சிறப்புமிக்க பண்புடன் இருந்தாலும் மனைவி நற்பண்புடன் இல்லை எனில் இல்லறம் சிறக்காது என்று வலியுறுத்துகின்றன.

**வாழ்க்கைத் துணைவி**

இல்லத்திற்கு அடிப்படையாக அமைவது மனைவியின் பண்புகளே இதனையே. (குறள் 51) கணவரின் பொருள் வமளர்த்துக் தக்க வாழ்க்கை நடத்துகின்றவளே வாழ்கைத் துணை, 'இல்லறத்திற்கு ஒளி வீசும் விளக்கு மனைவி' (நான்மணிக்கடிகை65). அழகோடு நல்ல அறிவும் உடையவள் இல்வாழ்க்கைக்கு உரிய நல்ல துணையாவாள் (நான்மணிக்கடிகை 553) மனைவியின் நற்பண்புகளே இல்லறத்திற்கு அடிப்படை என்பதை வலியுறுத்துகின்றன.

**இல்லறத்தின் கடமைகளள்**

இல்லறம் முழுமை அடைவதே மக்கட்பேறு பெறுவதில் தான். 'நன்மக்கள் பேறடைதல் இல்லற இன்பத்தின் பேரெல்லை" (10) (முனைவர் ஆ. சண்டுகம் விழுமியாங்கள் ப.48.) என்று ஆ.சண்முகம் குறிப்பிடுகிறார். 'வள்ளுவர் தம் பொருள் என்பதம் மக்கள்' (குறள் 63) மக்கட் பேறே சிறந்த பேறு (முதுமொழிகாஞ்சி 51) அன்பு நிறைந்த மக்கள் அழகிய அணிகலுக்கு ஒப்பாவர் (நான்மணிக்கடிகை342) இல்லத்திற்கு விளக்கொளியாய் விளங்குபவர் மக்கள் (இன்னிலை33.1) 'பிள்ளைகள் மக்கட் பேறு பெறுதலே இல்லறத்தின் தலையாய கடமையாக' கீழ்க்கணக்கு நூல்கள் விளம்புகின்றன.

**சுற்றம் பேணல்**

இல்லறம் நல்லறம் ஆக சுற்றத்தினரைப் பேணிக் காத்தல் வேண்டும். நல்ல சுற்றம் அமைந்த வாழ்க்கை வரம் என்கிறது கீழ்க்கணக்கு நூல்கள். உறவினரை நீங்கி வாழ்தலே ஒருவருடைய கெட்டழிதலுக்கு காரணம் (நான்மணிக்கடிகை 27.4) துன்பம் வந்த இடத்து அதனை நீக்குபவரே சுற்றத்தார். உறவினரை மருந்தாகக் கூறும் செய்தியைப் பழமொழிநானூறில் உள்ளது. (பழமொழி நானூறு 351). "காக்கை கரவா" (குறள்: 527) மேன்மேலும் காய் காய்ந்தாலும் தாங்கிக் கொள்ளும் கிளை போல தம்மை சேர்ந்தவரை எதிர்த்து நிற்றலே பெருமை.(நாலடியார் 213) கீழ்க்கணக்கு நூல்கள் சுற்றத்தாரைப் பேணுதல் இல்லறத்தின் மிகச் சிறந்த அறமாக இயம்புகின்றது.

**பொருளீட்டல்**

பொருளீட்டல் என்பது இல்லத்தின் தலையாய கடமைகளில் ஒன்று. இல்லறம் இனிவுடன் இருக்க வேண்டுமானால் தேவையான அளவிற்காவது பொருள் தேவை. பொருளைத் தேடும் வழியில் அறத்துடனே பொருள் ஈட்ட வேண்டும் என்கிறது கீழ்க்கணக்கு நூல்கள். "பழியஞ்சிப் பாத்துண் (குறள் 44) என்ற குறளில் பழி அல்லாது பொருள் சேர்க்க வேண்டும் என்கினறது குறள். இல்வாழ்க்கை நடத்துபவனின் தொழில் குறித்து. இன்னிலை உழவுத் தொழிலே வலிமை மிக்க தொழில் என்கிறது ( இன்னிலை 32.4) இவ்வாழ்க்கையின் பொருளாதாரம் குறித்து (இன்னிலை24) வது பாடல் சிறப்பாக வலியுறுத்துகிறது. "எய்ப்பில்லைப் பாக வருவாயில் ஐந்தொன்றை வட்டல் மழைக் கிழவன் மாண்பு" (இன்னிலை .34) வருவாய் குறைந்த காலத்தில் கையில் உள்ள பொருளை சுருக்கி செலவு செய்தல் செல்வளமுடையான் போலக் காட்டாமை, பொருளைச் சேர்ப்பதே மாண்புடைச் செயல், பொருளைச் சேர்த்து வைத்தல் வேண்டும் என்ற அறத்தை வலியுறுத்துகின்றது.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் என்பது தமிழர்களுக்கான பண்பாட்டு அறம். பெரும்பாலான அற இலயக்கியங்கள். விருந்தோம்பலை வலியுறுத்துகின்றன. விருங்தோம்பல் என்பது இல்லத்தாருக்கான கடமை. வீட்டில் பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவிட செய்யும் பொருட்டே (குறள்:81) 'விருந்தினர் பசித்திருக்க தான் மட்டும் தனியாக உண்ணாதவன் பிறர்க்கு உதவி செய்பவன் ஆவான் (திரிகடுகம் 12.2) 'பலர்க்கும் பகிர்ந்து கொடுத்து தானும் உண்டு. இல்லறத்தைக் குறைவின்றி நடத்தலை சிறந்த கல்வி (திரிகடுகம் 31.2) யாரிடத்தும் மறைக்காமல் பலரோடும் பகிர்நந் துண்ணல் நற்செயலாகும் (சிறுபஞ்சமூலம 47) வழி நடப்பவர், மிக்க அமைப்பை எடுத்து வருபவன், நோயுற்றவர், உறவினர்க்கு உணவு, தனது உடம்பைச் சார்ந்த வானுலகிலுள்ள தென்புலத்தார், அயல் நாட்டிலிருந்து வந்தவர் இவர்களுக் கெல்லாம் உணவு கொடுத்தவன் தனக்குரிய மனையில் செம்மையாக வாழ்வான் (ஏலாதி.71) விருந்தோம்பல் என்பது இல்லறத்தின் தலையாய கடமையாக அற நூல்கள் வலியுறுத்துகின்றது.

**குழந்தை வளர்ப்பு**

இல்லறத்தின் அழகாக விளங்கும் குழந்தைகளை வளர்த்தல் இல்லறத்தின் இன்றியமையாத கடமையாகும். அறிவுடையவனாக்குதல், நல்ல பண்பாளர் ஆக்குதல் தாய் தந்தையர் கடமை. ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும்" (குறள்.69) குழந்தைகளைப் பாதுகாத்தலை பெண்கள் அறமாக " செய்ய வேண்டும் என்று (சிறுபஞ்சமூலம்72) வலியுறுத்துகின்றது "ஈன்றெடுத்தல் சூல்புறம் செய்தல் குழவியை மொழிந்தார் முதுநூலார் முன்பு" என்ற பாடல் மூலமாக அறியலாம் கீழ்க்கணக்கு அறநூல்களில் இல்லறம் என்பது கணவன்,மனைவி இருவரால் தொடங்கி மக்கட் பேறு என்பதுடன் முழுமையடையவதாய் காட்டுகின்றன. இல்லறத்தில் அன்பு, என்பது முதுகெலும்பாய் இருத்தலே சிறந்த அறம், அத்துடன் பண்புடன் இல்லம் இருத்தலே நல்லறம் என்கின்றன.

இல்லறத்தாரின் கடமைகளாக சுற்றம் பேணுதல், பொருளீட்டல், விருந்தோம்பல், குழந்தை வளர்ப்பு, இல்லறம் பேணுதல் போன்றவற்றை வகைப் படுத்தியுள்ளன. சுற்றம் என்பது விருந்தினரை உணவு முதலியன கொடுத்து இல்லத்தில் ஆணும் பெண்ணும் சேர்ந்து போற்றுதல், அறவழியில் பழி அல்லாத பொருள்களை ஈட்டுதலை ஆணுக்கான கடமையாகவும்,

விருந்தோம்புதல் என்பது இல்லம் நாடி வரும் அனைவருக்கும் உணவினை வெறுக்காது முக மலர்ச்சியுடன் ஈதல், இல்லத்தை முறையாகப் பேணுதல், தாய் தந்தையரைச் சமூகத்தில் மரியாதை செய்யும் படி நடத்துதல் மக்கட்பேறுக்கான கடமைகளாகவும் கீழ்க்கணக்கின் அற இலக்கியங்கள் வகுக்கும் இல்லற அறங்களாகும்.

சமுகத்தின் அன்பார்ந்த உறவுகளின் அடிப்படை குடும்பத்தில் ஆண் பெண் இருவரும் பண்புகளோடு சிறந்து இருந்து அன்பு கொண்டு குடும்பத்தை இயக்க வேண்டும். குடும்பத்தின் உறவாக வரும் மக்கட் பேறு பெற்றோர் சிறந்த முறையில் வளர்க்கப்படும் பொழுது நல்ல குழந்தையாக வளர்வர். குடும்பமும்; சமூகமும் மகிழ்ந்து இருக்கும் வண்ணம் செயலாற்றுவர். அற வழியில் பொருளீட்டி அன்பு வழியில் இல்லம் நடத்தி பண்பான குழந்தைகளை வளர்த்;து இயங்கும் இல்லறத்தார் சுற்றம் பேணி, விருந்தோம்பி சமூக நலம் காப்பர். எனவே கீழ்க்கணக்கு காட்டும் இல்லற அறங்கள் அன்பான குடும்பங்களை அறிவுறுத்துகின்றது. இன்று நாம் எதிர் கொள்ளும் பல சமூக சிக்கல்கள் இல்லறம்; நல்லறம் இன்மையே காரணம். இல்லறம் காப்போம் சமூகம் வளர்ப்போம்.

**துணை நூற்பட்டியல்**


1. இராம லட்சுமணன் ‘நீதி நூல்கள் ஊமா பதிப்பகம் சென்னை 2003
2. சண்முகம்.முனைவர் ஆ "விழுமியங்கள் (தமிழியல் ஆய்வுகள்) அகரம், மனை எண்1 நிர்மலா நகர், தஞ்சாவூர்.2005
3. சிதம்பரனார் சாமி "வள்ளவர் வாழ்ந்த தமிழகம் மல்லிகா, புது எண்-6. பழைய அண், 60, பொன்னியம்மன் கோயி) தெரு, ஆலந்தூர், சென்னை
4. தேவநேயப் பாவணர் ஞா திருக்குறள் மரபுரை ஸ்ரீ இந்து பப்ளி கேஷன்ஸ், 40. பிக்கால் சுப்பிர மணியம் தெரு, தியாகராய தெரு, சென்னை 2000.
5. சிங்கார வேலு முதவியார் ஆ -அபிதான சிந்தாமணி சாரதா பதிப்பகம் இராயப்பேட்டை சென்னை. 2001.

# Marudhu Brothers – Valiant Brothers in South Indian Rebellion

**Dr. S. Shanthi**
*Teaching Assistant, Department of History*
*Alagappa University, Karaikudi*

**Abstract**
*The Sivagangai Seemai is historically an important territory in Tamil Nadu. The Kingdom of Ramnathapuram comprised of the territories of Ramnathapuram, Sivagangai and Pudukottai of today. Sivagangai region was ruled by brave and valourleaders like, SasivarnaThevar, Raja Muthu Vaduganatha Peria Oodayar Thevar, Rani Velu Nachiar and Maruthu Brothers. He Maruthu brothers ruled the Sivaganga district towards the end of 17th century. Maruthu Brothers formed a rebel organization known as "Veer Sangam". This rebel organization released Oomathurai from prison. Due to this incident, British Government got infuriated against Marudhu Brothers. On 16th June 1801, Maruthu Brothers announced a proclamation called as "JambuDeepa Proclamation". In this proclamation, he invited all people to join with one group irrespective of their caste and religion, with war against the British forces*
***Keywords:*** *Maruthu, Oomathurai, Jambu Deepa, British forces*

## Introduction

Sivaganga district was within the composite district of Ramanathapuram until 1984. This district was initially named as Pasumpon Muthuramalinga Thevar district with Sivaganga as its headquarters. The Sivagangai seemai is historically an important territory. The Kingdom of Ramnathapuram comprised of the territories of Ramnathapuram, Sivagangai and Pudukottai of today. Sivagangai region was ruled by brave and velour leaders like, Sasivarna Thevar, Raja Muthu Vaduganatha Peria Oodayar Thevar, Rani Velu Nachiar and Maruthu Brothers.

## Early Life

Marudhu Brothers were born in Narikudi Mukkulam village eight miles distance from a tiny village of Aruppukottai Taluk in Ramanathapuram district. Peria Marudhu was born in 1748 and after five years in 1753 Chinna Marudhu was born. The residence had the traditional name "Muthu Karuppan Servai villa". 2 Peria Marudhu was fair in colour and so he was otherwise called as Vellai Marudhu.Younger Marudhu was shorter than Peria Marudhu and hence Younger Marudhu was called Chinna Marudhu. The family with Mokka Palaniappan Servaikarar joined in the service and assumed as commander in Ramanathapuram which was ruled by Sella Muthu Sethupathy (1749-1762). As he is in the service of Governments Mokka Palaniappan arranged his sons to have warfront training in like soldiers. Hence after Marudhu Brothers have been well trained in Warfield exercises. At present this training centre at situated Surankottai in Ramanathapuram and training is being conducted in the centre3

"Marudhu Pandiars" Peria Marudhu was called as wild king as he had very kick in hunting wild animal's like tiger. Those who dared and achieved in adventures would be called Pandian during their period. So they were called as "Marudhu Pandiars" as they had the above qualities. Chinna Marudhu had some special characters. He could understand the weakness of foe –and used those weaknesses for his own benefit. He thought it was correct thing, then he accomplished it. Every deeds of Chinna Marudhu made the British as fearful. His foes thought the people were disagreed and they got fear when they saw his activities. Ramanathapuram forts

Under the in-charge of Colonel Martins was attacked by Chinna Marudhu's brave deeds and he became his friend. Colonel Wesley learnt to handle well, Valari Sword as Tamils war weapon. It was

mentioned in his diary. “When they were young they entered to the place without knowing its importance and they touched those weapons and return home and play with kitchen utensils as inbattle”.4They could attack and kill even running rabbits and English Kumbini army commander in his service period James Wields wrote in the book “My Military Reminiscences” that Chinna Marudhu had given him well training in Boomerang weapon handling. Boomerang weapon was used as well as in hunting and also in war field. The weapon had middle power that would return again to the user after attacking opponent or wild animal. Marudhu Brothers got well trained in Boomerang attack in war front and poaching wild animals. Marudhu Pandiars had executed and rendered divine services to many temple

**Sivaganga Administration**

The King MuthuVadukanather ruled Sivagangai Seemai. Velu Nachiyar was his spouse. Marudhu Brothers joined in the kingdom with the excellent and splendor services they had been elevated as commander of armies quickly. 5 Marudhu Brothers looked after all government activities during the Queen Velu Nachiyars period. They fought aggressively and bravely with English Army. 6 Marudhu Brothers were the sons of Sivagangai District. In 1801 B.C the brother renders shelter for Oomathurai, brother of Veerapandia Kattabomman and so for that course English army got fury and organized war with Marudhu Brothers continuously. But they obtained great mass influence from the people. The story of Marudu Brothers from 1795-1801, captured the pulse of the every human struggle from freedom and belonging in pre-Independent India. He organized a league of patriots from Sivaganga, Ramnad, Madurai and Tirunelveli by sending emissaries with the message of rebellion.7

**Remit the Tax**

They denied remitting tax for Arcot Nawab and Nawab made complaints against Marudhu Brothers. It was sent to East India Company of English as Marudhu Brothers denied to remit the tax. In 1783 Karnal Bullarton invaded Sivagangai with the support of Pudukottai Thondaiman Marudhu Brothers wanted to avert the war and remitted Rs. 40,000 as tax. In 1801 Oomathurai escaped from Palayamkottai jail with the assistance of revolts and they arrived Sivagangai Seemai. 8 Marudhu Brothers favored them. Marudhu Brothers captured Kamuthi castle during the war period. Hence Marudhu Brothers got enmity with English Army as there was great loss and damage including the death of Major Graham.

**1801 War**

Marudhu Brothers splendor services were propagated during the war between Mana Madurai and Parthiban in 10th July 1801. On 30th July 1801 the war occurred in Sivagangai led by Karnal Agrid. Marudhu Brothers retrenched back and the English army captured Siruvayal. English Army made arrangements to capture Kalaiyar Koil. Ruining the forests in them idle and laid roads made in advance. The road leads to Kalaiyar Koil. On August 19th 1801 Marudhu Brothers army picketed an English army. A secret underground road which leads to Kalaiyar Koil was destroyed by a disloyalty man and hence Kalaiyar koil was captured on 1stOctober 1801 Kumbini army captured Kalaiyarkoil. 9So many Palayakkars made counter resistance against English army and participated in the battles. But Marudhu Brothers had peculiar stem war promulgation. Before the war they declared and formed organization and they conducted war against Englishman.

**War Declaration**

The declaration was “Jamputh Deepeba” promulgation a testimony for their bravery. The promulgation is given to the public and it was remarkable one. Marudhu Brothers invited in our nation to fight against Nawab and British.

Once Englishmen were astonished while hearing the name of Marudhu Brothers. Marudhu Brothers started their life mourning going in the service of Sivagangai palace and became day by day elevated as confidential servants to the king and also they had been appointed as prime relevant servants.

English men wrote a threatening letter addressed to Marudhu Brothers "Declaration of sentence to death" for Servaikarars who were taken under the custody of Englishmen. They organised slaughter office for hanging in the western side of Thirupattur castle and trees for hanging were ready. At this time Marudhu Brothers were sharing the responsibilities Sivagangai Queen Administration.

There is a peculiar place for Marudhu Brothers because they dedicated their whole lifetimes and their lives for struggling against Englishmen to attain freedom for our nation. Marudhu Brothers alias Marudhu Pandiars are remarkable personalities in freedom struggle who fought against Englishmen. From the year 1785 to 1801 holding and handling the weapons of Marudhu Brothers struggled to fight against Englishmen in Tamil Nadu.

**Attack on British**

English army attacked Marudhu brothers in the midnight. They would not surrender into the hands of British and escaped to the forest. British government informed that to pay 4000/- Rots the person who would capture the brothers. However nobody betrayed them. Once they saw the three persons passing in the woods, and they attacked them. Peria Marudhu got injured in the leg and other two men lifted him.

Marudhu Brothers who were living in forest was attacked and arrested them in to the custody of English army. At that time British captured and imprisoned in Thirupathur fort. Then they were hanged to death. Their bodies were divided in Thirupathur and their heads alone were buried in front of Kalaiyar koil.

**Hang to Death**

Oomathurai was taken to Panchalamkurichi and hanged. Relatives of Marudhu brothers, friends were taken to the prison and given punishments. After the war Marudhu Brothers were arrested by English Army. On 25th October 1801 Chinna Marudhu was hanged and Peria Marudhu was hanged to death on 27th October 1801 and attained martyrdom.

**Tirupattur**

The Marudu brothers were hanged to death on a tamarind tree at Tirupattur near the bus stand. They came out of their hideouts from the nearby Singampunari jungles to protect the Kalayarkoil Temple tower which they had constructed. The British threatened to blast the tower if they do not surrender. On the last wish of the elder Marudu, his head was laid in samadhi towards Kalayarkoil Temple. Thiruthalinadhar Temple of Tirupattur is consecrated by the Thevaram hymns of 7th century indicating the age of this town.

Their mortal remains were laid to rest in front of the Kalayarkoil Temple. Sivaganga Devasthanam gave a permission to build memorial building. Mamannar Marudu Pandiyar Manimandapam was built on 10th October, 2006. In this memorial, Guru Puja was celebrated every year for Maruthu Pandiyar brothers, marking the 24th death anniversary of the freedom fighters, passed off peacefully as hundreds of people from the district and neighboring districts paid homage at their memorial place even as the district police threw a massive security.

Hon'ble Former Tamil Nadu, Chief Minister late J.Jeyalalitha announced to build a memorial pillar on 24th October 1994. Many politicians visited the pillar of Marudhu brothers near bus stand at Tirupattur, and paid floral tributes.16

The Indian Post is proud of the brave hearts of Marudu Brothers who ruled Sivaganga. As the country celebrated 217 years of anniversary freedom struggle against British for their freedom. So, the Indian post released 500 paisa stamp in 24th october

2004, and issued a stamp picture in memory of Marudu Brothers.17

**Conclusion**

After the death of Marudhu Brothers, Sivaganga came under the control of British Government. In 1801 British introduced Gowry Vallbhaas a Zamindar in Sivaganga. He was the first Zamindar of Sivaganga under the control of British.

**References**

1. District Census Handbook, Sivagana, Tamil Nadu, 2011, p.7.
2. Saravanan, P., Indithi yasuthanthira poratta veerarkal, Kumaran Publications, Chennai, p.145
3. Bala Subramaniyan, Indiyaveduthalai Suthanthira Poraligal, Azli Nilla Publications, Chennai, 2012, pp.26-27
4. Jegatha. Ulazha Veduthalai Pooralikalin Seerai Kurioougal, Chennai, 2006, P.78.
5. Bala Subhramaniyan, Indiya Veduthalai Suthanthira Pooraligal, Chennai, 2012, p.32.
6. Madras Council Military Consultations 1801, p.4603.
7. Sivabharathi, Suthanthira Poril Thanizhaga Thalaivargal, Chennai, 2013, p.19

# Migration at Kumaravadi-A Study

**Dr. R. Kabesh**
*Assistant Professor, Department of History*
*Cardamom Planters' Association College*
*Bodinayakanur, Theni*

**Abstract**
*Human migration involving physical, social and economic implications has been distinctly influencing the place of origin and the place of destination from the very beginning of human civilization. Migration is entirely determined by the wishes of the person involved, Migratory movements are aproduct of the social, cultural, economic and political circumstances. Migration can also be local, as people from village migrate to cities, usually happen in a developing country, which is gradually industrializing itself. The study on impact of migration on agriculture at kumaravadi, through the study of combination of historical, analyticial and empirical method. The respondents were interviewed in utmost care and secondarfy sources were also used. Kumaravadi is located at Vayavur firka, Madurantakam taluk, Kanchipuram districtis a half hour journey from Chengalpattu, on the route to Uttaramerur. Migration Has Significant Impacts On Agriculture, Both Positive And Negative. Policies Aimed At Mitigating The Negative Impacts And Maximizing The Positive Impacts .*

Human migration involving physical, social and economic implications has been distinctly influencing the place of origin and the place of destination from the very beginning of human civilization. Migration is entirely determined by the wishes of the person involved, Migratory movements are a product of the social, cultural, economic and political circumstances they belong. Migration is a multifaceted and complex global issue touched every country in the world. All soverign nations of the world is now either points of origin, transist or destination for migrants. UN estimates a 185-190 million migrants in 2005.

Migration can also be local, as people from village migrate to cities, usually happen in a developing country, which is gradually industrializing itself. The rural males and females of tamil nadu in 1991 is 18.5 & 18.1 million people respectively and during 2002 was 17.5 & 17.1 Million people respectively. The data shows that irrespective of population growth, there was a declining trend among rural males and females. Migration had a strong coorelation between the per capita productivity productivity of land and migration of labourers in employment situation.As the uncertainity of agricultural production due to natural calamities, limited irrigation, low level of technology were the reasons of migration from rural to rban areas.

To examine the impact of migration on agriculture at kumaravadi, through the study of combination of historical, analyticial and empirical method. The respondents were interviewed in utmost care and secondary sources were also used.

Kumaravadi was located at Vayavur firka, Madurantakam taluk, Kanchipuram districtis a half hour journey from Chengalpattu, on the route to Uttaramerur. On the basis of Oral sources there were different interpretations the Origin of the village name. A saint named kumarar sang a song in the abiyammal temple (1200 years o;d) in the village. Moreover during the pallavas reign, the village was the biggest unit after kanchipuram, kumarars (Ruling princess) Ruled it.

As every village in India in kumaravadi also agriculture is the main occupation most of them depend for their livelihood. animal husbandry also praticesd, some of them went to work in industries nearby, paddy, Ground nut, maize and horticultural crope were cultivated. The concentration in the field

of agriculture was evident from the fact that 65.22 percent main workers are engaged in agriculture and allied activities and 35.62 percent of the geographical area only under cultivation The availability of cultivated land per head of the agricultural production is 0.40 hectares against the 0/50 hectare of state average. The total land belong to the village was 339.5 hectares and total land cultivated in 2007 was only 38.45.5 hectares.

As the wages of the agricultural labour was less, wages of women were less than men, seasonal employment, hard labour makes to migrate from rural to urban. Out of 550 acres (approx) Of Land nearly 350 acres of land owned by a single person, was doing business at Chennai and he was cultivated horticultural crops like sapata which he leased to aperson to look aftermath. As the people of this village sold to him because of the lack of agricultural labourers and none of them have more than 5 acres.

Migrants Send remittances Back To Their Families In Rural Areas, Which Can Increase Household Income And Investment In Agriculture. Returning Migrants Can Bring New Skills, Technologies, And Farming Practices To Their Communities. Migration Can Help Alleviate Labor Shortages During Peak Seasons. Temporary Migration Can Provide A Flexible Labor Supply.

Migration Can Lead To A Decline In The Rural Labor Force, Reducing Agricultural Productivity And Output. This Can Be Particularly Problematic During Peak Seasons, Leading To Reduced Harvests And Lower Incomes. The Loss Of Skilled And Educated Workers Can Hinder Innovation And Modernization In Agriculture. This Can Lead To Reduced Productivity, Lower Adoption Rates Of New Technologies, And Decreased Competitiveness. Moreover, Migration Can Lead To The Abandonment Of Agricultural Land, Reducing Food Production And Increasing Environmental Degradation.

Migration may be bliss for the people, had shifted from agricultural jobs to other jobs, because to increase their status and for economic benefits. But it was ablight for their farmers who sold their lands because of the lack of agricultural laourers as it affected the agricultural productions and growth of the country

Migration Has Significant Impacts On Agriculture, Both Positive And Negative. Policies Aimed At Mitigating The Negative Impacts And Maximizing The Positive Impacts Are Crucial. These Can Include Initiatives To Promote Remittances And Financial Inclusion, Encourage Skills Transfer And Knowledge Sharing, Address Labor Shortages Through Temporary Migration Programs, Support Rural Development And Agricultural Modernization, Address Brain Drain And Promote Innovation. By Understanding The Complex Relationships Between Migration And Agriculture, Policymakers Can Develop Targeted Strategies To Support Rural Development, Improve Agricultural Productivity, And Promote Sustainable Food Systems.

**References**

1. Sinha, V.N & M.D.Abdullah, Migration an Interdisciplinary approach, Seem Publication, Delhi, 1987, pg 1.
2. Chandra mitra, Kamalajit “Encyclopedia of Population Studies and Demography” Series –I, Dominant Publishers and Distributors, Newdelhi, 200g, pg 315.
3. UN Stastistics, World Migration Report 2005, Vol-3, Academic Publication, Delhi, 2006, pg 1
4. Noel.C.Vilabha, “Clearinga Hurried Path:study on education programfor migrant workers I six asian countries”, Clear cut publishing company, Hongkong, 2001, pg 147.
5. Leonard, A.G, “Tamilnadu Economy” Macmilan Publication, Chennai, 2006, ph 137.
6. Mehts. G.S, “Socio-economic aspects of Migraion”, Deep and deep publication, Newdelhi. 2001, pg 3.

7. Gopala Krishnan, M, “Tamil Nadu District Gazetters, Vol-I” Government of Tamil nadu, Chennai, 2000, Pg 334.
8. Interview with Thambiaran on 07/01/2008,
9. Interview with Padavatan on 26/1/2008.
10. Village Panchayat Records, 2007, pgs 23-29.
11. Stastical data of Kanchipuram District, 2005, pg 45-48.
12. Village panchayat record, 2007., pg 31, Interview with Amsa on 26/1/2008.
13. Interview with Chellam on 30/3/2008.
14. Levitt, P. "Social Remittances: Migration-Driven Local-Level Forms of Cultural Diffusion." International Migration Review, 32(4), 1998, pgs 926-948.
15. Martin, P., Abella, M., & Kuptsch, C. “Managing Labor Migration In The Twenty-First Century”. Yale University Press, New York, pg 345..
16. Lapshin, V.. "Labor Migration and Agricultural Development In Russia." Journal of Agricultural and Development Economics, 2(1), 2005, pgs 53-68.
17. Brown, R. P. C.. "Remittances, Poverty, and Human Capital: Evidence From Sri Lanka." Journal of Development Studies, 39(4), 2003, pgs 58-96.
18. Garcia, A.. "The Impact of Migration on Land Use: A Case Study From Rural Mexico." Journal of Environmental Management, 76(2), 2005. pgs 151-161.

# The Administrative Machinery of the Chola Empire in South India – A Historical Perception

**Dr. M. Kanagaraj**
*Guest Lecturer, Department of History*
*Government Arts and Science College, Thittamalai, Nambiyur, Erode, Tamilnadu*

**Abstract**

*Chola dynasty was a Tamil dynasty originating from southern India. It ruled over an expansive maritime empire. The earliest references to the Cholas are from inscriptions dated to the 3rd century B.C during the reign of Asoka of the Maurya Empire. The Chola Empire was at its greatest and attained imperialism under the Medieval Cholas in the mid-term of 9th century A.D and the dynasty continued to govern over varying territories until the 13th century A.D. The hub of the Cholas was the fertile valley of the Cauvery River. They ruled a significantly larger area at the height of their power between the latter half of the 9th and 13th centuries. They incorporated peninsular India, south of the Tungabhadra River, and held the territory as one country for three centuries between 907 and 1215 A.D Under Rajaraja I and his successors Rajendra I, Rajadhiraja I, Rajendra II, Virarajendra, and Kulothunga Chola I, the empire became a military, economic and cultural powerhouse in South Asia and Southeast Asia. Chola monarchs were ruled for more than one thousand years in South India as well as South and South East Asia. Kings were absolute authority during the rule and as the Empire was massive boundary. Resident administration was meaningfully highlighted at the same time Local administration of villages, revenue, judiciary and others were methodical during their period. The resident administration was democratic and its representatives were elected by small boys through pot manuscript system. It is perceived that, Chola administration has become foundation for modern Democractical system.*

***Keywords:*** *Chola Dynasty, South India, South East Asia, Resident Administration, Local Government*

## Introduction

The Chola dynasty was one of the lengthiest reigning dynasties in the history of Tamilnadu as well as India. The Asoka's inscriptional sources of 3rd C.B.C mentioned about Tamil dynasty rulers. As one of the three crowned rulers, the dynasty was persistent to rule over variable territory until the 13th Century. Lengthiest rule of Chola dynasty discloses its popularity among the people of Tamil country as well entire Southern India. In addition, the administration of Chola rulers was finest and there was all condition of progress like socio-economic conditions in their reign. The hub of the Cholas was the lush valley of the Cauvery River, but they ruled a suggestively higher area at the elevation of their power from the latter half of the 9th Century and till the commencement of the 13th Century. The entire state comprises in the south of Thungabadra was amalgamated and held as one state for a period of two Centuries and added. Imperial Chola dynasty became a height through the military, economic and cultural power in South Asia, South East Asia under Rajaraja Chola I and his successors Rajendra Chola I, Rajadiraja, Virarajendra, Kulotunga Chola, The supremacy of the new empire was stated to the eastern world by the expedition to the Ganges under the Rajendra Chola I and done by the occupation of towns of the oceanic empire of Srivijaya, and delegations in China. The administration was hierarchy based manner. Further the details of Chola ruler's administration at different stages are stated.

## Administration of Cholas

The monarch was referred as *Chakravartigal* (Emperor) and the lord of the three worlds called in Tamil as *Thiripuvanachakravarti*. The crown prince began to take part in active management from the reign of Rajaraja I and the minor princes were appointed as provincial governors. The monarch was the head of the administration in the Chola's reign

and entire powers were focused in his custody. Such as the monarch was the ultimate superior and a generous dictator.

His share in the administration consisted of issuing oral commands to responsible officers when representations were made to him. Such orders were recorded in great detail in the inscriptions, usually on the walls of temples. A special type of official, names *Thirumanthiraolai Nayagam,* who recorded the oral orders immediately on palm leaf manuscripts were responsible of the accurate records of them.

The form of the Chola government was hereditary monarchy. The rule of primogeniture generally prevailed. Usually the king appointed his *Yuvaraja* (heir) during his reign. The Chola rulers took high sounding titles as Gangaikonda Cholapuram. The royal household likewise runs on an elaborate scale. The royal priest (*Rajaguru*) became the close confidant of the royal family. The king had council of ministers to aid and assists him. The king gave verbal orders (*thiruvakya kelvi*) which were drafted by the private secretary and confirmed by the *Olainayamak* (Chief Secretary) and a *Perundaram* before its despatch by the *Vaidyadhikari* (despatch Clerk). They habitually advised him on important matters. An elaborate and complicated bureaucracy ran the government.

There is no definite evidence of the existence of a council to ministers or of other officers connected to the central government, though the names of individual ministers are found in the inscriptions. A powerful bureaucracy assisted the king in the tasks of administration and in executing his orders. Due to the lack of a legislature or a legislative system in the modern sense, the fairness of king's orders dependent on the goodness of the man and his belief in *Dharma- sense* of fairness and justice. The ancient society did not expect anything more than general security form the government. Even matters of disputes went to the officers of the court only as the last resort.

The Chola bureaucracy did not differ much from its contemporaries. However, what distinguished it was its highly organized nature. A careful balance between central control and local independence was maintained and non- interference in local government was sacrosanct. There was a definite hierarchy of the bureaucracy and the tenure of the officials simply dependent on the "Crown's Pleasure". The officials held various titles such as *Marayan* and *Adigariga.* Seniority between the same cadres was indicated by qualifying title such as *Perundhanam* and *Sirundhanam.* One of the important such officers were the revenue officials responsible for the receipts and expenditures of the government. The officials tended to form a separate class in society. *Perundhanam* were higher officials while *Sirundhanam* were lower officials. *Peruvalis* (trunk roads) helped to royal tours. The general tendency was to make the officers hereditary. The officials were paid by assignments of land called *jivitas* according in their status.

The early Cholas had Urayur and Poompuhar as their capitals. Urayur was still their capital during the interregnum before their revival in the ninth century Common Era. Vijayalaya Chola defeated the Pandya feudatories Muttarayars and captured the city of Thanjavur and the city maintained its position as the main city during the reigns of the Chola emperors up to Rajendra Chola I. he established the town of Gangaikonda Cholapuram and made it his capital commemorating his successful expedition to the Ganges in 1023 A.D. This town situated south west of the temple town of Chidambaram does not exist anymore. It was extensively sacked and destroyed by the Pandyas during the dying days of the Chola Empire. However, the great Shiva temple Gangai Konda Choleeswara still exists proclaiming the once great city.

As stated by Nilakanta Sastri, every village was a self-governing unit. A number of such villages constituted a *Korram* or *Nadu* or *Kottam* in different parts of the country. Inaiyur was a large village big

enough to be a *Kurram* by itself. A number of *Kurrams* constituted a *Valanadu.* Several *Valanadu* made up one *Mandalam*, a province. At the height of the Chola Empire there were eight or nine of these provinces including Sri Lanka. These divisions and names underwent constant changes throughout the Chola period. An inscription of the eighth century A.D., at Uttiramerur temple describes the constitution of the local council, eligibility and disqualifications for the candidates, the method of selection, their duties and delimits their power. It appears that the administration of a common village or *Ur* was different from that of a village given to *Brahmins.* A well-organized department of land revenue, known as the *puravu varitinaik katam* was in existence. Land revenue was collected in cash or kind. Land was possessed by individuals and communities. The state under Rajaraja demanded $1/3^{rd}$ of the gross produce. *Kudimai* or *Kadamai* was the land revenue. There were taxes on profession, mines, forests, saltpans and others. Kulottunga Chola I abolished tolls and unpaid labour was frequently employed.

The land tax constituted the single largest source of income of the Chola state. It was generally assessed at one-third of the produce. The village assembly took land tax and local levies. Cattle rearing were a subsidiary occupation. Trade with foreign countries was an important feature of the Cholas mercantile activities. The rulers built a network of royal roads that were useful for trade as well as for the movement of the army. There were gigantic trade guilds that traded with Java and Sumatra. South India exported textiles, spices, drugs, jewels, ivory, horn, ebony and camphor to China. Trade brought considerable prestige and affluence to the Cholas. *Kalanju* was the currency prevalent in the Chola Kingdom.

An extensive resurvey was done around 1089 A.D by the Chola king Kulottunga, recording the extends of lands, their assessment, boundaries of villages and the common rights inside the village, including the communal pastures. Revenue officials were responsible for the tax collection. The Chola government was very mindful of the need for the fair and accurate collection of tax to run the state machinery. The revenue records were not manuals of extortion, but carefully maintained records of land rights, based on complete enquired and accurate surveys and were kept up-to-date by regular surveys. The duties of revenue officials included many other spheres of responsibilities. They also regulated receipts and expenditures of temples. They were also seen to purchase land on behalf of village assemblies. They attested and certified important documents drawn up by local government agencies such as village councils. They were also shown to act as magistrates. Further the army consisted of infantry, cavalry and elephants which formed the three limbs of the great army like *moonrukai magasenai*. The Kaikolars were soldiers armed with strong arms and the Sengundar were armed with spears. The Velaikkarars were most dependable troops in the royal service and were the body guards of the monarch, who defended him with their lives and were ready to immolate themselves on the king's funeral. Attention was given to the training of the army and cantonments called *kadagams* or *padaiveedu* existed. The Cholas paid special attention to their navy.

The whole empire was divided into *mandalams* or provinces. Sometimes princes of the royal family were appointed governors of the provinces. Further they were divided into divisions like *valanadus, Nadus* and *Kurrams* (divisions, districts and villages) was the basic units of administration. The villages were mainly of three types. The first type constituted of an inter-caste population where the land was held by all classes of people and paid taxes to the king in the form of land revenue. It was the most frequent type. The second was the *Brahmadeya* or *agrahara* villages which was granted to the Brahmins and was entirely inhabited by them. They were exempted from tax and were prosperous. The third type of

village was the *Devadana,* which were villages granted to god. The revenues from these villages were donated to a temple. During Cholas the *Devadana* type of villages gained more popularity as the temples became the cores of life.

The Chola Navy comprised the naval forces of the Chola Empire along with several other naval arms of the country. The Chola navy played a vital role in the expansion of the Chola Empire, including the conquest of the Ceylon islands and naval raids on Sri Vijaya, now call as Indonesia. The navy grew both in size and status during the medieval Cholas reign. The Chola admirals commanded much respect and prestige in the society. The navy commanders also acted as diplomats in some instances. Between 900 and 1100 A.D, the navy had grown from a small backwater entity to that of a potent power projection and diplomatic symbol in all of Asia, but was gradually reduced in significance when the Cholas fought land battles for subjugating the Chalukyas of Andhra-Kannada area in South India.

In the age of Cholas, the whole of South India was, for the first time ever, brought under a single government. The Chola's system of government was monarchical, as in the Sangam age. However there was little in common between the local chiefdoms of the earlier period and the imperial like states of Rajaraja Chola and his successors. The administration of the Imperial Chola dynasty assumed a high degree of complexity. The order of the king was first communicated by the executive officer to the local authorities. Afterwards the records of the transaction was drawn up and attested by a number of witnesses who were either local magnets or government officers. The King was central authority assisted by his ministers and other officers. The king visited various parts of his kingdom and always prepared to provide relief to the people. The Chola Kingdom was divided into several provinces called *mandalams.* Each province was governed by the governors. The provinces were divided into divisions called *kottams.* The divisions were further divided into district called *nadus* which were further divided into *Tehsil* comprising a group of villages.

Thanjavur and later Gangaikonda Cholapuram were the imperial capitals. However both Kanchipuram and Madurai were considered to be regional capitals in which occasional courts were held. The king was the supreme leader and a benevolent authoritarian. His administrative role consisted of issuing oral commands to responsible officers when representations were made to him. A powerful bureaucracy assisted the king in the tasks of administration and in executing his orders. Due to the lack of a legislature or a legislative system in the modern sense, the fairness of king's orders dependent on his morality and belief in *Dharma.* The Chola kings built temples and endowed them with great wealth. The temples acted not only as places of worship but also as centres of economic activity, benefitting the community as a whole. Some of the output of villages throughout the kingdom was given to temples that reinvested some of the wealth accumulated as loans to the settlements. The temple served as a centre for redistribution of wealth and contributed towards the integrity of the kingdom.

The Chola administration was of a high standard and well organized. In the words of V.A.Smith, "the administration of Chola kingdom was highly systemized and evidently had been organized in ancient times." The Kings personally appear very rarely in the Chola period inscriptions. In a few records pious donors instituted rituals producing merit for the well-being or success of the king, indicating that some localities were officially concerned over the ruler's illnesses or military adventures. The uniqueness of the administration of Cholas lies in its autonomy and self-sufficiency in the field or village administration. The two inscriptions of Uttiramerur constitute a great landmark in the local self-government of that period issued by the Parantaka I. the inscriptions were issued in different periods like 919A.D and 921 A.D at his $12^{th}$ and $14^{th}$ regnal years. These are engraved

on the wall or Vaikunta Temple of Uttiramerur at Chingelpat district in Tamilnadu. There were remarkable autonomy at the village level. Chola officials participated in village administration more as observers than as administrators. The Cholas are best known for their local self-government at the village level. There were three assemblies constituted like the *Ur, Sabha* or *Mahasabha* and *Nagaram.* The *Ur* was a general assembly of the village. It consisted of all the tax-paying residents of an ordinary village. The Alunganattar was the executive committee and the ruling group of the *Ur.* The *Ur* open to all male adults but it was dominated by the older members. The *Sabha* was apparently an exclusively Brahmin assembly of the *Brahmadeya* Villages. It had more complex machinery, which functioned largely through its committees called the *variyams.*

The *Ur* was clearly the commoner type of assembly of the normal villages where the land was held by all classes of people who were entitled to membership in the local assembly. It contained of the tax paying residents of a usual village. The session and functions of the *Ur* assembly not as well informed as of the *Sabha.* But it might assume that the role of *Ur* in local administration. It was similar to that of *Sabha.* In a huge township like Uttiramerur where the *Ur* and the *Sabha* occurred side by side, these arose a natural tendency for the *Sabha* energy guide and regulate the actions of the *Ur* and it submit eagerly to such supervision. The *Ur* had an executive committee of its own which was called *Alunganattar,* the ruling group. Henceforth, the Chola administration was based upon democratic principles. Major official activities were executed through *sabhas.* The members of *Sabhas* were elected from the people. Election to executive body and other committees of the *Ur and Sabha* appears to have been conducted by draw of lots from among those who were eligible. The *Nagaram* was an assembly of merchants and were found more usually in the trading hubs.

The Chola rulers had the superior hand in all substances and the administrative power during that period and it was additionally reorganized. Taxation was well-organized through local development state wide development. The territories administered by Chola rulers showed about determined and virtuous bureaucrats. Since they had occupied and well-ordered many areas, they might have thought that they could not openly regulate villages or taluks. So they shaped local governments. Chola rulers should be recollected for their important charities to hierarchical local administration based on independent ideologies.

**References**


1. K.A.N. Sastri, A History of South India, New Delhi, 2005, p.156.
2. Ibid., pp.158.
3. D.A. Rothermund, History of India, London, 2001, p.88.
4. Ibid., p.89.
5. Rajamanickam, The History of Cholas (Tamil) (Rep), Chennai, 2014, p.44.
6. K.A.N. Sastri, The Colas (Rep), Madras, 1984, p.214.
7. Ibid., pp.142 -143.
8. V.A.Smith, History of India, (Rep), New Delhi, 1989. p. 218.
9. U.Singh, A History of Ancient and Early Medieval India: From the Stone Age to the 12th Century, New Delhi, 2008, pp. 214-217.
10. South Indian Epigraphical Report, Nos. 240,241, 1922.
11. Vijayakumar H.Sallimani, South Indian Administration during Chola Period",
12. International Journal of Scientific Research, Vol.5. Issue:1, January 2016. P.533-534.
13. James Heitzman, "State Formation in South India" , 850 – 1280 A.D., Indian
14. Economic Social History Review, Vol.24 No.35, 1987, pp.41-42.

15. Annual Report on Epigraphy, 1904-05, pp. 131-145.
16. South Indian Epigraphicial Report, Nos. 312, 319 & 329, 1910
17. Darpan Pratiyogita, Medieval Indian History. Special Issue, Upkar Prakasan, New Delhi, 2012, pp. 32 -33.

Bodhi International Journal is assigned by ISSN National Centre, India National Science Library, New Delhi

Journal Indexed and Impact Factor by International Institute of Organized Research (I2OR)

## Information of Bodhi Journal

## Subjects for Papers

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, entrepreneurship, bioscience, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

**Hosted by**

**CARDAMOM PLANTERS' ASSOCIATION COLLEGE**

Pankajam Nagar, Bodinayakanur - 625513,
Theni District, Tamilnadu.
(Reaccredited with 'A' Grade (3rd Cycle) by NAAC)




Impact Factor 4.650

Articles should be mailed to
bodhijournal@gmail.com

**BODHI**
**International Journal of Research in Humanities, Arts and Science**
www.bodhijournals.com

Powered & Published by
**Center for Resource, Research and Publication Services (CRRPS) India.**
www.crrps.in